# மெள்ள மெள்ள



சிவசங்கரி

# மெள்ள மெள்ள...

## ஒன்று

அகிலா இட்லிக்காக ஊற வைத்திருந்த புழுங்கல் அரிசி, உளுந்து பாத்திரங்களோடு ஆட்டுக் கல்லுக்கு முன்னால் வந்து உட்கார்ந்தாள். அக்னி நட்சத்திரத்தின் ஜுவாலையைக் குறைப்பதற்காகவோ என்னமோ, கருணை கொண்ட மழை மேகங்கள் சற்றும் எதிர்பாராமல் 'டமடம'என்ற இடியுடன் அரைமணிக்குள் ஆர்ப்பாட்டமாகக் கொட்டி விட்டுப் போயிருந்த தண்ணீர், அது நிமிஷம் வரை புழுதியும், செம்மண் பூச்சுமாய்க் கிடந்த தரையைச் சுத்தமாய் அலம்பி விட்டிருந்தது. காற்றில் ஒரு குளுகுளுப்பு. தோட்டத்து மரம், செடி, கொடிகளின் ஒவ்வொரு இலையும், பூவும், காயும் யாரோ வேலை மெனக்கெட்டவர்கள் உட்கார்ந்து 'பளிச்'சென்று துடைத்து, நல்ல பச்சை நிறத்தைப் பெயிண்ட் செய்திருந்த மாதிரி இருந்தது.

சற்றே தள்ளி இருந்த கிணற்றடி மேடையில் காகம் ஒன்று பறந்து வந்து உட்கார்ந்தது. மேடையின் சரியான பகுதியில் தேங்கிக் கிடந்த மழை ஜலத்தில் லேசாய் அமுங்கி, இரண்டு வாய்த்தண்ணீரைக் குடித்துச் சிறகுகளை ஆட்டி சிலிர்த்துக் கொண்ட பின்னர் உடலின் சூடு தணிந்த குஷியில் ஒரு பக்கமாய் தலையை சாய்த்து, ஒண்ணரைக்கண் பார்வை பார்த்து கா, கா என்று கத்தத் தொடங்கியது.

ஜாதி, நித்திய மல்லிகை புதர்களிலிருந்து ஒன்றை ஒன்று துரத்தியவாறு இரண்டு அணில்கள் வெளிப்பட்

டன வாலைத் தூக்கிக் கொண்டு 'கிச்கிச்சென' கத்தி விட்டு காம்பவுண்ட் சுவருக்கு அருகில் இருந்த கொய்யா மரத்தில் ஏறி, பழுத்த பழம் எங்கே இருக்கிறது என்பதை மோப்பத்தால் அறிய முற்படுவன போல மூக்கின் நுனிகளை ஆட்டின—

அரிசியிலிருந்த கற்களை அரித்து, இரண்டு தரம் களைந்து விட்டு உரலில் போட்டாள் அகிலா. வாட்டமாய் உட்கார்ந்து கொண்டு வலது கையால் அரிசியைத் தள்ளிக் கொடுத்த வண்ணம் தோட்டத்தின் ஜீவராசிகளின் சந்தோஷத்தை, நடவடிக்கைகளை ஒருவித இன்பத்துடன் கவனித்தவாறே அரைக்கத் தொடங்கினாள்.

விர் என்று எங்கிருந்தோ ஒரு வால் நீண்ட கருங்குருவி பறந்து வந்து தென்னைமரத்தின் புதுப் பாளை மேல் அமர்ந்தது. இப்படியும் அப்படியும் இரண்டு தரம் பார்த்து விட்டு தென்னை மட்டைகளின் நடுவிலிருந்த நாரை—பன்னாடையின் நாரை—தன் சின்ன அலகால் உருவி எடுக்க முயன்றது. சில நிமிஷங்கள் மன்றாடின பிறகு முழ நீளத்துக்குக் கிடைத்த அந்த நாரை எடுத்துக் கொண்டு எங்கோ பறந்து போய் விட்டு மறுபடியும் திரும்பி வந்து, மீண்டும் இன்னொரு நாரை எடுக்க முற்பட்டது.

கூட்டுக்கான உபகரணங்களை அக்குருவி சேர்க்கிறது என்பது அகிலாவுக்குப் புரிந்து போனது—

எத்தனை சின்ன குருவி? இது தன் முட்டைகளை இட ஒரு பத்திரமான இடம் வேண்டி, எத்தனை பொறுப்புடன் தன் கூட்டைக் கட்டுகிறது!

அவளுக்கு வலது பக்கத்திலிருந்த தென்னை மரத்திலிருந்து குருவி இடது பக்கமாகப் பறந்து போனபோது அகிலா ஏதோ நினைவுக்கு வந்தவளாய் தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள்.



சில வருஷங்களுக்கு முன் கதாகாலட்சேபம் ஒன்று கேட்கப் போயிருந்தாள். பௌராணிகர் ப்ரசித்தமானவர். எக்கச்சக்கமாய் அவர் சொற்பொழிவுக்குக் கூட்டம் வருவதால் எக்கச்சக்கமாய் பணம் சேர்த்து விட்டார் என்பார்கள். அன்று அவர் சொன்னார்— நமது தேசத்தில் பழமையான வாக்குகள் சத்தியமானவை— அவையெல்லாம் வெறும் பேச்சுக்காக சொல்லப்பட்டவை, எழுதப்பட்டவை அல்ல— பெரியவர்கள் சொல்லுகிற வார்த்தைகளை அலட்சியமாய் ஒதுக்கக் கூடாது. வால் நீண்ட கருங்குருவி வலமிருந்து இடம் போனால், நடந்து போகும் ஆண்டி கூட நிமிஷத்தில் பல்லக்கு ஏறுவான்— என்று சற்றுமுன் கதையில் சொன்னபோது சபையில் இருக்கும் சில சின்ன வயசுக்காரர்கள் முகத்தில் தோன்றிய சிரிப்பை நான் பார்க்க நேர்ந்ததால் இந்த விளக்கத்தைச் சொல்ல வேண்டியவனாகிறேன்— குருவி வலப்பக்கம் போனால் என்ன, இடப்பக்கம் போனால் என்ன? வால் நீளமாய் இருந்தால் என்ன, இல்லாமலே இருந்தால் என்ன? கருப்பானால் என்ன, சிவப்பானால் என்ன— ஆண்டியாவது பல்லக்கில் போவதாவது என்று மனசின் நையாண்டி பண்ணுகிற சில பேர்களுக்குச் சொல்லுகிறேன்—நான் சொன்ன மாதிரி உங்களில் யாருக்காவது மேற்கண்ட குருவி வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கம் யதேச்சையாய் பறந்து போன அனுபவம் இருந்து உடனடியாக ஒரு பெரிய அதிர்ஷ்டம் வரவில்லை என்றால் என் சொத்தில் பாதியைத் தர நான் தயார்— இப்போதாவது நம் பெரியோர் வார்த்தைகள் சத்தியமானவை என்று நம்புவீர்களா?' என்று அவர் அறைகூவல் விடுத்தபோது சபையினர் அன்று அசந்துதான் போனார்கள்.

அந்த பௌராணிகர் வாக்குப்படி நடக்கவேண்டுமேயானால் அவர் தன் முழுச் சொத்தையும் கொடுப்பதுமல்லாமல் வாழ்நாள் பூராவும் சம்பாதிப்பதையும்

தனக்கே கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நினைத்த போதுதான் அகிலாவுக்குச் சிரிப்பு எழுந்தது.

எத்தனை முறைகள் அவள் கிணற்றடிக்கும், வாசற் புறத்துக்கும், தோட்டத்தின் அந்தப் பக்கத்துக்கும் போக முயலுகையில் வால் நீண்ட கருங்குருவி அவளை வல மிருந்து இடம் கடந்திருக்கும்? ஒருமுறை, இரண்டு? ம்ஹூம் இல்லை... எண்ணற்ற தடவைகள்—

முதல் தடவை குருவி வலமிருந்து இடமாகக் கடந்த போது அகிலாவுக்கு சந்தோஷத்தின் காரணமாய் சில தினங்களுக்கு உடம்பு ஆடிப்போனது. பல்லக்கு வரா விட்டாலும், ஏதோ பெரியதொரு அதிருஷ்டம் வரப் போகிறது என்று குதூகலித்தவள், முதல் முறை மட்டு மின்றி அதற்குப்பின் எத்தனை தடவைகள் அந்தத் தினம் முழுவதும் காத்துப் பார்த்து விட்டு பிறகு வழக்கமாய் இரவில் உண்ணும் மோர்சாதத்தை நார்த்தங்காயைத் தொட்டுக் கொண்டு உண்டுவிட்டு, கிழிசல் பாய் மேல் படுத்து உறங்கி இருக்கிறாள்?

சின்ன வயசில் ரொம்ப அசடாக இருந்திருக்கோமே என்று எண்ணுகையில் அகிலாவின் புன்சிரிப்பு, பெரிய சிரிப்பாகவே இப்போது மாறிப்போனது.

சிரிப்பு அடங்கினதும் மெல்ல கல்யாணி ராகத்தைத் தனக்கு மட்டுமே கேட்கும்படியாய் முனகத் தொடங் கினாள் அகிலா.

அவளுக்கு கர்நாடக சங்கீதத்தில் ஈடுபாடு அதிகம். குரலும் நன்றாய் இனிமையாய் இருந்தது. ஆனால் கற்றுக் கொள்ளத்தான் வழி இல்லை.

பள்ளியில் மூன்றாம் படிவம் வரை கம்பல்சரி பாட்டு வகுப்பு உண்டு. மற்ற பெண்கள் அந்த வகுப்புக்கு வரா மல் எப்படி டபாய்க்கலாம் என்று திட்டம் போடுகையில் சங்கீதத்தில் தனக்கு இருந்த ஆசையின் காரணமாய்



அகிலா வகுப்புக்கு ப்ரியமாய் போவாள். நாலாம் படிவத் திலிருந்து அதுவும் நின்று போயிற்று. வெளியே தனியார் நடத்தும் வகுப்புகளுக்குப் போய்க் கற்றுக் கொள்ள வீட்டின் நிதி நிலைமை இடம் கொடுக்கவில்லை என்பதை புரிந்து கொண்ட அகிலா அவ்வப்போது வேதா மாமி வீட்டு ரேடியோவில் கேட்கும் கர்நாடக சங்கீதக் கச்சேரி கள் மூலமே தன் சங்கீதத் தேவையைத் திருப்தி செய்து கொள்வாள்.

குளிக்கும்போது, சமைக்கும் போது, இல்லை வேலைகளை ஒழித்து கிணற்றடியில் அமர்ந்திருக்கும் போது மனதில் உருவெடுக்கும் ராகங்களை, அரைகுறை கேள்வி ஞானப் பாடல்களை முணுமுணுத்துச் சந்தோஷப் படுவதோடு சரி—

அரிசி அரைபட்டுவிட்டது.

அதை வழித்து எடுத்து விட்டு உளுந்தைக் களையத் தொடங்கினாள் அவள்.

மலிவு என்று மட்டுமில்லாமல், விழுது நன்றாய்க் காணும் என்ற காரணத்துக்காகவும் கருப்பு உளுந்தையே அவள் வீட்டில் வாங்குவது வழக்கம். நன்றாய் ஊற வைத்து, இரண்டு கைகளாலும் அழுந்தத் தேய்த்துக் கொஞ்சம் அதிகமாகவே மன்றாட வேண்டும்—உளுந்தைக் களைகையில் வேதா மாமி வீட்டுச் சாப்பாட்டு ஹால் கடிகாரம் மூன்றடிப்பது அகிலாவுக்குக் கேட்டது.

மணி மூன்றா?

பாடிக் கொண்டே தோட்டத்தையும், அணில், குருவி யையும் பராக்குப் பார்த்ததில் நேரம் போனது தெரிய வில்லையே—!

அரிசியை அரைத்தது போல, நிதானமாய்ச் சுற்றாமல் வேகமாய் குழவியைத் தள்ளினாள் அகிலா.

நாளைக்கு அமாவாசை—அப்பாவுக்கு பலகாரம். இன்றைக்குத் தேதி என்ன ?

இருபத்தியொறு—இன்றோடு உளுந்து சரியாகிவிட்டது. இனி அப்பாவுக்கு சம்பளம் வந்த பிறகுதான் மறுபடி மளிகைக் கடைக்கு முன் போய் நிற்க முடியும்—சரி, முதல் தேதிக்கு நாலு நாட்கள் இருக்கிறதே; உளுந்தை மிச்சம் பண்ணி வைக்கலாம் என்றால் வேறு என்ன டிபன் பண்ணுவது ? உப்புமா கிண்டலாமென்றால் உடைத்த அரிசி இல்லை—ரவையும் இல்லை— வழக்கமாய் அப்பாவுக்குக் கரைத்துத் தரும் மோர்க் கூழையே நாளைக்கும் செய்து தர அகிலாவுக்கு மனம் இல்லை. அப்பாவுக்கு இட்டிலி என்றால் பிரியம். கொஞ்சம் ரசித்துச் சாப்பிடுவார்—

இதுவும் தவிர அகிலா இன்று, மாசக் கடைசியில், இருக்கிற சாமான் பஞ்சத்தில் இட்டிலி தயாரிப்பதற்கு இன்னொரு காரணமும் இருந்தது.

நேற்று மாலை பள்ளியிலிருந்து திரும்பி வந்த ராமு, அவள் கடைசித் தம்பி, பன்னிரண்டு வயசு குழந்தை, கொல்லை கட்டில் காய்ந்த துணிகளை மடித்துக் கொண்டிருந்த அவளிடம் வந்தான்.

"ஸ்கூல்லேந்து வந்துட்டயா ? டீ போட்டு வைச்சிருக்கேன். போய் சமர்த்தா குடிடா ராஜா"—என்றாள் இவள்.

அக்காவின் இடுப்பைக் கட்டிக் கொண்டு மெல்ல விசும்பினான் ராமு.

"என்னடா ?"

"என் ப்ரெண்ட்ஸ் எல்லார் வீட்டிலேயும் ஸ்கூல்லேந்து போனதும் தினுசு தினுசாய் டிபன் பண்ணிக் கொடுத்து சாப்பிடச் சொல்லறா— எனக்குத் தினம் டீ மட்டும் தானா ?... பசிக்கறதுக்கா..."



அகிலாவுக்கு வருத்தமாக இருந்தது. அவளால் என்ன பண்ண முடியும் ?

"மோர்க் கூழ் கிளறித் தரட்டுமா, ராமு ?"

வேண்டாம் என்று தம்பி தலையை ஆட்டினான்.

"வேண்டாம் அக்கா... அந்த மோர்க் கூழைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு அலுத்துப் போச்சு..." அவன் பசியின் காரணமாய் விசித்து விசித்து அழத் தொடங்கினான்

சின்னப்பையனான தம்பியின் ஆசை எத்தனை நியாயமானது என்று அகிலாவுக்குப் புரியவே, தரையில் மண்டியிட்டு அழும் பையனின் கண்களைத் துடைத்தாள்—

"அழாதே ராஜா—நாளைக்கு உனக்கும் நான் நல்ல டிபன் பண்ணித் தரேன்... இப்போ ஒரு அப்பளம் சுட்டுத் தரட்டுமா ? டீ குடிச்சிட்டு, அப்பளத்தை வாங்கிண்டு விளையாட போ ராமு— சமர்த்து இல்லையா ?"

அக்காவின் வார்த்தைகளில் ராமுவுக்கு ஏக நம்பிக்கை, போய் விட்டான்.

சொன்ன வார்த்தையைக் காப்பாற்றா விட்டால் எப்படி ?

இன்று இட்டிலிக்கு அரைத்த மாவிலிருந்து இரண்டு கரண்டி எடுத்து, கொஞ்சம் புளித்தமோரை விட்டு, ஒரு வெங்காயம், பச்சை மிளகாய் அரிந்து போட்டு ஊத்தப்பம் போல குண்டாய் வார்த்துக் கொடுத்தால் தம்பி பிரியமாய் சாப்பிடுவான் என்று அகிலா நினைத்ததால் இருக்கிறதோ இல்லையோ இன்று இட்டிலிக்குப் போட்டு விட்டாள்.

காலை பள்ளிக்குப் புறப்படுமுன் உள்ளே வந்து அலுமினிய டிபன் பாக்ஸில் மோர் சாதத்தை எடுத்துக் கொண்டவன் புறப்படும்போதுகூட, 'அக்கா சாயங்

காலம் மறக்காதே' என்று நினைவுபடுத்திவிட்டுப் போயிருந்தான். மாவை அரைத்து முடித்து, உள்ளே போய் தோசைக் கல்லைப் போட்டால் சரியாக இருக்கும்— குழவியை வேகமாய் ஓட்டினாள் அகிலா.

உள்ளே அம்மா இருமும் சப்தம் கேட்டது. கொட கொடக்க குழவியை ஒருகணம் நிறுத்தி நிதானித்தாள் அகிலா.

வரவர அம்மாவின் உடம்பு நாலு நாட்களுக்கு சேர்ந்தாற்போல கொஞ்சம் நன்றாய் இருப்பதுகூட குறைந்து விட்டது.

பாவம் அம்மா— அவளால் என்ன முடிகிறது? இரண்டு அடி எழுந்து நடந்து, அவள் காரியத்தைப் பார்த்துக் கொள்வதற்குள்ளேயே இரைப்பு கண்டு நெஞ்சுக் குழியில் உட்கார்ந்திருக்கும் வயலின் 'ங்க் கொய்' என்று இழுக்கத் தொடங்கி விடுகிறது.

போன ஐந்தாம் வருஷம் வரைக்கும் இத்தனை மோசமாக இல்லை. 'எங்கப்பா எனக்கு வச்சுட்டுப் போன சொத்து இந்த ஆஸ்துமா' என்று அடிக்கடி 'அட்டாக்' வரும்போது சொல்லிச் சிரித்துவிட்டு, குடும்பபாரத்தைத் தாங்கி வந்தவளை சொல்லாமல் கொள்ளாமல் வந்த டி பி செயலிழக்க வைத்தது. அதில் பிழைத்து எழுந்தவளை இந்த தைமாசம் நிமோனியா ஜுரம் புரட்டி எடுத்ததிலிருந்து நித்திய நோயாளியாகிப் போய் விட்டாளே!

அதுவும் டாக்டர் எழுதிக் கொடுக்கும் மருந்து, மாத்திரைகளையெல்லாம் அப்படியே வாங்கிக் கொடுக்க முடியாதபடி குடும்பத்தில் இதர செலவுகள் மண்டையைப் பிய்ப்பதால் அம்மாவின் வியாதி எந்த விதத்திலும் கட்டுப்படாமல் அடங்காப்பிடாரித்தனத்துடன் இரவு இல்லை பகல் இல்லை என்று அம்மாவை வாட்டி எடுக்கிறதே!



பாவம்— அம்மா.

மங்கு மங்கு என்று விடியற்காலையில் எழுந்து குடும்பத்துக்காக இத்தனை சின்ன வயசில் ஓடாய்த் தேயும் மகளைக் கண்டு அழத்தான் அகிலாவின் நோயாளி அம்மாவுக்கு முடியுமே தவிரவும் வேறு என்ன செய்ய இயலும்?

இப்போது உளுந்தை அரைத்து எடுக்கப் போகும் இந்தச் சமயத்தில் கூட உள்ளே அம்மா தீனமாய் தொடர்ந்து இருமுவது கேட்டு "வெந்நீர் வைச்சுத் தரட்டுமாம்மா?" என்று குரல் கொடுத்தாள் அகிலா.

"வேண்டாம்மா... நீ அரைச்சுட்டு எழுந்து வா..." என்றாள் சாரதா பதிலுக்கு.

மாவை வழித்து உரலை அலம்பும்போது வீட்டுக்கார வேதா மாமி பின் கட்டு கதவைத் திறந்து கொண்டு தோட்டத்தில் வந்து நின்றாள்.

"என்னடீ பொண்ணே... இட்லியா, தோசையா?"

"இட்லிக்கு மாமி... நாளைக்கு அமாவாசை இல்லையா? அப்பாவுக்கு பலகாரத்துக்கு வேணுமே—"

"சாரதா எப்படி இருக்கா? நேத்து ஜுரம் இருந்ததே— இப்போ குறைஞ்சிருக்கா?"

"ஜுரம் தேவலை மாமி. ஆனால் இந்த அரைமணி மணிக்கோ என்னமோ, இருமல், இழுப்புதான் ரொம்ப ஜாஸ்தியா இருக்கு-பாவம்... படுத்துக்கிட்டே இருக்கா..."

"இருமலுக்கு காஃப் சிரப் இருக்கா?"

அகிலா பதில் சொல்லவில்லை.

"எனக்கு முன்னே இருமல் வந்த போது வாங்கினது— அரைபாட்டில் அப்படியே இருக்கு... நானே

உங்கம்மாவுக்கு கொடுக்கணும்னு இருந்தேன்—அப்புறமா வந்து வாங்கிக்கிறயா?"

சரி என்று சொல்லி விட்டு மாவுடன் உள்ளே வந்து மற்ற வேலைகளைக் கவனித்தாள் அகிலா.

வேதா மாமியை நினைக்கையில் அவள் மனசு உருகிப் போயிற்று—

எத்தனை நல்ல மனுஷி?

கிட்டத்தட்ட இருபது வருஷமாய் இந்த அவுட் ஹவுசில் தான் மஹாதேவன்-அகிலாவின் தகப்பனார்-தன் குடும்பத்தோடு இருக்கிறார். வீட்டுக்காரி என்ற தோரணையில் வேதா மாமியிடமிருந்து ஒரு வேண்டாத பேச்சு? ஏச்சு? ப்ஹூம்-ஒன்றும் கிடையாது.

வேதம் சின்ன வயசில் விதவையானவள். கணவன் அவளுக்கு நிறையச் சொத்தும், வாரிசாக ஒரு மகளையும் விட்டுச் சென்றிருந்ததால் யார் தயவும் இன்றி, நல்ல முறையில் வாழ்ந்து வருகிறாள். அந்தக் காலத்திலேயே வேதத்தின் கணவர் கார் வைத்துக் கொண்டிருந்தவராம். கணவர் போன பிறகு காரை விற்றபோது சென்னையில் வாத்தியாராய் வேலை ஏற்று, மனைவி மூன்று குழந்தைகளுடன் வந்த மகாதேவன் கண்ணில் அந்தக் காலி ஷெட் பட்டது. ஷெட்டை ஒட்டி ஒரு சமையல் அறை தொட்டி முத்தமும், கிணற்றடியில் குளியல் அறை, பாத்ரூம் கட்டி ஐம்பது ரூபாய்க்கு வேதம் வாடகைக்கு விட்டாள்.

வருஷம் இருபதாகிவிட்டது—இன்னும் வாடகை ஐம்பதுதான்

"நீங்க குடும்பஸ்தர்—உங்க வருமானம் குடும்பம் நடத்தத்தான் சரியாய் இருக்கும்...மேற்கொண்டு உங்க கிட்டே இருபதோ, முப்பதோ வாங்கி நான் என்ன இன்னொரு பங்களாவா கட்டப்போறேன்... வேண்டாம்"



என்று தீர்மானமாய் மகாதேவன் வாடகை பேச்சை எடுத்த போது மறுத்து விட்டாள்.

சாரதா இடமாய் இருந்த வரையில் வேதா மாமிக்கு எந்த உபரி காரியத்திலும் வலது கையாய் இருந்தாள். இப்போது தன்னால் இயன்ற அளவில் அதை இட்டு நிரப்புகிறாள் அகிலா.

வேதத்தின் ஒரே மகள் தங்கத்தின் கணவர் வெங்கடேஷ் ஆர்மியில் மேஜர். ஆறு மாசத்துக்கு ஒரு முறை என்று முன்னறிவிப்பு இல்லாமல் அடிக்கடி அவர்களை ஊர் மாற்றின போது குழந்தைகள் படிப்பு கெட்டுப் போனதாலும், தனியாய் தான் இருப்பது கஷ்டமாய் இருப்பதாலும் பேரன்கள் சந்திரன், சுரேஷை கடந்த மூன்று வருஷங்களாய் தன்னோடு வேதம் வைத்துக் கொண்டிருக்கிறாள். அவர்களுக்கு வாரம் மூன்று நாட்களுக்கு சிரத்தையுடன் ட்யூஷன் சொல்லிக் கொடுப்பது மகாதேவன் தான்.

முதலில் ஒருநாள் வேதா மாமி ட்யூஷனுக்கான சம்பளம் கொடுக்க முன் வந்த போது வாய் வார்த்தையாக ஒன்றுமே பேசாமல் தலையை ஆட்டி அப்பணத்தை மறுத்து விட்டார் மகாதேவன்.

சாரதா மட்டும் மாமியின் கைகளைப் பிடித்துக் கொண்டு அழுதாள். பிறகு 'பெத்தபிள்ளையே எங்களை வேண்டாம்னு உதறிண்டு போய்விட்டாலும் உங்களோடு பிறந்த மாதிரி நீங்கதான் எங்க குடும்பத்துக்கு அரவணைப்பா, வழிகாட்டியா இருக்கேள்? உங்க பேரன்கள் எங்களுக்கு மட்டும் பாத்தியதை இல்லையா? அவாளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுத்து இவர் காசு வாங்கிண்டா, அப்புறம் நாங்க மனுஷாதானா வேதா மாமி—" என்று மெல்ல சொல்லி அழுதாள்.

ஆமாம்—மகாதேவன், சாரதா தம்பதியின் மூத்த மகள் லலிதாவாலோ, இல்லை இரண்டாவது புத்திரன்

ஸ்வாமிநாதனாலோ அவர்கள் குடும்பத்திற்கு என்ன லாபம்?

லலிதாவையாவது தள்ளிவிடலாம்—பெண் ஜென்மம் —அவள் புக்ககம், கணவன் ஒரு மாதிரி—

ஆனால் ஸ்வாமியை அப்படி ஒதுக்க முடியுமா? இவன் தலை எடுத்து குடும்ப பாரத்தை தாங்கப் போகிறான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை ஒரே ஒரு நொடியில் தகர்த்துவிட்டு சுயநலமே உருவாக இவர்களை விட்டு வெளியேறினானே, அவனை பிள்ளையாகப் பெற்றதில் மகாதேவனுக்கு என்ன ஆதாயம்?

## இரண்டு

மகாதேவனின் குடும்பம் அவர் வருவாய்க்கு பெரிசு தான். 'இரண்டுக்கு மேல் இப்போது வேண்டாம். மூன்றுக்குப் பின் எப்போதுமே வேண்டாம்' என்ற கோஷங்களெல்லாம் காதிலும், மனதிலும் விழாத காலம், அதனால் தெரியாத்தனமாய் குடும்பத்தைப் பெருக்கிக் கொண்டு விட்டார். முதலில் லலிதா இரண்டாவது ஸ்வாமிநாதன். அடுத்து அகிலா பிறந்ததும், சரி இத்தோடு போதும் என்று இருந்தவரின் போதாத காலம் ஏழு வருஷ இடைவெளிக்குப் பின்னர் பவானி, அடுத்து ராமநாதன்—குழந்தைகளை பெற்றுக் கொள்ளும்போது தெரியாத கஷ்டம் அவர்களை வளர்க்கும் போதல்லவா புரிகிறது?

மகாதேவன் ரொம்ப நல்லவர்; மானி, நேர்மையானவர். மொத்தத்தில் குழந்தைகளை உருவாக்கும் வாத்தியாரின் வேலைக்கு ஏற்ற குணவான். கருமமே கண்ணாய் தன் வேலையை சிரத்தையுடன் செய்பவர்.



குடும்பத்தில் செலவு அதிகமாகி, வரவு போதாமல் கையை கடிக்கும் போது 'அசட்டுத்தனத்தால் குடும்பத்தை திட்டமிடாமல் போய்விட்டோமே' என்று மனசில் நினைத்தாலும் நினைப்பாரே தவிரவும் 'போயும் போயும் வருமானமில்லாத வாத்தியார் உத்தியோகத்தைக் கெட்டிப்பிடித்துக் கொண்டேனே' என்று அதுநாள் வரை வருந்தினதில்லை.

'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்'—என்று தன் தொழிலில் அவருக்கு அளவு கடந்த பக்தியும், சிரத்தையும் உண்டு.

பள்ளியில் வைத்துக் கொள்ள அனுமதித்திருந்த மூன்று ட்யூஷன்களையும் சேர்த்து வீட்டுக்கு எடுத்து வந்து கொண்டிருந்த ஐநூறு ரூபாய் சொச்சத்தில் குடும்பத்தை ஓரளவுக்கு நிம்மதியுடன் நடத்தி வந்தவருக்கு மூத்த மகளின் கல்யாணத்துக்குப் பிறகே ஏழரை நாட்டு சனி பிடித்தது.

மகாதேவன், சாரதா தம்பதியினரின் குழந்தைகளில் மூத்தது இரண்டுமே அழகோடு சேர்த்தி. பாக்கி மூன்றும் பார்வைக்கு சாதாரணம்— ரொம்ப சாதாரணம்—

சாரதா பிரமாத அழகியாக இல்லாவிட்டாலும் சிவந்த நிறத்துடன், ஒடிசலாக இருப்பாள். லலிதாவும், ஸ்வாமியும் அம்மாவின் நிறத்தையும் அப்பாவின் பெரிய கண்கள், நீர்க்கமான மூக்கு இவைகளையும் கொண்டு பிறந்திருந்தார்கள். பவானி அகிலா ராமு மூவருக்கும் அம்மாவின் நிறமும் இல்லை, சொல்லும்படியான முக லட்சணமும் இல்லை.

லலிதாவுக்கு தான் கண்ணுக்கு நன்றாய் இருக்கிறோம் என்பது புரிந்ததால் தன்னை சிங்காரித்துக் கொள்வதிலேயே மிகுந்த அக்கறை காட்டினாள். புத்தி கண்ணாடிக்கு முன் நின்று அழகு பார்க்கத் தூண்டியதே

தவிர நான்காம் படிவத்தை அவள் தாண்ட உதவ வில்லை. இரண்டு தரம் அதையே முற்றுகை இட்டவள் 'நான் இனிமே ஸ்கூலுக்குப் போகலைப்பா!" என்று நின்று விட்டாள்.

படிப்பு சொல்லித்தரும் உபாத்தியாயருக்கு, தன் பெண் எஸ்.எஸ்.எல்.சியைக் கூட தாண்டாததில் ரொம்ப வருத்தம்.

சில வருஷங்கள் லலிதா வீட்டில் உட்கார்ந்து குண்டு சட்டியில் குதிரை ஓட்டி முடித்த சமயத்தில் கல்யாண நேரம் அவளைத் தேடி வந்தது. மகாதேவனின் ஒன்று விட்ட தமக்கையின் மகன் மணி லலிதாவை பண்ணிக் கொள்ள ஆசையாக இருக்கிறது என்று சொல்லவே அவளாகவே வலிய மகாதேவனுக்கு லெட்டர் போட்டு தங்கள் ஊருக்கு வரவழைத்து கல்யாணப் பேச்சை எடுத்தாள்.

''என் பிள்ளைக்கு பெரிய இடத்திலிருந்தெல்லாம் பெண் கொடுக்க தயாராய் இருக்கா— ஆனால் அவன் என்னவோ உன் பெண்ணை பண்ணிக்கிறேன் என்கிறான். உன் பெண்ணுக்கு கொடுத்து வைச்சிருக்கணும்— என்ன சொல்லுகிறாய் தேவு?" என்றாள் தமக்கை.

மகாதேவன் என்ன சொல்லுவார்?

இருக்கும் இருப்பில் பெண்ணின் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கும் நிலையிலா அவர் இருந்தார்? வருகிற வருவாய் கைக்கும், வாய்க்கும் சரியாகப் போயிற்றே ஒழிய, பெண் கல்யாணத்துக்கென இரண்டு காசு அவர் சேர்த்துக்கூட வைக்கவில்லையே! இன்னும் நாலு வருஷம் போகட்டும். ஸ்வாமி தலை எடுத்த பிறகே பெண்ணின் கல்யாணத்தைப் பற்றின பேச்சு என்று தானே இருந்தார்?



"அவளையும், குழந்தையையும் கேட்டு விட்டு வந்து சொல்கிறேன்" என்று பதில் கூறிவிட்டு வீட்டுக்கு வந்தார்.

மணி நல்ல பையன், இப்பொழுதே எண்ணூறோ என்னவோ சம்பளமாம். சின்ன வயது— வாழ்க்கையில் முன்னேறக் கூடியவன்— எல்லாம் சரிதான். ஆனால்— பணத்துக்கு எங்கே போவது?

"நானாக வந்து வலிய கேட்கிறேன் என்பதற்காக சீர் செனத்திகளில் குறை வைக்காதே தேவு... நாலுபேர் மெச்சும் படியான சீரோடு என் மாட்டுப்பெண் வரணும்— இப்பவே சொல்லிட்டேன் ஆமாம்!'' என்று கறாராய் அக்கா பேசினதை நினைத்தால் மகாதேவனுக்கு பயமாகவே இருந்தது.

இரண்டு நாட்களுக்கு கணவனும் மனைவியுமாய் யோசித்தார்கள். அதிருஷ்டம் வலிய வரும்போது எட்டி உதைக்கக் கூடாது என்று சாரதாவுக்கு தீர்மானமாய் தோன்றினதாலும், மகள் லலிதா கண்களில் ஆயிரமாயிரம் கனவுகளுடன் ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்து விட்டதாலும் மேற்கொண்டு பேசி வரச் சொல்லி கணவனைக் கிளப்பினாள் அவள்.

மகாதேவன் பேச்சுக்களை முடித்துக் கொண்டு திரும்பி வந்தார்.

''எனக்கு இந்தக் கல்யாணம் நடக்கும்னு தோணலை சாரதா— இருபது பவுனுக்கு நகை போடணுமாம்; வைரமூக்குத்தியாம், கையில் இரண்டாயிரமாம், வெள்ளிப் பாத்திரம், எவர்சில்வர் என்று அவா பெரிய லிஸ்டே கொடுத்திருக்கா நமக்கு இவ்வளவு அகலக்கால் வைக்கத் தோது படாது" என்றார் ஆற்றாமையுடன். சாரதா மலைத்துப் போனாள்.

லிஸ்ட்படி பார்த்தால் இருபதாயிரத்தைத் தாண்டும் போலிருக்கிறதே, அப்பா! அத்தனை பணத்தை எப்படி சமாளிக்க முடியும்?

தவிர இருக்கும் நாலு காசையும் மூத்த பெண்ணுக்கே செலவழித்துவிட்டால் அடுத்த அகிலாவுக்கு? பவானிக்கு? யார் காலில்போய் விழ முடியும்? ம்ஹூம் இந்த இடம் நமக்கு சரிப்படாதுதான்—

கல்யாணப்பேச்சு முறிந்துவிட்டது என்று தெரிந்ததும் இரண்டு நாட்களுக்கு முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு அழுது தீர்த்தாள் லலிதா.

ஐந்தாம் படிவம் படித்துக் கொண்டிருந்த அகிலா தான் பெற்றோரை குழப்பத்திலிருந்து தெளிவுக்குக் கொண்டு வந்தாள் என்று சொல்லவேண்டும்.

விவரம் தெரிந்த நாளிலிருந்தே நிதானம், சமயோஜிதம், அடக்கம், அதிக ஆசை இல்லாமை என்றே அகிலா இருந்ததால் அவள் பேச்சுக்கு வீட்டில் என்றும் தனி மதிப்பு உண்டு.

மாலையில் கிணற்றடியில் அப்பா சந்தியாவந்தனம் செய்தபோது அருகில் சென்று உட்கார்ந்து கொண்டு அவர் முடிக்கும்வரை வாளாவிருந்தாள் அகிலா.

பின் மெல்ல பேசினாள்.

''இரண்டு நாளாய் அக்கா சாப்பிடவே இல்லைப்பா... பாவம் மணி அத்தான் மேல ரொம்ப ஆசை வச்சிருக்காப்பா...''

அவள் தலை எழுத்து அது என்பதுபோல நிமிர்ந்து பார்த்தார் மகாதேவன்.

''அத்தைகிட்டே இன்னொரு தடவை போய் பேசினா புரிஞ்சிப்பாளோனு எனக்கு தோணறது... அக்காவுக்கு



நிறைய செலவழிச்சால் எனக்கும் பவானிக்கும், என்ன பண்றதுன்னு நீங்க அம்மாகிட்டே சொல்லிண்டு இருந்ததைக் கேட்டேன். எனக்கு இப்போ என்ன அவசரம்பா? எஸ். எஸ். எல். சி. முடிச்சிட்டு ஷார்ட் ஹாண்ட், டைப்பிங் கத்துண்டு வேலைக்கு கொஞ்ச நாளாவதுபோய் சம்பாதிச்சு உங்களுக்கு உதவணும்னு எனக்கு ஆசையா இருக்குப்பா— அண்ணாவுக்கு பி. காம் முடிய இன்னும் இரண்டு வருஷங்கள் தானே... அப்புறம் அவன் சம்பாத்தியம் வேற சேர்ந்துடும்... அதனால் இப்போ அக்கா கல்யாணத்தை நல்ல தினுசிலே முடிச்சுடலாம்பா... ப்ளீஸ்...''

விவேகத்தோடு பதினைந்து வயசில் பேசும் அகிலாவை பார்த்தார் மகாதேவன். அவருக்குப் பெருமையாக இருந்தது. மீண்டும் மனைவியுடன் அகிலாவை வைத்துக் கொண்டே பேசியதின் பலனாய் மறுபடியும் அக்காவின் ஊருக்கு, போய் பேசிவிட்டு வந்தார், வைர மூக்குத்தியையும், கையில் இரண்டாயிரத்தையும் பையனின் தீர்மானமான முடிவுக்காக முணுமுணுத்துக் கொண்டே விட்டுவிட்டாள் அக்கா.

பள்ளியில் கடனுக்கு அப்ளிகேஷன் போட்டார் மகாதேவன். பள்ளி நிர்வாகிகள் நல்லவர்கள், குறித்த காலத்துக்குள் கேட்ட தொகையை கொடுத்துவிட்டார்கள். வேதாமாமி தெய்வம்போல பாக்கி பணத்தைக் கொடுத்ததும் அல்லாமல், கல்யாணத்தை தன் வீட்டிலேயே நடத்தவும் ஏற்பாடு பண்ணினாள். ஐந்துபவுனில் திருமாங்கல்யம், கொடி, ஆறு பவுனில் இரண்டு ஜதை வளையல்கள், மாப்பிள்ளைக்கு தங்க மோதிரம் பண்ணி, துணிமணி, பாத்திர வகையறா எடுப்பதற்குள் மகாதேவனின் விழிகள் பிதுங்கிப்போயின. சொச்ச கணக்கு நகைக்காக, நான் கிழமைகளில் போட்டுக் கொண்டது

போக, தன் ஒரே பெரிய சொத்தாய் உள்ளே வைத்திருந்த எட்டு பவுன் இரட்டைவட சங்கிலியை மகளுக்குப் போட்டு கல்யாணத்தை இட்டு நிரப்பினாள் சாரதா.

தன்னால் இயன்றவரை எவ்வளவோ சிறப்பாக மகாதேவன் திருமணத்தை நடத்தியும்கூட அவர் அக்காவுக்கு அதிருப்தியே அதிகமாய் இருந்தது. "வக்கீல் வீட்டில் பெண்ணுக்கு வைரத்தோடு, மூக்குத்தியுடன் சம்பந்தம் பேச வந்தா. ராமையர் பெண்ணை பண்ணிக் கொண்டால் ஸ்கூட்டர் வாங்கித் தரேன்னா; இப்போ ஒன்றுமில்லை...ம்.." என்று கல்யாணத்தின்போது பல தடவைகள் அவள் பெருமூச்சு விட்டதைப் பலர் கேட்கவே செய்தார்கள். யார் போய் நின்று அவளிடம் பேச இயலும்? பார்க்கப்போனால் மகாதேவன் குடும்பத்தின் நிலைமையைவிட அவர்களுடையது ரொம்ப உயர்ந்த இடம் இல்லை; மணியின் தந்தை மருந்துக் கடையொன்றில் கணக்கெழுதி சம்பாதித்தவர்தாம். மணி ஒரே பையன். படித்து நல்ல வேலையில் சேர்ந்து கை நிறைய சம்பளம் வாங்குவதுதான் அவர்கள் குடும்பத்தின் பிளஸ் பாயிண்ட்.

கல்யாணம் முடிந்த இரண்டாம் மாசமே எவ்வளவு தூரம் தான் அகலக்கால் வைத்து விட்டோம் என்று புரிந்து கொண்டார் மகாதேவன்.

பள்ளியில் கடனாகப் பெற்ற தொகையில் இன்ஸ்டால்மெண்ட் பிடித்துக் கொண்டு பாக்கி கொடுத்ததில் வேதா மாமியின் கடனைத் திருப்ப வேண்டும், குடும்பத்தை ஒப்பேற்ற வேண்டும் என்ற நிலை எழுந்த போது மகாதேவன் தவித்துப் போனார்.

அரை வயிறு சாப்பிட்டாலும் சரி—வேதா மாமியின் கடனைத் திருப்புவது மட்டும் நிற்கக் கூடாது என்ற வைராக்கியம் எழ மாசம் ஐம்பது ரூபாயை வாடகையுடன் சேர்த்து நூறாகக் கொடுக்கத் தொடங்கினார்.



ஆறு மாசம் தாண்டுவதற்குள் கடன் சுமையின் பளுவால் அவர் குன்றிப் போனார். காலையில் முக்கால் சாயங்காலம் முக்கால் லிட்டர் என்று வாங்கி வந்த பாலை ஒரு நாளுக்கு மொத்தம் ஒரு லிட்டராகக் குறைத்தார். தேங்காய், எண்ணெய் போட்டு செய்யும் டிபன் குறைக்கப்பட்டன. கிணற்றடி ஜலத்தை வீணாக்காமல் அகிலா போட்டு வந்த காய்கறி தோட்டத்துக் கீரை கொத்தவரை, வெண்டை இவைகளையே சமைத்துக் கொண்டு கூடுமானவரையில் காய்கறி வாங்குவதை தவிர்க்க சாரதாவும் உதவினாள். பண்டிகைகளை ஆடம்பரமாகக் கொண்டாடுவதைக் குறைத்தார்கள். தீபாவளிக்கு யாருக்கும் புதுசு கிடையாது. புது மாப்பிள்ளை, பெண்ணைத் தவிர—

இன்னொரு சல்லிக்காசு கடன் படக்கூடாது என்ற வெறி மகாதேவன்—சாரதாவுக்குள் உண்டானதாலேயே இந்த மட்டுமாவது குடும்பத்தை நடத்த முடிந்தது.

அகிலா எஸ். எஸ். எல். ஸியை முடித்தாள். லீவில் ஷார்ட் ஹாண்ட், டைப்பிங் படித்துவிட்டு எங்காவது வேலைக்குச் சேர்ந்து நூறு ரூபாயாவது கொண்டு வந்து பெற்றோர்களின் கையில் கொடுக்கவேண்டும் என்று அவள் ஆசைப்பட்டது நடக்கவில்லை.

சாரதாவினுள் ஒளிந்து கொண்டு அவ்வப்போது கண்ணாமூச்சி காட்டி விளையாடிய ஆஸ்துமா அப்போது விஸ்வரூபம் எடுத்ததோடன்றி துணைக்கு இன்னொரு வியாதியையும் சேர்த்துக் கொண்டது.

ஒரு மாசமாய் அடக்கமாட்டாத இருமல். சேர்ந்தாற்போல சில நாட்களாய் ரத்தம் கோழையுடன் கலந்து வந்தபோது டாக்டரிடம் கூட்டிப்போனார் மகாதேவன். சாரதாவின் ரத்தம் சோதிக்கப்பட்டது. கையில் அம்பை குத்துவது போல குத்தி 'மாண்டோடெஸ்ட்' செய்தார்.

அவளுக்கு டி. பி. வந்திருப்பது உள்ளங்கை நெல்லிக்கனியானது.

இப்போதெல்லாம் டி. பி. க்கு பயப்பட தேவையே இல்லை. முப்பது ஸ்ட்ரெப்டோமைசின் ஊசிகளில் பத்து நாட்களுக்கு தினமும் பின் ஒன்றுவிட்டு பத்து ஊசிகளும் இடையில் வாரத்துக்கு இரண்டு வீதம் பத்துமாய் மொத்தம் முப்பது ஊசிகளில் குணம் தெரியும்—

கூடவே ஐசோனெக்ஸ் மாத்திரை தினம் ஒன்று; வைட்டமின் மாத்திரை ஒன்று. சத்தான சாப்பாடு— அவ்வளவுதான்— மூன்று மாசத்தில் நல்ல குணம் தெரியும். கவலைப்பட வேண்டாம் என்று சொல்லி டாக்டர் அனுப்பினார்.

ஸ்ட்ரெப்டோமைசின் ஊசி அப்படியொன்றும் ரொம்ப விலை உயர்ந்ததல்ல— தொண்ணூறு காசுதான். இதையும் பள்ளியில் ரீ—எம்பர்ஸ்மெண்டில் வாங்கி விடலாம் என்றாலும் மகாதேவனின் அன்றைய வருமானத்துக்கு சாரதாவின் வியாதியும் அதன் ட்ரீட்மெண்டும் அவரைப் பொறுத்தவரை ராஜ வைத்தியமாகத்தான் இருந்தது.

என்றைக்கு சாரதாவின் வியாதி கண்டு பிடிக்கப்பட்டதோ அன்றைக்கே தன்னை அந்த தாயின் ஸ்தானத்துக்கு உயர்த்திக் கொண்டாள் அகிலா. அம்மாவைப் படுக்க வைத்து அப்பாவை, அண்ணாவை, தம்பி, தங்கையைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை யாரும் சொல்லாமலேயே தனதாக்கிக் கொண்டாள் அவள்.

சின்ன வயசு முதற்கொண்டே தானாக ஊறிப்போன பொறுமை, சட்டென்று பிறருக்காக விட்டுக் கொடுக்கும் சுபாவம் குடும்ப பாரத்தை எளிதாகவே தாங்க அவளுக்குக் கற்றுத் தந்தது.



சாரதா படுத்து இரண்டு வருஷங்கள் ஆவதற்குள் சம்பளத்தை கொணர்ந்து தன் பதினெட்டு வயசு பெண்ணிடம் கொடுக்கவும், அவள் எப்படி செலவு செய்தாலும் அது குடும்பத்தின் நன்மைக்கே என்றும் மகாதேவன் புரிந்து கொண்டார்.

பள்ளியில் தொண்டைவற்ற பாடம் எடுத்து பின்னர் பள்ளி ட்யூஷனை முடிப்பார், வீட்டுக்கு வந்து ஒரு தம்ளர் காபியை குடித்ததும் பங்களாவுக்கு ட்யூஷன் எடுக்க போவார். மணி இரவு ஒன்பதை நெருங்குகையில் மறுபடி வீட்டுக்கு வருவார். அதற்குள் மற்றவர்களுக்கு சாப்பாடு போட்டு விட்டு அவருக்காக அகிலா காத்திருப்பாள்.

இலையில் சாதத்தைப் போட்டு ஒரு துவையலோ, இல்லை சுட்ட அப்பளமோ வைத்து, கொட்டு ரஸத்தை அவள் ஊற்றுவாள். பின்னர் மோர் சாதம், தொட்டுக் கொள்ள உலர்ந்த உப்பு நார்த்தங்காய். பரிமாறும் அன்பு மகளைப் பார்க்கையில் பாசம் மகாதேவனுள் பிரவாகமெடுக்கும்—

"நீயும் சாப்பிடும்மா..." என்றால் "நீங்க சாப்பிட்ட பிறகு சாப்பிடறேன்ப்பா" என்று சொல்லுவாள் அகிலா.

அவளுக்கு என்று துவையலோ, ரஸமோ கூட மிஞ்சி இருக்காது என்பது மகாதேவனுக்குத் தெரியும். மோர் இருந்தால் உண்டு— இல்லையென்றால் சாதத்தில் உப்பைப் போட்டு தண்ணீருடன் கரைத்து இரண்டு மடக்கு குடிப்பாள் என்பது அவருக்குத் தெரியும்.

முதல் தடவை மகள் இப்படி ஒன்றும் சரியாக சாப்பிடாததைக் கண்டு பிடித்தபோது மகாதேவன் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானார்—

"என்னம்மா... அகிலா? என்னம்மா?" என்று அவர் துடித்துப் போனார்.

சின்னதாய் புன்னகைத்தாள் மகள்.

"இப்போ என்ன நடந்துடுத்து? எதுக்காக இப்படி வருத்தப்படணும் அப்பா?"

"எங்களுக்கெல்லாம் இருக்கிற பாழும் வயிறு உனக்கு உண்டு அகிலா... அதுக்கு மட்டும் ஏன் இந்த ஓரவஞ்சனைம்மா?"

"அப்பா நீங்க நாள் பூரா பள்ளிக்கூடத்திலே உழைக்கறேள்— இரண்டு நிமிஷம் அக்கடான்னு உட்கார முடியாதபடி ட்யூஷன் வேறு...ராமு பவானி சின்ன குழந்தைகள்...வளர்கிற வயசு... அம்மா சீக்காளி...உங்களுக்கெல்லாம் தாளப்பா சத்தான சாப்பாடு வேணும்... எனக்கு என்னத்துக்கு? வீட்டோட இருக்கேன்...வேலையும் அப்படி ஒண்ணும் இல்லை மத்தியானமெல்லாம் தூங்கறேன் ராத்திரி மூக்கு முட்ட சாப்பிட்டால் உடம்பு ஊதி போறது... இந்த வயசுலே பரங்கிக்காய் மாதிரி இருந்தால் எப்படி? அதுக்காகத்தான் வேணும்னே குறைச்சு சாப்பிடறேன்ப்பா... இதுக்குப் போய் வருத்தப்படுவானேன்?"

மகாதேவனுக்கு மகள் சொல்வது பச்சைப் பொய் என்று தெரியும்.

காலையில் ஐந்து மணிக்கு எழுந்தால் இரவு பத்தாகிறது அகிலா காலை நீட்ட. சமைத்து, வீடு பெருக்கி, துணி தோய்த்து, பத்து தேய்த்து... நடு நடுவில் வேதா மாமி தோட்டத்தில் மல்லிகைசெடிகளின் இலை உருவி விடுவாள் ரோஜாவின் கிளைகளை மடக்கி பதியன் போடுவாள். சின்னதாய் இடத்தைக் கொத்தி கொத்தமல்லி தெளிப்பாள் வேதா மாமிக்கு ஸ்டோர் ரூம் ஒழித்து கொடுப்பாள். அரைத்து கரைத்து சமையலில் ஒத்தாசை பண்ணுவாள். பகல் நேரங்களில் மாமிக்கு ராமாயணம் படித்துச் சொல்லுவாள் போதுமா வேலைகள்?



பதினெட்டு வயசு பெண்கள் இந்தக் காலத்தில் எந்தெந்த மாதிரியெல்லாம் தலைகீழாய் இருக்கிறார்கள்! ஆனால் அகிலா? அனுபவித்து ஆண்டு ஓய்ந்து போன அறுபது வயசுப் பெண்மணியின் முதிர்ச்சி அல்லவா அவளிடம் குடிகொண்டு விட்டது? பதினெட்டு வயசு பெண்ணுக்கு எங்கிருந்து வந்தது இத்தனை விவேகம்?

இரவின் ஓட்டத்தில் கிழிசல் பாயில் தூக்கம் வராமல் மகாதேவன் புரண்டு படுக்கையில் அகிலா சுமக்கும் குடும்ப பாரம் அவர் கண்களில் நீரை கசியச் செய்யும்.

டி.பி. வந்து ஓரளவு குணமானதும் பழையபடி எழுந்து சாரதா நடமாடுவாள் என்று எண்ணி இருந்தது தப்புக்கணக்காகிவிட்டது— இப்பொதெல்லாம் ஆஸ்துமா ரொம்ப அதிகரித்துவிட்டது. சதா இருமல், சளி, கோழை, இழுப்பு, தினுசு தினுசாய் மருந்துகள் வாங்கிக் கொடுத்தால் குறையுமோ, என்னவோ? ஆனால் யாருக்கு கட்டுப்படியாகும்? தான் நிரந்தர நோயாளியாகவே ஆனதில்கூட சாரதாவுக்கு வருத்தம் இல்லை, ஆனால் சின்ன சிட்டுக்குருவி தலையில் பனங்காயை ஏற்றி வைத்த மாதிரி அகிலாவின் தோள்களில் அவளுடைய பொறுப்புகளை சுமத்தி விட்டு தான் கையாலாகாதவளாக பாதி சமயங்களில் கிடப்பதை எண்ணித்தான் அவள் கணவனிடம் அழுவாள்.

"பல்லை கடிச்சுண்டு இரு சாரதா... இன்னும் ஒரு வருஷம் நம்ம சுவாமி வேலைக்குப் போய், நல்ல வைத்தியம் பண்ணினால் பலத்துடன் எழுந்து உட்காருவாய்— அப்புறம் அகிலாவுக்கு நம்ம சக்திக்குத் தகுந்த மாதிரி ஒரு இடத்தைப் பார்த்து ஜாம் ஜாமென்று கல்யாணம் பண்ணி கொடுத்துடலாம்... என்ன?" என்று மகாதேவன் சமாதானம் சொல்லுவார்.

அவர்கள் இருவரும்தான் எத்தனை எத்தனை மனக் கோட்டைகளை கட்டியிருந்தார்கள்? மூத்த பிள்ளை நன்

றாய் படிக்கிறான்— கெட்டிக்காரன். குடும்பத்தை பொறுப்புடன் தாங்குவான் என்று எத்தனை எத்தனை முறைகள் சொல்லி தங்களுக்குள் மகிழ்ந்திருக்கிறார்கள்?

அத்தனையும் பொய்யாக்கிவிட்டு, இரண்டு கையாலும் சேற்றை, கரியை வாரி அவர்கள் முகத்தில் பூசிவிட்டு தன் பந்தபாசங்களை எல்லாம் அறுத்துக் கொண்டு ஓட அந்த சுவாமிக்கு எப்படித்தான் துணிந்தது?

## ன்று

**வே**தத்தின் வீடு தி. நகர் மோதிலால் தெருவில் இருந்தது. அவருடைய கணவர் வக்கீலாக செழித்த காலத்தில் நாலு கிரவுண்டு மனை வாங்கி, ஒவ்வொரு கல்லாய் பார்த்து வைத்துக் கட்டின கட்டடம். பெரிய கூடங்கள் வழவழவென்ற முகப்பு சிமிட்டி தரை, வண்ண வண்ண கண்ணாடிகளைக் கொண்ட ஜன்னல்கள் என வீடு இன்றைக்கும் கல் கோட்டையாய் இருந்தது

அழகாய் திட்டமிட்டு கட்டப்பட்ட வீட்டைச் சுற்றி தினுசு தினுசாய் பூச்செடிகள், பழமரங்கள். வேதா மாமிக்கு தோட்டத்தில் கொள்ளை ஆர்வம். காலையில் எழுந்து பூஜை புனஸ்காரங்கள், சமையல் ஆகி பேரன்களுக்குத் தேவையானதை கொடுத்து பள்ளிக்கு அனுப்பி விட்டால் தோட்டத்தில் வந்து நின்று கொள்வாள்.

மாமிக்கு இருக்கும் வசதிக்கு சமையலுக்கு ஆள் போட்டுக் கொள்ளலாம். ஆனால் மாட்டாள். "என் உடம்பிலே தெம்பு இருக்கிறவரைக்கும் சமையலுக்கு எனக்கு ஆளே வேண்டாம். காஸ் இருக்கு, குக்கர் இருக்கு— அடுப்படியிலேயே குழாய்-இரண்டு குழந்தைகள் நான்— எங்களுக்கு சமைக்க எத்தனை நாழிகை ஆகும்? இட்லி,



தோசைக்கு அரைக்க நாலு நாளைக்கு ஒரு தடவை ஒருத்தி வந்து செய்து கொடுத்து விட்டுப் போறா. நாள் கிழமைனா உதவிக்கு அகிலா இருக்கா... அப்புறம் எனக்கு எதுக்கு இன்னொரு ஆள்?" என்று சொல்லி சிரிப்பாள்.

வீட்டு வெளி வேலைகளை கவனிக்க தாயிகண்ணு. அப்புறம் ஒரு தோட்டக்காரன்— பெரிய தோட்டத்தைக் கொத்தி சீராக்கி புல்செதுக்கி தண்ணீர் ஊற்றி சுப்புரவாய் வைத்துக்கொள்ள தன்னாலோ இல்லை தாயம்மாவாலோ முடியாது என்பதால் ஒரு தோட்டக்காரனை அவள்தான் வேலைக்கு அமர்த்தி இருந்தாள் மாமி.

பேரன்களின் உடுப்புக்களை சலவை செய்து இஸ்திரி செய்வது, ஷூக்களுக்கு பாலிஷ் போடுவது, [illegible] கடைகளுக்குப் போவது என்ற வெளி வேலைகளையும் அவனே செய்துவிட்டு பன்னிரண்டு மணிக்குள் போய் விடுவான். அதனால் மாலையில் பூ பறிப்பது கட்டுவது போன்ற சில்லறை வேலைகளை அகிலாதான் மாமிக்கு செய்து கொடுப்பாள்.

அன்று சனிக்கிழமை.

மறுநாள் ஒரு மாச லீவில் வெங்கடேசும் தங்கமும் வருகிறார்கள். ஆர்மியில் நினைத்தபோது லீவு கிடைக்காது. திடீரென்று கேட்காத சமயத்தில் லீவை கொட்டென்று தூக்கிக் கொடுப்பார்கள். இப்போதும் அப்படித்தான். வெங்கடேசுக்கு ஆக்ராவுக்கு மாற்றல் ஆகி ஒரு வருஷம் பூர்த்தி ஆகவில்லை. 'ஒரு மாசம் உங்களுக்கு லீவு தருகிறோம்' என்று சொல்லி இருக்கிறார்கள்.

முக்கால்வாசி திரும்பியதும் டேரா தூக்கி விடுவார்கள் என்று தங்கம் தாங்கள் வருகையை குறிப்பிடும் கடிதத்தில் எழுதி இருந்தாள்.

காலை பத்திலிருந்து பன்னிரண்டு வரை மாமி பட்சணங்கள் தயாரிப்பதற்கு உதவினாள் அகிலா. பிற்பகல்

மூன்று மணிக்குள் தன் இல்லத்து வேலைகளை முடித்துக் கொண்டு தோட்டத்திற்குச் சென்று அம்பாரமாய்ப் பூத்திருந்த மஞ்சள் சிகப்பு கனகாம்பரங்களை ஒரு கூடை நிறைய பறித்து வைத்தாள். பின் இன்னொரு கூடையில் நித்தியமல்லி, முல்லை மொட்டுக்களையும் ஸ்டூல் போட்டு ஏறி பந்தல் மேல் படர்ந்திருந்த கொடிகளிலிருந்து அவள் பறித்துக் கொண்டு வாசல் வராந்தாவுக்கு வரும்போது மணி நாலாகிவிட்டது.

ஸ்வாதீனத்துடன் உள்ளே போய் பூஜை அறையிலிருந்து நார் பந்தையும், ஒரு கிண்ணத்தில் தண்ணீரும் எடுத்து வந்து பூக்களை கட்டுவதற்காக வாசல் வராந்தாவிலேயே உட்கார்ந்தாள்.

ஒரு பெரிய அறையை மட்டும் கொண்டதாக அகிலாவின் இல்லம் இருந்தால் எந்த ஒரு காரியத்தையும் அவள் பங்களாவிலேயே செய்து கொடுப்பதுதான் வழக்கம்— அந்த ஒரு அறையில்தான் அம்மா படுத்திருப்பாள். அப்பா நோட்டு திருத்துவார்— அந்த அறைதான் அவர்களின் வரவேற்பறை, படுக்கை அறை. வாசலில் உள்ள சின்ன ஆஸ்பஸ்டாஸ் ஷீட் போட்ட தார்ப்பில் உட்காரலாம்—ஆனால் இந்த வெய்யில் நேரத்துக்கு அங்கு தகிக்கும்.

"இங்கே ஃபேன் போட்டிருக்கேன்—இப்படி வந்து உட்கார்ந்துண்டு கட்டேன்—ஏன் அங்கே வெக்கையிலே அவியறே?"—என்றாள் மாமி ஹாலில் ஏதோ காரியம் செய்தபடியே.

"வெயில் குறைஞ்சுடுத்து மாமி— காத்து வேற நன்னா வீசறது. அங்கே காத்துலே கனகாம்பரம் பறக்கும்— ஒழுங்காய் கட்ட முடியாது... நான் இங்கேயே இருக்கேன்"

பதில் சொல்லிவிட்டு கை தேர்ந்த பூக்காரியின் விரைவோடு பூக்களைக் கட்டத் தொடங்கினாள் அகிலா.



இரண்டாவது பேரன் சுரேஷின் யூனிஃபார்மிலிருந்து விழுந்துவிட்ட பட்டனை தைத்தபடியே மாமி கண்களை நிமிர்த்தி அகிலாவைப் பார்த்தாள்.

வெய்யிலில் நின்று பூக்களை இவ்வளவு நாழிகை பறித்ததால் முகம் கன்னிச் சிவப்பாய், சட்டையின் பின்பக்கமும், கக்கமும் தெப்பமாய் நனைந்திருக்க, காரியமே கண்ணாய் குனிந்திருந்த அவளை காணுகையில் எப்போதும் மாமிக்கு உண்டாகும் எண்ணமே இப்போதும் எழுந்தது

எத்தனை சமர்த்தான பெண்.

இத்தனை சமர்த்தையும் கட்டி ஆள எந்த ஆண்மகனுக்கு கொடுப்பினை இருக்கிறதோ என்றே மாமி அகிலாவைப் பார்க்கும் போதெல்லாம் நினைப்பதுண்டு.

பார்க்கப்போனால் அகிலா உருவத்தில் ரொம்ப சாதாரணமானவள்தான்...

ஐந்தடி மூன்றங்குலம் உயரம்—மாநிறத்துக்கும் மட்டநிறம்—சிரித்தால் சற்றே தூக்கலாகத் தெரியும் முன் இரண்டு பற்கள்—சுருட்டையும் இல்லாமல் கோரையும் இல்லாமல் சுமாரான தலைமுடி—கொஞ்சம் பெரிய கண்கள். இவ்வளவுதான்.

அகிலாவின் உருவத்தைப் பார்த்து அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளாமல் அவள் குணத்தை, மனதின் அழகை ஊடுருவி பார்த்து, பண்பே உருவான அவளை நல்ல மனம் கொண்டவன் தன் உடமையாக்கிக் கொண்டால் எத்தனை நன்றாக இருக்கும்?

ஆனால் அதெல்லாம் நடக்கிற காரியமா என்ன?

பூக்கட்டிக் கொண்டிருக்கும் அகிலா சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள்—மாமி வைத்த கண் வாங்காமல் தன்னையே நோக்கியது ஆச்சரியத்தை தர "என்ன மாமி?" என்றாள்.

"ம்? ஒன்னுமில்லை... அங்கே பாரு உன் செல்லம் வந்திருக்கு" என்று பேச்சை மாற்றினாள் வேதம்.

அகிலா திரும்பிப் பார்த்தாள்.

அட! ஜிம்மி!

அதன் பெயர் ஜிம்மியா என்பது கூட அவளுக்குத் தெரியாது. அது அவளாக வைத்த பெயர்.

சில மாசங்களுக்கு முன்னால் கொல்லை கிணத்தடியில் அகிலா பத்து தேய்த்துக் கொண்டிருந்தாள். கருப்பாய் சின்னதாய் சொறி கிறி இல்லாவிட்டாலும் சோனியாய் நாய் ஒன்று வேலி சந்தில் நுழைந்து இவளருகில் வந்தது. பத்தடி தள்ளி நின்று வேக வேகமாய் வாலை ஆட்டியவாறே 'ம்ங்க் ம்ங்க்' என்று முனகியது—

யார் வீட்டு நாய்? ரொம்ப தெரிந்த மாதிரி உள்ளே நுழைந்து, அருகில் நின்று கொள்ளுகிறதே!

அந்த நாயின் கண்களில் ஒரு பரிதாபம் தெரிந்ததாகவே அகிலாவுக்குத் தோன்றியது—

சாது நாய்... எதற்காக இப்படி அழுகிறது?

கை காரியத்தை விடாமல் அகிலா அதையே கவனித்தாள்.

சில நிமிஷங்கள் போல ஆனதும் கொஞ்சம் தைரியம் பிறந்ததாலோ என்னமோ அந்தக் கருப்பு நாய் இன்னும் சற்றே அழுத்தமாய் இரண்டு தடவை கத்திவிட்டு நாலு கால்களாலும் தரையில் தவழ்ந்து வந்தது.

இதற்கு என்ன வேணும்?

என்னவோ சொல்ல முயற்சி பண்ணற மாதிரி இருக்கே!



அகிலாவுக்கு யோசனை எழுந்தது.

இப்போது நாய் சோற்றுப் பருக்கைகள் கலந்து ஓடும் தண்ணீர் அருகில் வந்தது. எச்சில் தட்டிலிருந்து கழுவி சிதறிய சோற்றை ராமு எறிந்துவிட்ட காய்கறி துண்டங்களை, ஆர்வத்துடன் மண்ணிலிருந்து பொறுக்கி சாப்பிட்டு அந்தத் தண்ணீரையே குடித்தபின் தரையில் படுத்து அகிலாவை பார்த்து வாலாட்டத் தொடங்கியது.

ஏனோ அகிலாவுக்கு மனசு நெகிழ்ந்து போனது.

பாவம்—பசிக்கிறதா? அதுதான் அழுததா? இந்த எச்சில் சாதத்தை சாப்பிடத்தான் என்னிடம் உத்தரவு கேட்பதுபோல முனகியதா? இப்போது இந்த நாலு பருக்கைகளைத் தின்றதும் எனக்கு நன்றி சொல்லுகிற மாதிரி இங்கு படுத்து வாலாட்டுகிறதா?

கரியாய் இருந்த கைகளை தண்ணீரில் அலசினாள் அகிலா.

'இங்கேயே இரு' என்று அந்த நாயிடம் சொல்லிவிட்டு வீட்டுக்குள் போனாள்.

காலை வடித்து மீந்து ராத்திரிக்காக வைத்திருந்த சாதத்தில் ஒரு உருண்டை எடுத்து வந்தாள்—வாதா மரத்து இலை ஒன்றில் அதை இட்டு நாயின் அருகில் சென்று கீழே வைத்தாள்.

லபக்—ஒரே வாய்தான்—எதிர்பாராத விருந்தில் அந்த நாய் திக்குமுக்காடிப் போனது தெளிவாகத் தெரிந்தது.

'ங்கூம் ங்கூம்' என்று சந்தோஷமாக முனகின வண்ணம் அகிலாவை இரண்டு சுற்று சுற்றி தன் மகிழ்ச்சியைத் தெரிவித்ததோடல்லாமல் மல்லாந்து

படுத்து நாலு கால்களையும் உயரே தூக்கி உடம்பை நெளித்து வித்தை காட்டவும் முற்பட்டது.

ஒரு பிடி சாதம்— இதற்கு இத்தனை நன்றி உணர்வா?

அதன் பிறகு நித்தமும் பகலில் அகிலா பாத்திரம் தேய்க்கும் சமயம் மூக்கில் வேர்க்க இது எங்கிருந்தாவது வந்து விடுவது வழக்கமாயிற்று.

அதற்கு ஜிம்மி என்று நாமகரணம் செய்து கிட்டத்தில் போய் மண்டையில் செல்லமாய் தட்டவும் பழகி விட்டாள் அகிலா.

என்றைக்கெல்லாம் சாதம் மீந்ததோ அன்று மட்டும் ஜிம்மிக்கு போட்டு இல்லாத தினத்தில் 'இன்னிக்கு சாதம் மீறலை ஜிம்மி' என்று அவள் சொன்னாலும் நம்பிக்கையை இழக்காததாய் அது அங்கே பழி கிடந்ததால் தான் சாப்பிடுவதில் ஒரு உருண்டை ஜிம்மிக்கு என்று ஒதுக்கி விடுவாள் அகிலா.

சாப்பிடும் இந்த சொல்ப அளவு உணவுக்குப் பதிலாக, இரவு முழுவதும் கிணற்றடியிலேயே உட்கார்ந்து காவல் காக்கிற மாதிரி குரைத்து தீர்க்கும் ஜிம்மி.

பகலெல்லாம் அது எங்கு போகிறது, எங்கு மற்றபடி சாப்பிடுகிறது என்பதெல்லாம் புரியாவிட்டாலும் தன்னிடம் அதுவும், அதனிடம் தானும் வைத்திருக்கும் பாசம் மட்டும் அகிலாவால் உணர முடிந்தது.

நன்றிக்கு பெயர் போனது நாய்தானே? சாதாரண தெரு நாயான ஜிம்மிக்கே இந்த மாதிரி நன்றி உணர்வு இருந்தால் ஜாதி நாய்களுக்கு எத்தனை இருக்கும்?

தோட்டத்தில் உட்கார்ந்து கொண்டு தனக்குத் தானே யோசிப்பாள் அகிலா— எப்பவாவது, எப்படி



யாவது முடிந்தால் ஒரு ஜாதி நாய்க் குட்டியை வளர்த்து அதுக்கு தினுசு, தினுசாய் வித்தைகளைக் கற்றுத் தந்து, நன்றாய் வயிறுமுட்ட சாப்பாடு போட்டால் அது என்ன பண்ணும்? என் மேல் உயிரையே வைத்து விடுமா? எதற்கும் ஆசைப்படாத அகிலாவினுள் ஜாதி நாய் ஒன்றை செல்லமாய் வளர்க்க வேணும் என்ற ஆர்வத்தை மூட்டி விட்டிருந்த அதே ஜிம்மிதான் வேதா மாமி வீட்டு வராந்தாவின் கீழ்ப்படிக் கட்டில் அமர்ந்திருந்தது.

அகிலா அதைத் திமிர்ந்து பார்த்ததும் எழுந்து நின்று வாலை ஆட்டிக்கொண்டு முனகத் தொடங்கியது.

''என் அகிலா... உன் செல்லம் வழக்கமாய் இன்னேரத்துக்கு எங்காவது ஊர் சுற்றப் போயிருக்குமே! எதுக்காக அழறது?''

அகிலா என்ன சொல்லுவாள்?

மாச கடைசியானதால் அரிசி போதவில்லை- இருக்கறதை அப்பாவுக்கும், குழந்தைக்கும் போட்டுவிட்டு அம்மாவும், நானும் கஞ்சி குடித்தோம். இதற்கு சாதம் போடாததால் என்னைச் சுத்தி வந்து அழுகிறது என்றா?

வேதா மாமிக்கும் அகிலாவின் மௌனம் எதையோ குறிப்பிட "அதுக்கு நீ சாதம் போட்டியோ? நீ பத்து தேச்சபோது தாயி கொல்ல கட்டுலே அரிசி தாத்திண்டு இருந்ததால் நானும் அங்கே தானே இருந்தேன்... நீ போட்டு நான் பார்க்கலியே" என்று வினவினாள்.

—— ... ...

மாமியின் சந்தேகம் ஊர்ஜிதமாக ''நீயாவது சாப்பிட்டாயோ, இல்லை நீயும் லங்கணம்தானா?'' என்றாள் அதட்டலாய்.

''கஞ்சி சாப்பிட்டேன் மாமி.''

என் எதுக்காக என்றெல்லாம் கேட்டு அந்த பெண்ணின் மனசை நோக அடிக்க வேதம் விரும்பவில்லை. மகாதேவன் குடும்ப நிலை அவளுக்குத் தெரியாதா என்ன? எழுந்து சமையல் கட்டுக்குள் போனாள்— ஒரு பாத்திரத்துடன் திரும்பினாள்.

''இந்தா இதை உன் ஜிம்மிக்கு போட்டுட்டு நீ கையை அலம்பிண்டு உள்ள வா...தோசை வார்த்து இருக்கு— இரண்டு எடுத்துக்கோ.''

நினைவு தெரிந்த நாளாய் மாமியுடன் பழகும் அகிலாவுக்கு அவளின் குணம் நன்கு தெரிந்ததால் எழுந்து நின்று ஜிம்மிக்கு உணவு படைத்து விட்டு கை கழுவிக் கொண்டு வந்தாள்.

''பாக்கி பூவை கட்டிடறேன் மாமி... எனக்கு பசிக்கலை'' என்றாள் மெதுவாக—

''உள்ளே வா அகிலா. பூ கட்ட இப்போது என்ன அவசரம்'' மாமி உள்ளே போக அகிலாவும் அவளைத் தொடர்ந்தாள்.

நாலு தோசை மிளகாய்ப்பொடி போட்டு எண்ணை விட்டு அவளிடம் வேதம் கொடுத்தாள்.

சமையல் கட்டிலேயே அமர்ந்து அகிலா சாப்பிட முனைந்தபோது குடிக்க தண்ணீர் எடுத்து வைத்துவிட்டு அருகிலேயே வேதம் உட்கார்ந்தாள்.

மகாதேவனுக்குத் தப்பாமல் பிறந்திருக்கிறாள் அகிலா. மானி-பட்டினியாய் வாடினாலும் வாயின் வழியாகப் பசிக்கிறது என்ற சொல் மட்டும் வராது. மாமிக்கு நெல் விளைந்து வருகிறது. ஒரு அரிசி கடனாய் கேட்போம் ; தோட்டத்தில் வாழை காய்க்கிறதே இரண்டு



காய் கேட்போம் என்று அல்பமாய் ஒரு தடவை கூட இத்தனை வருஷங்களில் கையை நீட்டினவர்களில்லை. இந்த நேர்மையான, பிறரைப் பார்த்து அகலக்கால் வைத்து ஆசையை வளர்த்துக் கொள்ளாத குணங்களை மகாதேவனிடம் சாரதாவிடம் அகிலாவிடம் கண்டாளே ஒழிய மூத்த இருவரிடம் பார்த்ததில்லை.

மூத்த என்ற போது ஸ்வாமிநாதனின் நினைப்பு மனசில் கோடு போட ''உன்னிடம் சொல்ல மறந்துட்டேனே, அகிலா—நேத்து ஸ்வாமியை பார்த்தேன்.

''எப்போ ஊரிலேர்ந்து வந்தே? ஆத்துப் பக்கம் வரக் கூடாதோ''னு கேட்டேன். ஒண்ணுத்துக்கும் பதில் சொல்லலை, சிரிச்சுண்டே நின்னான்...'' என்றாள்

சாப்பிட்டுக் கொண்டிருந்த அகிலாவுக்கு புரை எடுத்தது.

வாய நிறைய தோசை இருந்தாலும் ''ஸ்வாமி அண்ணாவை பார்த்தேளா? சௌக்கியமா இருக்கானா?'' என்று கேட்டபோது அண்ணாவை பார்த்து நாளான குறை அவள் குரலில் தெரிந்தது.

''சௌக்கியத்துக்கென்ன...ஜம்முனு இருக்கான்... உங்க மன்னி பிள்ளையாண்டு இருக்கிற மாதிரி தோணித்து...ஏழு இல்லைன்னா எட்டு மாசம் இருக்கும்... ஆபீஸ் வேலையாக அவன் வந்தானாம்... கூடவே அவளும் வந்தாளாம். இன்னிக்கு ஊர் திரும்பி விடுவாளாம்... அவனும் உங்காத்தைப் பத்தி ஒண்ணும் கேட்கலை ; நானும் சொல்லலை...''

அகிலாவின் கண்களில் நீர் ததும்பியது. அவளால் மேற்கொண்டு சாப்பிட முடியவில்லை—

"ஏ—அசடு...நீ என்னத்துக்காக கண் கலங்கறே... இதுக்குத்தான் நான் உன்கிட்டே இந்த பேச்சை எடுக்க வேண்டாம்னு நினைச்சேன்...அப்புறம் மனசு கேட்கலை... நீங்கள் எல்லாம் வேண்டாம்னு அவன்தான் உதறிண்டு போயிட்டானே. நீ அவன் தங்கை தானே—அவனோட விட்டேத்தியான குணம் உனக்கு ஏன் இல்லை?— எதுக்காக அவனை நினைச்சுண்டு அழறே?ம்?..."

வேதா மாமியின் பேச்சு அகிலாவுக்கு சமாதானத்தைத் தரவில்லை.

"எத்தனை வருஷம் ஒன்னா வளர்ந்திருக்கோம்... இப்போ அவனைப் பார்த்தே மூணு வருஷம் ஆகப் போறது...பார்க்கணும் போல இருக்கு மாமி..." அகிலாவுக்குப் பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைத்தது.

தட்டை எடுத்துக்கொண்டு எழுந்தாள்—கொல்லைப் பைப்பில் தட்டை அலம்பி ஸ்டாண்டில் கொணர்ந்து வைத்தாள். மேற்கொண்டு எதுவும் பேசாமல் வாசல் வராந்தாவுக்கு வந்து, விட்ட இடத்திலிருந்து பூக்களைக் கட்டத் தொடங்கினாள்.

வேதா மாமி வம்புக்காக அண்ணனைப் பற்றின பேச்சை எடுக்கவில்லை என்று அகிலாவுக்கு நன்றாய் தெரியும். அவர்களெல்லாம் பெற்றவர்களாய், கூடப் பிறந்தவர்களாய் உணர்ந்த வேதனையை பழகிய ஒரே காரணத்துக்காக அந்த மாமியும் அனுபவித்தாள் என்பதும் அகிலாவுக்குத் தெரியும்.

பூக்களை மீண்டும் கட்ட கையில் எடுத்தபோது அண்ணாவைப் பற்றின நினைப்புகளும் நெஞ்சில் பின்னத் தொடங்கின.

சின்ன வயதிலிருந்தே ஸ்வாமிநாதன் குடும்பத்தாரிடம் ரொம்ப பட்டுக் கொள்ள மாட்டான். தான்



உண்டு, தன் வேலை, படிப்பு உண்டு என்று தான் இருப்பான். வாயை திறந்து 'இது எனக்குத்தான் வேணும்' என்று லலிதாவைப் போல கேட்கவும் மாட்டான், 'எனக்கு வேண்டாம் தம்பி தங்கைக்கு கொடு' என்று எதையும் அகிலாவைப் போல விட்டுக் கொடுக்கவும் மாட்டான்.

லலிதாவின் திருமண சம்பந்தமாய் பேச்சுக்கள் விவாதங்கள் எழுந்தபோதும் கூட வீட்டின் மூத்த பிள்ளையாய் லட்சணமாய் சிரத்தையுடன் எதுவும் கூறமாட்டான். அகிலா விவேகத்துடன் பேசின மாதிரி இவனாக வலிய 'நான் இருக்கிறேன் அப்பா பயப்படாதீர்கள்' என்று வாயைத் திறந்து பேசினவனில்லை.

ஸ்வாமி ரொம்ப சங்கோஜி—அதிகம் பேசிப் பழக மாட்டான்—என்று மற்றவர்கள் அவனைப் பற்றி அபிப்பிராயம் வளர்த்துக் கொண்டிருந்ததே தனக்கும் சரி என்பது போலவே இருப்பான்

மஹாதேவன் லலிதாவின் திருமணம் முடிந்து கடனுக்காகப் பணம் பிடிக்கப்பட்டு, வரும் வருவாயில் குடும்பச் செலவுகளை தாக்குப் பிடிக்க முடியாமல் தவித்த தருணத்தில் 'நீ சுருக்க தலை எடுத்தால் தேவலை போல இருக்கு ஸ்வாமி', என்று ஒருமுறை மனப்பாரத்தை காட்டின போதும், மற்றுமொரு முறை அகிலா சின்ன வயதில் குடும்பப் பொறுப்பை ஏற்று விட்டதையும், மனைவி படுத்த படுக்கையில் ஆகிவிட்டதையும் தாளாதவராய் "நீ கை நிறைய சம்பாதிக்கணும்—நாலு காசு சேர்த்து மத்த பெண்களைப் போல ஆசா பாசங்கள் உள்ளவளாய் அகிலாவை மாற்றி நல்ல இடத்தில் கல்யாணம் பண்ணிக் கொடுக்கணும். அது உன் பொறுப்புதான் ஸ்வாமி" என்ற போதும்கூட அவன் மௌனமாய் இருந்தானே ஒழிய, அப்பாவின் நொந்த மனசுக்கு இதமாய் இரண்டு வார்த்தைகள் சொன்னவனில்லை.

ஸ்வாமி, ஸங்கோஜி, சாது. மனசில் இருப்பதை வெளியில் காட்டிக் கொள்ளத் தெரியாதவன் என்று நம்பியதால் யாரும் அவன் போக்கை, அவன் மௌனத்தை, விட்டேத்தியான குணத்தை லவலேசமும் தவறாக நினைக்கத் துணியவில்லை.

ஆனால்?

பி.காம். முடித்ததும் மகாதேவனின் பழைய மாணவன், இன்று அரசாங்கத்தில் உயர்ந்த பதவி வகித்தாலும் ஆசிரியர் மேல் மிகுந்த பக்தி கொண்டவனின் உதவியோடு சூட்டோடு சூடாய் ஸ்வாமிக்கு பாங்க் ஒன்றில் வேலை கிடைத்தது. புத்திசாலியாய், வேலையில் கெட்டிக்காரனாய் இருப்பதை உணர்ந்த நிர்வாகத்தினர் ஆறு மாசம் ஆவதற்குள் எழுநூறு ரூபாய் சம்பளத்தில் அவனை மேனேஜ்மென்ட் ட்ரெயினியாக்கின போது இனி குடும்பத்து கஷ்டங்களுக்கு விடிவு பிறந்து விட்டது என்று குதூகலித்தார், மகாதேவன்.

ஆனால்?

வெண்ணெய் திரண்டபோது தாழி உடைந்து விட்டதே!

## நான்கு

அந்தத் தினம் அகிலாவுக்கு நன்றாய் ஒவ்வொரு பேச்சும், நிமிஷமும் ஞாபகத்தில் இருந்தது.

அன்று தேதி இருபத்தியாறு, வழக்கமாய் ஸ்வாமி நாதனின் பேங்கில் அன்றுதான் சம்பளம் கொடுப்பார்கள்.



வேலை நிரந்தரமாகி வரப்போகும் முதல் பெரிய சம்பளம், வீட்டின் பரபரப்பும் வெளிப்படையாகவே தெரிந்தது—

பகல் ஒரு மணி இருக்கும்—

அம்மா தூங்கிக் கொண்டிருந்தாள். வாசற் கதவை வெறுமனே சாத்திவிட்டு வேதா மாமி வீட்டு ஹாலின் ஊஞ்சலில் அமர்ந்து மாமிக்கு அந்த வாரத்து புது பத்திரிகையிலிருந்து தொடர்கதை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தாள் அகிலா.

கேட்டு ஓசைப்பட்டது.

நிமிர்ந்தால் ஸ்வாமி,

"நான் அப்புறம் வரேன் மாமி"—என்று சொல்லி புத்தகத்தை கீழே வைத்த அகிலா வாசலுக்கு வந்தாள்.

"என்னண்ணா? சுருக்க வந்துட்டே? உடம்பு சரியில்லையா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை — உன்னோடு கொஞ்சம் பேசணும். அதான் இப்போ வந்திருக்கேன்" அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் ஸ்வாமி பேசினான்.

தன்னோடு பேசுவதற்காகக் கொளுத்தும் வெயிலில் எதற்காக அண்ணா வரவேண்டும்? காலையில் அல்லது இரவில் பேசக்கூடாதா?

"அம்மா தூங்கறாளா?"

'ஆம்' என்று தலை ஆட்டினாள் அகிலா.

ஸ்வாமி வீட்டை சுற்றிக் கொண்டு கிணற்றடிக்கு வந்தான். வேப்ப மரத்தின் நிழல் இதமாக இருந்த இடத்தில் நின்றான்.

ஒன்றும் புரியாமல் தன்னைத் தொடர்ந்து வந்த அகிலாவிடம் சட்டைப் பையிலிருந்து ஒரு கவரை எடுத்து நீட்டினான்.

அகிலா கவரை வாங்கிப் பிரித்துப் பார்த்தாள். புத்... நூறு ரூபாய் நோட்டுக்கள் சரியாக இருபது இருந்தன. இரண்டாயிரம் ரூபாயா? ஏது? அண்ணாவின் சம்பளம்... அவளுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

"எதுக்காக என்கிட்ட கொடுக்கறே அண்ணா? சாயங்காலம் அப்பாகிட்டே கொடு... இல்லைன்னா இப்பவே அம்மா கிட்டே கொடுத்துடேன்— அம்மாவை எழுப்பட்டுமா?"— உரக்கப் பேசின அகிலா வீட்டை நோக்கி இரண்டடி எடுக்கும் முன் ஸ்வாமி தடுத்தான்.

"கத்தி பேசாதே அகிலா... கொஞ்சம் நின்னு நான் சொல்வதைக் கேளேன்..." அவன் குரலில் எரிச்ச... இருந்தது.

"இது என் சம்பளப் பணம் இல்லை... தெரிஞ்சவரிட... கடனாக வாங்கி இருக்கிறேன்..."

"கடனா? எதுக்குண்ணா?" அகிலாவுக்கு ஆச்சரி... மாக இருந்தது.

ஸ்வாமி மெல்லிய குரலில் நீளமாய் பேசத் தொட... கினான். ஏற்கெனவே மனதில் பாடம் செய்து கொண்... டதை ஒப்பிப்பதுபோல, ஒத்திகை பார்த்ததைத் திருப்பி... சொல்வது போல அவனும், சபிதாவும் ஒருவரை ஒருவ... உளமார விரும்புவதைப்பற்றி பேசினான்.

அவன் பாங்குக்கு அருகில் இருக்கும் கல்லூரியி... பி. எஸ். ஸி. படித்த சபிதா போன மாசம்தான் இறு... பரீட்சை எழுதினாளாம். அவள் ஹாஸ்டலில் தங்கி... கொண்டு படித்ததால் ஊரிலிருந்து அவ்வப்போது வரு... பணத்தை எடுக்க போட சபிதா இவன் பேங்குக்கு வரு...



போது உண்டான பழக்கம் காதலில் கொண்டு விட்டு விட்டதாம். சபிதாவின் அப்பா கோலாரில் ஒரு சிறு தொழில் அதிபர். சபிதா அவருக்கு ஒரே மகள். பங்களூர் காலேஜில் இடம் கிடைக்காததால் சென்னையில் இந்தப் பெண்கள் கல்லூரியில் படித்தாளாம்—ஸ்வாமி மேல் உயிரையே வைத்து விட்டதால் ஊருக்குப் போனதும் தகப்பனாரிடம் தன் காதலைப்பற்றி பேசினதும் அல்லாமல் தந்தையின் சம்மதத்தையும் பெற்றுவிட்டாளாம். பத்து நாட்களுக்கு முன் அவருடன் சென்னைக்கு வந்து ஸ்வாமியை சந்திக்கச் செய்து அவருக்கு மனசு திருப்தியை உண்டாக்கி விட்டாளாம்.

"அவர் நம்ம வீட்டுக்கு வந்து அப்பாவிடம் எங்க கல்யாண விஷயமாய் பேசறேன்னு சொன்னார். நான் தான் வேண்டாம்னு தடுத்துட்டேன். அவர் தெலுங்கு ஜாதிக்காரர். நிச்சயமாய் அப்பா இந்த கல்யாணத்துக்கு சம்மதிக்கப் போறதில்லை... என்னத்துக்காக பெரிய மனுஷரை வீணாக இங்கு வரவழைத்து அவமானப்படச் செய்யணும்?"

இரண்டு வார்த்தைகளை சேர்ந்தாற்போல பேசாத அண்ணன் தீர்மானமாய் என்னென்னவோ பேசுவது அகிலாவுக்கு நிரம்ப அதிர்ச்சியைத் தந்தது.

குறுக்கே ஒன்றும் பேசாமல் அண்ணா சொல்லி முடிக்கட்டும் என்றே பேசாதிருந்தாள்.

"சபிதா, அவ அப்பா, நான் மூணு பேரும் தீவிரமா யோசனை பண்ணி ஒரு முடிவுக்கு வந்துட்டோம்... வருகிற எட்டாம் தேதி எங்களுக்கு கோலார்லே கல்யாணம் நடக்க தேதி வைச்சாச்சு... அதுக்குப் பிறகு தொழிற்சாலை பொறுப்பை, நான் ஏத்துக்கணும்னு அவ அப்பா சொல்லி விட்டார். வயசு அறிவு எல்லாத்திலேயும் பெரியவரான அவர் பேச்சை என்னால

கட்ட முடியாது. அவர் சொன்ன மாதிரியே இன்னிக்கு என் பேங்க் வேலையை ராஜினாமா செய்துட்டேன்..."

அகிலாவால் நம்ப முடியவில்லை...?

அண்ணாவுக்கு வருகிற எட்டாம் தேதி கல்யாணமா?

பாங்க் வேலையை விட்டு விட்டானா?

எழுநூறு ரூபாய் சுளையாய் இந்த மாசத்திலிருந்து வந்து தன்னையும், தன் குடும்பத்தையும் கரை சேர்க்கப் போகிறது என்று அப்பா நம்பிக் கொண்டிருந்தது நடக்காதா?

"இப்போ என்னத்துக்காக இப்படி அழுறே? நீ விவேகி...எந்த விஷயத்தையும் சரியா புரிஞ்சுப்பேனு தானே நீ தனியா இருக்கிற சமயமா பார்த்து உன்கிட்டே வந்து சமாசாரத்தைச் சொல்றேன்? ம்?"— நிதானத்தை இழந்தவனாக ஸ்வாமி பேசினான்.

தான் திக்பிரமை கொண்டு நிற்பதும், கண்களிலிருந்து தாரை தாரையாய் நீர் பெருகி கன்னங்களில் வழிந்து ஓடுவதும் அப்போதுதான் அகிலாவுக்கு புரிந்தது.

"இல்லைண்ணா... வந்து... வந்து..." அவளால் எதுவுமே பேச இயலவில்லை. பொங்கி எழுந்த துக்கம் தொண்டையை அடைத்தது. 'ஓ'வென்று அழுகை பீறிட்டுக் கொண்டு எழுந்தது.

'இப்போதைக்கு நம்ப குடும்பத்துக்கு என்னால் செய்ய முடிஞ்ச பெரிய உதவி இதுதான். இந்த இரண்டாயிரம் ரூபாய்கூட சபிதாதான் கொடுத்தா— நான் ஆறு மாசம் உழைச்சால்கூட இத்தனை பணத்தை மொத்தமாய் என்னால் கொடுக்க முடியாது. சாயங்காலம் அப்பா வந்ததும் இதைக் கொடு... விஷயத்தை எப்படிச் சொல்ல



ணுமோ அப்படிச் சொல்லு... உன் வார்த்தைக்கு அப்பா கட்டுப்படுவார். உன் திறமையிலும் எனக்கு நம்பிக்கை இருக்கு..."

ஸ்வாமி பேசப் பேச தாங்க முடியாமல் போய் அவனை நெருங்கி கைகளைப் பிடித்துக் கொண்டாள் அகிலா.

"அண்ணா ப்ளீஸ்... ப்ளீஸ் அண்ணா... அப்பா என்னென்னவோ மனசுலே கோட்டை கட்டிண்டு இருக்கார்... அதையெல்லாம் நொறுக்கிடாதேண்ணா... சபிதாவை உனக்கு கல்யாணம் பண்ணிக்கணும்னா அது பத்தி பக்குவமாய் நான் அப்பாகிட்டே நிதானமாய் பேசிப் பார்க்கிறேன். இப்போ வேலையை விட்டு விடாதே... அப்பாகிட்டே சொல்லாமல் அவசரப்பட்டு கல்யாணம் பண்ணிக்கிற முடிவுக்கு வந்துடாதே... இத்தனை பெரிய அதிர்ச்சியை அப்பா, அம்மா, ஏன் என்னால் கூட தாங்கிக்க முடியாதுண்ணா... நீ இல்லாம எங்களாலே இருக்க முடியாதுண்ணா... அண்ணா..."

அன்பான அண்ணன். தங்கள் அனைவரையும் கொண்டாடி தாங்கப் போகிறான் என்று நம்பியவனின் தோள்களில் தலையை சாய்த்துக் கொண்டு விக்கி விக்கி அழுதாள் அகிலா.

"ஸ்... நீ புத்திசாலி... ப்ராக்டிகலா எதையும் எடுத்துக்கும் மனசு கொண்டவள்னு நான் தப்பா நினைச்சு உன் கிட்டே பேசிட்டேனா அகிலா? என்னத்துக்காக இப்படி ஆர்ப்பாட்டம் பண்றே? இந்த நிலையிலே நீ அழுது அமர்க்களம் பண்ணப் போறேன்னு தெரிஞ்சா சபிதா அப்பா சொன்ன மாதிரி ஒரு கடுதாசிலே எல்லாத்தையும் எழுதி பணத்தையும் அனுப்பிச்சிட்டு நான் சத்தமில்லாமல் அவளோட போயிருக்கணும்..."

அழும் தங்கையை இரண்டு நல்ல வார்த்தைகள் சொல்லி சமாதானப்படுத்தாவிட்டாலும், புண்ணை கிளறும் வகையில் மேலும் ஸ்வாமி பேசவே சட்டென்று நிமிர்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள் அகிலா.

ஒரு நிமிஷத்தில் தன்னை ஆசுவாசப் பண்ணிக் கொண்டவளாய் "இப்போ நான் என்ன பண்ணணும் அண்ணா ?" என்றாள்

"அதான் சொல்லிவிட்டேனே அப்பாகிட்டே எப்படி விஷயத்தை சொல்லுவியோ எனக்குத் தெரியாது... நாளைக்கு கார்த்தால நான் மறுபடி வரேன்— அப்பா சம்மதிப்பார்ன்னு நான் எதிர்பார்க்கலை— அப்படி ஒரு வேளை எங்கள் கல்யாணத்தை ஏத்துண்டார்னா சபிதாவும் நானுமா நாளைக்கு ராத்திரி ஊருக்கு போறதுக்கு முன் வந்து ஆசீர்வாதம் வாங்கிண்டு போறோம். அப்புறமா கல்யாணத்துக்கு நீங்க வரலாம். இல்லைன்னா நீ வாசலலயே நின்னு எனக்கு விவரத்தை சொல்லிடு... நான் உள்ளே வந்து வீணா அவர் கிட்டே அவமானப்பட விரும்பவில்லை."—

யாரோ அன்னியர் ஒருவரைப் பற்றி பேசுவது போன்ற அலட்சியத்துடன் ஸ்வாமி பேசியது அகிலாவுக்கு முதலில் ஆச்சரியத்தையும் கூடவே வெறுப்பையும் கொடுத்தது.

எதையும் அவள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை—

"நான் முதல்லே கேட்டதுக்கு நீ பதில் சொல்லலியே அண்ணா-பாங்க் வேலையை விட்டுத்தான் ஆகணுமா ? கொஞ்சநாள் பொறுத்துக்கக் கூடாதா நான் மெதுவா அப்பாகிட்டே உன் கல்யாண விஷயத்தை பேசிப்பார்க்க டைம் கொடுக்க மாட்டியா ? ப்ளீஸ் அண்ணா..."

"ம்ஹூம் முடியாது அகிலா. சபிதாவின் பாட்டி அவ அப்பாவின் அம்மா, படுத்த படுக்கையாய் இரு



கிறாள். உயிர் போவதற்கு முன் பேத்தியின் கல்யாணத்தைப் பார்க்கணும்னு ஆசைப்படுகிறாள். அதனாலே சபிதாவின் கல்யாணத்தை எவ்வளவு சீக்கிரம் முடிக்கலாம்னு அவ அப்பா துடிக்கிறார்—பாங்க் வேலையைவிட அவர் தொழிற்சாலை பொறுப்பு ரொம்ப உயர்ந்தது அகிலா... பாக்டரி மூணு லட்சம் பெறுமாம்... சொந்தத்தில் பங்களா, கார்கள் நிறைய இருக்கிறதெல்லாம் சபிதாவுக்குத்தான். இதையெல்லாம் அப்பாகிட்டே எடுத்துச் சொல்லி அவர் மனசைத் தொட நம்மால் முடியும்னு தான் நம்புறேன்— என்ன செய்வியா ?"

பல வருஷங்களாய் தீராத நோயாளியாகிப் போன தாயின் வேதனை, வாத்தியாராய் உயிரைக் கொடுத்துக் கொண்டு வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றும் தந்தையின் பரிதாபம் புரியாத அண்ணனுக்குச் சபிதாவின் பாட்டியின் மரணப்படுக்கை ஆசை மட்டும் விளங்கியது எப்படி என்ற கசப்பான கேள்வி அகிலாவின் நெஞ்சில் எழுந்தது.

கார்கள், பங்களா, மூன்று லட்ச தொழிற்சாலை—பேஷ். அண்ணா புளியங்கொம்பாய்தான் பிடித்திருக்கிறான்.

"வாழ்க்கையில் சந்தர்ப்பம் ஒரு முறை தட்டும்போதே அதை உபயோகப்படுத்திக்கொள்ளத் தெரியணும் அகிலா... அப்பா இந்தக் கல்யாணத்தை ஒப்புக் கொண்டால் நம்ப குடும்பத்துக்கே ஆதாயம்தான்— அவ்வளவுதான் சொல்லுவேன்..."

ஸ்வாமி போய் விட்டான்.

தோய்க்கும் கல்லில் உட்கார்ந்து கொண்டு சப்தம் வெளியில் கேட்காமல் விக்கி விக்கி அழுதாள் அகிலா—

நாழியாகிறது.

அம்மா எழுந்து விடுவாள்—

குழந்தைகள், அப்பா வந்து விடுவார்கள்...

என்ன செய்வது, என்ன சொல்வது?

கையிலிருந்த பணக் கவரை பார்த்து பார்த்து விசும்பினாள் அகிலா. ஐயோ, அண்ணா, எத்தனை பெரிய பொறுப்பை என்னிடம் ஒப்படைத்து விட்டாய்; பக்குவமாய் அப்பா, அம்மாவிடம் எடுத்துச் சொல்லணும்— நீ பண்ணுகிற காரியம் உன் எதிர் காலத்தின் நன்மைக்காகத்தான் என்று எடுத்துப் பேசி உன்னையும் அவச் சொல்லிலிருந்து காப்பாற்றணுமே! அகிலாவுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை.

எழுந்து பங்களாவுக்கு ஓடினாள். வேதா மாமியிடம் விஷயம் பூராவும் சொல்லி 'ஹோ' என கதறினாள்.

"அடப்பாவி... கல் மனசு கிராதகா... கடன்காரா, தலையிலே கல்லைப் போட்டுட்டியே'... என்ற ஆத்திரத்துடன் திட்டின வேதமும் கலங்கிப் போனாள்.

அப்பா பள்ளியிலிருந்து வந்த பிறகு, வேதா மாமியும் கூட பக்க பலத்துக்கு நிற்க அகிலா சமாசாரத்தை, குழந்தைகள் விளையாட்டிலிருந்து வீடு திரும்பும் முன் சொல்லுவது என தீர்மானித்ததும் அகிலா தன் வீட்டுக்கு வந்தாள்.

திட்டமிட்டபடி மகாதேவன் பள்ளியிலிருந்து திரும்பி காபியை சாப்பிட்டதும் வேதம் அவுட் ஹவுஸுக்குப் போனாள்.

இரவு சமையலுக்காக கீரையை ஆய்ந்தபடி சாரதாவும் கூடத்திலேயேதான் இருந்தாள்.

பையனின் முதல் பெரிய சம்பளம் வரப்போவதை இருவரும் ஆவலுடன் எதிர்நோக்குவது வெளிப்படையாகவே இருந்தது.



முதலில் கவரை எடுத்து அவரிடம் கொடுத்தாள் அகிலா.

"என்னம்மா இது?"

பிரித்துப் பார்த்து இரண்டாயிரம் ரூபாய் இருப்பதைக் கண்டு மகாதேவன் கேட்டார்.

"அண்ணா கொடுத்தான்ப்பா"...

"ஸ்ரீனியா? எப்போ? அவன் எப்போ வந்தான்? அவனுக்கு ஏது இவ்வளவு பணம்?"

இரண்டாயிரம் ரூபாயா? தன் மகன் கொடுத்தானா? தான் வீட்டில் தானே இருந்தோம்... எப்போது வந்தான்? கொடுத்தான்? கைக்காரியத்தை விட்டு விட்டு தலையை நிமிர்ந்தாள் சாரதா.

அழுது கிழுது காரியத்தைக் கெடுக்காமல் சாமர்த்தியமாய் பேசத் தொடங்கினாள் அகிலா.

"நம்ப குடும்பச் செலவுக்காக அண்ணா கொடுத்தானப்பா... அவனுக்கு கோலார்லே இந்த பாங்க் வேலையைவிட உசத்தியா இன்னொரு வேலை கிடைச்சிருக்காம்... அவா கொடுத்த பணம் தானாம் இது..."

"என்னம்மா சொல்லறே, அகிலா— எனக்கு ஒண்ணும் புரியலையே!"

அப்பாவை நெருங்கி உட்கார்ந்து மெல்லிய குரலில் நிதானமாகவே அகிலா தொடர்ந்தாள்.

"மனசை சமாதானம் பண்ணிக்கோங்கோப்பா— கோலார்லே ஒரு பெரிய பணக்காரர் தன் பெண்ணையும், தொழிற்சாலை சொத்தையும் அண்ணாவுக்குத் தரப் போறாராம். இதுலே அண்ணாவுக்கு பரிபூர்ண இஷ்டம்... நாமும் ஒத்துண்டா தானேப்பா நல்லது?"

''என்னடா சொல்றே-நீ-தலையும் புரியாமல் வாலும் புரியாமல்? ஸ்வாமிக்கு கோவார்காரன் எதுக்காக வேலை, பெண் தானும்? என்னான்னா இவ என்னென்னமோ சொல்றா?'' சாரதா பதைத்தாள்.

இப்போது வேதம் அகிலாவின் உதவிக்கு வந்து [illegible] சபிதாவை ஸ்வாமி சந்தித்ததையும், அது கல்யாணம் வரையில் போய் விட்டதையும், சபிதாவின் பாட்டி மரணப் படுக்கையில் கிடப்பதையும், வருகிற எட்டாம் தேதி கல்யாணம் என்ற மற்ற எல்லா விவரங்களையும் கோர்வையாகச் சொன்னாள்.

''என்ன? என்னது?... என் பிள்ளையா இப்படி பேசிட்டு போயிருக்கான்? பெத்த தகப்பன் கிட்டே தைரியமாய் எதிர்லே நின்னு பேசக்கூட முதுகெலும்பு இல்லாத கோழையா தங்கை கிட்ட தூது அனுப்பி இருக்கான்?... ஸ்வாமியா? தெலுங்குக்காரியையா?... வருகிற எட்டாம் தேதி கல்யாணமா?''—மூச்சு இரைக்க இரைக்க கேட்ட விஷயம், கண்மண் தெரியாத கோபம், வருத்தம், ஆத்திரம் போன்ற நானாவித உணர்ச்சிகளைக் கொடுக்க இரண்டு துண்டாய் கேள்விகளைக் கேட்ட சாரதா அதிர்ச்சியில் இழுப்பு அதிகமாக, பாயில் விழுந்தாள்.

நொந்த சாரதாவின் மனசுக்கு இதமளிக்கும் விதத்தில் தன் நெஞ்சில் குமுறிய ஆத்திரத்தை வேதம் வாயைத் திறந்துகூட கொட்ட வழியில்லாதபடி மதியமே ''மாமி—என்ன ஆனாலும் அப்பா, அம்மா எதிர்லே கோபமாய் அண்ணாவை வைய வேண்டாம்-நாமும் சேர்ந்துண்டால் அவர் மனஸ்தாபம் அதிகமாய் தானே போகும்-ப்ளீஸ்-எனக்காக ஒன்றும் சொல்லாதீங்கோ மாமி''- என அகிலா கெஞ்சியதுக்குக் கட்டுப்பட்டவளாய் சாரதாவின் அருகில் அமர்ந்து மென்மையான வார்த்தைகளாலேயே அவளை ஆஸ்வாசப்படுத்த முயன்றாள்.



அகிலா மறுபடி அப்பாவிடம் பதறாமல் பேசினாள். கடைசியில் ''வீணா கோபப்படுவதில் ஒண்ணும் அர்த்தம் இருக்கறதாய் எனக்குத் தெரியலை அப்பா... அண்ணா தீர்மானம் பண்ணிட்டான்... அவனை இனிமே மாத்த முடியும்னு எனக்குத் தோணலை... கத்தி, குதிப்பதால் மட்டும் என்னப்பா ஆகப் போறது?''

மகாதேவன் மாரை பிடித்துக் கொண்டு உட்கார்ந்தவர் தான். வாயைத் திறக்கவில்லை.

''தயவு செய்து நாளைக்கு அண்ணா வரும் போது அவன் கிட்டே கோபமாய் பேசாதீங்கோ அப்பா—கல்யாணம் பண்ணிக்கப் போறவனை வாழ்த்தா விட்டாலும் வைய வேண்டாமில்லையாப்பா... உங்களுக்கு தெரியாததில்லை... என் அதிகப் பிரசங்கித்தனத்தை மன்னிச்சுடுங்கோப்பா... அவனுக்காக நான் உங்க கால்லே விழறேன்...''

அது நாழிகை அடக்கி வைத்திருந்த கண்ணீருடன் தந்தையின் கால்களில் விழுந்தாள் அகிலா.

ஆடிப் போய்விட்டார் மகாதேவன்—

ஒன்றும் பேசவில்லை.

இடது கையால் மார்பை அழுந்தி பிடித்துக் கொண்டார்...

''இத்தனை சுயநலக்காரபிள்ளை எனக்குப் பிறக்க நான் என்ன தப்பு பண்ணினேன்; ஈஸ்வரா?'' என்று மட்டும் முணுமுணுத்தார்.

அப்பா அழுது அன்றுதான் அகிலா பார்த்தாள்.

மறுநாள் அவர் பள்ளிக்கு லீவு போட்டுவிட்டு மகனின் வரவுக்காகக் காத்திருந்தார்.

அப்பா ஸ்வாமியிடம் கண்டிப்பாய் கத்த மாட்டார் என்பது அகிலாவுக்குப் புரிந்தாலும், அவர் அவனிடம் என்ன பேசப் போகிறார் என்பது மட்டும் தெரியவில்லை.

அண்ணாவின் தலை கேட்டில் தெரிந்த உடனே அப்பாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "அப்பா... அண்ணாவை கோபிச்சுக்க வேண்டாம்... ப்ளீஸ்" என்று திரும்பத் திரும்ப அகிலா கெஞ்சினபோதும் அவ அவளிடம் ஒன்றுமே பேசவில்லை.

ஸ்வாமிநாதன் உள்ளே வந்தான்... அகிலாவின், அப்பாவின், பாயில் உட்கார்ந்திருந்த அம்மாவின் முகங்களைப் பார்த்தான்.

மௌனம்—

அவனே பேச்சைத் தொடங்கினான்.

"வந்து... அகிலா... வந்து"

"அகிலா எல்லாத்தையும் சொன்னாப்பா, உன் இஷ்டம் போல செய். ஆனால் இனிமேல் அப்பா, அம்மா உறவு கொண்டாடிண்டு நீ இங்கே வர வேண்டிய அவசியம் இருப்பதாக நான் நினைக்கலை. இந்தா நீ கொடுத்த பணம்— எங்களுக்கு பிள்ளையே இல்லைன்னு ஆன பிறகு அவன் பணம் மட்டும் எப்படி சொந்தமாகும்? எடுத்துக்கோ... போ சௌக்கியமாய் இரு..."

அம்மா வாய் திறந்து 'என்னடா' என்றுகூட கேட்கவில்லை. பிரமை பிடித்து உட்கார்ந்திருந்தாள்.

ஸ்வாமி வெட்கமில்லாமல் அப்பா நீட்டிய பணத்தை வாங்கிக் கொண்டான். ஒரு வார்த்தை மேற்கொண்டு பேசாமல் நடந்து விட்டான்.

அவன் போன பிறகு "உங்களையும், உங்க பெண்ணையும் போல விவேகத்தோட என்னால இருக்க முடியலையே பாவி... ஏமாத்திட்டானே" என்று கதறிக் கதறி சாரதா மட்டும் அழுதாள்.

## ஐந்து

**வெ**ங்கடேசம், தங்கமும் ஒன்பது மணி வண்டியில் வருகிறார்கள். பெற்றோரைப் பார்க்கப் போகும் குஷியில் வீட்டை இரண்டு பண்ணிக் கொண்டிருந்தார்கள் ஞாயிற்றுக்கிழமை வேறு. அட்டகாசத்துக்கு கேட்க வேண்டுமா?

காலையில் எழுந்து அப்பா, அம்மா, பவானி, ராமுவுக்கு காபி கலந்து கொடுத்து தானும் குடித்தபின் அவசரமாய் குளித்துவிட்டு பங்களாவுக்குப் போனாள் அகிலா. மாமிக்கு காய்கறி நறுக்கிக் கொடுத்து, வடைக்கு அரைத்து, அப்பளம் கருவடாம் பொரித்து கொடுத்த பின் "நான் போய் சமையலை முடிச்சிட்டு வரேன் மாமி" என்று கிளம்பினாள்.

புறப்பட்டவளை 'கொஞ்சம் இரு' என்று சொல்லி நிறுத்தினான் வேதம். அப்போதுதான் தோட்டக்காரன் கொண்டு வைத்து போயிருந்த கூடையை எடுத்தான். பச்பச்சென்று கூடைகொள்ளாமல் வெண்டைக்காய்களும் இரண்டு பீர்க்கங்காய்களும் இருந்ததை அப்படியே அகிலாவிடம் கொடுத்தான்.

"நான் இரண்டு தடவை சமைச்சுட்டேன். திரும்ப இன்னிக்கு வதக்கினா பையன்கள் மூஞ்சி காட்டுவா. நீ எடுத்துண்டு போ நான் திரும்ப இரண்டு நாளிலே பறிச்சுக்கறேன்"

மாமி கொடுத்ததை வாங்கிக் கொண்டு பின் பக் கதவு வழியாய் தோட்டத்தில் இறங்கி வீட்டை நோ நடந்தாள் அகிலா.

கூடை வெண்டைக்காயை என்ன செய்வது என அவளுக்கு மலைப்பாகவே இருந்தது.

வெண்டைக்காய் வதக்கி கறி பண்ணினால் நன்றா இருக்கும். ஆனால் அத்தனை எண்ணெய்க்கு எங் போவது? மாசக் கடைசி. இனி நாளை முதல் தே எண்ணெய் வாங்கின பிறகே அந்த மாதிரியான க சமையலை மனசால் நினைத்துப் பார்க்க முடியும்.

நேற்று பூ கட்டும் போது அவள் அரிசி குறைவ சாப்பிடாததைப் புரிந்து கொண்டு பூக்களைக் கட் முடித்து அவள் கிளம்பும் போது மரக்கால் அரிசியை ம எடுத்துக் கொடுத்து, "இன்னிக்குதான் நெல் அரைத்தே உனக்கு மரக்கால் கொடுப்பதால் நான் குறைஞ்சு போய் மாட்டேன். ம் பிடி" என்று அதட்டலாய் சொன்ன மீற முடியாமல் அகிலா அதை வாங்கிக் கொண் வந்தாள். இரவு வடித்தது போக பாக்கி இருக்கும் அ இன்றைக்கும், நாளைக்கும் வெள்ளம்.

சமையல்கட்டில் காய்கறிகளை வைத்து விட் என்ன சமைக்கலாம் என்று யோசித்தாள் அகிலா.

நாளைக்கு முதல் தேதி சாயங்காலம் அப்பாவு சம்பளம் வந்துவிடும். போய் எண்ணெய், மற்ற மளி சாமான்கள் வாங்கி வந்து விட்டால், நாளை மறுநா பருப்பு போட்டு சாம்பார் வைத்து வெண்டைக் வதக்கல் கறி பண்ணலாம். நல்ல சமையலாய் சமை நாலைந்து நாளாகப் போகிறதே!

ஐந்தாறு வெண்டைக்காய்களை இன்றைய வத் குழம்பில் போட எடுத்து வைத்து விட்டு பாக்கி



அலம்பி ஈரத்துணியில் சுற்றி வைத்தாள். பீர்க்கங்காய்களையும் ஒதுக்கி வைத்த வெண்டைக்காய்களையும் நறுக்க உட்கார்ந்தபோது ஒரு கையில் பம்பரமும், மறு கையில் கயிறுமாய் வந்தான் ராமு.

ஞாயிற்றுக்கிழமை அல்லவா? அப்பா வாசலில் அமர்ந்து கணக்கு புஸ்தகங்களை திருத்திக் கொண்டிருந்தார். அம்மா குளித்துவிட்டு ஸ்லோகம் சொல்லிக் கொண்டிருந்தாள். பவானி எதிர் வீட்டுப் பெண்களுடன் பாண்டி ஆடுவதில் ஈடுபட்டிருந்தாள். இது நாழிகை சந்திரன், சுரேஷுடன் பம்பரம் ஆடிக் கொண்டிருந்த ராமு இப்போது வேர்த்த முகமும், மண் கையுமாய் உள்ளே அக்காவிடம் வந்தான்.

''என்னடா அதுக்குள்ளே உள்ளே வந்துட்டே? மணி எட்டு கூட ஆகலியே! ஞாயிற்றுக்கிழமைனா ஐயா ஒன்பது மணியானாலும் உள்ளே வர மாட்டாரே."

''நான் விளையாட ரெடிதான். ஆனா சந்திரன், சுரேஷை வேதாமாமி குளிக்க கூப்பிட்டா. அவ அம்மா, அப்பா வர நாழியாயிடுத்தாமே. ரெடியாய் இருக்க வேண்டாமா? 'நீயும் வீட்டுக்குப் போய் குளிச்சிட்டு வாடா'ன்னா... வந்துட்டேன்.''

''சரி...போ... கிணத்திலேந்து தொட்டிலே தண்ணி நிரப்பி வைச்சிருக்கேன். குளிச்சிட்டு வா— ஓடு..."

கூடையில் இருந்த பச்சை வெண்டைக்காய்களை பார்த்தான் ராமு.

''ஹை வதக்கின கறியாக்கா இன்னிக்கு?"

அவன் குண்டு கண்களையும் அதில் எழுந்த ஆர்வத்தையும் பார்த்த போது அகிலாவுக்கு சிரிப்பு வந்தது. நாக்கு ராமுவுக்கு ஒன்னரை முழம். வகையாய்ச்

சமைத்துப் போட்டால் சப்புகொட்டிக் கொண் சாப்பிட இவன் ரெடி ?

"இல்லேடா நாளைக்கு எண்ணெய் வாங்கி அப்புறம் தான் வதக்கல்."

"பின்னே இன்னிக்கு என்ன ?"

"வெண்டைக்காய் வத்தல் குழம்பு. பீர்க்கங்கா துவையல்."

"ஹை துவையல் கூட எனக்கு பிடிக்கும்—"

குழம்புக்காக அகிலா நறுக்கிப் போட்டிருந் வெண்டைக்காய் காம்புகளை எடுத்து இரண்டு கன்ன கள், மூக்கு, தாவாங்கட்டை, நெற்றியில் ஒட்டி கொண்டான் ராமு. பின்னர் கோமாளி போல முக தைக் கோணி, கோணி அகிலாவுக்கு வேடிக் காட்டினான்.

சின்ன வயசில் எல்லா குழந்தைகளுமே ஒ மாதிரிதான் இருப்பார்களா ? அம்மா எப்போது வெ டைக்காய்களை நறுக்கினாலும் அந்த காம்புகளை எடுத்து கொழ கொழ வென்று பிசின்போல இருக்கு பக்கத்தை தானும் முகத்தில் ஒட்டிக்கொண்டு, 'அம் நான் பவூன்' என்று சின்ன வயசில் குதூகலித்த இப்போது அகிலாவுக்கு நினைவு வந்தது.

வேதா மாமி வீட்டிலும் அப்படித்தான்— மாமி காய் நறுக்க விடாது பேரப்பிள்ளைகள் அ காம்புகளை எடுத்துப் போய் தங்கள் 'உடம்பில் க களில், ஏன், மாமியின் முதுகில் அவைகளை ஒட் சந்தோஷிப்பார்கள்.

சின்ன வயசில் எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதி தான் இருப்பார்களா ?



வயசாக ஆகத்தான் அவரவருள் தோன்றும் சில தனித் தனி குணங்கள் உயர்ந்து விடுமா ?

லலிதாவும், ஸ்வாமியும் கூட இப்படித்தானே வெண்டைக்காய் காம்புகளை ஒட்டிக்கொண்டு வேடிக்கை காட்டி இருப்பார்களா ?

நேற்று வேதா மாமி ஸ்வாமியையும், அவன் மனைவியையும் பார்த்ததாக சொன்னதிலிருந்து அண்ணாவைப் பற்றி தனது சிந்தனைகள் அதிகம் படருவதை அகிலா உணர்ந்தாள்.

மன்னியை ஒரு தடவையாவது பார்க்கவேண்டும் என்று மூன்று வருஷங்களாய் ஊறிப் போன ஆசை இப்போது குறுகுறுத்தது.

எப்படிப் பார்ப்பது ? எங்கே என்று தெரிந்தாலாவது ராமுவைத் துணைக்குக் கூப்பிட்டுக் கொண்டு போகலாம், வகையாய் இன்று ஞாயிற்றுக்கிழமை— அவனுக்குப் பள்ளி லீவு தான்.

ஆனால் எங்கே போவது ?

மாமியிடம் அண்ணா சரியாக பேசலேயில்லியாமே ; அவன் மனசில் எத்தனை வருத்தமோ, கோபமோ ?

வாசலிலேயே நிறுத்தி மூன்று வருஷங்களுக்கு முன் அண்ணாவை, அப்பா அனுப்பிச்ச பிறகு அவள் அவனை பார்க்கவில்லை,

விஷயம் தெரிந்த முதல்தான் இரவும், மறுநாள் காலை மகன் வந்தபோதும் வாயைத் திறந்து ஆத்திரத்துடன் கத்தாமல் அழுது தீர்த்த சாரதாவின் கண்ணீர் இரண்டு நாட்களில் சுத்தமாய் வற்றிப்போனது.

"எனக்கு இனி ஸ்வாமி என்கிற பிள்ளையே இல்லை" என கட்டின கணவன் தீர்மானம் செய்த பிறகு வாயைத்

திறந்து அவரிடம் எதுவுமே கேட்காமல் அவருக்கே பத்தினியாய் வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற அ... வைராக்கியம் மறுவாரம் தபாலில் ஸ்வாமியின் கல்யா... பத்திரிகை வந்ததும் கரைந்து போயிற்று—

முதலில் பத்திரிகையைப் பார்த்தது அகிலா தான்.

மூன்றாம் மனிதன் ஒருவனின் கல்யாண இன்விடே... போல போஸ்ட்மேன் விசிறி எறிந்து விட்டுப் போன... எடுத்துப் பார்த்து தன் அண்ணனின் திருமணப் பத்திரி... என்று புரிந்து கொண்டதும் அவள் நெஞ்சில் இ... பந்தாய் உருண்டு எழுந்து தொண்டையில் அடைத்து...

அன்றைக்கு அண்ணா எத்தனை விட்டேத்தியா... பேசினான்

பிறந்து வளர்ந்த குடும்பத்தின் மேல் இல்லாத பா... புதிசாய் வந்த சபீதா மேல் உண்டாகுமா என்று... அவன் அவள் மேல் எத்தனை தீவிர அன்பு வைத்திரு... வேண்டும் ?

சபீதா எப்படி இருப்பாள் ?

ஸ்வாமி— சிகப்பு— அழகு அவனுக்கு ஏத்த நிற... கண்ணுக்கு நன்றாய் இருப்பாளா ?

தெலுங்கர் கல்யாணம் எப்படி இருக்கும் ?

நம்முடைய மாதிரியா, இல்லை வித்தியாசமாக...

முகூர்த்தம் இரவு ஒரு மணியிலிருந்து ஒன்றரைக்கு... என்று போட்டிருக்கிறதே !

அகால நேரத்தில் முகூர்த்தம் வைப்பது அவர்... வழக்கமா?

மலைபோல நம்பிய அண்ணன்மேல் அகிலாவு... கோபமே இல்லை. ஆனால் வருத்தம் உண்டு.



பத்தினியாய்— [illegible], ஒற்றுமையுடன் இருந்து அம்மாவை எப்படியாவது சமாளிக்க வைத்து, நல்ல பெயருடன் [illegible] போகாமல் இப்படி திடீரென [illegible] போட்டு, கெட்ட பெயருடன் பிரிந்து போகிறானே என்ற வருத்தம்.

அண்ணா சம்பாதித்து, பணம் சேர்த்து தன் கல்யாணத்தை அமர்க்களமாய் நடத்துவான், நடத்த வேண்டும் [illegible] என்றெல்லாம் அவள் மனக்கணக்கு [illegible] நினைத்ததும் [illegible] அண்ணா சுயநலக்காரன், தன் வாழ்க்கையை அமைத்துக் கொடுக்காமல் ஏமாற்றி விட்டான் என்று ஒரு கணம் கூட நினைத்துக் கோபப்படவில்லை.

அதுதான் அகிலாவின் [illegible].

அம்மாவும் பார்த்தாளோ இல்லையோ [illegible] எரிமலையாய் வெடித்தாள்.

''பாவி— மஹாபாவி— வீட்டுக்கு மூத்தவனால்தான் நாம் கஷ்டப்படணும். இந்தப் பையனாலாவது நமக்கு விமோசனம் கிடைக்கும்[illegible] நம்பியிருந்தேனே... எல்லாம் வீணாயிடுத்தே... பெத்தவர்கள், கூடப் பிறந்தவர்களை விட அந்த தெலுங்குக்காரி அவனுக்கு உசத்தியா போயிட்டாளா! பத்தொன்பது வயசு தங்கை குதிராட்டம் இருக்கா... அவ[illegible]க்கு ஒரு நல்ல காரியத்தைச் செய்து வைப்போம் என்ற எண்ணம் இல்லை. இருபத்திரண்டு வயசில் இவனுக்கு இப்போ என்ன கல்யாணம்? இங்கே தினம் செத்து செத்து பிழைக்கிற என்னைக் கவனிக்க இரண்டு வார்த்தை இதமா 'அம்மா எப்படி இருக்கே'னு கேட்க துப்பில்லாதவனுக்கு அந்தப் பெண்ணோட பாட்டி படுத்த படுக்கையாய் இருக்கிறது மட்டும் மனசுலே உறுத்தறதாமே— ஐயோ— இவனைப் பெத்த வயத்துலே பிரண்டையைதான்னா வைச்சு கட்டிக்

கணும்... இவன்தான் உங்களை தாங்கப் போறான்னு மலைபோல நம்பிண்டு இருந்தேனே என்னாச்சு பா தேளா? என் பெத்த வயிறு துடிக்கிறதேன்னா அ நன்னா இருப்பாளா?"

சாரதா கதறின கதறலைக் கேட்டு வேதா மாமி வந்து விட்டாள்— பவானியும், ராமுவும் மிரண்டு போ நின்றுவிட்டனர். மகாதேவன் வாயில் துண்டை அடை துக் கொண்டு சுவரில் சாய்ந்துவிட்டார்— நிலைமை சமாளித்தது அகிலாதான்.

"அம்மா, உனக்கு என்னாச்சு. அண்ணா நம் மெல்லாம் விட்டுப்போயிட்டான் என்கறதுக்காக இப்ப கல்யாண பத்திரிகையைப் பார்த்து குமுறி அழற தப்பும்மா. ஆயிரம் இருந்தாலும் அவன் உன்பிள்ளை எங்கேயாவது அவன் நன்னா இருந்தால் சரினு சொ லாம இந்த மாதிரி வாயிலே வந்தபடி கத்திண்டு அ துண்டு? சீச்சீ. இதெல்லாம் நன்னா இல்லேம்மா. உ கோபத்தை அடக்கிக்கோ. லலிதா அக்காவைக்கூடத்தா இருபது வருஷம் வளர்த்தேன். நிறைய செலவு பண்ண கல்யாணம் பண்ணிக்கொடுத்தேன்— பெண் என்கி காரணத்துக்காக அவள் கிட்டேயிருந்து பதிலுக்கு என்ன எதிர்பார்த்தே? அண்ணா பிள்ளையாய் பிறந் தோஷத்துக்காக நீயாகவே அவனிடம் என்னமோ எதி பார்த்து ஏமாந்து ஏன் வையணும்? அண்ணாவை ஒரு பெண் மாதிரி மனசிலே நினைச்சுக்கோ— அவனுக் வாழ்க்கையிலே ஒரு நல்ல திருப்பம் வந்தது; அ அண்ணா உபயோகப்படுத்திண்டான்- அண்ணா குடும்ப தைத் தாங்கப் போறான்னு நீயே கற்பனை பண்ணிண் இன்னிக்கு அவனை குத்தம் சொல்லறே! அது தப்பும்மா அப்பா இருக்கார் நம்மை எல்லாம் காப்பாத்த— அ புறம் நமக்கு என்ன வேணும்?— கோபத்தை அட க்கும்மா..." சின்ன குழந்தையை சமாதானம் செய்வ போலச் சொல்லி தாயைத் தேற்றினாள் அகிலா.



அதன் பிறகு அந்த வீட்டில் ஸ்வாமி என்ற பெயரை தப்பித்தவறி கூட ஒருவரும் சொன்னதில்லை—

ஆனால் அகிலா மட்டும் கல்யாண அழைப்பிதழை பத்திரமாய் தன் உடைமைகள் நடுவில் வைத்துக் கொண்டிருந்தாள்.

நிஜமாகவே அவளுக்கு அண்ணாமேல் கோபமில்லை— அழகான மனைவி, நிறைய சொத்து, வாழ்க்கையில் சௌகரியங்கள் என்று ஒருவனைத் தேடி வரும்போது அவைகளை வேண்டாம் என்று சொல்லி ஒதுக்க எத்தனை பேருக்கு மனசில் திடமிருக்கும்?

ஆயுசு பரியந்தம் இந்தக் குடும்பத்துடன் மன்றாடி இல்லாமையில் உழன்று கொண்டிருப்பதைவிட இவர்களை உதறுவதன் மூலம் தன் வாழ்க்கைத் தரத்தை மாற்றிக் கொள்ளுவது அவனுக்குப் பிடித்திருக்கிறது.

இதில் என்ன தப்பு!

லலிதா கல்யாணமாகி கணவனுடன் சௌக்கியமாய் வாழவில்லையா? அவளால் இந்தக் குடும்பத்துக்கு என்ன ஆதாயம்? அதுபோலத்தான் அண்ணாவின் சமாச்சாரமும் அவர்களாவது நிம்மதியாய் சந்தோஷமாய் இருக்கிறார்களே அதை நினைத்து சந்தோஷப்படத்தான் வேண்டும்.

மன்னி கர்ப்பமாய் இருப்பதாக வேதாமாமி சொன்னதை நினைக்கும்போது அகிலாவுக்கு உண்மையிலேயே சந்தோஷமாய் இருந்தது. நல்லவிதமாய் குழந்தை பிறந்து அவர்கள் சௌக்கியமாய் இருக்கவேண்டும் என்று நேற்று மாலை வீட்டுக்கு வந்து கடவுளுக்கு விளக்கேற்றி நமஸ்கரித்தபோதுகூட வேண்டிக் கொண்டாள்.

"அக்கா— தங்கம் மாமி வந்தாச்சு."

கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்த ராமு பெரிசாய் குரலை எழுப்பினான்.

சிந்தனைகளில் ஆழ்ந்திருந்த அகிலா திடுக்கிட்டு எழுந்தாள்— பரபரவென்று கொதித்துக் கொண்டிருந்த குழம்புக்கு மாவு கரைத்துவிட்டு இறக்கி வைத்தாள்.

"நீ போ அகிலா—பாக்கியை நான் பார்த்துக்கறேன்" என்றாள் சாரதா.

''துவையலை உன்னால் அரைக்க முடியாதும்மா— சாதத்தை வடிச்க, ரஸத்தை வை— துவையலுக்கு நான் வந்து வறுத்து அரைக்கிறேன்—என்ன ?"

"இன்னும் உட்கார்ந்துண்டு தானே இருக்கேன். இன்னிக்கு உடம்பு கொஞ்சம் சொன்ன பேச்சை கேட்கறது. நானே மெதுவா துவையலை அரைச்சுட்டு அப்பாவுக்கு சாதம் போட்டுடறேன்— நீ ஒக்காத தங்கத்தோட இரண்டு வார்த்தைகூட சரியாப் பேசாம காலில் வெந்நீரை கொட்டிண்டு ஓடி வராதே என்ன நான் மத்தியானமா வரேன்னு சொல்லு— கிளம்பு—''

வேதா மாமி கொடுத்த கஷாயம் நன்றாய் வேலை செய்திருந்தது—அம்மாவின் இருமல், இழுப்பு இரண்டுமே நேற்றும் இன்றும் தேவலைதான்.

எழுந்து கையை அலம்பி, முன் தலையை வாரி கொண்ட அகிலா நாலே எட்டில் பங்களாவை அடைந்தாள்.

## ஆறு

சமையற்கட்டு ஜன்னல் வழியாகப் பார்த்தால் அவுட் ஹவுஸ் நன்றாகத் தெரியும். அம்மா சமையல் அறையி



மாலை டிபனுக்காக பக்கோடா போட்டு கொண்டிருந்த தால் கூடவே நின்று பேசிய நாழிகையில் ஜன்னல் வழியாகப் பார்த்தாள் தங்கம்.

அகிலா காய்ந்த துணிகளை மடிப்பது தெரிந்தது. ஒவ்வொரு துணியாக உதறி இஸ்திரி போடுவது போல தரையில் கிடத்தி கையால் நீவி அவள் மடிக்கும் லாவகத்தில் நேர்த்தி இருந்தது. சாரதாவின் புடவையை மடிக்க முனைந்தபோது அதில் இருந்த கிழிசல் கைக்கு தட்டுப்பட்டதால் உள்ளேபோய் ஊசி நூலை எடுத்து வந்து கிழிசலை அகிலா தைப்பதையும் தங்கம் பார்த்தாள்.

''இந்தா தங்கம். உப்பு போறுமானு பாரு.''

அகிலாவைக் கவனிக்கும் சுவாரஸ்யத்தில் அம்மா கூப்பிடுவது காதில் கேட்கவில்லை.

''தங்கம்— என்ன பராக்கு? கூப்பிடறதுகூட கேட்காமல் ?''

இப்போது தலையைத் திருப்பினாள் தங்கம்.

வேதம் நீட்டிய மாவை வாயில் போட்டு 'சரியாயிருக்கு' என்றவள் ''நானும் நாலு நாளாய்ப் பார்க்கறேன்— அகிலா சித்தகூட உட்காராமல் பம்பரமாய் அந்தக் குடும்பத்துக்காக உழைக்கறா... நல்ல பெண்... இல்லேம்மா ?" என்றாள்.

வாணலியில் எண்ணெயை விட்டு அடுப்பை மூட்டினாள் வேதம். பின் ஜன்னல் பக்கம் வந்து இது நாழிகை பெண் பார்த்த காட்சியைத் தானும் பார்க்க எண்ணி எட்டிப் பார்த்தாள்.

அகிலா துளசி மாடத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள். அடுத்து தண்ணீர் தெளித்து கோலம் போடுவாள்— பிறகு பூக்கூடையை எடுத்துக் கொண்டு

பூப்பறிக்கக் கிளம்புவாள்— அன்றாடம் அவள் செய்யு
வேலைகளெல்லாம் வேதத்துக்கு அத்துப்படிதானே!

"அகிலா மாதிரி ஒரு சமர்த்தான பெண்ணை நா
பார்த்ததில்லை தங்கம்... ரொம்ப குணமான பெண்..."

"அவளுக்கு இப்போ என்ன வயசிருக்கும்மா?"

"ம்... என்ன இருபத்திரண்டு இருக்கும்... பாவ
அதுக்குள்ளே எத்தனை பொறுப்புகளைச் சுமந்துட்டா..
பொதி சுமக்கிற கழுதை பாடுகூட தேவலை."

வேதம் காய்ந்த எண்ணெயில் மாவை உருட்டிப்
போட ஆரம்பித்தாள்.

"சாரதா மாமி போன வருஷத்துக்கு இந்த வருஷ
இன்னும் தேய்ஞ்சு போய்விட்டாள்— அவ வியாதி
இப்போ எப்படிம்மா இருக்கு?"

"வியாதினு பயப்படும்படியா வந்த டி. பி. மூணாவ
வருஷமே சரியாயிடுத்து— ஆனா அதுக்கப்புறம் அவ
உடம்பு முழுசாய் தேறி எழுந்திருப்பதுக்குள் பையன்
செய்த காரியத்தால் ஆடிப் போயிட்டா. அந்த
அதிர்ச்சியிலிருந்து மீளவே இல்லை. போதாத குறைக்கு
போன தைமாசம் நிமோனியா மாதிரி ஜுரம் வேற
வந்தது. உனக்குக்கூட லெட்டர்லே எழுதினேனே,
அதற்குப் பிறகுதான் ஓழிச்ச நாராக் கிடக்கா. எப்ப
பாரு இழுப்பு, சளி, இருமல், பாவம்—"

"ஏம்மா அந்த ஸ்வாமி வந்து இவர்களை பார்க்கலே
யில்லையா? என்ன கல நெஞ்சுத்தனம் பார்த்தியா?"

"சாது மாதிரி இருந்துண்டு பெரிசா கல்லைத் தூக்கி
போட்டப்புறம் அவனாவது வந்து இந்தக்குடும்பத்தோட
பட்டுக்கறதாவது; இரண்டு நாள் முந்தி கூட நல்லி கடை
வாசலில் பார்த்தேன். பெண்டாட்டிக்குக் ...



கொள்ளாமல் புடவை வாங்கி கொடுத்து கூட்டிண்டு
போறான்."

"அவன் இந்த ஊரிலா இருக்கான்?"

"இல்லை இல்லை. ஒரு நாள் வேலையா வந்திருக்
கானாம். என்ன ராங்கியா பதில் சொன்னான் தெரியுமா?
பணந்திமிர் உடம்புலே கூத்தாடறது. நன்னா
பெருத்துண்டு ஆள் அடையாளம் தெரியாதபடி
இருந்தான். அவனைப் பார்த்ததை அகிலாகிட்டே
சொன்னேன். அண்ணாவைப் பார்க்கணும்போல
இருக்குனு அந்தப் பெண் அழுதுடுத்து. அவன் என்ன
சொன்னான் தெரியுமா? 'ஏன் ஸ்வாமி வீட்டுக்கு வரக்
கூடாதா?'னேன் — அந்தக் குடும்பத்துக்கும், எனக்கும்
இருந்த சம்பந்தம் விட்டுப் போய் மூணு வருஷமாச்சே
மாமினு எடக்காய் பேசினான். இதை எல்லாம் அகிலா
கிட்டே சொல்லலை. ஏற்கனவே அவமானத்தை நொந்து
கிடக்கா. இதையும் சொல்லுவானேன்னு பேசாமல்
இருந்துட்டேன்..."

"ஸ்வாமி பெண்டாட்டியைப் பார்த்தியாம்மா?"

"ம்...ம்...ஆள் ஜோராய்த்தான் இருக்கா... கர்ப்பம்
தெரிஞ்சுது—"

இரண்டு சுடு பக்கவடாத்தை எடுத்து எண்ணெய்வடிய
வைத்த வேதம் அவைகளை ஒரு தட்டில் கொட்டி
தங்கத்தின் முன் வைத்தாள்.

பக்கவடாத்தை எடுத்து, விண்டு, சாப்பிட்டாள்
தங்கம். வாயில் சூடாக போட்டுக் கொண்டு விட்டதால்
கடிக்கவும் முடியாமல், துப்பவும் முடியாமல் சில
கணங்கள் தவித்துவிட்டு மெல்லக் கடித்து முழுங்கினாள்.

"குடும்பத்துக்காக பணம் ஏதாவது அனுப்பறா
னாமா, தெரியுமா?" தங்கம் ஸ்வாமியைப் பற்றின
பேச்சையே தொடர்ந்தாள்.

"ம்ஹூம்... அதெல்லாம் கிடையாது. உறவு செத்து ரூம்னு வருஷமாச்சுனு சொல்லுகிறவன் பணம் மட்டும் அனுப்பிடுவானா, என்ன? மகாதேவன் மானஸ்தர். அவன் அனுப்பினால்கூட இவர் தொடமாட்டார். ஏன் முதல்லே அவன் கொடுத்த இரண்டாயிரம் ரூபாயைக்கூட 'மதிக்காதவன் காசு எனக்கு வேண்டாம்'னு திருப்பி கொடுத்தவர்தானே" என்ற வேதம், "பக்கடாத்துக்கு உப்பு உரைப்பு சரியாக இருக்கா? பாக்கியையும் போட்டு எடுத்துடட்டுமா? ஒரு தட்டிலே பக்கவடாத்தையும் அதோ அந்த டப்பாவில் தேங்காய் பர்பி வைச்சிருக்கேன், அதில் இரண்டையும் வைத்து மாப்பிள்ளையிடம் கொடுத்துட்டு வா" என்றாள்.

'பர்ஸ்ட் க்ளாஸா இருக்கு... எல்லாத்தையும் போட்டுடு... ஆமாம் அந்த லலிதா எப்படி இருக்கா? அவளைப் பார்த்து ரொம்ப நாளாச்சு... எத்தனை குழந்தைகள் அவளுக்கு?''

அம்மா சொன்ன மாதிரி தட்டில் [illegible] வைத்துக் கணவனுக்குக் கொடுத்துவிட்டு திரும்பியவள் கேட்டாள்.

''அவளுக்கு என்ன? நன்றாய் இருக்கா... அவ ஆத்துக்காரருக்கு இப்போ பம்பாயில் வேலை. எல்லாமாய் ஆயிரம் ரூபாய் வரதாம். ஒரே பெண் குழந்தை. நாலு வயசிருக்கும். பிறந்தகம் ஏழையாய் இருக்கறதனாலே இங்கே அவளை அவ மாமியார் அனுப்புறதில்லை. மாசத்துக்கோ இரண்டு மாசத்துக்கோ இரண்டு வரி எழுதும் ஒரு கடுதாசோட உறவெல்லாம் சரி. அவ வராதவரைக்கும் நல்லதுதான். வந்தால் 'என் குழந்தைக்கு இரண்டு வேளையும் ஓவல்டின் கொடு, கட்டித்தயிர் ஊற்று, ராத்திரி குடிக்க எங்களுக்குப் பசும் பால் கொடு'னு என்னவோ மகாராஜா வீட்டிலே பிறந்து வளர்ந்தது மாதிரி அதிகாரம் பண்ணுவா. திரும்பி ஊருக்குக் கிளம்பும் போது வண்டி பட்சணங்கள், புது புடவை,



குழந்தைக்கு ட்ரஸ் எல்லாம் வாங்கிக் கொடுத்து சீர்செய்து வேறு அனுப்பணும். அவ கல்யாணக் கடனை இன்னும் மகாதேவன் அடைச்சிண்டு இருக்கார். பாவம் லலிதா மாதிரி பிறந்த வீடு நிலைமை புரியாத பெண்கள் எத்தனை இல்லை?"

அடுப்பு வேலை முடிந்து விட்டது.

எல்லாவற்றையும் ஒழித்துப் போட்டுவிட்டு நிமிர்வதற்கும் 'மாமி பூ பறிச்சிண்டு வந்திருக்கேன்' என்று குரல் கொடுத்துக் கொண்டு அகிலா வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

இருவருமாகப் பேசிக் கொண்டே பூவைத் தொடுத்து முடித்தார்கள்.

ஒவ்வொரு முறை தங்கம் சென்னைக்கு வரும்போதும் அவளுடைய 'நார்த் இண்டியன்' வாழ்க்கையைப் பற்றி பேசுவதென்றால் அகிலாவுக்கு விருப்பம் அதிகம். ஆர்மி லைஃப், அதன் நல்லது கெட்டதுகள், தலைகால் புரியாத நாகரிகத்தில் திகழும் பெண்கள், ஆர்மி பார்டிகள், லேடீஸ் கிளப் அங்கத்தினர்களின் நடவடிக்கைகள் என்று ஒவ்வொன்றைப் பற்றியும் கதையாய்ச் சொல்லுவாள் தங்கம்.

வருஷத்துக்கு ஒருமுறையாவது தங்கம், வெங்கடேஷ் சென்னைக்கு வருவது தப்பாது. அதுவும் நாலு வருஷங்களாய் பிள்ளைகளை கான்வெண்டில் படிக்க பாட்டியுடன் விட்ட பிறகு ஒரு வாரம் லீவு கிடைத்தால்கூட வந்து விடுவார்கள். கடந்த இரண்டு வருஷமாய் சென்னைக்கு வரமுடியாது போய் விட்டது. இதைச் சரிக்கட்டுவது போல பள்ளியில் லீவு விட்டதும் பேரன்களை அழைத்துக் கொண்டு வேதம், தங்கம் அப்போது இருந்த மத்ரா, ஸ்ரீநகருக்குப் போய்விட்டு வந்தாள்.

''அம்மா எந்த இடத்துக்குப் போகிறாள்? இப்ப நாங்கள் வராமல் இருந்தால் குழந்தைகளைக் கூட்டிவரு சாக்கில் அவளையும் கிளப்ப முடிகிறது'' என்பது தங்கத்தின் வாதம்.

அதனால் இந்த முறை தங்கத்துடன் பேச, அவளி மிருந்து தெரிந்து கொள்ள அகிலாவுக்கு எத்தனையோ விஷயங்கள் இருந்தன. கால இடைவெளி அதிக இல்லையா?

மணி ஐந்தை நெருங்குகையில் ''பால்காரன் வந்து வான். போய்விட்டு அப்புறமாய் வரேன் மாமி'' என்று விடைபெற்றுக்கொண்டு அகிலா போய்ச் சேர்ந்தாள்.

அகிலாவைப் பார்த்ததிலிருந்த மனதில் தோன்றி ஒரு விஷயம் அன்று இரவுக்குள் பூதாகாரமாய் உருவெடுத்து விடவே, மறுநாள் காலை பையன்களைப் பள்ளிக்கு அனுப்பின பின், பூஜை அறையில் இருந்த அம்மாவின் அருகில் சென்று அமர்ந்தாள் தங்கம்.

கற்பூர ஆரத்தி ஆகி, ராமாயணத்தை பாராயணம் செய்ய வேதம் முற்படுகையில் ''அகிலாவுக்குக் கல்யாணம் பண்ணுவதைப் பற்றி மகாதேவன் யோசிச்சுண்டு இருக்காரா, அம்மா?'' என்றாள் தடக்கென்று.

வேதத்தின் முகத்தில் ஆச்சரியம் வெளிப்படையாகத் தெரிந்தது.

''இது என்ன திடீர் கேள்வி?''

''சும்மா தான் சொல்லேன்.''

''இப்போ இருக்கிற இருப்பில் கனவுலேகூட அகிலா வின் கல்யாணத்தைப் பற்றி அந்தப் பிராமணன் நினைக்கத் துணிய மாட்டார் தங்கம்... எல்லாம் தெரிஞ் சுமா நீ கேட்கறே?''



என்னத்துக்காக இந்த வீண் பேச்சு என்பது போலப் பார்த்துவிட்டு ராமாயண புஸ்தகத்தை மீண்டும் கையில் எடுத்தாள் வேதம்.

''காரணம் இல்லாமல் நான் கேட்பேனாம்மா? அகிலாவை நாலு நாளாய்ப் பார்க்கறேன்; அவ கை காரியம், சமர்த்து, அடங்கின தன்மை, பெரியவர்களை மதிக்கிற சுபாவம் எல்லாம் பார்க்கும்போது இவளை மாட்டுப் பெண்ணாக அடைய யாருக்குக் கொடுத்து வச்சிருக்கோனு தோணித்து... அதனாலே...'' தங்கம் நிறுத்தினாள்.

''நல்ல பெண் தான். சமர்த்து. கெட்டிக்காரிதான். ஆனால் இது மட்டும் இருந்தால் போதுமா? பணம் இல்லையே தங்கம்... வெறும் கையை வெச்சுண்டு முழம் போடற நிலையில் கூட மகாதேவன் இல்லையே...''

சில க்ஷணங்களுக்கு மௌனமாயிருந்த தங்கம் பேசினாள்.

''எங்களுக்குத் தெரிஞ்ச குடும்பம் ஒண்ணு திருச்சியிலே இருக்கும்மா. பெரிய பணக்கார இடம். நம்மை மாதிரி கூட இல்லை. இன்னும் ரொம்ப ரொம்பப் பெரிய இடம் 'கிருஷ்ணன் மில்க் ஹவுஸ்' தெரியுமா? அவாதான் நம்ப ஜாதிக்காரதான். மூத்த பிள்ளைக்கு முப்பது வயசாகிறது. நல்ல குடும்பப் பாங்கான பெண்ணாய் இருந்தால் சொல்லுங்கோ'னு அந்த வீட்டு பெரியவர் எங்களிடம் சொல்லியிருக்கார். அவர் அப்படிச் சொன்ன உடனேயே எங்களுக்கு அகிலா ஞாபகம் தான் வந்தது. ஆனாலும் பார்த்து இரண்டு வருஷங்கள் போல ஆச்சே, குணம் மாறி இருப்பாளோ — நேரில் பார்க்காமல் எதுவும் பேசக் கூடாதுன்னு இருந்தேன். நேற்று ராத்திரி நாங்க இரண்டு பேரும் இன்னிக்கு இதைப் பற்றி உன் கிட்டே பேசறதுனு

தீர்மானம் பண்ணினோம். வாயேன் ஹாலில் அவர் இரு ...ார். விவரம் சொல்லுவார் வாயேன்மா."

தங்கத்தைப் பார்த்த வேதத்தின் முகத்தில் ஆச்சரிய பாவம் கிடந்தது. இது என்ன அசட்டுப் பேச்சு? விளையாடுகிறாயா என்பது போலப் பார்த்தாளே தவிர ஏதும் பேசவில்லை.

''என்னம்மா நான் பாட்டுக்கு பேசிண்டே போறேன் நீ ஒண்ணுமே சொல்லாமல் இருந்தால் எப்படி?''

''என்ன சொல்லணும்? பணக்கார குடும்பத்து மூத் பிள்ளைக்கும், அகிலாவுக்கும் எந்த விதத்துலே பொரு தும்னு நீ இந்தப் பேச்சு பேசறே. எனக்குப் புரியலையே''

''நீ ஹாலுக்கு வா! அவர் எல்லாம் புரியும்ப சொல்லுவார், வா'' என்று அம்மாவின் கையைப் பிடித்து இழுக்காத குறையாய் கூடத்துக்கு அழைத்துப் போனாள் தங்கம்.

ஊஞ்சலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண் டிருந்த கணவனிடம் ''கிருஷ்ணன் மாமா சொன்னதை அம்மாகிட்ட சொன்னேன். விவரம் கேட்கிறா. சொல் லுங்கோ'' என்றாள்.

வெங்கடேஷ் சொன்னான்.

திருச்சியில் பிரபலமான 'கிருஷ்ணன் ஸில்க் அவுஸின்' உரிமையாளரான கிருஷ்ணனின் மூத்த பையன் ஸ்ரீதரன். இரண்டாவது மகன் ராஜகோபாலன்—ராஜா ஆர்மியில் என்ஜினியராக இருக்கிறான். இரண்டு வருஷங்களுக்கு முன் ஸ்ரீநகரில் வெங்கடேஷ் இருந்தபோது ராஜாவும் இருந் தானாம்; அப்போது கொஞ்சம் தான் பழக்கம். பின் பிரிந்து விட்டனர். மத்ரா, பூனாவில் இருந்துவிட்டு ஆக்ராவுக்கு வெங்கடேஷுக்கு மாற்றல் ஆனது. ஆ மாசங்களுக்கு முன் ராஜாவும் ஆக்ராவுக்கே போஸ்டிங்



செய்யப்பட்டு வந்ததிலிருந்து பழைய சிநேகிதம் பிடித்துக் கொண்டது. முன்பே ஒருமுறை கிருஷ்ணன் பிள்ளையைக் காண வந்தபோது இவர்கள் அவனுடன் பழகி இருக்கிறார்கள். சமீபத்தில் தங்கள் பட்டுத் துணிகளை வெளிநாடுகளுக்கு எக்ஸ்போர்ட் செய்ய முனைந்த கிருஷ்ணன் டெல்லிக்கு வந்தவர் ஆக்ராவுக்கு வந்து நாலு நாட்கள் தங்கினாராம். அப்போதுதான் மனம் விட்டுப் பேசியிருக்கிறார். ராஜாவும் அவ்வப் போது தன் குடும்ப சமாசாரங்களைப் பற்றி பேசினா லும், இவர் மனம் திறந்து ரொம்ப வெளிப்படையாகப் பேசினாராம். மூத்த மகன் ஸ்ரீதரனுக்கு குணவதியாய் ஒரு மனைவி அமைய வேண்டும் என்றவர் கண்களில் நீர் கூட கசிந்து விட்டதாம். ''எனக்கு யாரைப் பற்றியும் கவலை இல்லை. ஸ்ரீதரன் வாழ்க்கை நல்லவிதமாய் அமைந்துடுத்துன்னால் என்னைவிட சந்தோஷப்படு பவன் இருக்க முடியாது. உங்களுக்கு நல்ல பெண்ணாய்த் தெரிந்தால் சொல்லுங்கள்'' என்று அவர் இவர்களை கேட்டுக் கொண்டதும் அப்போதுதான்.

மாப்பிள்ளை இத்தனை சமாச்சாரங்களைச் சொல்லி யும் வேதத்துக்கு இன்னும் விஷயம் தெளிவாகவில்லை.

பணக்காரர் எதற்காக ஏழைப் பெண்ணைத் தேட வேண்டும்?

அம்மாவின் வியப்பு புரிந்தவளாய் தங்கம் மெல்ல தொடர்ந்தாள்.

''ஸ்ரீதரனுக்கு சின்ன வயசிலே போலியோ வந்து இடுப்புக்கு கீழே ஸ்வாதீனம் இல்லாமல் போயிடுத் தும்மா. பார்க்க ராஜா மாதிரி இருப்பானாம். ஆனால் இந்தக் குறைதான். அவனுக்கு அடுத்தபடி இரண்டு பிள்ளைகள். கடைக்குட்டியாய் ஒரு பெண். பெண்ணைப் பற்றி கவலை இல்லை. இப்பத்தான் ஸ்கூலில் படிக்கிறா

ளாம் ராஜாவுக்கு நிறைய இடங்களிலிருந்து பெ கொடுக்க வராளாம் மூத்தவனுக்கு பண்ணாமல் இளை வனுக்கு கல்யாணம் பண்ணுவதில் இஷ்டம் இல்லை. ராஜாவுக்கு வயசு இருபத்தி ஏ ஆறது. கல்யாணம் பண்ணிவிட வேண்டியதுதா அதனால் ஸ்ரீதரனுக்கு நல்ல பெண்ணாய் பார்க்கிறார். பெண் பணம் காசுக்கு ஆசைப்பட வளாய், குடும்பப் பாங்கானவளாய் இருந்தால் களுக்குப் பிறகு பையனை நன்றாய் பார்த்துப்பா அவர் நம்பறார். பார்த்த வரைக்கும் கிட்டத்தில் ஒரிருவர் இவனைப் பார்த்த பிறகு படுத்த படுக்கையா இருக்கிறவன் வேண்டாம்னு சொல்லிட்டா. எங்கிட் சொல்லி கிருஷ்ணன் ரொம்ப வருத்தப்பட்டார்...''

வேதம் அசந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

இடுப்புக்குக் கீழ் ஸ்வாதீனம் இல்லாத பையனுக் அகிலாவைக் கொடு என்பது?

அம்மாவின் வேதனை புரிந்தவளாய் தங் பேசினாள்.

''இங்கே மட்டும் என்ன வாழுகிறதும்மா? சார சீக்காளி, சதா ரூமை. வயத்துக்கே சரியாக இல்லை இப்போனதுக்கு மகாதேவன் பெண்ணுக்குக் கல்யாண பண்ணுகிற ஸ்திதியில் இல்லை. சீக்காளி அம்மாவை கவனிக்கிற அகிலா அங்கே சக்கர நாற்காலியில் இ கிற கணவனைப் பார்த்துக்கணும். அவ்வளவுதானே கூப்பிட்ட குரலுக்கு ஆள். நாளைக்கு எட்டு வேளை சாப்பாடு. கொள்ளையாய் பணம். எனக்கென்னவோ இந்த வரனைப் பற்றி மகாதேவனிடம் பேசிப் பா க்லாம்னு தோணறதும்மா. இவரே பேசறேன் எ கிறார் என்ன?"

வேதம் அசைந்து கொடுக்கவில்லை.



''சின்ன வயசுலேருந்து கஷ்டத்தைத் தவிர வேறு ஒண்ணையுமே அனுபவிக்காத பொண்ணை வலிய மீளா துக்கத்திலே தள்ளறது நியாயமா, தங்கம்? என் மனசுக்கு சரினு தோணலியேம்மா...''

"முதலில் நானும் அப்படித்தானம்மா நினைச்சேன். போனமாசம் இந்தப் பேச்சு எழுந்த போது காலம் பூரா வும் கன்னியாய் இருந்தால்கூட பரவாயில்லை... இந்த மாதிரி கணவனோட குடித்தனம் பண்ணச் சொல்வதற்கு பதில்னு தோணித்து. ஆனா யோசிச்சா வயித்துக்கும், மனசுக்கும் மத்த எத்தனையோ விதத்தில் அகிலாவுக்கு திருப்தி கிடைக்கும்னு புரியறது... அதுவும் அவளை நாலு நாளாய் பார்க்கிறேனே, ஓடாய் உழைக்கிறா... சரியாய் ஒரு வேளை சாப்பிடறாளா? இந்தக் குடும்பத் துக்காகப் பாடுபடுவதற்குப் பதிலுக்கு அவளுக்கு என்ன கிடைக்கிறது? ஒண்ணுமேயில்லைனு எனக்குப் புரிஞ்சுது. அதனால்தான் உன்கிட்டே இந்த பேச்சையே எடுத்தேன்—அகிலா சௌக்கியமா, பல சௌகர்யங்களோடு வாழ்நாள் முழுக்க இருக்கப் போறா என்பது மட்டுமில்லே, இந்த சம்பந்தத்தாலே பவானியின் கல்யாணத்துக்கு ராமுவின் படிப்புக்கு, சாரதாவோட வைத்தியத்துக்கு எல்லாத்துக்கும் உதவும் நிலையில்கூட அவள் இருப்பா... யோசிச்சுப் பாரும்மா..."

மனைவியின் கருத்தை வெங்கடேஷ் ஆதரித்தான்

"கிருஷ்ணன் மாதிரி நல்ல மனுஷரைப் பார்ப்பது அபூர்வம்— நாங்க ராஜாவோடு பழகி இருக்கோம். குணத்திலே குறையே சொல்ல முடியாது. அப்பா, பிள்ளைகள் எல்லாருக்கும் நல்ல மனசு. அகிலாவுக்கு வேறு இடத்திலிருந்து வரன் அமைஞ்சா சந்தோஷம். இருக்கா? சொல்லுங்கோ. எனக்கென்னவோ இதைப் பத்தி பேசி, முயற்சி எடுக்கறதுலே தப்பு இருக்கிறதா தெரியலை."

தங்கமும், வெங்கடேஷும் உண்மையான என்ன
தோடு பேசுவது புரிந்ததால் யோசனையில் ஆழ்ந்தா
வேதம்.

நாலு நாட்கள் யோசிப்பதற்குள் அவர்கள் சொல்
வது போல இதுதான் செக்கு மாடாக உழைத்து வந்
அகிலா எதிர் காலத்திலாவது அக்கடா என்று பணத்தி
அரவணைப்பில் விழுந்து கிடக்க இதைவிட வேறு ந
நல்ல சந்தர்ப்பம் வராது என்று தோன்றியதா
தங்கத்தையும் மாப்பிள்ளையையும் உடன் வைத்து
கொண்டு மகாதேவனிடம் இதைப் பற்றிப் பேசினான்.

## ஏழு

கபாலீஸ்வரர் பிராகாரத்து மணலை கையா
அளைந்த வண்ணம் அமர்ந்திருந்தாள் அகிலா. கோவிலி
ரொம்ப கூட்டம் இல்லை. கற்பகாம்பாளையு
கபாலீஸ்வரரையும் நிம்மதியாய் தரிசனம் செய்
கொண்ட பின் அவள் இங்கு வந்து உட்கார்ந்து கொண்
டாள். மாலை மணி ஆறரை இருக்கும். இன்னும் இள
வெயில் இருந்தது. அவளுக்குத் துணையாய் வந்திருந்
ராமுவுக்கு விளையாட சகா கிடைத்து விட்டதால் ஒ
பக்கமாய் இருந்தான்.

மணலை கையில் எடுத்து சல்லடை போல சலித்
பெரிய கற்கள், சன்ன மணல் என்று யாரோ பிரிக்
சொன்னது போல செய்து கொண்டிருந்தாலும் காலை
யில் தந்தை சொன்ன வார்த்தைகளையே அவள் மன
அசை போட்டது.

**கல்யாணமா? எனக்கா? நடக்க வேளை வந்திரு
கிறதா? அப்பாவைத் தவிர வேறு யார் வந்து இந்**



பேச்சை எடுத்திருந்தாலும் 'போதும் உளறல்' என்று ஒதுக்கியே இருப்பாள்.

அகிலா குவித்து கொண்டு சலித்து வைத்திருந்த மணலை உள்ளங்கையால் தட்டி சமப்படுத்தினாள். பின் ஆட் காட்டி விரலால் ஏழு புள்ளிகளை வைத்து கோலம் போடத் தொடங்கினாள். இரண்டு தடவைகள் போட்டு கலைத்ததும் இழை கோலம் போல நடு, மோதிர விரல்களினால் இழுத்தாள். அதுவும் சலித்துப் போன பிறகு அகிலா, அகிலா என்று தன் பெயரையே எழுதி எழுதி அழிக்கத் தொடங்கினாள். கொஞ்ச நேரத்தில் கைவலித்ததால் நிமிர்ந்து உட்கார்ந்து முட்டிக் கால்களில் கைகளைக் கோர்த்துக் கொண்டு தன்னைச் சுற்றிலும் வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள்.

கோவிலில் இப்போது முன்னை விட கூட்டம் அதிகமாக இருந்தது.

நிறைய வயசுப் பெண்கள், ஆண்கள் பிள்ளையாருக்கு விழுந்து விழுந்து தோப்புக்கரணம் போட்டு குட்டிக் கொண்டு பிரார்த்தனை செய்வதைப் பார்த்தாள்.

பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளா? பரீட்சை நெருங்குவதால் பிள்ளையாரை காக்கா பிடிக்கிறார்களா?

அகிலா உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து வாசற் கதவு நன்றாய் தெரிந்தது. காதிலும் மூக்கிலும் வைரம் ஜொலிக்க, பட்டை ஜரிகை மடிசார் புடவையும், பெரிய குங்குமப் பொட்டுமாய் ஒரு மாமி வந்தாள். அவளைத் தொடர்ந்து இரண்டு பெண்கள், அதே ஜிலுஜில் பட்டும், பதவிசுமாய் இருந்தார்கள். இரண்டு பேர் கைகளிலும் அர்ச்சனைத் தட்டுகள்.

அம்மாவும், பெண்களுமா?

முக ஜாடை ஒன்றாக இல்லையே?

அகிலாவை அவர்கள் தாண்டும் போது இரண்டு பெண்களின் கழுத்திலும் தாலி, கால்களில் மெட்டி இருந்ததைப் பார்த்தாள்.

மாமியார், மாட்டுப் பெண்களா?

காலையில் அப்பா சொன்னது திடீரென்று நினைவுக்கு வந்தது.

"ரொம்ப பெரிய இடமாம் அகிலா. அந்தப் பையனை கல்யாணம் பண்ணிக்க நீ சம்மதிச்சால் நீதான் மூத்த நாட்டுப் பெண். அப்புறம் இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். ஒரு நாத்தனாரும் உண்டு..."

இந்தப் பையனை தான் மணந்தால் தன் மாமியார் பட்டும், நகையுமாய் முன்னே போக இந்தப் பெண்களைப் போல நாலும் பின்னால் போவேனா?

இந்த மாதிரி புடவை, நகைகளுடனா?

ரொம்பப் பணக்கார இடம் என்றாரே அப்பா!

"இருட்டிக் கொண்டு வரதே, போவோமாக்கா?" ராமுவின் சகா போய் விட்டான் போலிருக்கிறது.

"ம்? போகலாம், உட்கார்."

அருகில் அமர்ந்த தம்பியை நன்றாய் பார்த்தாள் அகிலா. சாயம் போன நிக்கர், அதற்கு சற்றும் மாற்றுக் குறையாத நிறுசில் சட்டை, கலைந்த தலை, போஷாக்கான உணவைக் காணாத வளர்த்தி

தன்னையும் ஒருமுறை நினைத்துப் பார்த்தாள் அவள்.

தான் சாதாரண கவர்ச்சி கொண்ட பெண் கூட இல்லை என்பது அகிலாவுக்கு புரிந்த விஷயம் தான்.

சிரித்தால் முன் இரண்டு பற்கள் தெத்திப் பார்க்கிறது என்பதை உணர்ந்து விட்டதால் அவள் வாய்



விட்டுச் சிரிக்கும் பழக்கத்தை விட்டு எத்தனையோ வருஷங்களாயின.

வீட்டில் இருக்கும் ஒரே கண்ணாடியில் ஒரு பக்கம் விரிந்து, இன்னொரு பக்கம் குருவிகள் கொத்தி கறைகளை உண்டாக்கி இருக்கும் கண்ணாடியில், தினமும் இரண்டு வேளைகள் நெற்றிக்கு இட்டுக்கொள்ள அவள் பார்த்துக் கொள்ள நேரும் போது ஒரு நிமிஷம் நின்று அவள் தன்னைத் தானே ரசித்து நோக்கிக் கொள்ளும் அளவுக்கு கூட அவளிடம் கவர்ச்சி கிடையாது என்பது அவளுக்கு நன்றாய்த் தெரியும்.

பழைய நூல் புடவை; ரப்பர் வளைகள், காலில் பீத்த செருப்புகள் என்று இருக்கும் தன்னை இப்போது நன்றாய் மனதில் நினைத்துப் பார்க்கும்போது அகிலாவுக்கு சிரிப்புத்தான் வந்தது.

என் மூஞ்சிக்கும் உடம்புக்கும் பட்டுப் புடவையும், நகையும் பொருந்தக்கூட பொருந்ாது... ஆண் பிள்ளைக்கு பெண் வேஷம் போட்ட மாதிரி இருக்குமோ!

அகிலாவின் பார்வை முருகனின் சன்னிதானத்தில் அமர்ந்திருந்த பெண்களிடம் போயிற்று.

கிட்டத்தட்ட அவளைப் போலவே காய்ந்து மெலிந்து, அனுபவத்தால் தேய்ந்து போன பெண் ஒருத்தி அங்கு இருந்தாள்.

ஒரு வித்தியாசம்...

அந்தப் பெண் பால்ய விதவை என்பது பாழும் நெற்றியிலிருந்து புரிந்தது.

பிய்த்து விட்ட கையும், காதும், தலை முடியுமாய் பார்க்கப் பரிதாபமாய் இருந்தாள். அகிலா பார்த்துக் கொண்டிருக்கையிலே அந்தப் பெண்ணிடம் வந்து நின்று ஒரு பாட்டி பேசத் தொடங்கினாள்.

"என்னடி விசாலம், உன்னை எங்கே எல்லா தேடறது இங்கே வந்து உட்கார்ந்துண்டு இருக்கே டாக்டர் வீட்டிலே... நாளைக்கு பட்சணம் பண்ண ணுமாம். போட்டு எடுக்க வரயா? மூணு ரூபாய் வாங்கி தரேன்" என்றாள்.

அந்தப் பெண் விசாலம் ஒப்புக் கொண்டாள்.

இந்தக் கல்யாணத்துக்கு தான் மறுத்து விட்டா விசாலம் என்கிற பெண்ணைப் போலத்தான் தன்னுடை எதிர்காலமும் இருக்கும் என்பதை அகிலாவால் கற்பனை பண்ணிப் பார்க்க முடிந்தது

தீ என்றால் வெந்து விடப் போவதில்லை. இப்போது அப்பா இருக்கிறார். சம்பாதிக்கிறார். ஏதோ அரை வயிறு சாப்பிட முடிகிறது. அப்பாவுக்கு திடீரென்று ஏதாவது ஆகிவிட்டதென்றால் குடும்பத்தைக் காப்பாற் றும் பொறுப்பு அவன் தலையில் விழுந்தால், பிறர் வீடு களில் சமைத்து சம்பாதிப்பதைத் தவிர அவனுக்கு வேறு எந்த வித்த்தில் சம்பாதிக்க யோக்கியதை உண்டு?

ராமுவுக்கு பன்னிரண்டு வயது ஆகிறது. மூட்டை தூக்கக் கூட லாயக்கில்லாதவன். பவானி பதினைந்து வயசு பெண். யார் வீட்டுக்காவது சுற்று வேலைக்கு வேணுமானால் அனுப்பலாம். தான் திவசம், திங்களுக்கு சமைத்து பட்சணங்கள் செய்து சம்பாதிக்கலாம். அதுவும் தினமும் கிடைக்காது. கிடைத்ததை, கிடைக்காத நாளுக்காகச் சேர்த்தும் வைக்க வேண்டும்.

கற்பனை நீண்டு கொண்டே போன போது 'இத் என்ன முட்டாள்தனத்திலேயும், மடமண்டுத்தனமா என்னைப்' என்று தன்னை உலுக்கிக் கொண்டாள் அகிலா.



முதல் முதலில் இந்த வார்த்தையை சந்திரன்—வேதா மாமியின் பத்து வயசுப் பேரன் சொல்லித்தான் கேட்டாள்.

"சே, அப்படிப் பண்ணுவது முட்டாள்தனத்திலேயும் மடமண்டுத்தனம் அகிலாக்கா'' என்று அவன் சொன்ன போது அவளுக்குச் சிரிப்பு வந்தது.

"அதென்ன சந்துரு முட்டாள்தனத்திலேயும் மட மண்டுத்தனம்? முட்டாள்தனம் தெரியும்; மடமண்டுத் தனம் தெரியும்; ஆனால் இது என்ன?"

"டாம் இடியாடிக்னு அர்த்தம். அக்கா வந்து பெ...ரீ ...ய முட்டாள்னு அர்த்தம்" என்று அவன் கண்ணை விரித்துக் கொண்டு கொடுத்த விளக்கம் அகிலாவுக்கு ரொம்பப் பிடித்துப் போனது. அதன்பின் அசட்டுத்தன மாய் ஏதேனும் நினைத்தாலோ, இல்லை காரியம் செய் தாலோ அவள் 'இது என்ன முட்டாள் தனத்திலியும் மட மண்டுத்தனமாய் பண்ணுகிறேன்," என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு அனுபவிப்பாள்.

"என்னக்கா சிரிக்கிறே? நாழியாகலை? கிளம்ப வேண்டாமா?"

ராமுவுக்குப் பசி வந்து விட்டது போலிருக்கிறது, பறந்தான்.

அவர்கள் கிளம்பினார்கள். வெளியே வந்து பஸ்ஸுக் காக காத்திருந்த நாழிகையில் விளையாட்டாக அல்லா மல் தீவிரமாய் காலையில் அப்பாவுடன் பேசினதை நினைத்துப் பார்த்தாள் அகிலா

வேதம் மாமியும், தங்கமும் பிரஸ்தாபித்திருக்கும் வரனைப் பற்றி விரிவாக மகாதேவன் மகளுக்குச் சொன்னார்.

"இடுப்புக்கு கீழே ஸ்வாதீனம் இல்லாத பிள்ளை அகிலா சக்கர நாற்காலியில் உட்கார்ந்துண்டு தான் இரு முடியுமாம். ஆனால் பார்க்க ராஜா மாதிரி இரு பானாம். பணக்காரக் குடும்பம். நல்ல மனுஷாள் அவா சொன்னதை எல்லாம் கிளிப்பிள்ளை போல உ கிட்டே சொல்லிட்டேன். நன்னா யோசிச்சு பதி சொல்லு."

"உன்னோடு தனியாய் பேசணும். சித்த வேப்ப மர தடிக்கு வரயா?" என்று காலை எட்டு மணி அள தகப்பனார் சொன்னபோது அகிலாவுக்கு ஆச்சரிய இருந்தது.

முதல் நாளிலிருந்து வேதா மாமி, தங்கம் அ கணவர், அப்பா, அம்மா எல்லோருமாய் தீவிரம எதைப்பற்றியோ பேசுவது அவளுக்குத் தெரியும். எ வாக இருந்தாலும் தன்னைக் கலந்தாலோசிக்காம அப்பா எதையும் செய்ய மாட்டார் என்பதும் அவளு குத் தெரியும். முதல் நாள் இரவு தூக்கத்தில் புரண் படுத்தபோது சமையற் கட்டில் விளக்கைப் போட்டு கொண்டு, அப்பாவும் அம்மாவும் குசுகுசுப்பது அவளு குக் கேட்டது.

என்ன விஷயம் பண நெருக்கடியா? இப்படி இர நேரத்தில் பேசும்படி என்ன சமாசாரம்? என்று ஒ நிமிஷம் நினைத்தாலும் தூக்கம் கண்களை அழுத்தினதா தொடர்ந்து உறங்கி விட்டாள்.

காலையில் அப்பா பள்ளிக்குப் போகுமுன் தாமே இதைப் பற்றி அவரிடம் பேசவேண்டும் என்றிருந்தவளை மகாதேவன் வலிய தனியாய் பேச அழைத்து விபரமா எல்லாவற்றையும் கூறினார்.

இவர்கள் மண்டை உடைத்து கொள்ளும் சமாசார தன் கல்யாணப் பிரச்னையாக இருக்கப் போகிறதென் அவள் கண்டிப்பாய் நினைத்திருக்கவில்லை.



"உங்க அபிப்ராயம் என்னப்பா?"

மகாதேவன் மௌனமாய் இருந்தார்.

"உங்களுக்கும் அம்மாவுக்கும் இந்த சம்பந்தம் பத்தி என்ன எண்ணம்பா?"

எத்தனை தடவை சும்மா இருக்க முடியும்?

"இல்லேம்மா, எங்க இரண்டு பேருக்குமே இந்த வரனுக்கு உன்னை கொடுப்பதில் இஷ்டம் இல்லை. என்னதான் பணம், குணம் இருக்கட்டும். அதற்காக கால் விளங்காதவனுக்கு உன்னைக் கொடுத்து உன் வாழ்க்கையைப் பாழ் அடிப்பதில் எங்களுக்கு நிச்சயம் விருப்பம் இல்லை அகிலா. ஆனா நீ வளர்ந்த பெண், விஷய ஞானமுள்ளவள். உன் அபிப்பிராயத்தைக் கேட்காமல் நானாக வேண்டாம்னு சொல்லக் கூடாது. வெங்டேஷும், தங்கமும் உன் இஷ்டத்தைத் தெரிஞ்சுக்கணும்னா. அதனால் தான் இந்தப் பேச்சையே உன்னிடம் பேசினேன்."

"................"

"உனக்கு விருப்பம் இல்லைனா நீ யோசிக்க வேண்டாம் அகிலா. இப்பவே வெங்கடேசிடம் இந்த பேச்சு இனி தேவையில்லைனு சொல்லிடறேன். என்னம்மா? தயங்காமல் சொல்......"

"ம்... நான் யோசிச்சு பதில் சொல்லறேன்ப்பா..."

அகிலாவின் பதிலோடு இருவரும் உள்ளே வந்தனர்.

சாரதா மகளிடம் ஏதும் பேசவில்லை.

தங்கம் மட்டும் அகிலா பங்களாவுக்குப் போன போது வலிய இந்தப் பேச்சை எடுத்தாள்.

"நான் சொல்றதை நீ தப்பாக எடுத்துக்காமல் இருந்தால் சொல்கிறேன். அந்தப் பையன் சீக்காளியாக

இருந்தால் என்ன ? இங்கு மட்டும் என்ன வாழ்கிறத அம்மாவின் உடம்போடு நித்தியமும் நீ மன்றாட வேண் கால் வயித்துக்கு சாப்பிட்டுண்டு கிழிசலை உடுத்திண் பெத்த தாயோடு நீ உசிரையே கொடுக்கறதுக்கு பதிலா அங்கே அந்தப் பையனுக்கு உழைக்கறது நிம்மதியாய் ஆள், காசு, பணத்தோடு சௌகரியமா இருக்கலாம், எனக்கென்னவோ நீயும், என் உ குடும்பமும் சௌகர்யமாய் வாழ இது ஒரு சான்ஸ் தான் தோணுகிறது..." என்று தங்கம் சொன்னை இப்போது நினைத்தாள் அகிலா.

"பஸ் வந்துடுத்து, ஏறிக்கோக்கா" ராமு அவசர படுத்த ஓடிச் சென்று அவர்கள் பஸ்ஸில் ஏறினார்கள்.

"மாம்பலம் டர்மினல் இரண்டு" என்று பணத்தை கொடுத்து அவன் டிக்கெட்டுகளை வாங்கிக் கொண்டான்.

முன் சீட்டில் இருந்த பையன் காட்பரிஸ் சாக்லெட் ஒன்றைச் சுவைப்பதை ராமு நாக்கில் தண்ணீர் ஊற தேக்குவதை அகிலா பார்த்தாள்.

பத்திரிகைகளில் அந்த சாக்லெட்டின் படம் வந்தால் இவளிடம் தூக்கிக் கொண்டு வருவான் ராமு.

''நான் பெரியவனாகி வேலையில் சேர்ந்த பிறகு இந்த சாக்லெட்டை ஆளுக்கு ஒவ்வொன்று வாங்கி கொடுத்து, நானும் தினமும் திங்கப் போறேன்க்கா..." என்பான். "மில்க் சாக்லெட் நன்னா இருக்கும். வாயில் போட்டால் கரையும். நாம் ஒரு தடவை வாங்கி சாப்பிட்டோமே அது தானேக்கா இது......'' என்பான்.

அப்போதெல்லாம் சின்னக் குழந்தை ஆசைப்பட்டு இரண்டரை ரூபாய் சமாசாரத்தை வாங்கித் தரக் கூட தான் கையாலாகாதவளாய் இருக்கிறோமே என்று வருந்தினதெல்லாம் அகிலாவுக்கு இப்போது நினைவிற்கு வந்தது.



பணக்கார இடத்துப் பையனை தாம் கல்யாணம் பண்ணிக் கொண்டால் ராமு, பவானி ஆசைப்படுவதை யெல்லாம் வாங்கிக் கொடுக்க முடியுமோ ?

அம்மாவுக்கு மருந்து, மாத்திரைகள் ?

அப்பாவுக்கு நல்லதாய இரண்டு வேஷ்டிகள் !

ஏன் முடியாது ? கண்டிப்பாய் நடக்கும்.

யாருமே கல்யாணம் செய்து கொள்ள மறுக்கும் நொண்டிப் பிள்ளையை மனப்பூர்வமாய் சம்மதிக்க, நான் கல்யாணம் பண்ணிட்டு, அவனோடு சந்தோஷமா குடும்பம் நடத்தி காண்பிச்சால், அவா என் குடும்பத்து கஷ்டங்களை கண்டிப்பாய் போக்குவா. இதிலே சந்தேகமே வரக்கூடாது. பணக்காரர், நல்ல மனசுனு தங்கம் சொன்னாளே, நிச்சயம் என் குடும்பத்துக்கு உதவு வதைத் தடுக்கமாட்டா.

இது நாழிகை தோன்றாத இனுசில் இப்போது மனசின் எண்ணங்கள் ஓடி அகிலாவுக்கு இன்பத்தைக் கொடுத்தன.

கூடவே சந்தேகமும் எழுந்தது.

லலிதா, ஓரளவுக்கு வசதியான குடும்பத்தில்தான் வாக்குப்பட்டாள் !

ஸ்வாமி அண்ணாவும், பணக்காரக் குடும்பத்துக்குத் தானே மாப்பிள்ளையாய் போனான் ? அவர்கள் ஏன் இந்தக் குடும்பத்து கஷ்டங்களை நிவர்த்தி பண்ண சுண்டு விரலைக் கூட அசைக்கவில்லை ? ஒருவேளை பணம் வந்தால் நானும் அப்படி ஆயிடுவேனோ ?

சீச்சி...

பிறவியிலேயே லலிதாவும், அண்ணாவும் வித்தியாசமானவர்கள். நான் அப்படியில்லையே. எனக்குமே

எனக்கு இது வேணும், பணம் புதுத்துணி வேணும்
நான் ஆசைப்பட்டதில்லையே அதனால் அவர்க
மாதிரி நானும் நடந்துப்பேன் என்று நினைப்ப
முட்டாள்தனத்திலியும் மட மண்டுத்தனமான என்ன

மாம்பலம் டர்மினல் வந்து விட்டது. அகிலா
ராமுவும், இறங்கி சிவா விஷ்ணு கோவிலை, ரங்கநா
தெருவைத் தாண்டி, சாலையைக் கடந்து தங்கள வீட்
நோக்கி நடந்தார்கள்.

எதிரில் தங்களைக் கடந்துபோன ஜனங்களை எல்ல
பார்த்துக் கொண்டே வருகையில் புதிதாய் ஒரு நினை
அகிலாவின் நெஞ்சைக் கவ்வியது.

முகங்கள், அதில் முக்கால்வாசி முகங்களில், மூக்
கண்ணாடிகள் இருந்தன. பெரிசாய், வட்டமாய், ச
மாய், ரிம்லெஸ்.

கண்ணாடியை எடுத்துவிட்டால் எத்தனை பே
களுக்கு லேசாய் கண் தெரியுமா? எத்தனை பேர்க
கண்ணாடி இல்லாவிட்டால் முழு குருடர்களாக இ
பார்கள்?

கண் தெரியவில்லை என்பது ஒரு பெரிய குறைதாே
நவீன காலத்தின் கண்டுபிடிப்பான கண்ணாடியின் உத
யுடன் இவர்களெல்லாம் சாதாரணமாய் உலவி வருவ
ஏன் யாரும் குறை என்று நினைக்க மாட்டேன் என
றார்கள்.

ரொம்ப பழகிப்போன சமாசாரம் என்றுதானே!

கண்ணாடி அணிபவர்களைக் காட்டிலும் கா
செவிட்டுக் கருவிகள் உபயோகப்படுத்துபவர் குறை
அதனால் கண்ணாடியை சகஜமாக எடுத்துக் கொள்
பக்குவம் இருக்கும் இந்த சமூகம் காது மிஷினை ச
கண்ணோட்டத்தில் சேர்க்க மறுக்கிறதே!



இது போலத்தானே கால் ஊனமும்?

கண் பார்வை இல்லை என்பதும் ஒரு அங்கஹீனம் தான். காது கேட்கவில்லை என்பதும், இல்லை கை, கால் விளங்கவில்லை என்பதும் இன்னொரு அங்கஹீனம் தானே?

கண்ணாடி அணிபவரை ஏற்றுக் கொள்ளும் அதே சகஜ மனதுடன் இவர்களையும் ஏற்றுக்கொண்டுவிட்டால் குறை என பெரிசாய் தெரியப்போகிறது?

ஆக, எல்லாம் ஒன்றுதான்

நமக்கு மட்டும் மனசில் விவேகம் இருந்தால் போதும்.

வீட்டை அடைவதற்குள் அகிலாவின் மனசு மிகவும் தெளிவுடன் இருந்தது. தன் உயிருக்குயிரான குடும்பத்தின் நிலையை உயர்த்த சின்ன தியாகம் பண்ணினால் போதும், தப்பு தப்பு தியாகம்கூட இல்லை, மனப்பக்குவம் அடைந்தால் போதும். பின் நிம்மதியான வாழ்வு தங்களை நோக்கி இரு கரம் நீட்டி காத்திருக்கிறது என்பது புரிந்து போனதால் அவள் இதுவரையில் தன்னை உலுக்கி எடுத்த சந்தேகங்களெல்லாம் தீர்ந்தவளாய் நிம்மதியுடன் வீட்டுக்குள் நுழைந்தாள்.

அன்று இரவு அப்பாவுக்கு அம்மா சாப்பாடு பரிமாறும்போது அவளும் சென்று அப்பளத்தைச் சுடத் தொடங்கினாள்.

தணலில் காய்ச்சின அப்பளத்தை அப்பாவின் இலையில் போட்டுவிட்டு அப்படியே உட்கார்ந்து கொண்டாள் அகிலா.

''நீங்க சொன்னதைப்பற்றி யோசிச்சேன்ப்பா. ஒருத்தன் நொண்டி, முடம் என்கிறதனால் வெளி அழகை

மட்டும் பார்த்துவிட்டு, அவனைக் கல்யாணம் பண்ணி... மாட்டேன்னு சொல்றது தர்மம், நியாயம் இல்லை... கார் பணத்துக்கு ஆசைப்பட்டு பறக்கிற பெண் நா... இல்லை என்பதும் உங்களுக்குத் தெரியும். இல்லையா... எனக்கு மனுஷா முக்கியம். அவா மனசு முக்கிய... தங்கக்கா, வேதா மாமி எல்லாரும் அந்த இடத்தை... பற்றி ரொம்ப உயர்வா பேசறா. அதனால் இந்த... பையனை நான் கல்யாணம் பண்ணிக்கறது சரினுதா... தோணறது... எனக்கு சம்மதம், நீங்க மேலே அவாளிட... பேசலாம்பா..."

சிரத்தையுடன் அகிலா பேசி, திருமணத்துக்கு அவ... சரி என்று சொல்லிவிட்டது சாரதாவின் கண்களில் நீ... வரவழைத்தது.

"உன் மனசு தெரியறவரைக்கும் நான் எதுவும் பேச... கூடாதுனு உங்கப்பா சொல்லி இருந்தால் நான் இ... நாழிகை வாயைத் திறக்கலை, இப்ப கேட்கிறேன் நன்ன... யோசனை பண்ணின பிறகுதானே அகிலா சம்மதத்தை... சொல்லறே? அவனோடு நீ புருஷனும் பெண்டாட்டி... மாய் வாழ முடியாதுனு புரிஞ்சுண்டுதானே பேசறே... எனக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டம் இல்லை அகிலா... துளியும் இஷ்டம் இல்லை. ஆனாலும் வேதா மாமி சொல்... கிற மாதிரி வாய்க்கு ருசியாய் சாப்பாடு, சௌகரியமான... வாழ்க்கை, உனக்கு இந்தக் கல்யாணத்து மூலமாய்... அமையும்னா அதை நான் கெடுக்கக்கூடாது. என்ன... உன்னை ஒருவேளை உட்கார வைச்சு, நாலு தினுசு... சமைச்சு போடற ஸ்திதிகூட எனக்கு இல்லை...உன் மனசு... எனக்குத் தெரியும். இந்தக் குடும்பத்துக்கு உபகாரம்... பண்ணறேன்னு, வலிய நரகத்தைத் தேடி ஓடாதே... அகிலா, இன்னும் இரண்டுநாள் யோசனை பண்ணு... அப்புறம் முடிவைச் சொல்..."

"நான் தெளிவாய்த்தான் இருக்கேன்ம்மா, நன்னா... யோசனை பண்ணிட்டேன். நரகம், அது, இதுனு நீயே...



எதையாவது கற்பனை பண்ணிக்காதே." என்று தீர்மானமாய் தாயிடம் பேசிய அகிலா "நீங்க கார்த்தால் வெங்கடேஷ் மாமாகிட்டம் பேசி மேற்கொண்டு நடப்பதைக் கவனிங்கோ" என்றாள், தகப்பனாரிடம்.

மறுநாள் வெங்கடேஷ் திருச்சிக்குப் புறப்பட்டு விட்டார். நேராகப் போய் எல்லா விபரம் சொன்னால் தான் சரிப்படும் என்று கிளம்பி விட்டார்.

கல்யாணத்துக்குச் சம்மதித்து விட்டாலும் தனக்குப் பிறகு குடும்பத்தை அம்மாவால் தனியாய் தாங்க முடியுமோ என்ற கவலை வாட்டவே அதுபற்றி வேதா மாமியிடம் பேசினாள் அகிலா.

"பெண்ணாய் பிறந்தவள் ஒருநாள் வேறொருத்தன் வீட்டுக்குப் போய்த்தானே ஆகணும்?... பவானிக்கு பதினைந்து வயசாறது. அவன் எஸ். எஸ். எல். ஸி. முடித்து விட்டால் சாரதாவுக்கு ஒத்தாசையாக இருக்கலாம். வேறு என்ன பண்ண முடியும் சொல்?" என்று சொல்லி வேதம் அகிலாவை சமாதானம் செய்தாள்.

## எட்டு

கிருஷ்ணனுக்கு ஐம்பத்தெட்டு வயசாகிறது என்று சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள் நெடு நெடு என்று உயரம். அதற்கேற்ற பருமன் நல்ல சிகப்பு. தீர்க்கமான மூக்கு. விசாலமான நெற்றி, அதில் பட்டையாய் மூணு விரல்களைக் கொண்டு பூசியிருந்த விபூதி. கடித்த பிரேம் போட்ட கண்ணாடி, வெள்ளை ஜிப்பா, தூய வெள்ளை வேஷ்டி, அங்கவஸ்திரம் என வேதாமாமி வீட்டு ஹாலில் அமர்ந்திருந்த அவர் முன் சென்று

நமஸ்காரம் செய்ய வேண்டும் என்ற நினைப்பு அகிலாவை உலுக்கியது.

வெங்கடேஷ் நேரில் போய் அகிலாவைப் பற்றி சமாசாரங்களைச் சொன்னதும் உச்சிப் பிள்ளையா கோவிலில் பூ போட்டு பார்த்தாராம் கிருஷ்ணன். விநா கரின் சம்மதம் கிடைத்து விடவே "சுபஸ்ய சீக்கிர என்று அந்தப் புதன் கிழமை காரில் கிளம்பி வந் விட்டார்.

காரிலிருந்து இறங்கி அவர் வீட்டுக்குள் நுழையு போதே அவள் அவரைப் பார்த்துவிட்டாள். சக் சக்கரவர்த்தி மாதிரி இருக்கும் இவர் வீட்டுக்கு மாட் பெண்ணாகப் போகக்கூடிய தகுதி தனக்கு ஏது என் எண்ணம் உடனேயே அவளுக்குத் தோன்றியது.

மகாதேவன் வீட்டில் நான்கு பேர்கள் சேர்ந்தா போல் அமர்ந்துகொண்டு பேச வசதியில்லை என்பதா வேதத்தின் வீட்டிலேயே பெண் பார்க்கும் படலத் வைத்துக் கொள்வது என்று தீர்மானித்திருந்தார்கள்.

வாசல் கூடத்தின் நடுவில் ஒரு பட்டுப்பாயை விரித் சுற்றிலும் நாற்காலிகளைப் போட்டாள் தங்கம். வேத சம்பிரதாயப்படி சொஜ்ஜியும் பஜ்ஜியும் தயா பண்ணினாள்.

'செலவு எங்களுடையதாகத்தான் இருக்கணும் என்று மகாதேவன் அபிப்பிராயப்பட்டதால் மேற் பதார்த்தங்களுக்கான பொருட்களை மட்டும் அவ வாங்கித் தந்து விட்டார்.

எத்தனையோ வருஷங்களுக்குப் பின் கொஞ்ச நெர்விசாய் உடுத்தி வேதா மாமி வீட்டு சமையல் கட்டு வந்து உட்கார்ந்து கொண்டு, பஜ்ஜிக்கு காய்கறி நற கியும், சட்னி அரைத்தும் தன்னால் இயன்ற அளவுக் உதவி செய்தாள் சாரதா.



படுக்கையைவிட்டு எழுந்திருக்க முடியாமல் பாதி சமயம் கிடந்தவள், அகிலாவுக்கு அம்மா தனியாய் என்ன செய்வாளோ என்று மனசில் பயம் உண்டாகி இருப் பதைப் புரிந்து கொண்டவளாய் கடந்த சில நாட் களாய் குடும்ப வேலைகளை அனைத்தையும் தானே வலிய செய்து பெண்ணுக்கு நிம்மதியைத் தர முயன்றாள்.

தன் நல்ல புடவை ஒன்றை எடுத்து அகிலாவை உடுத்திக் கொள்ள சொன்ன போது மட்டும் அவள் மறுத்து விட்டாள் "மன்னிச்சுடுங்கோ அக்கா, எத்தனை சிங்காரிச்சாலும் நான் இயற்கையா இருக்கிறதை மாத்திட முடியுமா? பெரியவர் என்னை இப்படியே பார்க்கட்டும். அதுவும் நல்லதுக்குத்தானே" என்றவள் தன் புடவைகளில் சுமாராயிருந்த நைலான் புடவையை உடுத்தி, முகம் கழுவி, பொட்டு இட்டு வேதா மாமி கொடுத்த பூவை தலை நிறைய வைத்துக் கொண்டு தயாராகி விட்டாள்.

திருச்சியிலிருந்து நேராக காரிலேயே கிருஷ்ணனும், தங்கத்தின் கணவன் வெங்கடேஷும் வருவதாக முதல் நாளே லெட்டர் வந்து விட்டது.

மணி மாலை ஐந்தரை இருக்கும்.

வாசலில் கார் வந்து நின்றது.

டிரைவர் ஒரு கூடை பழங்களை பாயில் கொண்டு வைத்தார்.

"வாங்கோ மாமா சௌக்கியமா? மாமி வரலையா? போன மாசம் பார்த்தபோது இப்படி உடனேயே நல்ல காரியத்துக்காக சந்திக்கப் போறோம்னு நினைக்கலை" வாசலுக்கே சென்று தங்கம் வரவேற்றாள்.

வெங்கடேஷ் கிருஷ்ணனை மகாதேவனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

"உங்களைப் பத்தி வெங்கடேஷ் சொல்ல… கேட்க எனக்கு ரொம்ப பெருமையா இருக்கு. … குடும்பம் ஒன்றில் சம்பந்தம் பேச எனக்கு கொடுப்பி… இருக்கணும்."

கிருஷ்ணன் உண்மையிலேயே பெரிய மனுஷர் தா… பணத்தில் மட்டுமல்ல, குணம், பண்பு எல்லாவற்றி… தான் என்பது வெகு சீக்கிரத்திலேயே புரிந்து போன…

அகிலாவிடம் டிபனை கொடுத்து அனுப்பினா… வேதம். அதை அவர் அருகில் இருந்த ஸ்டூலில் வைத்… விட்டு அடக்கத்துடன் நமஸ்கரித்து எழுந்தாள் அகிலா.

"இதுதான் அகிலா... என் இரண்டாவது பெண்… எஸ்.எஸ்.எல்.ஸிக்கு மேலே படிக்கலை, என்னால் படிக்… வைக்கமுடியலை. இவ தாயார் உடற்பு முடியாம… படுத்த படுக்கையானதும் அகிலாதான் தம்பி தங்கை… வளர்த்து, என்னை அவள் தாயாரை எல்லாரையு… பொறுப்பாய் கவனிச்சவள்."

மகளை அறிமுகம் செய்து வைப்பதற்கு… மகாதேவனுக்கு தொண்டை அடைத்துப் போனது.

"எனக்கு எல்லாம் தெரியும்... வெங்கடேஷ் பூ… விபரமும் சொல்லிட்டார்..." என்ற கிருஷ்ணன் நின்… கொண்டிருந்த அகிலாவை தீர்மானமாய் பார்த்து "நீ… இப்படி உட்கார்ந்துக்கோ அகிலா, உன் கிட்டேதா… எனக்கு நிறைய பேசணும்" என்றார்.

அகிலா பாயில் உட்கார்ந்தாள்.

"என் பிள்ளை ஸ்ரீதரனுக்கு இப்போ முப்பது… வயசாகிறது. அவனுக்கு இரண்டு வயசாகும்போது ஒ… சமயம் நல்ல ஜுரம் வந்தது. சாதாரண ஜுரம்… டாக்டர் சொல்லி வைத்தியம் பார்த்தார். ஆனா அ… போலியோனு பின்னால்தான் தெரிந்தது. நான் அ…



சமயம் ஊரில் இல்லை. வியாபார விஷயமாய் வெளியூரில் சுத்திண்டு இருந்தேன். இருந்திருந்தால் மட்டும் நான் என்ன பண்ணி இருக்கப் போறேன்? டாக்டர் பார்த்து வைத்தியம் பண்ணிக்கூட இந்த மாதிரி நடக்கணும்னா அதுக்கு விதிதானே காரணம்! அந்தக் காலத்திலே விஷய ஞானம் வேற இப்ப மாதிரி இல்லை. ஏதாவது ஆபத்து வந்துதென்றால், வந்துடுத்தேன்னு தலையில் கையை வைச்சிண்டு அழத் தெரியுமே தவிர வும், இதை எப்படி தடுப்போம், சரி பண்ணுவோம்னு யோசிக்கத் தெரியாத காலம். ராஜா மாதிரி இருந்த பிள்ளை படுத்த படுக்கையாயிட்டான். ஸ்ரீதரனுக்கு பத்து வயசு போல இருக்கும். சீமைக்குப் போய் படிச்சுட்டு வந்த என் சிநேகிதர் அவனைப் பார்த்தார். இடுப்புக்கு கீழ முழு உடம்பும் ஸ்வாதீனம் இழக்கலை. ஒரு காலில் தொடை பாகங்கள் மட்டும்தான் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கு அதனால் இனமும் கடுமையான பயிற்சிகள் செய்தால் நிச்சயம் விந்தி விந்தியாவது நடக்கலாம் என்றார். மெட்ராஸுக்கு கூட்டிண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்தேன். அங்கே பயிற்சிகள் ரொம்ப கடினம். ஒருவாரம் பண்ணுவதற்குள் ஸ்ரீதரன் வலியால் அழ, அதைப் பார்த்து ஜானகி அழ "வேண்டாம் இந்த வைத்தியம்"னு விட்டுட்டோம். இது எத்தனை அசட்டுத்தனம்னு இப்போ புரியறது. ஆனா அப்போ புத்தி இல்லையேம்மா குழந்தைக்கு ஜுரம் வந்தால் ஊசி போட்டு, கசப்பு மருந்து கொடுத்துதானே குணமாக்கிறோம்! ஸ்வீட்டும் ஹல்வாவுமா கொடுக்கிறோம்னு அன்னிக்கு எனக்கும் தோணலை. அவனோட அம்மாவுக்கும் தோணலை. வீட்டை விட்டுட்டு ரொம்ப நாட்கள் மெட்றாஸில் இருக்க முடியலை. அவளுக்கு மற்ற குழந்தைகள் கவலை. எனக்கு பிஸினஸ். மறுபடி திருச்சிக்கு கூட்டிண்டு வந்தோம். ஸ்ரீதரனுக்கு வீட்டிலேயே சொல்லிக் கொடுத்து அவன் டிகிரி வாங்கினான். ஆனால் வெளி உலகத்தோடு அனுபவம் இல்லாததால்

அவன் பல விஷயங்களில் குழந்தையாய்தான் இருக்கான். அவன் உடம்பே அவனுக்கு ஒரு பெரிய காம்ப்ளெக்ஸா போயிடுத்து. அவனை குத்தம் சொல்லி பிரயோஜனம் என்ன? ஸ்ரீதரனை அடுத்து எனக்கு ராஜா, ஹரி, கடைசியில் வித்யா. ராஜா பற்றின விவரங்கள் உனக்கு தெரிந்திருக்கும். வெங்கடேஷின் ப்ரண்ட். ஹரி வக்கீலுக்கு இங்கேதான் படிக்கிறான். வித்யா ஸ்கூல். ராஜாவுக்கு பெண் கொடுக்க நிறையபேர் வறா. ஆனால் ஸ்ரீதரனுக்கு கல்யாணம் பண்ணாமல் இரண்டாவது மாட்டுப் பெண் வீட்டுக்குள் வருவதில் எனக்கு இஷ்டமில்லை. ஸ்ரீதரனுக்கு வருகிற பெண்ணுக்கு அழகு வேண்டாம், படிப்பு வேண்டாம், பணம் காசு வேண்டாம் நல்ல குணவதியாய் மட்டும் அவள் இருந்தால் போதும். எந்த மாதிரி புருஷனுடன் வாழ்க்கை நடத்த போகிறோம்னு புரிஞ்சவளாய் இருக்கணும். யார் பேச்சையாவது கேட்டு ஏதோ ஒரு பெண்ணை ஆச்சுனு முடிச்சுட்டு பின்னால் அவளும் அவஸ்தைப்பட்டு, அவனும் கஷ்டப்படக் கூடாதுனு நினைக்கிறேன். அவனுடைய மனத்தை கேள்விப்படாத வரையில் யாருமே ஏரடிக்கான் அதுக்காகத்தான் முதலிலேயே பூரா உண்மையும் சொல்லி உன் மனப்பூர்வமான சம்மதத்தை நானே கேட்டுண்ட பிறகுதான் அவனும், நீயும் பார்க்கவே ஏற்பாடு பண்ணணும்னு தான் நினைக்கிறேன். நீ என்னம்மா சொல்றே அகிலா? உன்னை இந்தக் கல்யாணத்துக்காக விருப்பமில்லாமல் யாராவது நிர்ப்பந்தம் பண்ணி இருந்தால் கூட நீ பயப்படாமல் என்னிடம் பேசலாம். என்ன இருந்தாலும் ஒரு பெண்ணுக்குத் தகப்பன்தானேம்மா... இன்னொரு பெண்ணின் மனசு, வருத்தம் புரியாதா, என்ன?''

கிருஷ்ணன் பேசி நிறுத்தினார்.

சில நிமிஷங்களுக்கு அங்கு யாருமே பேசத் துணியவில்லை.



என்ன நேர்மையான பேச்சு?

அகிலாவுக்கு தான் வாயைத் திறந்தால் அழுது விடுவோமோ என்ற பயத்தின் காரணமாய்ப் பேசாதிருந்தாள்.

''என்னம்மா, சொல்லு...''

அவர் மீண்டும் கேட்கவே தலையை நிமிர்ந்து பார்த்தாள். இந்த மனுஷரிடம் தெரியும் உத்தம குணத்தில் பத்தில் ஒரு பங்கு ஸ்ரீதரனிடம் இருந்தால்கூட தான் பாக்கியசாலியே என்ற நினைப்பு எழ, ''எனக்கு மனப்பூர்வமாய் சம்மதம். என்னை யாரும் கட்டாயப்படுத்தலை'' என்றாள் மெல்ல.

''நல்லதும்மா...ரொம்ப சந்தோஷம், எதுக்கும் நீ ஸ்ரீதரனை பார்க்கறதும் நல்லதில்லையா?''

தேவையில்லை என்று தலையாட்டினாள் அகிலா. ''என்னைப் பொறுத்தவரைக்கும் அந்த அவசியமே இல்லை. ஆனா அவர் என்னைப் பார்த்துட்டு அப்புறமாய் சம்மதம் சொல்லணும்னா சரி'' என்றாள்.

''ஸ்ரீதரன் என்னம்மா சொல்லப்போகிறான்? தனக்குக் கல்யாணம் வேண்டாம்னு சொல்லிப் பார்த்தான். ஆனா நான் கேட்கலை. அதனாலே 'உங்க இஷ்டம்பா'னு சொல்லிட்டான். அவன் இனி புதிசாய் வேற என்ன சொல்லப் போகிறான்? ஒண்ணுமில்லை சரி மகாதேவன், இந்த சம்பந்தத்திலே எனக்குப் பூரண திருப்தி. என் மனைவி, பிள்ளை அத்தனை பேர் சார்பிலும் நானே சொல்கிறேன். இதோ என பையன் ஸ்ரீதரனின் போட்டோ. அகிலா படம் இருந்தால் கொடுங்கோ, வீட்டில் காட்டுகிறேன்.''

அவர் கொடுத்த படத்தை வாங்கிப் பார்த்த மகாதேவனின் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்து போயின. சாரதா பார்த்தாள். பின்பு அகிலாவிடம் நீட்டினாள்.

ஸ்ரீதரன் இடுப்புக்குமேல் எடுத்த படம் அது. அவனை முப்பது வயதில் எப்படி இருந்திருப்பார் என கணிக்க முடிந்தது.

ராஜா மாதிரி பிள்ளை என்பார்களே அப்படி அல்லவா இருந்தான் ஸ்ரீதரன்.

இவனையா ? தானா ?

என்னை மணக்க இவர் சம்மதிப்பாரா என்ற பயம் அகிலாவினுள் தோன்ற அம்மாவிடம் படத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டாள்.

"அப்போ நான் வரட்டுமா ? முகூர்த்த நாள் பார்த்துட்டு எழுதுங்கோ" கிருஷ்ணன் கிளம்பி விட்டார்.

"வந்து..." என்று இழுத்தார் மகாதேவன்.

"தப்பா எடுத்துக்காமல் இருந்தால் சொல்றேன். கொஞ்சம் பின்னால வந்து என் வீட்டையும் பார்த்து விட்டால் நல்லது. என் குடும்ப நிலைமை உங்களுக்குப் புரிஞ்சிடும். மூத்த பெண் லலிதா கல்யாணத்துக்கு வாங்கின கடனே இன்னும் பாக்கி இருக்கு... மலை போல நம்பிண்டு இருந்த பிள்ளை வேறு ஜாதிக்காரியை கல்யாணம் பண்ணிண்டு போயிட்டான்...எனக்கு சொத்து சொல்லிக்க ஒண்ணும் கிடையாது. என் வாத்தியார் வருமானம் தான்...நீங்க உங்க குடும்பத்தைப்பத்தி வெளிப்படையாய் பேசினேள். நானும் சொல்லா விட்டால் அது தப்பில்லையா ?"

கிருஷ்ணன் மகாதேவனிடம் வந்தார். தோளில் ஒரு கையைப் போட்டுக் கொண்டார்.

"வாங்கோ, நம் வீட்டுக்குப் போகலாம். எனக்கு நீங்க சம்பந்தி ஆன பிறகு அதுவும் என் வீடு தானே" என்றார்.



மகாதேவன் தெய்வத்தின் சன்னிதானத்தில் இருப்பது போல இரண்டு கைகளையும் கூப்பிக் கொண்டார். அவருக்குக் கிருஷ்ணனின் பேச்சு ரோமாஞ்சலியைக் கொடுத்தது.

ஊருக்குப் புறப்படும் முன் அகிலாவை மட்டும் தனியே அழைத்தார் கிருஷ்ணன். "உன் கிட்டே ஒண்ணே ஒண்ணை மட்டும் சொல்லணும்போல ஆசையாய் இருக்கு அகிலா. சொல்லட்டுமா ? டாக்டர் என்ன சொல்லி இருக்கார் தெரியுமா ? ஸ்ரீதரனை மெல்ல வழிக்குக் கொண்டு வந்து வகையாய் பயிற்சி கொடுத்து அவன் மனசுக்குப் பலத்தைக் கொடுத்துவிட்டால் அவன் முக்கால்வாசி குணமாகி ஊன்றுகோலுடனாவது நடக்க வழி இருக்குனு சொல்லியிருக்கார்மா. அதனாலே நீ நொண்டிக்கு வாழ்க்கைப் படப்போறோமேனு ரொம்ப வருத்தப் படாதே. ஒரு நம்பிக்கையோடு இரு. எல்லாம் நல்லதுக்கு நடக்கும். உன்னிடம் பொய் சொல்லி உன்னை ஏமாற்ற நான் இதைச் சொல்லவில்லை அகிலா. நிச்சயமாய் டாக்டர் சொன்னதுதான். என்ன, புரிகிறதா ? உனக்கு கடவுள் ஒரு குறையும் வைக்க மாட்டாளம்மா" என்று சொல்லிவிட்டு மற்றவர்களிடம் சொல்லிக் கொண்டு காரில் ஏறின போது அகிலாவுக்கு நிஜமாகவே சந்தோஷமாக இருந்தது. தன்னுடைய இந்தக் கல்யாணத்தால் என் குடும்பத்துக்கு நான் உதவியாக இருக்க வேண்டும். என்னை தொட்டுத் தாலி கட்டும் மனிதனுக்கு இதமான மனைவியாக இருக்க வேண்டும். என் மாமனார் என் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை பொய்யாக்காத வண்ணம் என் புகுந்த வீட்டுக்கும் நான் நிறைய அமைதி தருபவளாக இருக்க வேண்டும். என் பிரார்த்தனையை நிறைவேற்று தெய்வமே, என்று அன்று முதல் மனசால் ஒவ்வொரு கணமும் வேண்ட முற்பட்டாள் அகிலா.

56736

## ஒன்பது

அகிலாவை கிருஷ்ணன் பெண் பார்த்துவிட்டு ஊருக்குப் போன நான்காம் நாள் அவரிடமிருந்து பதில் வந்து விட்டது.

"ஸ்ரீதரனுக்கும், ஜானகிக்கும் இந்தக் கல்யாணத்தில் பூரண சம்மதம். ஜோஸியரிடம் நல்ல நாள் குறித்து ஆலோசனை செய்தேன். ஆவணி 18ம் தேதி முகூர்த்த நாள் என்கிறார். அகிலாவுக்கும், அவள் தாயாருக்கும் சௌகரியப்படுமானால் அந்த முகூர்த்தத்திலேயே கல்யாணத்தை நடத்தி விடலாம். வருகிற வெள்ளிக்கிழமை சர்வ முகூர்த்த நாளாக இருப்பதால் அன்றே நிச்சயதார்த்தத்தை வைத்துக் கொள்ளலாம். சம்பிரதாயப்படி பிள்ளை வீட்டில்தான் நிச்சயதார்த்தம் நடக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். இன்னும் இரண்டு நாட்களில் சென்னைக்கு வரும் ஜோலி எனக்கிருப்பதால் மற்ற விவரங்களை நேரிலேயே பேசிக் கொள்ளலாம்."

லெட்டர் கைக்கு வந்த அன்று மகாதேவன் பள்ளிக்குப் போகவில்லை. லீவு போட்டுவிட்டு தனியாய் வேப்ப மரத்தடியில் அமர்ந்துகொண்டு வெகு நாழிகை யோசனை செய்தார். அகிலாவை கிருஷ்ணன் பெண் பார்த்து விட்டுப் போன அன்று குழந்தைகளெல்லாம் தூங்கின பிறகு, இரவில் சாரதா அவரிடம் அழுதது நினைவுக்கு வந்தது—

"கால் இல்லாத பையனுக்குப் பெண்ணைக் கொடுக்க சம்மதிச்சுட்டோமே, இது சரியான்னா? இன்னிக்கு பணம் அது கொடுக்கிற சௌகரியத்தால் அகிலா தான் கால்கள் விளங்காத பையனை கல்யாணம் பண்ணிக்க இருப்பது பற்றி நினைச்சுப் பார்க்காமல் இருக்கலாம். ஆனால் வருஷம் ஆக ஆக தனக்குனு ஒரு குழந்தை இல்லையேன்னு எண்ணம் தோண ஆரம்பிச்சதுன்னா எத்தனை பெரிய தப்பு பண்ணிட்டோம்னு வருத்தப்பட மாட்டாளா? கல்யாணமங்கறது ஆயிரம் காலத்துப் பயிராச்சேன்னா... அவ குழந்தை. ஏதோ மனச்சலிப்பில், இந்தக் குடும்பத்துக்காக ஓடாய் உழைச்சுப் போன சலிப்பில், இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிச்சிருக்கலாம். அவளைப் பெத்த நாம, யோசிக்காமல் பாழும் கிணத்திலே தள்ளுகிற மாதிரி இந்த கல்யாணத்துக்கு ஒப்புத்துக்கறது சரியான்னா?... நாளைக்கு ஊர் உலகத்திலே பணத்துக்கு ஆசைப்பட்டு பெத்த பெண் வாழ்க்கையை குட்டிச் சுவராக்கிட்டானு நம்மை தானே சொல்லுவா?... உங்க மாதிரி புத்திசாலித்தனம் இல்லை... உங்க பெண் போல விவேகமும் இல்லை... ஆனா மனசு என்னமோ சங்கடப் படறது... ஏழையோ பாழையோ, நம்ம சக்திக்கு ஏத்த மாதிரி ஒருத்தன் கிட்டே அகிலாவை ஒப்படைச்சு புருஷன், குழந்தைங்கற பந்தபாசத்தோட வாழறது மேல்னு எனக்குத் தோணறது...... என்னன்னா ...... பேசாமலேயே இருக்கேள்? சொல்லுங்கோன்னா..."

மணி இரவு பதினொன்றை நெருங்கும் தறுவாயில் தூங்கிக் கொண்டிருந்த மகாதேவனை எழுப்பி சாரதா இத்தனையும் மெல்லக் கூறி விட்டு அழுதாள்.

"நீ சொல்றது எனக்குப் புரியறது சாரதா... இப்பவே இந்தக் கல்யாணத்தை நிறுத்தறதுக்கு நான் ரெடி... வெங்கடேஷும், தங்கமும் திருச்சி வரனைப் பற்றி பேசின போது நான் என்ன சொன்னேன் ஞாபகம் இருக்கா? 'ஊனமுள்ள பையனுக்கு அகிலாவை கொடுப்பதில் எனக்கு சம்மதம் இல்லை. ஆனாலும் எங்க குடும்பத்தில் ஈடுபாடு உள்ள நீங்க சொல்வதால் அகிலா

விடம் இதைப் பற்றி பேசறேன். அவ கெட்டிக்காரி, புத்திசாலி. அவள் இஷ்டம் என்னவோ அதுதான் என் இஷ்டமும்'னு தானே சொன்னேன். ஒரு நாள் ஸ்ரீ யோசிச்சு அகிலா சிரிச்ச முகத்தோடு இந்தக் கல்யாணத்துக்கு சம்மதம்னு சொன்னா... 'யாருக்குத்தான் ஊனம் இல்லை. கண், காது ஏன் மனசே ஊனம் இல்லாதவா யார் இருக்கா'னு என்னை உனக்கெதிரில்தானே கேட்டாள்."

சாரதா கணவனுக்குப் பதில் சொல்லாமல் விசும்பினாள்.

மகாதேவனே மேற்கொண்டு பேசினார். "ஸ்ரீதரன் ரொம்ப நல்ல மனுஷ்யராய் தெரியறார் சாரதா. அவர் புறப்படறதுக்கு முன்னால் அகிலாவைத் தனியே அழைச்சுப் பேசினாரே, என்ன தெரியுமா? ஸ்ரீதரனின் இரண்டு கால்களையும் பாரிச வாயு தாக்கலையாம். சரியான, கண்டிப்பான, கவனிப்பு இல்லாததாலும் ஒரு காலின் பலமின்மையாலும் அவன் இன்னொரு காலையும் உபயோகப்படுத்தாததாலும், சக்கர நாற்காலியில் உட்கார்ந்து இங்குமங்கும் போகப் பழகி விட்டதாலும், இரண்டு கால்களுமே சூம்பிப்போய் உபயோகமில்லாமல் இருக்கிறதாம். தினம் கொஞ்ச நாழிகை பிஸியோதெரபி எக்ஸர்ஸைஸ் பண்ணி, மருந்தும் சாப்பிட்டு, அவன் மனசில் தன்னம்பிக்கை பிறந்தால், நிறைய நடக்கக்கூட முடியும்னு டாக்டர் சொன்னதாய் சொன்னாராம். நம் அகிலாவின் ராசி அவன் குணமாகி இரண்டு பேரும் ஏன் சந்தோஷமாய் இருக்கக்கூடாது...?"

"ஆமாம் நம்ப வேண்டியதுதான். முப்பது வருஷமாய் கால் விளங்காத பிள்ளைக்கு இனிமேல்தான் அதிருஷ்டம் வரப் போகிறதாக்கும்... அந்தப் பெரியவர் ஆதங்கத்தில் சொன்னதை உங்க பெண் உங்க கிட்டே சொல்ல நீங்களும் பெரிசாய் என்னை சமாதானம்



பண்ணுங்கோ" சாரதா ஆத்திரமும், அழுகையுமாய் பேசினாள்.

இத்தனை நாழிகை விழித்துக் கொண்டு பொறுமையுடன் பெற்றோர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த அகிலா பாயில் எழுந்து உட்கார்ந்தாள்

"எதுக்காகம்மா இப்படி மனசைப் போட்டு அலட்டிக்கிறே? நான் என்ன சின்னக் குழந்தையா? எனக்கு வயசு இருபத்திரண்டு ஆகலை? அப்படி யோசிக்காமல் பிற்காலத்தின் கஷ்ட நஷ்டம் பற்றி யோசனை பண்ணாமல் நான் இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிப்பேனா?...சத்தியமாய் சொல்கிறேன். சந்தோஷத்தோடதான் சரினு சொன்னேன். ஊனம் இல்லாதவர் யாரும்மா? இவர் ஊனம் வெளிப்படையாய் தெரிகிற மாதிரி பெரிசாய் இருக்கு. அவ்வளவுதானே! குறை இருக்கிற ஒரே காரணத்துக்காக இவருக்கு கல்யாணம் ஆகக் கூடாதுன்னா எனக்கும்தான் நடக்கக் கூடாது. என்னைப்பாரு. கருப்பாய், தெத்துப் பல்லுடன். இது மட்டும் குறை இல்லையா? ஏன் உனக்கே கல்யாணம் ஆகி இருக்கக் கூடாது உனக்கு சின்ன வயசிலேயே ஆஸ்த்மா கோளாறு உண்டே?...என்னம்மா நீ... உன் மனசையும் குழப்பிண்டு அப்பாவையும் ஏன் கலங்க வைக்கிறே?... இன்னிக்கு அந்தப் பெரியவரைப் பார்த்த பிறகு என் மனசிலே இன்னும் சந்தோஷம் கூடி இருக்கு. எத்தனை நல்ல விதமாய், அன்பாய்ப் பேசினார்? பணம் இருக்கிற எல்லோரும் இத்தனை நல்ல மாதிரியாவா இருக்கா? நான் மனசு நிறைஞ்சு தான் இருக்கேன். உன் எண்ணத்தையும் மாத்திக்கோம்மா."

பேசி முடித்த அகிலா, அம்மா இன்னும் அழுகையை நிறுத்தாததைக் கண்டு எழுந்து அவளருகில் வந்து அமர்ந்தாள்

''என்னம்மா நீ... சரியான அசடு போ'' என்று கூ அவள் கண்களைத் துடைத்தபோது ''என் பெத்த மன கேட்க மாட்டேங்கறதே அகிலா. உன் நல்ல மனசுக்கு பொறுமையான குணத்துக்கும் பகவான் கண்ணை திறந்து பார்க்கணும்'' என்று சொன்னபடி மகளை இ அணைத்துக் கொண்டு தொடர்ந்து அழுதாள்.

அதன் பின் சாரதா வாயைத் திறந்து குறைபட்டு கொள்ளாவிட்டாலும், அவள் மனசில் அதன் நெருட இருக்கிறது என்று மகாதேவனுக்குப் புரிந்த விஷயம்தான்

இன்று கிருஷ்ணனின் கடிதத்தைப் படித்த பிற தனிமையில் உட்கார்ந்து யோசிக்கையில் முதல்நா சாரதா வருத்தப்பட்டது ஞாபகத்துக்கு வந்தாலு அகிலாவுக்கு இதில் மனப்பூர்வமாய் சம்மதம் இருப்பை யும் அவர் நினைத்துப் பார்த்தார்.

கடந்த மூன்று நாட்களில் தன் வீட்டின் சூழ்நிலை ரொம்ப மாறிவிட்டதையும் அவர் உணர்ந்தார்.

மனசில் குறையுடன் அகிலா இந்தத் திருமணத்துக் சம்மதித்திருப்பாளோ என்ற அவரது, வேதா மாமியின் தங்கத்தின் கவலைகளை அகிலா பொய் என்று நிரூபித்து விட்டாள் இதுநாள் இல்லாத குதூகலம் மனசில் இரு ப்பதை அவள் முகமே தெளிவாய் காட்டியது, சமைக்கு போதும், முகம் அலம்பி பொட்டு வைத்துக் கொள்ளு போதும் ஏதாவது பாடல்களை முணுமுணுப்பதையு நீல வானத்தை, கூட்டமாய் பறக்கும் பறவைகளை அவ கண்டு தனக்குத் தானே ஒரு மௌனத்தில் ஆழ்ந்த உதட்டில் புன்னகை விரிய அமர்ந்திருந்ததையு இப்போது மகாதேவன் நினைத்துப் பார்த்தபோது அவ மனம் லேசாகிப் போனது.

ஆனால் அதே சமயத்தில் வெள்ளிக்கிழமைக்கு நிச்சயதார்த்த ஏற்பாடுகளை தன்னால் எப்படிச் செய்



முடியும் என்ற வியப்பும், பயமும் மனதை கவ்வவே செய்தன.

இன்று என்ன கிழமை?

புதன்.

புதனோடு புதன் எட்டு நாட்கள். அப்புறம் மேலும் இரண்டு நாட்கள் ஆக பத்து நாட்களுக்குள் தன்னால் எப்படிப் பணம் புரட்டி, காரியங்களை ஒப்பேற்ற இயலும்?

பெரிசாய் ஒன்றும் செய்யாவிட்டாலும் லலிதாவுக்கு செய்த சீர் செனத்திகளை நினைத்துக்கூட பார்க்க முடியா விட்டாலும், நிச்சயதார்த்த பத்திரிகை வைக்க ஒரு வெள்ளித் தட்டு, குங்குமச் சிமிழ், சந்தன பேலா வேண் டாமா?

கல்கண்டு, சர்க்கரை, வைக்க எவர்சில்வர் ட்ரே இரண்டு கூட இல்லாவிட்டால் லட்சாதிபதி சம்பந்தி வீட்டில் சிரிக்க மாட்டார்களா?

சாத்துக்குடி, பழ வகைகளை அழகாய் கிடைக்கும் தகர ட்ரேகளில் வைத்து விடலாம், மலிவும் கூட.

வெள்ளி எவர்சில்வர் பாத்திரங்களுக்கு எவ்வளவு ஆகும்?

வெள்ளி விற்கும் விலையை மனசில் நினைத்தால் மலைப்பாக இருந்தது.

படையாய் எல்லோரும் திருச்சிக்குப் போகா விட்டா லும் தான், சாரதா பெரியவராய் வேதா மாமி, தங்கம் வெங்கடேஷ் போய்த்தானே தீரவேண்டும்?

எல்லோருக்கும் போகவர ரயில் சார்ஜ், போக்கு வரத்து.

மனக்கணக்கே மகாதேவனை சொல்லத் தெரியா சங்கடத்தில் ஆழ்த்தியது.

யோசித்து, யோசித்துக் குழம்பிப் போனவர் 'இது வரை நடந்ததெல்லாம் நாம் திட்டமிட்டா நடந்தது? பகவான் இருக்கான். பார்ப்போம்' என்று கொஞ்சம் தெளிந்தவராய் கடிதாசை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போனார்.

சிறிது நாழிகைக்கெல்லாம் சாரதாவும், அவருமா முன் வீட்டுக்குப் போய் வேதத்திடம் கடிதத்தைக் கொடுத்தார்கள்.

தங்கம் தாய்க்கு கேட்கும் விதத்தில் கடிதத்தை உரக்கப் படித்தாள்.

''அகிலா அதிருஷ்டகாரி மாமா. இன்னும் இரண்டு மாசத்திலே நினைச்சுக் கூட பார்க்காத விதத்திலே ஜாம் ஜாம்னு கல்யாணமாகி அமோகமா இருக்கப் போறா. என்ன நான் சொல்றது?''

வேதம் எதிர் பார்த்த விதமாய் மகாதேவனிடமிருந்தோ, சாரதாவிடமிருந்தோ பதில் வரவில்லை—

''என்ன விஷயம் சாரதா?''

நிச்சயதார்த்தத்துக்காகப் போகும் அத்யாவசியமான செலவையும், அதனை எங்கிருந்து புரட்டப் போகிறோம் என்ற மலைப்பையும் சாரதா மெல்லச் சொன்னாள்.

''என் கல்யாணத்திலே கொடுத்த சந்தன பேலா இருக்கு, அதை பாலீஷ் போட்டு கொடுத்துடலாம். ஸ்வாமிக்கு பூணல் போட்டபோது பிட்சைக்கா வாங்கின வெள்ளித் தட்டு அவனுக்குக் கல்யாணமாகி பேரன் பிறந்தால் இருக்கட்டும்னு இத்தனை நாளா



வைச்சிருந்தேன். ஸ்வாமியே எங்களை விட்டுப் போன பிறகு பேரன் ஆசை மட்டும் எதுக்கு? அந்தத் தட்டை பாலீஷ் போட்டு கொடுக்கலாம்' இவர் சொல்றார். இன்னும் கொஞ்சம் பெரிசாய் இருந்தால் தேவலை. பெரிய இடம்னு தான் நினைக்கிறேன். குங்குமச் சிமிழ் ரொம்ப விலை இருக்காது. ஆனால் எவர்சில்வரில் இரண்டு தட்டுகள், தாலு கரட்டே, பழம், கல்கண்டு, அது, இது, விருத்திக்கு போக, வர மத்ததுக்கெல்லாம் ஆயிரம் ஆயிரமாவது வேண்டாமா மாமி? [illegible] கேட்டுப் பார்க்கலாம். ஆனா இவர் கேட்டு அவா கொடுக்க அவகாசம் இல்லையே! இன்னிக்கு பத்தாம் நாள் நிச்சயதார்த்தம்னு பெரியவர் எழுதியிருக்கார். இவ்வளவு சுருக்க எதிர்பார்க்காததால் ஏற்பாடுகளை எப்படி பண்ணப் போறோம்னு பயமா இருக்கு.''

''சரியான அசடு சாரதா நீ. நல்ல காரியம் நடக்கப் போகிறது. பாதி சாமான்கள் உங்க கிட்டேயே இருக்கு. இன்னும் கொஞ்சம் தானே வாங்கணும்? இந்தக் காலத்தில் நாலே நாளில் கல்யாணமே பண்ணிடறா. நீ இதுக்குப் போய் கலங்கறியே. நாங்களெல்லாம் மனுஷாளாய் தெரியலையா! அகிலா கல்யாணம் எங்காத்து கல்யாணம் மாதிரி. ஏதோ என்னால் முடிஞ்சதை பண்ணி ஒப்பேத்த மாட்டேனா? இரண்டு பேரும் மனசைப் போட்டு குழப்பிக்காமல் வீட்டுக்குப் போங்கோ... நாளை வெள்ளிக் கிழமை கடைக்கு போய் குங்குமச் சிமிழ், சொச்ச சாமான்களை வாங்கலாம்... என்ன?''

வேதத்தின் பேச்சு யானை பலத்தை மனசில் தர மகாதேவனும், சாரதாவும் தங்கள் வீட்டுக்குப் போனார்கள்.

வேதம் அகிலாவுக்கெனக் கொடுக்கும் பரிசைத் தவிர பாக்கி எது செலவழித்தாலும் அதற்கான கணக்கை வைத்துக் கொண்டு என்றாவது ஒருநாள் திருப்பித்தந்து விட வேண்டும். உடம்பை செருப்பாகத் தேய்த்து உழைத்தாவது வேதா மாமியின் கடனை அடைத்தால்தான்

நெஞ்சு வேகும் என்று மகாதேவன் தன் தீர்மானத்தை பற்றிப் பேசின போது சாரதா மௌனமாய் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

வியாழன் போய் வெள்ளி முளைத்தது. கா[illegible] ஒன்பதரை கூட இருக்காது. வாசலில் கார் சத்த[illegible] கொல்லைக்கட்டு ஜன்னல் வழியாய் "சாரதா சம்பந்தி வந்திருக்கார்" என்று வேதம் உரக்க [illegible] சாப்பிட்டுக் கொண்டிருந்த மகாதேவன் கையை அலம்பி[illegible] வாசலுக்கு ஓடினார்.

மரியாதைக்கு வேதத்தின் வீட்டில் இரண்டு நிமி[illegible]கள் தங்கின கிருஷ்ணன் "என் சம்பந்தி வீட்டுக்கு போறேன். நீங்களும் வாருங்கள்" என்று சொல்லி இ[illegible] கிளம்பி வந்து விட்டார்.

முதலிலேயே சொல்லி இருப்பார் போலிருக்கிற[illegible] அவர் வருவதற்குள் டிரைவர் சின்னதாய் ஒரு அட்டை பெட்டியைக் கொணர்ந்து வைத்துவிட்டுப் போனான்.

கூடத்தில் பாயை விரித்து, இருந்த ஒரு நாற்காலி[illegible] தூசி தட்டி அவர் வந்தால் உட்கார போட்ட அகி[illegible] ஒரே நொடியில் முகத்தை மட்டும் அலம்பி முன் நெற்[illegible] மயிரை வாரி, சாந்தினால் பொட்டு வைத்து கலை[illegible] புடவையை சீராக்கிக் கொள்ளவும் கிருஷ்ணன் கு[illegible] வாசலில் கேட்கவும் சரியாய் இருந்தது.

சம்பிரதாய உபசரிப்புகள் முடிந்தன.

இரவு உரை குத்துவதற்காக வைத்திருந்த பாலி[illegible] காப்பி கலந்து அகிலா கொடுக்க, பவானி அவர்மு[illegible] கொணர்ந்து வைத்தாள். அகிலா அவரை நமஸ்கரித்து விட்டு மீண்டும் சமையற்கட்டுக்கே போய் விட்டாள்.

காபியை எடுத்து ஆற்றி கொடுத்த மகாதேவனிட[illegible] "உங்களுக்கு ஸ்கூல் இல்லை? நாழியாகிறதோ?" என்[illegible] கேட்ட கிருஷ்ணன் தொடர்ந்து அவரே "நீங்க ஸ்கூலு[illegible]



அப் புறப்பட -றதுக்கு முன்னாடி வந்து பேசிட்டு ஊர்ப் போறதுன்னு நான் விடிகாலையிலேயே புறப்பட்டேன்" என்றார்.

"அதனால் என்ன பரவாயில்லை. அவரை நான் வீடு போட்டுடட்டுமா?"

"வேண்டாம்... வேண்டாம்... ஒரு அரைமணி, அப்புறம் நான் கிளம்பிடுவேன். வேலை இருக்கு."

பள்ளிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த பவானியை அழைத்தார் மகாதேவன். "ஹெட்மாஸ்டர் கிட்டே போய் அப்பாவுக்கு ஒரு மணிநேரம் பர்மிஷன் வேணும்னு சொல்லிட்டு உன் கிளாசுக்குப் போ" என்று பணித்தார்

குழந்தைகள் புறப்பட்டுப் போனார்கள்.

வேதமும், தங்கமும் வந்தார்கள்; வெங்கடேஷ் வெளியில் போயிருந்தான்.

"ஏம்மா அகிலா, அங்கே புழுக்கத்திலே ஏன் இருக்கணும்? நீயும் இப்படி வந்து இரும்மா" என்று அவளை அழைத்த கிருஷ்ணன், "எனக்கு என்னிக்குமே சுத்தி வளைச்சு பேசத் தெரியாது. என் மனசுக்கு நியாயம்னு படறதை நான் வெளியே சொல்லத் தயங்கினதில்லை. அதனால் இப்போ சொல்லப் போறதை நீங்க தப்பா எடுத்துக்க வேண்டாம். இந்தக் கல்யாணம் எதிர்பார்க்காத விதத்தில் தீர்மானமானதால் பண ஏற்பாட்டுக்கு நீங்கள் கஷ்டப்படுவீர்கள்னு எனக்குப் புரியறது. கல்யாணத்தை உடனே வைக்க நான் அவசரப்படுவதால் கல்யாண நிச்சயதார்த்த செலவுகளுக்கு என்ன செய்வோம்னு நீங்க யோசனை பண்ணியிருக்கலாம். என் நொண்டிப் பிள்ளையை அகிலா கல்யாணம் பண்ணிக்க சம்மதித்ததால் எழுந்த சந்தோஷத்தில் நான் பேசுவதாக நினைக்க வேண்டாம். பகவான் எனக்குப் பணத்தைக் கொடுத்திருக்கான். இத்தனை நாள் நீங்க வளர்த்த

பெண் எங்காத்துக்கு வர நீங்க செலவழிச்சால் என்ன, நான் செலவழிச்சால் என்ன? நிச்சயதார்த்தத்தை இங்கேயே இப்பவே கூட நடத்திடலாம். ஆனால் இதை திருச்சியில் வைத்துக் கொண்டால் இந்தச் சாக்கில் பெண்ணும் பிள்ளையும் ஒருவரை ஒருவர் பார்க்கலாம். அதனால் அகிலாவும், நிச்சயதார்த்தத்துக்கு கண்டிப்பாக வரணும். இதுக்கு நீங்க ஆட்சேபணை ஒண்ணும் சொல்ல மாட்டேள்னு நான் நினைக்கிறேன். அப்புறம் ஸ்ரீரங்கம் மெட்ராசுக்கு கூட்டி வந்து இங்கு கல்யாணத்தை நடத்துவது எங்களுக்கு அசௌகரியமாய் இருக்கும். அதனால் கல்யாணத்தை திருச்சியில் நம்மாத்திலேயே வைச்சுக்கலாம். இதையெல்லாம் மனசில் தீர்மானம் பண்ணினதால்தான் நிச்சயதார்த்த கல்யாண செலவுகள் என்னுடையதாக இருக்கணும்னு நான் ஆசைப்படறேன். என்ன, என் நிலைமை புரிகிறதா?''

மகாதேவன் என்ன பதில் சொல்லுவார்? வெறுங்கையை முழம் போடும் தனக்கும் கிருஷ்ணனின் முடிவுகள் சாதகமாக இருந்ததால் அவர் வாயே திறக்கவில்லை.

''தங்கம் அந்தப் பெட்டியை பிரி.''

சொன்னபடி தங்கம் செய்தாள்.

உள்ளே இரண்டு பட்டுப் புடவைகள். ஒன்று இரட்டை பட்டை ஜரிகை போட்ட மஸ்டர்டு நிறம். மற்றது வெளிர் நீலநிறத்தில் கம்பி ஜரிகை போட்டது. இரண்டுக்கும் சரியான சட்டைத் துணிகளும் கூடவே இருந்தன.

''உங்க குடும்ப நிலையைக் குத்திக் காட்டறேன்னு நினைக்க வேண்டாம். என் மாட்டுப் பெண்ணுக்கு நான் அன்போட கொடுப்பதாக இருக்கட்டுமே! மஸ்டர்டு புடவை நிச்சயதார்த்தத்தின்போது உடுத்துக் கொள்ள, மற்றது நீங்களெல்லாம் அங்கு வரும்போது தேவைப்பட



லாம். என்னம்மா அகிலா. உனக்கு என் செலக்ஷன் பிடிச்சிருக்காம்மா?'' மகாதேவனிடம் பேசின கிருஷ்ணன் சட்டென்று தன் பக்கம் திரும்பி இந்தக் கேள்வியைக் கேட்பார் என்று அகிலா எதிர்பார்க்கவில்லை.

ஒன்றுமே சொல்லாமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

இப்போது சட்டைப் பையிலிருந்து ஒரு கவரை எடுத்தார் கிருஷ்ணன்.

''இதுலே ஐயாயிரம் ரூபாய் இருக்கு. நிச்சயதார்த்த சாமான்கள் வாங்க, மற்றபடி கல்யாணத்துக்கு வர போக செலவுகளுக்கு இதை வைச்சுக்கோங்கோ மகாதேவன் ஜவுளிக்குன்னு வீணாய் பணம் செலவு பண்ண வேண்டாம். நீங்க அங்கே வரும்போது நம்ம கடையிலேயே வேணுங்கறதை வாங்கிக்கலாம். அப்புறம் பாத்திரம், பண்டம் என்று வேண்டாம்... அகிலா தனிக் குடித்தனமா பண்ணப் போறா? எங்களோடு சேர்ந்துதானே இருக்கப் போறா. சும்மா சம்பிரதாயத்துக்காக வெள்ளி குத்துவிளக்கு குங்குமச்சிமிழ் இப்படி வாங்குங்கோ போதும். நிச்சயமாய் வேறு எதுவும் வாங்க வேண்டாம். என்ன நான் சொல்வது புரியறதா?''

திருச்சிக்கு இரண்டு தடவைகள் எல்லோரும் போக வர சில்லரை வெள்ளிச் சாமான்கள் வாங்க இரண்டாயிரம் இருந்தால் போதுமே; இவர் சொல்கிறபடி வேறு எதுவுமே வாங்க வேண்டாம் என்றால் என்னத்துக்காக இந்த உபரி மூவாயிரம்?

மகாதேவனின் மனசைப் புரிந்து கொண்ட மாதிரி கிருஷ்ணனே பேசினார்.

''பள்ளிக்கூட லோன், மற்றதுன்னு உங்களுக்குக் கிட்டத்தட்ட மூவாயிரம் கடன் இருக்கிறதா வெங்கடேஷ் சொன்னான். நான் உங்க சகோதரன் மாதிரி. என்னை

மூளை பிள்ளைக்கு மனைவியாய், தாயாய், சர்வமுமாய் இருக்க உங்க அகிலா முன்வரும்போது இந்தச் சின்ன கடனை அடைக்கக் கூடவா எனக்கு பாத்தியதை இல்லை? பெரிய மனசு பண்ணி இந்தப் பணத்தை எடுத்துண்டா நான் ரொம்ப சந்தோஷப்படுவேன் மகாதேவன்."

அப்பா மானி அன்னியரிடம் ஒரு காசு கூட கைநீட்டி வாங்காதவர், சத்தியசந்தர் என்பதெல்லாம் அகிலாவுக்குத் தெரியும். ஆனாலும் கிருஷ்ணனின் பேச்சில் தெரிந்த வெளிப்படையான அன்புக்கு அப்பா கண்டிப்பாய் கட்டுப்படுவார் என்ற நம்பிக்கை ஏனோ மனதில் எழுந்ததால், 'என் மூலம் என் குடும்பத்துக்கு விடிவுகாலம் பிறக்க வேண்டும் என்று நான் வேண்டியதை தெய்வம் உண்மையாக்குகிறதா' என்ற நினைப்பில் குபீரென்று சந்தோஷம் பீறிட மனசுக்குள் கடவுளுக்கு அகிலா நன்றி செலுத்தினாள்.

## பத்து

**அ**கிலா ரயிலில் போயிருக்கும் சமயங்களை விரல் விட்டு எண்ணி விடலாம். திருப்பதிக்கு புரட்டாசி மாசம் பிரம்மோத்ஸவத்துக்கு கூட்டத்தில் இடிபட்டுக் கொண்டு போனது ஒருமுறை. லலிதாவுக்கு சீமந்தத்தின் போது அம்மா ரொம்ப படுக்கையாய் கிடந்ததால் இவள் போனது இரண்டாவது முறை இப்போது திருச்சிக்கு

காலையில் புறப்பட்ட சோழன் எக்ஸ்பிரஸ் தாம்பரம், செங்கல்பட்டு என்று ஒவ்வொரு இடமாய் நின்று சிரம பரிகாரம் செய்தபின் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தது.



மகாதேவன், சாரதா, அகிலா, கங்கம், வெங்கடேஷ்.

'சுப காரியங்களுக்கு தான் தகுதி இல்லை' என்று வேதா மாமி உடன் வர மறுத்துவிட்டாள்.

குட்டிக்கும் நாய்க்கும் குடிபோக சந்தோஷம் என்பது போல அக்கா நிச்சயதார்த்தத்துக்கு வர பவானியும், ராமுவும் துடித்தார்கள். அம்மாவிடம், அக்காவிடம் சிபாரிசு செய்ய வேண்டினார்கள்.

"பெரிய இடத்துல எப்படிப் பழகணும்கூட நம் மாத்துக் குழந்தைகளுக்குத் தெரியாது. சம்பந்திப் பிராமணரைப் பார்த்திருக்கோமே தவிர, அவாத்து மாமி மத்தவர்களைப் பார்த்ததில்லை. கூட்டமாய் போய் இறங்கி நடக்கத் தெரியாமல் நடந்துண்டு எதுக்காக அவஸ்தைப்படணும்? வியாழன் டே எக்ஸ்பிரஸில் போனால், வெள்ளி நிச்சயதார்த்தம் முடிந்து ராத்திரி போட் மெயிலில் நாம் ஊர் திரும்பிடுவோம். அதனால் குழந்தைகள் வேண்டாம். கல்யாணம் நல்லபடியா நடந்து எல்லாம் சரியாக இருந்தால் அடிக்கடி போனால் போச்சு" தீர்மானமாய் மகாதேவன் மறுத்து விட்டார்.

"சுரேஷ், சந்திரனோடு இவர்களும் இங்கேயே இருக்கட்டும் என வேதம் தன்னுடனேயே அவர்களை இருத்திக் கொண்டாள்.

ரயிலில் ரொம்பக் கூட்டம் இல்லை.

சனி ஞாயிறு என்றால் கூட்டம் இருக்குமோ என்னவோ?

ஜன்னல் ஓரமாய் அமர்ந்து ரயில் ஓடும்போது வெளியே வேடிக்கை பார்ப்பது அகிலாவுக்கு இன்பமாக இருந்தது.

ரயிலுக்குத் துணை வருவது போல கூடவே வந்த தந்திக் கம்பிகளில் சில இடங்களில் கொத்தாய், பழுப்பு

திரமாய், நிறையக் கூடுகள் இருந்தன. தந்திக் கம்பியில் கூடவா பறவைகள் கூடு கட்டும்? இது கூடுதானா! இல்லை ஏதாவது காய்ந்த மரக்கிளையா? இலைகளா?

ஒரு முறை ரயில் கை காட்டி விழாததால் மெதுவாய் ஊர்ந்தபோது கிட்டத்தில் தெரிந்த அந்த அமைப்புகளை ஊன்றிப் பார்த்தாள்.

அட! தூக்கணாங் குருவிக்கூடு!

ஸ்கூலில் படிக்கும் போது டீச்சர் அந்த மாதிரி கூடுகளை வகுப்புக்குகொண்டு வந்து எப்படி அது தலைகீழாய் கூடு கட்டினாலும் உள்ளுக்குள் அறை அறையாய் தடுத்து அழகான வீட்டை உருவாக்கியுள்ளது என்று விவரித்தாரே!

இப்படிக் கம்பிகளில் கூடுகளைக் கட்டி இருக்கின்றதுகளே இவைகளுக்கு ஷாக் அடிக்காது? ஏன் பறவைகளுக்கு மட்டும் ஷாக் அடிப்பதில்லை? பள்ளியில் இது பற்றிப் படித்தது இப்போது மறந்து விட்டது.

அகிலாவுக்கு அப்பாவிடம் இதுபற்றிக் கேட்டால் தேவலை போல இருந்தது

திரும்பி உட்பக்கம் பார்த்தாள்.

அம்மா கண்களை விழித்து மேலே ஓடும் ஃபானையே வெறித்துக் கொண்டிருந்தாள்.

அப்பா கண்களை மூடிக் கொண்டு தலையை கையில் முட்டுக் கொடுத்தவாறு அமர்ந்திருந்தாலும் அவர் யோசனையில் இருக்கிறார் என்பதை வலது ஆள்காட்டி விரலால் துடையில் அவர் என்னவோ எழுதுவதிலிருந்து அவள் புரிந்து கொண்டாள்.

அது அப்பாவின் வழக்கம். மனசில் என்ன யோசிக்கிறாரோ அதில் சில வார்த்தைகளை ஆள்காட்டி விரலால் தொடையில் தன் உணர்வு இல்லாமலேயே எழுதுவார்.



தங்கம் மாமி நிம்மதியாய் காலை நீட்டிப் படுத்துத் தூங்கி விட்டாள். வெங்கடேஷ் ஏதோ புத்தகத்தில் ஆழ்ந்திருந்தான்.

'நாம் செய்யப் போகும் காரியம் சரியானதா? பெண் நாளைக்கு கண் கலங்காமல் இருப்பாளா?' என்ற ஒரே நினைப்பில் மூழ்கி இருந்த பெற்றோரிடம் பேச்சுக் கொடுத்து அவர்கள் சிந்தனையை அகிலா கலைக்க விரும்பாததால் திரும்ப ஜன்னல் பக்கம் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

இது நாழிகை சின்னக் குழந்தை போல ரயில் பிரயாணத்தை அனுபவித்தவளால் தொடர்ந்து அந்த பராக்குகளில் கவனத்தைச் செலுத்த இயலவில்லை.

போன வெள்ளிக்கிழமை கிருஷ்ணன் வந்து விட்டுப் போனதும் அவர் பேசின பேச்சுக்களை நினைத்து, பேசி சந்தோஷப்படக் கூட அப்பாவுக்கு நேரம் இல்லாததால் அம்மாவிடம் பணக் கவரை கொடுத்துவிட்டு 'என்னமோ கவலைப் பட்டாயே சாரதா, அகிலாவின் புக்ககத்தைப் பற்றி: இன்னுமா உனக்குக் கவலை? நிச்சயதார்த்தம் கூட ஆகலை அதற்குள் பெரியவர் நம்ப குடும்பத்தைத் தன் குடும்பமாய் பாவிக்கத் தொடங்கிட்டார். எல்லாம் பகவான் செயல். சரி, எனக்கு நாழியாறது, பணத்தை ஸ்வாமி அலமாரிலே வைச்சு நமஸ்காரம் பண்ணி உள்ளே எடுத்துவை,' என்றவர் பள்ளிக்கு அவசரம் அவசரமாய் கிளம்பிப் போனார்.

ஒரு வாரமாய் மனசில் இல்லாத அமைதி அன்று சாரதாவுக்குத் தோன்றியதென்னவோ உண்மைதான்.

மனசு நிறைந்து போனால் வாய் வார்த்தை எதற்கு?

வேப்ப மரத்தடிக்குப் போய் விட்டாள் அகிலா. ஜிலு ஜிலுவென்று வீசிய காற்றை அனுபவித்துக் கொண்டே மனசில் என்னவெல்லாமோ நினைத்தாள்.

அவனுடைய ஜிப்பி வந்து கத்தியபோது, அதற்கு தட்டு நிறைய சாதம் போட்டு, கிட்டத்தில் உட்கார்ந்து அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

சாப்பாடு கூட சரியாய் உள்ளே இறங்காதபடி ஒரு சந்தோஷம். பத்துப்பாத்திரங்களைத் தேய்த்து விட்டு வேலைகளை முடித்தபின் திரும்ப தோட்டத்துக்குப் போனான்.

சிகப்பாய் பூத்திருந்த அடுக்கு செம்பருத்தி ஒன்றைப் பறித்து ஒரு பக்கமாய் தலையில் சூட்டிக் கொண்டான். தொட்டியில் நிறைந்திருந்த தண்ணீரில் தன் பிம்பத்தைப் பார்த்தான். செம்பருத்தியை எடுத்து எறிந்து விட்டு மணக்கும் மருதாணி பூ கொத்தை ஒடித்து மூக்கருகில் வைத்து வாசனை பார்த்தான்.

காலையில் பறித்தது போக மிகுதியாய் மரத்திலேயே தங்கிவிட்ட பாரிஜாத பூக்கள் பொலபொலவென்று அவன் கை, கிளையில் பட்டு கொட்டின போது 'நீ இல்லாமல் நாங்கள் எப்படி இருப்போம் அகிலா?' என்று கேட்பதாக அவன் கற்பனை பண்ணினான்.

நிர்மலமான வானம், கத்தும் காக்கை, மேலே பறக்கும் விமானத்தின் சப்தம், பச்சை தோட்டம், கிணற்றடி சகதி, பாசி எல்லாம் அன்று அகிலாவுக்கு புது உற்சாகத்தைக் கொடுத்தன.

மணி இரண்டிருக்கும். தோட்டத்தில் மெய்மறந்து அமர்ந்திருந்தவனுக்கு வாசலில் கார் நிற்கும் சப்தம் கேட்டு பக்கவழியாய் வந்து எட்டிப் பார்த்தான்.

அவர் தான், கிருஷ்ணன்

திரும்ப வருவதாக அவர் சொல்லவில்லையே, என்னத்திற்காக இந்த வெயிலில் வந்திருக்கிறார்? எதையாவது சொல்ல மறந்து விட்டாரோ?



வாசல் அறை ஊஞ்சலில் படுத்துக் கிடந்த வேதமும் கார் சப்தம் கேட்டு வாசலுக்கு வந்தாள். கிருஷ்ணனைப் பார்த்துவிட்டு ஆச்சரியத்துடன் வரவேற்றாள்.

அகிலாவைக் கண்டுவிட்ட கிருஷ்ணன் 'நீயும் வாம்மா' என்று சொல்லி பங்களாவின் உள்ளே சென்று ஊஞ்சலில் அமர்ந்தார்.

"தங்கம் வெங்கடேஷ் எங்கே?"

"சினேகிதா வீட்டுக்குப் போயிட்டு வரேன்னு இப்பத்தான் போறா என்ன விஷயம்?"

"ஒண்ணுமில்லை. சும்மாத்தான் கேட்டேன். ஏம்மா அகிலா, ஆத்துலே எல்லாரும் என்ன பண்றா?"

மாமனாரிடம் நேரிடையாய் பேசினால் மரியாதைக் குறைவாக இருக்குமோ என்று நினைத்து அகிலா வாளாவிருந்தாள்.

"கேட்கிறாரே, சொல்லு அகிலா."

"அப்பா ஸ்கூல்லே இருக்கார். அம்மா தூங்கறா எழுப்பட்டுமா? அப்பா ஸ்கூல் கிட்டேதான். போய் கூட்டிண்டு வரட்டுமா?"

வேண்டாம் என்று தலையை ஆட்டினார் கிருஷ்ணன்.

"தப்பா நினைச்சுக்க வேண்டாம் மாமி. எனக்கு மாட்டுப் பெண்ணாக வரப்போற குழந்தையிடம் நாலு பேர்கள் நடுவில் என் குடும்பத்தைப் பற்றி விமர்சிக்க முடியாதில்லையா? யோசிச்சுப் பார்த்தேன். உங்காத்துல தான் இருந்துண்டு இவளை இங்கே அழைச்ச சில விஷயங்களை இவளுக்குத் தெளிவாக்கறது என் கடமைனு நினைச்சேன், வந்திருக்கேன். இவளும் நீங்களும் தான் இருக்கேள். என் மனசைத் திறந்து பேசறதுக்கு இதைவிட நல்ல சந்தர்ப்பம் உண்டா என்ன?"

இது என்ன மர்மப் பேச்சு?

புதுசாய் என்னத்தை இவர் சொல்லப் போகிறார்?

"அகிலா இப்படி வந்து உட்காரும்மா, நீ என் பெண் மாதிரி. தயங்காமல் உட்காரு."

அகிலாவுக்குத் தர்ம சங்கடமாயிருந்தது.

"மாமி நீங்களும் உட்காருங்கோ, அகிலா நீ உலகத்தை நன்னா புரிஞ்சுண்டு ஒருவித எதிர்பார்ப்புகளும் இல்லாமல் வாழற பெண்ணு. நான் இதுக்குள்ளேயே விசாரிச்சு தெரிஞ்சுண்டாச்சு. அதனாலத்தான் வெகுளியாய், நல்ல மனசோடு என் வீட்டுக்கு விளக்கேத்த வரும் உன்கிட்டே மனசு திறந்து பேசணும் போல எனக்கு இருக்கு. உன் வருங்கால குடும்பத்தைப் பற்றி உனக்கு ஓரளவுக்காவது தெரிய வேண்டாமா? உன் சூழ்நிலை வேறு, நாங்க வாழற தினுசே வேறு. இதுகளை அட்ஜஸ்ட் பண்ணிக்க நீ முயற்சி பண்ணும் போது என் குடும்பத்தாரின் சுபாவங்களும் உனக்கு தெரியறது நல்லதில்லையா? இதை உன் தாய், தகப்பன் முன்னாலேயே சொல்லி இருப்பேன். ஆனா அவா ஏற்கனவே [illegible] முன்ன பையனுக்குப் பெண்ணைக் கொடுக்கறோமேனு கலங்கிண்டு இருக்கா. ஏழையானா என்ன? பணக்காரனானா என்ன? பெத்த மனசு ஒண்ணு தானே? அதுக்காக நான் என்னம்மா சொல்லப் போறேன்னு பயந்துடாதேம்மா........"

"இரண்டு தடவை என்னைப் பார்த்ததிலிருந்து என்னைப் பற்றி உனக்குத் தெரிந்திருக்கும். நான் சேர்த்திருக்கும் பணம் பூரா என் சுய சம்பாத்தியம் இல்லை, பூர்வீக நிலச்சொத்து நிறைய உண்டு. இண்டர் படிச்ச பிறகு எனக்கு வியாபார ஆசை வந்தது, என் ப்ரெண்ட்ஸ் சில பேர்கள் ஜவுளி வியாபார குடும்பத்தைச் சேர்ந்தவா. ஜவுளி வியாபாரம் புது மாதிரியாய் செய்தால் நல்ல



வியாபாரம் நடக்கும்னு தோணித்து. மெட்ராஸ் கடைகள் இனுசில் ஆடம்பரமாய் இருக்கணும்னு ஜவுளிக் கடை ஆரம்பிச்சேன். 'நம்ம குடும்பத்தில், ஜவுளி வியாபாரம் எல்லாம் பண்ணுகிற வழக்கம் இல்லை'னு தடுத்த என் தகப்பனாரின் எதிர்ப்பையும் மீறிண்டு தான் தொடங்கினேன். பகவான் கிருபையிலே எல்லாம் நல்லபடியாக அமைஞ்சுடுத்து."

"உன் மாமியார ஜானகி இருக்காளே, அவள் ஒரு மாதிரி அகிலா. அவளைச் சொல்லிக் குத்தமில்லை. பெரிய மிராசு வீட்டுப் பெண். பணத்திலேயே பிறந்து, பணத்திலேயே புரள்கிறாள். அதனால் அவள் பேச்சு, தோரணை எல்லாமே கொஞ்சம் எடுத்து எறிஞ்சு பேசுற மாதிரி இருக்கும். நீ கூட நினைச்சிருக்கலாம், 'என்னடா, மாமனார் வந்து பெண் பார்த்தாரே தவிரவும் மாமியார் ஒரு தடைகூட வரலியே, உலகத்திலே இல்லாத வழக்கமாயிருக்கே'னு! உண்மையைச் சொல்லத்தாம்மா இப்போ, இந்த மத்தியானத்தில் உன்னைத் தேடிண்டு வந்திருக்கேன். உங்க மாமியாருக்கு இந்தக் கல்யாணத்தில் அவ்வளவாய் விருப்பம் இல்லை. அந்தஸ்துக்கு ஏற்ற மாதிரியான இடம் இல்லை என்கிற வருத்தம் அவளுக்கு......"

மாமியாருக்கு கல்யாணத்தில் சம்மதம் இல்லையா? அப்படியானால் இவர் வெளிப்படையாகச் சொல்லி இருக்கலாமே?

தலையை நிமிர்ந்து அகிலா பார்த்தாள். வேதத்துக்கும் என்னவோ போலதான் இருந்தது.

"அதுக்காக அவள் இந்தப் பெண் பிடிக்கலைனு சொல்லிட்டதாக எண்ணிக்க வேண்டாம் 'நான் வந்து என்னத்தைப் பேசப் போறேன், நீங்களே போய்விட்டு வாருங்கள். உங்களுக்கும் ஸ்ரீதரனுக்கும் சரின்னா என்

அபிப்பிராயம் எதுக்கு'னு தான் சொன்னாள். நான்தா(ன்) முதலிலேயே சொன்னேனே, ஜானகி பணத்திலே வாழ்ந்து வரும் கிணத்து தவளை. அவளைச் சொல்லி குத்தம் இல்லை. நீ யோசிக்கலாம் அகிலா. எதற்காக இதை உன்னைத் தேடிவந்து நான் சொல்லணும்னு. அடுத்த வாரம் நீங்களெல்லாம் திருச்சிக்கு வரும்போது ஜானகி பட்டும் படாமலும் இருக்கலாம். இது உனக்கோ உன் குடும்பத்தாருக்கோ மனசு வருத்தத்தை ஏற்படுத்தக் கூடாது. நீ புத்திசாலித்தனத்துடன் சமாளிச்சுடணும்னு அதற்குத்தான் முன்னேற்பாடாய் சொல்லிட்டேன்."

நிஜமாகவே வேதத்துக்கும் பிரமிப்பாய் இருந்தது. அவனுடைய மாமியார் எத்தனை ராட்சஸத்தனம் நிறைந்தவளாய் இருந்தாள்? தூரத்துக்கு தூரம் பிறந்த வீட்டுக்குப் போகும்போது அம்மாவிடம் சொல்லி அழு தால். 'ஊர் உலகத்திலெல்லாம் அப்படித் தான் நடக்கிறது. உனக்கு மட்டும் மாமியார் ஆகாசத்திலிருந்து குதிச்ச மாதிரி மாமாலம் பண்ணாதே' என்று அதட்டுவாளே!

ஏன தங்கத்தின் மாமனாரும், நாத்தனார்களும் அந்த மாதிரி தானே? நின்றால் குத்தம் உட்கார்ந்தால் குத்தம் என்று கரித்துக் கொட்டினவர்கள் தானே? கணவனுடன் தனிக் குடித்தனம் செய்தாளோ, பிழைத்தாளோ!

கிருஷ்ணன் எத்தனை நல்லவர்? வரும் முன் காப்பது போல, ஜானகிக்கு குணம் அவ்வளவாகப் போதாது என்று சொல்லி அகிலாவை இப்போதே தயார் பண்ணுகிறாரே!

கிருஷ்ணன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

"ஸ்ரீதரனைப்பற்றியும் உன்னிடம் சொல்லியே ஆ... ...னும் அம்மா, சின்ன வயசிலே மனசில், உடம்பில் பெரி...



அடி வாங்கினவன். ஒட்டுக்குள் ஒடுங்கும் நத்தையாய் இருக்கான். டாக்டர் சொன்ன மாதிரி சின்ன வயசிலேயே அவனுக்கு நானும், ஜானகியும் தேவையான கவனிப்பைக் கொடுத்திருந்தால் இன்று அவன் மனசு நிச்சயமாய் வேறு மாதிரி இருந்திருக்கலாம். நான் அப்போது பிள்ளைகள், பிள்ளைகள் என்று இருந்தேன். ஜானகிக்கு கீழ்கடை குழந்தைகள் தெரியாத்தனம் ஆக ஓரளவுக்கு எங்கள் சுயநலத்தால் தான் ஸ்ரீதரனை சக்கர நாற்காலி நோயாளி ஆக்கிட்டோமோனு இப்பத்தான் சில வருஷங்களாய் எனக்குப் புரியறது. நோ இட் ஈஸ் டூ லேட். இரண்டு மூணு வருஷமாய் ஸ்ரீதரனின் மனப்போக்கை புரிஞ்சுண்டு நான் நடந்துக்க முயற்சிப்பதால் அவனுக்கும் எனக்கும் நடுவில் ஓரளவிற்கு நல்ல சிநேகிதம் இருக்கு. அவன் தம்பி ராஜா எங்கேயோ இருக்கான். ஜானகி ஸ்ரீதரனிடம் பேசக்கூட தயங்குவா. இல்லை பயப்படுவானு சொல்லலாம். ஹரிக்கு ஸ்ரீதரனிடம் அலாதி பாசம் உண்டு. மனுஷர்களை மனுஷ்யத்தனத்தோடு பார்க்க அவன் இப்போதே கத்துண்டு இருக்கான். வித்யா சின்னப் பெண். இரண்டாம் கெட்டான். வெகுளி. நன்றாய் பேசுவாள். அவளைப்பத்தி இப்போதே வேறு என்ன சொல்ல முடியும்?"

"ஸ்ரீதரன் உணர்ச்சி வசப்படக் கூடியவன். ஒரு நிமிஷம் நன்றாய்ப் பேசுவான். மறுகணம் தன் இயலாமையை நினைத்துக் கொண்டு விட்டால் சூன்யத்தில் ஆழ்ந்து போவான். இன்றைக்கும் அவன் மனசுக்குள் குழந்தையாகத்தான் இருக்கிறான். அவன் ஒரு பச்சைக் களிமண் அகிலா. அந்தக் களி மண்ணை வீணாக்குவதோ, இல்லை நல்ல பிம்பமாய் மாற்றுவதோ அவன் மனைவியாக வரப் போகும் உன் கையில் இருக்கு. திரும்பத் திரும்பச் சொல்றேன் நானும் ஒரு தகப்பன் ஒரு பெண்

வாழ்க்கையை அனாவசியமாய் வீணாக்க மாட்டே... உன்னால் ஸ்ரீதரனை நல்ல இதுவில் குணப்படுத்தி, ... வாழ்க்கையும் வளமாக மாற்ற முடியும் என்கிற நம்பிக்... எனக்கு இருக்கு. செய்வியா அகிலா? உன்னால் முடி... அளவுக்கு முயற்சிப்பாயா?"

கிருஷ்ணனின் கண்கள் கலங்கின.

தன் குடும்ப விஷயங்களை மாட்டுப் பெண்ணி... அலசுகிறார் என்று புரிந்து கொண்ட வேதம் ஸ்ரீதரனை... பற்றி அவர் பேச்சு எடுத்த உடனேயே 'காப்பி கொண்... வரேன்' என்று சொல்லி உள்ளே போய் விட்டாள்.

அகிலாவுக்கு கிருஷ்ணனின் பேச்சும், வேண்டுகோ... நம்ப முடியாமல் இருந்தது.

அவளை, அவள் கருத்துக்களை மதித்து அ... குடும்பத்தார் இதுதான் வரை அவளிடம் என்னெ... ன்னவோ ஆலோசனைகள் செய்திருக்கிறார்கள். அப்... தெல்லாம் தோன்றாத ஒரு சிலிர்ப்பு அவளு... உண்டானது.

கலங்கும் உத்தமமான மனுஷருக்குத் தன்னா... இயன்ற இதத்தைத் தரவேண்டும் என்ற உணர்வு ப... "மனப்பூர்வமா என்னால் முடிஞ்ச அளவுக்கு அவரு... நல்ல பெண்டாட்டியாயும், உங்களுக்கும், மாமிக்... ஏத்த மாட்டுப் பெண்ணாகவும் இருப்பேன்; கவலை... படாதிங்கோ" என்றாள் மெல்ல.

வேதம் காபியும், கூடவே ஏதோ பட்சணமு... கொணர்ந்தாள்.

கைக் கடியாரத்தைப் பார்த்தார் கிருஷ்ணன். "மா... மூணாகப் போறதே; பேசினதில் ஒரு மணி நே... ஓடினது தெரியலை; நான் கிளம்பணும். ராத்திரி பத்... துக்குள்ளாவது ஊர் போய்ச் சேரணும்!"



காபியை குடித்துக்கொண்டே வேதத்தைப் பார்த்துச் சொன்னார். "என் குடும்பத்தைப் பற்றி அகிலாகிட்டே சொல்லணும் போல இருந்தது. சொல்லிட்டேன். மனசு லேசாயிடுத்து..." என்றவர் "ஸ்ரீதரனிடம் 'இவள் அழகான பெண் இல்லை. ஆனால், மனசால் ரொம்ப அழகானவள்னு நம்பறேன்'னு கூட சொல்லிட்டேன். உன் மனசில் எந்த விதமான சந்தேகமும் இல்லாமல் தெளிவாய் நீ அந்த வீட்டில் காலடி எடுத்து வைக்கணும்னு தான் இத்தனை பேச்சுக்கள் பேச வேண்டிய நிர்பந்தம் எனக்கு இருந்தது. என்ன, நான் சொல்றது புரியறதா?" என்று அகிலாவிடம் கேட்டார்.

"அகிலாவுக்குப் பெத்த தகப்பனாருக்கு மேல் நீங்க கிடைச்சிருக்கேள். அவ அதிருஷ்டசாலி தான். மாமனாரை நமஸ்காரம் பண்ணிக்கோம்மா" என்று வேதம் சொல்ல அதையே செய்தாள் அகிலா.

கிருஷ்ணன் கிளம்பி விட்டார்.

வாசல் வராந்தாவுக்குப் போனவர் கொஞ்சம் தயங்கி னார்.

'நான் உன்னிடம் சொன்னதை உன் தாய் தகப்பனா ரிடம் நீ விரும்பினால் சொல். எனக்கு ஆட்சேபணை கிடையாது. இல்லை என் குடும்ப விஷயம் என்று சோடு வைத்துக் கொண்டாலும் சரி. உன் இஷ்டம். என்ன?" கிருஷ்ணனின் சூசகமான பேச்சு அகிலாவுக்கா புரியாது?

'நாம் பேசியது நமக்குள்தான் இருக்கும்' என்பது போன்ற முகபாவத்துடன் மெல்லச் சிரித்தாள்.

''அப்புறம் இன்னும் ஒரு சமாசாரம் மாமி, நான் மகாதேவனிடம் ஐயாயிரம் கொடுத்தது கூட நமக்குள் இருந்தால் தேவலை. ஞானிக்கோ, இல்லை வேறு மூணாம் மனுஷருக்கோ தெரிய வேண்டிய அவசியம் இல்லைனு நான் நினைக்கிறேன் என்ன புரிகிறதா?"

வேதத்துக்கும், அகிலாவுக்கும் நன்றாகவே புரிந்தது.

தன் குடும்பத்தாரின் குணாதிசயங்களை வலிய அகிலாவுக்கு ஏன் உணர்த்தினார்? அவர்களின் நடத்தையால் பாதிக்கப்படக் கூடாது அவர்களைப் புரிந்துகொண்டு நடந்து தன் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதால் தானே?

மகாதேவனுக்குக் கணவர் பணம் கொடுத்திருப்பதை அறிந்தால் ஜானகி கேவலமாய் நினைக்கலாம். பணக்கார வீட்டில் எத்தனையோ இருக்கும்!

கிருஷ்ணன் புறப்பட்டுப் போனார்.

அகிலாவை உட்கார வைத்துக்கொண்டு கிருஷ்ணனின் உயர்ந்த பண்பை சிலாகித்துப் பேசின வேதம், "ஜானகி, ஸ்ரீதரன் எப்படி இருப்பானோன்னு அனாவசியமாய் பயந்து சாகாதே. மோசமான ஜன்மங்களோடு நாங்களெல்லாம் வாழ்ந்து பிழைக்கலேயா? உன் மனசு சின்ன விஷயத்தால் கூட நோகக் கூடாதுன்னு உன் மாமனார் இத்தனை பேசியிருக்கார். வீட்டுக்கு வீடு வாசல் படி. பணம் நிறைஞ்ச ஜானகிக்கு ஏழை மாட்டுப் பெண் வருவதில் குறை இருக்கத்தான் செய்யும். நீயும், நானும் அவள் ஸ்தானத்தில் இருந்தால் இந்தக் கல்யாணமே வேண்டாம்னு கூட தடுத்திருப்போம். மாமனார் குணக்குன்று. நீ கொடுத்து வைச்சவள். இதை புரிஞ்சுக்கோ. கிருஷ்ணன் இப்போ வந்து போனதை நான் தங்கத்திடம் கூட சொல்லப் போறதில்லை. நீயும் மனசிலே வைச்சுக்கோ! என்ன?" என்று புத்திமதிகள் சொன்னாள்.

கிருஷ்ணன் கேட்டுக் கொண்டபடி மகாதேவனிடம் "பணம் விஷயம் யாருக்கும் தெரிய வேண்டாம். வலிய நீங்களாக ஜானகியிடமோ, மற்றவர்களிடமோ ஒன்றும்



பேச வேண்டாம். சாரதாவிடமும் சொல்லி வையுங்கள்" என்றாள்.

ரயிலில் அமர்ந்து திருச்சிக்குப் போகும் இந்தச் சமயத்தில் போன வெள்ளிக்கிழமை நடந்த பேச்சுக்களெல்லாம் அகிலாவின் நினைவில் வந்து நின்றன.

காலையில் புறப்படும் போதுகூட "யார் எப்படி இருந்தாலும் உன் குணத்தால் நீ எப்பேர் பட்டவரிடமும் நல்லா பேர் எடுப்பாய் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. தைரியமாய் போய் வா" என்று அன்பாய் வாழ்த்தி மாமி அனுப்பினதையும் அகிலா நினைத்துப் பார்த்தாள்.

மாமி சொல்வது சரிதான். யார் மனதில் குணத்தில் குறை இல்லை?

புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து நடந்தால் போயிற்று.

இது ஒன்றும் அகிலாவுக்கு புதிது இல்லையே!

தான் அழகே இல்லாதவள் ஆயிற்றே, மாப்பிள்ளை என்ன சொல்லுவாரோ என்று பயந்ததுகூட இனி இல்லை.

தான் பார்ப்பதற்கு வெகு சாதாரணமானவள் என்பது அவருக்குத் தெரியுமே.

அன்பால் அந்தக் குடும்பத்தைக் கவர்ந்து, மாமனார் தான் சாதிக்கப் போவதாக எண்ணுவதையெல்லாம் நல்லவிதமாய் முடித்துக் காட்ட வேண்டுமே என்று முதலில் நினைப்பாக எழுந்தது. பின்பு பயமாக மாற முகத்தை ஜன்னல் பக்கத்திலிருந்து திருப்பி இரண்டு முழங்கால்களையும் குத்திட்டு அதில் பதித்துக் கொண்டாள் அகிலா.

## பதினொன்று

**வே**தம் வாசலில் பெரிசாய் மணைக் கோலம் போட்டு, செம்மண் பூசி இருந்தாள். டாக்ஸியில் இவர்கள் வந்து இறங்கியதும், அகிலாவை கோலத்தில் நிற்க வைத்து, தயாராய் கரைத்து வைத்திருந்த ஆரத்தியை தங்கத்தைக் கொண்டு சுற்றச் செய்து, "இப்போ உள்ளே வாங்கோ" என்று அழைத்தாள்.

போட் மெயில் சரியான நேரத்துக்கு வந்து விட்டது. வீட்டை இவர்கள் அடைந்தபோது மணி எட்டரை.

"கொஞ்சம் உட்கார்ந்துண்டுட்டு அப்புறமா ஆத்துக்கு போகலாம். பால் காய்ச்சி வைச்சிருக்கேன், காபியை முதல்லே சாப்பிடுங்கோ, அப்புறமா பேசலாம்" வேதம் உள்ளே போய் காபி கலக்கத் தொடங்கினாள்.

சாரதா, தங்கம், அகிலா அவளைத் தொடர்ந்து உள்ளே போனார்கள்.

அவர்களின் முகங்களை பார்க்கையிலேயே வேதத்துக்கு போன காரியம் எத்தனை திருப்தியாய், சந்தோஷமாய் முடிந்திருக்கும் என்பது புரிந்தது.

முகம் அலம்பிக் கொண்டு சமையல் அறையின் சுவரில் சாய்ந்த மாதிரி உட்கார்ந்து கொண்ட சாரதாவிடம் கேட்டாள்— "என்ன சாரதா எல்லாம் மனசு போல நடந்ததா?"

"பகவான் கிருபையிலே ஒரு குறையில்லை, மாமி. மனுஷா தங்கமானவா. இருக்கிற ஒரு குறையும் பகவான் கருணையால நிவர்த்தியாயிட்டா எங்களைவிட அதிருஷ்டசாலி யாரும் இருக்க முடியாது."



பல்லைத் தேய்த்துவிட்டு அகிலாவோடு தங்கம் உள்ளே நுழைந்தாள்.

"அம்மா! அகிலா புக்காத்தைப் பார்த்து நாங்களெல்லாம் அசந்து போயிட்டோம்மா... மாளிகை மாதிரி பங்களா, தோப்பு, தோட்டம், கொல்லையிலே நாலு கறவை மாடு, இதையெல்லாம் விடு... ஸ்ரீதரனைப் பத்திக் கேளு. படுஜோராய் இருக்கான். மரியாதையா நாலு வார்த்தை அடக்கமா, பேசினான். இதுக்கு மேலே வேற என்ன வேணும்? ஜானகி மாமிதான் ரொம்ப பேசலை. கொஞ்சம் ரிஸர்வ்டு டைப்பாக இருக்கலாமோ, என்னவோ, என்ன சாரதா மாமி, நான் சொல்றது"

சம்பந்தி அம்மாள் கலகலப்பாய் பேசவில்லை என்பது நிஜம்தான். ஆனாலும் அதை குறைவாக எப்படி எடுத்துக் கொள்வது?

"ஒவ்வொருத்தர் சுபாவம் அப்படி..." பொதுவாக சொல்லி சாரதா நிறுத்தினாள்.

கலந்த காபியை டம்ளர்களில் கொட்டினதும் 'நான் கொண்டு போய் கொடுத்துவிட்டு வரேன்' என்று அகிலா கிளம்பினாள்.

அவள் தலை மறைந்ததும் குரலை தாழ்த்திக் கொண்டு வேதம் கேட்டாள்.

"அகிலாவுக்கு திருப்தியா? மாப்பிள்ளை ஜனம் ரொம்ப பஹிரங்கமா தெரியறதா? இவளை அவாளுக்குப் பிடிச்சுதா?"

சாரதாவை முந்திக் கொண்டு தங்கமே பேசினாள்

"அகிலா இத்தனை சிரிச்ச முகமா இருந்து நான் பார்த்ததில்லையம்மா... அவளுக்கு மனசு நிறைஞ்சி இருக்குங்கறத்துக்கு வேற என்ன அத்தாட்சி வேணும்? மாப்

பிள்ளையைப் பார்த்தால் ஊனம் உள்ளவன்னு சொல் மாட்டா... ஆனா லுபாஹாலிவான்னா இருக்கான்; காலிலே உட்கார்ந்துண்டு ஒரு பேபர்லையை பே தின்டு இருந்ததால் கால் எத்தனை சூம்பி இருக்குனு களுக்குத் தெரியலை. நிச்சயதார்த்தம் போது இ ஹால்லே இருந்தான். அப்புறம் நாங்க அவனை ரொம்பப் பார்க்கலை. ஊருக்குப் புறப்பட நா அறையிலிருந்து ஹாலுக்கு வண்டியிலே வந்தா அவனுக்கும் அகிலாவைப் பிடிச்ச மாதிரித் தோணித்து... என்ன சாரதா மாமி... சரிதானே?"

சாரதா சிரித்தாள். வேறு ஒன்றும் பேசவில்லை. தான் என் மனதில் உள்ளதைச் சொல்லி விட்டா பின் நான் ஏன் இன்னொரு முறை பேச வேணும் என்பது போலச் சிரித்தாள்.

அகிலா காலி டம்ளர்களுடன் உள்ளே வந்தா அவளின் பின்னால் வால் போல பவானி, ராமு, சுரேஷ், சந்திரன் ஒவ்வொருத்தர் கையிலும் ஒ காட்பரிஸ் சாக்லெட் முழுசாய்.

"இது யார் கொடுத்தா உங்களுக்கு? முழுசு மு சாய்..." ஆச்சரியப்பட்ட வேதத்திடம் போய் நின்றா ராமு.

"பாட்டி..." என்றான் பெருமையுடன்.

முதல் நாள் திருச்சி ஸ்டேஷனில் தள்ளு வண்டி சாக்லெட் டப்பாக்களையும் காட்பரிஸ் சாக்லெட் பா களையும் பிஸ்கெட் பொட்டலங்களையும் விற்பனை பார்த்த உடன் அகிலாவுக்கு தம்பி ஞாபகம் தா வந்தது.

மில்க் சாக்லெட் என்றால் குழந்தைகளுக்கு எத்தனை ஆசை?



அருகில் அமர்ந்திருந்த அப்பாவிடம் மெல்லப் பேசினாள்.

"பத்து ரூபா பணம் இருக்குமாப்பா? செலவு அதிகம்னா வேண்டாம்."

இது நாள் வரை அகிலா அப்பாவிடம் வாயைத் திறந்து ஒத்தை ரூபாய் பணம் கேட்டவளில்லை. அவராகவே செலவுக்குப் பணம் வேணுமா என்றால் மட்டுமே, வாங்க வேண்டிய சாமான்களுக்குத் தேவையான பணத்தைச் சொல்லுவாள். இன்று அவளே கேட்டு, மகாதேவனா இல்லை என்பார்?

என்ன ஏது என்றுகூட கேட்காமல் பர்ஸிலிருந்து பணத்தை எடுத்து நீட்டினார்.

நிச்சயதார்த்துக்கு அத்யாவசியமான சாமான்கள் வாங்கினது போக, திருச்சிக்கு வர ரயில் டிக்கெட் எடுத்த பிறகு அவர் மறுபடி இந்த ஒன்றரை நாளில் பர்ஸை எடுக்கவில்லையே! எங்கே கிருஷ்ணன் விட்டார்? 'நான் செலவழிச்சால் என்ன, நீங்கள் செலவழிச்சால் என்ன?' என்றவர் ரிட்டர்ன் டிக்கெட்டைக்கூட அவரே அல்லவா எடுத்து விட்டார்.

"இது ரொம்ப ஜாஸ்தி— டிக்கெட் இத்தனை பேருக்கு நீங்க ஏன் எடுக்கணும்? பணத்தை வாங்கிக்கோங்க" என்று மகாதேவன் கேட்டுக் கொண்டபோது 'இருக்கட்டும், மொத்தமாய் அப்புறம் கணக்குப் பார்த்து வாங்கிக்கறேன்!' என்று சிரித்தவரிடம் மேற்கொண்டு என்ன பேச இயலும்?

நாலு காட்பரிஸ் சாக்லெட் பார் வாங்கினாள் அகிலா. அவள் தின்பதற்காகத்தான் வாங்குகிறாள் என்றே மகாதேவன் எண்ணி இருந்ததால் அவள் அவைகளைப் பத்திரமாய்ச் சுற்றி அம்மாவின் கைப் பையில் வைத்த போது "யாருக்கும்மா?" என்றார்.

''குழந்தைகளுக்கப்பா... வெறும் கையோட போய் இறங்காமல், இதைக் கொடுத்தால் சந்தோஷப் படுவானே!''

''வெறுங்கையோடா போகிறோம்; உன் மாமனார் தான் பெட்டி கொள்ளாம புதுத் துணி எடுத்துக் கொடுத்திருக்கிறாரே!''

'ராமுவுக்கு ரொம்ப நாளா காட்பரீஸ் சாப்பிடணும்னு ஆசை உண்டுப்பா... அதனாலேதான் வாங்கினேன்' என்று சொன்னால் அது அப்பாவின் இயலாமையைக் குத்திக் காட்டுவதாக இருக்குமோ என அஞ்சி, அகிலா எதுவும் பேசாமல் இருந்து விட்டாள்.

இப்போது தம்பி கையில் முழுசாய் காட்பரிஸை பார்த்த போது அவளுக்கு ரொம்ப சந்தோஷமாய் இருந்தது. பையிலிருந்து எடுத்து அதை நீட்டியபோது அவன் குண்டு கண்கள் எப்படி விரிந்து போயின?

''யாருக்குக்கா?''

''உங்களுக்குத் தான்டா... ஆளுக்கு ஒண்ணு?

''முழுசாவா? ஆளுக்கு ஒண்ணா? ஹை... தாங்க்ஸ்க்கா... சாக்லெட்டை கையில் வாங்கிக் கொண்டு பூனைக் குட்டியைத் தடவுவதுபோல அதைத் தடவிக் கொடுத்தான். பூவை முகர்ந்து பார்ப்பதுபோல் மூக்கிடம் கொண்டு சென்று அதன் வாசனையை முகர்ந்தான்.

அல்ப சமாச்சாரம்தான் என்றாலும் அதன் மூலம் ராமுவுக்குத் தான் கொடுத்துள்ள மகிழ்ச்சியைப் பார்க்கும்போது அகிலாவுக்கு மனசு நிறைந்து போனது.

காபி சாப்பிட்டானதும் எல்லாரும் மீண்டும் கூடத்துக்கு வந்தார்கள்.



''என்ன மாமா, சுப காரியம் ரொம்ப தடபுடலாய் நடந்ததுபோல இருக்கே, வீணா பயந்துண்டு இருந்தேளே, இப்ப என்ன சொல்றேள்?''

கேள்வி கேட்ட வேதா மாமியைப் பரவசத்துடன் பார்த்தார் மகாதேவன்.

''அந்த பகவான் கிருபையும், உங்க மாதிரி நல்ல மனுஷாளோட ஆசீர்வாதமும் இருக்கறதனாலே, எல்லாம் அமோகமா நடந்தது.''

''அகிலா குணத்துக்கு நல்ல இடம் வந்திருக்கு. அதை விட்டுட்டு எங்களுக்கு ஏன் வீணாப் பெருமையைக் கொடுக்கறேள்'' என்று வேதம் ''சரி... சரி... போய் இறங்கினது லேந்து விவரமாய்ச் சொல்லுங்கோ'' என்றாள்.

கூடத்தில் அவரவர் விஸ்ராந்தியாய் உட்கார்ந்து கொண்டார்கள்.

''ஸ்டேஷனுக்கு கிருஷ்ண மாமாவே காரோடு வந்திருந்தார்மா... ஆத்துக்குப் போறச்சே மணி கிட்டத்தட்ட எட்டாயிடுத்து... அடேயப்பா, வீடுனா அதுதான்ம்மா வீடு... நம்பாத்தை கடவாய் பல்லிலே அடக்கிண்டுடும்; அத்தனை பெரிசு...''

தங்கம் ஆர்வத்துடன் தங்கள் பயண விவரத்தைத் தொடங்கினாள்.

அகிலா எழுந்துபோய் ஜன்னலண்டை நின்று கொண்டாள்.

காற்று இதமாய் வீசியது. தீப்பந்தென பூத்திருந்த சிகப்பு விருட்சி பூங்கொத்துக்கள் ஜன்னலருகில் சிரித்து ஆடின.

கையை நீட்டி அவைகளைத் தடவினாள் அகிலா. மனசு ரொம்ப சந்தோஷமாய் இருந்தது.

திருச்சியில் தான் வாழப்போகும் வீடு இத்தனை பிரும்மாண்டமாய் இருக்கும் என்று அவள் நினைக்கவேயில்லை. சலவைக்கற்களும், தேக்குமரத் தூண்களுமான அந்த காலத்துக் கோட்டை.

எத்தனை பெரிய தோட்டம்! எத்தனை ரக மல்லிச் செடிகள், ரோஜா செடிகள், மனோரஞ்சித புதர் கூட புஷ்ஷென்று இருந்ததே! வெடுவெடுவென்று உயரமாய் ஆயிரமாயிரம் பூக்களை சுமந்து கொண்டு ஒரு நாகலிங்க மரம். காலையில் அவள் நாத்தனார் வித்யா, வீடு, தோட்டத்தைச் சுற்றிக் காட்டியபோது பார்த்தாளே!

இரவு அவர்கள் போய் வீட்டில் இறங்கியதும் முதலில் வெளியில் வந்தவள் வித்யா தான்.

இவள் யார் ஜாடை?

அடுத்த நிமிஷத்தில் புரிந்து போனது.

சற்றே பூசின சரீரம், சிகப்பு நிறம், பக்கப் பதிவு இருந்த இரட்டை பேட்டு பட்டுப் புடவை மடிசார் கட்டு, ஜொலிக்கும் வைரத் தோடு, பேசரிகள், அட்டிகை, கையில் எட்டு தங்க வளையல்கள். அதில் சிகப்பு கல்வளை கூட இருந்ததோ? பெரிய பிச்சோடா. வளைவாய் மல்லிகைச் சரம், கால் விரல்களில் வண்டிச் சகடம் மெட்டிகள். இடுப்பில் குலுங்கும் சாவிக் கொத்து நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு. ஆளை ஊடுருவிப் பார்க்கும் திட்சண்யமான பார்வை.

ஒரு மகாராணி இப்படித்தான் இருப்பாளா? அகிலா நிஜமாய் பயந்து போனாள்.

கிருஷ்ணன் ஒவ்வொருவராய் அறிமுகம் செய்து வைத்தார். "இதுதான் உன் மாட்டுப் பெண் ஜானகி" என்று கடைசியாய் சொன்ன மாத்திரத்தில் மெள்ள அருகில் சென்று மாமியாரையும் மற்ற பெரியவர்களையும் நமஸ்கரித்தாள் அகிலா.



"தீர்க்க சுமங்கலியாய் இரும்மா" என்று வாழ்த்திய பின், "எல்லோரும் வாங்கோ" என்று பொதுவாய் ஜானகி அழைத்தாள்.

இரவு சாப்பாடு ஆனதும் சுருக்கப் படுத்து விட்டார்கள். மறுநாள் நல்ல நாளாய் இருந்ததால் பெண்ணும், பிள்ளையும் அப்போதே பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி விட்டார் கிருஷ்ணன்.

மறுநாளும் ஜானகி அத்தியாவசியமான விஷயங்களைக் குறித்து சம்பாஷித்தாளே தவிரவும், வலிய இவர்களிடம் வந்து ஏதும் பேசவில்லை.

அப்படி இருப்பது சிலர் சுபாவமாதலால் நல்ல வேளையாய் யாருக்கும் ஜானகியைத் தப்பாய் எடுத்துக் கொள்ளத் தோன்றவில்லை.

காலையில் குளித்து, மாமனார் வாங்கியளித்த மஸ்டர்டு பட்டுப்புடவை உடுத்தி, தலை நிறைய பூவோடு நின்றிருந்த அகிலாவை அழைத்து ஸ்ரீதரனுக்கு அறிமுகம் செய்வித்தார் கிருஷ்ணன்.

குனிந்து ஸ்ரீதரனை நமஸ்கரித்து எழுந்தாள் அகிலா. ஒரே வினாடி இரண்டு பேர் கண்களும் சந்தித்துக் கொண்டன.

எத்தனை அழகான முகம்! எத்தனை கம்பீரமான முகம்! எத்தனை ஆண்மையான முகம்! இந்த முகத்துக்குச் சரிசமனாய் பக்கத்தில் நிற்க என் முகத்துக்கு யோக்யதை உண்டா?

மனசு பேதலித்த அந்தக் கணத்தில் அவளுக்கு மட்டுமே புரிகிற மாதிரி அந்த கண்கள், அந்த மெலிய உதடுகள் சற்றே புன்னகைத்ததைப் பார்த்தபோது அகிலாவுக்கு சிலிர்த்துப் போனது.

அவருக்கு என்னைப் பிடித்து விட்டதா? இல்லை எதற்காக இந்தப் புன்னகை? திரும்பத் திரும்ப மனசுக்குள் நிறுத்தி வைத்து ரசிக்கும் புன்னகை. மனசு சங்கடப் படாதே என்று ஆதரவு தரும் புன்னகை.

இப்போது ஜன்னலிடம் நின்று ஸ்ரீதரனை நினைக்கையில், மறுபடியும் அப்படி புன்னகைக்கும் அழகைப் பார்க்க வேண்டும் போல அகிலாவுக்கு இருந்தது.

"புடவைகளைப் பார்க்கறாயாம்மா... ஒரு சின்ன துணிக்கடையே நம்பாத்துக்கு வந்திருக்கு..."

"அகிலா, இப்படி வா...புடவைகளைப் பிரிக்க உதவி பண்ணு..." தங்கம் விவரங்களைச் சொல்லி முடித்து விட்டாள் போலிருக்கிறது. பெட்டிகளைத் திறக்க ஏதுவாய் உட்கார்ந்து கொண்டு அகிலாவுக்கு குரல் கொடுத்தாள்.

"நான் ஆத்துக்குப் போய் குளிச்சுட்டு சமையல் ஏற்பாட்டைப் பண்ணட்டுமா?" சாரதா கேட்டாள்.

"ஒண்ணும் வேண்டாம். பேசாமல் உட்கார். நான் குக்கர்லே பருப்பு போட்டு, காய் வேக விட்டாச்சு. எல்லாரும் இங்கேயே இன்னிக்கு சாப்பிடலாம். என்ன மாமா, உங்களுக்கு ஸ்கூல் உண்டா?"

"ஸ்கூல் உண்டு; ஆனால் நான் இன்னிக்கும் லீவு தான்" என்று மகாதேவன் சொன்னதும், "அப்புறம் என்ன; ஆற அமர பேசி, துணிகளைப் பார்த்தப்புறம் மெல்ல குளிச்சு சாப்பிட்டாப் போச்சு" என்று வேதம் முடிவாகப் பேசி விட்டாள்.

அகிலா உள்ளேபோய் பாய்கொண்டு வந்து விரித்தாள்.

அகிலாவுக்கு நாலு ஆறு கஜம் பட்டுப் புடவைகள், ஒரு ஒன்பது கஜ சிகப்பு கூரை புடவை, நாலு நைலான், நாலு ஹாண்ட் ஹாம் ப்ரிண்டட் புடவைகள், அனைத்துக்கும் தேவையான ரவிக்கைத் துண்டுகள்.



சாரதாவுக்கு ஒன்பது கஜ பட்டுப்புடவை, மகாதேவனுக்கு கம்பி ஜரிகை போட்ட பத்தாறு; பவானிக்கு பட்டுப் பாவாடை சட்டை, ராஜுவுக்கு டெரிகாட் நிக்கர், சட்டைக்குத் துணி.

இவை தவிர தங்கத்துக்கு பட்டுப் புடவை, ரவிக்கை, வெங்கடேசுக்கு ஜரிகை வேஷ்டி துண்டு.

போதுமா?

"ஏ, அப்பா! ஜவுளிக்கடை பில்லே நாலாயிரத்தைத் தாண்டிடும் போல இருக்கே...அகிலாவுக்கும், மத்தவாளுக்கும் எடுக்க வேண்டியது நியாயம் தான். ஆனால் தங்கத்துக்கு பட்டுப்புடவை எதுக்கு? வெறும் ரவிக்கை தான் போதாதோ? என்ன மாமா நீங்க?" வேதத்தின் கேள்வி நியாயமானது தான்; இத்தனை துணிமணிகள் மகாதேவனின் சக்திக்கு ரொம்ப அதிகம் தானே?

அவர் என்ன பண்ணுவார்? கிருஷ்ணன் அவரை எங்கே வாயைத் திறக்க விட்டார்?

நிச்சயதார்த்தம் நடந்து சாப்பாடு ஆகி சற்று படுத்து எழுந்ததும் 'நான் இவாளை அழைச்சுண்டு கடை வரைக்கும் போய்விட்டு வந்துடறேன் ஜானகி' என்று கிளம்பினார்.

இரண்டு மாடிகளை அடைத்துக் கொண்டு ப்ரும்மாண்டமாய் மலைக்கோட்டையின் அடிவாரத்தில் இருந்த பெரிய கடைத் தெருவில் கண்ணைப் பறிக்கும் தினுசில் நின்றிருந்தது கிருஷ்ணன் ஸில்க் ஹவுஸ்.

ஏ. ஸி. செய்யப்பட்ட அந்தக் கட்டிடத்துக்குள் நுழைந்ததுமே அவர்கள் பிரமித்துப் போனார்கள்.

கடையைச் சுற்றிக் காட்டினார் கிருஷ்ணன்.

எத்தனை ஆட்கள்? எத்தனை பெரிய கடை! எண்ண முடியாத தினுசில் எத்தனை துணி ரகங்கள்!

இரண்டு பக்கமும் தெருவை ஒட்டி நீளமான ஷோ கேஸ்கள். அவற்றில் விதவிதமாய் உடுத்தி சாய்ந்து தலையைத் திருப்பி, கையை நீட்டி, காலை மடக்கி, கண்களை விரித்து தெருவில் போவோரைக் கவர்ந்து இழுக்கும் மாடல் பொம்மைகள். பெண் பொம்மைகள் மட்டும் அல்ல, லுங்கி உடுத்திக் கொண்டு சில்க் சட்டை அணிந்து கொண்டு, உயர்ந்த வேஷ்டி ஜிப்பா அணிந்து கொண்டு, ஒய்யாரப் பெண்களை அணைத்துக் கொண்டு எத்தனை ஆண் பொம்மைகள்?

சென்னையில் மௌண்ட் ரோட் கடைகளில் இத்தகைய அலங்காரத்தை அகிலா பார்த்திருக்கிறாள். அவைகளைப் போலவே தன் மாமனாரின் கடையும் வெகு நேர்த்தியாக இருக்கும் என்று எதிர்பார்க்காததால் பிரமிப்பு அதிகமாய் இருந்தது.

'இது காஞ்சிபுரம் புடவை செக்ஷன், இது பனாரஸ், ஜரிகை இல்லாத ப்ரிண்டட் சாரிஸ்... மென்ஸ் வேர் திஸ் ஸைட்... ஸ்கார்ப், ட்ரஸ் மெடிரியல் ஃபார் பாரினர்ஸ் ஆர் கெப்ட் ஹியர்... மாடி பூராவும் நைலான், மில் குட்ஸ் இந்தப் பக்கம் கைத்தறி செக்ஷன்...'

இத்தனை ஏற்பாடாய் ஒரு துணிக் கடையை நிர்வகிக்க முடியுமா என்ன?

கிருஷ்ணனுடன் இவர்கள் போகுமிடமெல்லாம் ஆட்கள் எழுந்து நின்று மரியாதையாய் வணக்கம் தெரிவித்தார்கள்.

கடையைப் பார்த்து முடிந்தபின் மாடியில் தனியாய் இருந்த கிருஷ்ணனின் அறைக்குப் போனார்கள். காபி, பிஸ்கட் வந்தது.



ஏற்கனவே கிருஷ்ணன் யோசித்து எடுத்து தனியாய் வைத்திருந்த துணிகளை இவர்களிடம் காட்டி ''உங்களுக்குப் பிடிக்கிறதானு பாருங்கோ, இல்லை என்றால் மாத்திக்கலாம்'' என்றார். கடை சிப்பந்தி அந்தத் துணிகளைப் பிரித்துக் காட்ட இத்தனை உசத்தியான துணிமணிகளை எடுக்க தனக்குத் தகுதி உண்டா என்று மருகினார் மகாதேவன்.

புரிந்து கொண்டவர் போல கிருஷ்ணன் பேசினார்.

''மாட்டுப் பெண்ணுக்கு கூரை, திருமாங்கல்யத் தோடு கூட நாலு புடவைகளாவது எடுப்பது எங்க வழக்கம். அதன்படி தான் எடுத்திருக்கிறேன். சம்பந்தி மரியாதைக்கு உங்களுக்கும், மாமிக்கும். நம்ம வெங்கடேஷ் எங்காத்து மனுஷா மாதிரி அதனாலே அவாளுக்கு என் பரிசு இது; வேணுங்கறதுதான் எடுத்திருக்கேன். உயர் ஒண்ணும் இல்லை. கலர், டிசைன் பிடிக்கிறதா பாருங்கோ...''

மகாதேவன் என்னவென்று சொல்லுவார்?

தன் ஏழ்மையை கிருஷ்ணன் குத்திக் காட்டுவதற்காக இப்படிச் செய்யவில்லை. நிஜமான அன்பாலேயே அகிலா தனக்குப் பிடித்த மருமகளாய் வரப் போகும் சந்தோஷத்தாலேயே பேசுகிறார் என்பது புரிந்ததால் யோசித்து, தன் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசினார்.

''நீங்க ரொம்பப் பெரியவர்...நீங்க எடுத்த முடிவுக்கு எதிரா நான் பேசறதா நினைக்க வேண்டாம். உங்க மாட்டுப் பெண்ணுக்கு நீங்க எடுத்துக் கொடுக்கறதை தடுக்க நான் யாரு? ஆனால் எனக்கு, என் சம்சாரத்துக்கு, ராமு, பவானிக்கு எடுத்த துணிகளுக்கு நான் பணம் கொடுக்கறதுதான் நியாயம்; தயவு செய்து மறுக்கா

தீங்கோ" கிருஷ்ணன் மகாதேவனின் பேச்சைக் காது வாங்க மறுத்து விட்டார்.

"எதுக்காக இப்படி நீங்க பிரிச்சுப் பேசறேள்? சம்பந்தி மரியாதைக்கு புடவை வேஷ்டி எடுக்கறது சம்பிரதாயம்தானே? பவானி ராமுவுக்கும், கொடுக்க எனக்கு பாத்தியதை இல்லையா? இல்லைனு சொல்லி விடுங்கோ நான் நீங்க கொடுக்கற பணத்தை வாங்கிக்கறேன்... என்ன?"

இப்படித் தர்க்கம் செய்யும் மனிதரை மகாதேவன் என்ன சொல்லிச் சமாளிப்பார்?

சாரதா அவரைத் தனியே அழைத்தாள். "அவாளுக்கு நாம்ப பதில் சம்பந்தி மரியாதை செய்ய வேண்டாமா? புடவை, வேஷ்டி எடுத்துடுங்கோ."

கிருஷ்ணனிடம் தன் மனைவியின் விருப்பத்தை சொன்னார் மகாதேவன்.

"ஆஹா, அதுக்கென்ன எடுங்கோளேன். நான் தடுக்கமாட்டேன்!"

அறுநூறு ரூபாயில் இரட்டைப் பட்டை ஜரிகை போட்ட பச்சை பட்டுப் புடவையை மாமிக்கும் கிருஷ்ணனுக்கு ஏத்த தினுசில் வேஷ்டி துண்டு எடுத்து பணத்தைக் கொடுத்தபிறகே மகாதேவனுக்குத் திருப்தியானது.

"உங்க மூத்த பெண், பிள்ளைக்குத் துணி பார்க்கறேளா?"

வேண்டாம் என்று மறுத்துவிட்டார் மகாதேவன். லலிதாவுக்கு பணமாகக் கொடுத்து விடலாம்; இஷ்டப்படி வாங்கிக் கொள்ளட்டும். ஸ்வாமிக்கா? அகி



கல்யாணத்துக்காகப் புதுத்துணியா? மனதில் இடம் இருந்தால்தானே அவளைப்பற்றி நினைக்கத் தோன்றும்?

வண்டி நிறைய துணி மூட்டைகளும், வாய் நிறைய களிப்புமாய் அவர்கள் கடையை விட்டு வெளியே வந்து, காரில் திருச்சியை ஒரு சுற்று சுற்றிவிட்டு வீட்டை அடையும் போது இருட்டத் தொடங்கிவிட்டது.

சற்றே இருள் சூழ்ந்த நிலையில் மலைக்கோட்டை விநாயகர் கோவிலின் விளக்குகள் பளிச்சென்று எரியத் தொடங்கின. ஆனை முகத்தோனின் தும்பிக்கை வடிவில் அமைந்திருந்த விளக்குகளின் வடிவம் நம்பிக்கையோடு வந்தவர்களைக் கைவிடேன் என்று தன்னிடம் சொல்வதாகக் கற்பனை செய்த அகிலாவுக்கு சந்தோஷம் பீறிட்டுக் கொண்டு எழுந்தது.

## பன்னிரண்டு

அகிலா குளித்துக் கொண்டிருந்தாள்.

கழுத்தில் தொங்கும் திருமாங்கல்ய சங்கிலியை, மஞ்சள் கயிறை எதேச்சையாய் பார்க்க நேரும் போதெல்லாம் தனக்கு கல்யாணம் ஆகிவிட்டது என்ற வியப்பு அவளுக்கு எழுந்து கொண்டே இருந்தது. இந்த இரண்டு நாட்களில் குளிக்கும்போது, உடை மாற்றும் போது கையில் அவைகள் பட்டபோது ஒரு நிமிஷம் நின்று நிதானித்து அந்த உணர்ச்சியை அனுபவிக்க வேண்டும் போலவே இருந்தது. பாதத்தைத் தரையில் அழுந்த வைத்து நடக்கையில் சின்னதாய் நாதம் எழுவது அவள் கால் மெட்டிகளிலிருந்தா? காலை புடவையை விட்டு விலக்கி பல முறைகள் மெட்டிகளை உற்று

நோக்கினாள். காதுக்கும் கழுத்துக்கும் ஒரு தனி அழகு வந்துவிட்டதா என்ன?

இது என்ன மாயம்?

மனசு சந்தோஷத்தில் மூழ்கிப்போனால் காது, கழுத்து, முக அமைப்புகள் கூடவா மாறிப் போகும்?

வீட்டில் அறைக்கு அறை இருந்த பெரிய நிலைக் கண்ணாடிகளில் தன்னை இந்த இரண்டு நாட்களாய்க் காண நேரும் போதெல்லாம் அகிலாவுக்குத் தனி இன்பம் எழுந்தது.

நிச்சயதார்த்தத்திலிருந்து கல்யாணம் வரை இருந்த ஒரு மாச இடைவெளியில் அம்மா இவளை உட்கார வைத்து பாலும், நெய்யுமாய் ஊட்டியதெல்லாம் வீணாகப் போகவில்லைதான்.

திருமணம் நிச்சயமாகி ஊர் திரும்பியதிலிருந்தே அப்பாவும், அம்மாவும் புதுப்பிறவி எடுத்த மாதிரித்தானே இருந்தார்கள்

அப்பாவுக்குக் கடனெல்லாம், வேதா மாமியின் கடன், பள்ளி கடன் எல்லாம் அடைந்து விட்ட திருப்தி; ரொம்ப செலவேயில்லாமல் நல்லவிதமாய் கல்யாணம் நடக்கப்போகும் திருப்தி. கிருஷ்ணனின் குணம் குறித்து மனசில் எழுந்த திருப்தி; திருச்சியில் கண்ணியமான அழகான மாப்பிள்ளையைப் பார்த்த திருப்தி. எல்லாவற்றிற்கும் மேலாய் அகிலாவிடம் வெளிப்படையாய்த் தெரிந்த மகிழ்ச்சி தந்த திருப்தி.

அம்மாவுக்கும் அப்பாவின் கவலை இல்லாத முகத்தைப் பல வருஷங்களுக்குப் பிறகு பார்த்த சந்தோஷம்; தான் பயந்தது வீண்; அகிலா ராணி மாதிரி வாழப் போகிறாள் என்ற சந்தோஷம், வயசு வந்த பெண், சமர்த்துப் பெண், குணவதியான பெண், இவளை



எப்படி கரை சேர்ப்போம் என்று அடிவயிற்றில் சதா குமுறிய துக்கம் மறைந்த சந்தோஷம்.

பிறகு என்ன?

திருச்சியிலிருந்து திரும்பிய மறுநாளே மகாதேவனும் சாரதாவும் தீர்மானித்து விட்டார்கள். கல்யாணத்துக்கு இன்னும் சரியாய் ஒருமாசம் இருக்கிறது. அதற்குள் அகிலாவை இருந்த இடத்தில் உட்கார வைத்து, விதவிதமாய் சமைத்துப் போட்டு, பால், தயிர், வெண்ணை என்று வாங்கிக் கொடுத்து உடம்பை நன்றாய் தேற்றுவது தான் தங்களின் தலையாய கடமை என்று தீர்மானித்து அதையே மகளிடம் சொல்லவும் செய்தார்கள்.

"இதோ பாரு அகிலா...உங்கப்பாவும், நானும் ஒரு விஷயம் முடிவு செய்திருக்கோம். நாளையிலிருந்து நீ வழக்கம்போல வீட்டுக்காரியங்களைப் பண்ணக் கூடாது. எனக்கு உடம்பு நன்னா தேவலை. சித்த வேலை பண்ணு. வேண்டாங்கலை! ஆனால் முன்னே போல நாய் மாதிரி உழைக்காமல், பதவிசா இருந்து உன் உடம்பை தேத்திக்கிற வழியைப் பார்க்கணும். பால்காரன் கிட்டே சொல்லி நாளையிலிருந்து காத்தால ஒரு லிட்டர், சாயங்காலம் ஒரு லிட்டர் பால் கூட வாங்கப் போறேன். வேதா மாமியாத்து நாயியை இனி நம்ப வீட்டு வேலைகளைச் செய்யச் சொல்லலாம்னு இருக்கேன். துணி துவைக்க, பத்து தேய்க்க, ஒரு வேளை வீட்டைப் பெருக்கி துடைக்க மாசம் பதினைஞ்சு ரூபா கொடுத்தாப் போதும்னு மாமி சொன்னா... அதனாலே நீ சௌகரியமா எல்லா ஆத்துக் குழந்தைகள் மாதிரி உன் வயசுக்கேத்த ஆசா பாசங்களுடன் அக்கடானு ஒரு மாசம் இருக்கணும், நாங்க அதைப் பார்க்கணும்...என்னம்மா?"

சாரதா உணர்ச்சி வசப்பட்டதில் குரல் கம்மி. கண்களில் ஈரம் கசிந்து விட்டது.

இந்த அம்மாவின் சின்ன இதயத்துக்குள் எத்தனை ஆசைகள்?

''எதுக்காகம்மா இத்தனை ஆர்ப்பாட்டம்? நான் இருக்கிறவரைக்கும் பழையபடியே இருந்துடறேனே! எதுக்கும்மா வீண் செலவெல்லாம்? இப்படி என்னை உட்காரவைச்சு செய்தால்தான் கல்யாணப்பெண் களை வருமா என்ன?"

வாசலில் உட்கார்ந்திருந்த மகாதேவன் மனைவியின் உதவிக்கு வந்தார்.

''ஏதோ எங்க மனசுக்கு ஒரு அல்ப திருப்தி இப்படி செய்யறதுனாலே... அதைத் தடுக்காதே அகிலா... இனி எங்களுக்கு என்னம்மா செலவு? கடனெல்லாம் தீர்ந்து போச்சு, மாசம் வரப்போற அறுநூறு சில்லறையை வைச்சிண்டு ஜாம் ஜாம்னு நாங்க குடித்தனம் பண்ண மாட்டோமா?''

''என்ன விவாதம் நடக்கிறது?'' என்று கேட்ட வண்ணம் வேதமும், தங்கமும் உள்ளே நுழைந்தனர்.

''வாங்கோ மாமி, வா தங்கம், கல்யாணப் பெண்ணா லட்சணமாய் இந்த ஒரு மாசமும் நிம்மதியா இருந்து உடம்பைப் பார்த்துக்கோனு சொல்லிண்டு இருக்காம், உங்ககிட்டே நேத்து சொன்னேனே, அந்த விஷயம் தான்.''

அகிலா விரித்த பாயில் அவர்கள் உட்கார்ந்து கொண்டார்கள். கையை நீட்டி ஓரமாய் நின்ற அகிலாவை தன் அருகில் இழுத்து அமர்த்திக் கொண்டாள் வேதம்.

''அம்மா ஆசைப்படறதும் நியாம்தானே அகிலா... நீ உன் புக்ககத்தில் ராஜாத்தியாட்டம் இருந்தாலும் தன் சக்திக்கு ஏத்த வகையில் உன்னைக் கொஞ்ச நாளாவது



குழந்தையாய் சீராட்டணும்கறது இவளின் நியாய மான ஆசைதானே?"

''அது இல்லே மாமி... வந்து...''

''வந்து, போய்... ஒண்ணும் பேசக்கூடாது. இனிமே ஒரு மாசத்துக்கு நாங்க சொல்றபடிதான் நீ கேட்கணும். தினமும் கார்த்தாலை தூங்கி எழுந்திருக்கணும். ஒரு நாளைக்கு இரண்டு டம்ளர் பால் உபரியாய் சாப் பிடணும். ஒரு சிப்பம் குழம்பு சாதம், ரசம் சாதம், தயிர்சாதம் உள்ளே போயாகணும். வெள்ளி, செவ்வாய் எண்ணெய் தேய்ச்சுக் குளிரக் குளிர குளிக்கணும்... அப்புறம்...'' தங்கம் அதிகாரத்துடன் பேசி விட்ட போடவும் அனைவருக்கும் சிரிப்பு வந்து விட்டது.

''ஆரம் டிவிட்ஸின் பேசறதா? ஜமாய் தங்கம்'' வேதா மாமி உற்சாகமாய் தூண்டிவிட்டாள்.

''இதுமட்டுமில்லேம்மா. தினம் கொஞ்சம் வெண்ணையை எடுத்து முகத்திலே பூசிண்டு அரை மணி ஊறின பிறகுதான் அகிலா குளிக்கப் போகணும்..."

''ஆச்சா, இன்னும் ஏதாவது பாக்கி இருக்கா? என்னக்கா நீங்க? எத்தனை முயற்சி பண்ணாலும் என் மூஞ்சி இருக்கிறது மாறவா போறது?"

"ஒரே மாசத்திலே உன்னை மாத்திக் காட்ட றேன் பாரு. இவர் லீவு முடிஞ்சு ஊருக்குப் போயிட் டாலும் நான் இங்கே இருந்து உன் கல்யாணம் நடந்த பிறகு தானே புறப்படுவேன்! தினமும் கிட்டேயிருந்து நான் கொடுக்கிற ட்ரீட்மெண்டிலே உனைப் பார்க் கிறவா 'இது பழைய அகிலாவா'ன்னு ஆச்சரியப்படும் படி செய்யறேன் பாரேன்..."

வாஸ்தவம்தான். தங்கம் சொன்னபடி செய்து காண் பிக்கவே செய்தான்.

நல்ல போஷாக்கான ஆகாரம், இதமான சூழ்நிலை, நிறைந்த மனசு, அகிலா மாறித்தான் போனாள்.

உடம்பில் மொழுமொழுப்பு. கண்களில் பிரகாசம், சதையின் நிறத்தில் சற்றே வெளுப்பு.

''மன்னி, ஆச்சா?'' வித்யாவின் குரல் கதவுக்கு அந்தப் பக்கம் கேட்கவும் தன் நினைப்புகளிலிருந்து திடுக்கிட்டு மீண்டாள் அகிலா.

"இதோ வந்துட்டேன்" பரபரவென்று இரண்டு சொம்பாய் ஜலத்தை விட்டுக் கொண்டு எழுந்து துடைத்து, உடை உடுத்திக் கொண்டாள்.

பீங்கான் டைல்ஸ் பொருத்தின பாத்ரூமில் ஜாக்கிரதையாய் நடக்க வேண்டி இருந்தது. அலட்சியமாய் காலை வைத்தால் வாரிவிட்டு விடும் போன்ற வழவழப்பு.

வெளியில் வந்தாள்.

''ஸாரி வித்யா, நாழியாயிடுத்தா?''

''இல்லே மன்னி, ஹரிண்ணா 'மன்னி எங்கே'ன்னான்; குளிக்கறான்னேன். சீக்கிரமா புறப்படுங்கோ. ட்ருச்சியை ஒரு ரவுண்டு அடிச்சிட்டு வரலாம்ன்னான். அதான் கூப்பிட்டேன்."

ட்ரெஸ்ஸிங் டேபிள் முன்னால் நின்று தலையை வாரி, பௌடர் பூசி, மை இட்டு, பொட்டு இட்டுக் கொண்டாள் அகிலா.

மணியைப் பார்த்தாள். மாலை ஐந்து. இந்த நேரத்தில் எங்கே ஊர் சுற்றிப் பார்க்கப் போவது? கல்யாணத்துக்கு வந்த உறவினர்கள் இன்னும் வீடு நிறைய இருக்கும் சமயத்தில் இவர்கள் போனால் நன்றாய் இருக்குமா?



''இப்போ எதுக்கும்மா வெளியே?... அம்மாவுக்கு உதவியாய் நான் இங்கேயே இருக்கேன். நீங்க போயிட்டு வாங்கோ.''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது மன்னி. ஹரிண்ணா சொல்லச் சொன்னான், சொன்னேன்'' வித்யா பாத்ரூமுக்குள் புகுந்து கதவை சாத்திக் கொண்டாள்.

ஹரியை முதல் முதலாய் சந்தித்தது நினைவுக்கு வர தனக்குள் தானே புன்னகைத்துக் கொண்டாள் அகிலா.

போன மாசம் நிச்சயதார்த்தம் முடிந்து ஊர் திரும்பிய அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலை மணி பத்திருக்கும்.

சாப்பாடு ஆகிவிட்டது. தாயி பத்துதேய்க்க வந்து விட்டதால் அகிலா பங்களாவுக்குப் போக முற்பட்டாள்.

வாசலில் ஒரு ஸ்கூட்டர் வந்து நிற்கும் சப்தம். ஹெல்மெட்டுடன் ஒரு இளைஞன் இறங்கினான்.

யார் இது? தெரிந்த முகமாய் இருக்கே?

அதற்குள் அவன் கேட்டைத் திறந்து, உள்ளே வந்து வாசல் வராந்தாவில் நின்று சந்திரன், சுரேஷிடம் 'மகாதேவன் வீடு இதுதானே' என்று கேட்பது கேட்டது. பசங்கள் பின் பக்கம் கை காட்டவும், ஹெல்மெட்டை அவிழ்த்துக் கொண்டே இந்தப் பாதையில் வந்தவன் அகிலாவைப் பார்த்து நின்றான்.

ஒரே ஒரு வினாடி—

கண்களும் முகமும் குப்பென்று சிரிக்க 'ஹலோ மன்னி' என்றான்.

பெத்த தாயிடம் பிள்ளை பேசுவது போன்ற ஒரு அலாதி பாசம்.

ஹரி, இதுதான் ஹரியா? எப்படி என்னைப் புரிந்து கொண்டான்?

"நீங்க தானே அகிலா? யூ ஆர் ஸர்ப்ரைஸ்ட் வேணும்னு தான் திடீர்னு வந்து அப்படி கூப்பிட்டேன். ஐ'ம் ஹரி, அப்பா உங்களைப் பத்தி சொன்ன விவரங் களிலேயிருந்து உங்களைப் புரிஞ்சுண்டேன்."

மாமியார் ஜானகியின் ஜாடையாய் நிற்கும் ஹரிக்கு இத்தனை கலகலப்பு எங்கிருந்து வந்தது?

வயசு வந்த மச்சினன் முன் நிற்கும் வெட்கம், அவன் தன்னை 'மன்னி' என்று அன்போடு அழைத்ததனால் எழுந்த சந்தோஷம் காரணமாய் மென்மையாய் சிரித்து, "வாங்கோ," என்றாள் மெல்ல.

இதற்குள் அப்பா, அம்மா, தங்கம் மாமி எல்லோரும் வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

"நான் ஹரி. கிருஷ்ணனின் மூன்றாவது பிள்ளை... காலேஜ் டூர் போயிருந்தேன். இன்னிக்கு கார்த்தாலதான் வந்தேன்..."

"வாங்கோ... வாங்கோ... உள்ளே வாங்கோ..."

மகாதேவன் அழைத்துச் செல்ல மற்றவர்கள் பின் தொடர்ந்தார்கள்.

நாற்காலியில் ஹரி உட்கார்ந்ததும் அகிலா காபி கலக்க உள்ளே போனாள்.

இதற்குள் வெங்கடேஷ்"ம் வந்து சேர்ந்தான்.

"ஹலோ ஹரி... ஐ ஹாவ் ஹேர்ட் எ குட் டீல் அபௌட் யூ" என்று சொல்லி கையை நீட்டிக் குலுக்கினான்.



"கிளாட் டு மீட் யூ. யூ மஸ்ட் பி மிஸ்டர் வெங்க டேஷ். இதுதான் தங்கம் மாமியா?... ஹலோ மாமி... ஹலோ சில்ரன்." ஹரி ரொம்ப நாளாய்ப் பழகினவன் மாதிரி ஒவ்வொருவரையும் தனித்தனியாய் பார்த்துப் பேசினான்.

"அப்பா முதல் தடவை இங்கே வந்தபோதே என் னிடம் விஷயத்தைச் சொன்னார். நிச்சயதார்த்தத்துக்கு ட்ருச்சி வந்திருக்கணும் ஆனால் முன்னாலேயே ப்ரெண்ட்ஸோட அஜந்தா, எல்லோரா போகி றதுன்னு தீர்மானம் ஆய்ட்டதாலே வர முடியலை."

அகிலா காபியை கொண்டு வந்து கொடுத்தாள். அதைப் பெற்றுக் கொண்டு "நீங்களும் உட்காருங்கோ மன்னி" என்றான்.

அவனின் ஸ்வாதீனமான 'மன்னி' என்ற அழைப்பு கூடத்தில் இருந்த அத்தனை பேர்களையும் கவர்ந்தது.

சளசளவென்று பத்து நிமிஷம் பேசிக் கொண் டிருந்து விட்டு அன்று அவன் புறப்பட்டுப் போனான். அதன் பிறகு வாரத்துக்கு கண்டிப்பாய் ஒரு முறையோ அல்லது இரண்டு முறைகளோ வந்து போனான். வலுக் கட்டாயமாய் அகிலாவை இழுத்து வைத்துப் பேசிய நாழிகையில் 'என்னை ஹரினு கூப்பிடுங்கோ, நீ சொல் லுங்கோ' என்று பிடிவாதமாய் பேசுவான்.

"அது எப்படி ஹரி? நீங்க என்ன இருந்தாலும் ஆண் பிள்ளை, வயசு வந்தவர். அகிலா உங்களை மரியாதை யில்லாமல் கூப்பிடுவது தப்பு இல்லையா?" என்ற மகா தேவனிடம் "மன்னி என் தாய்க்கு சமம் மாமா. தவிர நான் மன்னியைவிட ஒரு வயசு சின்னவன். அதனாலே என்னைப் பேர் சொல்லிக் கூப்பிடறதோ இல்லை 'நீ'ங் கறதோ தப்பேயில்லை" என்றே விவாதிப்பான்.

கிருஷ்ணனுடன் ஒருமுறை வந்தபோது இதைப் பற்றி புகார் செய்தான்.

அவர் "உன்பாடு உங்க மன்னி பாடு. என்னை இழுக்காதே ஹரி" என்று சிரித்து விட்டார்.

"மே ஐ கம் இன்?" கதவில் தாளக்காய் தட்டிவிட்டு ஹரி மெள்ள நுழைந்தான்.

"என்ன மன்னி, வித்யா ரெடியா? கிளம்பலாமா?"

"நான் ரெடி... வாங்கோ மன்னி" அகிலாவின் கையோடு தன் கையை கோர்த்துக் கொண்டு வித்யா கிளம்பினாள்.

ஹரி வித்யா இருவருமே அம்மாவின் ஜாடை, ஆனால் அப்பாவின் குணம்.

"இப்போ எதுக்கு வெளியே போகணும்? ஆத்திலே வேலை இருக்கும்?"

"என்ன வேலை மன்னி... அப்பா தான் நம்மை ஒரு ரவுண்டு அடிச்சுட்டு வரச் சொன்னார். ம்...ஸ்டார்ட்..."

கல்யாணத்துக்கு நாலு நாள் லீவில் வந்திருந்த ராஜா இன்று காலை திரும்ப ஆக்ராவுக்குப் போய் விட்டான். தூரத்து உறவுக்காரர்கள் இன்னும் சிலபேர் வீட்டில் இருந்தார்கள். விடு கொள்ளாமல் மனிதர்கள் இருக்கையில் கல்யாணமான இரண்டு நாளில் வெளியே கிளம்புவதற்கு அகிலாவுக்குக் கூச்சமாய் இருந்தது.

கூடத்துக்கு வந்தார்கள்.

கிருஷ்ணனும், ஜானகியும் சோபாவில் அமர்ந்திருந்தனர்.

"என்ன கிளம்பியாச்சா?" என்ற மாமனாரை நிமிர்ந்து பார்த்துவிட்டு மாமியாரின் பின் சென்று நின்று கொண்டாள் அகிலா.

"நாழியாறது மன்னி..." வித்யா கால் மாறி மாறி வைத்து தவித்தாள்.



"நீங்க இரண்டு பேரும் போயிட்டு வாங்களேன். நான் வரலை."

"ஏம்மா?" என்றார் கிருஷ்ணன்.

"வீட்டிலே உட்கார்ந்துண்டு என்னம்மா பண்ணப் போறே? கொஞ்ச நாழிகை போயிட்டுத்தான் வாயேன். குழந்தைகள் உன்னோடு போகணும்னு ஆசைப் படறாளே."

இரண்டு நாட்களாய் வீட்டில் வளைய வரும் மருமகளைப் பார்க்கையில் தன் தேர்வு சோடை போகவில்லை என்ற திருப்தியே கிருஷ்ணனுக்கு எழுந்தது.

அதிர்ந்து பேசவில்லை; சோம்பி உட்காருவதில்லை குறிப்பறிந்து நடக்கிறாள். மற்றவர்களின் கைக் காரியத்தை வலியச் சென்று வாங்கி உதவுகிறாள். முக்கியமாய் ஜானகி அகிலாவைப் பற்றி அதுவரை ஒன்றும் முணுமுணுக்கவில்லை என்றால் அது பெரிய விஷயம் தானே!

மாமியார் உத்திரவு தராமல் வெளியில் போவது சரியில்லை என்று தயங்குகிறாளோ?

"என்ன ஜானகி குழந்தைகளோட அகிலா வெளியே போயிட்டு வரட்டுமே... என்ன சொல்றே?"

"பேஷா போகட்டுமே நானா வேண்டாங்கறேன்? இன்னிக்கு வெள்ளிக்கிழமை. அகிலாண்டேஸ்வரியை தரிசனம் பண்ணிண்டு வரட்டுமே..." ஜானகி உத்தரவு கொடுத்து விட்டாள். "கோவிலா? நான் சினிமாவுக்கு இவளை அழைச்சுண்டு போகலாம்னு இருந்தேன். பரவாயில்லை. கிளம்புங்கோ... சரி இன்னும் யார், யார் வரா?" பொதுவாய் ஹரி கேட்டான்.

"நீங்க வரலையாம்மா?" இன்னும் தனக்குப் பின்னாலேயே நின்று கொண்டு மெள்ளப் பேசும் மருமகளைப் பார்த்தாள் ஜானகி.

''எனக்கு ஆத்துலே வேலை இருக்கு.'

''அப்போ உங்களுக்கு உதவியாய் நானும் இங்கேயே இருக்கேனே.''

ஜானகி வராமல் அகிலா கிளம்ப மாட்டாள் என்று புரிய ''நீயும் போயிட்டு வாயேன் ஜானகி'' என்று அவளை கிளப்பினார் கிருஷ்ணன்.

''ஊரை எல்லாம் சுத்தாம, கோவிலுக்கு போயிட்டு நேரா ஆத்துக்கு வரதுன்னா நான் வரேன்'' என்ற கண்டிஷனோடு ஜானகி எழுந்தாள்.

அர்ச்சனை சாமான்களை ஜானகி தயார் பண்ணும் நேரத்தில் கூடையை எடுத்துக் கொடுத்து, ஸ்டோர் ரூமிலிருந்து தேங்காயைக் கொணர்ந்து அகிலா உதவினாள்.

ஒவ்வொருவராக மற்ற உறவுக்காரர்களும் சேர்ந்து கொள்ள இரண்டு கார்களில் போவது தீர்மானமாயிற்று.

"அவர் கிட்டே சொல்லிக்க வேண்டாமாம்மா?" என்ற மருமகளைப் பார்த்து "சரி வா" என்ற வண்ணம் ஸ்ரீதரனின் அறைக்குப் போனாள் ஜானகி.

ஸ்ரீதரனுக்கு உதவியாக எப்போதும் இருக்கும் முத்தையன் முன் அறையில் உட்கார்ந்திருந்தான். இவர்களைக் கண்டதும் எழுந்து நின்றான். படுக்கை அறையை ஒட்டி இருந்த பால்கனியில் ஸ்ரீதரன் படித்துக் கொண்டிருந்தான். கூடவே மெல்லியதாய்ப் பாடும் டிரான்ஸிஸ்டர்.

புடவையின் சலசலப்பு, மல்லிகை மணம்—ஸ்ரீதரன் திரும்பினான். இவர்களைக் கண்டு சின்னதாய் சிரித்தான்.



"அப்பா எல்லாரையும் கோவிலுக்குப் போயிட்டு வரச் சொன்னார். நாங்க போயிட்டு வந்துடறோம்..." ஜானகி பேசினாள்.

சரி என்று தலையை அசைத்தான் ஸ்ரீதரன்.

அவர்கள் வெளியில் வந்து, மற்றவர்களுடன் சேர்ந்து காரில் ஏறினார்கள்.

கல்யாணமாகி இரண்டு நாட்கள் ஆகிவிட்டாலும், இன்னும் அவர்கள் கணவன், மனைவியாய் ஒரு நிமிஷம் கூட பழகவில்லை.

"ஸ்ரீதரன் கொஞ்சம் எமோஷனலாக இருக்கிற மாதிரி தெரியறது. ஒரு வார காலம் அவனும் அகிலாவும் சாதாரணமாய்ப் பழகட்டும். பிற்பாடு மத்த விஷயங்களை வைச்சுக்கலாமே'' என்று திருமணத்துக்கு முதல் நாள் மகாதேவனிடம் கிருஷ்ணன் கேட்டதை அவர் அகிலாவிடம் தனிமையில் சொன்னார்.

பகல் நேரங்களில் மெல்ல கணவனுடன் பழகி, அவரைப் புரிந்து கொண்ட பிறகு நெருக்கமாகப் பழகுவதுதான் சரி என்று அவளும் நினைத்தாள்.

திருமணமான மறுநாள் மகாதேவன் குடும்பத்துடன் கிளம்பி விட்டார். "நீங்க கொஞ்சம் கூட கவலைப் படாதீங்கோப்பா... நான் சந்தோஷமாய் இருக்கேன்'' என்று சொல்லி அவர்களை அனுப்பி விட்டாலும் கண்களை கட்டி காட்டில் விட்ட மாதிரியான ஒரு தவிப்புடனேயே அகிலா இருந்தாள்.

ஹரி இருக்கும் வரை கலகலப்புக்குப் பஞ்சம் இல்லை. அவனும் இந்த வாரக் கடைசியில் ஊருக்குப் போய் விடுவானாம்! பிறகு? வித்யா, மாமனார் இவர்களைப் பற்றி கவலை இல்லை. ஆனால் மாமியார்? கணவன்? இயல்

பாசு பேசி, பழகி, இவர்களில் மனசுக்குப் பிடித்த மாதிரி எனக்கு நடந்து கொள்ளத் தெரியுமா ?

அகிலாவுக்கு ரொம்ப பயமாக இருந்தது.

## பதின்மூன்று

ஸ்வாமியை நினைத்தால் அகிலாவுக்கு வருத்தமாக இருந்தது.

அண்ணா எத்தனை அசட்டுத்தனமாக நடந்து கொண்டு விட்டான்! தன் கல்யாணத்தைக் ஒரு சாக்கா வைத்து அப்பாவோடு சமாதானம் செய்து கொள்வான் என்று எதிர் பார்த்ததால் ஸ்வாமியின் செய்கை அவளுக்கு மனக் கஷ்டத்தையே கொடுத்தது.

மகாதேவனுக்குத் துளிகூட விருப்பம் இல்லை. "அவன் என் மகனே இல்லைனு தீர்மானமான பிறகு எதற்காக அவனுக்கு உன் கல்யாணச் செய்தியைச் சொல்ல வேணும்? எனக்கு இஷ்டம் இல்லையம்மா" என்று சொன்னவரை அகிலாதான் விடாமல் நச்சரித்து மனம் மாறவைத்தாள்.

"அண்ணா என்னப்பா அப்படியொரு பெரிய பாவத்தைப் பண்ணிட்டான்? தன் மனசுக்குப் பிடிச்சவளைக் கல்யாணம் செய்து கொண்டான் என்பதைத் தவிர வேறு எந்த விதத்தில் தப்பாக நடந்துண்டான்? குடித்தானா? கண்டபடி சுற்றினானா? மானம் போகும் தினுசில் நடந்து கொண்டானா? ஒன்றுமில்லையே... அப்பா... ப்ளீஸ்... என் கல்யாணத்துக்கு அண்ணா வந்தால் நான் ரொம்ப சந்தோஷப்படுவேனப்பா... பெரிய மனசு பண்ணி, அவனை மன்னிச்சு, பத்திரிகை அனுப்பறதோடு ஒரு லெட்டரும் எழுதுங்கோப்பா... ப்ளீஸ்..."



அகிலா வென்று விட்டாள்

'அவள் விருப்பப்படியே பத்திரிகையுடன் அகிலாவுக்கு திருமணம் நிச்சயமாகி இருக்கிறது; வீட்டுக்கு மூத்தவனாய் லட்சணமாய் மனைவியுடன் வந்து கல்யாணத்தை நடத்திவை' என்று மகாதேவன் பெருந்தன்மையுடன் எழுதினார்.

ஆனால் அதற்கு எந்த தினுசில் பதில் வந்தது?

"மூன்று வருஷங்களாக இல்லாத கரிசனம் இப்போது வந்ததற்கு சந்தோஷம். இந்தத் திடீர் பாசத்துக்குக் காரணம் என்ன என்று எனக்குப் புரிகிறது. அகிலா கல்யாணத்துக்குப் பணம் வேண்டும். அவ்வளவுதானே? இத்துடன் ஐயாயிரம் ரூபாய்க்கு செக் அனுப்பியிருக்கிறேன். இதைக் கொண்டு திருமணத்தை ஜாம் ஜாம் என்று நடத்துங்கள். சபிதாவுக்கு இன்னும் ஒரு வார காலத்தில் பிரசவம் ஆகலாம் என்று டாக்டர் அபிப்ராயப் படுவதால் அவளைத் தனியாகவிட்டு நான் வர இயலாது."

இதைத் திமிர் எழுத்து என்று சொல்வதா? இல்லை தெரியாத்தனத்தால் எழுதிய அசட்டு எழுத்து என்று நினைப்பதா?

பணத்துக்காகவா அப்பாவை விட்டு நான் கடிதம் எழுதச் சொன்னேன்.

ஐயோ, அண்ணா!

உன் புத்தி ஏன் இப்படி வக்ரமாகவே போகிறது! மனுஷர்களின் அருமை உனக்கு என்றைக்கண்ணா புரியும்.

மகாதேவன் கல்யாணப் பத்திரிகையில் இன்னார் மகன் என்று மட்டும் குறிப்பிட்டிருந்தாரே தவிரவும்!

லெட்டரில் சம்பந்திகளின் பணக்கார பூர்விகத்தைக் குறித்து ஒன்றுமே எழுதவில்லை. நேரில் பார்க்கும்போது ஸ்ரீதரனைப் பற்றியும் மற்ற விவரங்களையும் சொல்லலாம் என்றிருந்ததால், அகிலா வாழ்க்கைப்பட போகும் பணக்கார சூழ்நிலையை அறியாத ஸ்வாமி பணத்துக்காகத்தான் தன் தந்தை இப்போது தன்னைச் சொந்தம் கொண்டாடுகிறார் என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டான்.

லெட்டரைப் படித்த மகாதேவன், 'உன் வார்த்தைக்குக் கட்டுண்டு எழுதினதற்கு எனக்கு எந்த இளச்சுக்குடைப்பு கிடைத்திருக்கிறது, பார்த்தியாம்மா?' என்று திலுசில் மகளை ஏறிட்டுப் பார்த்தார். வாயால் ஒன்றும் சொல்லவில்லை, மறு தபாலிலேயே செக்கை மகளுக்குத் திருப்பி அனுப்பிவிட்டார். இனி அப்பாவைப் பொறுத்தவரை ஸ்வாமி என்றொரு பிள்ளையே இல்லை என்பதை அன்று அகிலா தீர்மானமாய்ப் புரிந்து கொண்டாள்.

பிள்ளையின் குணத்தில் முக்கால்வாசி பங்கு மூத்த மகளிடமும் இருக்கிறது என்பதாலோ என்னவோ, யார் என்ன சொல்லியும் கேளாத மகாதேவன் சரியாக கல்யாணத்துக்குப் பத்து நாட்கள் இருக்கும் சமயத்தில்தான் லலிதாவுக்குப் பத்திரிகையை அனுப்பி, சுருக்கமாய் நாலு வரிகள் எழுதியிருந்தார். அவளுக்கும் ஸ்ரீதரனின் பணத்தைப் பற்றியோ, மற்ற விவரங்களையோ லெட்டரில் எழுதவில்லை. இரண்டும் கெட்டான் பெண், ஒன்று எழுத ஒன்றைப் புரிந்து கொள்வாள், வரட்டும் நேரில் பேசிக் கொள்ளலாம் என்று இருந்து விட்டார்.

லலிதாவிடமிருந்து உடனே பதில் வந்து விட்டது. "அகிலாவின் கல்யாண பத்திரிகைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனேன். திடீர் என்று நிச்சயம் பண்ணி விட்டீர்களா? மாப்பிள்ளை யார்? விவரம்



ஒன்றுமே இல்லையே! 'திருச்சி கிருஷ்ணன் சில்க் ஹவுஸ்' என்று சம்பந்தியின் பெயரின் அடியில் போட்டிருக்கிறதே, சம்பந்தி அங்கு வேலை பார்க்கிறாரா? ஏன் திருச்சியில் கல்யாணத்தை நடத்தப் போகிறீர்கள்? உங்கள் கடிதத்திலிருந்து ஒரு விவரமும் தெரியவில்லை" என்று அங்கலாய்த்து எழுதி விட்டு கல்யாணத்துக்கு இரண்டு நாட்கள் இருக்கையில் தான் மட்டும் வந்து சேர்ந்தாள்.

சாதாரண கல்யாணம்; ஏனோ தானோ என்று ஒரு இடம் வாய்த்திருக்கும். இதற்குக் குடும்பத்தோடு அலைந்து காசைக் கரியாக்குவானேன். தீராது அக்காளான தான் மட்டும் வந்தால் போதும் என்று நினைத்து வந்தவளுக்கு அகிலாவின் புக்ககத்தார் பற்றின செய்தி ரொம்ப அதிர்ச்சியைத் தருவதாக இருந்தது.

அகிலாவின் புடவைகளையும், மற்றவர்களுக்கு எடுத்திருக்கும் துணிமணிகளையும் பார்த்துக் குதிகுதியெனக் குதித்தாள்.

'என் கல்யாணத்துக்கு ஒரு இரட்டை பேட்டு புடவை வாங்க மூக்கால் அழுதீர்கள். இப்போது இத்தனை எடுத்திருக்கிறீர்களே' என்று அழுது அழுச்சாட்டியம் செய்தது பொறுக்க முடியாமல் சாரதா அவளைத் தனியே அழைத்து கிருஷ்ணன் பணம் கொடுத்ததையும், அவருடைய கடையிலே அனைவருக்கும் துணிகள் எடுத்துக் கொடுத்ததையும், சொன்ன பிறகுகூட லலிதாவுக்குச் சமாதானமில்லை. அவளுக்கு முன்னூறு ரூபாயில் பட்டுப் புடவையும், மாப்பிள்ளைக்கு டபிள் நிட் பேண்ட்டும், குழந்தைக்கு சில்க் ப்ராக்கு எடுத்தும் திருப்தி இல்லாதவளாக சதா முகத்தை ஒன்பது முழத்துக்குத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.

அகிலாவுக்குச் சொந்தமாகப் போகும் பணக்கார வாழ்வை நினைக்க நினைக்க லலிதாவுக்குள் பொறாமை எழுந்தது வெளிப்படையாகவே தெரிந்தது.

கல்யாணத்துக்காக திருச்சியில் போய் இறங்கினதும் மாளிகை போன்ற வீடும், தோட்டமும், ஆட்களும், காரும், செல்வச் செழிப்பும் அவள் கண்ணில் பளிச்சென்று உறுத்த, தன் ஆத்திரத்தை ஸ்ரீதரனின் ஊனத்தைப் பற்றி கேவலமாகப் பேசுவதன் மூலம் குறைத்துக் கொள்ள லலிதா முற்பட்டாள்.

"ஐயே மாப்பிள்ளையோட ஊனம் இத்தனை பெரிசா?"

"எழுந்து இரண்டடி நடக்க முடியாதா? அதான் அகிலாவுக்கு புடவையையும் நகையும் கொடுத்து சரிக்கட்டி மாட்டுப்பெண்ணாக எடுக்க முன் வந்திருக்காளா?" என்று லலிதா உரக்க பேசியபோது சம்பந்திகள் காதில் விழுந்து விடப் போகிறதே என்று மகாதேவனும் சாரதாவும் தவித்துப் போனார்கள்.

அகிலா கேட்டாலும் மனசு புண்பட்டுப் போக மாட்டாளா என்ன? இந்தப் பெண் ஏன் இப்படிப் புத்தி கெட்டுப் பேசுகிறது என்ற அவர்கள் பதறியதைப் புரிந்து கொண்ட வேகமும், தங்கமும் தான் லலிதாவை அதட்டி வாயை மூடிக் கொள்ளச் செய்தார்கள்

ஒரு தாய் வயிற்றில் பிறந்தும் இந்த இரண்டு பெண்களின் குணத்தில்தான் எத்தனை வித்தியாசங்கள்!

லலிதாவிடம் இருக்கும் சிகப்புத்தோல், அழகு, செதுக்கின முகம், அகிலாவிடம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் குணம்?

லலிதாவை அலைக்கழித்த மைனஸ் பாயிண்டுகள் எல்லாம் அகிலாவிடம் ப்ளஸ் பாயிண்டுகளாக இருந்ததே, அவ்விருவரையும் நன்கு அறிந்தவர்களின் அன்பையும், மதிப்பையும் அகிலா தானே தட்டிக் கொண்டாள்! அழகிருந்து என்ன? வெள்ளைத் தோலிருந்து என்ன! குணம், அது அல்லவா முக்கியம்?



அகிலா வாயாடி இல்லைதான். வலியச் சென்று சிரித்துக் கொண்டு, உரக்கப் பேசி, யாரையும் சிநேகிதம் செய்து கொள்ளும் ரகம் இல்லைதான். என்றாலும் மனுஷர்களை, மனுஷர்களாகவே பாவித்துப் பழக சின்ன வயசிலிருந்தே பழக்கிக் கொண்டிருந்ததால், எந்த ஒரு அன்னிய நபருடனும் அவளால் சுலபத்தில் பழக முடிந்தது. சிரிப்பு, சிடுமூஞ்சித்தனம், கோபம், அழுமூஞ்சித்தனம் இதெல்லாம் அவரவர் வளர்த்துக் கொள்ளும் குணாதிசயங்களே தவிர, அடிப்படையில் எல்லோரும் நல்லவர்கள் தாம் என்பது அகிலாவின் சித்தாந்தம். நம் மனநிலைக்கு ஏற்ப நாம் மற்றவரை எடை போடுவதால், சட்டென்று எவரிடமும் குற்றம், குறை கண்டு பிடிப்பது தப்பு என்பதும் அவள் கருத்து.

நேற்று நன்றாகப் பேசிக் கொண்டிருந்த பெண், இன்று முகத்தைத் திருப்பிக் கொண்டு நடந்தால் என்ன ராங்கித்தனம் என்று அகிலா எண்ணியதில்லை. மாறாக என்னைப் பார்த்திருக்க மாட்டாள் என்று நினைப்பாள்; அல்லது வேறு ஏதாவது கவலை இருக்கும்; அதே நினைப்பில் போயிருப்பாள் என்றே நம்புவாள். இப்படி எவரையும் குதர்க்கமான கோணத்திலிருந்து பார்க்க அவள் மறுத்து வந்ததால், வயசாக ஆக அதுவே அவளின் இயல்பான சுபாவமாக ஆனது. பொதுவாக அகிலா எவர் மீதும் புகார் செய்தும், எவரையும் இகழ்ந்தும் அவள் குடும்பத்தார் கேட்டதில்லை.

அகிலா தனக்குத் தானே உணர்ந்து வளர்த்துக் கொண்ட இன்னொரு உயர்ந்த குணம் மற்றவரிடம் காணும் சிறப்பை உடனடியாக வெளிப்படையாய்ப் பாராட்டுவதுதான்.

அக்கா லலிதாவுக்கு அன்று அந்தப் புடவை எடுப்பாக இருந்தது என்று தோன்றினால் தட்க்ஷணமே,

"அக்கா இந்தப் புடவையில் நீ ரொம்ப அழகா இருக்கே" என்பாள்.

வேகா மாமி செய்த பட்சணம் நன்றாக இருந்ததென்றால் 'மாமி, முறுக்கு ஏ கிளாஸ்' என்பாள் வாயில் போட்ட உடனேயே.

தாயி போட்ட கோலம் அன்று நன்றாக அமைந்து விட்டால் 'என்ன தாயி இன்னிக்கு கோலம் இத்தனை ஜோராய் இருக்கு என்ன காரணம்?' என்பாள். வயசான தாயிக்கு முகம் மலர்ந்து போகும்.

'நேத்து நீ கொடுத்த கீரை தளதளனு நன்னா இருந்தது ராணி, நிமிஷத்தில் மசிஞ்சுடுத்து' என்பாள் கீரைக்காரியிடம்.

இப்படி மனசு உணர்ந்ததை வெளிப்படையாய்ப் பாராட்டும் அவள் குணம் லலிதாவுக்குப் பிடிக்காது.

இரண்டு பேருமாய் தெரிந்தவர் வீட்டுக்கு அல்லது ஏதேனும் விசேஷத்துக்குப் போவார்கள். அங்குள்ள உறவுக்காரர்களிடம், சிரித்து இரண்டு வார்த்தை அன்பாய் பேசுவாள் அகிலா. "உங்க குழந்தைக்கு ஜுரம் தேவலையா சித்தி?" என்பாள். "கையிலே நகச் சுத்து வந்திருத்துன்னேளே, எப்படி இருக்கு மாமி?" என்பாள். "அட இந்தப் புது வளை உங்க கைக்கு அழகா இருக்கு" என்பாள். "உங்க மாதிரி இத்தனை அடர்த்தியா யாராலும் பூ கட்ட முடியாது" என்பாள். இப்படி.

இதெல்லாம் வெளிப்பேச்சு அல்ல, உண்மையாய் உணருவதை அவள் வெளியில் சொல்லுகிறாள் என்பது புரிய, கேட்பவர்கள் மகிழ்ந்து போவார்கள்.

ஆனால் பக்கத்தில் நிற்கும் லலிதாவுக்குப் பற்றிக் கொண்டு வரும்



தனிமை கிடைத்தால் தங்கையின் கையை நறுக்கென கிள்ளி அடக்கப் பார்ப்பாள்; வீட்டுக்கு வரும்போது சண்டை பிடிப்பாள்.

"அந்த மாமிக்கு நன்னா பீத்திக்கப் பிடிக்கும். அவளுக்கு நகச் சுத்தும் இல்லை, ஒண்ணும் இல்லை. நாலுப் பேர் கவனிக்கணும்னு விரலை துணியிலே சுத்திண்டு 'ஆ' 'ஊ'ங்கறா. அவகிட்டே என்ன கேள்வி? ... அலமு மகா ராங்கிக்காரி, ஏற்கனவே தான் ரொம்ப ரதினு மனசுலே நினைப்பு; நீ வேற இந்த வளை உன் கைக்கு ரொம்ப அழகாயிருக்குனு சொல்லிட்டே... இனிமே கேட்க வேண்டாம். ஆமா அந்த திமிர் பிடிச்சவகிட்டே போய் இதை ஏன் சொன்னே? உனக்கு மூளையே இல்லையா அகிலா?"

"என்னவக்கா நீ? அலமு கை வளை நன்றாயிருக்கு. பாருன்னு சொன்னது நீ தானே?"

"நாம ஒருத்தர்கிட்டே ஒருத்தர் பேசறதை அவாளிடம் சொல்லணுமா?"

"சொன்னா என்ன தப்பு? அதைக் கேட்ட உடனே அலமு எத்தனை சந்தோஷப்பட்டா. நீதான் பார்த்தியே."

"ஆமா... எனக்கு வேண்டி இருக்கலை. குஞ்சம்மா பூக்கட்டறது அழகாதான் இருக்கு; அதுக்காக அவகிட்டயே அதைச் சொல்லி அவளுக்கு தலைக் கனத்தை உண்டாக்கணுமா என்ன? மனுஷாகிட்டே என்ன பேசறதுன்னே உனக்குத் தெரியலை அகிலா."

"பாராட்டினா, தலைகனம் வருமாக்கா? நீ இன்னிக்கு அழகாய் இருக்கேனு, கார்த்தால உன்கிட்டே சொன்னேனே அது உனக்குப் பிடிக்கலையா?"

"நான் உனக்கு அக்கா. வேத்து மனுஷாளும் நானும் ஒண்ணா?"

"மனசிலே பாராட்டணும்னு தோணித்துன்னா, அதை வெளியே சொல்றதுலே என்னைக்கா தப்பு? கேட்கறவர்களுக்கு அது எத்தனை சந்தோஷத்தைக் கொடுக்கும் தெரியுமா?"

வாஸ்தவம்தானே. என்றைக்காவது வேதா மாமி 'உன் காரியம் யாருக்கு வரும்? கண் கண்டால் கை செய்கிறது, அகிலா' என்று பாராட்டினால் அது அவளுக்கு எத்தனை இன்பத்தைத் தந்திருக்கிறது? மற்றவர்களுக்கும் அப்படித் தானே இருக்கும்?

பிறர் சொல்லாமலேயே அவர்களின் கை வேலைகளை வலிய வாங்கிச் செய்யும் அகிலாவின் மற்றொரு குணமும் லலிதாவுக்குப் பிடிக்காத விஷயம்.

அம்மா, லலிதா, என்று இல்லை. வேதா மாமி, தங்கம், மற்று யாராயிருந்தாலும் சரி புடவை அவிழ்த்துப் போட்டிருந்தால் அதை அவர்கள் சொல்லாமலேயே நேர் விசாய் மடித்து வைப்பாள். தோய்க்க வேண்டிய அவசியம் இருந்தால் அதையும் செய்துவிடு

வேதா மாமி வீட்டில் புஸ்தகம், சாமான்கள் இறைந்து கிடந்தால், அவைகளை ஒழித்து வைப்பாள். உறவினர் வீடுகளுக்கு ஏதாவது விசேஷத்துக்குப் போக நேர்ந்தால் ஒருத்தரும் கூப்பிடாமலேயே உணவு பரிமாறுவாள். எச்சில் எடுப்பாள். மற்ற வேலைகளில் உதவுவாள்.

"நம்மாத்துலே வேலைகளைப் பண்ணட்டும். நான் வேண்டாங்கலை; ஆனால் வேதா மாமி, தங்கம் புடவைகளை மடிக்கிறது, பாத்திரம் தேய்க்கறது, அவாத்து அலமாரிகளைத் துடைத்து சுத்தம் பண்ணறது இதெல்லாம் எனக்குப் பிடிக்கலைம்மா. வேலைக்காரி மாதிரி தன்னை தாழ்த்திக்கறா இந்த அகிலா" என்று சின்ன வயசில் அம்மாவிடம் லலிதா குறைப்பட்டுக் கொண்டு அகிலா கேட்டிருக்கிறாள்.



"மனுஷாளுக்கு உதவியா இருக்கறது தப்பில்லை லலிதா. நீயும் அப்படித்தான் இருக்கணும்" என்று அம்மா புத்தி சொன்னால் "அந்த மாதிரி வெட்கம், மானம் இல்லாமல் ஒருத்தருக்கு காசு வாங்காத வேலைக் காரியா உழைக்க என்னால் ஆகாதும்மா. அதுக்கு உன் ஒன்னைப் பெண்தான் சரி" என்று லலிதா தாக்கி எறிந்து பேசின நாட்கள் உண்டு.

பிறரின் குணாதிசயங்களை அறிந்து அதற்கு ஏற்ற விதத்தில் பக்குவமாய் நடந்து கொள்ளுவதிலும் அகிலாவுக்கு ஆசை அதிகம்.

அதற்காக, மனுஷருக்கு மனுஷர் தன் குணத்தை மாற்றிக் கொள்கிறாள் என்று அர்த்தம் இல்லை. பிறரின் திருப்திக்காக தன் சொந்த விருப்பு, வெறுப்புக்களைப் பாராட்டாமல் இருக்கிறாள் என்றுதான் அர்த்தம். தன் அடிப்படை குறிக்கோளை விட்டுக் கொடுக்காமல் அதே சமயம் பிறரின் சுக துக்கங்களில் இவளால் இயல்பாய்ப் பங்கெடுக்க முடிகிறதே, அதுதான் அகிலாவின் மிகப் பெரிய ப்ளஸ் பாயிண்ட்.

இத்தனை ப்ளஸ் பாயிண்டுகள் இல்லாவிட்டால், கல்யாணமான சில நாட்களிலேயே தன் புக்ககத்து மனுஷர்கள் அத்தனை பேர்களையும் அவளால் கவர்ந்திருக்க இயலுமா?

ம்ஹூம் முடியாது.

அகிலா என்ன கண்ணைப் பறிக்கும் அழகியா? ஒவ்வொருத்தரும் அவளின் அபூர்வமான அழகைப் பார்த்து மயங்குவதற்கு? அகிலா என்ன அவர்களை மாதிரி பணத்தில் புரண்டு எழுந்தவளா? பெரியவர்களிலிருந்து சின்னவாண்டு வரை அவளின் நகையையும், புடவையையும், கொண்டு வந்த சீர் செனத்திகளையும் பார்த்துப் பிரமிப்பதற்கு? அகிலா என்ன படித்துப் பட்டங்கள் பல பெற்ற

உயர்ந்ததொரு வேலை பார்ப்பவனா— ஆட்கள் கொண்டு அவனை மதித்து மரியாதை செய்ய ?

ஒன்றும் இல்லை.

ஒன்றுமே இல்லாத அகிலாவுக்கு புது சூழ் நிலையில் உள்ள அத்தனை பேர்களின் மதிப்பையும், அன்பையும் பெற்றுத் தந்தது அவளின் குணமே தவிர வேறு என்ன?

மாமனார் கிருஷ்ணனிடமோ, இல்லை மைத்துனன் ஹரியிடமோ எந்த விதத்தில் பழக வேண்டும் என்று கணம் கூட அகிலா யோசிக்கவில்லை. அவளை அவளாகவே ஏற்றுக் கொள்ளுவார்கள் என்ற தைரியம் பார்த்த உடனேயே தோன்றி விட்டது.

வித்யா சின்னப் பெண், வளரும் மங்கை. நிச்சயதார்த்தத்திற்காகப் போய் இறங்கின உடன் அகிலாவுடன் பட்டும் படாமலுமே இருந்தாலும் ஒரே நாளில் அவளும், அகிலாவும் நெருங்கி விட்டனர்.

ரோஜா நிறத்தில் பாவாடை, சட்டை தாவணியோடு, தலைநிறைய ரோஜா மலர்களை வைத்துக் கொண்டு நின்ற வித்யாவை முதலில் கண்டதும் அகிலாவின் மனதில் 'இது என்ன பூ மாதிரியான அழகு' என்ற வியப்பு தோன்றியது உண்மை. மறுநாள் தோட்டம், வீடு காட்ட வித்யாவுடன் சென்றபோது "உன் தலை பூ ஒரு பக்கமாய் இருக்கு வித்யா" என்று வலிய சொல்லி அதை நேர்ப்படுத்தினாள். பிறகு "உன்னை நேத்து பார்த்தபோது ஒரு பெரிய ரோஜாப்பூதான் உயிரோட வந்துடுத்தோனு நினைச்சேன். நீ அப்படி இருந்தே" என்று நிஜமான சந்தோஷத்துடன் பாராட்டின கணத்தில் வித்யா அவளை மனசால் நெருங்கி விட்டாள்.

மூத்த மச்சினர் ராஜாவைப் பற்றி அகிலா ரொம்ப நினைக்கவேயில்லை. பார்த்தால் ஒரு தலை அசைப்பு,



சின்ன சிரிப்பு அவ்வளவுதான். கல்யாணம் முடிந்த பின் ஸ்ரீதரனை ஒவ்வொருவராக எழுந்து வந்து, பாராட்டின போது ராஜாவும் வந்தான். இறுக அணைத்து "கங்கராஜுலேஷன்ஸ் அண்ணா" என்றவன் இவளிடம் திரும்பி 'கங்க்ராஸ்ட் மன்னி' என்ற வார்த்தைதான் இவளிடம் அவன் பேசின பேச்சு.

மாமியாரையும், கணவரையும் நினைக்கையில் அகிலாவுக்கு மனதில் தயக்கமும், பயமும் எழுந்தன. தெரியாத்தனமாய் தான் எதையாவது பேசப் போய், செய்யப் போய் அதை மாமியார் தவறாக எடுத்துக் கொள்வாரோ என்ற தவிப்பு.

மாமியாரைப் பற்றி மாமனார் ஏதொன்றும் சொல்லி இருக்காவிட்டால் இந்தத் தயக்கம் இருந்திருக்காதோ, என்னவோ. ஆனால் 'ஜானகி ஒரு தினுசானவள்' என்று அவர் மெனக்கெட்டு குறிப்பிட்டிருந்ததால் கவனத்துடன் நடந்து கொள்வது தன் கடமை என்றே அகிலா நம்பினாள்.

அதனால் கல்யாணம் ஆன அன்றிலிருந்தே மாமியாரின் முகக் குறிப்பைக் கவனித்து செயல்பட்டாள்.

வீட்டில் கீழே இருந்த மூன்று படுக்கை அறைகளில் ஒரு பக்கமாய் இருந்த பெரிய படுக்கை அறை, பாத்ரூம், பால்கனி, இன்னும் ஒரு புஸ்தகங்கள் நிறைந்த அறை, இத்தனையும் ஸ்ரீதரனுக்குச் சொந்தமாய் இருந்தன

மற்ற இரண்டில் ஒன்றை கிருஷ்ணன், ஜானகியும் ; மற்றதை வித்யாவும் உபயோகப்படுத்தினர். மாடியில் இன்னும் நாலு படுக்கை அறைகள். அதில் லீவில் வரும் ஹரி, ராஜா மற்ற விருந்தினர்கள் புழங்கினர்.

இரவில் வித்யாவுடன் படுத்தாலும் காலையில் மாமியார் எத்தனை மணிக்கு எழுந்திருக்கிறார் என்பதைப் பார்த்துக்கொண்டு அகிலாவும் பின்னோடு எழுந்தாள்.

கொட்டில் பசுக்களை கறந்து பால்காரன் எடுத்து வந்த பால் பாத்திரங்களை தான் வாங்கிப்போய் சமையல் கட்டில் வைத்தாள்.

"பாலை நான் காய்ச்சுகிறேன். நீங்க வேற வேலை இருந்தால் பாருங்கோ" என்று சமையல்கார அம்மாவிடம் சொன்னாள். 'காய்கறி நறுக்கித் தரட்டுமா' என்றாள்.

குளித்து, மாமியாருக்கு பூஜை புனஸ்காரங்களைச் சொல்லாமலேயே உதவினாள்; பூஜை அறையில் வாடிய பூக்களை எடுத்து, தரையைத் துடைத்து கோலம் போட, அம்மணி வந்தபோது "நான் செய்யறேனே" என்று அவைகளைத் தன் வேலையாக்கிக் கொண்டாள்.

'பூ நிறைய இருக்கே... மாலையா கட்டட்டுமா' என்று மாமியாரிடம் கேட்டு விட்டுச் செய்து கொடுத்தாள்; "வேறு ஏதாவது வேலை இருக்கா?" என்று நொடிக்கொரு தடவை கேட்டாள்.

"தலையை வாரி விடும்மா" என்று வித்யா சீப்பும் கையுமாய் வந்தபோது 'நான் பின்னினால் உனக்குப் பிடிக்குமா, வித்யா?' என்று கேட்டு சீப்பை கையில் வாங்கினாள்.

ஆக இரண்டு நாட்களுக்குள் சுவாதீனமாய் மாமியாரை அம்மா என்று அழைக்கவும், வீட்டு வேலைகளைப் பகிர்ந்து செய்யவும் குடும்பத்தார், ஆட்களின் மதிப்பைப் பெறவும் அகிலா பழகி விட்டாள்

கணவனின் எதிரில் எதுவும் வாயைத் திறந்து சொல்லத் தயங்கும் ஜானகி, தனிமையில் சின்ன விஷயங்களில் தன் அதிருப்தியைத் தன்னிடம் காட்டுவதை அகிலா பொருட்படுத்தவில்லை.

"ப்ரிஜ்ஜை பார்த்துத் திற, கதவை அடிக்க கூடாதே; ஐஸ் தண்ணி குடிச்சு உனக்குப் பழக்கம்



கண்டா?" என்றும், "பேனையிலே சாப்பிடத் தெரியுமா?" என்றும் இன்னும் எல்லையறியாய் பேசின பேச்சுக்களை சந்தேகமாய் அகிலா தப்பாக எடுத்துக்கொள்ளவில்லை.

அம்மா கேட்பதில் என்ன தப்பு? எனக்கு இதெல்லாம் பழக்கம் இல்லை தானே! என்று நினைத்தாளே தவிர மனதால் இரண்டாம் முறையாக மாமியார் சொன்னவைகளைக் குற்றமாக எண்ணவில்லை.

காலை ஆறு மணிக்கு முத்தையன் உள்ளே வந்து ஸ்ரீதரனுக்கு காபி வாங்கிப் போவான். பின் பால்கனி வழியாய் சக்கர நாற்காலியிலேயே ஸ்ரீதரன் தோட்டத்துக்குப் போய் சற்று நேரம் சுற்றிவிட்டு வருவான். வந்ததும் குளியல், டிபன். பிறகு சாப்பாடு வரை ஸ்ரீதரன் என்ன செய்வான் என்பது அகிலாவுக்குத் தெரியாது. கதவு சார்த்தி இருக்கும். தன் அறை, அதை விட்டால், தோட்டம் என்றே அவன் இருப்பதையும், வீட்டின் எந்த அறைக்கும் அவன் வராததையும், மற்ற எவரும் அப்பாவைத் தவிர, அனாவசியமாய்ப் பேசாததையும் அகிலா தெரிந்து கொண்டாள்.

இந்த நாலு நாட்களுக்குள் தூரத்திலிருந்தே கணவனை நிறையக் கவனித்தாள் அகிலா.

நடுவில் ஓரிரு முறைகள் ஸ்ரீதரனின் குரல் உயர்ந்து, அவன் முத்தையனிடம் கோபமாகக் கத்துவதையும் அவள் கேட்டாள்.

கோபமா? யார் மேல்? எதற்காக?

ஸ்ரீதரனுக்குக் கோபம் வந்தால் சாதாரணமாய் அந்த அறைக்குள் போகும் மாமனார் கூட கூடத்திலேயே தங்கி விடுவதையும் அகிலா பார்த்தாள்.

இவர் என்றால் இங்கே எல்லோரும் ஏன் இப்படிப் பயப்படறா? அத்தனை கோபக்காரரா? சிடுமூஞ்சித் தனம் கொண்டவரா?

தோட்ட மகிழ மரத்தடியில், நாற்காலியில் அமர்ந்து கண்ணைம் புத்தகம் படிக்கும் கணவனைப் பல முறைகள் ஜன்னல் வழியாகப் பார்த்து ரசித்த அகிலாவினுள் மேற்கொண்டு இரண்டு நாட்கள் ஆவதற்குள் கணவனோடு நெருங்கிப் பழக வேண்டும் என்ற ஆசை மனைத் தொடங்கியது.

பேசினால் பதில் சொல்லுவாரோ? என்ன பேசணும்?

நான் சாப்பாடு பரிமாறினால் சாப்பிடுவாரோ? சதா புஸ்தகம் படிக்கிறாரே. என்னென்ன புஸ்தகங்கள்?

பாட்டு ரொம்ப பிடிக்குமோ? தோட்டத்தில் அவர் உலாவப் போகும்போது நானும் கூடப் போனால் எப்படி இருக்கும்? எதுக்காக அவரைப் பார்த்து நான் பயப்படணும்? முகத்தைப் பார்த்தால் என் கண்ணுக்கு சின்ன குழந்தை முகம் மாதிரி தெரியறதே; இந்த மனுஷரா கோபக்காரர்? நம்ப முடியலையே!

கணவனை உள்ளத்தால் நெருங்க வேண்டும் என்ற அகிலாவினுள் உண்டான விருப்பத்தை கிருஷ்ணன் எப்படித்தான் புரிந்து கொண்டாரோ, தெரியாது.

மனைவியிடம் இதைப் பற்றி விரிவாகப் பேசியதன் விளைவாக அன்று தூங்கி எழுந்து முகம் அலம்பி சமையற் கட்டுக்குத் தன் பின்னாலேயே வரும் அகிலாவிடம் "நீ காபி குடிச்சுட்டு உங்க மாமனாருக்கும் ஸ்ரீதரனுக்கும் எடுத்துண்டு போ" என்றாள் ஜானகி.

நானா? காபியா? அவருக்கா? இது என்ன புதுப் பழக்கம்!

சொன்னபடி காபி தம்ளர்களை எடுத்துக் கொண்டு மாமனார் இருந்த ஹாலுக்குப் போன அகிலாவினுள் சின்னதாய் படபடப்பு.



அவள் நீட்டிய ஒரு தம்ளர் டபராவை வாங்கிய கிருஷ்ணன் அன்றைய பேப்பரை அவளிடம் தந்து அவள் தயங்குவதைக் கண்டு "பயப்படாம போம்மா... அவன் என்ன அந்நியனா?" என்று தைரியம் தந்து பேசினார்.

முன் கூட்டியே முத்தையனிடம் சொல்லியிருப்பார் போலிருக்கிறது. அவன் இவளைக் கண்டதும் கதவைச் சாத்திக் கொண்டு வெளியே போய் விட்டான்.

படுக்கையில் ஒருக்களித்து படுத்திருந்தான் ஸ்ரீதரன். முதல் முறையாக போர்வையால் மூடாத தன் கணவனின் கால்களைப் பார்த்தாள் அகிலா.

ஒரு கால் சுமாரான வளர்த்தியுடன் இருந்தது; இன்னொன்று ராமு கால் மாதிரி, ஒரு பத்து வயசுப் பையன் மாதிரி குச்சியாய் சிறுத்துக் கிடந்தது.

இவர் சட்டென்று திரும்ப நேர்ந்து, நான் இவர் காலத்தையே வெறிக்கப் பார்க்கிறதை பார்த்தா மனசு வருத்தப்படுவாரோ?

அகிலா கண்களை காலிலிருந்து அகற்றினாள்.

கருகருவென்ற முடி, தலை கொள்ளாமல் இருந்தது.

தூங்கறாரா?

என்ன சொல்லிக் கூப்பிடணும்?

பேப்பரை முக்காலி மேல் வைத்துவிட்டு அகிலா மெல்ல கட்டிலைச் சுற்றிக் கொண்டு ஸ்ரீதரனின் முகத்துக் கெதிரில் போய் நின்றாள்.

எத்தனை அழகான முகம்! எத்தனை கம்பீரம்! கணவனின் சிற்பம் போன்ற முகம் அவளுக்குப் பரவசத்தைக் கொடுத்தது.

பார்த்துக் கொண்டே நிற்கையில் ஸ்ரீதரன் கண் விழித்தான். கண்முன் அகிலா நிற்பதை நம்ப முடியாமல்

இரண்டு தரம் இமைகளைக் கொட்டிப் பார்த்தவனுக்கு தன் கால்கள் மூடப்படாமல் இருப்பது ஞாபகத்துக்கு வர சடக்கென எழுந்து ஒரு கையால் விலகிய போர்வையை இழுத்துவிட்டுக் கொண்டான்.

அவனின் பதட்டத்தை கவனித்ததாகவே காண்பித்துக் கொள்ளவில்லை அகிலா.

நாணம் கலந்த புன்னகை மட்டும் எழ ''காபி கொண்டு வந்திருக்கேன்'' என்றாள்.

''முத்தையன் எங்கே?''

அகிலா பதில் சொல்லவில்லை காபியை ஆற்றி கணவனிடம் நீட்டினாள்.

''சூடு சரியா இருக்கா?''

''ம்... இந்த முத்தையன் எங்கே போயிட்டான்?''

''முத்தையன் வெளியே இருக்கான். உங்களுக்கு ஏதாவது வேணுமா?'' ஸ்ரீதரன் பதில் சொல்லவில்லை.

காபி டம்ளரை அவன் நீட்டவும் அகிலா வாங்கிக் கொண்டு அந்தப் பக்கமாய் வைத்திருந்த பேப்பரை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

''உனக்கு எதுக்கு வீண் சிரமம்'' மெல்ல முணுமுணுத்த ஸ்ரீதரன் மீண்டும் படுக்கையில் சாய்ந்த வேகத்தில் போர்வை சற்றே விலகியது. சூம்பின காலை அகிலா பார்த்து விடுவாள் என்ற பதைப்பு அவன் முகத்தில் தோன்றியது அகிலாவுக்கு வேதனை தர ஒரு நிதானத்துடன் குனிந்து போர்வையை நன்றாய் இழுத்து அவன் கால்களை மறைத்து, படுக்கையின் அடிப்பக்கத்தில் செருகினாள். பின், தலையை நிமிர்த்தி ஏன் இப்படி மனசை அலட்டிக் கொள்கிறீர்கள்? நான் யார்? உங்கள்



மனைவி இல்லையா என்பது போல பார்த்து, இதம் தரும் இதழில் புன்னகைத்தாள்.

அந்தப் பார்வையும், சிரிப்பும் ஸ்ரீதரனின் மனதுக்கு உகந்ததாக இருக்கவே அவனும் பதிலுக்குச் சின்னதாய் உதடுகள் விரியச் சிரித்தான்.

## பதினான்கு

அகிலா தன்னை அணைத்துக் கொண்டு உறங்கும் கணவனைக் கண்கொட்டாமல் பார்த்தாள். நீலமாய் எரிந்த விடிவிளக்கில் ஸ்ரீதரனின் முகமும், கறுத்த முடியும் பார்க்கப் பார்க்க இன்பம் கொடுப்பதாக இருந்தன.

ஆழ்ந்த உறக்கத்தில் அவன் இருந்தது சீராய் மார்பு ஏறி இறங்குவதிலிருந்து தெளிவானது.

அகிலாவுக்கு தூக்கம் வரவில்லை.

மணி என்ன? பதினொன்று இருக்குமா?

மெல்ல கணவனின் கையை அகற்றினவள் எழுந்து ஜன்னல் அருகில் வந்தாள்.

தென்றல் இதமாய் வீசி பாரிஜாத மலர்களின் மணத்தை நாசியில் நிரப்பியது.

அகிலாவுக்குச் சந்தோஷமாக இருந்தது.

சற்றே தலையைத் திருப்பி தூங்கும் கணவனைப் பார்த்தாள். கபடு, சூது தெரியாத சின்னப் பிள்ளை ஒன்றைக் காணுவது போல இருக்கவே மெல்லச் சிரித்துக் கொண்டாள்.

வயசு முப்பது ஆனால் என்ன? இவர் இன்னும் பல விஷயங்களில் குழந்தை தானே?

மூன்று மாசங்களா? கணவனுடன் சேர்ந்து அகிலா படுக்கத் தொடங்கி அத்தனை நாட்களா ஆகிவிட்டன?

காபி எடுத்து வந்ததும், சூம்பின காலை மறைக்க ஸ்ரீதரன் தவித்ததும் நேற்றுத்தான் நடந்த மாதிரி அவனுக்குத் தோன்றின. அந்த நாளைத் தொடர்ந்து மேற்கொண்டு ஒரு வாரம் ஆவதற்குள் ஸ்ரீதரனுக்கு காபி மட்டும் இல்லாமல் மற்ற டிபன் உணவுகளைக் கொடுக்கவும், தோட்டத்தில் அவன் உலாவப் போகும்போது கூடவே போவதற்கும், அவன் அறையில் மதியம் உட்கார்ந்து அவன் தூங்கும் நாழிகையில் புத்தகம் படிப்பதற்கும் அகிலா பழகி விட்டாள்.

முதல் சில நாட்களில் அகிலா அறைக்குள் இருப்பது, நெருங்கி நிற்பது, சூம்பின கால் போர்வையிலிருந்து விலகுவது, ஸ்ரீதரனுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அகிலா கண் எதிரில் இருக்கையிலேயே முத்தையனை அழைத்து வேலைகளைச் சொல்லுவான். 'உனக்கு ஏன் சிரமம் அகிலா? நீ அம்மாவுக்கு உதவியாய் போய் இரேன்' என்று அவளை வெளியில் அனுப்புவதிலேயே குறியாய் இருந்தான்.

ஆனால் நாலு நாட்கள் ஆவதற்குள் அகிலாவின் இதமான பார்வையும், பண்பான பேச்சும், கனிவான பணிவிடையும் அவனைக் கவரத் தொடங்கின.

ஒரு மாலைப் பொழுதில் ஆரஞ்சு ஜூஸை அகிலா எடுத்து வந்து இவனிடம் நீட்டிய போது என்றைக்குமில்லாத தினுசில் இருவரின் கை விரல்களும் உரச, ஒரு வித உணர்ச்சியின் காரணமாய் டம்ளருடன் அவள் விரல்களைச் சேர்த்து பிடித்த ஸ்ரீதரன் ஒரு நிமிஷ காலத்துக்குத் தன் பிடியை விடவில்லை.



அன்று இரவு உணவு உண்ட பின், கை அலம்ப தண்ணீரும், துடைத்துக் கொள்ள டவலும் அகிலா நீட்டிய போது வலிய அவள் கையைப் பிடித்து தன் கையோடு கோர்த்துக் கொண்டான் அவன்.

மறுநாள் அகிலாவிடம் முதன் முறையாக "உள்ளே போக என்ன அவசரம்? உட்காரேன்" என்றான். முத்தையன் கதவை சாத்திக் கொண்டு வெளியேறினதும், படுக்கையில் தன் அருகில் உட்கார்ந்தவளை மெல்ல அணைத்துக் கொண்டான்.

கழுகுப் பார்வையுடன் நடப்பவைகளை கூர்ந்து கவனிக்கும் கிருஷ்ணனுக்கு அகிலாவிடமும், ஸ்ரீதரனிடமும் தெரிந்த மாற்றங்களைக் கண்டு கொள்வது கஷ்டமாக இல்லை.

காரணமில்லாமல் முத்தையனிடம் எரிந்து விழும் பிள்ளை அமைதியாய் இருக்கிறான்; அறைக்குள் சென்று ஐந்து, பத்து நிமிஷங்களில் வெளி வந்து விடும் மாட்டுப் பெண் அரைமணி, முக்கால்மணி என்று இருக்கத் தொடங்கி விட்டாள்; அறைக்குள் உதவியாய் எந்நேரமும் இருந்து வந்த முத்தையன் வாசலிலும் கொல்லைத் தோட்டத்திலும் உட்கார்ந்து பொழுதைப் போக்குகிறான். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்; மனங்கள் கனியத் தொடங்கி விட்டன என்றுதானே?

பஞ்சாங்கத்தை எடுத்துக் கொண்டு ஜோஸ்யரிடம் போனார் கிருஷ்ணன்.

'வெள்ளிக்கிழமை அமோகமான நாள்; சாந்தி முகூர்த்தத்துக்கு ஏற்ற திவ்யமான சுப நாள்' என்று ஜோஸ்யர் சொன்னதும் கிருஷ்ணன் காரியத்தில் இறங்கினார்.

ஸ்ரீதரனிடம் அவர் அதைக் கோடி காட்டிப் பேசிய போது அவன் பதில் எதும் சொல்லவில்லை. இது போதாதா கிருஷ்ணனுக்கு?

மௌனம் சம்மதத்தின் அறிகுறிதானே !

ஸ்ரீதரனின் ஒற்றைக் கட்டில் அப்புறப்படுத்தப்பட்டது. அழகான இரட்டைக் கட்டில், நாலு இஞ்ச் ரப்பர் மெத்தை; விரிப்புகள், படுத்துக்கொண்டே படிக்க ஏதுவாய் டேபிள் என்று எல்லாவற்றையும் தானே கடைகளுக்குச் சென்று பார்த்து பார்த்து வாங்கி ஸ்ரீதரனின் அறையை அலங்கரித்தார் கிருஷ்ணன்.

படுக்க மட்டும் அல்லாமல் மற்ற காரியங்களுக்கும் அகிலா அந்த அறையை உபயோகப்படுத்துவதால் நியாயம் என்று தோன்றியதால் தன் அறையிலிருந்த இரும்பு பீரோக்களில் ஒன்றைக் கொணர்ந்து ஸ்ரீதரனின் வார்ட்ரோபுக்கு பக்கத்தில் போடச் செய்தார்.

கடையிலிருந்து டால்கம் பவுடர், முகப்பவுடர், யூடிகோலோன், சென்ட், சாந்து, மை என்று தனக்குத் தெரிந்த தினுசில் ஒப்பனைச் சாமான்களையும் வாங்கி வந்து அகிலாவின் உபயோகத்துக்கென ஸ்ரீதரனின் டிரெஸ்ஸிங் டேபிள் மேல் வைக்கச் செய்தார்.

வீட்டில் இருந்த ஒருவராவது வாயைத் திறக்கவில்லை. இவர் இப்படி ஏற்பாடுகளைப் பண்ணுகிறாரே இந்த பிள்ளை ஒழுங்காக கோப, தாபம் இல்லாமல் இருக்க வேண்டுமே என்று ஜானகிக்கு மட்டும் அடிவயிற்றில் சங்கடம்.

பெற்ற தாயான அவளுக்கு ஸ்ரீதரனிடம் நின்று சேர்ந்தாற்போல இரண்டு வார்த்தைகள் பேசக்கூட பயம். இன்று நன்றாய்ப் பேசுவான்; நாளைக்கு முகத்தில் அறைந்த மாதிரி 'வள்'ளென்று விழுவான் என்பதால் பிள்ளையின் வழிக்கே ரொம்ப ஜானகி போகமாட்டாள். கணவன் மூலம் பிள்ளையிடம் பழகுவதோடு சரி, என்று இருந்ததால் அவளின் தவிப்பு அதிகமாகவே இருந்தது.



அன்று முதல் இரவு என்பது ஆட்கள் அனைவருக்கும் தெரிந்து போனது.

பெரிய ஐயா இத்தனை ஏற்பாடுகளைச் செய்கிறாரே கடைசி நிமிஷத்தில் ஸ்ரீதர் ஐயா 'எனக்கு ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம்; எல்லாரும் என்னைத் தனியாக விட்டு விட்டு ஒழிந்து போங்கள்' என்று கத்துவாரோ என்று எதிர்பார்த்துக் கொண்டே இருந்தனர்.

நல்ல வேளையாக அந்தத் தினுசில் அசம்பாவிதம் ஏதும் நடக்கவில்லை.

மாலை ஏழு மணி அளவில் மனைவியுடன் அகிலாவையும் அழைத்துக் கொண்டு ஸ்ரீரங்கத்துக்குப் போய் பெருமாளுக்கு அர்ச்சனை செய்து வந்தார் கிருஷ்ணன்.

இரவு சாப்பாடு ஆனது.

மாமியார், மாமனாரை நமஸ்கரித்தாள் அகிலா.

“எல்லாம் நல்லபடியாக இருக்கும், பயப்படாமல் போம்மா' என்ற ஆசியுடன் கணவனின் அறைக்குள் நுழைந்தாள்.

சினிமா முதலிரவுகள் போல பூ ஜோடனை, பழங்கள், பலகாரங்கள் ஒன்றும் இல்லை.

இரண்டு சந்தன வத்திகள் புகைந்து கொண்டிருந்தன. பக்கத்தில் வெள்ளி சொம்பில் பால்—அவ்வளவுதான்.

ஸ்ரீதரன் படுக்கையில இரண்டு தலைகாணிகளை ஒன்றின் மேல் ஒன்று வைத்து சாய்ந்த வண்ணம் படித்துக் கொண்டிருந்தான்.

அகிலா கிட்டத்தில் போய் நின்றாள்.

என்ன பேசுவது ?

யார் முதலில் பேசுவது?

செம்பிலிருந்த பாலை டம்ளரில் கொட்டிக் கொடுத்தாள். அவன் வாங்கி அருந்தி விட்டு நீட்டிய காலி டம்ளரை முக்காலி மேல் வைத்தாள்; முதலில் யார் பேசுவது?

நீட்டியிருந்த கால்களை மடித்து, கட்டிலில் பக்கவாட்டில் தொங்க விட்டு, போர்வையால் மூடிக்கொண்ட ஸ்ரீதர் "உட்காரு அகிலா" என்றான்.

உட்கார்ந்தாள்.

இருவருக்கும் இடையில் சாண் இடைவெளி.

ரேடியோவில் வயலின் இசை கேட்டது.

வஸந்த ராகமா? யார் வாசிக்கிறா? லால்குடியா?

மனசின் படபடப்பை அடக்கிக் கொண்டு, சங்கீதத்தில் கவனத்தைச் செலுத்தி பார்த்தாள் அகிலா.

மெதுவாய் கையை நீட்டி அகிலாவின் விரல்களை அமுக்கினான் ஸ்ரீதரன். பிடித்திருந்த கை விரல்கள் நடுங்குவதும், வியர்வையில் கசகசப்பதும் அகிலாவுக்குப் புரிந்தது.

கணவன் தன்னை விட உணர்ச்சி வசப்பட்டிருப்பதை உணர்ந்து கண்களை நிமிர்த்தி அவன் முகத்தைப் பார்த்தாள் அகிலா.

முதலிரவை அனுபவிக்கப் போகும் ஆணின் குறுகுறுப்போ, சந்தோஷமோ, விஷமக் களையோ ஒன்றும் இல்லை, சொல்லொண்ணா வேதனை மட்டும் விரவிக் கிடந்தது.

ஏனிந்த வேதனை?



என்ன பேசலாம், எந்த விதத்தில் பேசி இவரின் பதட்டத்தைக் குறைக்கலாம் என்று அகிலா எண்ணிக் கொண்டிருக்கையிலேயே ஸ்ரீதரனின் கண்கள் கலங்கின. கண்ணீர் கன்னத்தில் வழியத் தொடங்கியது.

பிறந்த நாள் முதற்கொண்டு ஆண்கள் அழுது அகிலா பார்த்ததில்லை.

சினிமா கதாநாயகர்கள் அழுது கண்டிருக்கிறாள். ஆனால் அவள் தந்தையோ, இல்லை அண்ணாவோ எதொரு கஷ்டத்துக்கும் கண்கலங்கி இவள் கண்டதில்லையாதலால் முப்பது வயதுக் கணவன் பச்சைப் பிள்ளை மாதிரி அழுவது அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

எதற்காக அழுகிறார்?

உடம்பு சரியில்லையா?

கால் வலிக்கிறதா?

இல்லை, என்னைப் பிடிக்கலையா?

"நான் கல்யாணம் பண்ணிண்டு இருக்கக் கூடாது அகிலா... நான் எதுக்குமே லாயக்கில்லாதவன்... உன் வாழ்க்கையை வீணாய் கெடுத்துட்டேன்..." வார்த்தைகள் வேதனையில் மூழ்கி வெளிவந்தன.

இவர் இதுக்காகவா அழறார்?

தன் இயலாமையை நினைச்சுண்டா அழறார்?

அகிலா பதறிப் போனாள்.

கடவுளே! இவரை என்ன சொல்லி சமாதானப் படுத்தணும்?

நொந்த மனசுக்கு இதமாய் என்ன சொல்லித் தேற்றணும்?

பெண் பார்க்க வந்த பிறகு மாமனார் தனியாக அழைத்துச் சொன்ன வார்த்தைகள் அகிலாவுக்கு ஞாபகம் வந்தன.

"ஸ்ரீதரன் இன்னும் பல விஷயங்களில் பிள்ளைக் குழந்தையாய் இருக்கான் அகிலா. அந்த ஈரக் களிமண்ணை நல்ல பொம்மையாக உருவாக்குவது உன் கையில் தானம்மா இருக்கு..."

அப்பாவுக்குத்தான் என்மேல் எத்தனை நம்பிக்கை! மனசும், காலும் சரியில்லாத கணவருக்குத் தைரியம் கொடுத்து அவர் வாழ்க்கையைப் புனருத்தாரணம் செய்யப்போறேன்னு அப்பா நம்பிண்டு இருக்கறதை நான் காப்பாத்த வேண்டுமே.

இப்போ என்ன சொல்லி இந்த துக்கத்தை மாத்தணும்?

கையை நீட்டி அழும் ஸ்ரீதரனின் கண்களைத் துடைத்தாள் அகிலா.

"எதுக்காக நீங்க இப்படி வருத்தப்படணும்? எனக்கு எந்த வகையில் இப்போ குறையிருக்கு? நான் சந்தோஷமாய் இருக்கேன்... என்னை நம்புங்கோ..."

மெதுவாய் ஐந்து வயதுப் பையனிடம் விளக்குவது போல அகிலா பேசுவதை ஸ்ரீதரன் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு "நான் புருஷனாக வாழத் தகுதியில்லாதவன் அகிலா... உன் வாழ்க்கையைப் பாழ் பண்ணிட்டேன்" என்று திரும்பத் திரும்ப இதையே கூறிக்கொண்டு அழுதான்.

அவன் கைகளை பலவந்தமாய் விலக்கினாள் அகிலா.

"நீங்க இப்படிக் காரணமில்லாமல் அழறதைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புதான் வரது... தப்பு தப்பாய் எதையோ புரிஞ்சுண்டு நீங்க வீணாய் கவலைப் படறேள்... என் வாழ்க்கை பாழாப் போச்சுனு நான் நினைக்கலையே. அப்புறம் நீங்க ஏன் வேதனைப் படணும்?"



"சும்மா என்னைத் திருப்தி பண்ண நீ அப்படி பேசறே அகிலா.. உன் மனசுக்கு உண்மை தெரியாதா? எனக்குக் கல்யாணம் வேண்டாம்னு அப்பாகிட்டே எத்தனை தடவைகள் சொன்னேன் தெரியுமா? அவர் பிடிவாதமா இருந்தார்... எனக்கு வேற வழியில்லை... அதனாலே சரின்னேன். இப்போ உன்னை பார்க்கும் போது நான் பண்ணின தப்பு நெஞ்சில் குத்தறது... ஐ'ம் அன்ஃபிட் ஃபார் மாரேஜ்... அகிலா..."

"நீங்க இப்படி அலட்டிக்கறதுக்குக் காரணம் எனக்குப் புரியலேயில்லையா? நான் என்ன பிள்ளைக் குழந்தையா? என்னை ஏமாத்திக் கல்யாணம் பண்ணிட்டாளா? எல்லாம் தெரிஞ்சு, உங்களைக் கல்யாணம் பண்ணிக்க மனப்பூர்வமாய் சம்மதிச்சு தானே நான் உங்களுக்கு மனைவியாயிருக்கேன்? என்னை ஏமாத்திட்டதாக நீங்க ஏன் வருத்தப்படணும், எனக்குப் புரியலையே!"

அகிலாவைப் பார்த்தான் ஸ்ரீதரன்.

"என்னைக் கல்யாணம் பண்ணிண்டதில் உன் மனசு வேதனைப் படலையா? என்னைப் பார்க்கும் போதெல்லாம் 'நொண்டிக்குப் பொண்டாட்டியாயிட்டோமே'னு உன் மனசு உறுத்தலையா?"

சின்னதாய் சிரித்தாள் அகிலா.

"என்னை நன்னா பாருங்கோ. அப்படியொரு வேதனையோட நான் இருக்கிற மாதிரியா உங்களுக்குத் தோணறது?"

"........."

"சத்தியமாச் சொல்றேன். நீங்க எனக்குக் கணவராய் வந்ததில் நான் ரொம்பப் பெருமைப் படறேன்... உங்களைக் கல்யாணம் பண்ணிட்டதுலேந்துதான் நான் உண்மையான சந்தோஷத்தோட இருக்கேன்னா நம்புவேளா?"

"என் கால் ஊனம் உனக்குக் குறையா தெரியலையா அகிலா? சதா சர்வகாலம் சக்கர நாற்காலியிலே உட்கார்ந்துண்டு இருக்கிறது உனக்குக் கஷ்டமா இல்லையா? ஊர் உலகத்தில் உள்ள மத்த பெண்கள் மாதிரி நீ உன் கணவனோடு நாலு இடத்துக்குப் போக முடியாது; சகஜமாய் பழக முடியாதுங்கறதெல்லாம் உனக்கு தோணலேயில்லையா?"

இல்லை என்று தலையாட்டினாள் அகிலா. ஸ்ரீதரனின் கையை எடுத்து தன் இரண்டு கைகளுக்குள் வைத்துக் கொண்டாள்.

"என்னை நன்னா பாருங்கோ. என் கறுப்பு நிறம் தெத்துப்பல் இதையெல்லாம் கவனிச்சுப் பாருங்கோ.. நான் கடுகத்தனை கூட அழகான பெண் இல்லை. ரொம்ப ரொம்ப, சாதாரணமானவள். படிப்பு எஸ்.எஸ்.எல்.சி. தான்; அப்பாவும், வாத்தியார் உத்தியோகம் பார்க்கிறவர். இத்தனை குறைபாடுகளோடு பிறந்திருக்கிற எனக்கு ராஜா மாதிரியான நீங்க புருஷனா கிடைச்சது என் அதிருஷ்டம்தானே! உங்களுக்குக் காலில் கொஞ்சம் ஊனம் இருப்பதால்தானே என்னை மனைவியாக ஏத்துக்க சம்மதிச்சேள்? நீங்க ஊனம் இல்லாதவராய் இருந்தால் அழகான, படிச்ச, பணக்கார வீட்டுப் பெண்தானே உங்களுக்கு மனைவியாகி இருப்பா?... என்னாலே உங்களுக்குப் பக்கத்துலே இப்படி உட்கார்ந்துண்டு இருப்பதைக் கனவிலும் நினைச்சுப் பார்க்க முடியுமா? ம்ஹூம். உங்களைப் பத்தியே குறைப்



பட்டுண்டு இருக்காமல், என்னையும் கொஞ்சம் நினைச்சுப் பாருங்கோ... எனக்கு வயசு இருபத்தி ஒண்ணு. அப்பாவுக்கு அக்கா கல்யாணம் கூடவே அடையலை; அண்ணா வேறு ஜாதிக்காரியை கல்யாணம் பண்ணிண்டு குடும்பப் பொறுப்பை உதறிட்டு போயிட்டான். என் கல்யாணங்கற பேச்சே இப்போதைக்கு கிடையாதுன்'னு நான் வாழ்ந்துண்டு இருந்த சமயத்துலே தெய்வாதீனமாய் தங்கக்கா மூலம் உங்க குடும்பத்தைப் பத்தி தெரிய வந்தது. உங்க அப்பாவைப் பார்த்தபோது 'தசரத சக்கரவர்த்தி' மாதிரி இருக்கு. 'இவருக்கு மாட்டுப் பெண்ணாய் போக எனக்கு என்ன தகுதி இருக்கு'ன்னுதான் நான் பயந்தேன். அப்புறம் நிச்சயதார்த்தத்தின் போது உங்களைப் பார்த்ததும் நலிச்சுப் போனேன். மன்மதன் மாதிரி இருக்கார். இவர் பக்கத்துலே நான் நின்னால் திருஷ்டிப்பரிகாரம் போல இருக்காதானு மருகப் போனேன். என் சங்கடம் புரிஞ்சு உங்கப்பா சொன்னார் 'உன் உடம்பு அழகானது இல்லை. ஆனால் மனசு அழகானதுனு என் பிள்ளைகளிடம் சொல்லியிருக்கேன்'னு. அந்த வார்த்தை தன் கொடுத்த தைரியத்தில் தான் நான் உங்களுக்கு மனைவியாகி, இந்த வீட்டில் இன்னிக்கு அந்தஸ்துடன் வளைய வரேன்... உங்களுக்குக் குறை இருப்பதாய் நான் நினைக்கலை... என்னை நம்புங்கோ."

மூச்சு விடாமல் பேசி நிறுத்தினாள் அகிலா.

குறுக்கே ஒரு வார்த்தை பேசாமல் அவள் பேசியதைக் கூர்ந்து கவனித்த ஸ்ரீதரின் முகத்தில் தெளிவு பிறந்தது.

பதில் பேசாமல் அகிலாவையே சில நிமிஷங்கள் பார்த்தவன் அவள் முகத்தை கைகளில் ஏந்தி "என் கண்ணுக்கு உன் கறுப்பு நிறமோ, இல்லை தெத்துப் பல்லோ தெரியலையே ஏன் அகிலா?" என்றான் மெல்ல.

என்ன மனிதர் இவர் ?

ஐந்து நிமிஷம் வரைக்கும் குழந்தை மாதிரி அழுதார். இப்போது ஒன்றுமே நடக்காத மாதிரி என் அழகை ஆராய்கிறாரே !

அகிலாவுக்குச் சிரிப்பு வந்தது.

'பக்'கென்று வாய் விட்டு சிரித்து விட்டாள்.

"நீ சிரிக்கிறபோது நிஜமாக அழகாய் இருக்கே அகிலா நீ..."

நான் அழகாய் இருக்கிறேனா ? சிரிக்கும்போதா ?

அகிலாவுக்கு வெட்கமாகவும், சந்தோஷமாகவும் இருந்தது. மூச்சு விட முடியாமல் மனசை இது நாழிகை அழுத்தின பாரம் குறைந்தமாதிரி இருந்தது. நெஞ்சுக்குள் யாரோ கிச்சு கிச்சு மூட்டுகிற மாதிரி இருந்தது.

தலையை நிமிர்த்தி கண்களை விரித்துப் பார்த்தவளை கிட்டத்தில் இழுத்து அணைத்துக் கொண்டான் ஸ்ரீதரன்.

பக்கத்தில் படுக்க வைத்துக்கொண்டு ஏதோ அதிசயத்தைப் பார்ப்பது மாதிரி இவளை உன்னித்து நோக்கி, தலை முடியை மெதுவாய் கோதிவிட்டு கன்னங்களைத் தடவிக் கொடுத்து மெத்தென முத்தமிட்டதும் அவள் சிலிர்த்துப் போனாள்.

என் தெத்துப்பல் இவருக்கு அசிங்கமாய்த் தெரியலையா ?

என் கருப்பு நிறம் இவருக்குக் குறையாய் இருக்கவில்லையா ?

நான் சிரிக்கும் போது அழகாய் இருக்கேனா ?

நிஜமாகவா ?



இத்தனை கம்பீரம் நிறைந்த புருஷனின் கண்களுக்கு நான் கவர்ச்சியாகத் தென்படுவது கூட சாத்தியமா?

அகிலா பூரித்துப் போனாள்.

கண்களை மூடிக் கொண்டு மகிழ்ந்து போனாள். நடுவில் ஒருமுறை கண்களைத் திறந்தாள். அவளை இறுக அணைத்து, வைத்த கண் வாங்காமல் ஸ்ரீதரன் பார்ப்பது கூச்சத்தைத் தர "என்ன அப்படிப் பார்க்கறேள் ?" என்றாள்.

"உன்னைப் பார்த்துண்டே இருக்கணும் போல இருக்கு, பார்க்கறேன். என் முப்பது வயசு காலத்திலே என்னிடம் இத்தனை அன்பாக, அருமையாக ஒரு ஆத்மா நடந்துண்டதில்லை. நான் ஊனமுள்ளவன் என்ற குறையோடு குமைந்தவனை தூக்கி 'நீதாண்டா என் ராஜா' என்று ஆகாசத்தில் உட்கார வைச்ச உன்னைப் பார்த்துண்டே இருக்கணும் போல இருக்கு அகிலா. ஏன் தப்பா ?"

"ம்ஹூம். தப்பே இல்லை" என்று அகிலா யோசித்து மேலே பேசினாள் : "என்னிடமுள்ள குறைகள் உங்க கண்ணுக்குத் தெரியாத மாதிரி உங்க குறையும் என் கண்ணுக்குத் தெரியாது... அதனாலே..."

"அதனாலே..."

"நீங்க கஷ்டப்பட்டு உங்க காலைப் போர்வையால் மூடிக்கறதை விட்டுடணும். சாதாரணமாய் இருக்கணும். என் கணவன் உடல் ஊனத்தாலே மனசுக்குள் சதா வருத்தப்படலை என்கிற சந்தோஷம் எனக்கு வரணும். செய்வேளா ?"

அகிலாவின் தலைப் பூவில் தன் முகத்தை புதைத்து மல்லிகையின் மணத்தை இழுத்து ரசித்தான் ஸ்ரீதரன். பின் தன் இரண்டு வலுவான கைகளாலும் பக்கத்தில்

படுத்திருந்த அகிலாவை தூக்கி தன் மார்பு மேல் கிடத்திக் கொண்டு "நீ இத்தனை அழகாய் பேச யாரிடம் கத்துண்டே அகிலா?..." என்று அன்பான தாயாய் கேட்டபோது போர்வை விலகி கும்பிய கால் வெளியில் தெரிந்ததை அவன் பொருட்படுத்தவில்லை.

## பதினைந்து

அம்பாஸிடர் காரின் எண்பது கிலோ மீட்டர் வேகம் அகிலாவுக்கு சந்தோஷத்தைத் தருவதாக இருந்தது. காற்றின் ஆவேசமான வேகத்தில் தலைமுடிகள் பறந்து, கண்ணில் விழுந்து, பார்வையை அவ்வப்போது மறைத்தாலும், முகத்தில் ஜிலீர் என அடித்த அந்தக் குளிர்ச்சி மனசுக்கு இதமாக இருந்ததால் ஜன்னல் கண்ணாடியை பாதி மட்டுமே போட்டிருந்தாள்.

அகிலா இதுநாள் வரை காரில் நீண்ட தூரப் பயணம் செய்தவள் இல்லை. ஒரே ஒரு முறை மட்டும் பஸ்ஸில் திருத்தணிக்குப் போய் வந்திருக்கிறாள், அவ்வளவுதான். அப்போது கூட பஸ்ஸின் குலுக்கலில் இரண்டு முறைகள் தலையை ஜன்னலுக்கு வெளியில் நீட்டி வாந்தி எடுத்துக் கொண்டே வந்ததால் சவாரி கொஞ்சம் கூட அவளுக்கு இன்பத்தைத் தரவில்லை. மேலும் 'நீங்க எல்லாத்துக்காக பஸ்ஸிலே வந்து எங்க உயிரை வாங்கறீங்க?' என்று அந்த சிடுமூஞ்சி கண்டக்டர் முணுமுணுத்ததும், சில பயணிகள் அருவருத்து முகம் சுளுக்கியதும், ஞாபகத்தில் இருந்ததால் அதன் பிறகு எங்காவது ஊருக்குப் போகச் சந்தர்ப்பம் எழுந்தால் பஸ் பயணம் தனக்கு ஒத்துக் கொள்ளாததைச் சொல்லி தான் போகாமல் நின்று விடுவாள்.



ஸ்ரீதரனை அணைத்துக் கொண்டு காரில் ஜன்னலோரம் போல் உட்கார்ந்து கொண்டு பயணம் என்று நினைத்த ஆனந்தம் கூடவே அகிலாவுக்குச் சந்தோஷம் தோன்றியது உண்மை தான்.

காரில் போவதற்குப் பழக்கம் இல்லையே! வழி நெடுக வண்டியை நிறுத்தி நிறுத்தி வாந்தி எடுத்தால் இவர் என்ன சொல்லுவாரோ? கூட வரும் மாமா நினைப்பாரோ? அப்பாவும், அம்மாவும்! சரியான பட்டிக்காட்டுப் பெண் என்று மாமியார் நினைத்துக் கொள்ள மாட்டாரா?

இப்படி தனக்குத்தானே செய்த யோசனையினால் பயந்து கொண்டிருந்த அகிலாவுக்கு வாந்தி தான் வரவில்லை என்றதும் கொஞ்சம் நிம்மதியாயிற்று.

"டாக்டரைப் பார்த்து என்ன வைத்தியம் செய்யணும், உடம்பு எப்படி இருக்குது என்றெல்லாம் கேட்டுண்டு வரப் போறதுக்கு நான் எதுக்கு? அவனை பார்த்துக்க அகிலா இருக்கா! துணைக்குப் பெரியவரா நீங்க! அப்புறம் நான் எதுக்கு. டாக்டர் என்ன சொன்னார்னு எனக்குப் போன் பண்ணிச் சொல்லுங்கோ. ஆஸ்பத்திரியிலேயே தொடர்ந்து தங்கி வைத்தியம் பண்ணிக்கணும்னு அபிப்ராயப்பட்டார்னா நான் கிளம்பி வரேன். இங்கே வீட்டை விட்டுட்டு நான் எதுக்கு இப்போ வெட்டியாய்?"

ஜானகியை கிருஷ்ணன் வற்புறுத்தவில்லை. அவள் சொல்வது போல அகிலாவும் தானும் இருக்கையில் இவளின் வரவு அனாவசியம் தான். 'அம்மா தண்ணி கொடு' 'அம்மா என் கூட இரு' என்று எதொன்றுக்கும் அழைக்கும் பிள்ளை இல்லை ஸ்ரீதரன்; அவனும் பிள்ளை மேல் பாசத்தைக் காட்டினும் பயத்தையே அதிகமாய்க்

கொண்டிருப்பதால் ஜானகியை கிருஷ்ணன் இருக்கையிலேயே விட்டு விட்டார்.

முதல் நாள் இரவு மாமனாரிடம் அகிலா கேட்டு விட்டாள், "நான் காரிலே ரொம்பப் போனதில்லை. வயித்தைப் பிரட்டினா என்னப்பா செய்யறது?"

"அதனால் என்னம்மா? தூங்கி எழுந்து காபி சாப்பிட்டதும் மாத்திரை தரேன் போட்டுண்டு கிளம்பினால், பிரட்டல் இருக்காது."

சொன்னபடியே இன்று காலை எழுந்து குளித்து தயாரானதும், புறப்பட அரைமணி இருக்கையில் 'அவோமின்' மாத்திரை ஒன்றை அகிலாவிடம் கொடுத்து போட்டுக் கொள்ளச் செய்தார் கிருஷ்ணன்.

ஆறு மணிக்குள் கிளம்பி விட்டார்கள். பகல் சாப்பாட்டுக்கு சென்னைக்குப் போய்விடத் திட்டம். எண்ணெய், மிளகாய் பொடி தடவின இட்லிகளும், வடைகள் சட்னியும், பிளாஸ்க் நிறைய காபியும் கூடையில் இருந்தன.

"காலை வேளையில் டிபன் வேண்டாம் வழியில் நிறுத்தி நாங்க சாப்பிட்டுக்கிறோம்" என்று கிருஷ்ணன் சொல்லி விட்டதால் இந்த ஏற்பாடு.

புறப்படும்போது கூட ஜானகி "வாந்தி எடுக்க வந்தா முன்னாடியே வண்டியை நிறுத்தச் சொல்லு. கடைசி நிமிஷம் வரைக்கும் கம்முனு இருக்காதே" என்று அகிலாவிடம் சொன்னவள் அம்மணியின் பக்கம் திரும்பி "ஒரு ஜக் தண்ணி உபரியா வை. இவளுக்கு வாய் அலம்ப, கொள்ள வசதியாய் இருக்கும். கார்லே போய் பழக்கம் இல்லையோன்னோ, அப்படிதான் இருக்கும்" என்று கூறினாள்.



"அவளுக்கு நீ பயம் காட்டி அந்த எண்ணத்தை உண்டாக்கிடுவாய் ஜானகி" என்று பாதி கேலியும் பாதி அதட்டலுமாய் கிருஷ்ணன் சொன்ன பிறகு வண்டியில் இவர்கள் ஏறி அமர்ந்தார்கள்.

முன்னால் கிருஷ்ணன், டிரைவர்; பின்னால் இவள் ஸ்ரீதரன்.

வண்டி புறப்பட்ட முதல் அரை மணியில் தலையைத் திருப்பி இவளை அடிக்கடி பார்த்த கிருஷ்ணன் ஓரிரு முறைகள் "என்னம்மா சாதாரணமாய் இருக்கியா?" என்று கேட்டார். பின்பு டிரைவரிடம் 'ரொம்ப குலுக்க வண்டியை ஓட்டாதே. பள்ளம் குழிகளைப் பார்த்து நிதானமாய் ஒரே ஸ்பீடில் ஓட்டு" என்று பணித்தார்.

மாமனார் கொடுத்த மாத்திரை நன்றாகவே வேலை செய்ய வண்டி பெரம்பலூரைத் தாண்டிய பிறகு இது நாழிகை 'வயிற்றை பிரட்டுமோ' என்று பயந்து கொண்டே வந்த எண்ணம் அகிலாவுக்கு மறையத் தொடங்கியது.

கிருஷ்ணன் ஸஹஸ்ரநாம புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு சின்னக் குரலில் பாராயணம் செய்ய முற்பட்டார்.

ஸ்ரீதரன் கண்களை லேசாய் மூடி இருந்தான்.

தூங்குகிறாரா என்ன?

கார்த்தால எழுந்து குளிச்சிட்டுதானே கிளம்பியிருக்கார்.

இப்போ எப்படி தூக்கம் வரது?

நிஜத் தூக்கமா? இல்லை அப்பாவின் எதிரில் எதும் பேச வேண்டாம் என்ற பொய்த் தூக்கமா?

சில நிமிஷங்கள் வரை ஸ்ரீதரனை கண் எடுக்காமல் பார்த்த அகிலா தன் பார்வையை ஜன்னலுக்கு வெளியில் திருப்பினாள்.

காலை நேரத்தில் கிராமப் பக்கம் எத்தனை அழகாய் இருக்கு?

சிகப்பும், பச்சையுமான புடவைகளை உடுத்தின பெண்கள் கூட்டமாய் ஆங்காங்கு நடந்து கொண்டிருந்தனர். ஒவ்வொருத்தர் கையிலும், இடுப்பிலும் சின்ன கூடை குறுவாள். பலரின் இடது பக்க இடுப்பில் கைக்குழந்தைகள்.

எங்கே போறா ?

நாத்து நடவா ? அதுக்கு எதுக்கு குறுவாள் ? களை எடுக்கவா, இல்லை அறுப்புக்கா ?

வழி நெடுக சின்னச் சின்னக் கிராமங்கள். பத்து குடிசைகள், ஒரு மாரியம்மன் அல்லது முனியாண்டி கோவில். சற்று தள்ளி ஆலமரத்தடியில் பிணங்களைப் புதைக்கும் இடுகாடு.

இந்த ஜனங்களின் வாழ்க்கைதான் எத்தனை எளிமையானதா இருக்கு !

கண்களை விரிந்துக் கொண்டு எல்லாவற்றையும் ஊன்றிப் பார்த்த அகிலாவுக்கு குடிசைகளின் அருகில் காணப்பட்ட வைக்கப் போர்கள் புது மாதிரியாகத் தெரிந்தது.

பட்டணத்தில் வைக்கல் பிரிகளை வண்டியில் கொண்டு வந்து விற்பதை அவள் பார்த்திருக்கிறாள். பின்னர் திருச்சி வீட்டுத் தோட்டத்தில்தான் முதன் முதலாக ஒரு பெரிய வீடு மாதிரியான அமைப்புடன் இருந்த வைக்கப் போரிலிருந்து தோட்டக்காரன் லாவக



மாய் வைக்கோலை அள்ளி மாடுகளுக்குப் போடுவதை அகிலா கண்டாள்.

இப்போது நெடுஞ்சாலையில் இருந்த போர்களின் விதவிதமான அமைப்புகள் பார்க்க ரொம்பவும் வேடிக்கையாக இருந்தன. குடிசை மாதிரி ஒன்று; ஓட்டு வீடு மாதிரி ஒன்று; கோவில் ரதம் போல உயர்ந்து நுனியில் கூம்பமாய சிறுத்து நின்றது ஒன்று.

இதிலிருந்து வைக்கோலை எப்படி எடுப்பா ? மேலேந்து எடுக்க மாட்டாளா ? அடியில் அழகாய் அறுத்து எடுப்பாளோ ?

திடீரென்று அகிலாவுக்குத் தான் முன்பு பார்த்த தமிழ் சினிமா ஒன்றின் ஞாபகம் வந்தது. கிராம பின்னணி சம்பந்தப்பட்ட படம் அது. கதாநாயகனும், நாயகியும் எந்நேரமும் வைக்கப் போரின் அருகில்தான் சந்திப்பார்கள், அதன் மேல் ஆடுவார்கள், குதிப்பார்கள், விழுந்து புரண்டு படுப்பார்கள்.

இத்தனை உயரமான வைக்கப் போர்மேல் ஏணி இல்லாமல் அவளாலே எப்படி ஏற முடியும் ? வைக்கோல் பட்டால் உடம்பு அரிக்காதோ ?

கார் ஒரு கிராமத்தைத் தாண்டின போது அடுத்தடுத்து பல வைக்கப்போர்களும், அவைகளைச் சுற்றி ஏராளமான வாத நாராயணன் மரங்கள் வரிசையாய் நின்றிருந்ததும் அகிலாவுக்கு அழகாகத் தென்பட்டது

வாத நாராயணன் மரத்தின் தோற்றம் அவளுக்கு ரொம்பப் பிடிக்கும்.

திருச்சி வீட்டில் வாத நாராயண மரங்கள் தோட்டத்தின் மூலையில், எருக் குழிக்கு அருகாமையில் உண்டு.

முதல் சில நாட்கள் அகிலாவுக்கும் இந்த மரங்களின் பேர் விபரம் தெரியவில்லை.

தோட்டத்தைக் கால் வலிக்க சுற்றிவரும் நேரங்களில் கட்டையாய்த் தண்டும், அதிலிருந்து குச்சிகுச்சியாய் பிரியும் கிளைகளும், இளம் பச்சை இலைகளும், ஒரு மயில் தோகை விரித்தாற் போன்ற பிரமையை ஏற்படுத்துவதால் அந்த மரங்களின் நூதனமான அமைப்பு வியப்பைத் தர தோட்டக்காரனிடம் அதைப் பற்றிக் கேட்டான்.

“இது வாத நாராயண மரங்க, இலையைப் பறிச்சு கஷாயம் வைச்சு சாப்பிட்டா எப்பேர்பட்ட வாதமும் மறைஞ்சுடும். தவிரவும் இது நல்ல உரத்துக்கு ஆகுற மரங்க... வருஷத்துக்கு ஒருமுறை கிளைகளை கழிச்சு நிலத்துக்கு தழைச் சத்தா போட்டா ரொம்ப நல்லதுங்க...”

ஓ! அதான் மரத்தின் அடித்தண்டு மொட்டையாய் உருண்டையாய் நுனியில் நின்று அதிலிருந்து சின்னச் சின்னக் கிளைகள் தோகை மாதிரி கிளம்புகின்றனவா? வருஷா வருஷம் வெட்டி விடுவதால் இந்த அமைப்பா?

“என்னம்மா அகிலா, வண்டியை நிறுத்தச் சொல்லட்டுமா? மரத்தடியிலே டிபன் சாப்பிடலாம்; அதோ அங்கே பம்புசெட், தண்ணி இருக்கு, கை அலம்ப சௌகர்யமாய் இருக்கும் என்ன ஸ்ரீதரா” அகிலாவும், விழித்துக் கொண்ட ஸ்ரீதரனும் சரி என்று தலையை ஆட்ட டிரைவரிடம் வண்டியை நிறுத்தச் சொன்னார் கிருஷ்ணன்.

வாழை இலைகளில் இரண்டு இட்லி, வடை சட்னியை வைத்து மாமனாரிடம், கணவனிடம், டிரைவரிடம் கொடுத்தாள் அகிலா.

“நீயும் எடுத்துக்கோ” அப்பாவுக்குக் கேட்காமல் மெல்லிய குரலில் பேசினான் ஸ்ரீதரன்.



“நீங்க எல்லாரும் சாப்பிடுங்கோ. உங்களுக்குக் கொடுத்துட்டு நான் எடுத்துக்கறேன்.”

சீட்டில் சாய்ந்து அமர்ந்து டிபனை சாப்பிட்ட கணவனுக்கு கை அலம்பவும் பின் குடிக்கவும் தண்ணீர் கொடுத்தாள் அகிலா. அப்பா பார்க்காத சமயத்தில் காபி நீட்டின அவன் கையைப் பிடித்துக் கொண்டு விடமாட்டேன் என்று வம்புசெய்தது அகிலாவுக்குப் பிடித்திருந்தது.

இத்தனை நேரம் சாதுமாதிரி தூக்கம், இப்போ?

இவரா சாது? அடேயப்பா! ஆள் ஏமாந்தால் விழுங்கி விடுவாரே!

மாமனாரும், மாமியாரும் கணவனை சின்னக் குழந்தை என எண்ணுவது சிரிப்பைத் தர, சின்னதாய் புன்னகைத்துக் கொண்டே காபி டம்ளர்களை பம்பு செட்டிலிருந்து 'ஜோ' வென்று கொட்டிய தண்ணீரில் அலம்ப எடுத்துப் போனாள் அகிலா.

பம்பு செட்டு கொட்டகை சுவரில் ஒட்டியிருந்த விளம்பர நோட்டீஸ் ஒன்று அவள் கவனத்தைக் கவர்ந்தது.

எந்த மன்னர் காலத்து சினிமாவோ? பெயர் தெரியவில்லை ஹீரோ, ஹீரோயினை உயரே தூக்கிப்பிடித்திருந்தான். ஹீரோயின் முகம் இருந்த இடத்தில் ஒரு சாணி உருண்டை இருந்தது. ஹீரோயின் குண்டு பூசணிக்காயாய் 'பம்' என்று இருந்தாள்.

யார் இவன்? பேர் ஞாபகத்துக்கு வரலியே; ஆமாம் ஒல்லியாய் இருக்கும் இவன் இவளைத் தூக்க எத்தனை கஷ்டப்பட்டிருப்பான்? மூச்சுத்திணற தூக்கும்போது இன்ப உணர்வா எழும்?

பம்பு கொட்டகையை ஒட்டியிருந்த வாத நாராயணன் மரங்களை அகிலாவின் கண்கள் காண நேர்ந்ததும் திடீரென்று மனசுக்குள் ஒரு கற்பனை உருவானது.

வாத நாராயணன் இலைகளைப் பறித்து கஷாயம் வைத்து ஸ்ரீதரனுக்கு அகிலா தருகிறாள். ஒரே மடக்கில் குடித்தவன் படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்து இறங்குகிறான். 'ஹேய் அகிலா என்னைப் பார் என்னால் நடக்க முடிகிறது; ஓட முடிகிறது; உன்னைத் தூக்கக்கூட முடிகிறது' என்று கூவி அகிலாவை இரண்டு கைகளாலும் ஆட்டுக் குட்டியை தூக்குகிற மாதிரி தூக்கிக் கொண்டு தோட்டத்துக்கு ஓடுகிறான். பெரிய வைக்கப் போர்; தேர் போல நின்று கொண்டிருக்கிறது. அடுத்த கணம் அகிலாவும், ஸ்ரீதரனும் அதன் உச்சியில் இருக்கிறார்கள். ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு உருளுகிறார்கள். பொத்தென்று அகிலா வழுக்கி விழுந்து விடுகிறாள்.

'டமார்' என்ற சப்தத்தோடு தேய்த்து வைத்த டம்ளர், டிபன் பாத்திரங்கள் உருள அகிலா கற்பனையிலிருந்து மீண்டாள்.

என்ன முட்டாள்தனத்திலேயும் மடமண்டுத்தனமான எண்ணம்!

இந்த மனசுக்குள் குழந்தைத்தனமாய் என்னென்ன ஆசைகள்.

"என்னம்மா சப்தம்?" கிருஷ்ணனின் குரல் கேட்டது.

"ஒண்ணுமில்லைப்பா, கை தவறிடுத்து."

பாத்திரங்களைக் கொணர்ந்து டிக்கியில் வைத்து விட்டு அவள் காரில் ஏறி அமர பயணம் தொடர்ந்தது.

அகிலாவின் உள்ளங்கையைப் பிரித்து அதில் ஐ லவ் யூ என்று ஸ்ரீதரன் ஆள் காட்டி விரலால் ஒவ்வொரு எழுத்தாக எழுதினான்.



அகிலாவுக்கு கணவனின் குறும்பு சந்தோஷத்தைக் கொடுத்தாலும், மாமனார் பார்த்து விடப் போகிறாரே என்று கூச்சமாகவும் இருந்தது.

கையைப் பலவந்தமாக விடுவித்துக் கொண்டவள், '...ப்ளீஸ்' என்று உதடுகளைக் குவித்து முணுமுணுத்துக் கெஞ்சினாள்.

கணவனுடன் பழகும் இந்த நாலு மாதங்களில் நன்றாக அவனைப் புரிந்து கொண்டு விட்டாள் அகிலா.

கிருஷ்ணன் சொன்ன மாதிரி பல சமயங்களில் அவன் பச்சைக் குழந்தையின் பிடிவாதம், முரட்டுத்தனம், கோப, தாபத்துடன் இருப்பான்; சில சமயங்களில் இந்த உலகத்துக்கும் எனக்கும் என்ன சம்பந்தம், நான் ஏன் வாழ்கிறேன் என்ற சூன்யத்தில் ஆழ்ந்து உணர்ச்சிகளே அற்றுப் போவான்.

தன் உடம்பின் குறை காரணமாக, மனசில் ரணமாய் பூத்துப் போன தாழ்வு மனப்பான்மையின் காரணமாக பிறர் எது சொன்னாலும் சட்டென்று அதை எதிர்க்கவும், எளிதில் எவர் சொல்லுக்கும் அடங்காத குணமும் கணவனிடம் இருப்பதை முதல் சில நாட்களிலேயே அகிலா நன்கு உணர்ந்து கொண்டு விட்டதால் அவனிடம் பக்குவமாய் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டு நடந்தாள். வலிய தானாக ஒரு யோசனையும் சொல்ல மாட்டாள். அவன் போக்குக்கே போய் அவன் செய்வதை சரி என்று ஆமோதித்து, பின் அவனையே இது நடக்குமா என்று யோசனை பண்ண வைத்தாள். காரணமில்லாமல் திடீரென்று கத்துவான், திட்டுவான், கையில் அகப்பட்டதை தட்டி விடுவான். 'என் முகத்துக்கு எதிரில் யாரும் நிற்க வேண்டாம். ஒழிந்து போங்கள்' என்று பிசாசாய் அலறுவான்.

சாதாரணமாக இப்படி இன்னதற்கு என்று இல்லாமல் ஸ்ரீதரனின் கோபம் பிரவாகமெடுக்கும் போது முத்தையன் வெளியேறி விடுவான்; கிருஷ்ணவேணி, ஜானகியோ அவன் ஆவேசம் அடங்கும் வரை அவன் முன் எட்டிக்கூடப் பார்க்க மாட்டார்கள்.

ஆனால் அகிலாவின் நடத்தை இதற்கு மாறாக இருந்தது.

ஸ்ரீதரன் கத்தலைக் கேட்டுக் கொள்வாள்; விசிறி எறியும் பொருளை பொறுக்கி அதன் இடத்தில் வைப்பாள். 'போய்த் தொலை' என்று விரட்டினாலும் ஒரு பக்கமாய் நின்று வாய் வார்த்தையாக எதும் பேசாமல் கனிவுடன் அன்பு ததும்ப அவனைப் பார்ப்பாள்.

அந்த நிமிஷங்கள்தான் சீறிக் கொண்டு எழுந்த ஆத்திரம் அடங்கிவிடும். உப்பு சப்பில்லாத விஷயத்துக்காக ஆர்ப்பாட்டம் பண்ணிவிட்டோமே என்று அவன் புழுங்குகிறான் என்பதை புரிந்து கொண்டு அவன் வருத்தத்தைப் போக்கும் நினைப்பில் ஒன்றுமே நடக்காத மாதிரி சகஜமாய் இருப்பாள் அகிலா.

"எனக்கு ஏன் இப்படி கோபம், ஆத்திரம் வரது அகிலா? நானும் கன்ட்ரோல் பண்ணிதான் பார்க்கிறேன் முடியலை" என்று இவளின் தோள்களில் தலையை சாய்த்துக் கொண்டு அவன் பேசும் போது அகிலாவுக்குப் பாவமாக இருக்கும்.

தன் செய்கைகளால் ஸ்ரீதரன் வருந்தும்போது எதையாவது சொல்லி அவனைச் சமாதானம் செய்ய அகிலா என்றும் தவறியதில்லை.

"காபி சூடு ஆறியிருந்தால் எனக்குக் கூடத்தான் கோபம் வரும். இன்னிக்கு நான் என்னமோ கவனமாய் இருந்த, ஆறி சில்லிட்டுப் போன காபியை எடுத்துண்டு வந்தேன்" என்பாள்.



"அறை ரொம்ப வெக்கையாய் இருக்கு. காத்தோட்டம் இல்லை. ஊரில் வெயில் ஜாஸ்தியாய் இருக்கிறதாலே புழுக்கமும், வியர்வையுமா எல்லோருக்குமே எரிச்சல் வரது. உங்களுக்கு மட்டும் இல்லை" என்பாள்.

"உங்களுக்கு பசி வந்துடுத்து. நேரத்தோட டிபன் கொண்டு வராதது என் தப்புத்தான். ஸாரி மன்னிச்சுக்குங்கோ" என்பாள்.

"படிக்க நல்ல புஸ்தகம் இல்லாட்டா, ரேடியோவில் நல்ல சங்கீதம் இல்லாட்டா போர் அடிச்சா எல்லாருக்கும் கோபம் வரது சகஜம் தான். உங்க இடத்துலே யார் இருந்தாலும் இப்படித்தான் நடந்துப்பா" என்பாள்.

இப்படி என்னென்னவோ சமாதானங்கள்.

ஆகமொத்தம், ஸ்ரீதரன் கத்துவதிலோ, கோபப்படுவதிலோ தப்பு ஒன்றுமில்லை, கால் விளங்காவிட்டாலும் அவனுக்கும் மற்ற மனிதர் மாதிரி ஆசாபாசங்கள் இருக்கத்தான் செய்யும். அவனின் நடத்தையில், பேச்சில்-எண்ணத்தில் எதுவும் குறையாக இல்லை என்பதை, சதா அகிலா பேசியும், நடந்தும், உணர்ந்தும் காட்டியதால் எண்ணி மாசங்கள் மூன்று ஆவதற்குள் ஸ்ரீதரனிடத்தில் மகத்தான மாறுதல்கள் தோன்றின.

கோபதாபங்கள் குறைந்தன; சிடுமூஞ்சித்தனம் கொஞ்சம் மறைந்தது. தனிமையில் மறுகியவன் நாலு பேர்களுடன் சில வார்த்தைகள் பேச முற்பட்டான்.

தனி அறையில் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டவன் சில சமயங்களில் அப்பா, தங்கையுடன் டைனிங் ஹாலில் டிபன், சாப்பாடு சாப்பிடத் தொடங்கினான்.

முப்பது வருஷங்களாக சுருண்டு கிடந்த மகனின் வாழ்க்கையை மூன்றே மாச சரியான, அனுசரணையான

கவனிப்பினால் மருமகள் மாறத் தொடங்கியிருப்பது கிருஷ்ணனுக்கு விளக்கத் தெரியாத நிம்மதியைத் தந்தது.

மத்தியான வேளைகளில் இரண்டிலிருந்து நாலு வரை ஸ்ரீகாந்த் தூங்கும் வழக்கம் உடையவன். மூன்று மணி தவறாமல் ஜானகி மாடு கன்றுகளை, பண்ணை ஆட்களின் சாப்பாட்டை கவனிக்க தோட்டப்பக்கம் போனால் நாலு மணிக்கு காபி சாப்பிடத்தான் திரும்புவாள். இந்த ஒரு மணி நேரத்தில் அவசியம் ஏற்பட்டால் அகிலாவுடன் மனம் விட்டுப் பேசுவது கிருஷ்ணனுக்குச் சௌகரியமாய் இருந்தது.

ஜானகிக்குத் தெரியாமல் அகிலாவுடன் பேச வேண்டும் என்ற எண்ணம் இல்லை; அவள் புரிந்து கொள்ள மறுப்பவைகளை, ஏற்றுக் கொள்ள விரும்பாதவைகளைப் பற்றி அவள் முன் பேசி விவாதத்தை வீணே கிளப்ப ஆசையில்லாததாலேயே கிருஷ்ணன் அகிலாவிடம் இப்படித் தனிமையில் சில விஷயங்களைப் பற்றி பேசத் தொடங்கினார்.

அவர் எத்தனை முயன்றும் அகிலாவை மனப்பூர்வமாக மாட்டுப் பெண்ணாக ஜானகி ஏற்றுக் கொள்ளாதது அவருக்கு வருத்தம்தான்.

பணம், காசு, புடவைகள், நகைகள் என்று எதிலும் அகிலாவுக்கு அவர் குறை வைக்கவில்லை.

இந்த சில மாசங்களில் பீரோ கொள்ளாமல் அகிலாவுக்கு புடவைகள் சேர்ந்துவிட்டன. காதில் வைரத்தோடு மூக்கில் வைர பேசரி, கழுத்தில் தங்கச்சரடு, ஒற்றை வடம் சங்கிலி, கையில் இரண்டு ஜதை வளையல்கள், இடுப்பில் 'கர்விசாய் நைலான் அல்லது பட்டுப் புடவை, தலை கொள்ளாமல் பூ என்று வீட்டில் வளைய வரும் மருமகளை காண்கையில் நிஜமாகவே கிருஷ்ணனுக்கு இந்தப் பெண்ணுக்கு தாம் ஒரு குறையும் வைக்கவில்லை



என்ற திருப்தி உண்டானாலும் ஜானகி அகிலாவுடன் அன்யோன்யமாகப் பழகாதது அவருக்கு வருத்தம் தான்.

மாட்டுப் பெண்ணுக்காக என்று கிருஷ்ணன் புடவையும், நகையும் வாரிக் கொடுக்கும் போது "ஒரேயடியாய் அள்ளிக் கொடுக்கணுமா? இத்தனை புடவைகளை தேர்த்தியாய் வைச்சுக்கக்கூட அவளுக்குத் தெரியலையே! பண்டிகைகளுக்கு கொடுத்தால் போதாதா? காரணமில்லாமல் எதுக்கு இத்தனை?" என்று சில சமயங்களை அவரிடம் ஜானகி முணுமுணுக்கவே செய்தாள்.

முதல் ஓரிரு தடவைகள் சும்மா இருந்தவர் ஒரு நாள் தாள முடியாமல் "வித்யா நினுக நினுசாய் கட்டும்போது இவளுக்கு ஏக்கம் வரலாம்... காசு கொடுத்தா வாங்கறேன் ஜானகி? கடையில் கிடைப்பதைக் கொண்டு வந்து தரேன். அவ்வளவுதானே?" என்றார்.

"வித்யா மாதிரியா இவள்? மாட்டுப்பெண்ணுக்கு தாராளமாய் செய்யுங்கோ. நான் வேண்டாங்கலை. ஆனா வித்யாவோட ஒப்பிட வேண்டாம். எனக்குப் பிடிக்கலை."

கிருஷ்ணனுக்கு சுள்ளென்று கோபம் எழுந்தது.

"என் மனசுக்கு அகிலாவும், வித்யாவும் ஒன்று தான். சரி... சரி... இந்த விஷயத்தை இதோடு விடு" என்று அதட்டலாய் பேசிவிட்டு அந்தப் பக்கம் நகர்ந்து விட்டார்.

பணமும், குடும்ப கௌரவமும், அந்தஸ்தும் கண்களில் தெரியும் அளவுக்கு இந்தப் பெண்ணின் குணம் ஜானகிக்குத் தெரிய மாட்டேன் என்கிறதே என்று அவருக்கு ஏக வருத்தம்.

தன் எதிரில் கொஞ்சம் அடங்கியவளாய் எதுவும் குத்திக்காட்டிப் பேச முற்படாத மனைவி தனக்குப்

பின்னால் அகிலாவின் ஏழ்மையை, பிறந்தகத்தை, அழகில்லாத உருவத்தைப் பற்றி சமயம் கிடைத்தால் சொல்லிக்காட்டுகிறாள் என்பதும் கிருஷ்ணன் அறிந்தது தான்.

கண்ணைக் கட்டிவிட்ட குதிரையாக இத்தனை வருஷங்கள் வாழ்ந்துவிட்ட ஜானகியை அவரால் திருத்த முடியவில்லையே தவிர, இவர் வலுக்கட்டாயமாக ஏதாவது சொல்லப்போய் அது ரசாபாசமாக ஆகிவிடக் கூடாதே என்ற கவலை இருந்ததால் ஜானகியை ஓரளவுக்குக் கண்டித்து வைத்ததுடன் விட்டு விட்டார்

ஆனால் மௌனமாய் ஜானகியை அகிலாவால் கவர என்னவெல்லாம் வழி உண்டோ அதையெல்லாம் செய்ய அவர் தவறவில்லை.

நடுவில் இரண்டு முறைகள் சென்னைக்கு வேலை நிமித்தமாய் போக நேர்ந்து ஊர் திரும்பியபோது கூடை பழம், தின்பண்டங்கள் என்று கார் கொள்ளாமல் எதையாவது கொண்டு வந்தார்.

“சம்பந்தி கொடுத்தார் ஜானகி. வேண்டாம் என்றால் கேட்டால்தானே” என்றார்.

பார்த்துக் கொண்டே நிற்கும் அகிலாவுக்குப் புரிந்து விடும். சின்னதாய் தூக்கில் இருக்கும் கிரட்டுப்பாலை மட்டும் அம்மா கொடுத்திருப்பாள். பாக்கியை மாமியாரின் சந்தோஷத்துக்காக சொந்த செலவில் மாமனாரே வாங்கி வருகிறார் என்பது அவளுக்கா தெரியாது?

கே. ஸி. தாஸ் ரஸகுல்லா என்றால் ஜானகிக்கும், வித்யாவுக்கும் பிரியம்.

இரண்டு டின்களை எடுத்துத் தந்து “சம்பந்திக்குத் தெரிந்தவர் பங்களூரிலிருந்து நாலு டின்கள் வாங்கி வந்தாராம். நமக்கு இரண்டை கொடுத்திருக்கிறார்.”



“பெங்களூரிலே உங்களுக்குத் தெரிஞ்சவா யாரு?” என்று அப்புறம் ரஸகுல்லா தின்ற திருப்தியுடன் ஜானகி கேட்டதும் பொய் சொல்லுவதற்கு அகிலா சிரமப் பட்டுப் போனாள்.

“யாராவது ஸ்டூடன்ஸாக இருக்கும்.”

இதைப் பற்றி மாமனாரிடம் கேட்க வேண்டும் என்று அகிலா எண்ணியிருந்ததை அவர் எப்படித்தான் புரிந்து கொண்டாரோ, ஒரு நாள் பிற்பகலில் அவராகவே இந்த விஷயத்தைக் கிளப்பினார்.

“இரண்டு தடவை மெட்ராஸிலிருந்து நான் உங்கப்பா கொடுத்ததாக சாமான்கள் கொண்டு வந்ததை, நீ புரிஞ்சிண்டு இருப்பேங்கறதை உன் முக பாவமே காட்டிடுத்து... இதுலே தப்பு ஒண்ணும் இல்லேம்மா... நான் முன்பே உன்கிட்டே சொல்லி இருக்கேன். ஜானகி ஒரு மாதிரினு... அவள் திருப்திக்காக இந்த சின்னப் பொய்களைச் சொல்லுவதிலே உனக்கு ஏதாவது ஆட்சேபணை உண்டுன்னா சொல்லு... இனிமே அப்படிச் செய்யலை.”

மாமனாரின் உயர்ந்த பண்பு அகிலாவுக்குப் புரியாமல் இல்லை. தனக்கு மாமியாரிடம் நல்லபேர் வாங்கித் தர வேண்டும் என்ற துடிப்பில் பெரியவரான அவர் பொய் சொல்லுகிறார் என்பது புரிய பேசாமல் தலைச் நின்றாள்.

“இந்த சில்லறை விஷயங்களை விடு அகிலா. உன் கவனமெல்லாம் உன் கணவனை சரி பண்ணுவதில்தான் இருக்கணும்... ஸ்ரீதரன் ரொம்ப மாறியிருக்கான்; இப்படியே அவனை வழிக்குக் கொண்டு வந்து திரும்ப சிகிச்சை எடுத்துக்கப் பண்ணிடணும்; உன்னாலே அது கண்டிப்பாய் முடியும்னு நான் நம்பறேன்... முயற்சியைத் தொடர்ந்து விடாமச் செய் அகிலா. ஜானகியைப்

பத்தியோ இல்லை, ஸ்ரீதரனின் கோபதாபங்களைப் பத்தியோ கவலைப்படாமல் நீ உன் லட்சியத்தில் குறியா இருக்கணும், செய்வியாம்மா? அப்புறம் உனக்கு ஏதாவது இந்தாத்துலே குறை இருந்தா என் கிட்ட தைரியமா சொல்லு... நீ மனசு சந்தோஷமா நிம்மதியோட இருக்கிறது எனக்கு முக்கியம். செய்வியாம்மா?”

நிமிர்ந்து அவரைப் பார்த்தாள் அகிலா.

இவர் என் மேல் இத்தனை நம்பிக்கை வைச்சிருக்காரே! நான் அதைப் பொய்யாக்காமல் இருக்கணுமே! வைத்தியம் டாக்டர் என்று பேச்செடுத்தாலேயே தன் பிள்ளை பயப்படறது இவருக்குத் தெரியுமோ? தன் குறையைச் சுட்டிக் காட்டி பேசறேன்னும் சுருங்கிப் போயிடறார் என்பதை இவரிடம் சொன்னால் மனசு நொந்து போக மாட்டாரா?

அன்று இரவு வெகு நேரத்துக்கு தூங்காமல் அகிலா யோசித்துக் கொண்டிருந்தாள்.

அது எப்படி ஆனாலும் ஸ்ரீதரன் கத்தினாலும் திட்டினாலும், எந்த விதத்திலாவது டாக்டரைப் பார்க்க சம்மதிக்க வைக்க வேண்டும் என்று வைராக்கியத்தை எடுத்தாள். தீவிரமாக முனைந்து அதில் ஓர் மாசத்தில் வெற்றியும் கண்டாள்.

“டாக்டரைப் பார்க்கறதுலே என்ன தப்பு? வைத்தியம் தொடங்க வேண்டாம். சும்மா பார்த்து விட்டு வரலாம்... ப்ளீஸ்... உங்க காலில் பெரிய கோளாறு ஏதும் இல்லைனு என் மனசு சொல்றது. உங்களால நடக்க முடிஞ்சா எத்தனை ஜோராய் இருக்கும்? யோசிச்சுப் பாருங்களேன்... உங்களோடு சேர்ந்து ஜம்முனு பீச்சில், பார்க்கில் நடக்க முடியுமானால் அதைவிட எனக்கு சந்தோஷம் தரக்கூடியது வேற ஒண்ணும் இல்லை... ப்ளீஸ் டாக்டரைப் பார்க்கப்



போகலாமே... பார்த்துப் பேசலாம்... ஏதாவது காரணத்தால் உங்களுக்கு வைத்தியம் எடுத்துக்கப் பிடிக்கலைன்னா டாக்டர் சொல்றதில் நம்பிக்கை இல்லைன்னா, உடனடியா திரும்பிடுவோம்... அப்புறம் நான் உங்களை மறுபடி கட்டாயப்படுத்த மாட்டேன். ப்ராமிஸ்... எனக்காக ப்ளீஸ்... எனக்காக... ஒரே ஒரு தரம் ப்ளீஸ்...”

முதலில் மூர்க்கமாய் மறுத்த ஸ்ரீதரன் நாளடைவில் அகிலாவின் கெஞ்சலுக்கு அடிபணிந்து சென்னைக்குச் சென்று ஸ்பெஷலிஸ்டைப் பார்க்க ஒப்புக் கொண்டான்.

ரயிலில் சௌகரியமாய் முதல் வகுப்பில் பிரயாணம் செய்து சென்னையை அடையலாம் என்று கிருஷ்ணன் சொன்னாரோ இல்லையோ ஸ்ரீதரன் மறுபடியும் வேகமாக மாறி முருங்கை மரம் ஏறி விட்டான்.

“எனக்கு ட்ராவல் பண்ணனும் போல இல்லை. மெட்ராஸ் ட்ரிப் இப்போ வேண்டாம்.”

ஸ்ரீதரன் ஏன் மறுக்கிறான் என்று அகிலாவால ஊகிக்க முடிந்தது.

ரயிலடியில், பயணத்தில் நூற்றுக்கணக்கான மனிதர்களைப் பார்க்க நேரிடும். எல்லாரும் இவர் காலை, இவரை பரிதாபத்துடன் பார்ப்பார்கள்; எதற்கு வீணாய் அவதிப்படவேண்டும்? என்று தயங்குகிறார் என்று அகிலா நினைத்தது ரொம்ப சரி.

மாமனாரிடம் தன் சந்தேகத்தைச் சொன்னாள்.

கிருஷ்ணன் புரிந்து கொண்டார்.

அம்பாஸிடர் காரில் சென்னைக்குப் போய், செயிண்ட் மேரி சாலையில் இருந்த தனியார் மருத்துவ மனையில்

அட்மிட் ஆனபடி எல்லா டெஸ்டுகளையும் செய்து, டாக்டர்களையும் தருவித்து பார்க்கச் சொல்லலாம் என்று அவர் தீர்மானித்ததை ஒரு வழியாய் ஸ்ரீதரன் ஏற்றுக்கொண்டான்.

சென்னையை நெருங்க நெருங்க பெற்றோர், தம்பி, தங்கையைப் பார்க்கப் போகிறோம் என்ற நினைப்போடு டாக்டர் எளிதானச் சிகிச்சையை செய்ய வேண்டுமே நல்ல புத்தியுடன் அதை இவர் ஏற்க வேண்டுமே, எல்லாம் நல்லபடி நடக்க வேண்டுமே, என்ற ஆதங்கமும் சேர்ந்து கொண்டதால் நிம்மதியாய் காரில் சாய்ந்து உட்கார முடியாதபடி அகிலாவினுள் பரபரப்புத் தோன்றி அவளை அலைக்கழித்தது.

## பதினாறு

இரண்டாம் நாள் பிற்பகல் முடிவுகள் தெரிந்து விட்டன.

வலது தொடையில் சில தசைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இடது தொடை, முட்டுக்கால், கெண்டை தசை முதலியன வியாதியால் தாக்கப்படவில்லை. சிறுவயதிலிருந்து வலது காலை உபயோகிக்க முடியாமல் தவழ்ந்து பின்பு சக்கர நாற்காலியில் அமர்ந்து பழகிவிட்டதால் இடது காலும் தன் பலத்தை வளர்த்துக் கொள்ளவில்லை. சரியான சிகிச்சை செய்வதன் மூலம் காலை நல்ல நிலைமைக்குக் கொண்டு வரவும், வலது காலில் சில ஆபரேஷன்கள் செய்து அதையும் ஓரளவுக்கு சரியாக்குவதும் சாத்தியமே என்று ஸ்ரீதரனை பரிசோதித்த சென்னையின் முன்னணி டாக்டர் ஒருசேர தங்கள் அபிப்ராயத்தைத் தெரிவித்ததும் சந்தோஷத்தில் அகிலாவின் கண்களில் நீர் திரண்டு விட்டது.



இரண்டு நாட்களாய் எவ்வளவோ டெஸ்டுகள், எத்தனை பிரபல டாக்டர்களின் விஜயங்கள்

எலும்புத்துறை நிபுணர், நரம்பியல் நிபுணர், மற்ற ஜெனரல் பிஸிஷியன் என்று பேர் பெற்றவர்களெல்லாம் ஸ்ரீதரனைப் பரிசோதித்தார்கள்.

ஒரு மாஸ்டர் செக் அப்பைச் செய்து விட்டால் நல்லது என்று அதையும் செய்தார்கள்

ரத்தம், மலம், மூத்திரம் இவைகளுக்கு விதவிதமாய் டெஸ்டுகள். இ.ஸி.ஜி. மற்றும் எக்ஸ்ரே படங்கள் இ.என்.டி. துறையைக் கூட விட்டு வைக்கவில்லை, கடவுள் கிருபையால் எல்லாம் நார்மல் என்று ஒவ்வொரு ரிப்போர்ட்டாக வந்து விட்டது.

கால்களை புரட்டிப் புரட்டி டெஸ்ட் செய்த டாக்டர்களும் கண்டிப்பாய் இரண்டு வருஷ காலத்தில் அவனைப் புது மனிதனாக்கி விடலாம் என்று அடித்துச் சொல்லி விட்டார்கள்.

எலும்புத்துறை நிபுணர் ஸ்ரீதரனுக்கு எதிரிலேயே தேவையான வைத்தியத்தைப் பற்றி நீளமாய் பேசினார்.

"உங்கள் இன்றைய நிலைமைக்குக் காரணம் ஷியர் நெக்லிஜன்ஸ், மிஸ்டர் ஸ்ரீதரன். படித்த நீங்கள் எல்லாம் எப்படி இத்தனை அசிரத்தையாய் இருக்கலாம்? ம்? ஓ.கே. லெட் பைகான்ஸ் பீ பைகான்ஸ். இனிமே நடக்கப்போவதைப் பற்றிப் பேசுவோம்... டெண்டன் ட்ரான்ஸ்ப்ளான்டேஷன் ஆபரேஷன் செய்வதன் மூலம் உங்கள் வலது தொடையை ஓரளவுக்கு குணமாக்க முடியும் இதை ஒரே ஸிட்டிங்கில் செய்வது கஷ்டம். மூன்று அல்லது நாலு ஆபரேஷன்களாக செய்வது நல்லது. இதன் கூடவே பிஸியோ தெரபி, நல்ல எக்ஸர்ஸைஸ், மருந்துகள்

இலைகளையும் சேர்த்து அனித்து உங்கள் கும்பிப் போல வீட்டு சாலை வலுவானதான ஆக்கி விடலாம்... ஆக உங்கள் ஒத்துழைப்பு இருந்தால் இரண்டு வருஷத்தில் உங்களை நடக்க வைக்க என்னால் முடியும்...''

டாக்டரின் தீர்மானமான பேச்சு கிருஷ்ணனுக்கு திருப்தியாக இருந்தது; அகிலாவுக்குத் தனியொரு தெம்பைக் கொடுப்பதாக இருந்தது.

''நன்றாய் யோசனை பண்ணி உங்கள் முடிவை சொல்லுங்கள் மிஸ்டர் ஸ்ரீதரன். அதர்வைஸ் ஹெல்தியாக இருப்பதால் ஆபரேஷனை என்றைக்கு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்.''

டாக்டர் போய்விட்டார்.

ஸ்ரீதரன் வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை.

யாரைப் பற்றியோ, யாரோ பேசுகிறார்கள் என்ற பாவனையோடு படுக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்தான்.

"என்னப்பா, ஸ்ரீதரா! டாக்டர் சொன்னதைக் கேட்டுண்டாயா? என்ன சொல்றே?"

தந்தையை நிமிர்ந்து பார்த்தான் ஸ்ரீதரன்.

"டாக்டர்களுக்கு என்ன? தங்களுக்குப் பணம் வந்தால் போதும்னு இல்லாததையும், பொல்லாததையும் சொல்லுவா. இதெல்லாம் அவர்களுக்கு விளையாட்டு மாதிரி."

பிள்ளையின் பேச்சும், முகபாவமும் என்னென்னவோ கற்பனை பண்ணிக் கொண்டு இருந்த கிருஷ்ணனை அமரச் செய்தது.

''யூ ஆர் டாக்கிங் ஸில்லி. ஹி இஸ் தி பெஸ்ட் ஆர்தோபீடிக் ஸர்ஜன் இன் மெட்ராஸ். டோண்ட் யூ நோ தட்!



அவருக்கு இல்லாத பணமா? எதுக்காக ஸ்ரீதரா அவர் உன்னோடு விளையாடணும்?"

"........"

"பதில் சொல் ஸ்ரீதரா. டாக்டர் நம்பிக்கையோடு பேசறப்போ அதை எதுக்கு மறுக்கறது நியாயமா? ஆபரேஷன் பண்ணினால் குணம் இருக்கும் என்றால் முயற்சி பண்ணுவதில் என்ன தப்பு?"

நிதானமாய் அப்பா வாதிப்பது ஸ்ரீதரனுக்கு எரிச்சலைத் தந்தது.

''ஆபரேஷன், பெரிய ஆபரேஷன். முப்பது வருஷமாய் நான் பட்ட அவஸ்தை போதாதுனு இன்னும் இதை வேற செஞ்சுண்டு படணுமா? ஐ'ம் நாட் கோயிங் டு கெட் ஆபரேட்டட். நான் இப்படியே இருந்துட்டுப் போறேன்..."

''சின்னக் குழந்தையாட்டம் பேசினால் எப்படி ஸ்ரீதரா? அதோ பாரு... அந்த அகிலா முகத்தைப் பாரு. அவளுக்கு நல்ல வாழ்க்கை கொடுக்கவாவது நீ இதுக்கு சரினு சொல்லித்தான் ஆகணும்... நீ அடம் பிடிக்கிறது சரியில்லைப்பா...?"

''என்ன சரியில்லை? அனுபவிக்க போறது நானா, அவளா? நாற்காலியில் உட்கார்ந்துண்டாவது கொஞ்சம் நிம்மதியுடன் நான் வளைய வரது உங்களுக்கெல்லாம் பிடிக்கலையா? அகிலாவுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்? நான் கல்யாணமே வேண்டாம்னு சொன்னேனே, கேட்டேளா? எனக்கு கல்யாணம் ஆகலைனு நான் உங்க கிட்ட அழுதேனா? ஐ வாஸ் பர்ஃபெக்ட்லி ஃபீலிங் அலோன்... நீங்களா அவளை இதில் இழுத்து விட்டுட்டு, இன்னிக்கு அவளுக்கு நல்ல வாழ்க்கை கொடுக்காமல் இருக்கிறது தப்புனு அட்வைஸ் பண்ணினா சரியாயிடுமா? நோ, எனக்கு ஆபரேஷனும் வேண்டாம், ஒரு மண்ணாங்

கட்டியும் வேண்டாம்... அந்த டாக்டரைப் பார்த்து சொல்லிடுங்கோ— அவன் வேணுங்கற வேதனையை அனுபவிச்சாச்சாம். இனி வேறு எதற்கும் தயாரில்லையாம்னு. தென லீவ் மீ அலோன். தனியா விட்டுட்டு போங்கோளேன்.''

முதலில் மெதுவாய் பேசிய ஸ்ரீதரன் போகப் போக உரக்க கத்தி, படுக்கைக்கு அருகில் இருந்த பத்திரிகைகளை ஆங்காரத்துடன் தூர எறிந்து அப்பாத்தென்று படுக்கையில் படுத்து, போர்வையால் முகத்தை சேர்த்து மூடிக் கொண்டான்.

இரண்டு வயசு பிள்ளைபோல ஸ்ரீதரன் இப்படி கத்தி, அடம் செய்து அகிலா நிறைய பார்த்திருந்தாலும் தனக்கெதிரிலேயே அப்பாவிடம் அவர் இப்படி கோபமாய் பேசியது வருத்தத்தைத் தர முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள்.

நல்ல வேளையாக கிருஷ்ணன் பிள்ளை சௌகரியமாய் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஏ.ஸி. அறையில் அவனைச் சேர்த்திருந்தார்.

என்ன ரகளை நடந்தாலும் அடுத்தவருக்குத் தெரியாமல் சமாளிக்கலாம்.

மெதுவாய் எழுந்த கிருஷ்ணன், 'உன்னால் இவனை சமாளிக்க முடியுமா?' என்கிற தொனியில் அகிலாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு வெளியே போனார்.

சில நிமிஷங்கள் ஓடி மறைந்தன.

அகிலா குனிந்து பத்திரிகைகளை எடுத்து மேஜையில் வைத்தாள். பிளாஸ்கில் இருந்த பாலில் ஹார்லிக்ஸ் போட்டு கரைத்தாள். ஒரு கையால் கணவனின் முடியைக் கோதி ''வெறும் வயித்தோட இருக்கேளே, கொஞ்சம் சூடாய் ஹார்லிக்ஸ் குடிங்களேன்'' என்றாள்.



ஸ்ரீதரன் அசைந்து கொடுக்கவில்லை.

அகிலா மெல்ல கெஞ்சினாள்.

''எழுந்து குடிச்சுட்டு படுத்துக்கோங்க. உங்களுக்கு ட்ரீட்மெண்ட் எடுத்துக்க விருப்பம் இல்லாவிட்டால் விட்டுடுவோம். உங்க நிம்மதிதான் எங்க எல்லாருக்கும் பெரிசு... இங்கே பாருங்களேன்.''

டக்கென்று போர்வையை தாழ்த்தினான் ஸ்ரீதரன்.

''அப்பா சொன்னது நீ கேட்கலை, உன் சந்தோஷத்துக்காக நான் ஆபரேஷன் பண்ணிக்கணும்னால், இது என்ன நியாயம்?''

அவன் இன்னும் கோபம் தணியாதவனாகவே பேசினான்.

''அப்பா பெரியவா. ஏதோ ஆதங்கத்துலே பேசிட்டார்... அதை மனசிலே வைச்சிக்க வேண்டாமே. உங்க சந்தோஷம் தான் என் சந்தோஷமும். நான் அப்பாகிட்டே சொல்றேன். நீங்க எழுந்து இதைக் குடிங்கோ.''

மனைவி தன் பக்கம் என்று உணர்ந்தவனாய் அவன் பேச்சுக்குக் கட்டுப்பட்டு ஹார்லிக்ஸை குடித்தான்.

பத்து நிமிஷங்கள் ஆவதற்குள் அவன் ஆத்திரம் சுத்தமாய் மறைந்து போனது.

''உனக்குத் தெரியாது அகிலா. முன்னே எனக்கு பத்து வயசு இருக்கும் போது இப்படித்தான ஒரு ஹாஸ்பிடலில் என்னை சேர்த்து பிஸியோதெரபி பண்ணறேன்னு காலை முறுக்கி, திருப்பி, ஒடிப்பான் பாரு... நான் வலி பொறுக்காமல் கதறுவேன்; யாரும் காதுல போட்டுக்கமாட்டா... என் வேதனை புரியாமல் 'பொறுத்துக்கோ, டோன்ட் ஃபஸ்'னு வேற சொல்லுவா. திரும்ப அந்த சித்ரவதை

எல்லாம் என்னால் தாங்கிக்க முடியாது. அதுக்கு வேற ஆளைப் பாருங்கோ... ஐ வாண்ட் டு கோ ஹோம்."

பிற்பாடு ஸ்ரீதரன் தூங்கும் நாழிகையில் அறைக்கு வெளியில் வந்து மாமனாருடன் அகிலா பேசினாள்.

"அவர் சின்ன வயசிலே பயந்துண்ட பயம் இன்னும் மனசில் இருக்கு. கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாம்னு எனக்குத் தோணறது. நீங்க என்னப்பா சொல்றேள்?"

கிருஷ்ணன் என்ன சொல்லுவார்? யாருக்காக இத்தனை பாடு படுகிறாரோ அந்த மருமகளே சற்றுப் பொறுக்கலாம் என்றால் இவர் வேறு என்ன செய்ய இயலும்?

"சரிம்மா உன் இஷ்டம். சாயங்காலம் ஹரி வந்து பேசிப் பார்க்கட்டும். எதுக்கும் டாக்டரை நாம் தனியா சந்திச்சு இவனோட மனநிலையை எடுத்துச் சொல்லி அவர் அட்வைஸை கேட்கலாம்னு எனக்குத் தோணறது. நீ உங்காத்துக்குப் போறப்போ நானும் கூட வரேன். மாம்பலம் போயிட்டு அப்படியே டாக்டரை பார்த்துட்டு வரலாம், என்ன?"

முதல் நாள் சென்னைக்கு வந்து ஹாஸ்பிடலில் அட்மிட் ஆகி, டாக்டர்களின் பரிசோதனை, டெஸ்டுகள் முடிந்து, ஸ்ரீதரன் தூங்கும் நாழிகையில் அகிலாவை அவள் பிறந்த வீட்டுக்குப் போய்வரச் செய்தார் கிருஷ்ணன்;

"இவர் தனியா இருப்பாரேப்பா!"

"நான் இருக்கேனே; ஹரியும் வந்துடறதா போன் பண்ணியிருக்கான். ஸ்ரீதரன் ஒண்ணும் சொல்ல மாட்டான். கொஞ்ச நாழி இருந்துட்டு, நாளைக்கு சாயங்காலம் திரும்ப வரேன்னு சொல்லிட்டு வா..."

அகிலாவின் தயக்கம் போகவில்லை.



"ஒரு மணி நேரம் நீ போய் வந்தால் என்னம்மா ஆயிடும்? உள்ளூரில் அப்பா வீட்டை வைச்சுண்டு போகாட்டா எப்படி? போயிட்டு வாம்மா..." என்றவர் கார் வரைக்கும் வந்து, டிக்கிலே சில சாமான்கள் வைச்சிருக்கேன்; குழந்தைகளுக்கு கொடு. கல்யாணமாகி முதன் முதலாய் பிறந்தாத்துக்கு போறே. வெறுங் கையோடயா போறது?...ம்... கிளம்பு" என்றார்.

வீட்டுக்குப் போனதும்தான் அகிலா அந்த சாமான்களைப் பார்த்தாள். அப்பாவுக்கும், ராமுவுக்கும் ஷர்ட் துணி, பவானிக்கு நைலான் புடவை, அம்மாவுக்கு நாலு ரவிக்கை துண்டு. கூடை கொள்ளாமல் பழங்கள், பிஸ்கெட் பொட்டலங்கள், மிட்டாய் டின்கள்.

எதுக்கு இத்தனை?

அகிலா தான் வரப்போவதை முன்கூட்டியே லெட்டர் எழுதி தெரிவித்திருந்தபடியால் வீட்டில் எல்லாரும் இவள் வருகையை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தார்கள்.

டிரைவர் சாமான்களை இறக்கி வைத்தான். கார் ஹாரன் கேட்டவுடன் குழந்தைகள் ஓடி வந்துவிட்டார்கள்.

செல்வச் செழிப்புடன் சிரித்த முகமாய் வந்து இறங்கின அகிலாவைக் கண்டு அத்தனை பேருக்கும் ஏகப் பெருமை.

சாக்லெட், பிஸ்கெட் டின்களில் இரண்டையும், சில பழங்களையும் வேதாபாமி கையில் கொடுத்தாள். முதலில் அவளையும் பின்பு அப்பா, அம்மாவையும் நமஸ்கரித்தாள் அகிலா.

எதற்காக அகிலா வந்திருக்கிறாள் என்பது அனைவருக்குமே தெரியுமாதலால் ஏச், என்ன என்று

ஒருத்தரும் கேட்கவில்லை. எல்லாம் பொதுவான கேள்விகள்.

அரைமணி இருந்துவிட்டு அகிலா கிளம்பி விட்டாள். அவளோடு மகாதேவனும் சாரதாவும் சென்று மாப்பிள்ளையைப் பார்த்து வந்தனர்.

"உள்ளூரில் நம்ப அகம் இருக்கும்போது, நீங்க எதுக்காக ஹோட்டலில் சாப்பிடணும்." மகாதேவன் வருத்தம் புரியவே மறுநாள் சாப்பாட்டுக்குக் காமா மாம்பலம் வருவதாகவும் ஸ்ரீதரனுக்கும் அகிலாவுக்கும் வீட்டுச் சாப்பாட்டையே காரியரில் எடுத்து வரலாம் என்றும் கிருஷ்ணன் சொன்னார்.

ஸ்ரீதரன் தொட்டால் சுருங்கியாக இருப்பதை புரிந்து கொண்டதால் சாரதாவும் 'ஆத்துக்கு வந்து இரு சாப்பிடு' என்று பெண்ணை தொணதொணக்கவில்லை.

நேற்று போன கொஞ்ச நேரத்தில் அகிலா வேதா மாமியின் தோட்டத்தில் ஒவ்வொரு செடி கொடியையும் தடவிப் பார்த்தாள். அன்பு செல்வமான ஜிம்மியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு கொஞ்சினாள். அப்பா, அம்மா, மாமி, குழந்தைகளிடம் சிரிக்கச் சிரிக்கப் பேசினாள்.

மாலையில் ஹரி வந்ததும் கிருஷ்ணனும், அகிலாவும் கிளம்பினார்கள்.

ஹரி இருந்தால் கவலை இல்லை. அண்ணனுக்குத் தக்க திறுசில் பேசி, பொழுதைக் கழிப்பதில் வல்லவன்.

முன்கூட்டியே கிருஷ்ணன் டாக்டருக்கு போன் மூலம் சொல்லி விட்டதால் இவர்கள் போனதும் அப்பாயின்மெண்ட்படி டாக்டர் உள்ளே அழைத்தார்.

கிருஷ்ணன் டாக்டரிடம் ஸ்ரீதரனின் மனநிலையை விவரிக்கிறார்.



"கல்யாணத்துக்குப் பிறகு அவனிடம் மாறுதல் தெரியறது டாக்டர். ஹனிமூன்ல் அகிலா. ஆனாலும் இப்போ ஆப்ரேஷன் என்றால் பயப்படுகிறான். அகிலாவும் விட்டுப்பிடிக்கலாம் என்கிறாள். வாட் டு யூ சே டாக்டர்?"

பொறுமையுடன் எல்லாவற்றையும் கேட்ட டாக்டர் அகிலா சொல்வதை ஆமோதிக்கவே செய்தார்.

"முப்பது வருஷம் ஆறப்போட்ட ட்ரீட்மெண்டை இன்னும் சில மாசங்கள் தள்ளி வைத்தால் என்ன ஆகி விடும்? ஆனால்... மெள்ளப் பேசி அவரை வழிக்குக் கொண்டு வருவதுதான் சரி. மீன்வொயில், ஸ்ரீதரன் ரொம்ப டிப்ரெஸ்டாக இல்லாமல் இருக்க விட்டமின் ட்ரீட்மெண்ட் கொடுக்கலாம். டோஃப்ரானில் மாத்திரை முதல் பதினைந்து நாட்களுக்கு ஒரு நாளைக்கு மூன்றும், அப்புறம் இரண்டு வீதமும் கொடுங்கள்; காம்போஸ் மாத்திரை இரண்டு வாரங்களுக்கு தினம் படுக்கப் போகுமுன் ஒன்று. கூடவே பிகோஸுல் ஒன்று. புரோடீனெக்ஸ் அல்லது காம்பிளான் கொடுத்தால் நல்லது. மற்றபடி நல்ல டயட் போதும். காற்றில்— சூரிய வெளிச்சத்தில் உலாவுதல் ரொம்ப முக்கியம். கேரம், செஸ் என்று கேம்ஸ் ஏதாவது விளையாட தூண்டுங்கள். ஒரு மாசம் கழித்து அவர் எப்படி இருக்கிறார் என்று எனக்குத் தெரிவியுங்கள். லெட் அஸ் ஹோப் பார் தி பெஸ்ட்."

டாக்டரிடம் விடை பெற்றுக் கொண்டு நேரே மாம்பலத்துக்கு வந்தார்கள்.

நாழியாகி விட்டது என்று அகிலாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

"அவருக்குப் பசி தாங்காதும்மா. எங்களுக்கு சாப்பாடு போட்டுடு. நாங்க கிளம்பறோம்" என்று பறந்தாள்.

டாக்டரின் கருத்து மேற்கொண்டு வைத்தியம் இதைப் பற்றி லேசாய் கிருஷ்ணன் சாப்பாட்டின் நடுவே சொல்லி முடித்தார். காரியரில் கணவனுக்குத் தேவையானதை எடுத்துக் கொண்டாள் அகிலா.

சில நிமிஷங்கள் தனிமை கிடைத்தபோது சமையல் கட்டில் அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு கேட்டாள்.

''நீ சௌக்கியமா இருக்கியாம்மா? உடம்புக்கு ஒன்றுமில்லாமல், நிம்மதியா இருக்கயா? என்னால உங்களுக்கு ஏதாவது ஆகணுமாம்மா?''

சாரதா மகளை அணைத்துக் கொண்டாள்.

''நாங்க சௌக்கியமா இருக்கோம். எங்களுக்கு ஒரு குறையும் இல்லை. நீ சந்தோஷமா இருக்கியா அகிலா?''

''என்னைப் பார்த்தால் தெரியலையாம்மா?''

தெரிகிறது என்று பூரிப்புடன் தலை ஆட்டினாள் சாரதா.

"நாளைக்குக் கார்த்தால ஊருக்குக் கிளம்பறோம். என்னால வர முடியுமோ முடியாதோ? அதனால இப்பவே சொல்லிண்டுடறேன்."

அகிலா பெரியவர்களை நமஸ்காரம் பண்ணிவிட்டு தயாரானாள்.

மறுநாளே விடிகாலையில் திருச்சிக்குக் கிளம்பி விட்டார்கள்.

மேற்கொண்டு நாட்கள் நகர்ந்த போது தப்பித் தவறிகூட கிருஷ்ணனோ, அகிலாவோ ஸ்ரீதரனிடம் வைத்தியத்தைப் பற்றிப் பேசவில்லை

டாக்டர் புதுசாய் கொடுத்த ஆண்டி டிப்ரெஷன் மாத்திரைகளால் ஸ்ரீதரன் நன்றாகத் தூங்கினான். தினா



னில் இருந்தான். படபடப்பு எழாமல் ஓரளவுக்கு அமைதியுடன் நடந்து கொண்டான்.

சுற்றும் உள்ள தெரிந்த குறுகுறுக்கவோ என்னவோ, தன் செய்கைக்கு ஈடு கட்டுவது போல முன்னைவிட அன்பாக இருக்க அவன் முயற்சித்தான். என்றோ ஒரு நாள் 'பச்சை' என்று நிலங்களையும் பச்சைப்பசேலென்ற தோட்டங்களையும் பார்ப்பது எனக்கு ரொம்பப் பிடிக்கும்' என்று அகிலா சொல்லி இருந்ததை நினைவில் வைத்துக் கொண்டு பண்ணைக்குக் கிளம்பின கிருஷ்ணனிடம் ஒரு நாள் வலிய 'நாங்களும் காரில உங்களோடு வந்துட்டு வரோமே; ஒரு ட்ரைவ் போன மாதிரி இருக்கும்' என்ற போது அத்தனைப் பேருக்கும் ஆச்சரியமான ஆச்சரியம்.

அதிலிருந்து நிலத்துக்கு மட்டுமல்லாமல், தினம் மாலையில் காரில் காவிரி மணலைச் சுற்றி ஒரு ரவுண்டு போய்விட்டு வருவது வழக்கமாயிற்று.

கணவனின் போக்குப்படி சென்று அவனை மாற்றுவது சுலபம் என்று அகிலா கணக்குப் போட்டு செயல்பட்டதற்கு வெகு விரைவிலேயே பலன் இருந்தது.

இரண்டு மாதங்கள் போல ஆகியிருக்கும். ஒரு நாள் இரவு உறங்கத் தயாராகி விளக்கை அணைத்த அகிலாவைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டான் ஸ்ரீதரன்.

''என்ன ஏதாவது வேணுமா?''

"ம்ஹூம், ஒன்றுமில்லை...?"

கணவன் ஏதோ சொல்ல நினைக்கிறான் என்பது தெளிவாக எழுந்து உட்கார்ந்து விளக்கைப் போட்டாள் அகிலா.

''என்ன விஷயம் சொல்லுங்களேன்."

வலது கையால் புடவைக்கு வெளியில் தொங்கின அகிலாவின் திருமாங்கல்யத்தை ஒசைப்படுத்தினான் ஸ்ரீதரன்.

"உனக்கு என் மேல கோபம் தானே ?"

"கோபமா ? எனக்கா ? உங்க மேலயா ?

அகிலா சிரித்தாள்.

"ஆபரேஷன் பண்ணிக்கலைன்னு அகிலா."

அடடே, இவர் இதைப் பற்றி பேச போறாரா ? இவர் மனசு மாற இன்னும் நாளாகும்னு நினைச்சேன் ; இவ்வளவு அதுக்குள்ளயா ? அகிலா குபீரென்று எழுந்த குதூகலத்தைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

"இதிலே என்ன கோபம் ? நல்லது கெட்டது உங்களுக்கு நான் சொல்லியா தெரியணும் ?"

"இல்லே அகிலா, நான் யோசிச்சுப் பார்த்தேன். அப்பா சொன்னது நியாயம்தானு தோணுது. எனக்காக இல்லாவிட்டாலும் உனக்காகவாவது நான் இந்த ஆபரேஷனுக்கு ஒத்துக்கணும்னு தோணுது."

ரொம்பக் கஷ்டப்பட்டு, தான் முன் சொன்னவைகளை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, தன் ரோஷம், ஆக்ரோஷத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு ஸ்ரீதரன் பேசியது புரிந்தது.

இப்போ நான் சரியான வார்த்தைகளைப் பேசணும் ஒண்ணு கிடக்க ஒண்ணு பேசி புண்படுத்திட்டா பிறகு ஆயுசுக்கும் இவரை வழிக்கு கொண்டு வர முடியாது!

முன்னால் நகர்ந்து ஸ்ரீதரனின் மார்பில் தலையைச் சாய்த்துக் கொண்டாள் அகிலா. "நீங்க எது செய்தாலும் என்ன தீர்மானம் பண்ணினாலும் அது எனக்குச் சம்மதம்தான்" என்றாள்.



மறுநாளே கிருஷ்ணன் டாக்டருக்கு ட்ரங்கால் செய்தார். அடுத்த வாரத்திற்குள் சென்னைக்கு நேரில் சென்று விவரமாய் பேசிவிட்டுத் திரும்பினார்.

எண்ணிப் பதினைந்தாம் நாள், நல்ல யோகமான தினத்தில் சென்னையில் ஸ்ரீதரனுக்கு முதல் டெண்டன் ட்ரான்ஸ்ப்ளான்டேஷன் நடந்தது.

மயக்க மருந்து கொடுத்து, பலமில்லாத தாக்கப்பட்ட தசைநார்களை வெட்டி அப்புறப்படுத்தியபின் உடம்பிலிருந்த வலுவான தசைநார்களை எடுத்து இடையில் பொருத்திய அருமை சிகிச்சை கிட்டதட்ட மூன்று மணி நேரத்துக்கு நீடித்தது.

ஆபரேஷன் நல்லவிதமாய் முடிந்த பின்பு ஆஸ்பத்திரியில் மாவு கட்டு போட்டு மூன்று வாரங்களுக்கு ஸ்ரீதரனை இருக்கச் செய்ததும் அல்லாமல் திருச்சிக்கு அனுப்பின பிறகும் தெரபிஸ்ட் ஒருவரை வாரத்துக்கு மூன்று முறைகள் வீட்டுக்கு வரச் செய்து ஆக்டிவ் எக்ஸர்சைஸ்கள், பேஸிவ் எக்ஸர்சைஸ்கள் என்று ஸ்ரீதரனின் கால்களுக்குப் பயிற்சி கொடுக்க வைத்து ; மருந்துகளையும் விடாமல் கொடுத்த ஆர்தோபிடிக் ஸர்ஜன் மூன்றே மாசத்தில் இரண்டாவது டெண்டன் ட்ரான்ஸ்ப்ளான்டேஷனுக்கு அவனைத் தயாராக்கி விட்டார்.

மறுபடி சென்னைப் பயணம் ? ஆபரேஷன், ஆஸ்பத்திரியில் மூன்று வாரங்கள் வாசம், திரும்ப திருச்சி.

ஸ்ரீதரனின் கத்தலையும், கோபதாபங்களையும் அடாவடித்தனங்களையும், பிடிவாதத்தையும் தேர் வாரிசாகத் தாங்கி நின்றது அகிலாதான்.

கணவனை எப்படியாவது நடக்க வைத்துவிட வேண்டும் என்ற எண்ணம் அவளுள் வெறியாகவே மாறிப் போனதாலும், வேறு சிந்தனை இல்லாதவளாக

கணவனின் உடல் நலம் நன்றே குறியாக இருந்தது. அத்தனை ஏச்சு, பேச்சுக்களையும் சிரித்த முகத்துடன் ஏற்று வாழ்வது அவளுக்குச் சாத்தியமாயிற்று.

ஒன்றரை வருஷங்களா? ஆம். இந்த ஒன்றரை வருஷ கால அளவில்தான் ஸ்ரீதரனிடம் எத்தனை மாற்றங்கள்? பிஸியோ தெரபி பயிற்சிகளால் இரண்டு கால் கிடுகிடுவென்று பலமடைந்து ஸ்ரீதரனால் எழுந்து நிற்க முடிந்தது இந்தக் கால இடைவெளியில் தானே?

செயற்கை கை, கால் உற்பத்தி தொழிற்சாலையில் சொல்லி ஸ்ரீதரனுக்கு என பிரத்தியேகமாக 'ஷூ'வை ஸர்ஜன் தயாரிக்கச் செய்தார்.

வலது தொடையில் மெட்டல் கிளிப்புகளை பொருத்தி, சூம்பின காலை கம்பிகளின் உதவியோடு நிமிர்த்தி கனமான அந்த ஷூவில் பாதத்தை நுழைத்து காலில் ஆங்காங்கு லெதர் ஸ்ட்ராபினால் கட்டி விடுவாள் அகிலா.

முதல் சில நாட்கள் அதைப் போட்டுப் பார்க்கக் கூட ஸ்ரீதரன் மறுத்தான்.

"உனக்கு என்ன? எனக்கல்லவா வலி பிராணன் போறது! என்ன கனம் என்னால் முடியாது" என்று கிட்டத்தில் போனாலேயே கத்தினான்.

அவன் கத்தலைப் பொறுமையுடன் சமாளித்தாள் அகிலா. "போட்டுப் பாருங்களேன் ப்ளீஸ் நடக்க வேண்டாம், போட்டுண்டு சும்மா உட்கார்ந்து இருந்தால் கூட போதும் ப்ளீஸ்..." மோவாயைப் பிடித்து அகிலா எத்தனையோ நாட்கள் தொடர்ந்து கெஞ்சிய பிறகு சும்மா போட்டுப் பார்க்க ஸ்ரீதரன் சம்மதித்தான்; பின்பு நின்றுப் பார்க்க சம்மதித்தான்; கடைசியாக அவளை இறுக அணைத்துக்கொண்டு இரண்டு அடிகள் எடுக்கச் சம்மதித்தான்



அந்த நாளை அகிலாவால் மறக்க இயலுமா?

ஒரு குழந்தை நடக்க முயல்வதைத் தாய் காணும் ஆர்வத்தோடு கண்டவளுக்குத் திடீரென்று துக்கமும், மகிழ்ச்சியும் கலந்து பிரவாகமெடுக்க அப்படியே தொப்பென்று விழுந்து அவன் கால்களை அணைத்து, ஷூ போட்ட காலைத் தடவிக் கொடுத்து முத்தம் கொடுத்து, நீங்க நடந்துட்டேள்; நீங்க நடந்துட்டேள். இனிமே உங்களால நடக்க முடியும்' என்று வாய்விட்டுக் கதறி அழுதாளே, அந்த நிமிஷத்தைத்தான் அவளால் மறக்க இயலுமா?

அடுத்த நான்காம் மாசம் மூன்றாவது முறையாக டிரான்ஸ்ப்ளான்டேஷன் நடந்தேறியதும் ஸ்ரீதரன் கிட்டத்தட்ட ஒரு புது மனிதனாகவே மாறி இருந்தான்.

டாக்டர் ஏமகாதகர். சொன்ன சொல்லை நிரூபித்து விட்டார்.

'உங்க ஒத்துழைப்பு இருந்தால் எண்ணி இரண்டு வருஷத்தில் உங்களை நடக்க வச்சுக் காட்டுகிறேன்' என்று சவால் விடுத்ததைச் செய்து காட்டிவிட்டார்.

ஸ்ரீதரனின் ஒத்துழைப்புக் கிடைத்ததோ இல்லையோ அகிலாவின் பரிபூர்ண ஒத்துழைப்பும், பக்தி சிரத்தையான பணிவிடைகளும் சேர்ந்து ஸ்ரீதரனை புதுப்பிறவி எடுக்க வைத்ததைக் கண்டவர்கள் அனைவருமே நன்கு உணர்ந்தார்கள்.

கடைசி ஆபரேஷன் முடிந்து டிஸ்சார்ஜ் ஆனதும 'என்னால் முடிந்த அளவு எல்லாம் செய்து விட்டேன். இனி புதுசாய் செய்ய வைத்தியம் ஒன்றும் இல்லை. விடாத பயிற்சி மருந்து இவைகள் வேணும்; ஸ்ரீதரனை சாதாரண மனிதனாக நடமாடச் செய்ய' என்று டாக்டர் சொன்ன அன்று தனிமை கிடைத்தபோது கணவனின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு "ஒவ்வொரு

அம்மன் கோவிலா போய், உங்களோடு பிராகாரங்களை சுத்திவந்து அம்மனுக்கு அர்ச்சனை பண்ணணும்னு எனக்கு ஆசையா இருக்கு. செய்யலாமா?" என்று நெருக நிறைந்த திருப்தியில் அகிலா கணவனைக் கேட்டாள்.

## பதினேழு

ஸ்ரீஜாவின் கல்யாண ஏற்பாடுகள் அமர்க்களப் பட்டுக் கொண்டிருந்தன. பாதி காதல், பாதி பெரியவர்கள் பார்த்து நிச்சயித்த கல்யாணம். ஜானகிக்கு வெகு திருப்தி. அழகான பெண். பணக்கார இடத்தின் ஒரே பெண்; படித்த பெண். நாகரிகம் தெரிந்த பெண். இன்னும் ஜானகிக்கு வேறு என்ன வேண்டும்?

எல்லா விதத்திலும் இவர்களுக்கு ஏற்ற சம்பந்திகள். அம்பத்தூரில் இரண்டு தொழிற்சாலைகள். நாலு பையன்கள். கடைக்குட்டியாய் உஷா. செல்லத்திற்குக் கேட்க வேணுமா? அண்ணன்மார்கள் தங்கைமேல் தூசி பட்டால் பொறுக்காத ஜாதி.

சென்னையில் ஆபட்ஸ்பரியில் கல்யாணம். மாப் பிள்ளை அழைப்பு வேண்டாம் என்று ராஜா சொல்லி விட்டதால் பிரபல பாடகரின் இன்னிசை கச்சேரி, பின் நிச்சயதார்த்தம். மறுநாள் ரிஸப்ஷனுக்கு முன்னணி கலைஞரின் பரத நாட்டியம், ஆசைப்பட்ட பணக் காரர்கள் கூட ஹோட்டலில் ஒரே வேளை டிபன், சாப்பாடு கலந்த ப்ரஞ்ச்(Brunch)சோடு திருமணத்தை முடிக்கும் இந்த நாளில் வருவோர், போவோருக்கெல் லாம் மூன்று நாட்கள் மூக்குப் பிடிக்க விருந்து என்றால் ஜானகியின் மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா!

அகிலாவிற்கு புடவை, நகை எடுப்பதில் கொஞ்சமும் சிரத்தை காட்டாமல் இருந்தவள், இப்போது நிச்சய



தார்த்தம் ஆன கையோடு ஓடி ஓடி மருமகளுக்கு அளிக்க வேண்டிய பரிசுகளைச் சேகரித்தாள்.

"நாம்ப எடுக்கிற ஜவுளித் துணிகளைப் பார்த்து சம்பந்தியாத்துல மூக்கில் விரலை வைக்கணும். துணிக் கடையே நமக்குச் சொந்தமாக இருக்கும் போது துணிகளை கோணாமாணானு எடுத்தால் எப்படி? நல்லொன்னும் நம்ப கடைப் பேர் சொல்றதாய் இருக்கணும்."

கடைக்குத் தானே விஜயம் செய்து துணிகளைத் தலை கீழாய் புரட்டி புடவைகளைத் தேர்ந்தெடுத்தாள். புது ஜரிகை டெம்பிள் பார்டர், ஜரிகை கொட்டடி, கட்டம் என்று விலையில் ஒன்றை ஒன்று தூக்கிச் சாப் பிட்டன.

"காணாததைக் கண்ட மாதிரி நடந்தாலும், மற்ற திருமண உஷாவுக்கு எடுக்க வேண்டாம்; நார்மடிப் பட்டு நல்லப் புடவைகள் கொடுத்தால் போதும். அவளிடம் இல்லாத தினுசா..."

அகிலாவுக்கு கைத்தறி, நைலான் புடவைகள் முதற் கொண்டு தான் எடுத்ததை மனசில் நினைத்தவளாய் ஜானகி இவ்வாறு போகிறாள் என்பது கிருஷ்ணனுக்குப் புரிய, இவள் என்ன வேணுமானாலும் எடுக்கட்டும், பேசட்டும்; அந்தக் குழந்தை காதில் விழாமல் இருந்தால் சரி என்றே நினைத்தார்.

அகிலாவுக்கு இப்படி அப்படி காதில் விழத்தான் செய்தது; புரியத்தான் புரிந்தது. ஆனாலும் அவள் அவ்வார்த்தைகளைப் பாராட்டவில்லை. அம்மா சொல் வது சரிதானே என்ற ஆமோதிப்போடு கண்டபடி சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளாமல் நிதானத்தோடு இருந்து விட்டாள்.

தான் கொடுக்க இயலாத மகிழ்ச்சியை மாமியாருக்கு இரண்டாவது மருமகள் கொடுக்கிறாள் என்பதில் அகிலாவுக்குச் சந்தோஷம்தான்.

பாவம் அம்மா; தன் அந்தஸ்துக்குத் தக்கபடி மாட்டுப் பெண் வந்து, அவளின் பெருமையை, அழகை நாலுபேர் மெச்சணும்னு ஆசைப்பட்டது நியாயம்தானே!

ஸ்ரீதரனை ஒருவழியாய் புது மனுஷனாக ஆக்கிவிட்ட திருப்தியில் இருந்த அகிலா ஓடி, ஓடி நிற்காமல், உட்காராமல் கல்யாண வேலைகளைக் கவனித்தாள். ஜானகி ஏன் என்பதற்கு முன் எண்ணெயாய் நின்றாள்.

சிங்கத்தைக் கண்ட மாதிரி பயந்து கொண்டு அனைவரையும் ஒதுங்கிப் போக வைத்த ஸ்ரீதரனின் குணம் மாறித்தான் விட்டது. காலில் கொலுசை காலையில் மாட்டிக் கொண்டாள், வீடு முழுவதும் வளைய வந்து, எல்லாரிடமும் சிரித்துப் பேசி, பழகிய பின் இரவு படுக்கப் போகும்போதுதான் கழட்டி வைக்கிறாள்.

சக்கர நாற்காலி பரணுக்குப் போய் விட்டது.

அவன் விந்தி விந்தி நடக்கும்போது கால் விளங்காதவன் என்பது தெளிவாக்காமல் இல்லை; என்றாலும் பழைய வேட்டியோ, இல்லை இன்றைய நாகரிகத்தின்படி ஃப்ளேர்ஸோ போட்டுக் கொண்டு ஆண் அழகனாய் நிற்கும் அவனைப் பார்க்கத்தான் யாருக்கும் தோன்றியதே தவிரவும், காலை ஊன்றிக் கவனிக்கத் தெரியவில்லை.

எட்டு முழ வேட்டியும், ஸ்லாக்குமாக இருந்தவனை மாற்றியவன் ஹரி.

“அண்ணா, யூ ஆர் ஸோ ஹாண்ட்ஸம் டு ட்ரஸ் ஆர்டினரி. ரொம்ப அல்ட்ரா மார்டனா இருக்க வேண்டாம். ஆனாலும் கொஞ்சம் மாத்திக் கொண்ணேன். யூ



வில் லுக் ஸ்மாஷிங்” என்று விடாமல் காதில் ஓதியதற்கு நல்ல பலன்.

ஸ்ரீதரன் சம்மதித்ததும் ஹரி தங்கள் கடையில் துணிகளை எடுத்து, டெய்லரை வீட்டுக்கு அழைத்து வந்து அளவுகளை எடுத்து தைக்கச் சொன்னான்.

புதுத் துணிகளும், பட்டை பெல்டும், அழுந்த வாரிய தலை முடியுமாய் காட்சி தந்த கணவனைக் கண்டு பிரமித்துப் போனாள் அகிலா. என்ன கம்பீரம்! என்ன அழகு! ஒரு ஆண் பிள்ளை இத்தனை அழகாய் இருப்பது கூட சாத்தியமா? ரவி வர்மா படத்தைப் பார்க்கறதைப் போல அல்லவா இருக்கு!

ஸ்ரீதரன் காரில் டிரைவ் போவதுடன் சினிமா, மற்ற இடங்களுக்குப் போகத் தொடங்கியது இன்னொரு பெரிய மாற்றம்.

முதல் சில தடவைகள் சினிமா ஆரம்பித்து விளக்குகளை அணைத்த பிறகே கொட்டகைக்குள் சென்று அமருவார்கள். இதே போல படம் முடிய சில நிமிஷங்கள் இருக்கும் போதே இருட்டில் அகிலாவைக் கிளப்பிக் கொண்டு வந்து விடுவான்.

நாளடைவில் இது மாறியது. பலரும் தன் குறையைப் பெரிசு பண்ணிப் பார்க்கவில்லை என்ற நம்பிக்கை மனசுக்குள் உருவான பிறகு வெளிச்சத்திலேயே நாலு பேர்கள் மத்தியில் போய் வர முற்பட்டான்.

ஸ்ரீதரனிடம் அகிலா வெகுவாக மாற்றிய இன்னொரு பெரிய விஷயம், தாயிடம் அவனை அன்பாக இருக்கச் செய்ததுதான்.

இரவு தூங்கும்போது, தனியாகத் தோட்டத்தில் உலாவும் போது மெல்லப் பேசுவான்.

"அம்மா பாலம் உங்க மேலே உயிரையே வைச்சிருக்கா, ஆனாலும் நெருங்கி வந்து இரண்டு வார்த்தை பேச பயப்படறா'' என்பாள்.

"அம்மாகிட்டே நீங்க எதுக்காக கார்த்தாலே கோவிச்சுண்டேள்? பாலம் சின்ன விஷயம்தானே? மத்தியானம்வரை மனசு சங்கடப்பட்டா" என்பாள்.

''வாருங்களேன், ஹாலில் உட்கார்ந்து அம்மாவுடன் பேசிண்டு இருக்கலாம்'' என்பாள்.

"அம்மாவுக்கு நேத்திலேந்து ஜுரம். போய் எப்படி இருக்கேனு விசாரியுங்களேன். சந்தோஷப்படுவா'' என்பாள்.

அடிக்கிற அடியில் அம்மிக்கல்லே நகரும் என்பார்களே; ஸ்ரீதரன் பிள்ளை, ஜானகி தாய்— பாசம் பீறிடக் கேட்பானேன்? இல்லை, ஒட்டிக் கொள்ளக் கேட்பானேன்?

இந்த விஷயத்தில் ஜானகி அகிலாவை மனசுக்குள் பாராட்டினது உண்மைதான். ஆனாலும் வெளிப்படையாக ஒரு வார்த்தை சொல்லவில்லை.

''எப்படி இருந்த ஸ்ரீதரனை அகிலா எப்படி மாத்திட்டா பார்த்தியா ஜானகி? அறைக்குள்ளேயே ஒடுங்கிக் கிடந்தவன் இன்னிக்கு நாலு பேருக்குச் சமமாய் பழகுறான், சிரிக்கிறான்; ஏன்? உன்னிடம் எத்தனை அன்பாய் இருக்கான்?... ஸ்ரீதரனின் கிட்டே இரண்டு வார்த்தை பேசப் பயப்படுவே. இப்போ அவனை, டேபிள்ளே சாப்பிட உட்கார வைச்சுப் பரிமாறி ''சாப்பிடு ஸ்ரீதரா உனக்குப் பால் பாயஸம் பிடிக்குமுனு அகட்டறே; வித்யா அண்ணாவைக் கண்டால் அடுத்த ரூமுக்குள் ஓடினவள், இன்னிக்கு அவன் கையை பிடிச்சு இழுத்து சினிமாவுக்குப் போகலாம் அண்ணாங்கறா...



பகவான் அகிலா மூலமா நமக்கு வழி காட்டியிருக்கான்... என்ன சொல்றே?''

ஜானகிக்கு கணவன் சொல்வது சரிதான் என்று தோன்றினாலும் பதில் சொல்லும்போது வேறு விதமாய் பேசுவாள்.

''ஸ்ரீதரனைப் பிடிச்சிருந்த ஏழரை நாட்டு சனி விட்டுப் போயிடுத்து. ஜோஸியர் கிட்டே அவன் ஜாதகத்தைக் காட்டினேன். இனி அமோகமாய் இருப்பான்னார். உடம்பிலே நமைச்சல் இருந்தால் சொறிஞ்சு விழறது சகஜம்தானே. நல்ல நேரம் வந்து அவன் உடம்பை சரியாக்கிடுத்து; எல்லாம் பகவான் செயல்."

கிருஷ்ணனுக்கு கோபம் உண்டாகாது; சிரிப்புத்தான் எழும்.

எப்படியோ, அகிலாமேல் குற்றம் குறை சொல்லாமல் அன்பாக இருந்தால் சரி. வேளைதான் ஆகட்டும், இல்லை பகவான் கண்ணைத் திறந்ததில்தான் ஆகட்டும்.

ஸ்ரீதரனிலிருந்து ஆட்கள்வரை அகிலா எல்லாரையும் ஒட்டு மொத்தமாகக் கவர்ந்து விட்ட பிறகு இனி எதை நினைத்து அல்லல் படத் தேவை?

''மன்னி என் ப்ரெண்ட்ஸ் கொள்ளிடத்துக்குப் பிக்னிக் போறா. அப்பாகிட்டே நான் போறதுக்கு பர்மிஷன் வாங்கித் தாங்கோ" என்பாள் வித்யா.

''லீவு வேணும்மா. பாட்டிம்மாவுக்கு ஒடம்பு சொகமில்லையாம். ஐயாவைக் கேளுங்கம்மா'' என்பான் தோட்டக்காரன்.

''வீட்டிலே சும்மா உட்கார்ந்துண்டு இருக்கிற நாழி கையிலே, கடை அக்கவுண்ட் எல்லாம் நான் பார்த்துக்கலாமே. என்ன சொல்றே அகிலா? நீ வேணா அப்பாக்

கிட்டே இது பத்திப் பேசிப் பாரேன்" என்பான் ஸ்ரீதரன்.

என் ஜானகி மட்டும் விதிவிலக்கா ?

"என் அத்தங்கா தன் பெண்ணுக்கு கல்யாணம் பண்றதா லெட்டர் எழுதியிருந்தாளே அதை பத்தி உங்க மாமனார்கிட்டே பேசினாயோ ? இரண்டு புடவை நல்லதா அனுப்பச் சொல்லிச் சொன்னேனே அவர் கிட்டே சொன்னியோ ? நம்ப உதவியா இருக்கட்டும்" என்றாளே, இது அதிசயம் தானே ?

கிருஷ்ணனுக்கு அகிலாவிடம் தனி மரியாதை, அன்பு இருப்பதை உணர்ந்த அத்தனை பேர்களும், தங்கள் தங்கள் காரியசித்திக்கு, நேரடியாய் கேட்டால் அவர் கோபிப்பாரோ என்று பயந்து பெரிய விஷயங்களானா லும் சரி ஏதொரு சின்ன சமாசாரங்களானாலும் சரி, அவற்றை அகிலா மூலம் வெகு எளிதில் நிறைவேற்றிக் கொள்ள முடிகிறது என்று புரிந்தவர்களாக அகிலாவைச் சுற்றி வந்தது தான் நிஜம்.

அகிலா அந்த வீட்டில் முதுகெலும்பாகிப் போனாள். நின்றால் அகிலா ; உட்கார்ந்தால் அகிலா.

"அவளுக்கு என்ன, மாமனார் செல்லம். இவளை எது கேட்டு அவர் இல்லை என்றிருக்கிறார் ?" என்று அம்மா விடமோ, மற்ற உறவினர்களிடமோ ஜானகி இப்போவெல்லாம் சொல்லும்போது அதில் காட்டம் இல்லை. ஓரளவுக்கு பெருமைதான் கலந்திருக் கிறது என்பதை கிருஷ்ணன் அறிய நேர்ந்தபோது ஓ ! இவளும் இத்தனை மாறி இருக்கிறாளா என்று சந்தோஷப்பட்டார்.

அந்த வீட்டில் இருந்த அத்தனை ஆத்மாக்களும் இப்படி விஸ்ராந்தியாய், சந்தோஷமாய் இருந்த



வத்தை அதிகரிக்கும் வகையில் ராஜாவின் கல்யாணம் நிச்சயமானது. பெரிய இடத்துக் கல்யாணம். இரண்டு மாசங்களுக்கும் மேலாய் திருமண ஏற்பாடுகள் தடபுடல் பட்டன.

ராஜாவின் கல்யாணத்துக்காக டீலக்ஸ் பஸ்ஸிலும், நாலு காரிலும் இவர்கள் புறப்பட்டு முதல் நாள் சென்னைக்குப் போனார்கள்

ஸ்ரீதரனின் திருமணத்தை எளிமையாக நடத்திவிட்ட தால், அப்போது விட்டுப் போன அத்தனை பேர்களை யும் இப்போது சேர்த்து அழைத்திருந்ததன் காரணமாய் பிள்ளை வீட்டுக்காரர்களின் கூட்டம் ஜே ஜே என்று இருந்தது.

பிறந்த வீட்டை எட்டிப் பார்த்து வரக்கூட அகிலா வுக்கு நேரமில்லை. பெண்ணுக்குக் கொடுக்க வேண்டிய பரிசுகள், உறவினருக்கு அளிக்கப்பட இருந்த புடவைகள், துணிமணிகள் என்று ஜாக்கிரதையாய் இருக்க வேண்டிய விஷயங்களுக்கு ஜானகி அகிலாவை பொறுப்பாக்கி விட்டதால் இந்தண்டை அந்தண்டை நகர முடியாதபடி வேலைகள்.

முதல் நாள் இரவு உறவுப் பெண்மணிகளுக்கும், ஆண்களுக்கும் வெற்றிலை பாக்கோடு தனித்தனி கவரில் போட்டு பெயர் எழுதி வைத்திருந்த புடவை வேஷ்டி களை கொடுத்து விட்டார்கள். காலை முகூர்த்தத்தில் புது துணிகள் சலசலக்க நின்ற கூட்டம் ஏகமாய் இருந்தது.

மூத்த சம்பந்தி என்ற முறையில் மகாதேவன், சாரதாவுக்கும் வேஷ்டி, புடவையை கிருஷ்ணன் எடுத் திருந்தார்.

இடுப்பில் சாவிக் கொத்துடன் ஒரு இடத்தில் நிற்காமல் இங்கும் அங்கும் ஓடிக் கொண்டு ஆட்களை

வேலை ஏவிக்கொண்டு, அவரவர் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லிக் கொண்டு நொடிக்கொரு தடவை பெரியவர்கள் முதற் கொண்டு நண்டு சிண்டுகள் வரை அகிலா, அகிலா என்பதை சமாளித்துக் கொண்டும் நிற்கும் மகளைக் காண்கையில் சாரதாவுக்கு நெஞ்சு நிறைந்து போனது.

இரண்டரை வருஷ காலத்தில் ஒரு குடும்பத்தில் இப்படியொரு மகத்தான மாறுதல்களைச் செய்ய அகிலாவால் எப்படி முடிந்தது?

மன்மதனைப் போல வீட்டுக்கு மூத்த பிள்ளையாய் லட்சணமாய் வளையவரும் மாப்பிள்ளையைப் பார்க்கையில் அவன் எதிரில் நின்று ஓரிரு வார்த்தைகள் பேசக்கூட முடியாதபடி கூசிப் போனாள் சாரதா.

வீட்டுக்கு மகள் வரவில்லையே, பெரிய இடத்தில் கொடுத்து விட்டதால் நம்மை வந்து எட்டிப் பார்த்து இரண்டு வார்த்தைகள் பேசவில்லையே, என்ற அசட்டு வருத்தங்களெல்லாம் அவளுக்கும் இல்லை, மகாதேவனுக்கும் இல்லை

அகிலாவை அவர்களுக்குத் தெரியாதா?

இல்லை அவளின் உத்தமமான குணத்தை அறியாதவர்களா?

பிறந்தகத்துக்கு அடிக்கடி வந்து தங்கி செல்லவில்லையே தவிரவும், அவர்களுக்கு எந்தவிதத்திலாவது மரியாதை தர மறந்தாளா? உதவி செய்யத் தவறினாளா?

ம்ஹூம், ஒன்றும் இல்லை.

தலைபோகும் வேலையிலும் வாரா வாரம் கனிவுடன் ஒவ்வொருவரையும் விசாரித்து கடிதம் எழுதுவாள் அகிலா. தவிரவும் அவள் எதற்காகக் கவலைப்பட வேண்டும்? அவளின் குடும்பத்தைத் தாங்க, எந்த ஒரு



உதவியையும் செய்ய கிருஷ்ணன் தயாராக இருந்தார் அல்லவா?

தன்னோடு வந்து இருக்க ஆசைப்படும் பவானி ராமுவை அடிக்கடி திருச்சிக்கு அழைக்க முடியவில்லையே என்ற குறை சின்னதாய் அகிலாவினுள் முதலில் தோன்றியது உண்மைதான். காரும், பங்களாவும், ஆளும், அம்புமாய் அக்கா வாழ்கிறாள்; விடுமுறைக்கு அவளுடன் போய் இருக்க வேண்டும் என்ற அந்தக் குழந்தைகளின் விருப்பம் நியாயமானது தானே!

ஆனால் அதற்கு ஏனோ சந்தர்ப்பமே எழவில்லை. கல்யாணமான நாலாம் மாசம் டாக்டரைப் பார்த்ததிலிருந்து அடுத்த ஒன்றரை ஆண்டுகளில் மூன்று மேஜர் ஆபரேஷன்கள் சென்னை விஜயங்கள், பிஸியோ தெரபி கவனிப்பு சிஷ்ருஷை என்று கணவனை ஆளாக்குவதிலேயே அகிலாவின் முழுக் கவனம் இருந்ததால் தம்பி தங்கைகளை தன்னோடு நாலு நாட்களாவது வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அல்ப ஆசையைக்கூட நிறைவேற்ற இயலாமல் போயிற்று

ஸ்ரீதரன் கத்தலும், கோபதாபமும் நிறைந்தவனாக இருந்த சமயம், சிகிச்சை வேதனையை தந்த சமயம், முடிவுகள் எப்படி இருக்குமோ என்று தவித்த சமயம், எப்படி தம்பி தங்கைகளை அழைத்து வந்து சீராட்டுவது சாத்தியம்?

அகிலாவின் இந்த இயலாமை கிருஷ்ணனுக்குப் புரியவே செய்தது. அகிலாவின் லெட்டர்களில் ராமு தான் அங்கு வரத் துடிப்பதை எழுதுவது அவருக்குத் தெரியுமே.

ஏன் ஒரு சமயம் சென்னைக்கு இவர் போயிருந்த போது ராமு இவரிடமே நேரிடையாய்க் கேட்டானே!

"அக்காவுக்கு எத்தனையோ தடவை எழுதிட்டேன். எனக்கு அங்கு வந்து இருக்க ஆசையாய் இருக்குது. இந்த லீவுக்கு வரட்டுமா, மாமா?"

ஸ்ரீதரனை வழிக்குக் கொண்டு வருவதில் அகிலா ஈடுபட்டிருப்பதால் இந்தப் பையனின் ஆசையை அவள் நிறைவேற்றவில்லை என்பதும், ஏழைக் குடும்பத்துக் தப்பு நடந்து கொள்ளத் தெரியாமல் மாமியாரிடம் கெட்ட பேர் வாங்கி விடுவானோ என்று பயப்படுவதும் ஸ்ரீதரனுக்கா தெரியாது?

அந்த முறை சென்னைக்குப் போனவர் காரில் அவர் ஊர் திரும்பிய சமயத்தில் விடுமுறையில் இருந்த பவானியையும், ராமுவையும் உடன் அழைத்து வந்தார்.

ஸ்ரீதரனுக்கு இரண்டாவது ஆபரேஷன் முடிந்து நல்லபடியாய் இருந்த சமயம், வீட்டில் அத்தனை டென்ஷன் இல்லை.

எண்ணி நாலு நாட்கள் குழந்தைகளை வைத்துக் கொண்டபின் 'மெட்ராசில் அர்ஜண்ட் வேலை இருக்கு, போன் வந்தது' என்று கிளம்பி பவானி, ராமுவை திரும்ப சென்னையில் கொண்டு விட்டுவிட்டார்.

ஊருக்குப் போகும் ராமு, பவானிக்கு என்னென்னவோ பரிசுகள், ஜானகிக்குத் தெரியாமல்தான்.

சென்னையில் வேலையும் இல்லை, ஒன்றும் இல்லை. ராமு, அகிலாவின் திருப்திக்காக கூட்டி வந்து சில நாட்கள் தங்க வைத்தவர் அவர்களை கொண்டு விடவே இந்த அர்ஜெண்ட் வேலையை உற்பத்தி செய்திருக்கிறார் என்பதை அகிலா புரிந்து கொண்டாள்.

குழந்தைகளுக்கும் சந்தோஷம்; அகிலாவுக்கும் திருப்தி. ஜானகியும் முணுமுணுக்கவில்லை. இதைவிட வேறு யாரால் சிறப்பாய் திட்டமிட முடியும்?



ஸ்ரீதரனுக்கு மூன்றாவது முறையாக டெண்டன் டிரான்ஸ்ப்ளான்டேஷனை செய்தபோது ஒரு நாள் அதிசயமாய் தனிமை கிடைத்து, மகாதேவன் அவளிடம் மனம் விட்டுப் பேசினார்.

அன்று வெள்ளிக்கிழமை. எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக அவன் மாடிபாத்ரூமுக்குப் போயிருந்தான். [illegible]

நிதானமாய் குளிச்சிட்டு சாப்பிட்டுட்டு வா அகிலா. ஆத்தலே போச்சுது என்று வராதே என்று மிகுந்த சாமர்த்தியத்துடன் ஸ்ரீதரனே சொல்லிவிட்டதால் அகிலா காலை ஏழு மணிக்கே பிறந்தகத்துக்குப் போய்விட்டாள்.

இன்றுபடியும், வேப்பமரமும் கொஞ்சம் கூட மாறாமல் அப்படியே இருந்தன. தலையில் எண்ணெயை வைத்துக் கொண்டு அலைந்து, தோட்டத்தைச் சுற்றி வந்தாள். பூக்களைப் பறித்து மாலையாய் கட்டி வைத்தாள். வேதாம்பாளிடம் உட்கார்ந்து பேசிய போது தான் மாமி சொன்ன விஷயம் அதிர்ச்சி தருவதாக இருந்தது.

மாமிக்கு கண்ணில் காட்ராக்ட் சதை வளருகிறதாம். பழுத்த பிறகு அறுவை சிகிச்சை பண்ண வேண்டுமாம்.

'வெங்கடேசனை டிபன்ஸ் மினிஸ்ட்ரியில் வேலை பார்க்க டெல்லிக்கு கூப்பிடுவா போலிருக்கு; அப்படி மாறினால் டெல்லியில் ஒரே இடமாய் இருக்கலாம்; அடிக்கடி டிரான்ஸ்பர் கிடையாது. நீ குழந்தைகளோடு டெல்லிக்கு வந்துடு; படிப்புக்கும், உன் வைத்தியத்துக்கும் சௌகரியம்' என்று தங்கம் எழுதி இருந்த லெட்டரை அகிலா பார்த்தாள்.

"எனக்கும் கண்பார்வை லேசாய் மறைக்கிறது. தங்கம் இப்படி எழுதியிருக்கா; என்ன பண்ணறதுன்னு தெரியலை."

மாமி இல்லாத வீட்டை அகிலாவால் கற்பனை பண்ணிக் கூட பார்க்க இயலவில்லை.

மாமி போய்விட்டால் அப்பா, அம்மா என்ன செய்வா? இத்தனாம் பெரிய வீட்டை என்ன பண்ண உத்தேசம்? வித்துடுவாளா? இல்லை வாடகைக்கு விடுவாளா? அகிலாவுக்கு ரொம்ப வருத்தமாக இருந்தது.

மாமிக்கு கண் சரியாக இல்லை. இருப்பதோ ஒரே பெண். அவளோடு போய் இருக்காமல் வேறு என்ன செய்ய இயலும்?

உடனடியாக போகப் போவதில்லை; எப்படியும் ஒரு மாசங்களாவது ஆகும் என்று வேதாமாமி சொன்னது கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

வீட்டுக்கு வந்து குளித்து தலையை ஆறப் போட்டவண்ணம் அப்பாவிடம் இதுபற்றிப் பேசினாள் அகிலா.

மகாதேவன் பள்ளிக்கு அரைநாள் லீவு போட்டு விட்டார்.

அகிலா வருவதே அதிசயம்! அவளுடன் ஆற அமர இருந்து சாப்பிட்டு பேசாமல் பள்ளிக்குப் போக அவருக்கு மனம் வரவில்லை.

வேதா மாமி தன்னிடம் கூறினவைகளை அப்பாவிடம் சொன்னாள் அகிலா.

"மாமிக்கு காட்ராக்ட் எத்தனை நாளாய் இருக்கு? டெல்லிக்குப் போயிட தீர்மானிச்சதுமே எனக்கு லெட்டர்லே கூட நீங்க எழுதலையேப்பா?"

"இப்பத் தான் ஆறு மாசமாய் இந்தத் தொந்தரவு. உனக்கு எழுதி வீணா உன்னைக் கவலைப்பட வைக்க வேண்டாம்னு தான் எழுதலை."

"மாமி துணைக்கு இருந்தா நான் நிம்மதியா இருந்தேன். அவர் போயிட்டா கஷ்டமாக இருக்குமேப்பா?" அகிலா கவலையுடன் வினவினாள்.



மகாதேவன் சிரித்தார்.

"என்னம்மா பண்ண முடியும்? தங்கம் வாழ்வு எழுதப்போ மாமி போய்த் தானே ஆகணும்? அம்மாவைக் கிட்டத்தில் வைச்சிண்டு வைத்தியம் பண்ணறதுக்கு, பசங்களை அங்கேயே படிக்க வைக்கறதுக்கு, எல்லாத்துக்கும் டெல்லியிலே சௌகரியமாய் இருக்கும். அவாளும் குழந்தைகளை பிரிஞ்சு எத்தனை வருஷம் இருப்பா? மாமி ஆயுசுக்கும் தனியா இருக்க முடியுமா? மாமி இல்லாம எங்களுக்குக் கை ஒடிஞ்ச மாதிரிதான் இருக்கும், என்ன பண்ணறது? ஸ்வாமி இல்லாம நாங்க இருக்கலையா? ஏன், உன்னையே பிரிஞ்சு இருக்க நாங்க கத்துக்கலியா? வாழ்க்கையிலே எல்லாத்துக்கும் பழகிக்கணும் அகிலா."

நிதானமாய் பேசும் அப்பாவை நிமிர்ந்து பார்த்தாள் அகிலா.

"என்ன சமாதானம் செய்துண்டாலும் என் மனசுக்கு சங்கடமாய்த் தான் இருக்கு. உடனடியா மாமி போகமாட்டாங்கறதுலே ஒரு அற்ப திருப்தி."

"பகவான் கிருபையிலே நான் ஒரு குறையும் இல்லாமல் இருக்கேன் அகிலா. உங்க மாமனார் நம்ம குடும்பத்தை தன்னுதாட்டமா பார்த்துக்கறார். துணி மணி சாமானாய் கொண்டு கொட்டறார். அவரை என் மூத்த சகோதரராய் பாவிச்சுண்டு இருக்கேன்—"

அப்பா உணர்ச்சிவசப்பட்டு பேசுவதற்கு அகிலா ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"உன்கிட்ட இன்னொரு சமாசாரம் சொல்லணும் அகிலா. போன தடவை வந்திருந்தப்போ உன் மாமனார் ஒரு கவரை நீட்டி "இதுலே ஆயிரம் ரூபாய் இருக்கு. பவானியோட காலேஜ் செலவுகளுக்கு வைச்சிக்கோங்கோ"ன்னார். நான் மறுத்துட்டேன். என் செய்கையாலே

அவரை நான் புண்படுத்திட்டேனோனு பயமா இருக்கு. நீ அவர்கிட்டே இதைப்பத்தி பேசினா தேவலை. இங்கே பாரு அகிலா, உன் கல்யாணத்துக்கப்புறம் இங்கே ரொம்ப நிம்மதியா சௌகரியமா வாழறது தாங்க உண்மை. காலணா கடன் இல்லை. வயிறார சாப்பாடு இப்போதைக்கு பவானி, ராமு செலவுகளை என்னால சமாளிக்க முடியறது. கைநீட்டி வாங்கற குணத்தை வளர்த்துண்டுட்டா அதை அப்புறம் நிறுத்த முடியாதபடி அதற்கு அடிமை ஆயிடுவோம். அதனாலேதான் நான் உங்க மாமனார் கொடுத்த பணத்தை வேண்டாம்னேன். இதை அவர்கிட்டே நீ கொஞ்சம் எடுத்துப் பேசினா எனக்கு சந்தோஷமாய் இருக்கும். ஆச்சு இன்னும் இரண்டு வருஷம் அப்புறம் நான் ரிடையர்டு ஆயிடுவேன். பவானி கல்யாணத்துக்கோ, இல்லை ராமுவோட மேல் படிப்புக்கோ என்னால் அப்போ அதிகமாய் செலவு பண்ண முடியாமல் போய், அந்த சமயத்திலே உங்க உதவியை நான் கேட்கும்படி ஒரு சந்தர்ப்பம் வந்தால் நானே நிச்சயமாய் உங்க மாமனார்கிட்டே வந்து கேட்பேன். என்னம்மா அகிலா, நான் சொல்லறது நியாயம் தானே? உன்னைப் பெண்ணாய் நினைக்கலேம்மா! ஸ்வாமிக்குப் பதிலாய் இந்தக் குடும்பத்தை கரை சேர்க்கிற மகனாய் நான் பாவிச்சுண்டு இருக்கேன். உன் கல்யாணத்துக்கு முன்னால் இந்தக் குடும்பத்தை உன் தோளில் சுமந்தே, இப்ப உன் மாமனார் சுமக்க ஆசைப்படறார். அவர் உதவியை நான் தடுக்கலை. இப்போ நான் தெம்பாய் இருக்கேன். அப்புறம் பலமில்லாமல் தவிக்கிறபோது கண்டிப்பாய் உங்க உதவியையும் ஏத்துக்கறேன்னு சொன்னதாய் அவரிடம் சொல்லுவியா அகிலா? எனக்கு அவர் சமீபத்துலே நின்னு நேருக்கு நேர் பேச தைரியம் வரமாட்டேங்கறது... அவர் ரொம்பப் பெரியவர். அவருக்கு சரிசமனாய் நிற்க எனக்கு ஏது யோக்கியதை?"

அப்பா உதவி மறுத்ததை மாமனார் தவறாக எடுக்க மாட்டார் என்பது புரிந்த அகிலா இதைப் பற்றி



கிருஷ்ணனிடம் பேசவில்லை... ஆனால் தன்னால் தன் குடும்பத்துக்கு சந்தோஷம் வரவேண்டும் என்று சிந்துருகி வேண்டியதற்கு பலன் இருப்பதை எண்ணி நெஞ்சு நிறைந்து போனாள்.

"மன்னி பரதேசி கோலம் புறப்பட்டாச்சு. இன்னும் இங்கே என்ன பண்ணறேள்? கூட்டிண்டு வாங்கோ" வித்யாவின் குரல் கேட்டு கைக்காரியத்தை அப்படியே வைத்து விட்டு அகிலா கிளம்பினாள்.

"வாங்கோ, எல்லாரும் வாங்கோ. வாசலுக்குப் போகலாம்" அறையை பூட்டிச் சாவியை இடுப்பில் செருகிக் கொண்ட அகிலா, அங்கும் இங்குமாய் சிதறி இருந்த பெண்டுகளையும் கிளப்பினாள்.

பரதேசி கோலம் ஆகி, மாலை மாத்தினபோது ஏக அமர்க்களம்.

ஸ்ரீகரனும், ஹரியும் ராஜாவின் அருகில் நின்று உஷா மாலை போடவந்த போது தரதரவென்று அவள் கைக்கு எட்டாத இனுசில் அவனை இழுத்துப் போய் பந்தலில் கலகலப்பை உண்டாக்கினார்கள்.

மணமக்கள் ஊஞ்சலில் அமர்ந்ததும் வயதான சுமங்கலிகள் பாலும், பழமும் கொடுத்தபோது மூத்த மாட்டுப் பெண் என்ற ஹோதாவில் அகிலாவும் பாலும், பழமும் கொடுத்தாள். ஊஞ்சல் பாட்டுக்கள் பாடப்பட்டன.

"எல்லாரும் பெண் வீட்டிலிருந்தே பாடறோம், பிள்ளை வீட்டில் பாடத் தெரிந்தவர் கிடையாதா?" என்று யாரோ கேட்க, "ஏன் கிடையாது, எங்க மன்னி நன்றாய்ப் பாடுவாள்" என்றான் ஹரி.

அத்தனை பேர்கள் கவனமும் அகிலாமேல் திரும்பியது.

நானா? பாடணுமா? இந்தக் கூட்டத்திலா? அம்மாடி, என்னால் முடியாது. இந்த ஹரி இப்படி காலை வாரி விடுகிறானே! அகிலாவுக்குப் பயம்; ஆச்சரியம். வித்யா அகிலாவை நெருங்கி நின்றாள். "பாடுங்கோ மன்னி!"

"எனக்குத் தெரியாதும்மா"

"பொய். நானும் ஹரி அண்ணாவும் நீங்க பாடி எத்தனை தடவைகள் கேட்டிருக்கோம்."

"அதெல்லாம் சும்மா, ஆத்தில் பாடுவது, வந்து.."

"மன்னி ஃபீல் பண்ணாமல் பாடுங்கள், யூ ரியலி ஸிங் வெல்" ஹரி சுவாதீனமாய் பேசினான்.

இவள் ஏதாவது ராகத்தை சதா முனகுவதைக் கேட்ட ஹரியும், வித்யாவும் இவளைப் பாடச் சொல்லி வற்புறுத்துகிறதுண்டு; இவளும் ரேடியாவில் தான் கற்ற சின்ன சின்ன மெல்லிசைப் பாடல்களை, கீர்த்தனங்களைப் பாடியதுண்டு.

"பாடும்மா" கிருஷ்ணனே கூறிவிட்டார்.

புடவைத் தலைப்பை கையால் திருகின வண்ணம் அகிலா தலையைக் குனிந்து கொண்டு பாடினாள்.

"மாமவ பட்டாபி ராமா..."

பாட்டின் மேல் தனக்கு உள்ள ஆர்வத்தால் கணீரென்று குரல் எடுத்து மணிரங்கு ராக தீக்ஷிதர் கீர்த்தனையை அழகாய் நிறுத்திப் பாடினாள் அகிலா.

அகிலா இத்தனை நன்றாய்ப் பாடுவாளா?

கேட்டவர்களுக்கு ஆச்சர்யம்!

மருமகளின் பாட்டைக் கேட்டு அசந்து போன கிருஷ்ணன் அதோடு நிற்கவில்லை.



ராஜாவின் கல்யாணம் நல்லவிதமாய் முடிந்து ஊர் திரும்பி, ராஜா உஷா தனிக்குடித்தனம் செய்யப் புறப்பட்டுப் போய், வீடு நிதானத்துக்கு வந்ததும் முதல் வேலையாய் ஸ்ரீதரனிடம் தன் எண்ணத்தைச் சொன்னார். பின் அகிலாவிடம் பேசினார்.

"பாட்டுன்னா உனக்கு ரொம்ப விருப்பமாம்மா?"

அகிலா 'ஆம்' என்று தலையை அசைத்தாள்.

"நீ முறையா கத்துண்டாயா?"

எதற்காக இவர் இப்படிக் கேட்கிறார் என்று புரியாமல் விழித்த அகிலா "ஸ்கூல்லே கத்துண்டதுதான்; அப்புறம் தனியா கத்துக்க வசதி இல்லை" என்றாள்.

"ராஜா கல்யாணத்துலே நீ பாடினதைக் கேட்டப்புறம், உனக்கு முறையா சொல்லிக் கொடுத்தால் என்னனு தோணித்து. ஸ்ரீதரன் கிட்ட பேசினேன்; அவனும் ஒத்துக்கறான். நல்ல வாத்தியார் ஒருத்தரை ஏற்பாடு பண்ணலாம்னு இருக்கேன். என்னம்மா சொல்றே?"

அகிலாவினுள் குபீரென்று எழுந்த சந்தோஷம் வெளிப்படையாகத் தெரிந்தது.

அடுத்த பதினைந்தாம் நாள் ஜானகியிடமும் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு கிருஷ்ணன் திருச்சியிலேயே சிறந்த பாடகரை வீட்டுக்கு வரவழைத்தார்.

வாரத்திற்கு மூன்று கிளாஸ்.

நினைவு தெரிந்த நாட்களாய் சங்கீதத்தில் கொண்டிருந்த மோகத்துக்கு இப்போது வகையாய் தீனி கிடைத்த உற்சாகத்துடன் அகிலா பாடத் தொடங்கினாள்.

## பதினெட்டு

ஜானகியின் ஒரே தம்பி கணேசன் ஆனைத்தம்பு திருச்சியிலிருந்து கூப்பிடு தொலைவில் இருந்த ஜீயபுரத்தில் பூர்வீக சொத்துக்களின் ஏகபோக வாரிசாகத் தன் குடும்பத்துடன் இருந்து வந்தார். ஜானகிக்குச் சொந்தமான நிலங்களையும் அவரே கவனித்து வந்ததால் இரண்டு குடும்பங்கள் நடுவிலும் நல்ல அழுத்தமான உறவு இருந்தது. காவிரிக் கரையில் கல்லணைக்கு எட்டின வரை இருந்த நிலம். சங்கரய்யர் ஜானகியின் தகப்பனார் ஆண்டு அனுபவித்து, தன் பெண் பிள்ளைக்காக விட்டு விட்டுப் போயிருப்பது. நெல்லைப் போட்டாலும் தங்கத்தைத் தான் தருவேன் என்று அடம் பண்ணுகிற பொன் விளையும் பூமியாக இருந்தது.

செல்வச் செழிப்புக்குக் கேட்க வேண்டுமா?

கணேசனுக்குத் திருமணமாகி ரொம்ப நாட்களுக்குக் குழந்தைகள் இல்லாமல் இருந்து பின்பு முதலில் ஜனித்தவள் காயத்திரி. அவளுக்கு, கீழ்க்கடையாய் இரண்டு பையன்கள்.

காயத்திரிக்கு அநியாயமாய் செல்லம் கொடுத்து குட்டிச்சுவராக்கினதில் ஒரு பெண்ணுக்குத் தேவையில்லாத துர்க்குணங்களெல்லாம் அவளிடம் நிறையவே வளர்ந்து விட்டன. பத்தாவது மேல் படிக்க மாட்டேன்; எனக்குப் படிப்பில் இஷ்டமில்லை என்று அவள் சண்டி பண்ணியதால், பள்ளிப் படிப்பு போதும் என்று மாப்பிள்ளை வேட்டையில் கணேசன் இறங்கினார்.

அக்கா மகன்களில் ஒருவனுக்கு பெண்ணை முடித்து விட்டால் சொத்துக்கள் வெளியே போகாது; அலைச்சல் மிச்சம். கணேசனுக்கு உள்ளூர தப்பாசை, யோசித்தார்.



ஸ்ரீதரனுக்கு கொடுக்க முடியாது; தொண்டி. அடுத்தவன் ராஜாவுக்கு? பேசிப் பார்த்தால் என்ன என்று தோன்ற அக்காவிடம் இது பற்றி பேசவே செய்தார்.

ஜானகிக்கு விருப்பம்தான். ஆனாலும் நடக்குமா? மூத்தவனுக்கு ஒரு வழியைச் செய்யாமல் இளையவனுக்கு எப்படிப் பேசுவது? காயத்ரிக்கு வயசு என்ன பதினேழா? ராஜாவுக்கு இருபத்தி இரண்டு. வயசு வித்தியாசம் போதும். ராஜா கூட இன்ஜினியரிங் முடித்துவிட்டு வடக்கே வேலையாய் இருக்கிறான். எல்லாம் சரிதான். ஆனாலும்?

தயக்கப்பட்டுக் கொண்டே கணவனிடம் பேசிய போது வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பதில் சொல்லி விட்டார் அவர்.

"காயத்ரிக்கும், ராஜாவுக்குமா? அவ பத்தாவது முடிக்கலை; ராஜா பட்டம் படிச்ச பெண் வேணுமுன்னு ஆசைப்பட மாட்டானா? வடக்கே இருக்கிற பையனுக்குச் சரியா நாலு வார்த்தை இங்கிலீஷில் பேச, பழக இவளுக்குத் தெரியாதே? உறவுக்குள் சம்பந்தம் பண்ணறது அவ்வளவு சௌக்கியம் இல்லைனு படிச்சவா சொல்லறா. குழந்தைகள் கெட்டதாய் இருக்காளாம். தவிரவும் ஜானகி, மூத்தவன் இருக்கும் போது இளையவனுக்குக் கல்யாணப் பேச்சை எடுக்கறது நியாயமா? முதல்லே ஸ்ரீதரனுக்கு நல்ல பெண்ணாய்ப் பார்த்து முடிக்கணும். அப்புறம் ராஜாவைப் பத்தி நினைக்கலாம். அவனுக்கும் வயசு ஆகலையே! உன் தம்பி கிட்டே வேற இடம் பார்க்கச் சொல்லிடு. வீணா காத்திருக்கப் போறான்."

ஜானகிக்கு வருத்தம்தான் "ஸ்ரீதரனுக்கு கல்யாணம் பண்ணாமல் ராஜாவுக்கு பேச வேண்டாம்ங்கறார்; அவனுக்கு எப்போ ஆகுமோ. நீ வீணா பெண்ணை வைச்சுண்டு காத்துண்டு இருக்காதே. காயத்திரிக்கு என்ன? ராஜாத்தியாட்டம் இருக்கா. நல்ல இடம் அமையறதா கஷ்டம்?" என்று தம்பியிடம் பேசி அவனை உடனடி

தால் வேறு பெரிய இடத்தில் சம்பந்தம் பேச வைத்தான்.

வால்குடி பெரிய பண்ணையில் புதல்வன் சுந்தரம், காயத்ரி கழுத்தில் நல்லதொரு முகூர்த்தத்தில் மூன்று முடிச்சுகளைப் போட்டான். சுந்தரம் பார்வைக்கு ஸ்ரீகாந், ராஜா மாதிரி இல்லாவிட்டாலும் உயரம், பருமன், புருஷத் தனம், இவைகளில் குறைவில்லாமல் இருந்தான். நிலபுலன்கள் ஏராளம். பி.யு.சி. படித்திருந்தாலும் வெறும் விவசாயத்தோடு திருப்தி கொள்ளாமல், பெரிய உரத்தொழிற்சாலையின் உற்பத்தி பொருட்களுக்கு ஏஜென்ஸி எடுத்து, நல்லவிதமாய் வால்குடியிலேயே கடை நடத்தி வந்தான். ஆக கெட்டிக்காரன்.

அகிலாவைவிட, ஒருவயசு சின்னவள் காயத்ரி. ஸ்ரீகாந் அகிலா கல்யாணம் நடந்தபோது காயத்ரிக்கு கையில் பத்து மாச பெண் குழந்தை.

அத்தையிடம் காயத்ரிக்கு தனியான வாஞ்சை உண்டு. ஜீயபுரத்தில் கல்யாணத்துக்கு முன் இருந்தபோது திரும்பி பார்த்தால் 'அத்தே' என்று அழைத்துக் கொண்டு வந்து நிற்பாள். வந்தாள் இரண்டு நாலு நாட்கள் உல்லாசத்துடன் தங்கிப் போவாள். இதெல்லாம் திருமணம் ஆகி குறைந்து போனதில் அவளுக்கு வருத்தமே.

மனுஷர்களை தூக்கி எறிந்து பேசும் குணத்தை காயத்ரியிடமிருந்துதான் கற்றுக் கொள்ள வேண்டும். பிடித்தால் பேசுவாள்; இல்லாவிட்டால் நுனி நாக்கால் பந்தாடி விடுவாள். இந்த ஒரு காரணத்தாலேயே சுந்தரத்துக்கும் அவளுக்கும் சீக்கிரத்தில் மனஸ்தாபம் அடிக்கடி எழத் தொடங்கியது.

சுந்தரத்துக்கு அப்பா இல்லை. அம்மா மட்டும்தான். செல்வாக்கான குடும்பம். நாலு பெண்களுக்கிடையில்



கருவேப்பிலை கொத்தாய், சுந்தரம் ஒரே மகன். பணத்துக்கும் சொத்துக்கும் பஞ்சம் இல்லை. மாளிகை போன்ற வீடும், பத்தாயம் பத்தாயமாய் நெல்லும், மூட்டை மூட்டையாய் பருப்பும், இரும்புப் பெட்டி வழிய வழிய பணமும், நகைகளும் இருந்தும் பாலும், தயிரும், நெய்யும் ஆறாக ஓடியும் ஜகஜ்ஜவென்று எந்நேரமும் வந்து தங்கின உறவுக் கூட்டம் காயத்ரிக்கு சகிப்படாமல் போயிற்று.

மாமியாரிடம் மரியாதை இல்லாமல் பேசுவாள்; நாத்தனார்களை அலட்சியப்படுத்துவாள். நினைத்த போது திடும் என கிளம்பி ஜீயபுரத்துக்குப் போய் விடுவாள். கல்யாணமாகி, குழந்தையும் பிறந்து, அதற்கு இரண்டு வயசு ஆகியும் இவள் இன்னும் பொறுப்பை உணராத, அடக்கத்தை அறிந்து கொள்ளாத, விட்டுக் கொடுக்கும் மனோ முதிர்ச்சியை அடையாத காயத்ரியாகவே இருந்ததால் சுந்தரத்திற்கும், அவளுக்கும் இடையில் வாக்கு வாதங்கள் ஏற்படாமல் வேறு என்ன செய்யும்?

அகிலா இந்த வீட்டுக்கு வந்த புதுசில், நாலில் எட்டில் இங்கு வரும்போது அத்தையுடன் சேர்ந்து கொண்டு அவளை மட்டம் தட்டி பேசுவதற்கு காயத்ரி ரெடி. அகிலாவின் தெத்திப்பல்லும், மாநிறமும், எளிமையும் வெறும் வாயை மென்றவளுக்கு அவலாக ருசித்தது.

"போயும் போயும் இந்த பெண்ணா நம்ப பெரியத்தானுக்கு கிடைக்கணும். என்ன அத்தை நீங்க? இதுக்கு ஏன் சம்மதிச்சேள்?"

"நான் என்னடியம்மா பண்ணுவேன்? உங்க அத்திம்பேர் ஒத்தைக் காலில் நின்றார்; அவனும் சரின்னுட்டான். அப்புறம் எனக்கு பேச வாய் ஏது? ஸ்ரீகாந்துக்கு வயசாயிண்டு போறது, அவனுக்கு அடுத்தபடியா ராஜாவை கவனிக்க வேண்டாமா? என்னமோ போ."

அத்தையும், மருமகளும் குசுகுசுப்பார்கள்.

தப்பித் தவறி இவர்கள் பேச்சு அகிலா காதில் விழுந்தால் கூட அதற்காக கவலைப்படுபவள் இல்லை காயத்ரி.

"ஆமாம், பெரிய துரைசாணி. இவள் காதில விழுந்தால் எனக்கென்ன" என்று அலட்சியத்துடனே இருப்பாள்.

கன் புக்ககத்தைப் பற்றி வண்டி வண்டியாய் அத்தையிடம் வம்பளந்து புகார் சொல்லுவாள் காயத்ரி.

தேர்த் திருவிழா மாதிரி எந்நேரமும் அங்கே மனுஷா தான் அத்தே! பெரிய பொண், மாத்தி சின்ன பொண்ணுனு ஒவ்வொருத்தரா பிள்ளை பெற வருவா. இல்லைனா பிறந்தாத்துலே சீராட வருவா. மாமியாரைப் பத்தி கேட்கவே வேண்டாம். பிள்ளையை மடியை விட்டு இறக்க மாட்டார். தனியா சித்த பேசறத்துக்குள்ளே சுந்தரம், ஏண்டாப்பா சுந்தரம்னு ஐம்பது தடவை கூப்பிட்டுடுவார். போங்கோ அத்தே, எனக்கு ஒண்ணுமே பிடிக்கலை. இருந்து இருந்து அப்பா மாப்பிள்ளை தேடினாரே அவரைச் சொல்லணும்."

"ஏண்டி சுந்தரத்துக்கு என்ன குறைச்சல்? ஆள் நன்னா வாட்ட சாட்டமா இருக்கான்; பணத்திலே நீ விழுந்து புரளலாம் அப்புறம் என்ன?"

"போங்கோ அத்தே. உங்களுக்குப் புரியமாட்டேங்கறது. பெரிய பணம்; நம்பாத்துலே இல்லாததா? உங்க தம்பியை நீங்க விட்டுக் கொடுப்பேளா? என் மனசு யாருக்குப் புரியப் போறது?" சில சமயங்கள் மூக்கைச் சிந்தி காயத்ரி அழுதது கூட உண்டு.

சுந்தரத்தை என்ன சொல்லி நச்சரித்தாளோ இல்லை பெற்றவளையும், கூடப் பிறந்தவர்களையும் மதிக்காமல் இருப்பது பொறுக்க மாட்டாமல் தானோ என்னவோ,



பால்குடி கடையை மூடிவிட்டு, திருச்சியில் இன்னும் பெரியதாய் கடை திறக்கவும், அதற்காக பிரிந்து வந்து தனிக்குடித்தனம் அமைக்கவும் எப்படியோ சுந்தரம் ஒப்புக் கொண்டான்.

கல்யாணமான மூன்றாம் வருஷம், குழந்தை ரம்யாவுக்கு இரண்டு வயசானபின் திருச்சிக்கு கணவனை குடி பெயரச் செய்வதில் காயத்ரி வெற்றி கண்டாள்.

ஆனால், அவள் எதிர்பார்த்த நிறைவும் தனிக் குடித்தனம் இனிமையாக அமையவில்லை.

காஜாமலையில் அகிலாவின் வீடு; காயத்ரி தில்லை நகரில் இருந்தாள். மூணுக்கொன்றால் இங்கு ஓடி வந்து விடுவாள். கணவனைப் பற்றி ஆயிரம் புகார் சொல்லி அத்தையிடம் அழுவாள். விஷயம் முற்றிப் போனால் கோபித்துக் கொண்டு தாய் வீட்டுக்குப் போவதற்கும், அருகிலேயே ஸ்ரீரங்கம் இருந்தது சௌகரியமாய் போனது.

ஆரம்பத்தில் ஒரு சில முறைகள் சுந்தரம் இங்கோ இல்லை ஸ்ரீரங்கத்துக்கோ போய் பொறுமையுடன் காத்திருந்து மனைவியை அழைத்துப் போவதை அகிலா பார்த்திருக்கிறாள். ஆனால் வருஷம் ஒன்று பூர்த்தியாவதற்குள் கண் முன்னேயே காயத்ரி, சுந்தரத்தின் சண்டைகள் பெரிசாகி அதுவே அவர்கள் உறவை ஆழமாகப் பிரிக்க முயல்வதையும் அகிலா புரிந்து கொண்டாள்.

இப்போதெல்லாம் முன் மாதிரி கோபத்தில் பிறந்தகத்துக்குப் போகும் காயத்ரியை சமாதானம் பண்ண சுந்தரம் வருவதில்லையாம்; கோபித்துக் கொண்டு வந்தவளே தானே சமாதானம் அடைந்து திரும்பவேண்டியிருக்கிறதாம். அதுவும் இந்த முறை மனஸ்தாபம் பிரும்மாண்டமான வகையில் எழுந்து விட்டது என்பது தெளிவானது.

வயசான காலத்தில் அம்மாவைத் தனியாய் விட்டு விட்டு இருப்பது சுந்தரத்தின் மனதை உறுத்தியது

போதும். "வாரா வாரம் திருச்சிக்கும் லால்குடிக்குமாய் என்னால் அலைய முடியலை; திரும்ப லால்குடிக்கே போயிடலாம்னு தீர்மானம் பண்ணிட்டேன். அம்மாவை விட்டுப் பிரிஞ்சிருக்க எனக்கு மனசில்லை. நாம்ப தனிக் குடித்தனம் பண்ணி இந்த ஒரு வருஷம் வாழ்ந்த அழகு போதும்..." என்று சுந்தரம் சொன்னதும் புர்ரென்று கோபம் பீறிட ஸ்ரீயபுரத்துக்குப் பெண்ணுடன் காயத்ரி போய் மாசம் இரண்டாகி விட்டது. அவள் போனதைக் கொஞ்சமும் லட்சியம் பண்ணாத சுந்தரம் ஆட்களை வைத்துக் கொண்டு வீட்டை ஒழித்து, கடையை மூடி லால்குடியோடு போய் விட்டான்.

அன்று ஸ்ரீயபுரத்திலிருந்து கணேசன் வந்திருந்தார். மாப்பிள்ளை வா என்று அழைக்கவில்லையாம். இவளும் போகிறேன் என்று சொல்லவில்லையாம். ஏதாவது கேட்டால் பிழிய பிழிய அழுகிறாளாம். பண்டிகை, பிள்ளை பிறப்பு என்று காரணம் ஒன்றும் இல்லாமல் வீட்டில் வந்து மகள் மாசக்கணக்கில் இருப்பதைப் பற்றி ஊரில் பேசத் தொடங்கி விட்டார்களாம்.

''காயத்ரி இங்கே வந்து இருந்து ரொம்ப நாளாறது. அதனாலே நாளைக்கு அவளை அங்கே கொண்டு விடறேன்க்கா. நல்ல புத்தி சொல்லிப் புருஷனாத்துக்கு அனுப்ப முயற்சி பண்ணேன். எங்களாலே முடிஞ்சதை நாங்க பண்ணிப் பார்த்துட்டோம்.''

கணேசனைப் பார்த்தால் பாவமாக இருந்தது. அம்மா, அப்பாவைக் காட்டிலும் அத்தையின் சொல்லுக்கு ஒரு வேளை பவர் அதிகம் என்ற நம்பிக்கை. ஸ்ரீய புரத்துக்கு போகும் போதெல்லாம் ஜானகி சொல்லாத புத்திமதிகளா? புதுசாய் என்னத்தைக் கூறிவிடப் போகிறாள்? தம்பி ஆசையைக் கெடுப்பானேன் என்று சம்மதிக்க மறுநாள் காயத்ரி வந்து சேர்ந்தாள்.



அத்தையைக் கட்டிக்கொண்டு 'ஹோ'வென்று அழுதாள்.

"எனக்கு வாழவே பிடிக்கலை அத்தே! ஊர் சிரிக்க இதென்ன அசிங்கம்? அவர் ஆம்பிளையே இல்லை அத்தே. அவரோடு என்னால இருக்க முடியாது."

"பிடிக்காட்டா போக வேண்டாம். இங்கே என்னோட இரு. அழாதே'' ஜானகி சமாதானம் செய்தாள்.

''நீ புறப்பட்டுப் போ கணேசா. இரண்டு நாள் பொறுத்து நான் பேசிப் பார்க்கறேன்'' என்று அவள் சொன்னதால் கணேசன் ஊருக்குத் திரும்பினார்.

அடிக்கடி அத்தை வீட்டுக்கு வந்து அரைநாள், ஒரு நாள் என்று தங்கிப் போனாலும் முழுசாய் இந்த முறை பல நாட்கள் இருந்த போதுதான் அந்த வீட்டில் நிகழ்ந்திருந்த மாறுதல்களை ஊன்றிப் பார்க்க நேரம் கிடைத்தது. காயத்ரி பிரமித்துப் போனாள்.

அறையோடு அறையாய் ஒடுங்கி, நாற்காலியில் புழுங்கி எந்நேரமும் உறுமிக் கொண்டிருந்த ஸ்ரீதர் அத்தான் நடக்கிறார்; சிரித்துப் பேசுகிறார்; நாலு பேருடன் சகஜமாய் பழகுகிறார்! இது என்ன அதிசயம்!

வீட்டில் சலசலப்புக்கும், மகிழ்ச்சிக்கும் அடிப்படை ஆதாரம் அகிலா என்று உணர்ந்தபோது அவளின் வியப்பு அதிகமாயிற்று.

யாரைப் பார்த்தாலும் அகிலா ஜபம்தானா! ஆட்கள், அத்திம்பேர், ஸ்ரீதர் அத்தான், வித்யா, ஏன் மாட்டுப் பெண்ணைப் பற்றி முணுமுணுத்த அத்தைகூட சௌஜன்யமாய் பேசுகிறாள், அவளிடம் அன்பாய் இருக்கிறாளே, இது என்ன கூத்து!

தேய்ந்த மூஞ்சி, முன் தூக்கின பல்லு, வத்திப் போன உடம்பு என்று இருந்த அகிலாவால இப்படியொரு சாதனையை எப்படிச் செய்ய முடிந்தது!

ஒரே வாரத்தில் தாழ்ந்திருந்த அகிலா அவன் மதிப்பில் ஆகாசம் வரை உயர்ந்து போனதால், யார் சொல்லியும் காது கொடுத்து கேட்காத காயத்ரி அகிலா பேசின பேச்சுக்கு மட்டும் சற்றே செவிசாய்க்கத் தொடங்கினாள்.

முதன் முதலில் காயத்ரியைப் பார்த்து பழகும் போதே அவளை ஓரளவுக்கு எடைபோட்டு விட்டாள் அகிலா.

நிறைய செல்லம் கொடுத்து கெடுத்திருக்கா; பார்க்கிறதுக்கு நன்னா இருந்து, பணமும், செல்லமும் சேர்ந்து கொண்டதால் காயத்ரி தலைகனம் பிடித்தவளா இருக்கா. பிறத்தியாரோடு அட்ஜஸ்ட் பண்ணிக்கிற குணமும் விட்டுக் கொடுக்கிற சுபாவமும் இல்லை; யாராவது எடுத்துச் சொல்ல வந்தால் 'நீ சொல்லி நான் என்ன கேட்கறது?' என்று எடுத்தெறிந்து பேசறா. பாவம், தானும் கஷ்டப்பட்டு, சுத்தி இருக்கிறவாளையும் வருத்தப் பட வைக்கப் போறா!

மூன்று வருஷங்களுக்கு முன் அகிலா கணித்தது இன்றைக்கு நிஜமாகிப் போனது.

முன்பு தன்னை துரும்பாக மதித்தவள், இன்றைக்கு ஸ்ரீதரனிடம் தான் உண்டாக்கி இருக்கும் மாறுதலை உணர்ந்து தன்னிடம் மதிப்புக் கொண்டு நெருங்கி வரப் பார்க்கிறாள் என்பது தெளிவானதும் இவளின் நொண்டி மனசை எப்படி சரி செய்யலாம் என்று யோசித்து பக்குவமாய் காயத்ரியிடம் பழகிப் பேசினாள் அகிலா.

மனசில் நோய் கொண்டவர்களை சடாரென்று திருத்த முடியாது; நல்லதுக்கு என்று புத்திமதிகள்



சொல்லப் போனால் வெறுத்துக் கொள்வார்களே தவிர, நின்று நிதானித்து யோசிக்க மாட்டார்கள்.

முதலில் காயத்ரியின் முழு அபிமானத்தையும் பெற்றால் பிறகு அவளிடம் எது சொன்னாலும் காதில் ஏறும் என்பதால முதல் ஒரு வாரமும் அவளிடம் இனிமையாய் தன் சுபாவப்படி பழகினாள் அகிலா.

காயத்ரியின் பிரச்னைகளைப் பற்றி எதுவும் கேட்கவில்லை; அவளாக எதாவது சொன்னாலும் அனுதாபத்துடன் கேட்டு தலை ஆட்டி மேற்கொண்டு பிரச்னை அந்தத் திசையில் திருப்பவில்லை.

பாட்டில் மூணரை வயசு ரம்யாவுக்கு ஆர்வம் இருந்ததால், தனக்கிட்ட பாட்டு வாத்தியார் வரும்போது கூட குழந்தையையும் உட்கார வைத்துக் கொண்டாள். பின்னர் மாலை நேரங்களில் ரம்யாவுக்கு சரளி வரிசையையும், ஜண்டை வரிசையையும் சொல்லிக் கொடுத்தாள்.

ஜாதிப் பூக்கள் என்றால் காயத்ரிக்கு கொள்ளை ஆசை. மாலையில் ஜாதிப்பூவை தனியாய் தொடுத்து அவள் தலையில் வைப்பாள் அகிலா.

"உங்களுக்கெல்லாம்?"

"நாங்க தான் தினம் வைச்சிக்கிறோமே. நீ கொஞ்ச நாள் இருக்கப் போறே வைச்சிக்கோயேன். வித்யாவுக்கு முல்லை பிடிக்கும். அதுதான் நிறைய பூக்கறதே."

தனிமையில் கணவனிடம் அவளைப் பற்றி பேசினாள் அகிலா

"மனசு நொந்து வந்திருக்கா; நம்மால முடிஞ்ச உதவி பண்ணாட்டா அப்புறம் நமக்கு மனுஷப் பிறவி எதுக்கு? சாயங்கால வேளையில்ல டிராமா, சினிமானு அழைச்சிண்டு போகலாம். நீங்க கூப்பிடுங்கோ, வருவா."

"யானை தன் தலையிலே மண்ணை வாரிப் போட்டுக்கற மாதிரி, அவ கஷ்டங்களுக்கு அவளே காரணம் அகிலா. வாயைப்பாரு இந்தக் கோடிக்கு அந்தக் கோடி!"

"போயிட்டு போறது, விடுங்களேன். புண்பட்டு இருக்கிற பெண்ணை இன்னும் வேதனைக்கு உள்ளாக்கினால் எப்படி? நீங்க அவளைக் கூப்பிடுங்களேன்."

சினிமா, கோயில், கல்யாணம் என்று போய் வந்த பிறகு அகிலா அவளுடன் மனம் விட்டு பேச முற்பட்டாள்.

அன்று பகலில் அனைவரும் உண்டு உறங்கும் வேளையில் காயத்திரியுடன் மாடிக்குப் போனாள் அகிலா.

மாடி ஹாலில் தேக்கு ஊஞ்சல் உண்டு. அதில் உட்கார்ந்து ஆடிக் கொண்டே மெல்லப் பேச்செடுத்தாள்.

"உன் மனசிலே என்னமோ வருத்தம் இருக்குனு எனக்குத் தெரியும் காயத்ரி. புருஷன் பெண்டாட்டி சமாசாரம் அந்தரங்கமானது. இது பத்தி நான் கேட்டால் நீ என்ன நினைச்சுப்பியோனு நான் பேசாமல் இருந்தேன். என்கிட்டே சொல்லலாம்னால் சொல்லு."

இந்த கணத்துக்காக ஏங்கித் தவித்திருந்தது போல வெடித்துக் கொட்டினாள் காயத்ரி.

சுந்தரத்துக்கு இவள் மேல ஆசையே இல்லையாம்; அன்பாய் ஆதரவாய் பேசுவது கிடையாதாம்; வெளியில் வாசலில் கூட்டி போவது குறைந்து விட்டதாம். ஹோவென்று அழுதாள் காயத்ரி

"நான் படிக்காதவனு தெரிஞ்சுதானே கல்யாணம் பண்ணிண்டார்? சும்மா பட்டிக்காடு பட்டிக்காடுனா எப்படி! எனக்கும் கோபம் வந்துடும். பதிலுக்கு கத்திடுவேன். அது என்ன அத்தனை திமிர் அவருக்கு?" என்றாள்.



"அப்பா மாசாமாசம் புடவை, நகைனு ஏதாவது அனுப்பிச்சுண்டே இருப்பார். அட, இவர் வாங்கித்தர வேண்டாம், எங்கப்பா கொடுத்ததை நான் போட்டுண்டு இருந்தால் அதை நன்னா இருக்குனு பாராட்டத் தெரியாது? கேட்டால் 'உனக்கும் புடவையும், நகையும் தானே உலகம்; வேறு என்ன பேசத் தெரியும்?'ம்பார். ஏன்? புடவை நகை பத்தி பேசினா என்னனு நான் பதிலுக்குச் சண்டை போடுவேன்" என்றாள்.

"அம்மா... அம்மா... எப்பப்பாரு அம்மா பேச்சு தானா? ஒரு வழியாய் தனிக் குடித்தனம் வந்தோம்னு சந்தோஷப்பட்டேன்; ஆனா அது கூட நடக்கலை; சனி ஞாயிறு அம்மாவைப் பார்க்கப் போகணுமாம்! அது என்ன அதிசய அம்மாவோ, அபூர்வமான அக்கா தங்கைகளோ! எனக்கு வேண்டி இருக்கலை" என்றாள்.

"குழந்தை ரம்யானா உசிர். ஆனால் என்னை மட்டும் எட்டிக்காயா கசக்கிறது. நான் என்ன அவருக்கு சமையல்காரியா? வேலைக்காரியா? என் அருமை தெரியாதவர்கிட்டே நான் என் குடித்தனம் பண்ணணும்? குழந்தையை எடுத்துண்டு நான் போறேன்! தன்னா தனி மனுஷனா வந்துட்டேன்" என்றாள். இன்னும் என்னென்னவோ.

காயத்ரி பேசின பேச்சுக்களை வாயைத் திறக்காமல் கேட்டாள் அகிலா. கொட்டட்டும் மனதில் உள்ள அத்தனையும் கொட்டட்டும். அப்போதுதான் எங்கே குத்தம், எங்கே தப்பு என்று கண்டுபிடிக்க முடியும்.

காயத்ரி அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி பேசி முடித்ததும் அன்போடு அவள் கையைப் பிடித்து அமுக்கி, தலையைக் கோதி "கவலைப்படாதே காயத்ரி... நன்னா யோசனை செய்து இதுக்கு ஒரு வழிபண்ணுவோம்" என்று பட்டும் படாமலும் கூறி அவளை கீழே அழைத்து வந்தாள் அகிலா.

காயத்ரி கூறினவைகளோடு அவன் குணத்தையும் சேர்த்து பார்க்கும்போது குற்றம் அவளிடமே இருப்பதும் தெளிவாக அகிலாவுக்குப் புரிந்தது.

பலத்த யோசனைக்குப் பிறகு தொடர்ந்து சில நாட்கள் அவளுடன் மாடிக்குப் போய் தனிமையில் அமர எல்லா விஷயங்களையும் பற்றிப் பேசினான்.

எடுத்த எடுப்பிலேயே புத்திமதிகளை கூறத் தொடங்கினால் காயத்ரி ஏற்க மாட்டாள் என்பது தெளிவாக, பொதுவாக கிராம நகர வாழ்க்கையைப் பற்றி அவற்றின் வித்தியாசங்களைப்பற்றி பேச்சினுள் அவள் தாம்பத்திய வாழ்க்கையைப் பற்றியும் நடுநடுவில் சின்ன சின்ன கேள்விகளைக் கேட்டான்.

முதலில் அவர்கள் உறவு எப்படி இருந்தது? இவள் அழகைப்பற்றி சுந்தரம் என்ன சொல்லுவார்? ரம்யா உண்டானபோது நடந்த சம்பவங்கள்— இப்படி அதிகம் பேசப் பேச பல விஷயங்களை தன்றாய் அகிலாவால் புரிந்து கொள்ள முடிந்தது

ஆரம்பத்தில் இனிமையாய் துவங்கின உறவுதான், நாளடைவில் கசந்திருக்கிறது! காயத்ரியை வெகுவாக கொண்டாடிய சுந்தரம்தான் இன்று ஒதுக்குகிறான் ஏன்?

காயத்ரியின் துடுக்கு சுபாவமும், பணத் திமிரும், பெற்றவளை மதிக்காததும் முக்கியமாய கணவனின் விருப்பு வெறுப்புகளைப் பற்றி அறிய மறுத்து தன் வட்டத்துக்குள்ளேயே அவள் சுழன்றதும் காரணங்கள் என்பதை அகிலாவால் ஊகிக்க முடிந்தது.

பிரச்னைக்கு அடிப்படைக் கோளாறு புரிந்துவிட்டது. இனி சிக்கலை எப்படி விடுவிப்பது? எங்கேயிருந்து துவங்குவது?



கிட்டத்தட்ட நான்கு நாட்களுக்கு காயத்ரியை பேச விட்டு அத்தனையும் புரிந்து அலசின பிறகு காரியத்தில் இறங்கினான் அகிலா.

நேரடியாக காயத்ரியின் குற்றங் குறைகளை சுட்டிக் காட்டி பேசுவதை விட, தன்னைப் பற்றி தன்னிடம் உள்ள பலஹீனங்களைப் பற்றிக் கூறுவதன் மூலம் காயத்ரிக்கு புத்தி சொல்வதே சாலச் சிறந்தது என்று தீர்மானித்திருந்தபடி அகிலா பேசினான்.

தன்னைப் பற்றி, தன் குடும்பத்தைப் பற்றி, லலிதாவின் ஏமாற்றிலைப் பற்றி, லலிதா சுயநலகுணங்களைப் பற்றி, வேதாமாமியின் உபகாரச் சிந்தனையைப் பற்றி நிறையக் கூறினான்

"உன் குடும்பத்தைப் பற்றி என்னிடம் சொல்லி வருத்தப்பட்டே; இப்போ என்னைப் பத்தின விஷயங்களை கேளு" என்று சிநேகிதி ஒருத்தியிடம் அன்யோன்யமாகப் பேசுவது போல அகிலா நடந்து கொண்டது காயத்ரிக்குப் பிடித்தது.

மனிதர்களில் இத்தனை வகைகளா? இத்தனை குணங்களா? ஒரு குடும்பம் அமைதியுடன் இருக்க, சிலராவது அவ்வப்போது விட்டுக் கொடுத்து வாழ வேண்டுமா? என்பதெல்லாம் காயத்ரிக்குத் தோன்றியது அப்போது தான்.

மேற்கொண்டு சில நாட்கள் சென்றபோது மெதுவாய் ஸ்ரீதரனைப் பற்றிச் சொன்னான் அகிலா. தன்னுடைய தற்சமய வாழ்க்கையைப் பற்றிப் பேசினான்.

"எனக்கு என்ன இருக்கு காயத்ரி, அழகா, படிப்பா, பணமா? ஒண்ணும் இல்லை. இப்படி ஒண்ணுமே இல்லாத என்னை இத்தாத்துலே எத்தனை உயர்வா வெச்சுண்டு இருக்காங்கறதை நீதான் பார்க்கறியே!

குறையில்லாமல் யாரும் இருக்க முடியாது. குறையை உணர்ந்து அதை ஏத்துக்கறதில்தான் பெருமை. எத்தனையோ குறை இருக்கிற என்னை இங்கே எல்லாரும் ஏத்துண்டு இருக்கிறது, எத்தனை பெரிய விஷயம். நீயே சொல்லு?''

அகிலா காயத்ரிக்கு விரித்த வலையில் அவள் தொப்பென்று விழுந்தாள்.

''உங்கிட்டே குறை இருக்கலாம்; நீங்க அழகில்லாம இருக்கலாம்; பணக்காரியா இல்லாம இருக்கலாம்; ஆனாலும் அவாளால சாதிக்க முடியாததை நீங்கதானே செய்திருக்கேள்! எப்படி இருந்த அத்தானை எப்படி மாத்தியிருக்கேள்?''

தான் எதிர்பார்த்த அதே கோணத்தில் காயத்ரி பேசியது மகிழ்ச்சியைத் தர ''எப்படி இருந்தவர் இப்படி மாறியிருக்கார்னு சொல்லறே?'' என்று வினவினாள்.

''ஐயோ! முன்னே இந்தாத்துக்கு வந்தா ஸ்ரீதர் அத்தானைப் பார்த்தாலே பயமா இருக்கும். சிடுமூஞ்சியா, கோபதாபத்தோட இருப்பார். யாரும் கிட்டே போகலே பயப்படுவா. இன்னிக்குப் பாருங்கோ, சாதாரணமாக இருக்கார்; நடக்கறார். இவருக்குக் கால் விளங்கலைனு யாராவது சொன்னாத்தானே தெரியும்!''

''அப்படின்னா, சிடுமூஞ்சி கணவனை நான் மாத்திட்டேங்கறயா?''

''நிச்சயமா, உங்களாலதான் அந்த மாறுதல்.''

ஒரு நிமிஷம் அகிலா மௌனமாக இருந்தாள். பின்பு மெதுவாய்க் கேட்டாள்.

''அழகே இல்லாத, படிப்பே இல்லாத, பணம், நாகரிகம்னு ஒண்ணுமே இல்லாத என்னால சிடுமூஞ்சிக் கணவனை சிரிச்சவராய் மாத்த முடியும்னா, எல்லாம்



இருக்கிற உன்னால சுந்தரத்தை மாத்த முடியாதா காயத்ரி? அது கஷ்டம்னா நீ நினைக்கிறே?''

பொட்டில் அடிபட்ட மாதிரி காயத்ரி உட்கார்ந்து விட்டாள்.

அங்கே, இங்கே என்று தொட்டு, கடைசியில் அகிலா மண்டையிலே அடித்து விட்டாளா?

நிமிர்ந்து பார்த்த அவளால் பதில் சொல்ல இயலவில்லை.

அகிலா கேட்டது நியாயம் தானே? பழைய ஸ்ரீதரனோடு ஒப்பிட்டால் சுந்தரம் தங்கம் அல்லவா?

அகிலாவால் முடிந்தது இவளால் ஏன் முடியவில்லை?

ஆரம்பத்தில் ஸ்ரீதரன் அகிலாவிடம் ஒட்டுதல் இல்லாமல் இருந்தான்; ஆனால் சுந்தரம் அப்படி இல்லையே. காயத்ரி... காயத்ரி என்று சுற்றி வந்தவன் தானே?

காயத்ரியின் மனசில் விதையை விதைத்து பின்பு, இடை தேவையான அளவு தண்ணீர் என்ற புத்திமதிகளை அலுக்காமல், சலிக்காமல் பாய்ச்சினாள் அகிலா.

வளைந்து கொடுக்க அவள் தயாராகி விட்டாள் என்பது புரிந்ததும் நல்லது, கெட்டதுகளை ஒவ்வொன்றாய் எடுத்துச் சொன்னாள்.

''ஆண்களுக்கு சதா புடவை, நகையைப் பத்திப் பேசினால், கோபம் வரத்தான் செய்யும். அவாளுக்குப் பிடிச்ச பேச்சையும் நாம்ப பேசக் கத்துக்கணும்; அவருடைய கடையைப் பத்தி, விவசாயத்தைப் பத்தி பேச முயற்சி பண்ணு; பேப்பர் படிக்க டிக்கி படிப்பா

வேணும்; அதை படிச்சால் உலகத்தின் நடப்புகளை பற்றி அவரோடு சுவாரஸ்யமாய் பேசலாமே! அவா சொல்றதைப் புரிஞ்சுக்கலாமே! அவர் கோபமாய இருக்கும்போது எதிர்த்துப் பேசினால் கோபம் தூண்டிவிடத் தான் ஆகும். நியாயம் நம்ப பக்கம் இருந்தாலும் அதை சொல்லும் விதத்தில் சொன்னால் தான் பலன் இருக்கும். அதற்காக வேஷம் போடறதும் தப்பு. நிதானமாய் இருக்கணும். புத்தியுடன் பேசணும். நமக்குத்தான் வாய் இருக்குனு வார்த்தைகளை அள்ளிக் கொட்டினால் எப்படி? அப்புறம் அள்ள முடியுமா? எந்த ஒரு விஷயத்தைச் சொல்றதுக்கும், ஒரு காரியத்தைச் செய்யறதுக்கும் காலம், நேரம் இருக்கு. அதைப் புரிஞ்சுக்கணும், காயத்ரி. கணவன் மனைவி நடுவிலே அன்யோன்யம் வளரணும்னால் முதல்ல ஒருத்தரை ஒருத்தர் மதிக்கக் கத்துக்கணும். மரியாதை கொடுக்கப் பழகிக்கணும். தாம்பத்யங்கறது விளையாட்டில்லை; உனக்கு ஒரு பெண் வேறு பிறந்தாச்சு. இனியும் உன் சொந்த விருப்பு வெறுப்புகளையே பாராட்டிண்டு இருந்தால் நடக்குமா? விட்டுக் கொடுக்கத் தெரியணும். செத்துப் போறப்போ எதை தூக்கிண்டு போகப் போறோம்? அவ நல்லவள், இவ குணவதி என்கிற பேரைத்தானே? வாழ்க்கை நிம்மதியா இருக்கணும்னா பணம், சொத்து, அழகு இவைகளை விட குணம் நல்லதா அமையணும். அது இல்லைனாக்கா பாக்கி எத்தனை இருந்தும் நரகம்தான். குணத்தை வளர்த்துக்கறதும், சுட்டுப் பொசுக்கறதும் நம்ப கையிலேதான் இருக்கு. நம்மை திருத்திக்கறதை விட்டுட்டு பிறரை குறை சொல்லறதுலேயே காலத்தைக் கழிக்கறதுனாலே அன்பு, அமைதி, இன்பம் இதுக்கெல்லாம் நிஜ மதிப்பை நாம்ப உணர முடியாம போயிடறது."

"முதலில் பொதுவாகப் பேசி பின்பு நானாக ஆக நீ உன்னை மாற்றிக் கொள்ளணும், தவறு உன்மேல்தான்"



என்று அகிலா தைரியமாய் அடித்துப் பேசியதை ஏற்றுக் கொண்டாள் காயத்ரி.

அத்தை வீட்டில் இருந்த ஒரு மாதத்தின் முடிவில் புது ரத்தம் ஓடுவது போன்ற துடிப்பு எழ, காயத்ரி மாறித் தான் போனாள்.

மறுமாசம் கணவனுடன் மீண்டும் வாழப்போன காயத்ரி தான் இதுநாள் அநுபவிக்காத இனிமையுடன் இருப்பதாக லெட்டர் மூலம் தெரிவித்தபோது சுற்றி இருந்தவர்கள் அத்தனை பேர்களின் மதிப்பிலும் மேலும் உயர்ந்து போனாள் அகிலா.

இதனிடையில் ஸ்ரீதரன் அப்பாவோடு அவ்வப்போது கடைக்கே போய் வியாபாரத்தை கவனித்துக் கொள்ளத் தொடங்கியது அகிலாவுக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்த மற்றொரு சமாசாரம்.

காயத்ரி ஊருக்குப் போய், ஸ்ரீதரன் கடைக்கும் வித்யா காலேஜுக்கும் போய்விட்டால் காரியமே இல்லாமல் ஒழிந்த நேரங்களில் பாட்டை சாதகம் செய்வதில் நிம்மதியாய் பொழுதை கழிக்க முற்பட்டாள் அகிலா.

ஸரளி வரிசை, ஜண்டை வரிசை, அலங்காரம் என்று சம்பிரதாயத்துக்கு முதலில் சொல்லிக் கொடுக்கத் துவங்கிய வாத்தியார் அவளின் ஞானத்தைக் கண்டு கொண்டபின் ''இதெல்லாம் உனக்கு வேண்டாம் அகிலா நேரடியாய் கீர்த்தனங்களையே ஆரம்பித்து விடுவோம்,'' என்று சொல்லி 'ஸ்ரீ மஹா கணபதியை' முதல் பாட்டாக சொல்லிக் கொடுத்து தொடர்ந்து அடுக்கடுக்காய தியாகையர், ஸ்யாமா சாஸ்திரிகள் என்று மும்மூர்த்திகளின் கீர்த்தனங்களையும் சொல்லிக் கொடுத்தார்.

கீர்த்தனங்களோடு, வர்ணங்களும் நிறைய பாடம் ஆனால்தான் ஸ்வர ஞானம் அதிகரிக்கும் என்று அகிலா

20736

நினைத்ததால் அவர் விருப்பப்படி ஒரு கீர்த்தனை ஒரு வர்ணம் என்றும் கற்றுத் தந்தார்.

காலை நேரத்தில் சாதகம் பண்ணுவது தான் சிறப்பு என்று வாத்தியார் சொல்லியிருந்ததால் காலை நாலு மணிக்கு எழுந்து மாடியில் தனிமையில் ஒரு மணி நேரம் அகார சாதகம் செய்தாள் அகிலா.

சின்ன வயசு ஏக்கம் அல்லவா ?

நினைவு தெரிந்த நாளிலிருந்து நெஞ்சுக்குள் கனிந்ததில்லையா ?

இன்று எண்ணெய் விட்டதும் குபீரென்று பற்றிக் கொண்டு காட்டுத் தீயாய் ஜுவாலை விட்டு எரிந்தது.

வெகு சீக்கிரமே அகிலா ஐந்தாறு கட்டையில் மூன்று காலத்தில் அடதாள வர்ணத்தையும், அனுபவித்து கீர்த்தனங்களையும் பாடத் தொடங்கியபோது அவள் பாடுவதைக் கேட்க கிருஷ்ணன், ஸ்ரீதரன், ஏன் சில சமயங்களில் ஜானகி கூட வந்து உட்காருவது வழக்கமானது.

## பத்தொன்பது

“அகிலா ... அகிலா ...”

இரண்டு தடவைகள் அழைத்தும் அவள் வராமல் இருக்கவே, படுக்கை அறையை விட்டு வெளியே வந்த ஸ்ரீதரன் மற்றுமொருமுறை உரக்க அவள் பெயரைச் சொல்லி அழைத்தான்.

அகிலா வரவில்லை.



எங்கே போனாள் ? பெயரை நீட்டி கூப்பிட்டு முடிப்பதற்குள் கண்முன் வந்து நிற்பவள் இன்று எங்கு போனாள் ?

வெளியில் போயிருக்கிறாளா ? இந்தக் காலை வேளையிலா ?

“அகிலா ... அம்மா ... அகிலா ... எங்கே ?”

மகனின் கூப்பாடு கேட்டு சமையல்கட்டிலிருந்து வெளியில் வந்தாள் ஜானகி.

“என்னம்மா, அகிலா எங்கே ? நானும் அரைமணியா கத்தறேன், ஆளைக் காணோமே ?”

“அவ அந்தச் சனியனைப் பார்க்கத்தான் போயிருப்பா ... அதுக்கு பால் போட்டு, சீராட்டி, கொஞ்ச வேண்டாமா ? போயிருப்பா ...”

“தோட்டத்துக்கா ? நாய் கிட்டயா ?” என்ற ஸ்ரீதரன் ஜன்னல் அருகில் சென்று ‘அகிலா’ என்று கத்தினான்.

“அவளுக்கு நீ கூப்பிடறது காதிலே விழாது. தள்ளி இருப்பா .. உனக்கு என்ன வேணும் ? சொல்லேன்.”

“இல்லேம்மா, தீபாவளி சமயம் ... துணி பார்சல்கள் நிறைய வந்து இறங்கி இருக்கு. நான் போய் செக் அப் செய்தப்புறம்தான் உள்ளே அடுக்கணும் ; அதனாலே இப்பவே டிபனை முடிச்சுண்டு கிளம்பணும். ராத்திரியே அவகிட்டே சொல்ல நினைச்சு மறந்துட்டேன். டிபன் ரெடியா ? அகிலாவை எடுத்து வைக்கச் சொல்லேன்.”

“பூ ! இதுக்கு அவ வரணுமா என்ன ? நீ வா ; நான் போடறேன் ; எல்லாம் ரெடியா இருக்கு... அவளுக்கு வரவர பொறுப்பே தெரியறதில்லை ; எந்நேரமும் அந்தச் சனியனைக் கட்டி அழுதால் ஆச்சா ?”

ஜானகி பேசிக் கொண்டிருக்கையிலேயே ஸ்ரீதரன் தன்னை தயார் செய்து கொள்ள தன் அறைக்குள் போய் விட்டான்.

பிள்ளைக்கு டிபனை கொடுத்த பின்பு குளிக்கப் போகலாம் என்ற எண்ணத்தில் ஜானகியும் உள்கட்டை நோக்கிப் போனாள்.

பக்கத்து பால்கனியில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த கிருஷ்ணனின் காதுகளில் இந்தப் பேச்சு வார்த்தைகள் விழுந்து மனசில் லேசான வருத்தத்தை தோற்றுவிக்கவே செய்தது.

என்ன மனுஷி இவள்?

சதா சர்வ காலமும் எப்போது இடம் கிடைக்கும் அந்தப் பெண்ணைப் பற்றி குத்தம் குறை சொல்லலாம் என்று கண்குத்திப் பாம்பாகக் காத்திருக்கிறாளே!

வேறு எதற்காகவும் அகிலாவை ஜானகி கொண்டாடா விட்டாலும் ஸ்ரீதரனை மாற்றியதற்காக மகிழக் கூடாதா? இவள் தம்பி பெண் காயத்ரியை கணவனோடு இன்று அமர்க்களமாய் வாழ வழி பண்ணினாளே அதை நினைத்து சந்தோஷிக்கக் கூடாதா?

நல்ல காரியங்களுக்காக அகிலாவை பாராட்டாமல் இருப்பவள், அதே தினுசில் இவளுக்குப் பிடிக்காத விஷயங்களை அகிலா பண்ணும்போது வாயை மூடிக் கொண்டிருக்கலாம் அல்லவா? அதுதான் இல்லை. குற்றங்கள் பிடிக்காதவை மட்டும் டாண் டாண் என்று நிமிஷத்துக்கு ஒருமுறை வெளிப்படும். கேட்பது யாராக இருந்தாலும், கணவர், பிள்ளை ஏன், அகிலாவாகவே இருந்தாலும் கவலை இல்லை.

அதுவும் இப்போதெல்லாம் ஸ்ரீதரன் அம்மா, அம்மா என்று இன்றுதான் பேசத் தெரிந்த பிள்ளைபோல பழகத்



தொடங்கியதிலிருந்து சமயம் கிடைக்கும் போதெல்லாம் அகிலாவை மட்டம் தட்டிவிட்டு தான் அவளுக்குப் பெத்த மாதிரி நடந்து கொள்ள ஜானகி தவறுவதில்லை.

மனைவியைக் காட்டிலும் தன் செல்வாக்கு பிள்ளையிடம் அதிகமாய் இருக்க வேண்டும் என்று இப்படிப் பேசுகிறாளா? என் பிள்ளை, எனக்குத்தான் அவனிடம் முதலில் பாத்யதை என்று காண்பிக்கும் வெறியா? அப்படி இல்லாமல் வெறும் தெரியாத்தனமா?

அம்மா அம்மா ஜானகியை கண்டிப்பதற்கு கிருஷ்ணனுக்கு விருப்பம் இல்லை. நாட்டுப் பெண்கள் வந்தாயிற்று! வயசு ஆகிவிட்டது; இனியும் 'ஜானகி ஒரு குழந்தைபோல நடந்து கொள்ளாதே' என்று எப்படிக் கண்டிப்பது? புத்தி சொன்னால் ஏற்றுக் கொள்ளும் வயசா இது? ஏதோ ஒரு தடவை சொல்லலாம், இரண்டு முறைகள் சொல்லலாம்; தொடர்ந்து கண்டிப்பது எப்படி சாத்தியம்?

நல்ல காலமாய் ஸ்ரீதரன் ஜானகி இப்படி அப்படி முணுமுணுப்பதை, புகார் சொல்வதை காதில் போட்டுக் கொள்வதில்லை. பாவம் அம்மா, ஸ்வாதீனமாய் பேசுகிறாள் என்று விடுகிறானோ, இல்லை தெரியாத்தனம் என்று ஒதுக்குகிறானோ தெரியாது. விஷயம் என்றுமே பெரிசாவதில்லை. ஆனால் இப்படியே என்றைக்கும் இருக்கும் என்பது என்ன நிச்சயம்?

ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் ஜானகி சொல்லுவதை அப்படியே நம்பிக் கொண்டு ஏன் அகிலா இந்த மாதிரி நடந்துக்கறே— அம்மா வருத்தப்படும்படி? என்று அந்தப் பெண்ணிடம் கேட்டு விட்டால் அவள் மனசு ஒடிந்து போக மாட்டாளோ?

சரி, அதுவே வேண்டாம்; பொறுக்க முடியாமல் ஒரு நாள் 'என்னம்மா எப்பபாரு ஏதாவது புகார்?

கொஞ்சம் வாயை மூடிக் கொண்டு இரேன் என்று ஜானகியிடம் சுள் என்று விழுந்தால்?

ஏன் நடக்காது?

நிச்சயம் இரண்டில் ஒன்று நடக்கத்தான் போகிறது; யாரோ ஒருத்தர் மனசு புண்பட்டுத்தான் போகப் போகிறார்கள். இதெல்லாம் இந்த ஜானகிக்கு ஏன் புரிய மாட்டேன் என்கிறது? தனக்காகவும் தெரியாது; சொன்னாலும் கேட்க மாட்டாள்.

ஈஸ்வரா!

கிருஷ்ணனால் தொடர்ந்து ஹிந்துவை கவனத்துடன் படிக்க இயலவில்லை.

பேப்பரை மடித்து முக்காலிமேல் வைத்து மணியைப் பார்த்தார். ஆறே முக்கால்.

வழக்கமாய் ஸ்ரீதரன் இந்த சமயத்திற்குத்தான் எழுந்திருப்பான்.

எழுக்கு முன் அவன் காபி சாப்பிட்டு இவர் பார்த்ததில்லை.

அகிலா காலை ஐந்தே முக்கால் போல எழுந்து, முகம் அலம்பி ஸ்வாமியை நமஸ்கரித்து, காபி சாப்பிட்டு சமையலிலோ வீட்டைத்தட்டி சுத்தம் செய்வதிலோ, பூ கட்டுவதிலோ ஒத்தாசை செய்து விட்டு ஏழு மணிக்குள் காபியுடன் கணவனின் அறைக்குள் நுழைவாள். அதற்குள் ஸ்ரீதரன் எழுந்து பல் தேய்த்து விட்டு தயாராய் இருப்பான். காபி ஆனதும் யோகாசனமும் மற்றும் சில உடற்பயிற்சிகளும் அவன் செய்ய இவள் உதவி விட்டு குளிக்கப் போவாள். அடுத்து பூஜைக்கு மாமியாருக்குத் தேவையானவைகளை எடுத்துக் கொடுத்தால் ஸ்ரீதரன் குளித்து, காலை சிற்றுண்டிக்கு வர சரியாய் இருக்கும். கணவனுக்கு வேண்டிய உபசரணைகளை முடித்து அவன்



ஒன்பதேகால் ஒன்பதரைக்கு கடைக்கு கிளம்பினதும் இவள் உள்ளே வந்து டிபன் சாப்பிடுவாள். தொடர்ந்து தோட்டத்தில், அல்லது வேறு ஏதாவது வேலை காத்திருக்கும்.

அகிலா இந்த வீட்டுக்கு வந்த நாளாய் நடக்கும் மேற்சொன்ன காரியங்களின் வரிசைக் கிரமம், கொஞ்ச நாட்களாய், நாலு, ஐந்து மாசங்களாய் இருக்குமா? இருக்கும், இருக்கும், மாறித்தான் இருக்கிறது.

ஹரி எப்போது இங்கிலாந்துக்குப் போனான்? ஆறு மாசமா? இப்போது அக்டோபர் ஆக, ஐந்து மாசங்கள் தான்.

மன்னியின் மனசுக்குள் எப்படித்தான் ஹரி நுழைந்து பார்த்தானோ. ஒரு நாள் சென்னைக்குப் போய் வந்தவன், சொல்லாமல் கொள்ளாமல் உசந்த அல்சேஷன் நாய்க்குட்டியுடன் வந்து சேர்ந்தான்.

அகிலாவுக்கு நாய்கள் என்றால் பிடிக்கும் என்பது தெரிந்தவனாய் வெளிநாட்டுக்குப் போகும் முன் தன் பரிசாக அவளுக்கு அதை அளித்ததும் அல்லாமல் கிட்டத்தில் ஒரு மாசம் போல இருந்து அதனை வளர்க்கும் விதத்தையும் அகிலாவுக்கு விபரமாய் சொல்லிக் கொடுத்தான்.

ஆசார அனுஷ்டானங்கள் நிறைந்த வீட்டில் நாயை செல்லப் பிராணியாக வளர்ப்பதில் ஜானகிக்கு துளியும் விருப்பம் இல்லை.

தடுத்துப் பார்த்தாள், வேண்டாம் என்று கத்திப் பார்த்தாள். இந்தாத்தில் என்னை யார் மதிக்கிறார் என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு பார்த்தாள். ம்ஹூம் ஒன்றுக்கும் பலன் இல்லை.

"அம்மா ஃபஸ் பண்ணாதே. உன்னை அது என்ன பண்றது? மன்னியோட தனிமையைப் போக்க இ

ஹெல்ப் பண்ணும்" என்று ஹரியும், "இருக்கட்டும்மா... எனக்கும் ஆசையா இருக்கு" என்று வித்யாவும், "அகிலாவுக்குன்னு ஹரி ப்ரியமாய் வாங்கி தந்திருக்கான். விட்டுடும்மா" என்று ஸ்ரீதரனும், "அவனுக்கு கல்யாணமாகி அஞ்சு வருஷம் ஆயாச்சு... குழந்தை குட்டிமேல ஆசையாயிருக்கும். இந்த நாய்க்குட்டியை வளர்க்கறதாலே அகிலாவுக்கு சந்தோஷம் கிடைக்கும்னா... நாம ஏன் குறுக்க நிற்கணும்? அது பாட்டுக்கு ஒரு பக்கமா இருக்கட்டும்; நீ அது கிட்டேயே போகாதே" என்று கிருஷ்ணனும் சொன்ன பிறகு ஜானகியால் என்ன சொல்ல இயலும்?

இத்தனைக்கும் அகிலா மட்டும் அவன் கட்டி "அம்மாவுக்கு இஷ்டம் இல்லைனா வேண்டாம் ஹரி... ப்ளீஸ்..." என்று மன்றாடவே செய்தாள்.

ஆனால் ஜானகி அகிலா சொல்வதை நம்ப தயாராயில்லை. 'பிள்ளையைக் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்ட வேண்டாம்; எனக்கு இந்தப் பசப்புதனம் எல்லாம் பிடிக்காது' என்று கோபமாய் பேசியவள் மேற்கொண்டு அன்று முழுவதும் அகிலாவிடம் எதும் பேசவில்லை.

'அம்மா குணம் தெரிஞ்சதுதானே; விடுங்கோ மன்னி. தானே சரியாயிடுவா' என்று ஹரிதான் சமாதானப்படுத்தின பிறகு மாடிக்கு நாய்க்குட்டியை எடுத்துப் போய் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டு அதற்கு பெயரைச் சூட்டினார்கள்.

"ப்ருடஸ், டாரஸ்?"

"எதுக்கு இங்கிலீஷ் பேர்? நல்லதாய் 'அர்ஜுன்'னு கூப்பிடலாம்" இது வித்யா.

"ராணா? விக்ரம்?"



[illegible] ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை.

"என்ன மன்னி, நீங்க சும்மா இருக்கேள்? உங்களுக்குப் பிடிச்ச பேரைச் சொல்லுங்களேன்!"

வெட்கத்துடன் 'ஜிம்மி' என்றாள் அகிலா.

"ஐயயே... நன்றாகவே இல்லை மன்னி— ஜிம்மி, டாமி... என்ன சாதாரண பேர் இது!" வித்யா முகம் சுளித்தாள்.

ஹரி பதில் பேசாமல் அகிலாவைப் பார்த்தான்.

அகிலா ஏன் ஜிம்மி என்கிறாள் என்பது அவனுக்கா புரியாது?

சென்னையில், இவள் வாத்தியார் பெண்ணாக வாழ்ந்த காலத்தில் எச்சில் சாதத்துக்கு ஆசைப்பட்டு இவளோடு பழகி, பின்னர் இவளைத் தன்பால் கவர்ந்து, இவள் நெஞ்சில் ஜாதி நாய் ஒன்றை என்றைக்காவது, தன் சக்தி இடம் கொடுக்குமானால் சிறப்பாக வளர்க்க வேண்டும் என்ற ஆசையை உண்டாக்கியதே அந்த ஜிம்மி நாய் தானே?

மாம்பலம் வீட்டுக்குப் போயிருந்த சமயங்களில் ஹரி ஜிம்மியையும், அகிலா அதனிடம் காட்டும் பரிவையும் பார்த்து "உங்களுக்கு நாய் பிடிக்குமா, மன்னி?" என்று கேட்டிருக்கிறான்.

அப்போதுதான் அகிலா இவனிடம் சொன்னாள், "பாத்திரத்தை அலம்பிவிடற ஜலத்தோட, ஒரு பிடி போடறேன். அதற்காக இது தினம் ராத்திரி எங்காத்து வாசலிலே படுத்துண்டு இந்த வீட்டைக் காவல் காக்கறது; இதோட நன்றி உணர்வும், விவரிக்க முடியாத அன்பும் மனசை என்னவோ செய்யறது. சாதாரண நாட்டு நாயே இத்தனை விஸ்வாசத்தோட இருக்கே, ஒரு நல்ல ஜாதி நாய் இன்னும் எத்தனை உயர்வா இருக்கு

வளர்த்த எஜமானனுக்காக உயிரை விடுமாமே! அல்சேஷன் என்ற ஜாதியை போலீஸிலேயும், அதுவும் மத்தபடி குருடர்களுக்கு வழிகாட்டியாயும், துணையாவும் இருக்க பழக்கறாளாமே! அப்படியா?"

கண்கள் விரிய நெஞ்சின் ஆசை முகத்தில் கூத்தாட அகிலா அன்று பேசினது ஹரிக்கு ஆச்சரியமாக இருந்தது. பிறருக்காகவே வாழும் இந்த மன்னி மனசில் கூட இன்னதாய் ஒரு விருப்பம் இருக்கிறதா என வியந்தான்.

அதன் விளைவாக வெளிநாட்டுக்குப் போகுமுன் சென்னைக்குப் போயிருந்த சமயத்தில் மனசில் அகிலாவின் ஆசை நெருட உயர் ஜாதி நாய்களை வளர்த்து விற்பனை செய்யும் நபரைத் தேடிப் போய் பத்து தலைமுறை சுத்தமான அல்சேஷன் ஆண் குட்டி ஒன்றை ஐநூற்றி அம்பது கொடுத்து அகிலாவுக்காக வாங்கி வந்தான்.

ஜிம்மி அகிலாவை வந்து அடையும்போது நாற்பது நாள் குட்டி. அதற்கு எழுபது நாள் முடிந்த அன்று தான் ஹரி இங்கிலாந்துக்குப் புறப்பட்டான்.

சென்னையில் பி. எல். படித்து விட்டு அங்கேயே ஒரு பிரபல வக்கீலிடம் ஜூனியராய் இருந்தவனுக்கு, காரணம் இல்லாமல் வேலையில் சலிப்பு ஏற்பட்டு மேற்கொண்டு படித்தால் என்ன என்ற எண்ணம் பிறந்தது. ஆக்ஸ்போர்ட் கலாசாலைக்கு அப்ளிகேஷன் அனுப்பி இருக்கிறான்; அவன் அதிருஷ்டம் இடம் கிடைத்து விட்டது.

கிருஷ்ணனிடம் நீளமாய் பேசி அவரைச் சம்மதிக்க வைத்தான் ஹரி. "செலவெல்லாம் முதல்லே நம்முடையது தான் அப்பா; ஆனாலும் அங்கேபோய் மூணு மாசம் படிப்பதற்குள் ஸ்காலர்ஷிப் வாங்கிக்கலாம்னு எனக்கு நம்பிக்கை இருக்கு. ஐ ஹாவ் காட் ஃபுல்



கான்ஃபிடன்ஸ்... இந்த படிப்பு எனக்கு மனசுக்கு ரொம்ப திருப்தியைத் தரும்னுதான் நினைக்கிறேன்."

இங்கே இல்லாத படிப்பா? வேலையா? வருமானமா? கிருஷ்ணன், ஜானகிக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் பிள்ளை போக விரும்பப்படும்போது தடுக்க விருப்பமில்லை. என்ன இரண்டு வருஷப் படிப்பு; போயிட்டு வரட்டுமே. குழந்தைகளின் ஆசைகளுக்கு இல்லாத மனமா? இந்தக் காலத்தில் எல்லார் வீட்டுப் பிள்ளைகளும், ஏன் பெண்கள் கூடத் தான் எங்கெல்லாமோ போய்ப் படிக்கிறார்கள்.

ஆக, ஹரி கிளம்புவது தீர்மானமாகி விட்டது.

ஹரி இங்கிலாந்துக்குப் படிக்கப் போவதில் நிஜமாக வருத்தப் பட்டது அகிலாதான். மாமனாருக்கு அடுத்தபடி அவள் மனம் விட்டுப் பேசுவது; அவளை அவளாகவே புரிந்து கொண்டு இதமாய் நடத்துவது எல்லாம் ஹரிதானே; மாமனாரிடம் இல்லாத ஸ்வாதீனம் ஹரியிடம் உண்டு; அவன் இல்லாவிட்டால் ஒரு பெரும் சூன்யம் உண்டாகும் என்பது அகிலாவை பொறுத்தவரை நிஜம்தானே?

ஹரி புறப்படுவதற்கு ஒரு வாரம் முன்பு தோட்டத்தில் ஜிம்மியோடு இருந்த நாழிகையில் அகிலா தன் கவலையை மெதுவாய் சொல்லி விட்டாள்.

"என்னத்துக்காக அங்கே போகணும் ஹரி? நீங்க இங்கே இருக்கிறது என் மனசுக்கு பலமா இருந்தது. அந்தப் பலம் போயிடுத்துன்னா நான் ரொம்ப கஷ்டப் படுவேன்னு நினைக்கிறேன்."

சில நிமிஷங்கள் ஹரி பதில் சொல்லவில்லை. பின்பு "அப்பா இருக்கிறப்போ நீங்க எதுக்கும் கவலைப் படவேண்டாம் மன்னி... சின்ன குழந்தை மாதிரி ஏன்

மனசை அலட்டிக்கறே? தவிர நானும் எங்கே போயிடப் போறேன்? அடிக்கடி எனக்கு லெட்டர் போடுங்கோ. எந்த விஷயத்தையும் நீங்க என்கிட்டே தைரியமாகச் சொல்லலாம்...இனி எதுக்காக நீங்க பயப்படணும்? அன்னை-ஜிம்னு ஆயிட்டான் டோண்ட் வொர்ரி மம்மி...எவ்ரிதிங் வில் பி ஆல் ரைட்..."

ஹரி ஊருக்குப் போன பிறகு, நாளுக்கு நாள் கடை வேலைகளில் ஒருவித வெறியுடன் ஸ்ரீதரன் ஈடுபடத் தொடங்கிய பிறகு, ஜிம்மியுடன் பெரும் பொழுதைக் கழிப்பதிலேயே சொல்லத் தெரியாத சுகம் அகிலாவுக்கு இருக்கத்தான் செய்தது.

ஜானகி சொல்லுகிற மாதிரி 'அந்த சனியனை கட்டிண்டு அழத்தானே, அவளுக்கு வேளை போது சரியா இருக்கு' என்பதும் ஒரு விதத்தில் சரிதான்.

நாய் இருக்கப் போவது தீர்மானமானதும் ஜானகி கண்டிப்பாய் சொல்லி விட்டாள்.

"போனாப் போறதுன்னு இதை வளர்க்க நா வாயை மூடிண்டு இருக்கேன். ஆனா ஒண்ணு மட்டும் கேட்டுக்கோங்கோ. இது இந்த வீட்டுக்குள்ளே வந்ததுன்னா நா பொல்லாதவளாயிடுவேன், ஆமாம்."

"என்னம்மா நீ அதுக்காக இந்த உசந்த ஜாதி நாயை தோட்டத்திலேயா வளர்க்கறது?"

"நீங்க தோட்டத்துலேதான் வளர்ப்பேளோ இல்லை தெருவிலேதான் வளர்ப்பேளோ, எனக்குத் தெரியாது. ஆனா இது வீட்டுக்குள் வரக்கூடாது."

"கட்டிப்போட்டு வளர்த்தா இந்த நாய் துஷ்டையாயிடும் அம்மா. அவிழ்த்து விட்டால் குழந்தை மாதிரி இருக்கும்."



"அம்மா, ப்ளீஸ் பூஜை, சமையல் அறைக்குள்ளே எல்லாம உன்னைத் தொடாம பார்த்துக்கறோம்...ப்ளீஸ்."

ஜானகி மசியவில்லை.

அம்மாவின் கண்டிப்பான முடிவைப் புரிந்து கொண்ட ஹரி தோட்டத்தில் ஜிம்மிக்கென ஒரு சின்ன 'கெனல்' கட்டி வைத்தான். தாராளமாய் புழங்கக்கூடிய அந்த நாய்வீடு, வேப்ப மரத்தடியில் இருந்ததால் வெயில் தெரியாமல் குளு குளுவென்று இருந்தது.

இவர்கள் யாராவது கிட்டத்தில் இருந்தால் ஜிம்மி தோட்டத்தில் சுதந்திரமாய் விளையாடும்; மற்றபடி அறைக்குள்தான் இருக்கும்.

"ஆறு மாசம் இப்படியே இருக்கட்டும், அப்புறம் ராத்திரி. ராத்திரி தோட்டத்திலே விட்டுடலாம். வீட்டுக்கும் காவல், அதுக்கும் சுதந்திரம்" ஹரி சொன்னபடியே செய்தாள் அகிலா.

"ஏழு மாசத்தில் திமு திமு என்று கன்று போல வளர்ந்து விட்டது ஜிம்மி. காலையில் அரை லிட்டர் பால், முட்டை, மீன் எண்ணெய், மதியம் கால்படி சாதம், இரவு மீண்டும் பால்.

மாமிசம் போட்டால் இன்னும் நன்றாய் வளருமாம் முட்டைக்கே ஜானகி குதித்த குதி என்ன?

அகிலா கிட்டத்தில் நிற்க தோட்டக்காரன் ஜிம்மிக்கு உணவு வைப்பான்.

அகிலாவைக் கண்டு விட்டால் தேன் குடித்த நரி மாதிரி கூத்தாடும். அவள் கண்களை விட்டு மறைந்து விட்டால் உலகமே அஸ்தமனமாகிவிட்டது போல முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்ளும்.

இப்போதெல்லாம் புத்தகம் படிப்பது, பூ கட்டுவது, தைப்பது போன்ற எந்த ஒரு காரியத்தையும் அகிலா

தோட்டத்தில் தான் செய்கிறான்; ஜிம்மி கூட இருக்கலாம் அல்லவா.

ஹரி சொன்னது மாதிரி கட்டிப் போட்டு வளர்ப்பதாலோ என்னமோ, ஜிம்மி முரடனாக இருப்பதுதான் அகிலாவுக்குக் கவலையைக் கொடுத்தது. சாப்பாடு வைக்கும் தோட்டக்காரனை சாப்பிடும் போது கிட்டத்தில் போய் விட்டால் தூக்கி, பல் தெரிய உறுமும், அவனையாவது தள்ளி விடலாம். அகிலாவுக்கு அடுத்த படியாய் அதைச் சீராட்டும் வித்யா ஒரு நாள் தூங்கும் நேரத்தில் கட்டப்பைத் தட்ட வந்தாள் என்பதற்காக அடி வயிற்றிலிருந்து உறுமிற்று என்றதே! எல்லாரிடமும் இத்தனை பொல்லாத்தனத்தோடு இருப்பது அகிலாவிடம் மட்டும் வாலைச் சுருட்டிக் கொள்ளும். உட்கார என்றால் உட்கார்ந்தது. பந்தை வீசினால் எடுத்து வந்தது. ஷேக் ஹாண்ட்ஸ் என்றால் தாவாறு தாவனாய் வலது காலை நீட்டியது.

ஜிம்மி எத்தனைக் கெத்தனை புத்திசாலியாக இருந்ததோ, அத்தனைக்கத்தனை விஷமக் கொடுக்காகவும் இருந்தது. மறந்து போய் கதவை சரியாக சாற்றாமல் வந்துவிட்டால் முகத்தால் அதை தெம்பி திறந்து வீட்டுக்குள்ளே ஓடிவந்துவிடும்; குஷி பிறந்து விட்டால் செடிகளைப் பிடுங்கி போட்டு துவம்சம் செய்யும். இதுவாவது தேவலை; ஒரு சமயம் வீட்டுக்குள் ஏதோ வேலை செய்ய வந்த கொத்தனாரை துரத்தி, துரத்திப் பயமுறுத்தியது; அப்புறம் மீட்டர் பார்க்க வந்த மின்சார இலாக்கா ஆளை ஓட ஓட விரட்டி, அவன் நிக்கரைப் பிடித்துக் கிழித்து விட்டதே!

மகா பொல்லாததாய் இருந்ததை சமாளிப்பதற்குள் அகிலா பரிதவித்துப் போனாள்.

ஸ்ரீதருக்கு இது எவற்றிலும் அக்கறை இல்லை, கடை, அதை விஸ்தரிப்பது, அதன் நூதன வியாபாரம்



என்று இத்தனை பெருமைகளாய் இல்லாத வேளைகளை அனுபவிக்கும் சுகத்தில் அவன் அமிழ்ந்திருந்தான்.

நல்ல வேளையாக இருந்தால் அகிலா பக்கம், கடிபட்ட, வேட்டி கிழிந்த ஆட்களுக்கு பத்தோ, இருபதோ கொடுத்து வாயை அடைத்து ஜானகி அறியாமல் அனுப்புவது அவர் வேலைதான்.

இப்படி எல்லாவே ஆக்கிரதையாக இருந்தும்கூட ஜானகியிடம் மறைக்க முடியாத இதுவில் அன்று ஜிம்மி ஒரு காரியத்தைச் செய்து விட்டது.

புது பட்டுப்புடவை ஒன்றின் மொட மொடப்பு குறைய அதை வெறும் நீரில் அலசி தோட்டத்துக் கொடியில் நிழலாய் உலர்த்தச் சொல்லி இருந்தாள் ஜானகி.

பால் விட்டு வந்த அகிலா நேரமாகிவிட்ட அவசரத்தில் கேனல் கதவை சரியாக மூடவில்லை போலும்; இரண்டாம் நிமிஷம் தோட்டத்தில் சுதந்திரமாய் நின்ற ஜிம்மியின் கண்களில் காற்றில் ஆடிய சிகப்பு புடவை பட்டிருக்கிறது. கேட்க வேண்டுமா வெறிக்கு? ஒரே பாய்ச்சல்— பதினெட்டு முழ புடவை தூள் தூள்.

பிள்ளைக்கு டிபனை கொடுத்து அவனை அனுப்பி விட்டு உள்ளே ஜானகி திரும்பவும் அம்மணி சேதியைச் சொல்லவும் சரியாக இருந்தது.

அவ்வளவுதான், ஜானகி ருத்ர தாண்டவமே ஆடி விட்டாள்.

முன் அறையில் அகிலா குளித்துக் கொண்டிருந்ததால் விஷயம் முற்றிப்போய் அவள் காதுகளுக்கு எட்டுமுன் மனைவியை அடக்கி விட்டார் கிருஷ்ணன்.

"எதுக்காக இப்படி கோபமாய் கத்தி உடம்பை கெடுத்துக்கறே? ஜானகி இப்படி வா... இந்த பக்கம்... ம... வா..."

அதட்டலாய் கிருஷ்ணன் பேசவும், அவர் வார்த்தைகளை மீற முடியாமல் கோபத்தால் முகம் சிவக்க கணவரைத் தொடர்ந்து தங்கள் அறைக்குள் நுழைந்தாள் ஜானகி.

"புடவை போயிடுத்து, அவ்வளவு தானே. நான் கடைலேந்து வரும்போது உனக்குப் புதுசா நாலு கொண்டு வரேன் போதுமா? இதுக்காக ஆட்கள் நடுவில் கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணலாமா? நாய்க்குட்டிக்கு என்ன தெரியும்? விளையாட்டு புத்தி; ஒரு அதட்டலோடு விடாமல் இது என்ன அசிங்கம்? எனக்குப் பிடிக்கலை, அகிலா குளிச்சுட்டு வந்த பிறகு அவகிட்டே நீ இதுபத்தி பேசினா நான் ரொம்ப வருத்தப்படுவேன். அவளை நான் கண்டிக்கறேன், போதுமா? இதோடு இந்த விஷயத்தை விட்டுடணும், என்ன புரியறதா?"

ஜானகி பதில் பேசவில்லை.

அகிலா குளித்து, பூஜை முடிந்து ஹாலுக்கு வந்த போது சொன்ன வாக்கைத் தான் காப்பாற்ற வேண்டும் என்ற தினுசில் "இங்கே பார் அகிலா, ஜிம்மி அம்மா புடவையை எப்படி கிழிச்சுட்டதுனு. அதை சரியாக கட்டிப் போடலையாம்மா? கொஞ்சம் கவனமா பார்த்துக்கோம்மா," என்று கூறியதோடு இந்த சமாசாரம் முடிந்தது.

ஆனால் ஜானகியின் கோபம் தணிய சில நாட்கள் ஆகத்தான் செய்தன.

ஒருவார காலமாக அகிலா மேல் அவள் ஏற்கனவே கொண்டிருந்த கோபத்தோடு இந்த சம்பவத்தின்



...திரமும் சேர்ந்து கொண்டதால், சகஜ நிலைக்கு வர ...ந்த நாட்களை ஆயின

...சத்தியான வரன் ஒன்று வித்யாவுக்கு வந்ததை ...அடியாக முடித்துவிட வேண்டும் என்பது அவன் ...ண்ணம் கணவனிடம் பேசினாள். அவருக்கு அரை ...ய மனசு இருந்த போதிலும் வித்யாவுக்குத்தான் ...க்கூட இஷ்டம் இல்லை.

"இது பைனல் இயர் மன்னி, முடிச்சப்புறம் வரன் ...ர்க்கக்கூடாதா? நான் என்ன கல்யாணமே வேண்டாங் ...றேனா? ப்ளீஸ் மன்னி, அப்பாகிட்டே சொல் ...ங்கோ"

அவளின் வாதத்தில் நியாயம் இருந்ததால் ...மனாரிடம் வித்யாவின் பேச்சை அப்படியே சொல்லி ...ம் சொல்றது சரினு தான் எனக்கும் தோணறது' ...ன்றும் சொல்ல, கிருஷ்ணனும் அதை ஏற்றுக ...கொண்டார்.

"எங்க பெண்ணுக்கு இன்னும் ஓரிரண்டு வருஷங்கள் ...ராகலாம்னு நினைக்கிறோம். உங்களுக்கு அவசரம்னா ...று இடத்திலே பாருங்கோ. எனக்கு ஆட்சேபணை ...ல்லை"

கோயம்புத்தூர் கோடீஸ்வரர் வீட்டு சம்பந்தம் ...விட்டுப் போனதில் ஜானகிக்கு ஏக வருத்தம்.

வித்யாவுக்காக மாமனாரிடம் அகிலா சிபாரிசு ...ய்திருப்பது ஜானகிக்கு தெரியாவிட்டாலும் அவளும் ...தில் உடந்தை என்பதை ஊகிக்கவே முடிந்தது.

நாய்க்குட்டி கொடுத்த ஹரியிடம் எரிச்சல் வராமல் ...அகிலா மேல் பொங்கினதுபோல, கல்யாணம் வேண்டாம் ...என்று முரண்டு பண்ணின வித்யாவிடம் கோபம் எழாமல் ...எல்லாம் இவள் வேலையாகத்தான் இருக்கும் என்று ...அகிலா மேல் திசை மாறி ஆத்திரம் எழுந்ததற்கு ...ஜானகியின் குணம் காரணம் இல்லாமல் வேறு என்ன?

# இருபது

ஊதக் காற்று உடம்பில் சிலுசிலுப்பை ஏற்படுத்தியதால் புடவைத் தலைப்பை இழுத்து போர்த்திக் கொண்டாள் அகிலா. மணி பகல் பன்னிரண்டு என்று சொன்னால் நம்புவதற்கு இயலாதபடி ஒரு இருட்டு, நல்ல மழை.

சமையல்கட்டில் வேலை முடிந்து விட்டது. இனி பன்னிரண்டரைக்கு மாமனாரும், கணவரும் கடையிலிருந்து சாப்பிட வரும்போதுதான் அவளுக்கு வேலை.

பண்ணையிலிருந்து வந்திருந்த ஆளுடன் ஜானகி பின்கட்டில் பேசிக் கொண்டிருந்ததால், அந்த வார பத்திரிகை ஒன்றை எடுத்து வந்து, ஹால் சோபாவில் உட்கார்ந்தாள் அகிலா.

அரைமணிப்போது இருக்கிறதே. அதற்குள் இரண்டு தொடர் கதைகளையும் முடித்து விடலாமே?

திறந்திருந்த வாசற்கதவு வழியாக வீசிய காற்று அவள் கால்களில் குளிரை உண்டாக்க, இரண்டு கால்களையும் மடித்து சோபாமேல் சப்பணமிட்டுக் கொண்டாள்.

தோட்டத்தில் இருக்கும் ஜிம்மியை ஒரு நிமிஷம் நினைத்தாள் அவள்.

அவனுக்கு குளிருமோ? அதெப்படி? அதான் தடியாய் கம்பளி போர்வை போர்த்தின மாதிரி அவன் உடம்பில் புஸு புஸுவென்று மயிர் இருக்கிறதே!

தன் அருமை நாய்க்கு இந்த ஊதக் காற்றால் துன்பம் உண்டாகுமோ என சிறிது கவலை கொண்டு உடன்



ாதானம் அடைந்தவளுக்குத் திடீரென்று அன்று காலையில் கண்ட காட்சி ஒன்று மனதில் நெருடியது.

ஜானகிக்கு காய்கறி மார்க்கெட்டுக்குப் போக டியாததால், அகிலா போய் வாங்கி வந்தாள்.

கார் தெருவில் போக முடியாதபடி ஜனங்கள்! பாதி ர்வாணமாய், முழு அம்மணமாய் எத்தனை குழந் தைகள்!

மழையிலும், காற்றிலும் அல்லல்பட்டு, இருக்கப் பாதுகாப்பான இடம் இல்லாமல், கடை வாசல்களிலும், சிமெண்ட் குழாய்கள் உள்ளும், மரத்தடிகளிலும் ஒண்டிக் கொண்டிருந்தனர், பல ஏழைகள்.

காய்கறி மார்க்கெட் வாசலில் வண்டி நின்ற ஜத்தில் அருகில், கடை ஒன்றின் வாசலில் முடங்கிக் கொண்டிருந்த சில குழந்தைகள் மேல் சேற்று ஜலத்தை ரி இறைத்தது.

அழுக்கு நீர் சட்டை இல்லாத உடம்பில் தெறித்ததை ட லட்சியம் பண்ணாமல் காரிலிருந்து இறங்கிய அகிலா டம் ஓடிவந்து "அம்மம்மா... தர்மம் பண்ணுங் ம்மா... பசிக்குதும்மா" என்று கோரஸ் பாடிய அந்தக் ழந்தைகளை ஏறிட்டுப் பார்த்தாள் அகிலா.

குளிரில் உடம்பு விறைத்துப் போய், மேல் உதடும், ழ் உதடும் படபடவென்று நடுங்கினது மனசை ன்னவோ செய்ய, ஐந்து ரூபாய் தாள் ஒன்றை எடுத்துக் கொடுத்து 'போய் சூடா ஏதாவது வாங்கிச் சாப்பிடுங்க' ன்றதும் அதுகள் முகத்தில்தான் எத்தனை வியப்பு, ந்தோஷம்; அப்புறம் வீட்டுக்குத் திரும்பும் வழியில் ண்ணீரில் கார் போக நேரிட்ட போதெல்லாம் ரைவர் மெள்ளப் போ, யார் மேலாவது மழைத் ண்ணி அடிக்கப் போறது' என்று எச்சரித்துக் கொண்டே வந்தாள்.

நான் கொடுத்த பணத்தை அந்தக் குழந்தைகள் என்ன பண்ணி இருப்பா? காபி குடிச்சு வைத்துக்கும் ஏதாவது வாங்கி சாப்பிட்டிருப்பானோ; அந்தப் பணம் அவா அத்தனை பேருக்கும் போதுமா?

பத்திரிகையைப் பிரித்தாள் அகிலா.

காட்பரீஸ் சாக்லெட் விளம்பரத்தைப் பார்த்ததும் ராமுவின் ஞாபகம் வந்தது.

அக்கா, அக்கா என்று புடவைத் தலைப்பைத் தடுங்கின சின்னப் பையன் இப்போது பி.காம் படிக்கிறான் என்றால் ஆச்சரியமாக இருந்தது.

அவனவன் பி. காம். பாடம் கிடைக்கத் தலைகீழாய் நிற்பது அகிலாவுக்குத் தெரிந்த விஷயம்தான்.

பி.யூ.சியில் முதல் வகுப்பில் தேறினால் என்ன, ஸி.ஏ படித்து பெரிய ஆடிட்டராக வரவேண்டும் என்று ஆசை ராமுவுக்கு இருந்தால்தான் என்ன, அதெல்லாம் நமக்குச் சரிபடாது; விரலுக்குத் தக்க வீக்கமாய் நம் ஸ்திதிக்கு ஏற்ப ஆசைகள் இருக்க வேண்டும் என்று நினைத்ததால், மகாதேவன் ராமுவின் ஆர்வத்தை வளர்க்கவே இல்லை. 'ஐயாயிரம், பத்தாயிரத்தை வை- ஒரு பி. காம் ஸீட் வேண்டுமானால்' என்று கேட்கப்படுவது அரசல் புரசலாய் அவன் காதில் விழுந்ததுதானே!

அதெல்லாம் நமக்குக் கட்டுப்படியாகாது; நீ சின்ன பையன்; இன்னும் வருஷம் போனால் தானே புரிஞ்சுப்பே. உன் உழைப்புக்கும், தகுதிக்கும் பி.காம் கிடைச்சால் எனக்கு சந்தோஷம் தான்; ஆனால் அதுக்காகப் பணத்தை கொட்டிக் கொடுன்னால், நான் எங்கேப்பா போவேன்? பி.ஏ, எக்கனாமிக்ஸ்லே ஸீட் கிடைச்சிருக்கு; பி.ஏ., முடிச்சிட்டு மேலே எம்.ஏ. வேணும்னாலும் படியேன்; நான் தடுக்கலை. என் சக்திக்கு முடிஞ்சது அவ்வளவு தான்."



எம்.ஏ., படிச்சுவிட்டு என்ன பண்ணுவது? அப்பா மாதிரி டீச்சராய் வேணுமானால் போகலாம்; அப்பா ஸ்கூல் டீச்சர்; நான் காலேஜ் டீச்சர். அதான் வித்தியாசம். ராமுவுக்கு ஏக வருத்தம்.

அப்பாவின் பேச்சில் நியாயத்தைக் கண்ட அகிலாவும் தம்பிக்காக அதிகமாய் வாதாடவில்லை.

"பி.காம். படிக்காவிட்டால் என்ன ராமு! பி.ஏ. படித்து மேலே ஐ. ஏ. எஸ். படிக்கிற வழியைப் பாரேன். அதுவும் ஒரு சிறப்புதானே?" என்று தம்பிக்குக் கடிதம் எழுதிச் சமாதானம் செய்தாள். அதோடு அகிலாகூட ராமுவின் விவகாரத்தை மறந்து விட்டாள்; ஆனால் இந்த கிருஷ்ணன் விடவில்லையே!

சென்ற ஜூன் மாசம் ஹரி இங்கிலாந்துக்கு புறப்பட்ட போது அவனை வழி அனுப்பச் சென்னைக்குச் சென்றவர் யாரைப் பார்த்தாரோ, யாரிடம் சொன்னாரோ, என்ன கொடுத்தாரோ, எவ்வளவு அளித்தாரோ ஒன்றும் தெரியாது, ஸீட் ஒன்றுக்கு இரண்டாம் பேர் அறியாமல் ஏற்பாடு பண்ணி விட்டு திருச்சிக்கு சாது மாதிரி வந்து விட்டார்.

ராமுவுக்கு மனம்போல மாங்கல்யம்.

அப்ளிகேஷன் போட்டுவிட்டு பி.காமாவது கிடைப்பதாவது என்று ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தவன் அந்தக் கல்லூரியிலிருந்து இண்டர்வியூவிற்கு கார்டு வந்து பிற்பாடு இடம் கிடைத்தபோது வானத்தில் தான் இருந்தான்.

தம்பியின் தகுதிக்காக பி.காம் கிடைத்திருக்கிறது என்று நம்பிக் கொண்டிருந்த அகிலா அப்பாவின் கடிதம்

மூலம் இதற்கெல்லாம் காரணகர்த்தா தன் மாமனார் தான் என்று அறிந்து அயர்ந்து போனாள்.

''வாயால் ஒன்றுமே பேசாமல் செய்கையால் தன் நல்ல மனசை உன் மாமனார் நிரூபிக்கும் ஒவ்வொரு சமயமும் நான் மெய்சிலிர்த்துப் போகிறேன்; ஃபீஸ் கட்டப் போன ராமுவிடம் காலேஜ் பிரின்ஸிபால் 'மிஸ்டர் கிருஷ்ணன் சௌக்கியமா? அவருக்கு இப்போது சந்தோஷம்தானே?' என்று கேட்டுவிட்டு இவன் விழிப்பதைப் பார்த்து பூரா விவரமும் சொல்லி இருக்கிறார். உன் மாமனாருக்கு நம் குடும்பம் முழுவதும் ரொம்பக் கடமைப் பட்டிருக்கிறது அகிலா'' என்று அப்பா எழுதியிருந்த கடிதத்துடன் மாமனாரின் முன்சென்று நின்றாள் அகிலா.

''என்னம்மா?''

கடிதத்தை அவரிடம் நீட்டினாள்.

''என் கிட்டே நீங்க ஒண்ணுமே சொல்லலியேப்பா?''

கிருஷ்ணன் சிரித்தார். ''சின்ன விஷயம், இதைப் போய் பெரிசாய் டமாரம் அடிக்கணுமாம்மா?''

சின்ன விஷயமா? இதுவா? அகிலாவின் கண்கள் கலங்கிப் போவதைக் கண்டு கிருஷ்ணனே பேசினார். ''அசடு, இதுக்கெல்லாம் உணர்ச்சி வசப்படுவாளா? ராமு யாரு? இல்லை மகாதேவன் யாரு? உன் தம்பிக்குச் செய்ய எனக்குப் பாத்யதை இல்லையா? சரி இந்த விஷயம் நமக்குள்ளேயே இருக்கட்டும், இரண்டாம் பேர்க்குத் தெரிய வேண்டாம்; கண்ணைத் துடைச்சிக்கோ அகிலா.''

ராமு முதல் வகுப்பில் பாஸ் பண்ணியிருப்பதால் அவன் திறமைக்காக மட்டுமே பி.காம். கிடைத்திருப்பதாக மற்றவர்கள், முக்கியமாய் ஜானகி நினைத்திருப்



பதை மாற்ற வேண்டாம் என்று கிருஷ்ணன் சொல்வது அகிலாவுக்கா புரியாது?

விஷயம் வெளியானால், எவ்வளவு கொடுத்தார் என்று பேச்சு எழும்; அப்புறம் அம்மாடி! இவ்வளவா! என்று அங்கலாய்ப்பு எழும்; அப்புறம் அதையே சமயம் கிடைத்தபோது சொல்லிக் காட்டலாம். எதற்கு வீணாய் வம்பை விலை கொடுத்து வாங்க வேண்டும் என்று சாமர்த்தியமாய் செயல்படும் மாமனாரின் குணம் அகிலாவுக்குப் புதுசா என்ன?

தன் குடும்பத்து அங்கத்தினர் ஒவ்வொருவரையும் நல்ல ஸ்திதிக்கு கொண்டு வர அவர் கங்கணம் கட்டிக் கொண்டு உழைப்பதை உணர்கையில் 'கடவுளே, இப்படி ஒருவருக்கு மாட்டுப் பெண்ணாக வர நான் எத்தனை புண்ணியம் பண்ணி இருக்கிறேன்' என்று மனம் நெகிழ்ந்தாள் அகிலா.

அந்த வருஷம் பவானி பி.எஸ்ஸி. முடித்து விட்டாள். அவளுக்கு நல்ல இடத்தில் மாப்பிள்ளை அமைய அப்பாவை விட கடந்த நாலு மாசத்தில் மாமனார் எத்தனை முனைந்திருக்கிறார் என்பது அகிலாவுக்கு நன்றாகத் தெரியும்.

ஒவ்வொரு முறையும் சென்னைக்குப் போக நேரிடும் போதெல்லாம் தன் சொந்த வேலைகளோடு, பவானியின் வரன் விஷயமாயும் அவர் அலைவது அவளுக்குப் புரிந்தது தான்.

ஏன்? ஒரு சமயம் தஞ்சாவூர் பையனின் ஜாதகம் பொருந்தி இருப்பதாகத் தகவல் கிடைத்ததும் தானே நேரில் சென்று அவன் பெற்றோரைப் பார்த்துப் பேசின பின் நாகப்பட்டினத்தில் வேலையாயிருந்த பையனையும் சந்தித்து விட்டு ''அப்பா, அம்மா, குடும்பம் எல்லாம் தேவலை. ஆனா பிள்ளை குணம் விசாரிச்ச வரைக்கும்

அவ்வளவு நன்னா இல்லைம்மா. இந்தப் பையனை வேண்டாம். பவானிக்கு என்ன அப்படி வயசாயிடுத்து நிதானமாய் பார்த்தால் போச்சு" என்று அவர் கூறியதை கேட்டு விட்டு அவர் அந்தப் பக்கம் போனதும் "சொந்த பெண்ணுக்குக் கூட இப்படி அலைவாரோ மாட்டாரோ? அவளுக்கு விழுந்து விழுந்து அலையறதைப் பாரேன். அந்தப் பெண்ணுக்குக் கொடுத்து வைச்சிருக்கு" என்று சற்றே எரிச்சலும், ஆத்தாமையும் கலந்த குரலில் அம்மணியிடம் ஜானகி பேசியதை அகிலா கேட்டாள்.

வாஸ்தவம் தானே! பவானிக்காக இப்படி அலைய வேண்டும் என்று கிருஷ்ணனுக்குத் தலை எழுத்தா, என்ன?

கையில் புஸ்தகம் விரிந்து கிடக்க தன் பாட்டுக்கு யோசனையில் ஆழ்ந்திருந்த அகிலா கார் ஹாரன் கேட்டு எழுந்து கொண்டாள்.

வாசல் போர்டிகோவில் கார் நின்றது. கிருஷ்ணனும், ஸ்ரீதரனும் ஜோடியாய் இறங்கி உள்ளே வந்தார்கள்.

கை அலம்பிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தவர்களுக்கு அகிலா பரிமாறத் தொடங்கினாள். பின்கட்டிலிருந்து ஜானகியும் இவர்களோடு வந்து அமர்ந்து கொண்டாள்.

"சம்பந்தி லெட்டர் போட்டிருக்கார் ஜானகி, உஷாவுக்கு ஆறாம் மாசம் முடியப் போறதில்லையா? வளைகாப்பை தனியாய் பண்ணலாமா, இல்லை எட்டாம் மாசம் சீமந்தத்தோடு சேர்த்து செய்யலாமா? ராஜாவுக்கு லீவு கிடைக்கற விபரம் எப்படினு எழுதி கேட்டிருந்தார் நீ என்ன சொல்றே?"

"அதெப்படி சேர்த்து பண்ண முடியும்? ஏழாம் மாசம் அவா வளைகாப்பு பண்ணட்டும். அப்புறம் எட்டாம் மாசம் நாம்ப தனியா, சீமந்தம் பண்ணிடலாம்.



நம்மாத்துல நடக்கப் போற முதல் சீமந்தம். இதை நம்ப ஊரில் சொந்த ஆத்துலே ஜாம ஜாமுனு நம்ப சக்திக்கேற்ப பண்ணினாத்தானே நமக்கும் பெருமை?"

பரிமாறிக் கொண்டிருந்த அகிலாவை ஓரக் கண்ணால் பார்த்தார் கிருஷ்ணன். அவள் முகத்தில் எவ்வித சலனமும் இல்லை.

தான் இப்படி எல்லார் முன்னிலையிலும் இந்தப் பேச்சை எடுத்தது தவறோ? தனியாய் ஜானகியிடம் பேசியிருக்கலாமோ! அகிலா மனசு புண்படுமோ?

கிருஷ்ணன் ஸ்ரீதரனைப் பார்த்தார். அவன் இந்தப் பேச்சைக் கவனித்ததாகவே தெரியவில்லை. ஆடிட்டர் கொடுத்திருந்த ஸ்டேட்மெண்டை ஒரு பக்கமாய் படித்த வண்ணம் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"சம்பந்திகளும் சாதாரணமானவாளா என்ன? ஒரே பெண். தடபுடலாய் வளைகாப்பு பண்ண ஆசை இருக்காதா? இரண்டாம் மாசமே உஷா எழுதியிருந்தாளே, புது மோஸ்தர்லே வைரமும், பச்சையும் வைச்ச ப்ரேஸ்லெட் அம்மா பண்ணி கொடுத்திருக்காளு! உஷா கிட்டே வைரம், கெம்பு, நீலம், பச்சை, முத்து எல்லாம் இருக்கறதாலே வளைகாப்புக்காக வைர ப்ரேஸ்லெட் பண்ண ஆசைப்படறா. நானும் சரினு எழுதிட்டேன்; ராஜாவுக்கு லீவு இரண்டு தடவை கிடைக்காதுன்னா வளைகாப்புக்கு அவன் வரவேண்டாமே! சீமந்தத்துக்கு இங்கே வந்தால் போதும்! ஊரைக் கூட்டி அழைக்கணுங்கறது என் விருப்பம். இருந்திருந்து முதல் சீமந்தம் நம்மாத்துலே நடக்கப் போறது... அதனாலே..."

ராமாயணமாய் ஜானகி பேசியதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கிற மாதிரி போன் அழைத்தது. அகிலா அதை எடுக்கப் போனாள்.

உஷா உண்டாகி இருப்பதில் கிருஷ்ணனுக்கு ரொம்ப சந்தோஷம்தான். என்றாலும் அதை ஸ்ரீதரன், அகிலாவிற்கு முன்னால் காட்டிக் கொள்ள அவர் மனது இடங் கொடுக்கவில்லை.

கல்யாணமாகி ஐந்தரை வருஷங்கள் ஆகிவிட்டன. அகிலாவிற்குப்பின் திருமணமான உஷா உண்டாகி இருப்பதை நாம் தடபுடல் செய்தால் அந்தப் பெண்ணை குத்திக் காட்டுகிற மாதிரி இருக்கும்மா என்று சற்றே விசனப்பட்டார்.

ஸ்ரீதரன் முன்போல் சக்கர நாற்காலி ஆள் இல்லை தான்; வெளியில் வாசலில், போய் வந்து கொண்டு, கடை வேலைகளையும் நிறம்பட நடத்துகிறான் தான். ஆனாலும் இதையெல்லாம் பார்த்து ஒரு மனைவியிடம் புருஷத்தனம் கொண்ட கணவனாக நடந்து கொள்கிறான் என்று தீர்மானிக்க முடியாதே! அப்படி ஏதாவது அந்யோன்யம் இருந்திருந்தால் அகிலா தாய்மை அடைந்திருக்கலாமே!

இரண்டு வருஷங்களாய் ஸ்ரீதரன் நடமாடத் தொடங்கின நாட்களாய், கிருஷ்ணன் மனதை அரிக்கும் சந்தேகத்தைத் தாங்க மாட்டாமல், ஒரு சமயம் சென்னை டாக்டரைச் சந்தித்துக் கேட்டு விட்டார்.

தொய்ந்து கிடந்த இடுப்பு சதைகள் வலுப்பெற்று வருவதால் இனி முயன்றால் ஸ்ரீதரனால் ஒரு ஆணாக இருக்க முடியும்! என்று டாக்டர்கள் அடித்துச் சொல்லியும் கூட கிருஷ்ணனின் சந்தேகம் முழுமையாய் தீரவில்லை.

சம்பந்தப்பட்ட அகிலாவிடமோ, ஸ்ரீதரனிடமோ எப்படி இதைக் கேட்பது?

என்னவென்று கேட்பது?

சீ. அசிங்கம்.



ஒரு தகப்பனார் பிள்ளையிடம் எப்படி இந்த விஷயத்தில் பேச முடியும்?

அண்ணன் தம்பிகளிடையே சுதந்திரமான பழக்கம் அதிகம் இருந்தால் கேட்கச் சொல்லலாம். ஸ்ரீதரன் நடுவில் நெருக்கம் கிடையாது; ஆனால் ராஜூம் கல்யாணமாகாத பிள்ளையை விட்டு எப்படி இந்தப் பேச்செல்லாம் பேசச் சொல்வது என்று தயங்கிக் கொண்டே இருந்ததால், அவனும் இங்கிலாந்துக்குப் போய் விட்டான்.

ஸ்ரீதரன், அகிலாவிடம் வெளிப்படையாக ஏதேனும் மாறுதல்கள் தெரிகின்றனவா என்று நன்றி நன்றிப் பார்த்தவருக்கு அகிலாவிடம் ஏதும் தெரியவில்லை.

ஆனால் ஸ்ரீதரனிடம் இருப்பதாக மனசுக்குப் பட்டது.

முன்பெல்லாம் கடையில் பெண்கள் வேலை பார்க்கும் பகுதிகளுக்குப் போக மாட்டான்; இப்போதெல்லாம் போவது மட்டுமின்றி, அவர்களோடு சிரித்துப் பேசுவதையும் அவர் பார்க்கிறார்.

அகிலா இல்லாமல் எங்கும் போகாதவன் சில மாசங்களாய் ரோட்டரி கிளப், மேஸன் லாட்ஜ் மெம்பராக சேர்ந்து இருக்கிறான். தனியாய் போய் வருகிறான்.

இதெல்லாம் கூட பெரிய சமாசாரங்கள் இல்லை. பதினைந்து நாட்களுக்கு முன்னால் ஸ்ரீதரனின் மேஜை டிராயரில் பார்த்த சமாசாரம் தான் அவன் ரொம்ப மாறி இருக்கிறான் என்பதைக் கிருஷ்ணனுக்கு உணர்த்தியது.

கடையில் இவர்கள் இருவருக்கும் தனித்தனி ஏ.ஸி அறை உண்டு. வழக்கமாய் எதொன்றுக்கும் இவர் அறைக்கு ஸ்ரீதரன் வந்து விடுவானாதலால், கிருஷ்ணன் அவன் அறைக்குள் நுழைந்து எதையும் தூண்டி துருவ

ஆவசியம் ஏற்பட்டதில்லை. அன்றைக்கு ஸ்ரீதரன் ஆடிட்டர் ஆபீஸுக்குப் போயிருந்தான். அகௌண்டண்ட் வந்து பண இருப்பு பற்றி சில கேள்விகள் கேட்கவே காஷ் புக்கை ஸ்ரீதரனின் அறையிலிருந்து எடுக்கப் போனார். மேஜை மேல் காஷ் புக் இல்லை. டிராயரை இழுத்துப் பார்த்தார். திறந்தது. உள்ளே என்னென்னவோ ஃபைல்கள். அடியில், அது என்ன? பிளேபாய் என்று கொட்டை எழுத்தில் இருந்த புஸ்தகத்தின் அட்டையில் பெரிய மார்பகங்களை காட்டிக் கொண்டு ஒரு வெள்ளைக்காரி படுத்திருந்தாள். புரட்டினால் உள்ளே இன்னும் சில நிர்வாணப் படங்கள் இருந்த படியே அவைகளை வைத்து விட்டு தன் அறைக்கு வந்த கிருஷ்ணனுக்குப் படபடப்பாக இருந்தது. இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? ஸ்ரீதரன் புது உணர்வுகளைப் பெற்று வருகிறான் என்று தானே?

இந்தப் புஸ்தகங்களை யார் அவனுக்குக் கொடுத்தார்கள்? கிளப் நண்பர்களா? அப்படியானால் அகிலாவிடம் இவன் ஆணாக நடந்து கொள்ள முயற்சிக்கிறானா?

பார்த்தவரைக்கும் அகிலாவிடம் புதுசாய் மலர்ச்சி ஒன்றும் இல்லையே!

சொல்லப் போனால் முன்பு மாதிரி ஸ்ரீதரன் அகிலா அகிலா என்று சுற்றி வருவது கூட குறைந்து விட்டது போல் அல்லவா இருக்கிறது!

தாம்பத்தியம் புதுக்கோணத்தில் துவங்கி விட்டது என்றால் இன்னும் பேச்சும் சிரிப்பும், வெட்கமும் அதிகரிக்க வேண்டாமோ? புரியவில்லையே!

கிருஷ்ணன் தினம் தினம் மண்டையை உடைத்துக் கொள்வதுதான் மிச்சம்.

ஸ்ரீதரன், அகிலா நடுவில் உணர்ச்சிகள் எந்த அளவுக்கு ஆழமாகியிருக்கின்றன என்று புரியாததால்,



...கா கருவுற்றிருப்பதையும், வளைகாப்பு, சீமந்த வைபவங்களை அகிலா முன் ...பரமாக பேசுவதிருக் ...கிருஷ்ணனுக்குக் கஷ்டமாகவே இருந்தது.

"மெட்ராஸ்லேந்து ட்ராங்க்கால்."

பாதி சாப்பாட்டில் கையை அலம்பிக் கொண்டு கிருஷ்ணன் ரிஸீவரை வாங்கிப் பேசினார் "ஹலோ... ...எஸ், ஸ்பீக்கிங்"

ஆபீஸ் விஷயமாக இருக்கும் என்று அகிலா உள்ளே போய் விட்டாள்.

"என்னது?...என்ன? அடாடா...எப்போ?...ம்...ம்..." அப்பாவின் குரல் கலவரம் கலந்து ஒலிக்கவே ஸ்ரீதரன் ...கை அலம்பி விட்டு அவரிடம் வந்து நின்றான்.

"எந்த ஆஸ்பத்திரி?... சரி... நாங்க உடனே வறோம் ...கவலைப்படாதீங்கோ, ஒண்ணும் இருக்காது..."

யாருக்கு என்ன உடம்பு? ஜானகியும், அகிலாவும் ...ஹாலில் வந்து நின்று கொண்டார்கள்.

ரிஸீவரை வைத்து விட்டு திரும்பின கிருஷ்ணனின் முகம் வியர்த்திருந்தது.

"என்னப்பா? வாட் இஸ் ராங்?"

"மகாதேவனுக்கு லேசாய் உடம்பு சரியில்லையாம்; ...ராமுதான் பேசினான். ஆஸ்பத்திரிக்கு அழைச்சுண்டு போயிருக்காளாம், நாங்க உடனே கிளம்பி வறோம்னு சொன்னேன்."

அப்பாவுக்கா, உடம்பு சரியில்லையா? நினைவு தெரிந்த நாளாய் அம்மாவையே நோயாளியாய் படுத்து பார்த்திருந்த அகிலாவுக்கு அப்பாவுக்கு வியாதி என்றால் ...ம்ப முடியவில்லை.

"அப்பாவுக்கா, அம்மாவுக்கா?"

''உங்கப்பாவுக்குதான் அகிலா கவலைப்படாதே. சின்னப் பையன் பயந்துண்டு போன் பண்ணி இருக்கான். ஒண்ணும் இருக்காது.''

ஒன்றும் இல்லை என்றால் ராமு ஏன் போன் பண்ணணும்? ஆத்தில் போன் கிடையாது. கடைக்கோ வேறு எங்கோ போயாவது போன் செய்ய வேண்டுமென்றால் உடம்புக்கு ரொம்ப முடியலை என்றுதானே அர்த்தம்? அகிலாவுக்குத் திடீரென்று பயமாக இருந்தது.

"வேற என்னப்பா சொன்னான்? ஒண்ணும் இல்லைனா ஏன் போன் பண்ணணும்? எனக்குப் பயமா இருக்குப்பா" அவள் கண்கள் கலங்கி கன்னத்தில் நீர் வழிந்தது.

மகாதேவனுக்கு ஹார்ட் அட்டாக் என்று இவளிடம் சொன்னால் தாங்க மாட்டாள் என்று புரிந்த கிருஷ்ணன் "பேசிண்டு நிக்கறதுலே என்ன பிரயோஜனம்? கிளம்புற வழியைப் பாருங்கோ. ஆகட்டும்...போ அகிலா, துணிமணி எடுத்து வை, ஜானகி சீக்கிரம் கிளம்பு" என்றார்.

அகிலா தன் அறைக்குப் போனாள். அவள் தலை மறைந்ததும் "கூட்டமா இப்போ எல்லோரும் போகணுமா என்ன? நான் எதுக்கு?" என்ற ஜானகியிடம் ''சம்பந்திக்கு ஹார்ட் அட்டாக் ஜானகி. நிலைமை கவலைக்கிடமாய் இருக்காம்; அகிலா எதிரில் சொல்ல நான் விரும்பலை" என்றார் கிருஷ்ணன் தணிந்த குரலில்.

ஒரு நிமிஷ மௌனத்துக்குப் பிறகு ஸ்ரீதரன் சொன்னான். "இருக்கட்டுமே, அதுக்காக அம்மா சொல்லற மாதிரி கூட்டமா போய் என்ன பிரயோஜனம்? நீங்களும் அகிலாவும் முதல்லே போய் கண்டிஷன் எப்படி இருக்குனு சொல்லுங்கோ. அப்புறமா நாங்க



வர்றோம். பொங்கலுக்கு இன்னும் இருபது நாள் கூட இல்லை. சரக்கு ஏகமாய் வந்து இறங்கி இருக்கு. அப்படியே போட்டுட்டு எப்படி எல்லோரும் கிளம்ப முடியும்? தவிர எனக்கு நாளைக்கு ரோட்டரி மீட்டிங் இருக்கு. கவர்னர் வரார் திடீர்னு என்னாலே புறப்பட முடியாது. சாதாரண ஹார்ட் அட்டாக்காகவும் இருக்கலாம் இல்லையா? நீங்க போய் பார்த்துப் போன் பண்ணுங்களேன்.''

அரைமணிக்குள் கிருஷ்ணனும், அகிலாவும் கிளம்பினார்கள். ஸ்ரீதரன் உடன் வந்திருந்தால் அகிலா சந்தோஷப்படுவாள் என்பது கிருஷ்ணன் அறிந்தது தான் என்றாலும், சின்ன வயசிலிருந்தே யாரிடமும் அதிகமாய் ஒட்டாமல் தனித்து வளர்ந்து விட்ட பிள்ளையை அதற்குமேல் வற்புறுத்த அவருக்கு இயலவில்லை.

மாம்பலத்தில் இருந்த ஒரு கிளினிக்கில் மகாதேவனைச் சேர்த்திருந்தார்கள். இரவு ஒன்பது மணி சுமாருக்கு இவர்கள் போய்ச் சேரும்போது அவர் நிலைமை இவ்வளவு மோசமாக இருக்கும் என்று கிருஷ்ணனே நினைக்கவில்லை.

இரண்டு மாசங்களுக்கு முன் பேரன்களுடன் டெல்லிக்குப் போய் விட்ட வேதாமாமி அந்த ஞாயிறு ஹிந்துவில் வீட்டை வாடகைக்கு விட விளம்பரம் கொடுத்திருக்கிறார். சனிக்கிழமை அன்று பள்ளிக்கு லீவு போட்டு விட்டு பெரிய வீட்டை ஒண்டியாக ஒட்டடை அடித்து, சாமான்களை நகர்த்தி, வேலைக்காரி சுத்தம் பண்ண கூடமாட உதவி பண்ணிய மகாதேவனுக்கு இரவு தூங்க முடியாமல் மார்பில் லேசாய் வலியாம். பின் ஞாயிறு காலை எழுந்து வலியைப் பொருட்படுத்தாமல் வீட்டின்

முன் முளைத்திருந்த புல், பூண்டு, புதர்களை யாராவது பார்க்க வந்தால் அசிங்கமாக இருக்குமே என்று மூன்று மணி நேரங்கள் போல கொத்தி செதுக்கி இருக்கிறார். இடது கையை தூக்கமுடியாதபடி வலிதோன்றி வேர்த்துக் கொட்டி, மூச்சு அடைத்த பிறகே மகனைக் கூப்பிட்டுச் சொல்லி இருக்கிறார். திங்கள் காலை நர்ஸிங் ஹோமில் அட்மிட் செய்திருக்கிறார்கள். நிலைமை மோசமாக இருக்கிறது என்று டாக்டர் சொன்ன உடனே ராமு திருச்சிக்கு ட்ரங்கால் போட்டிருக்கிறான்.

கிருஷ்ணன், சென்னையின் பிரபல ஹார்ட் ஸ்பெஷலிஸ்டை வரவழைத்தார். கூட இன்னும் யார் யாரோ டாக்டர்கள் இரவு முழுவதும் சிவராத்திரியாக கழிந்தது. என்ன பாடுபட்டு என்ன? காலை பத்தரை மணி இருக்கும். முக்கி முனகிக் கொண்டு மகாதேவன் பேசினார் இந்தப்பக்கம் சாரதா, அகிலா; அந்தப்பக்கம் கிருஷ்ணன். தாலி கட்டின பெண்டாட்டியிடம் ஒரு வார்த்தை பேசவில்லை கிருஷ்ணனின் கையை எடுத்து தன் மார்பில் வைத்துக் கொண்டார்.

"நீங்க இருக்கிறவரைக்கும் என குடும்பத்துக்கு என்ன குறை?" என்றார். பின் இன்னும் மங்கிய குரலில் "ஸ்வாமி எனக்கு கொள்ளி போட வேண்டாம்" என்றார்.

அவ்வளவுதான். ஆவி பிரிந்து விட்டது. இப்படி ஒரு சாவா? என்ன ஏது என்று நிதானிக்க முடியாதபடி மனசில் உள்ளதை நிம்மதியாய் பேசித் தீர்க்க முடியாதபடி, ஒரு சாவா?

பத்து நாட்கள் படுக்கையில் கிடந்து, ஒருத்தரும் விரல் அசைத்து துன்பம் அடையாதபடி ஒரு சாவா?

ஸ்வாமிக்கும், லலிதாவுக்கும் தந்தி அடித்தார் கிருஷ்ணன். சேதி போய்ச் சேர்ந்தும் மூத்த பிள்ளை



எட்டிக்கூட பார்க்கவில்லை. மறுநாள் லலிதா கணவன், குழந்தைகளுடன் வந்து சேர்ந்தாள்.

மூத்த சகோதரராய் ஸ்தானத்தில் இருந்து கிருஷ்ணனே பத்து நாள் காரியங்களை நடத்தினாலும் முதல் நாள் வந்து உடனே திரும்பி விட்டார்கள் ஸ்ரீதரனும், ஜானகியும்.

வீட்டு மாப்பிள்ளை என்ற கடமைக்காக பத்துக்கு திரும்ப வந்தான் ஸ்ரீதரன். "எனக்கு கிறுகிறுப்பாய் இருக்கு, வித்யாவை தனியாய் விட்டுட்டு வரமுடியலை" என்று ஏதேதோ நொண்டிச் சாக்குகளை அவனிடம் சொல்லிவிட்டு ஜானகி திருச்சியிலேயே தங்கி விட்டாள்.

## இருபத்தி ஒன்று

அகிலாவுக்குத் தூக்கம் வரவில்லை. எத்தனை நேரம்தான் புரண்டு புரண்டு படுப்பது? அப்பா இறந்து போன இந்த நாலு மாசங்களில் தன் மனசை விவேகத்தோடு தேற்றிக் கொண்டு, சகஜமாய் வீட்டில் வளைய வந்த அகிலாவுக்கு ஏனோ அன்று மட்டும் தூக்கம் வர மண்டி பண்ணியது. கண்களை மூடிக் கொண்டால அப்பா நர்ஸிங் ஹோமில் படுத்திருந்ததும், 'ஸ்வாமி எனக்கு கொள்ளி போட வேண்டாம்' என்றதும், கண்கள் செருகிக் கொண்டதும், நாக்கு இழுத்துக் கொண்டதும், கொரட் கொரட் என்று ஸ்வாஸம் மாறிப் போனதும் நினைவில் கூத்தாடி தூக்கத்தை விரட்டியடித்து விட்டது.

அப்பா பாடு தேவலை. நிமிஷமாய்ப் போய்விட்டார். பாவம் அம்மா. பூவோடும், பொட்டோடும் சுமங்கலி கோலத்தோடு தான் போய்விடுவோம் என்ற நம்பிக்கை

யில் மண் விழுந்து விட்டதால் அழக்கூடத் தெரியாதபடி பிரமை பிடித்துப் போனாள்.

ஸ்வாமியை நினைக்கும்போது இத்தனை வருஷங்களாகத் தோன்றாத கசப்பு இப்போது அகிலாவினுள் தலைகாட்டியது உண்மைதான். முன்பெல்லாம் எழும் பரிதாபம் இப்போது இல்லை. பெற்ற தாயின் தாலி துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளத் தெரியாத பிள்ளை இருந்தென்ன, போயென்ன! தான் ஆடாவிட்டாலும் சதை ஆடும் என்பார்களே, எல்லாம் பொய்யா? வெறும் வசனம்தானா? ஸ்வாமிக்கு நிச்சயமாய் சமாசாரம் போய் விட்டது. முதலில் தந்தி; அப்புறம் ஆயிரம்தான் மகாதேவனுக்கு கோபம் இருந்தாலும் அதற்காக புத்ரனை ஒதுக்குவது பாவம் என்று நினைத்த கிருஷ்ணன் ஹோட்டலிலிருந்து போன் செய்து பேசினார்.

விஷயம் தெரிந்தவன் குரலில் லவலேசம் வருத்தம் இல்லையாம். 'ஓ! அப்படியா, போயிட்டாரா? சரி; என்னை என்ன பண்ணச் சொல்லறேள்?' என்றானாமே; பிறகு "என்னை பிள்ளை இல்லைனு அவரும், அவரை அப்பா இல்லைனு நானும் ஒதுங்கி விட்டு எத்தனையோ வருஷங்கள் ஆன பின்பு, இனி எதுக்காக இதையெல்லாம் புதுப்பிக்கணும்? அதான் நீங்க, அகிலா எல்லோரும் இருக்கேள். இன்னும் வேறு யார் வேணும்? இத்தனை வருஷங்களாய் நெருங்கி இருந்த நீங்களே காரியங்களையும் கவனிக்கலாமே!" என்று பேசினானாமே.

இந்த விபரமெல்லாம் அகிலாவுக்கு முதலில் ஏதும் தெரியாது! ரொம்ப நாட்களுக்குப் பிறகே தெரியும்.

''ஸ்வாமியோட தொடர்பு கிடைக்கலை?'' என்று சொன்ன கிருஷ்ணன் மறுநாள் லலிதா, அவன் குடும்பத்தோடு வந்த பிறகு ''இனியும் ஸ்வாமிக்காகக் காத்திருக்க முடியாது. அவனுக்குத் தகவல் போய்ச் சேர்ந்ததோ



இல்லையோ?'' என்று சொல்லி காரியங்களை ராமுவை வைத்துக் கொண்டு நடத்தி விட்டார்.

இந்த மட்டுக்கு லலிதா பரவாயில்லை. கிரேக்கியம் வரை தங்கி ஏதோ தன்னாலான உபகாரமாய் அதையாவது செய்து விட்டு வீட்டுக்குப் புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தாள்.

ஆனால் அவனுந்தான் ஆட்டும் "என்னம்மா அப்பா இப்படி அகாலமாய் தவறிட்டார். ஸ்வாமி நம்மளைப் பத்தி வேண்டாம்னு இருக்கான். ராமு படிப்பு முடிய இரண்டு வருஷம் கிடக்கு. அப்புறம் பவானி கல்யாணம்; என்னம்மா நீ பண்ணப் போறே?" என்று ஒரு வார்த்தை? ஒரே ஒரு வார்த்தை? ம்ஹூம் ஒன்றும் இல்லை. அப்பாவை எரித்த மறுநாள் கலாவையும், குழந்தைகளையும் ஊருக்கு அனுப்பினவன் ஏனோ தானோ என்று ஊர் வாய்க்கு பயந்து கொண்டு காரியங்கள் முடியும்வரை இருந்துவிட்டு தானும் புறப்பட்டு விட்டான். என்னால் உனக்கு இனி ஒரு கடுகத்தனை உபத்திரவம் இருக்காது, அதே போல உன்னாலும் எனக்கு வேண்டாம் என்பது போலவா?

போகும் முன் சும்மாவாவது போனானா? அவனாவது தன் பட்டி வாயை வைத்துக் கொண்டு சும்மா இருப்பதாவது! "அப்பா இல்லாட்டா என்னம்மா? அகிலா இருக்கா, கிருஷ்ணன் மாமா இருக்கார். அப்புறம் உனக்கு என்ன குறை?" என்று சொல்லிப் புறப்பட்டானே, அப்போது அவன் குரலில் இருந்தது பொறாமையா? அசட்டு ஆங்காரமா?

செய்தியைக் கேட்டு அதிர்ந்து போனவரில் வேதா மாமியும் ஒருவர். காட்ராக்ட் ஆபரேஷன் ஆகி சில நாட்களே ஆகியிருந்ததால் சென்னைக்கு வந்து சாரதாவுக்கு இதமாக இருக்க மனசு துடித்தாலும் உடம்பின் நிலை இடம் கொடுக்கவில்லை. மாமிக்கு பார்த்திவாய்

பத்து அன்று வெங்கடேஷும், தங்களும் வந்தார்கள். டெல்லி எங்கே, மெட்ராஸ் எங்கே? இங்கே கோவாங் காரும், வீடுமாய் வாழும் சொந்த பிள்ளையே இக்கட்டுக்கு வராதபோது சொந்தம் பந்தம் என்று எதுவும் இல்லாத இவர்கள் வந்தது பெரிசுதானே?

கிரேக்கியம் ஆன கையோடு தங்கப் புறப்பட்டுப் போனாள். வெங்கடேஷ் கூடுதலாய் ஒரு வாரம் தங்கி பெரிய வீட்டில் ஒரு குடித்தனத்தை வகையாய் அமர்த்தி விட்டு "சாரதா மாமியை பார்த்துக் கொள்ளுங்கள்; எங்களுக்கு அம்மா மாதிரி" என்று நூறு கட்டளைகள் சொல்லிச் சென்றான்.

கிருஷ்ணன் மட்டும் கூடவே இருந்து தலை பொறுப்பாய் காரியங்களை கவனிக்கவில்லை என்றால் எல்லாம் நாறிப் போயிருக்கும், அல்லவா?

உடம்பு என்று கேள்விப்பட்டு வந்தவர், ஹோட்டலில் அறை எடுத்துக் கொண்டு தங்கி, பணத்தை கணக்குப் பார்க்காமல் செலவழித்து, ஒரு குந்துமணி வைத்த காரியத்தைக் குறைக்காமல் சிரத்தையாய் முடித்ததை இப்போது நினைத்தாலும் அகிலாவுக்குக் கண்களில் நீர் திரண்டது.

எத்தனை பெரிய மனுஷர்! பணத்தாலும் சௌகர்யத்தாலும் அமர்க்களமாய் வாழ்பவருக்கு இப்படி பதினைந்து நாட்களுக்கு அல்லல்பட வேண்டும் என்று என்ன விதி?

ஹோட்டலில் தங்கினார் என்று பெயர்தான். முழுக்க முழுக்க இங்கு வீட்டிலேயே இருந்தார். காபியோ, சாப்பாடோ அகிலா வற்புறுத்திக் கொடுப்பதை மறுக்க முடியாமல் சாப்பிட்டாரே தவிரவும், தன் நெஞ்சுக்கு மிகவும் ப்ரியமான ஒருவரை இழந்த துக்கத்தில் அவர் தவித்துப் போனாரே; இது என்ன அபூர்வ பந்தம்?



இது மட்டுமா? மகாதேவன் ரிடையர் ஆவதற்கு இரண்டோ மூன்று மாசங்கள் தான் பாக்கி இருந்ததால் அது விஷயமாக சந்தித்துப் பேச வேண்டியதைச் செய்து ப்ராவிடண்ட் தொகை, மற்றும் க்ராஜுவிடி போன்ற பணங்கள் எத்தனை எப்போது வரும் என்று தெரிந்து கொண்டு அவற்றை வாங்கி பாங்கில் போடவேண்டிய திறுசில் போட்டதெல்லாம் அவரன்றி வேறு யார்?

கிரேக்கியம் ஆகி ராமு காலேஜுக்கு போகத் தொடங்கி விட்டான். இவர்களும் மறுநாள் திருச்சிக்குப் புறப்படுகிறார்கள். அகிலாவை அழைத்து "ஆத்துலே மளிகை சாமான்கள், மற்றதெல்லாம் இருக்காது பாரும்மா. எது வேணுமோ அதை வாங்கிடலாம். இப்போ மனசு இருக்கிற நிலையிலே அம்மாவை இதுக்கெல்லாம் எதிர்பார்க்கக் கூடாது" என்றுசொல்லாமல் இரண்டு மாசத்துக்குத் தேவையான சாமான்களை வாங்கி அடுக்கினாரே, இந்த முன் யோசனை யாருக்கு வரும்? பவானியையும், ராமுவையும் தனியாய் கூப்பிட்டு "இனியும் நீங்க குழந்தைகள் இல்லே; பொறுப்புடன் இருக்கணும். எதுவானாலும் எங்களுக்குச் சொல்லத் தயங்க வேண்டாம். சமர்த்தா இருங்கோ" என்று கனிவுடன் புத்தி சொன்னார்.

மறுநாள் ஊருக்குப் புறப்படு முன் சமையல்கட்டில் அகிலாவைக் கட்டிக்கொண்டு பிழிய பிழிய சாரதா அழுதபோது அங்கு வந்து நின்று பேசினார். "எதுக்காக இப்படி கலங்கறேள், மாமி. உத்தமமான புருஷனோட இத்தனை வருஷம் வாழ்ந்ததுக்காக பகவானுக்கு நீங்க நன்றி சொல்லணும். குழந்தைகளுக்கு இனி நீங்கதான் எல்லாம். நீங்களே இப்படி கலங்கினா அவாளுக்கு யார் தைரியம் சொல்லுவா? நாங்க எல்லாம் எதுக்கு இருக்கோம்? மனசைத் தேத்திக்கணும். அகிலா இங்கே இருந்தால் உங்களுக்கு நிம்மதியாய் இருக்கும்னா அவளை விட்டுவிட்டுப் போகட்டுமா? உங்களுக்கு எது

சௌகரியமோ அதுதான் எங்களுக்கு முக்கியம் என்ன புரியுதா."

இதற்கு சாரதா சம்மதிக்காமல் தலையை வேண்டாம் என்று ஆட்டினாள். ஆயிரம் இருந்தாலும் அகிலா அவள் வீடு கணவன் எல்லாவற்றையும் கணக்கில்லாமல் விட்டு விட்டு இங்கு இருப்பது எப்படி சாத்தியம்?

அம்மா மேற்கொண்டு ஏதும் பேசத் தெரியாமல் தவித்ததும், மாமனார் முன் உட்கார மனமில்லாதவனாய் எழுந்து நின்றாலும் ஒரு பக்கமாய் முகத்தை திருப்பி விசும்பினதும் இன்றுதான் நடந்தது போல கண்முன் பட, உறக்கம் வராத அகிலா எழுந்து உட்கார்ந்தாள். முக்காலி மேல் இருந்த ஜக்கிலிருந்த ஜலம் எடுத்துக் குடித்தவள் ஜன்னல் அருகில் சென்று நின்று கொண்டாள். நிலா இல்லாத ஆகாயத்தில் "எங்களை எண்ணேன்" என்று ஆசை காட்டும் நட்சத்திரங்கள் ஏகமாய் பொதிந்திருந்தன.

இரண்டு நிமிஷங்கள் போல நின்றவளின் கவனம் செடிகளை அசைத்துக் கொண்டு ஜிம்மி முனகும் சப்தம் கேட்டு இருட்டைத் துழாவினாள்.

ராத்திரி அவிழ்த்து விட்டதும் இரண்டு தடவைகள் தோட்டத்தைச் சுற்றி விட்டு இதுதான் அகிலாவின் படுக்கை அறை ஜன்னல் என்று புரிந்து இதன் அருகே தினம் படுப்பதற்கு இவளின் வாசனை வர, அருகில் எழுந்து வந்திருக்கிறது.

ஜிம்மி இவள் ஊரில் இல்லாத அந்த பதினைந்து நாட்களில் எல்லாரையும் அம்பலத்தில் நிற்க வைத்து விட்டதாம். ஒழுங்காய் சாப்பிடவே இல்லையாம். வைத்த சாதம் கட்டு கட்டாய் முகர்ந்து பார்க்காமல் கிடந்ததாம். பால் குடிக்க மன்றாட்டமாம். எந்நேரமும் 'ஊவ்' என்று கத்தலாம். அதட்டினால் ஊளையிட்டு அழுது அட்டகாசம் பண்ணியதாம்.



அகிலா ஊரில் இருந்து வந்ததும் வராததுமாய் வித்யா விபரம் சொன்னாள். "அம்மாவுக்கு ஒருநாள் ரொம்ப கோபம் வந்துடுத்து மன்னி. இதுரா இல்லே, பகல் இல்லேனு ஊளை இட்டுண்டே இருந்தது. சமாளிக்றத்துக்குள்ள நான் திண்டாடிப் போயிட்டேன்.''

அகிலாவைக் கண்டதும் ஜிம்மி தலைகால் புரியாமல் குத்தாடியது. 'எங்கேயோ என்னைத் தவிக்க விட்டுட்டுப் போயிட்டாயே! நீ இல்லாமல் நான் ரொம்ப பரிதவிச்சுப் போனேன்,' என்று அது தன்னிடம் சொல்லி அழுவதாக அகிலா புரிந்து கொண்டாள்.

'ஜிம்மி' மெல்லக் கிசுகிசுத்தாள் அகிலா.

''க்கும்...க்கும்...''

க்ரோட்டன்ஸ் செடிகளில் புகுந்து முன்னங்கால்களை ஜன்னல் விளிம்பில் வைத்து முழு நீளத்துக்கு இருந்த திரை சீலைகளுக்குள் நீட்டியது ஜிம்மி.

"படவா எப்படியோ வாசனை பிடிச்சு வந்துட்டியா" முகத்தைத் தடவி, குனிந்து அதன் நெற்றியில் மெல்ல முத்தமிட்டாள் அகிலா.

ஜிம்மிக்கு குஷி பிறந்து விட்டது. ராகத்தோடு "வான்..." என்றது.

"ஸ்...கத்தாதேடா கத்தி தூங்கறவரை எழுப்பிடாதே"

தலையை சற்றே திருப்பி கணவனைப் பார்த்தாள் அகிலா. அவன் நிம்மதியான தூக்கத்தில் இருந்தான்.

இனியும் ஜன்னல் அருகே நின்றால் ஜிம்மி பெரிசாய் கத்தத் தொடங்கும் என்ற எண்ணம் எழ ''போடா, நான் போய்த் தூங்கணும். நீ போ" என்று மெல்லச் சொல்லி அதன் தலையை தட்டி விட்டு, மறுபடி கட்டிலில் ஏறிப் படுத்துக் கொண்டாள் அகிலா.

மணி என்ன? லைட் டேபிளில் இருந்த கடிகாரம் இரண்டு என்றது. பக்கத்தில் தூங்கும் கணவனைப் பார்த்தாள். நீல விடி விளக்கின் ஒளியில் அவன் அழகான முகம் பார்க்கப் பரவசமூட்டுவதாக இருந்தது.

வலது கையை தூக்கி அவன் நெற்றியில் சரிந்திருந்த முடிக் கற்றைகளைப் பின்னுக்குத் தள்ளினாள்.

ஸ்ரீதரனை அவள் அறிந்த இந்த ஐந்தரை வருட காலத்தில் அவனைப் பல கோணங்களிலிருந்து அகிலா பார்த்து விட்டாள்.

முதலில் கொட்டால் சிணுங்கியாய், முன் கோபக்காரனாய், வெளியார் எவரிடமும் பழக விருப்பம் இல்லாதவனாய், அப்புறம் அகிலா மேல் சாய்ந்து கொண்டு அவளையே தன் ஊன்றுகோலாய், வாழ்க்கையில் அர்த்தமாய், பிடிப்பாய் வாழ்ந்த ஸ்ரீதரனாய், பிறகு கால்கள் விளங்கியவனாய், உலகத்தைப் புது உற்சாகத்தோடு பார்ப்பவனாய், தன் மேலேயே நம்பிக்கை வளர்த்துக் கொள்பவனாய்...

இந்தக் காலகட்டத்தில் அதாவது, சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன் கடைப் பொறுப்பை அவன் ஏற்ற பிறகு தன்னிடம் ஊனம் ஏதும் பிறர் காணும்படி இல்லை என்று உணர்ந்த பிறகு, இரவில் அவன் அகிலாவிடம் நடந்து கொள்வதிலும் கொஞ்சம் கொஞ்சமாய் மாற்றங்கள் இருக்கவே செய்தன. இத்தனை வருஷங்களாய் தன்னால் இயலாது என்று ஒதுக்கி விட்டதில் முனையும் ஆர்வம்.

எல்லாவற்றுக்கும் முழு மனசுடன் ஒத்துழைப்புத் தந்தாள் அகிலா. ஆனால் பல சந்தர்ப்பங்கள் முயன்றால் மட்டுமே கணவர் நினைப்பதை கொஞ்சமாவது அவரால் செய்ய முடிகிறது என்பதை உணர்ந்த பிறகு கூடுமான



வரையில் அதன் விளைவாக ஸ்ரீதரன் ஏமாற்றம் அடையாமல் இருப்பதில் அகிலா கவனமாக இருந்தாள்.

ஒரு நாள் மனசின் வேகத்துக்கு, உணர்வுகளின் ஆட்டத்துக்கு உடம்பு ஈடு கொடுக்காததால் சோர்ந்து போன ஸ்ரீதரன் கேட்டான், "என் குறை இன்னும் முழுமையாக சரியாகலையே அகிலா?"

"எனக்கு அப்படித் தோணலியே"

"பின்ன ஏன் என்னாலே சாதாரண ஆண் மாதிரி இருக்க முடியலை?"

"உங்களுக்கு என்ன குறைனு நீங்க இப்படி அலட்டிக்கிறேள்? நான் சந்தோஷமாத்தானே இருக்கேன்?"

"நிஜம்மா?"

"ம்"

அன்று ஸ்ரீதரன் திருப்தி அடைந்து விட்டான். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல கடையிலிருந்து மெல்லிய புடவைகளையும் சின்னப் பெண்கள் அணியக்கூடிய பிரா, பாண்டீஸ் முதலியவைகளை ரகசியமாய் எடுத்து வந்து அவளை இரவில் அணியச் சொன்னதுண்டு.

"கடையிலே அந்த மாடல் பெண் பொம்மைக்கு இந்த அமெரிக்கன் ஜார்ஜெட் புடவை உடுத்தியிருந்தது ரொம்ப அழகா இருந்தது. நீ கட்டிக் காட்டேன்" என்பான்.

"நீ நைட் டிரஸ் போட்டுக்கிறியா, வாங்கிட்டு வாரேன்" என்பான்.

"அந்த லேஸ் பிரா எங்கே? போட்டுக் காண்பி" என்பான்.

அழகில்லாத என்னை சிங்காரிக்க வேண்டும் என்று எண்ணுகிறாரா, இல்லை தன் உணர்ச்சிகளை இன்னும்

செர்மையாய் தாண்டி விட என்னைத் தயார் பண்ண முயலுகிறாரா? அகிலா பல சமயங்கள் எண்ணியதுண்டு.

அவளின் சந்தேகத்தை அதிகப்படுத்துவது போல ஒரு சமயம் ஸ்ரீதரனின் பிரீப்கேஸில் மேல்நாட்டுப் பெண்களின் படங்களை, தாம்பத்திய உறவு பற்றின கலர் படங்களைப் பார்த்தாள்.

உடம்பு பலம் அடைந்து விட்ட காலே, இவர் ஆணுக்குரிய ஆசாபாசங்களோடு இருக்கப் பார்க்கிறார் என்பது புரிந்த அதே சமயத்தில் இந்தப் பெண்களின் அழகோடு, உடல்போடு, நிறத்தோடு என்னை ஒப்பிட்டால் எனக்கு ஒன்றுமே இல்லையே, அது இவர் மனதை உறுத்துமோ என்று முதல் முறையாக அகிலா பயந்ததும் அன்றுதான்

மேற்கொண்டு இது விஷயமாய் அகிலா எதும் யோசனை பண்ணுவதற்குள் மகாதேவன் மாபாரமாய் மண்டையில் கல்லைப் போட்டுவிடவே, அவள் இதையெல்லாம் அறவே மறந்து போனாள். அவள் திருச்சிக்கு வந்த பிறகும் தொடர்ச்சியாய் ஏதேதோ வேலைகள் அவள் கவனத்தை ஈர்த்து விட்டன.

உஷாவின் வளைகாப்பு, மறு மாசம் சீமந்தம் ஞானவியின் விருப்பப்படி அமர்க்களமாய் நடந்தது. 'எங்கப்பா போயிட்டார்; அது அவர் தலைவிதி. அதுக்காக இந்த வீட்டுக்காரர்களும், தங்கள் மனசு சந்தோஷப்பட்டதையெல்லாம் ஒதுக்கி வைக்கிறது எதுக்காக?' என்றும், 'என் மூலமாய் நிறைவேறாத ஆசையை உஷாவைக் கொண்டாவது கடவுள் நிறைவேத்தறாரே' என்றும் நினைத்தால்; ஒரு கணம் கூட அப்பா போய் இரண்டு மாசம் ஆகவில்லை— நான் எப்படி பெரிய கல்யாண வைபவங்களில் பங்கெடுக்கலாம்? என்பது மாதிரியான அசட்டு எண்ணங்கள் அகிலாவினுள் தோன்றவில்லை.



அவள் சுபாவப்படி அவள் இருந்தாள். சொல்லாமல் வேலைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்தாள். பொறுப்பாய் நடந்து கொண்டாள். சிரித்த முகத்தோடு இருந்தாள். அவள் மனசுக்குள் அப்பாவை இழந்த வேதனை மண்டிக் கிடந்தாலும் அதை வெளியில் எடுத்துக் காட்டவில்லை.

நான் வருத்தப்பட்டு முகத்தை 'உம்'னு வைச்சுக்கறதாலே என்ன லாபம்? அப்பா போனவர் போனவர்தான். என் பிறந்தாத்து கவலையெல்லாம் மாமனார் தன் தோளிலே எடுத்துண்டுட்டார். இனி நான் அக்கப்பட்டு இதுலே என்ன ஆகப் போறது? இந்த வீட்டுலே சுபகாரியங்கள் நடக்கறப்போ நான் சந்தோஷமாக இருக்கறதுதான் நியாயம். என் கடமையுங்கூட. திட்டவட்டமாக தனக்குத் தானே தீர்மானித்துக் கொண்ட அகிலா தொடர்ந்து சந்தோஷமாக இருக்கப் பண்ணும்படி இன்னொரு விஷயம் அமைந்தது.

போன வருஷம் வித்யாவின் படிப்பு காரணமாய் வேண்டாம் என்று இவர்கள் தள்ளின கோயமுத்தூர் வரன் வீட்டார் வலிய திரும்ப வந்ததுதான் அது. "எங்க பிள்ளை உங்க பெண்ணைப் பண்ணிக்க ஆசைப்படறான். வெளியே பார்த்த மத்த இடத்துப் பெண்களை இதனாலேயே வேண்டாம்கறான். உங்க பெண்ணுக்குப் படிப்பு அடுத்த மாசம் முடியப் போறது. இப்போ நிச்சயதார்த்தத்தைப் பண்ணிடுவோம்; அவள் பரிட்சை எழுதின பிறகு முகூர்த்தத்தை வைக்கலாம்" என்று கோயமுத்தூரிலிருந்து பிள்ளையைப் பெற்றவர் நேரே வந்து பேசியபோது ஞானவிக்கு வாயெல்லாம் பல். போன வருஷம் தட்டிப் போனது மீண்டும் கூடுவதில் ஏக சந்தோஷம்.

கோடீஸ்வர சம்பந்தி, பிள்ளை எம். பி. ஏ. படித்து விட்டு அப்பாவின் கம்பெனி ஒன்றில் மேனேஜிங்

டைரக்டர்; கண்ணுக்கு நன்றாக இருக்கிறான்; அப்புறம் என்ன? படிப்புக்காகப் போன வருஷம் அடு சுணுக்கின வித்யா இப்போது சரி என்றாள். என்ன ஒரு வாரத்தில் நிச்சயதார்த்தம் கோயமுத்தூரில் நடந்தது.

கோயமுத்தூரிலிருந்து திருச்சிக்கு வந்தால் இங்கே உஷாவுக்கு பிள்ளை பிறந்திருக்கும் சேதி தேனாய் காத்திருந்தது.

"என் பேரன் பிறக்கிறதுக்கு முன்னாலேயே நல்ல காரியத்தை நடத்திட்டுப் பிறந்திருக்கான். அவன் மகா அதிருஷ்டக்காரன்" என்று திருக்காமல் சிலாகித்தாள் ஜானகி. கார் கொள்ளாத சீர் செனத்திகளுடன் எல்லாரும் சென்னைக்குப் புண்ணியாவாசனத்துக்குப் போய் வந்தார்கள்.

கிடைத்த அவகாசத்தில் இரண்டு நிமிஷம் அம்மாவை எட்டிப் பார்த்து வந்தாள் அகிலா. பரவாயில்லை, அம்மா தேறிக்கொண்டு விட்டாள். ராமுவும், பவானியும் சமர்த்தாய் இருக்கிறார்களாம், சந்தோஷம்.

வித்யாவுக்கு நல்ல இடத்தில் சம்பந்தம் குதிர்ந்திருப்பதையும் வீட்டுக்கு பேரன் பிறந்திருப்பதையும் குறித்து தனக்கு உண்டான மகிழ்ச்சியை பலமுறைகள் சாரதா சொன்னாள்.

"உங்க மாமனார் குணத்துக்கு அவருக்கு எல்லாம் அமோகமாய் நடக்கும் அகிலா, நீங்க எல்லோரும் சௌக்கியமாய் இருக்கணும்'' என்ற அம்மாவின் வாழ்த்தைப் பெற்றுக்கொண்டு ஒருநாள் கூட பிறந்த வீட்டில் தங்காமல் அகிலா புக்ககத்து மனிதர்களோடே திருச்சிக்குக் கிளம்பி விட்டாள். ஒன்றா, இரண்டா, எத்தனை வேலைகள் க்யூ வரிசையில் நிற்கின்றன!

வித்யா கல்யாணத்துக்கு எண்ணி இரண்டு மாசங்கள் இருந்தன. வீட்டுக்கு ஒரே பெண்; விதரணையாய் செய்ய



ஆசை. பணம், மனம் எல்லாமே இருக்கும்போது செலவுகளுக்கா பஞ்சம்?

கோயமுத்தூர் கோடீஸ்வரர் மலைக்கிற விதமாய் கல்யாணம் அமைய வேண்டும் என்று ஜானகியின் விருப்பம். ஜமாய் என்று பச்சைக் கொடி காட்டி விட்டார் கிருஷ்ணன்.

வீடும், தோட்டமும் பெரிதாக இருப்பதால் வீட்டைச் சுற்றி மூன்று பக்கமும் கொட்டகை பந்தல் போட்டு அங்கே கல்யாணத்தை நடத்தினால், ஆயிரம் பேர்கள் உட்கார்ந்து சாப்பிடக்கூடிய கொட்டகை, மாடியில் இன்னொரு கொட்டகை போட்டால் சாப்பாட்டுக் கவலை இல்லை.

காஜாமலையில், வேண்டிய நண்பர்கள் தங்கள் பங்களாக்களை மாப்பிள்ளை வீட்டார் இறங்க ஒழித்துக் கொடுக்க முன் வந்தனர்.

மூவாயிரம் பத்திரிகைகளை அச்சடிக்க வேண்டும். விலாசம் எழுத கடையிலிருந்து நாலு ஆட்களை வரச்சொல்லி விடலாம்.

முதல் நாள் ஜானவாசத்துக்குப் பதிலாய் ஹேமமாலினி டான்ஸ், டின்னர், மறுநாள் எம். எஸ். கச்சேரி, நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன் நாதஸ்வரம்.

சென்னையிலிருந்து சமையற்காரர் குழு வர வேண்டும். காஷ்மீர் குங்குமப்பூ, ஆப்பிள், மைசூர் ரொட்டி, பதிர் பேணி, நெல்லூர் ஆவக்காய் இத்யாதி, இத்யாதி, என்று எந்த ஊர் எந்தப் பொருளுக்கு பேர் பெற்றதோ அங்கிருந்து அவைகளை வரவழைக்க கிருஷ்ணன் லிஸ்ட் போட்டார்.

கல்யாணத்துக்கு முழுசாய் இரண்டு மாசங்கள் இருக்கையிலேயே கிருஷ்ணனும், ஜானகியும் விடிய விடியக்

கல்யாண ஏற்பாடுகளைப் பற்றி பேசியதில் அகிலாவும் உற்சாகத்துடன் பங்கெடுத்துக்கொண்டு ராஜா வீட்டுக் கல்யாணம் என்று படித்திருக்கிறோமே அது இப்படித் தான் இருக்குமோ என்று ஆச்சரியப்பட்டாள்.

"இந்தப் பேச்சையெல்லாம் கேட்கிற சாக்கில் படிப்பைக் கோட்டை விட்டுடாதே வித்யா. பரீட்சைக்கு ஒரு மாசம் கூட இல்லை. நீ படிக்காம கற்பனை பண்ணிண்டே இருக்கிறது எனக்குத் தெரியும்" என்று சமயம் கிடைத்த போதெல்லாம் தான் நாத்தனாரைக் கேலி பண்ணுவதும் அவள் 'போங்கோ மன்னி' என்று கழுத்தைக் கட்டிக் கொள்வதும் இப்போது நினைப்பில் விரிய அகிலாவுக்கு உதடுகள் சிரிப்பில் விரிந்தன.

சந்தோஷமான விஷயங்களைப் பற்றியே தொடர்ந்து எண்ணியதில் சலனப்பட்ட மனசுக்கு கொஞ்சம் நிம்மதி கிடைக்கவே, தன்னை மறந்து உறங்கத் தொடங்கினாள் அகிலா. தூங்கி எழுந்து வழக்கம் போல வேலைகளை கவனித்துவிட்டு, ஒன்றாய் காலைச் சிற்றுண்டி அருந்த வந்த மாமனாருக்கும், கணவருக்கும் பரிமாறினாள். பின் தானும் டிபன் அருந்திவிட்டு மாமியார் சொன்ன லிஸ்டுகளை எழுதுவதில் ஈடுபட்டாள்.

மணி பதினொன்று இருக்கும். கடைக்குப் போன கிருஷ்ணன் மட்டும் தனித்து வீடு திரும்பினார்.

"எனக்கு சாப்பாடு தயார் பண்ணும்மா. இன்னும் ஒரு மணி நேரத்தில் நான் மெட்ராஸுக்குக் கிளம்பறேன்" என்றார்.

"இன்னிக்கு என்ன திடீர்ப் பயணம்? பந்தக்கால் முகூர்த்தத்துக்கு நான் குறிச்சுண்டு திருவானைக்கா ஜோஸ்யர் வரேன்னு சொல்லி இருக்கார்; மாப்பிள்ளையோட வைர மோதிரம் டிஸைனை மெழுகுலே பதிச்சக்



கொண்டு காட்டறேன்னு பத்தர் சொல்லியிருக்கார். நீங்க என்ன திடீர்னு கிளம்பறேள்?"

"நீ எல்லா விவரத்தையும் ஜோஸியர் கிட்டே கேட்டு வைச்சிக்கோ; மோதிர டிஸைன் உனக்குப் பிடிச்சதுன்னா எனக்கும் சரிதான். நான் நாளைக்கு திரும்பி வந்துடுவேன், ஜோஸியர் கிட்டே நான் நாளை ஞாயிற்றுக்கிழமை வந்து பார்க்கறதாய் சொல்லு. இல்லை, இங்கே இரண்டு வீட்டுலே இருக்கு திருவானைக்கா."

"அது என்ன அப்படிப்பட்ட அவசர வேலையா? நாளைக்குப் போகக்கூடாதா?"

வழக்கமாய் தன் சென்னை பயணங்களைப் பற்றி ஜானகியிடம் விரிவாக ஏதும் கிருஷ்ணன் கூற மாட்டார். ஆனால் அன்றைக்கு மனசு என்னமோ சந்தோஷமாய் இருந்ததால் பேசினார். "அப்படி அவசரம் இல்லாட்டா நான் போவேனா ஜானகி. வெளிநாட்டுக்கு அனுப்பற நம்ப ஜவுளிகளை கூட்டி கூடுதலாய் அனுப்ப யோசனை இருக்கு. இது விஷயமா டெல்லிக்குப் போய் அதிகாரி ஒருத்தரைப் பார்க்க வேண்டியிருந்தது. தெய்வாதீனமாய் இன்னிக்கு அவரே மெட்ராஸுக்கு வரார். போய்ப் பார்த்து பேசிட்டால், டெல்லி அலைச்சல் மிச்சம். அப்புறம் கார்த்தால வெங்கிட்டுவோட பேசிண்டு இருந்தேன். அவன் பிள்ளைக்கும், பவானிக்கும் ஜாதகங்கள் நன்னா பொருந்தி இருக்காம்; சொல்லி வச்ச மாதிரி நேத்து ஆபீஸ் வேலையாய் தூத்துக்குடிலேந்து என் பிள்ளை மெட்ராஸுக்குப் போயிருக்கான்; இன்னிக்கு வெள்ளிக்கிழமையாய் இருக்கு, பொண்ணும் பிள்ளையும் பார்க்க முடியுமா'னு அவனே என் கிட்டே கேட்டான். இப்போ புறப்பட்டா நாலு மணிக்கு நான் போய் சேர்ந்

துடுவேன். பிள்ளையாண்டானை அழைச்சுண்டு போய் கிட்ட இருந்து பவானியைக் காட்டி 'என்னடா பிடிச்சிருக்கா'னு முகத்துக்கு நேரேயே கேட்டுடுவேன். மனசு பிடிச்சு கல்யாணம் நிச்சயமானால் நம்ப வித்யா கல்யாணத்தோடு சேர்த்தே நடத்திடலாம். பாவம் தகப்பனில்லாத பெண். அவளும் நம்மாத்துக் குழந்தை தானே; ஒரு வழி பண்ணி விட்டால் என் மனசுக்கு நிம்மதியாய் இருக்கும்."

சொன்னபடியே கிருஷ்ணன் கிளம்பி விட்டார். அம்மணியிடமும், ஊரிலிருந்து வந்த கமலி கணேசனிடமும் "ம் இந்த மனுஷர் மாதிரி வேறு யாராவது இருப்பாளா? ஊருக்குச் செல்ல வேண்டியதுதான். அதுக்காக சொந்த பெண் கல்யாண காரியங்களைக் கவனிக்காமல் இப்படியா ஓடுவார்!" என்று அங்கலாய்த்துக் கொள்ள ஜானகி தவறவில்லை.

மாமியார் சொல்வதில் உண்மை இருப்பதாகவே அகிலாவுக்குத் தோன்றியது. இங்கு வித்யா கல்யாணக் காரியங்கள் எவ்வளவு முக்கியம்? அதை விட்டுவிட்டு இப்படி காலில் வெந்நீரைக் கொட்டிக் கொண்டு பறக்கிறாரே என்று வருத்தமாகக் கூட இருந்தது.

திருவானைக்கால் ஜோஸியர் வந்தார். நகை பத்தர் வந்தார். இன்னும் என்னென்னவோ வேலைகள் அன்று முழுவதும் சரியாக இருந்தது. இரவு சாப்பாடு முடிந்து அக்கடா என்று ஹால் சோபாவில் கணவனுடனும், மாமியார், வித்யாவுடன் அகிலா வந்து உட்கார்ந்தபோது டெலிபோன் மணி கிணுகிணுத்தது.

ஸ்ரீதரன் எடுத்து பேசினான். மதுராந்தகத்திலிருந்து ட்ரங்காலாம்.

ஒரு நிமிஷம் பேசுவதற்குள் 'ஐயோ' என்று உரக்க அலறினான்.



அவன் பேச்சிலிருந்து கிருஷ்ணன் போன கார் விபத்துக்குள்ளாகி விட்டதும், செங்கல்பட்டு ஆஸ்பத்திரியில் அவர் அட்மிட் ஆகியிருப்பதும், நிலைமை ரொம்ப கவலைக்கிடமாக இருப்பதும் மற்றவர்களுக்குத் தெளிவானது.

26736
A307082

## இருபத்திரண்டு

கிருஷ்ணனின் ப்ரேதத்துடன் ஸ்ரீதரன் திருச்சிக்கு வந்து சேரும்போது காலை மணி மூன்று. விபத்து பற்றின சேதி கிடைத்த உடனேயே ஸ்ரீதரன் உடம்பும், மனசும் பதற கிளம்பி விட்டான். அந்தப் பதட்டத்திலும் அப்பாவுக்கு உடம்பு அதிகமாய் இருந்து சென்னைக்கு வைத்தியத்துக்காக எடுத்துப் போக வேண்டும் என்றால் செங்கல்பட்டில் அர்த்தராத்திரியில் ஆம்புலன்ஸ் அல்லது வேறு வேன் கிடைப்பது கஷ்டமாக இருக்கலாம் என்ற நினைப்பு தோன்ற அப்பாவை சௌகரியமாய் படுக்க வைத்து சென்னைக்கு எடுத்துப் போக வசதியாய் தங்கள் கடை வேனை கொண்டு வரச் சொல்லி மானேஜருக்கு போன் பண்ணினான். பத்து நிமிஷத்தில் அவர் போட்டது போட்டபடி வந்து சேர்ந்ததும் அம்பாஸிடர் காரில், இன்னும் இரண்டு உதவியாளர்கள் உடன் வர ஸ்ரீதரன் கிளம்பினான்.

அவன் புறப்பட்டு போய் ஒரு மணி நேரத்துக்கெல்லாம் செங்கல்பட்டிலிருந்து செய்தி வந்து விட்டது- பிராணன் போய் கால் மணியாகிறது. பிணத்தை வாங்க யார் வருகிறீர்கள் என்று. விபத்து சேதி கேட்டதுமே நிலை குலைந்து போன ஜானகி பூஜை அறையில் ஸ்வாமி மண்டபத்துக்கு முன் போய் விழுந்து விட்டான்.

போன் சமாசாரத்தை அகிலாதான் முதல்ல அறிந்தாள்.

கடவுளே ; முருகா, முருகா, இப்போ என்ன பண்ணறது ?

ஐயோ இதை அம்மாவிடம் யார் சொல்றது? முருகா, இந்தச் சேதியை கேட்கிற அளவுக்கு நான் அப்படி பாவம் பண்ணிட்டேனா ? மனுஷ தெய்வத்தை, கண்ணால கண்ட நடமாடும் தெய்வத்தை, பறிகொடுத்து நாம விட்டதை நான் எப்படி வெளியில சொல்லுவேன் ; ஐயோ. ஈஸ்வரா... வித்யாவைக் கட்டிக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள் அகிலா.

ஸ்ரீதரன் புறப்படுவதற்கு முன்னால் ஜீயபுரத்துக்கு விஷயத்தைத் தெரிவித்து இருந்ததால் ஜானகிக்குத் தைரியம் சொல்லுவதற்காகவும், மேற்கொண்டு கிருஷ்ணனின் நிலைமை எப்படி இருக்கிறது என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவும், கணேசன் வருவதற்கும், செங்கல்பட்டு போன் வருவதற்கும் சரியாக இருக்கவே, நிலை குலைந்து போன அவர் தலையில் அடித்துக் கொண்டு அக்காவிடம் ஓடினார்.

"மோசம் பண்ணிட்டாரே, ஜானகி, நம்ப தலையிலே பகவான் கல்லை போட்டுட்டாரே ; தசரத சக்ரவர்த்தி மாதிரியான மனுஷனைப் பறி கொடுத்துட்டு நான் இன்னும் உசிரோட இருக்கேனே, ஜானகி நான் பாவி, நான் மகா பாவி."

அவர் கதறலே விஷயத்தை ஜானகிக்குச் சொல்லி விட்டது. "என்னடா சொல்றே கணேசா ?" என்றவள், பூஜை மண்டபத்தைப் பார்த்து "அகிலாண்டேஸ்வரி என்னை மோசம் பண்ணிட்டியா ?" என்று கத்தினாள். அப்புறம் அங்கேயே மயங்கி விழுந்தாள்.



டாக்டர் வரவழைக்கப்பட்டார். பயப்பட ஒன்றுமில்லை. அதிர்ச்சி மயக்கம் என்று சொல்லி ஊசி போட்டும் ஜானகி கண் விழிக்கவில்லை.

இதுவும் ஒரு விதத்தில் நல்லதுக்குத்தான். நினைப்பு வந்து விட்டால், ஜானகி துக்கம் தாளாமல் புலம்புவாள் என்பதை டாக்டர் சொன்ன பிறகு கணேசன் கூடத்துக்கு வந்தார்.

எந்த நிமிஷமும் ஸ்ரீதரன் சடலத்துடன் வந்து விடலாம் என்பதால் கூடத்தில் கிருஷ்ணனை கிடத்த இடம் தயார் பண்ணினார். கூடத்து நாற்காலிகள் அப்புறப்படுத்தப்பட்டு, வடக்கு தெற்காக கட்டில் ஒன்று போடப்பட்டது. ஊரில் தெரிந்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் சேதி சொல்லப்பட்டது.

பேந்தப் பேந்த விழித்துக் கொண்டும், துக்கம் தாங்காமல் அவர்கள் அரற்றிக் கொண்டும் நின்றிருந்த போது சென்னையில் உஷாவின் வீட்டிலிருந்து போன் வந்தது. ஸ்ரீதரன் செங்கல்பட்டிலிருந்தே அவர்களுக்கு போன் செய்து உடனடியாய ராஜாவுக்கும் விஷயத்தைத் தெரிவிக்கச் சொல்லி இருந்தானாம். அவர்கள் பேசி விட்டனராம். முதல் விமானத்தில் அவன் வந்து சேர்ந்ததும் இவர்கள் காரில் பிற்பகலுக்குள் திருச்சி வந்து சேர்ந்து விடுவார்களாம்.

இனி இங்கிலாந்தில் இருக்கும் ஹரிக்குத்தான் தகவல் போக வேண்டும். அவனுக்கும் கணேசன் போன் போட்டு விட்டு காத்திருந்த நாழிகையில் அப்பாவை சௌகரியமாய் படுக்க வைத்து வைத்தியம் பண்ண அழைத்துப் போக தேவைப்படலாம் என எடுத்துப் போன வேனில் அவர் சடலத்தை மகனுடன் கிடத்தி எடுத்துக் கொண்டு ஸ்ரீதரன் வந்து சேர்ந்தான்.

கிருஷ்ணனை வேனிலிருந்து இறக்கி கூடத்தில் கிடத்துவதற்குள் வீடு இரண்டுபட்டு விட்டது. முட்டிக்

கொண்டு கதறிய ஜானகியை மட்டும் நான்கு பேர்கள் பிடித்து சமாதானம் செய்ய வேண்டியிருந்தது. காலை நன்றாக விடியுமுன் அந்த மாளிகை போன்ற வீடும்பெரிய தோட்டமும் ஜனங்களால் நிறைந்து போயின.

யார் யாரோ வந்தனர், நின்றனர், அழுதனர், போய்ச் சேர்ந்தனர். கட்டிலில் சாய்ந்து கொண்டு ஜானகி அமர்ந்திருக்க, அவள் மடியில் தலைவைத்து குப்புற கவிழ்ந்து உட்கார்ந்திருந்தாள் வித்யா. உறவுக் கார பெண்மணிகள் வயிற்றிலும், வாயிலும் அடித்துக் கொண்டும், ஜானகியை தழுவிக் கொண்டும் கதறினர், ஒருத்தரிடமும் ஜானகி ஒரு வார்த்தை பேசவில்லை.

''அம்மா...ஐயோ...அம்மா'' என்று அவ்வப்போது வாய் விட்டு வித்யா அழும்போது மட்டும் ''என் செல்லமே, நம்மை விட்டுட்டுப் போக அவருக்கு மனசு எப்படிம்மா வந்தது?'' என்று அவளையும் சேர்த்து அணைத்துக் கொண்டு அழுதாள். மற்றபடி ''போயிட்டேளா? என்னை விட்டுட்டுப் போயிட்டேளா?'' என்று தனக்குத் தானே முனகி, கண்களால் நீரைக் கொட்டினாள்.

அகிலா? அவன் எங்கே? பிரமை பிடித்த மாதிரி கூடத்தின் ஒரு மூலையில் யாரோ எவரோ மாதிரி அவன் ஒடுங்கிப்போய் அமர்ந்திருந்தான்.

பெத்த தகப்பன் போனபோது தோன்றினதைவிட பலமடங்கு அதிகமான வேதனை தோன்றி அவனை கிழித்தெடுத்ததால் திக்பிரமை பிடித்து மூலையில் ஒண்டிக் கொண்டான்.

இது அக்கிரமம் அல்லவா? ஐந்து மாசத்தில் குடும்பத்தில் இரண்டு சாவுகளா? ஐயோ இந்த இழப்பை இந்தக் குடும்பமும், நானும் எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிறோம்?



ஸ்ரீதரன் மற்றவர்களிடம் பேசுவதிலிருந்து விபத்து பற்றின விவரங்கள் அகிலா காதில் விழுந்தன. மதுராந்தகத்தைத் தாண்டி ஆறாவது மைலில் விபத்து நடந்திருக்கிறது.

கனமான சாமான்களை ஏற்றிக் கொண்டு வேகமாக வந்த லாரியுடன் ஹெட் ஆன் கொலிஷன். இவர்களும் வேகமாகவே வந்ததால் மோதலின் அதிர்ச்சி பலமாக இருந்திருக்கிறது. தவறு லாரிக்காரன் மேல்தான். ஆடு ஒன்று குறுக்கே சடாரென்று பாய்ந்ததைத் தவிர்க்க எதிர் சாரியில் ஒடித்த பரபரப்பில், கட்டுப்பாடு இல்லாத அந்த சில கணங்களில், நேர் மோதல் நடந்து விட்டது. லாரிக்காரன்மேல் தப்பு என்று இருந்த என்ன? அவனும், அவன் லாரியும் கல்லுப்போல இருக்கிறார்கள். கிருஷ்ணனின் அம்பாஸிடர் சப்பட்டையாய்ப் போய், ஸ்டீரிங் வீல் டிரைவரின் மார்பில் அழுந்தி அவன் அந்த இடத்திலேயே அவுட். கிருஷ்ணனுக்கு மண்டையில் அடி. ஸ்தலத்தில் மயங்கினவர் தான், கண் விழிக்காமலேயே போய் விட்டார்.

யாரோ கருணை கொண்ட கார்ச் சொந்தக்காரர் கிருஷ்ணனை மட்டும் தனி வண்டியில் போட்டுக் கொண்டு செங்கல்பட்டு ஆஸ்பத்திரிக்குச் சென்று அட்மிட் செய்து விட்டு போலீஸ் கம்ப்ளைண்ட் கொடுத்திருக்கிறார்.

கிருஷ்ணன் மயக்கத்தில் இருந்ததால் அவர் யார், எவர் என்ற விவரம் ஒருவருக்கும் தெரியவில்லை. எமர்ஜென்ஸி கேஸ் என்று புரிந்து டாக்டர்கள் வைத்தியம் கொடுப்பதற்குள் மண்டைக்குள் ரத்தப் போக்குப் பெருகி, நிலைமை மோசமாகி விட்டது.

இதற்குள் விபத்து நடந்த இடத்துக்குச் சென்ற போலீஸ் நசுங்கி விட்ட வண்டியை, லாரியை, செத்து விட்ட டிரைவரைப் பார்வையிட்டபின், சாமான்களையும்

டிரைவரின் சடலத்தையும் எடுத்துக் கொண்டு செங்கல்பட்டு வந்த பின்னரே, பிரீஃப் கேஸிலிருந்து இருவரின் விலாசமும், மற்ற விவரங்களும் டாக்டர்களுக்கும், மற்றவர்களுக்கும் கிடைத்து, ஸ்ரீதரனுக்குத் தகவல் சொல்ல முடிந்தது.

லட்சாதிபதி கிருஷ்ணன், பரோபகாரி கிருஷ்ணன், ஆயிரம் பேர்களின் கஷ்ட காலங்களில் சமய சஞ்சீவியாய் நின்று பணத்தாலும், மனசாலும், உடம்பாலும் உதவிய கிருஷ்ணன், அனாதை போல இறந்து போனது இப்படித் தான்.

இங்கிலாந்துக்குப் போட்ட கால் கிடைத்து, ஹரியுடன் ஸ்ரீதரன் பேசிய நாழிகையில் கூடியிருந்த கூட்டம் மௌனமாகிப் போனது.

"ஹலோ...ஹலோ... ஹரி? இஸ் தட் ஹரி?"

ஹரியின் குரலைக் கேட்டதும் ஸ்ரீதரனுக்கு இங்கு தொண்டை அடைத்துப் போனது.

"மனசை தேத்திக்கோ ஹரி. நேத்து மெட்ராசுக்கு கார்லே போனபோது, ஆக்ஸிடெண்ட் ஆகி அப்பா தவறிப் போயிட்டார். நான் சொல்றது புரியறதா?... ஹரி...ஹரி... ஆர் யூ தேர்?... காதில் விழறதா?..." கண்கள் கலங்க, துக்கம் குரலில் பளிச்சிட ஸ்ரீதரன் பேசினான்.

ஹரிக்கு எப்படி இருந்திருக்கும் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. திடகாத்திரமாய், தெம்பாய் ஆடி ஓடிக் கொண்டிருந்த அப்பா திடீரென்று விபத்தில் மாண்டுவிட்டார் என்பதை ஹரியால் எப்படி நம்ப இயலும்?

"என்னப்பா நேத்தி ராத்திரி நான் போறத்துக்குள்ளேயே ஆயிடுத்து— செங்கல்பட்டு ஆஸ்பத்திரிலே



அனாதை மாதிரி போயிட்டார் ஹரி... நாம்ப கொடுத்து வைச்சது அவ்வளவு தான்... என்ன? இல்லே இன்னும் எடுக்கலை... ராஜா இப்போ வந்திடுவான். அவனுக்காக காத்திண்டு இருக்கோம். வந்த உடனே எடுக்க வேண்டியதுதான். என்ன ஹரி?... வாட்? நீ வரப்போறியா? அதுவரைக்கும் காத்திருக்கணுமா? ஹரி நான் சொல்றதைக் கேளுப்பா..."

ஹரியின் ஆசை நியாயமானதுதானே! பெத்த தகப்பனார் இறந்து விட்டார் என்றால் கடைசியில் முகமுழியாவது கிடைக்க வேண்டும் என்று தவிப்பது நியாயம் தானே?

"ஹரி... ஆக்ஸிடெண்ட்லே அடிபட்ட தேகம்... நேத்து ராத்திரி பிராணன் போயிடுத்து. இனியும் ரொம்ப நாழி வைச்சிருப்பது நல்லதுக்கு இல்லே— இ பாடி ஈஸ் டிகேயிங் ராபிட்லி. நீ வர்றதுன்னா எப்படியும் ஒண்ணரை நாளாவது ஆகும். அதுவரைக்கும் பாடியை வைக்கிறது கஷ்டம் ஹரி... ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட்... எத்தனை சுருக்க எடுக்கறோமோ அத்தனை நல்லது புரியறதா?... இப்போ நீ பாதி படிப்பிலே வரது அத்தனை சரியானதுமல்ல எனக்குப் படலை என்ன? அம்மாகிட்டே பேசணுமா? ஐ டோண்ட் திங்க் தட் ஷி ஈஸ் இன் எ பொஸிஷன் டு டாக் டு யூ... நாளைக்கு மறுபடி நான் போன் பண்ணறேன். தைரியமாய் இரு ஹரி..."

ஸ்ரீதரன் போனை வைத்தான். எங்கோ கண்காணாத தேசத்தில் தவிக்கும் தம்பியின் வேதனையை அதிகமாக்கக் கூடாது என்று திடமான மனசுடன் பேசினாலும், கூடத்தில் வாட்ட சாட்டமாய் கிடக்கும் அப்பாவையும், பிழியப் பிழிய அழும் அம்மாவையும் மொய்த்திருந்த மனுஷ கூட்டத்தையும் காணுகையில் தன் துக்கத்தை அவனால் கட்டுப்படுத்த இயலாது போயிற்று.

நாலு பேர்கள் நடுவில் தன் அவலத்தைக் காட்ட விரும்பாதவனாய் வேகமாய் தன் அறைக்குள் சென்று கதவை சாத்திக் கொண்டான்.

உருக்குலைந்து போன மாமனாரின் உருவத்தைப் பார்த்து விம்மிக் கொண்டிருந்த அகிலா ஜானகியுடன் கணவன் பேசினதையும் பார்த்தாள். தன்னை நிதானப் படுத்தினவளாய் மெல்ல எழுந்து கணவனைத் தொடர்ந்து உள்ளே போனாள்.

கட்டிலில் உட்கார்ந்து இரண்டு கைகளில் தலையைக் கொடுத்த வண்ணம் இருந்த ஸ்ரீதரனின் உடம்பு குலுங்குவதிலிருந்து அவன் அழுவது அகிலாவுக்குப் புரிந்தது. கிட்டத்தில் போய் அவனை இறுக அணைத்து தானும் சேர்ந்து அழத் தொடங்கினாள் அகிலா.

பகல் ஒரு மணிக்கு ராஜா வந்து சேர்ந்தான். ஒரு மாசம் கூட நிரம்பாத கைக்குழந்தையுடன் உஷாவும் வந்து இறங்கினபோது, இது நாழிகை இல்லாத ஆவேசம் ஜானகிக்குப் பிறந்தது.

"ராஜா... உங்கப்பா போயிட்டார்டா... என்னை மோசம் பண்ணிட்டு போயிட்டார்டா. ஆசை ஆசையா பேரனை கொண்டு வந்திருக்கேடிம்மா உஷா... அவனை வரவேற்க இல்லாம போயிட்டாரே... சொந்தப் பெண் கல்யாண வேலையைக் கூட கவனிக்காம ஊர்ல உள்ள துக்கிரி பெண்களுக்கெல்லாம் கல்யாணம் நிச்சயம் பண்ணறேன்னு போனவர், போயிட்டார்டிம்மா, நான் என்ன பண்ணுவேன்?" என்று பேரனையும், உஷாவையும் கட்டிக் கொண்டு குரல் விட்டு அழுத போது அவள் துக்கிரிப் பெண் என்று யாரைச் சொல்லுகிறாள் என்று எல்லாருக்கும் புரியாவிட்டாலும் சிலருக்காவது விளங்கவே செய்தது.



மாமியார் சொல்லி காட்டியதில் அகிலாவுக்கு வருத்தம் இல்லை. அப்பா பவானி கல்யாணம் நிச்சயம் பண்ணுவதற்காகப் போனது உண்மைதானே? இப்படிப் பட்ட நல்ல ஆத்மா போகக்கென்று பெத்தில் மான வேறு பெண்ணால் பவானி ஜாதகம் துக்கிரி ஜாதகம் தானோ? அகிலாவும் ஜானகியோடு சேர்ந்து அழுதாள்.

மளமளவென்று காரியங்கள் நடந்தன. அன்று இரவு அப்பாவை எரித்து முடித்து, ஓய்ந்து போன உள்ளத்துடன் படுக்கையில் ஸ்ரீதரன் வந்து சாய்ந்த போது ஒரு டம்ளருடன் கிட்டத்தில் வந்து நின்றாள் அகிலா. "கொஞ்சம் ரஸம் சாதம் கரைச்சுக் கொண்டு வந்திருக்கேன். சாப்பிடுங்கோ..."

"வேண்டாம் அகிலா."

"சொன்னா கேளுங்கோ. மனசிலே ஆயிரம் துக்கம் இருக்கலாம், அதுக்காக உடம்பை வருத்திண்டா எப்படி? இன்னும் காரியங்கள் இருக்கு, நீங்க தெம்பா இருக்க வேண்டாமா?"

ஸ்ரீதரன் அவள் பேச்சுக்குக் கட்டுப்பட்டு டம்ளரை வாங்கிக் குடித்தான். வாய் துடைக்க துண்டும், குடிக்க தண்ணீரும் கொடுத்தவளை ஏறிட்டுப் பார்த்த ஸ்ரீதரன் "அம்மா வேதனையிலே பேசறா, அதை மனசிலே வைச்சிக்காதே" என்றான் மெல்ல.

"அம்மா என்ன சொன்னா?"

"பவானியைப் பத்தி சொல்லி கத்தலியா? அது தான்."

மனசுக்கு இதமாகப் பேசும் கணவனைப் பார்த்தாள் அகிலா.

"அம்மா சொன்னதிலே தப்பு இருக்கிறதா எனக்குப் படலை. பவானி, துக்கிரிதான். இல்லேன்னா இப்பேர்ப்

பட்ட ஆத்மா தொடியிலே, அனாதையாய் போயிருப்பாரா...?"

"சரியோ, தப்போ... நீ இந்தக் காதுலே வாங்கி அந்தக் காதிலே விட்டுடு. நாளைக்கே வேதனை குறைந்தால் அம்மா சரியாயிடுவா. என்ன?"

ஸ்ரீதரன் தப்புக் கணக்குப் போட்டு விட்டான். முதல் நாள் ஜானகி எப்படி இருந்தாளோ அப்படியே தான் தொடர்ந்தும் இருந்தாள். எதுவானாலும் வித்யாவை அழைத்து ஒரு வார்த்தை சொன்னாளே தவிரவும், வலிய அகிலா வந்து பேசினாலும் பதிலுக்கு முகம் கொடுத்துப் பேச மறுத்தாள்.

இத்தனை வேதனையிலும் ஒரு விஷயத்தை நினைத்தால் அகிலாவுக்கு ஆறுதலாக இருந்தது உண்மைதான். வித்யாவின் எதிர்கால மாமனார், மாமியார் துக்கத்துக்கு வந்தவர்கள் "கிருஷ்ணன் அமோகமாக வாழ்ந்து போயிருக்கார்; இந்த சாவுக்காகக் கல்யாணத்தை நிறுத்த எங்களுக்கு இஷ்டம் இல்லை. இதை ஒரு சகுனத் தடையா நாங்க நினைக்கவும் இல்லை. எங்களைப் பொறுத்த வரையில் வித்யாதான் எங்காத்து மாட்டுப் பெண்" என்று பெரிய மனதுடன் சொன்னதில் எல்லோருக்குமே சந்தோஷம்.

சம்பந்திகள் முகூர்த்தத்தை தள்ளி வைக்க வேண்டாம் வருஷாப்தி முடிய வேண்டும் என்று காத்திருக்க வேண்டாம். ஏற்கனவே முடிவு செய்த முகூர்த்தத்திலேயே கல்யாணத்தை எளிமையாய் நடத்திவிடலாம் என்பதையும் ஜானகியும் மற்றவர்களும் வாய் திறக்காமல் ஏற்றுக் கொண்டார்கள்.

சம்பந்திகள் நல்ல மனசு கொண்டவர்களாக இருப்பதால் வித்யாவின் வாழ்க்கை முடங்காமல் இருக்கப் போகிறது என்ற நிம்மதி ஜானகிக்கு உண்டானது.



கல்யாணத்துக்கு முன் அபசகுனம் மாதிரி பெண்ணின் தகப்பனார் காலமாகி விட்டார். எங்களுக்கு இந்தப் பெண் வேண்டாம் என்று கல்யாணத்தை நிறுத்தி இருந்தால்? அப்புறம் மேலும் வித்யாவுக்கு இன்னொரு இடம் கிடைக்குமா?

மனசுக்குள் ஆயிரம் வேண்டாத யோசனைகளை எண்ணி தவித்த ஜானகி, கணவரை இழந்த வேதனையையும் ஒதுக்கி நிம்மதியோடு வைத்த முகூர்த்தத்திலேயே கல்யாணத்தை நடத்தச் சம்மதித்தாள்.

எப்படியெல்லாமோ நடத்த வேணும், ஒரே பெண்ணுக்கு அமர்க்களமாய் ஊரே வியக்கும் விதத்தில் திருமணம் நடக்க வேண்டும் என்று ஜானகி ஆசைப்பட்டதெல்லாம் பகற்கனவாகிப் போய் விட்டதால், வித்யா கழுத்தில் நல்லவிதமாய் மூன்று முடிச்சு விழுந்தால் போதும் என்ற நினைப்பு மட்டும் மனசில் இருக்க உள் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தாள். எந்த ஒரு ஏற்பாட்டையும் அவள் கவனிக்கவில்லை. எந்த ஒரு விஷயத்தையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

ராஜா விடுமுறை முடிந்து ஊருக்குப் போய் விட்டான். இனி கல்யாணத்துக்கு நாலு நாட்கள் முன்னால் வரத்தான் அவனால் இயலுமாம். குழந்தைக்கு உடம்பு சரியில்லை. சென்னை டாக்டரிடம் காட்ட வேண்டும் என்று உஷாவும் அவனோடு புறப்பட்டு விட்டாள்.

இங்கு பழையபடி ஸ்ரீதரன், அகிலா, வித்யா, ஜானகி தான்.

கல்யாணப் பேச்சைப் பேசவே எல்லாருக்கும் சங்கடம். ஏற்பாடுகளைக் கணேசனும், கடை மானேஜரும் தெரிந்த வரையில் கவனித்தார்கள்.

"எனக்கு இப்போ கல்யாணமே வேண்டாம், என் கல்யாணம் நின்று போனா போகட்டும், அப்பா போய்

இரண்டு மாதம் கூட ஆகலை. எனக்கு கல்யாணம்ங்கற நினைப்பே பிடிக்கலை" என்று ஒருநாள் வித்யா தாள மாட்டாமல் கதறிவிட்டாள்.

''அதுக்கெல்லாம் கொடுத்து வச்சிருக்கணும் வித்யா, பேத்தலா மடியிலே உட்கார்ந்துண்டு, 'அவா தாரை வார்க்க ஒரு பெண்ணுக்குக் கொடுத்து வைச்சிருக்கணும்மா... போன வருஷம் இதே வரன் வந்தப்போ நான் ஒத்தைக் கால்லே நின்னேன்; முட்டிண்டேன், என் பேச்சை காதிலே யார் போட்டுண்டா? கேட்பா பேச்சைக் கேட்டு நீயும் வேண்டாம்னே... அப்பவே இந்தக் கல்யாணம் நடந்திருந்தா உங்கப்பா இருந்து உன்னை கன்னிகாதானம் செய்து கொடுத்திருப்பார். இப்போ?... எல்லாம் நம்ப தலைவிதி... அதுக்கா கல்யாணம் வேண்டாம்னா எப்படி? நானே மனசு ஒடிஞ்சு இருக்கேன், நீ வேற ஏதேதோ பேசி என் வேதனையை ஜாஸ்தியாக்காதே வித்யா...'' வாய்விட்டு அழுது புலம்பிய அம்மாவை கட்டிக் கொண்டு வித்யா அழ, அகிலா அழ, சுற்றி நின்றவர்கள் கண்களெல்லாம் நீர்.

இதற்குப் பிறகு கல்யாணம் வேண்டாம் என்று ஒரு தரம்கூட வித்யா சொல்லவில்லை. தன் அறையில் அம்மாவோடு சதா இருந்தாள். அம்மா அழுதால் தானும் அழுதாள். ஸ்ரீதரனோ, அகிலாவோ வற்புறுத்தினால் வேண்டா வெறுப்பாக வெளியே வந்து ஒரு வாய் உணவருந்துவாள். மற்றபடி ஒரு சின்னப் பெண்ணுக்கான பேச்சு, சிரிப்பு, ம்ஹூம், ஒன்றும் இல்லை.

அப்பாவின் மரணம் தந்த அதிர்ச்சி வித்யாவை இப்படி மௌனம் ஆக்கி மனசை மரத்துப் போக வைத்திருக்கிறது- நாளடைவில் சரியாகிவிடும் என்று அகிலா நினைத்தது நடக்கவில்லை. கல்யாணத்துக்கென வாங்கின புடவைகளையும், நகைகளையும் வித்யா ஏறெடுத்தும் பார்க்க மறுத்துவிட்டாள்.



''என்னம்மா, பிடிச்சிருக்கா?'' என்று நூறு தடவைகள் கேட்டால் மட்டும் ''என்னை என்ன கேள்வி? உங்க இஷ்டம்'' என்பாள்.

மூவாயிரம் அழைப்பிதழ் அடிக்க வேண்டும். சென்னையிலிருந்து சமையற்காரர்கள், காஷ்மீர் ஆப்பிள், முதல் நாள் ஹேமமாலினி, மறுநாள் எம்.எஸ். என்று முகூர்த்துக்கு கிருஷ்ணனும், ஜானகியும் லிஸ்ட் போட்டதில் ஒன்றுகூட இல்லாமல் வித்யாவின் கல்யாண ஏற்பாடுகள் ஏனோதானோ என்று நடந்தன.

வீட்டில் பிரும்மாண்டமாய் பந்தல் போட்டு நடத்த இருந்த திருமணத்தை, பேருக்கு வாசலில் சின்னதாய் பந்தல் போட்டு, இரண்டு வாழைமரங்களைக் கட்டி நடத்தத் தீர்மானித்தார்கள்.

''எதுக்கும்மா அப்பா ஆசைப்பட்டதைக் குறைக்கணும்? அவர் திட்டம் போட்டபடியே பண்ணிடலாமே'' என்று ஒரு சமயம் ஸ்ரீதரன் சொன்னபோது ''அவரே போனப்புறம், அவர் திட்டப்படி கல்யாணம் மட்டும் எதுக்கு? செய்ய இருந்த செலவுகள் ஒரு லட்சம் ஆகி இருக்குமா? அதை அப்படியே சீதனமா வித்யா மேலே பாங்க்கிலே போட்டுடு. புடவை, நகை, பாத்திரம், பண்டம் ஏற்கனவே வாங்கியாச்சு. அதை குறைக்கப் போறதில்லை. அப்புறம் வெளி ஆர்ப்பாட்டம் எதுக்கு? சம்பந்தி ஆத்துலே பெரிசா ரிஸப்ஷன் கொடுக்கப் போறாளாம்... வித்யாவுக்கு அதுதான் கொடுப்பினை'' என அவனிடம் சொன்ன ஜானகி அவன் போன பிறகு கிட்டத்தில் இருந்த வித்யாவை இழுத்து அணைத்து ''என்னவெல்லாமோ நாங்க ஜோடிச்சோம்... எல்லாம் போச்சு... போன வருஷம் என் பேச்சைக் கேட்டிருந்தால் இந்த வேதனை இல்லை'' என்று ரொம்ப நேரத்துக்கு அழுதாள்.

படுக்கை அறையில் சதா அம்மாவுக்குச் சரியாய் இருக்க வித்யா முற்பட்டதில் அகிலா தனிமையை ரொம்ப உணரத் தொடங்கினாள். ஸ்ரீதருக்கு கடை வேலை, கல்யாண வேலை இவைகளோடு, கிருஷ்ணனின் அகால மரணத்தால் எஸ்டேட் ட்யூடி, சொத்துவரி என்பது பற்றி எல்லாம் வக்கீலிடம் ஆடிட்டரிடம் பேசி முடிவு பண்ண வேண்டிய ஜோலிகளும் இருந்ததால் நின்று நிதானித்து அகிலாவிடம் பேச அவனுக்கு நிமிஷம் கூட இல்லாது போயிற்று. அப்படிக் கிடைக்கும் சமயத்தில் நடக்க வேண்டிய திருமண மற்ற வேலைகளைப் பற்றியதாகவே பேச்சுக்கள் இருந்தன.

மன்னி, மன்னி, என்று மூச்சுக்கு முன்னூறு தரம் தன்னைச் சுற்றும் நாத்தனாரின் தோழமை இல்லாமல் அகிலா கஷ்டப்பட்டுத்தான் போனாள். அம்மாவுக்கு ஆதரவாக வித்யா எந்நேரமும் இருப்பதில் அகிலாவுக்குச் சந்தோஷம் இருந்தாலும், இத்தனை துக்கப்படுவது ஒரு கல்யாணப் பெண்ணுக்கு ஏற்றதா என்றும் தோன்றாமல் இல்லை.

திருமண நாள் நெருங்க நெருங்க வித்யா கூட்டிலிருந்து வெளிப்பட்டு பழையபடி தன்னிடத்தில் நெருங்கி விடுவாள் என்ற நம்பிக்கையுடனேயே இருந்ததால் வித்யாவின் நடத்தையை மற்ற எந்தக் கோணத்திலிருந்தும் அகிலா ஆராயத் துணியவில்லை. ஆனால், முகூர்த்த நாளுக்கு நாலு நாட்கள் இருக்கையில் நடந்த பேச்சுக்களால், அவள் மிகவும் பாதிக்கப்பட்டது என்னமோ வாஸ்தவம்தான்.

அன்று ராஜா, உஷா, குழந்தை வந்து விட்டனர். ஒன்றரை மாசம் கழித்து இரண்டாம் பிள்ளை, மாட்டுப் பெண்ணை திரும்பப் பார்த்ததால் ஜானகியின் துக்கம் மீண்டும் புது வேகத்தோடு பீறிட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை; ஆனால் அன்று இரவு உள் அறையில்



எல்லாருமாக அமர்ந்து பேசிக் கொண்டிருக்கையில்—'அப்பா இல்லை தாரை வார்த்துக் கொடுக்க. ஒன்றே ஒன்று கண்ணே கண்ணுனு ஒரு பெண்; அவளை தாரை வார்க்க எங்களுக்கு கொடுப்பினை இல்லை' என்று ஜானகி புழுங்கிப் போன தன் மனத் துக்கத்தை வெளிப்படுத்துகையில் திடீரென்று உரக்க வித்யா விசிக்கத் தொடங்கினாள்.

''என்னம்மா? என்ன வித்யா?''

அவள் கிட்டத்தில் இருந்த ராஜா இதமாய் வித்யாவின் முதுகைத் தடவவும் அவள் அழுகை பீறிட ''என்னை ஸ்ரீதரன்னாவும், அகிலா மன்னியும் தாரை வார்க்க வேண்டாம், எனக்குப் பிடிக்கலை'' என்று பேசிய போது ''சீ, அசடு. வாட் ஆர் யூ டாக்கிங், இப்படியெல்லாம் பேசக்கூடாது'' என்று விவரம் புரியாத ராஜா அவளை மெல்லக் கடிந்து கொண்டாலும் அகிலா மட்டும் திடுக்கிட்டுத்தான் போனாள்.

இரண்டு மாசங்களாக மாமியார் ''இவள் தங்கைக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணப்போயி, உன் கல்யாணத்துக்கு அப்பா இல்லாம போயிட்டாரே'' என்றும்; ''போன வருஷமே என் பேச்சைக் கேட்டிருக்கக் கூடாதா?'' என்றும் சதா புலம்புவது சின்னப் பெண்ணான வித்யாவின் நெஞ்சில் எத்தனை ஆழமாகப் பதிந்திருக்கின்றன என்பது புரிய அகிலா அதிர்ந்து போனாள்.

வித்யா அப்பாவை இழந்த வருத்தத்தால் என்னிடம் பேசாமல் இருக்கிறாள் என்று நினைச்சது தப்பா? என் மேல் கோபமாக இருக்கிறாளா வித்யா? எதுக்காக?

பவானி கல்யாணப் பேச்சு பேசப் போய் மாமனார் இறந்தது வாஸ்தவம்தான்; ஆனால் அதுக்காக என் மேல் வருத்தமா? இது என்ன அசட்டுத்தனம்?

போன வருஷம் இவதானே தனக்குப் படிப்பு கெட்டுடும்னு கல்யாணம் வேண்டாம்னு சொன்னா? 'கேட்பார் பேச்சைக் கேட்டு கெட்டுப் போயிட்டேன்'னு அழறாளே, என்னையா சொல்றா?

வித்யா, வித்யா, என்னம்மா நீ? வெள்ளை மனசு குழந்தையான உன்னால எப்படிம்மா இந்த திருமிலே என்னைப் பத்தி நினைக்க முடியறது?

அகிலா அடிபட்டு மனசுக்குள் புலம்பின நாழிகையில் ராஜா வித்யாவை சமாதானப்படுத்தி விட்டான். நல்ல வேளையாக ஸ்ரீதரன் அங்கு இல்லை. கடையில் இருந்தான். இந்தப் பேச்சு அவன் காதில் விழுந்திருந்தால் கண்டிப்பாய் வேதனைப்பட்டிருப்பான்.

அதோடு இந்த விவகாரத்தைப் பற்றி எல்லோரும் மறந்து விட்டார்கள்.

நாலு நாள் கழித்து எளிமையாக வித்யாவின் கல்யாணம் நடந்தபோது ஸ்ரீதரனும், அகிலாவும் தந்தை தாய் ஸ்தானத்தில் இருந்து பெண்ணை மாப்பிள்ளை கையில பிடித்துக் கொடுத்தார்கள். ஆனால் தான் எத்தனை முயன்றும் வித்யா தன்னிடம் பாராமுகத்துடன் இருப்பதை மட்டும் அகிலாவால் தாங்கிக் கொள்ளவே இயலவில்லை.

## இருபத்தி மூன்று

பிற்பகல் இரண்டு மணி சுமாருக்கு அகிலாவுக்கு கொஞ்சம் கைக் காரியங்கள் ஒழிந்தன. கடையிலிருந்து சாப்பிட வந்த கணவனுக்கு உணவு பரிமாறி விட்டு அவன் அரைமணி படுத்து எழுந்திருக்கும் நாழிகையை



ஜிம்மியுடன் கழிக்க எண்ணியவளாய் அலமாரியிலிருந்து நாலு பிஸ்கெட்டுகளையும், அன்றைய காலை தபாலில் வந்திருந்த பாவனியின் கடிதத்தையும் எடுத்துக் கொண்டு தோட்டத்தைப் பார்க்க நடந்தாள்.

காலையிலிருந்து தான் ஜிம்மியை எட்டிப் பார்க்காத கோபத்தில் தட்டில் போடப்பட்டிருந்த சோற்றை முகர்ந்து கூடப் பார்க்கப் பிடிக்காதவன் போல முகத்தை ஒன்றரை முழத்துக்கு நீட்டிக் கொண்டு கெனலில் படுத்திருந்த ஜிம்மியைக் கண்டதும் அகிலாவுக்கு மனசு நெகிழ்ந்து போயிற்று.

கிட்டத்தில் போய் "என்னடா ஜிம்மி, சாப்பிடப் பிடிக்காமல் அப்படி தூக்கம்?" என்றாள் கொஞ்சலுடன்.

தடக்கென்று எழுந்து கொண்டது ஜிம்மி. வாலை விசிறி விசிறி ஆட்டியது. ஊ...ள் என்று குரைத்தது. கண்களை மலர்த்திக் கொண்டது. முன்னங்கால்களை தூக்கி கம்பிக் கதவில் வைத்துப் பிராண்டியது 'என்னை வெளியில் விடேன்' என்று கெஞ்சுகிற பார்வையாய் பார்த்தது.

அகிலாவுக்கும் காலாற ஓடி, ஆடி விளையாட ஜிம்மியை வெளியில் விட இஷ்டம்தான். ஆனால் அது நடக்கிற காரியமா?

கதவைக் கொஞ்சம் திறந்தாலும் வெளியில் வந்து கத்தி, வெறி கொண்டதுபோல ஓடும். அப்புறம் குஷி அதிகமாகி விட்டால் வீட்டுக்குள் நுழையப் பார்க்கும். உஷாவுக்கு நாய் என்றாலே அலர்ஜி; காத தூரத்தில் ஜிம்மியைக் கண்டால் கால் பிடறியில் பட ஓட முற்படுவாள். விளையாடத்தான் அழைக்கிறானாக்கும் என்ற அசட்டு நினைப்பில் இதுவும் துரத்தத் துவங்கும். கடைசியில் ஜிம்மிக்கு சஹஸ்ரநாம அர்ச்சனையை ஜானகி செய்யத் தொடங்கி விடிய விடிய நடக்கும்.

எதற்கு வீண் வம்பு? வெளியில் வந்து தன்னோடு இருக்கத் தவித்துப் பறந்த ஜிம்மியின் தலையை கம்பி வழியாக கையை விட்டு அகிலா தடவிக் கொடுத்தாள். காது பக்கமாய் சொறிந்து கொடுத்தாள். அவனுக்குப் புரிந்த தினுசில் நிதானமாய்ப் பேசினாள்.

“வேணாண்டா ஜிம்மி... வெளியே வரணும்னு ஆசைப்படாதேடா. உனக்கு என்ன கொண்டு வந்திருக்கேன் பாரு நீ குட்பாய் இல்லியா? ஜிம்மி, கத்தாதேடா... ப்ளீஸ்” என்று அன்போடு பேசின அகிலா ஒவ்வொரு பிஸ்கெட்டாக எடுத்து ஜிம்மியிடம் நீட்டி அது சாப்பிட்டதும் ‘ஆச்சு— ஜிம்மி இனி உன் சாதத்தை சமர்த்தாய் சாப்பிடணும் ஜிபோ—” என்று சின்னக் குரலில் கெஞ்சினது நன்றாய் புரிய தன் உணவிடம் சென்று சாப்பிடத் தொடங்கியது.

பாதி ஆனதும் “எனக்குப் பிடிக்கலை, போதும்” என்கிற தினுசில் பரிதாபமாய் தலையை திமிர்த்திப் பார்த்ததும் அகிலாவுக்குச் சிரிப்பு எழுந்தது.

“போதும்னா வாடா...”

இவளுடைய உத்திரவுக்கு காத்திருந்த மாதிரி கிட்டத்தில் வந்து அமர்ந்து, கம்பி வழியாக தலையை நீட்டி அகிலாவின் பாதங்களை நக்கிக் கொடுத்தது. ஒரு கையால் அதன் கழுத்தை இதமாய் வருடிய வண்ணம் இன்னொரு கையால் பவானியின் கடிதத்தைப் பிரித்தாள் அகிலா.

காலையில் வந்த கடிதத்தை, கிடைத்த அவசரத்தில் அவசரம் அவசரமாய் படித்து முடித்து வைத்துவிட்டதை, இப்போது நிதானமாய்ப் படிக்க எண்ணிப் பிரிக்கையில் விவரிக்கத் தெரியாத வேதனை மனசுக்குள் வியாபிப்பதை உணர முடிந்தது.



நினைக்க நினைப்பு என்ன, போட்ட கணக்குகள் என்ன, இப்படி ஒன்று கூடவா சரிப்பட்டு வராமல் எல்லாமே கோணலாய்ப் போகும்? இந்த கோணல்களுக்கு எது காரணம்? விதியா, போதாத காலமா? இல்லை எங்கள் குடும்பத்து ராசியா?

கஷ்டங்கள் எல்லாம் விடிந்து போய்விட்டன; இனி சௌக்கியம்தான்; நிம்மதி தான் என்று பெருமூச்சுவிட்டு நிதானிக்கக்கூட நேரம் இல்லாமல் இப்படியா ஒட்டு மொத்தமாய் வேதனைகள் மண்டையில் இடிக்கும்? சும்மாவா சொன்னார்கள் பெரியவர்கள்— பட்ட காலிலே படும் என்று!

நிஜம் தான். பட்ட காலிலே படும், கெட்ட குடிதான் கெடும். இதில் இனி சந்தேகம் என்ன? ஒரு வருஷமா என் அப்பா போய் ஒரு வருஷமும் மூன்று மாசங்களும் ஓடியாகிவிட்டன. இதோ— இன்னும் ஒரு மாசம் திரும்பிப் பார்த்தால் மாமனாரின் வருஷ திவசம்!

இந்த ஒரு வருஷ காலத்தில் என் வாழ்க்கையிலும் என்னைச் சுற்றிலும் உண்டான மாற்றங்கள் தான் எத்தனை, எத்தனை?

அசட்டுப் பிசட்டென்று வேண்டாத கற்பனைகளை தன்னுள் வளர்த்துக் கொண்டு வித்யா என்னிடமிருந்து விலகிப் போனாள். வந்து விடுவாள், ‘மன்னி’ என்று அன்பாய் அழைத்துக் கொண்டு திரும்ப தன் நெஞ்சோடு ஒட்டிக் கொண்டு விடுவாள் என்று எதிர் பார்த்தது எங்கே நடந்தது? போனவள் போனதுதான். விலகியவள் விலகினதுதான். அதுவும் வரவர காரணமில்லாமல் என்னைக் காணும் கண்களில் ஒருவித துவேஷ மனப்பான்மை பரவுவதை நன்றாய்ப் புரிந்து கொள்ள முடிகிறதே! இனிமேல் ஒட்டவாவது, ‘மன்னி’ என்று அன்பைக் கொட்டவாவது! ம்ஹூம், ஒன்றுமில்லை.

காற்றில் கடிதம் படபடக்க குனிந்து கண்களை அந்த வாசகங்களில் பதிய விட்டாள் அகிலா.

அன்பான அக்காவுக்கு நமஸ்காரங்கள்.

இங்கு அம்மா, ராமு, நான் சௌக்கியம். அத்திம்பேர், ஜானகி மாமி, ராஜா மாமா, உஷா மாமி, அரவிந்த், நீ, உன் ஜிம்மி எல்லாரும் சௌக்கியமா?

என் வேலை ரொம்ப சுவாரஸ்யமாக இருக்கிறது. முதலாளி பழகின வரைக்கும் நல்லவராய்த்தான் தெரிகிறார். நீ அனாவசியமாய் கவலைப் படாதே. வெளியில் சுற்றும் வேலையாக இருப்பதினால் கஷ்டங்கள் அப்படி ஒன்றும் அதிகமாக இல்லை. இந்த மாசம் நான் விற்பனை நன்றாக செய்திருக்கிறேன் என்று இருபது ரூபாய் கூட்டிக் கொடுத்தார்கள். முதல் தேதி சம்பளம் வந்ததும் வழக்கம் போல அப்படியே அம்மாவிடம் கொடுத்து நமஸ்காரம் பண்ணினேன். பாவம் என்னைக் கட்டிக்கொண்டு அழுது விட்டாள்.

படித்துக் கொண்டிருந்த அகிலாவின் கண்களில் நீர் ஊறியதால் எழுத்துக்கள் தெளிவாகத் தெரிய மறுத்தன.

பவானி வேலைக்குப் போகிறாள்! நான்கு மாசங்களாய் என் குட்டித் தங்கை பவானி வேலைக்குப் போகிறாள்! அதுவும் எப்படிப்பட்ட வேலை? ஏதோ ஒரு கம்பெனியின் சோப்பு, பவுடர் வகைகளை சுமந்து கொண்டு தெருத் தெருவாய் சுற்றி; வீடு வீடாய் ஏறி கதவைத் தட்டி இது பிரமாதமான சோப், துணிகளை வெள்ளை வெளேரென்று வெளுக்கும் ஒரு கட்டியின் விலை ஒரு ரூபாய் இருபது காசு தான், கொள்ளை மலிவு என்றும், வழவழப்பான சருமத்துக்கு உகந்த பவுடர் இது; உயர்ந்த ரக மருந்துகள் கலந்த பவுடர். ஆகையால் பருக்களைத் தடுக்கும், சருமத்தைப் பளபளப்பாக்கும்,



களை நிறத்தைக் கூட்டும் என்றும் புன்னகையுடன் பொறுமையுடன் பேசி பொருட்களை விற்றுத் தீர்த்தால், நூற்று அம்பது ரூபாய் சம்பளத்துடன் நூற்றுக்கு இத்தனை என்று கமிஷனும் வரும்.

என்ன வந்து என்ன? வெயிலில் நாயாய் சுற்றி யாரிடமோ கண்ணை மறைத்துப் பேசி அலைந்து திரிவதற்கு கையில் கிடைக்கும் இருநூற்றி ஐம்பதோ முன்னூறோ எந்த மூலைக்கு? பவானி படும் சிரமத்துக்கு இந்தத் தொகை ஈடு போடக் காணுமா?

கண்டவன் வீட்டில் ஏறி இறங்கணும், கண்ட மனிதர்களிடம் பேச்சுக் கேட்கணும், எதற்கு இந்த வேலை? பள்ளிக்கூடம், காலேஜ் என்று எங்காவது வேலை தேடக் கூடாதா? என்று ஆதங்கத்துடன், பவானிக்கு வேலை கிடைத்த சேதி கேட்டு அகிலா அம்மாவுக்கு எழுதியிருந்தாள்.

பதில் அம்மாவிடமிருந்து வரவில்லை. ஆனால் பவானி ரொம்ப சமர்த்தாக எழுதி இருந்தாள்.

"உன் வேதனை எனக்குப் புரிகிறது அக்கா. டீச்சர் உத்தியோகம் பார்க்க நானும் ரெடி தான். தேடாத இடம் இல்லை. கெஞ்சாத நபர் இல்லை. [illegible] நர்ஸரி ஸ்கூலுக்கு கூட பி. டி. படிப்பு வேண்டும் என்கிறார்கள். பி. டி. சேர்ந்து நான் படிக்கும் நிலையில் நம் குடும்பம் இல்லை என்பது உனக்கே தெரியும். வேறு நல்ல வேலை கிடைக்கும் வரைக்கும் இந்த வேலை; ஒரு வேலையும் பண்ணாமல் தண்டச்சோறு தின்று கொண்டு பத்து மாசகாலமாய் நான் பட்ட வேதனையை நினைத்துப் பார்க்கும் போது இந்த வேலை எனக்கு ரொம்ப சந்தோஷத்தைத் தருவதாக இருக்கிறது. ராமுவுக்கு இது கடைசி வருஷம். அவன் படிப்பு முடிந்து விட்டாலும் எப்போது வேலை கிடைக்குமோ? இருநூறு ரூபாய்

என்பது சாதாரண விஷயமில்லை. எல்லாம் புரிந்த உனக்கு நான் இதற்கு மேல் விளக்க வேண்டுமாக்கா?"

ரொம்ப விவேகத்தோடு, நாளையும் அலசி யோசனை பண்ணிய நேர்த்தியோடு இருபது வயசு பவானி எழுதியிருந்த லெட்டரை வைத்துக்கொண்டு கண்களில் நீர் ததும்ப உட்கார்ந்திருந்தவளுக்கு ரொம்ப நினைக்கத் தோன்றியது. அப்பா இருந்தால் பவானியை இப்படித் தெருவில் சுத்த விடுவாரா?

"இதென்னம்மா அசிங்கம், வயசுக்கு வந்த பெண் செய்யற வேலையா இது? நோ...நோ..." என்று தடுத்திருப்பார்.

"கால காலத்திலே குழந்தைகளை ஒருவன் கையிலே பிடிச்சிக் கொடுக்கணுமா" என்று சொல்வதோடு நிற்காமல் முனைந்து நல்ல மாப்பிள்ளையை நிச்சயம் செய்திருப்பார் அல்லவா?

கேவலம் இருநூறு ரூபாய், இதற்காக நினைத்து நினைப்பில்லாமல் பவானி வேலை பார்க்கும் நிர்பந்தம் உண்டாகி விட்டதே.

கடையில் ஏகமாய் வேலை செய்து விட்டு அலுத்துப் போய் அன்று ஸ்ரீதரன் படுக்கையில் வந்து விழுந்தபோது இரவு பதினொன்று. கணவனின் மனநிலை நன்கு புரிந்தும் கூட தன் குடும்பத்தின் அவலம் தாளாதவளாய் அகிலா அவனிடம் பேச்செடுத்தாள்.

"உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்?"

"ம்?" அசதியுடன் மூடியிருந்த கண்களைத் திறந்த ஸ்ரீதரன் கேட்டான்.

"பவானி லெட்டர் போட்டிருக்கா" கணவன் முன் கடிதத்தை அகிலா நீட்டினாள். அதை வாங்கவில்லை ஸ்ரீதரன். "என்ன விஷயம், நீயே சொல்லேன்."



அகிலா சொன்னாள்: பவானியின் வேலையைப் பற்றிச் சொன்னாள். அவள் தெருவில் திரிந்து கடை கடையாப் பேச்சுக் கேட்கப் போவதில் தனக்குச் சம்மதம் இல்லை என்றும் சொன்னாள்.

"பி. எஸ்ஸி படிச்சிருக்கா. அதுக்குத் தகுந்தபடி வேலை கிடைக்காதா என்ன? ப்ளீஸ் நீங்க உங்களுக்குத் தெரிஞ்சவா கிட்ட சொல்லி ஏற்பாடு பண்ண முடியுமா?"

அகிலா நிறுத்திப் பேசினாள். அழக்கூடாது, என் குடும்பத்தைப் பற்றி இவர் கேவலமாய் நினைத்து விடக் கூடாது என்ற ஜாக்கிரதையுடன் பேசினாள்.

அகிலாவின் மன உளைச்சல் புரியாத ஸ்ரீதரன் பெரிசாய் கொட்டாவி விட்டான். "இதுலே என்ன கேவலம் இருக்கு அகிலா? எம்.ஏ., எம்.எஸ்ஸி. படிச்சவனெல்லாம் பஸ் கண்டக்டர் வேலைக்கும் கடைகளில் கவுண்டர் வேலைக்கும், போட்டி போட்டுண்டு பறக்கறகாலம் இது. அதனாலே இப்போதைக்கு கிடைச்ச வேலையைப் பண்ணட்டும்; அப்புறமா வேற நல்ல வேலை கிடைச்சால் விட்டுடலாம்... எனக்கு மெட்ராஸிலே யாரையும் நெருக்கமா தெரியாது... இருந்தா சொல்லி ஏற்பாடு பண்ணலாம். சேல்ஸ் கேர்ல் வேலையிலே தப்பு இருக்கறதா நான் நினைக்கலை. அதனாலே இப்போதைக்கு அவளைத் தடுக்காதே" படுத்துக் கொண்டே பேசின ஸ்ரீதரன் மீண்டும் ஒருமுறை கொட்டாவி விட்டு விட்டு "தூக்கம் வரது கடையிலே எக்கச் சக்கமாய் வேலை..." என்று முனகியவண்ணம் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

அகிலாவுக்கு இதோடு விஷயத்தை விட்டு விட்டாலும் ஸ்ரீதரன் மனசில் இது கொஞ்சம் உறுத்தி இருக்கத்தான் வேண்டும். இத்தனை வருஷங்களாய் தன் குடும்பத்துக்கு என்று எந்த ஒரு உதவியும் வாயைத் திறந்து கேட்காத மனைவி கேட்டு தான் ஒன்றும் செய்யவில்லையே என்பது உறுத்தித் தான் இருக்க வேண்டும்

சரியாய் ஒரு மாசத்தில் 'அப்பாவுக்கு வருஷ திவசம் வருகிறது ; நீங்கள், அக்கா எல்லாரும் வந்து நடத்திக் கொடுக்க வேண்டும்' என்று ரொம்ப பெரிய மனுஷனாய் ராஜு எழுதியதும், "இப்போ எப்படிப் போகமுடியும் ராஜூ குடும்பத்தோட வரப் போறான். தலைக்கு மேல வேலை கிடக்கு. எப்படிப் போக முடியும் ?" என்று ஜானகி விட்டேத்தியாய் பேசியபோது, "அப்படி சொல்லிட்டா எப்படிம்மா ! போக வேண்டியதுக்குப் போய் தானே ஆகணும் ? முதல் நாள் கார்லே போயிட்டு காரியம் ஆன உடனேயே வந்துடறோம்" என்று தீர்மானமாய்ப் பேசி அம்மாவை அடக்கியது ஸ்ரீதரன் தான். அகிலாவை சென்னைக்கு காரில் கூட்டிச் சென்று தான் திவச காரியங்களில் பட்டும் படாமலும் இருந்தாலும் ஆயிரம் ரூபாயை மனைவியிடம் தூக்கிக் கொடுத்து 'செலவு இருக்கும், உங்கம்மா கையில் கொடுத்து வை' என்று வலியச் சொன்னதும் அவன்தான்

ஸ்ரீதரன் கூறியபடியே இரண்டாம் நாள் திரும்ப திருச்சிக்கு கிளம்பி விட்டார்கள். சென்னையில் தங்கிய ஒன்றரை நாளில் தன் குடும்பத்தை அலைக்கழிக்கும் இன்னொரு சேதியையும் அகிலா தெரிந்து கொண்டாள்.

காட்ராக்ட் ஆபரேஷன் வேதா மாமிக்கு உபயோகமாய் இல்லையாம். போன கண் போனதுதானாம். இங்கு பங்களாவில் குடித்தனம் வைத்திருக்கும் நபர் சரியாக வாடகை கொடுப்பதில்லையாம். வாடகைக்கு விட்ட இந்த ஒரு வருஷத்தில் இன்னும் ஆறு மாச வாடகை பாக்கியாம்.

"எங்களாலே இவனோட மன்றாட முடியவில்லை. டெல்லி எங்களுக்கு பர்மனென்ட் ஊராகி விடும் போல் இருக்கிறது ; அதனால் சேட் ஒருவர் வீட்டை விலைக்குக் கேட்கிறார். கொடுத்துடலாமா என்று யோசனை



பண்ணிக் கொண்டிருக்கிறோம்" என்று வெங்கடேசனின் கடிதத்தைப் பார்த்த அகிலா மிரண்டு தான் போனாள்.

வீட்டை விற்றால், அவுட்ஹவுஸில் அம்மா இருக்க முடியுமோ முடியாதோ ? எனக்கு இடம் போதாது நீ கிளம்பு என்று சொந்தக்காரர் கிளப்பி விட்டால் இத்தனை குறைச்சல் வாடகையில் வேறு வீடு கிடைக்குமா ? இத்தனை சௌகரியங்களுடன் இத்தனை பழக்கப்பட்ட சூழ்நிலையில் கஷ்டம், ரொம்பக் கஷ்டம்.

காரில் திரும்ப திருச்சிக்கு வரும் வழியில் கணவனிடம் இது குறித்து பேசினாள் அகிலா. ரொம்ப பேசவும் பயம். கூடவே இருக்கும் டிரைவர் ஒன்று கிடக்க ஒன்றை மாமியாரிடம் கூட்டி சொல்லி விடுவானோ என்ற பயம். அதனால் "இருக்கிற தொல்லை போதாதுன்னு புதுசா இன்னொண்ணு கிளம்பி இருக்கு. வேதா மாமி வீட்டை விற்க யோசனை பண்ணிண்டு இருக்காளாம். அப்படி வித்துட்டா அலைஞ்சு திரிஞ்சு இன்னொரு இடம் பார்க்கணும். வாடகை எத்தனை கேட்பாளோ. எனக்கு ஒண்ணும் புரியலை" என்று மட்டும் சொல்லி நிறுத்தினாள்.

ஹெரால்ட் ராபின்ஸ் புத்தகத்தில் ஆழ்ந்திருந்த ஸ்ரீதரன் சற்றே கண்களை நிமிர்த்தி இரண்டு தடவைகள் தலையை ஆட்டினான். பின் பதில் எதும் சொல்லாமல் மீண்டும் படிக்கத் துவங்கி விட்டான்.

திருச்சி வந்த அன்றிரவே சாப்பாட்டு நேரத்தில் பிள்ளைக்கு அருகில் அமர்ந்து ஜானகி பேச்செடுத்தாள்.

"காரியம் நன்னா நடந்துதோன்னோ ?"

"ம்...ம்..."

ஒரு நிமிஷம் மௌனமாய் இருந்த ஜானகி தொடர்ந்தாள். "செலவுக்கு ஏதாவது பணம் கொடுத்துட்டு வந்திருப்பியே, அப்பாவுக்கு நான் தப்பாத பிள்ளையா ?"

"ம் ம்" சாப்பிட்டுக் கொண்டே இதற்கும் தலையை ஆட்டினான் ஸ்ரீதரன்.

''எத்தனை கொடுத்தே?'' ஜானகி விடவில்லை.

பரிமாறிக் கொண்டிருந்த அகிலாவை நிமிர்ந்து பார்த்தான் ஸ்ரீதரன். "முன்னூறு ரூபாய் கொடுத்தேன். பின்னே நமக்கு மட்டும் பாத்தியதை இல்லையா? சும்மா தொண தொணக்காதேம்மா. விட்டுடு" என்று சொல்லி எழுந்து விட்டான். இதோட

அவன் அந்தப் பக்கம் சென்றதும் ஜானகி விடாமல் முணுமுணுக்கவே செய்தாள்.

''பாத்யதை. ரொம்ப பெரிய பாத்யதை... எல்லாம் என் தலையெழுத்து. ம்"

மாமியாரின் பொருமல்களைத் தாங்க அந்த நிமிஷம் மனசுக்கு வலு இல்லை என்று புரிந்த அகிலா சமையல் கட்டுக்குள் புகுந்து கொண்டாள்.

மனசு பலமாய் இருந்தால் எப்படிப்பட்ட வேதனையையும் சொல்லையும் தாங்க முடிகிறது. ஆனால் அந்தே பலம் குறைந்து நொந்து போய்விட்டால் சின்ன வார்த்தைகூட கண்களில் ஜலத்தை வரவழைத்து விடுகிறதே!

மாமியாரைக் கணவன் சமாளித்தவிதம் அகிலாவுக்கு தெம்பைத் தந்தாலும் 'ஆயிரம் ரூபாய் கொடுத்தேன், இதில் என்ன தப்பு?' என்று உண்மையைச் சொல்லி இருக்கலாமே? எதற்காக முன்னூறு என்று பொய் சொல்ல வேண்டும். பாத்தியதை உண்டு என்று நினைக்கும் பட்சத்தில் பொய் எதற்கு? என்ற கொஞ்சம் வேதனை எழுந்தது என்னமோ உண்மைதான்.

அகிலா பயந்தது விரைவிலேயே நடந்து விட்டது. வேதா மாமி வீட்டை விற்று, அந்த ஸேட் 'காலி பண்ணு



எனக்கு அவுட் அவுஸ் தேவைப்படுகிறது' என்றும் சொல்லி விட்டானாம்!

ராமு சின்னப் பையன், வீடு பார்க்கவும் வாடகை பேசவும் அவனுக்கு என்ன தெரியும்? இல்லை பவானிக்கோ, அம்மாவுக்கோ என்ன தெரியும்?

லெட்டரைப் பார்த்ததும் அகிலா தவித்துப் போனாள். ராலு நாட்கள் சென்னைக்குப் போய், சுலபமாய் ஒரு போர்ஷனை பார்த்து நல்ல விதமாய் குடும்பத்தை அமர்த்தி விட்டால் தேவலை போல உள்ளம் பரபரக்க ஸ்ரீதரனிடம் கடிதத்தை நீட்டி, தன் எண்ணத்தை மெதுவாய் வெளியிட்டாள்.

அவளிடம் பதிலாய் ஏதும் பேசாத ஸ்ரீதரன் ஹாலில் உட்கார்ந்திருந்த அம்மாவிடம் கடைக்குப் போகுமுன் நீட்டிக் கொடுத்தான்.

"அகிலா தம்பி லெட்டர் போட்டிருக்கான்மா. வீட்டை வேதா மாமி வித்திட்டாளாம். சொந்தக்காரா காலி பண்ணுங்கறானாம். புதுசாய் இடம் பார்க்கணும், கொள்ளணும். அகிலாவை வேணுமானால் நாலு நாளைக்கு அனுப்பலாமா போய் உபகாரமாய் இருந்துட்டு வரட்டுமே."

பிள்ளை பேசப் பேச ஜானகிக்கு கோபம் மூண்டது தெளிவாகத் தெரிந்தது.

'அவா தான் தடுக்கி விழுந்தா வாலு லெட்டர் போட்டா இவளும் போகணும்னு உன்னை சிபாரிசுக்கு என்கிட்டே அனுப்பறாளே, அதைச் சொல்லு... ஏம்பா ஸ்ரீதரா, நான் தெரியாமத்தான் கேட்கிறேன்... புக்காத்துக்கு வந்துட்ட பெண் நினைச்ச நினைச்ச பிறந்தாத்துக்கு ஓட முடியுமோ? ராஜா குடும்பத்தோட வந்து பத்து நாள்தான் ஆறது. உஷா கைக்குழந்தைக்காரி. அவளுக்குத் தேவையானதை கவனிக்க, பழக்கப்பட்ட

இல இருந்தா தானே சௌகரியம்? அடுத்த வாரம் என்னை கொடுக்க வித்யாவை அழைச்சுண்டு வர நான் பார்த்திருக்கு... இந்த சமயம் பார்த்து இல பிறந் தாத்துக்கு சீராடப் போக முடியுமா? நான் சொல்றதைச் சொல்லிட்டேன்... அப்புறம் உன் பாடு, உன் பெண்டாட்டி பாடு'' ஜானகி கோபம் தணியாமலேயே உள்ளே எழுந்து சென்று விட்டாள். அம்மாவின் பேச்சில் நியாயம் உணர்ந்த மாதிரி, ஒரு கடுகடுப்புடனும் தலையை நிமிர்ந்த கணவனிடம் சட்டென்று அகிலா பேசினாள். 'அம்மா சொல்றது சரிதான். இப்போ போறதுக்கு தோது இல்லை. அப்புறமா பார்த்துக்கலாம்.'

ஸ்ரீதரன் எழுந்ததும் அவனுக்கு சிற்றுண்டி எடுத்து வைக்க அகிலாவும் உள்ளே சென்றாள்.

கிருஷ்ணன் இருக்கும் போதே ராஜாவிடம் 'எதுக் காக ஒருத்தன் கிட்டே நீ கை கட்டி சேவகம் பண்ணணும்? திருவெறும்பூர் ஃபாக்டரிகளுக்கு தேவையான டூல்கள், மற்ற ஆக்ஸஸரீஸ் ஏதாவது தயார் பண்ணுகிற ஸ்மால்ஸ்கேல் இண்டஸ்ட்ரி ஒன்னை நீ ஆரம்பிக்க லாமே?' என்று வாய்க்கு வாய் சொன்ன போது உண்டாகாத ஆசை, உஷாவுக்கு வடநாடு பிடிக்காமல், சென்னைக்கு, பெற்றோர்க்கு கிட்டத்தில் போய்விட வேண்டும் என்ற தவிப்புத் தோன்றியதும் ராஜாவின் மனசில் தோன்றி வளரத் தொடங்கியதால் அப்பாவின் அகால மரணத்துக்கு வந்த போதே இது விஷயமாய் அண்ணாவிடம் பேசினான்.

ராணுவ வேலையை விட்டு விடுவது, மெஷின் டூல் ஃபாக்டரி ஒன்றை ஆரம்பித்து விடுவது என்று தீர்மானித் ததும் ஆக்ராவுக்கு ஸ்ரீதரனை ஒரு வாரம் வரவழைத்து தன் முடிவைச் சொல்லி ஆவன செய்யத் தொடங்கினான் ராஜா.



திருவெறும்பூருக்கு அருகில் நிலம் வாங்கப்பட்டது. கட்டிடங்களுக்கு பிளான், அரசாங்க லோன் முதலியன சாங்க்ஷன் ஆவதற்கும் ராஜா வேலையை ராஜினாமா செய்து விட்டு பத்து மாச பிள்ளை அரவிந்த், மனைவி உஷாவுடன் திருச்சியோடு வருவதற்கும் சரியாக இருந்தது.

கணவரைப் பறி கொடுத்த ஜானகிக்கு வித்யாவின் திருமணமும், உடனே அவள் உண்டானதும், ராஜா கூடவே வரப்போகிறான் என்ற சமாசாரமும் மனசுக்கு மிகுந்த அளவில் தெம்பு கொடுத்தது நிஜம் தான்.

அந்தஸ்தான மாட்டுப்பெண், அழகான மாட்டுப் பெண், படித்த மாட்டுப்பெண், நாகரீகமான மாட்டுப் பெண், தன்னோடு வீட்டோடு இருக்கப் போகிறாள். ஸ்நேகிதிகள் அவளைப் பார்த்து பிரமிப்பார்கள், புகழ்ந்து பேசுவார்கள். உறவுக்காரர்கள் அவளின் திறமையையும், புத்திசாலித்தனத்தையும் கண்டு வாயைப் பிளப்பார்கள். அம்மாடி! எத்தனை நாளாய் நெஞ்சு ஆசைப்பட்ட ஆசை இது!

மாடி முழுவதையும் அகிலாவை வைத்துக் கொண்டு துப்புரவாய் ஒழித்தாள். வெள்ளை அடிக்க வைத்தாள். தெரிந்தவரைக்கும் ஜோடித்தாள்.

கையில் கடிதத்தை வைத்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்து போன அகிலா ரௌத்திரமாய் ஜிம்மி குரைப் பதைக் கேட்டு திடுக்கிட்டாள்.

தூரத்தில் ஆயா குழந்தை அரவிந்துடன் வருவது புரிந்தது.

ஏனோ இந்த உஷா, அரவிந்தைக் கண்டால் ஜிம்மிக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு எழுகிறது. கிட்ட வந்தாலேயே பாய்ந்து குதறுகிற மாதிரி உதட்டை கோணி உறுமுகிறது.

"சும்மா இரு ஜிம்மி நம்ம அரவிந்த். அவனைப் பார்த்துக் குரைக்கக் கூடாது" என்று சின்னக் குரலில் அதட்டிவிட்டு எழுந்து சென்று தன்னிடம் தாவின குழந்தையை கையில் வாங்கிக் கொண்டாள்.

"சின்னம்மா தூங்கறாங்க. அரவிந்துக்கு ஜூஸ் கொடுக்க உங்களை பெரியம்மா கூப்பிடறாங்க" என்று ஆயா சொன்னதும் குழந்தையை இடுப்பில் வைத்தபடியே காரியங்களை கவனிக்க உள்ளே போகத் திரும்பினாள்.

## இருபத்து நான்கு

காலையில் எழுந்ததிலிருந்து விடாமல் தொடர்ந்து அடுப்படியில் இருந்தது அகிலாவுக்குக் களைப்பாக இருந்தது. வியர்வையைத் துடைத்து துடைத்து தெறிக்கும், பின் கழுத்தும் எரிச்சல் கண்ட மாதிரி இருந்தது; குளிர்ந்த நீரில் ஊறி குளித்தால் தேவலை போல இருந்தது. கட்டி இருந்த நைலக்ஸ் சேலையை அவிழ்த்து விட்டு மெல்லிய வாயில் ஒன்றை உடுத்திக் கொண்டால் இதமாய் இருக்கும் என்று தோன்றியது.

ஆயிற்று இன்னும் கொஞ்சம் 'லவங்க லதிகா' தான் பாக்கி, போட்டு எடுத்து விட்டால் குளிக்கப் போய் விடலாம்.

அகிலா சென்னையில் இருந்த காலத்தில் தங்கத்திட மிருந்து செய்யக் கற்றுக் கொண்ட பல பலகாரங்களில் இந்த லவங்க லதிகாவும் ஒன்று. தங்கம் ஸ்ரீநகரில் இருந்த போது பக்கத்து வீட்டு வங்காளிப் பெண்ணிடம் செய்யப் பயின்ற இனிப்பு பதார்த்தம்.

முதலில் பாலை சுண்ட காய்ச்சி கோவா எடுக்க வேண்டும். இதோடு துருவின கொப்பரை, ஏலக்காய்



யாடி கலந்து கெட்டி பூரணமாய் தயாரிக்க வேண்டும். மைதா மாவைச் சலித்து சிறிது உப்பு சேர்த்து பிசைந்து ருண்டைகளாய் கிள்ளி, சின்ன அப்பளங்களாய் இட்டு, டுவில் பூரணத்தை வைத்து நான்காக மடித்து பிரியாமல் ஒரு கிராம்பை பீடாவில் குத்துவது போல க்கிவிட வேண்டும்.

எண்ணெயில் இலைகளை பொன் நிறத்தில் பொரித்துக் கொண்டு, மெல்லிசு கம்பி பதத்தில் தயாராய் வைத்திருக்கும் சர்க்கரை பாகில் முக்கி எடுத்து, தட்டில் ட்டாமல் அடுக்கி விட்டால் லவங்க லதிகாக்கள் ரெடி.

வீட்டுப் பாலில் சுத்தமாய் கோவா கிளறி அருமை ாய் அகிலா செய்த இந்த இனிப்பு அனைவருக்கும் ஓட்டு மாத்தமாய் பிடித்துப் போனதால் அவள் அடிக்கடி தைப் பண்ணுவது வழக்கம் தான்.

உஷா, ராஜூவுக்கும் இந்த லவங்க லதிகா ரொம்பப் டித்திருந்தது.

"கடையில் வாங்குவது எங்கே இத்தனை நன்னா ருக்கு?" என்று உஷா பாராட்டிய போது 'ஆத்துப் ல், சுத்தமான கோவா அதான் நன்னா இருக்கு. டையிலே மாவைக் கிளறி கோவா பண்ணி த்தறான்', என்று அகிலாவின் கைத்திறனுக்கு டிபிகேட் கொடுக்க இஷ்டமில்லாமல் பெருமையை இல்லத்து மாடுகளுக்கு ஜானகி வழங்கினாலும் க்கடி அகிலாவிடம் 'பால் மிஞ்சி இருக்கு கோவா ம்ச்சி குலாப்ஜாமுனோ, இல்லே லவங்க லதிகாவோ ண்ணிடு,' என்று ஏவ மட்டும் தவறியதில்லை.

வழக்கமாய் ஒரு மணி, இரண்டு மணி நேரங்களில் த்து விடும் காரியம் இன்று அனுமார் வால்போல்

நீண்டு கொண்டே போனதற்குக் காரணம் இருக்கவே செய்தது. அன்றைக்கு உஷா தன் சக இன்னர் வீல் க்ளப் மெம்பர்களுக்கு வீட்டில் பார்ட்டி கொடுக்கப்போகிறாள். முதல் முறையாக அளிக்கும் பார்ட்டி... தடபுடலாய் இருக்காவிட்டால் எப்படி? ஒரு வாரத்திற்கு முன்பே ஜானகியோடு உட்கார்ந்து லிஸ்ட் போட்டாள் உஷா. மொத்தம் முப்பது அங்கத்தினர்கள். ஒரு ஸ்வீட், ஒரு காரம், மலைப்பழம் காபி என்றாள் உஷா.

'நன்னா இருக்கு? இது எப்படி போதும்? ஜட்ஜ் மாமி, பெரிய பண்ணை சாந்தா மாமி, அவ மாட்டுப் பொண் ராஜீவி, சகுந்தலானு ஊர் பெரிய மனுஷாளாத்து பொம்பளைகளெல்லாரும் இன்னர் வீல் க்ளப் மெம்பர்; அவாளைக் கூப்பிட்டுட்டு இப்படிக் கொடுத்தா சிரிப்பா. நான் சொல்றேன் கேளு. இரண்டு ஸ்வீட், இரண்டு காரம், பழம், ஐஸ் க்ரீம், காபி... அப்புறம் வீட்டுக்கு புறப்படறச்சே பிளாஸ்டிக் பையிலே தேங்காய் வெத்தலை பாக்கு...என்ன?' ஜானகி ஒரு குட்டி கல்யாணத்துக்குண்டான பூரிப்புகளோடு பேசினாள்.

உஷா திருச்சியோடு வந்துவிட்ட இந்த ஆறு மாச காலத்தில் தான் அந்த வீட்டில் எத்தனை மாற்றங்கள்!

வீட்டில் மனிதர்கள் இருக்கிறது தெரியாமல் இருந்தது போய் மாடியில் எந்நேரமும் ரேடியோ க்ராம் அல்லது ஸ்டீரியோ டேப் பாடியது. வாய் ஓயாமல் அடிக்கும் போன். உஷாவைக் கூப்பிட்டு மணிக்கணக்கில் பேசும் புது சிநேகிதிகள். சென்னையிலிருந்து பேரனை பார்க்கணும் போல இருக்கு என்று காலை விமானத்தில் வந்துவிட்டு மாலையில் ஊருக்குத் திரும்பிவிடும் உஷாவின் பிறந்தகத்து மனிதர்கள்; திரும்பிப் பார்த்தால், 'அம்மா அனுப்பினாங்க, ஐயா அனுப்பினாங்க' என்று குரல் கொடுத்துக் கொண்டு வந்து நிற்கும் உஷா வீட்டு



கம்பெனி ஆட்கள்; அவர்களும் சும்மாவா வருவார்கள்? 'காஷ்மீரிலிருந்து நாலு க்ரேட் ஜூஸ் ஆப்பிள் வந்ததம்மா... இரண்டு பெட்டிகளை ஐயா உங்ககிட்டே கொடுத்துட்டு வரச் சொன்னார்' என்பான் ஒருவன்.

'மாம்பழ சீஸன்; பம்பாயிலிருந்து அம்மா அல்பான்ஸோ வரவழிச்சு கொடுத்தனுப்பியிருக்காங்க' என்பான் இன்னொருவன்.

எல்லாம் பெட்டி, கூடை கணக்கில்தான் வரும். ஒன்று இரண்டு என்று எதுவும் உதிரியாய் வந்து யாரும் பார்க்கவில்லை.

ஸ்பெயின் பாதாம் பருப்பு, அமெரிக்கன் ஜார்ஜெட் புடவை, இங்கிலாந்து ஃபேஸ் க்ரீம், பாரிஸ் செண்ட் என்று நாளுக்கொரு பரிசு உஷாவின் பிறந்தகத்திலிருந்து வருவது முதலில் இவர்களுக்கு ஆச்சரியமாய் இருந்தாலும், விரைவிலேயே பழகிப் போனது.

தினமும் சென்னையிலிருந்து எஸ். டி. டி. கால் வந்துவிடும்.

"அரவிந்துக்கு நேற்று ஜலதோஷம் என்றாயே தேவலையா?'

'உன் லேடீஸ் க்ளப் பங்க்ஷன் நன்றாக நடந்ததா?'

'ராஜாவின் ஃபாக்டரி கட்டிட வேலை எந்த மட்டில் இருக்கு?'

'நாளைக்கு நம்ப சபாவில் அருமையான ட்ராமா... வந்துவிட்டுப் போயேன்...'

'உன் சிநேகிதி ரமாவுக்கு பிள்ளை பிறந்திருக்கு... எப்ப பார்க்க வரப்போறே?'

இப்படி ஒரு வரி லெட்டரில் எழுதிக் கேட்கக் கூடிய விஷயங்களையெல்லாம் போனில் பேசுவதையே உஷாவின்

பெற்றோர் வழக்கமாகக் கொண்டிருந்தது குறித்து ஜானகிக்கு ஏகப் பெருமை.

பின்னே, பெரிய இடம் என்றால் பெரிய இடம்தான் இல்லியோ ?

வந்து செட்டில் ஆக உஷா, ராஜாவுக்கு இரண்டு மாசங்களுக்கும் மேலேயே பிடித்தது. மாடி ஹாலும் ஜானகி அகிலாவைக் கொண்டு ஒழித்து வைத்திருந்ததில் உஷாவுக்கு திருப்தி இல்லை.

சென்னையிலிருந்த இன்டீரியர் டெகரேட்டருடன் தொடர்பு கொண்டு, ஆட்களை வரவழைத்தாள்.

லாரியில் சாமான்களோடு வந்திறங்கினவர்கள் மாடி அறைகளில் அழகான வால் பேப்பர்களை ஒட்டினார்கள், கண்ணாடி சர விளக்குகளைத் தொங்கவிட்டார்கள் இரண்டு அறைகளில் ஏ.ஸி. மெஷின்களை மாட்டினார்கள். கார்பெட் விரித்தார்கள். உஷாவிடம் ஏற்கனவே இருந்த ரேடியோ க்ராம், ஸ்டீரியோ டேப் ரெகார்டர், ஸோபா செட் வகையறாக்களையும், இன்னும் பச்சை க்ரோடன்ஸ் செடி தொட்டிகளையும் கொண்டு மாடியை பதினைந்து நாட்களில் மாற்றி விட்டார்கள்.

சலவைக் கல் போட்டு இழைத்திருந்த பங்களா பளபளவென்று மாறித்தான் போனது. பாத்டப், ஹாண்ட் ஷவர், மின்விசிறி என்று பாத்ரூம் கூட சினிமா செட் மாதிரி மினுமினுத்ததைக் கண்டு அகிலா பிரமித்துப் போனாள்.

மந்திரவாதி ஒருவன் கண்மூடித் திறப்பதற்குள் இந்திரபுரியை உண்டு பண்ணி விட்ட மாதிரி என்ன இதெல்லாம்? மாடிக்கு மட்டும் ஐம்பதாயிரம் ரூபாய் செலவானது. அத்தனையும் உஷாவின் பெற்றோர் அளித்த பணம்.



“எங்க பெண்ணுக்குக் கல்யாணம் ஆன உடனேயே வீடு செட்டில் பண்ணறதுக்காக இந்தப் பணத்தை செலவழிக்க நாங்க ரெடியா இருந்தோம். 'வருஷா வருஷம் டிரான்ஸ்பர் ஆகிற வேலை. எதுக்காக வீண் செலவுன்னு' ராஜா தடுத்துட்டார். அதனாலே இப்ப இந்த செலவுகளெல்லாம் எங்களுடையதாய் இருக்கிறதுதான் நியாயம்.” உஷாவின் அப்பா இரண்டாம் பேச்சுக்கு இடம் இல்லாமல் தீர்மானமாய் சொல்லி விட்டார்.

“மாடி மட்டும் புதுசா இருக்க வேண்டாம். கீழேயும் டிராயிங் ஹால், முன் வராண்டாவை கொஞ்சம் ரீடெகரேட் பண்ணலாமா, அண்ணா ?” ஸ்ரீதரனிடம் வெளிப்படையாக உஷா கேட்டபோது உடனுக்குடன் அவன் சம்மதித்து விட்டான்.

இப்போது வரவேற்பு அறை கர்ட்டன், ஸோபா செட், கார்ப்பெட் என்று புது அலங்காரங்களோடு மின்னுவதும் உஷாவால்தான். “இந்த ஹாட் வெதர்லே எப்படி ஏ.ஸி. இல்லாம தூங்கறேள்? யூ நீட் கம்ஃபர்ட்... யு மஸ்ட் ஏ.ஸி. யுவர் ரூம்” என்று பேசி ஸ்ரீதரனின் அறைக்கு ஏ.ஸி. பொருத்த வைத்ததும் உஷாதான். கீழ் செலவுகளெல்லாம் ஸ்ரீதரனுடையது.

முதல் நாள் ஏ.ஸி.யின் ஜிலுஜிலுப்பில் கணவனோடு அகிலா தூங்க வந்தபோது, “உஷா ரொம்ப கெட்டிக்காரி. என்ன அகிலா? மாடியை எப்படி மாத்திட்டா பாரேன்? காலேஜிலே இது பத்தியெல்லாம் படிச்சிருக்காளாம்! சொன்னா... விஷய ஞானத்தோட பேசறா... ஷி ஈஸ் வெரி க்ளெவர்” என்று ஸ்ரீதரன் வாய்விட்டுப் பாராட்டியதை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் சின்னதாய் புன்னகைத்த அகிலா அந்த அறையின் குளிர் தனக்கு தாங்க முடியாத அளவுக்கு இருப்பதை வெளியில் சொல்லவில்லை.

மாடி வேலை முடிந்து திருப்திகரமாய் செட்டில் ஆன கையோடு, வெளி விவகாரங்களில் தன் கவனத்தைத் திருப்பினாள் உஷா. சுபாவத்தில் கலகலப்பான அவளுக்குப் புது ஊர், புது சிநேகிதம் என்ற சங்கடங்கள் எல்லாம் துப்புரவாய் இல்லை. லேடீஸ் கிளப் மெம்பர் ஆனாள். அதன் நடவடிக்கைகளில் தன்னை முழுசாய் ஈடுபடுத்திக் கொள்வதும் இயல்பாக வந்தது. ராஜா ரோட்டரி கிளப் மெம்பர் ஆனதும் அதன் பெண்கள் விங்கான இன்னர் வீலில் உஷா அங்கத்தினர் ஆனதும் தொடர்ந்தது.

ஆரம்பத்தில் தான் ரோட்டரிக் கிளப்பில் சுவாரஸ்யத்துடன் கலந்து கொண்ட சமயத்தில் அகிலாவை வற்புறுத்தி இன்னர் வீலில் சேர்த்தது என்னமோ நிஜம் தான். ஆனால் அவள் அதில் நாட்டம் இல்லாமல் ஒப்புக்காக வந்து போவதைக் கண்ட ஸ்ரீதரன் பிற்பாடு அவளை கட்டாயப்படுத்தி அழைப்பதை விட்டு விட்டான்.

அகிலாவுக்கு கிளப்புக்குப் போய் பழக்கமா, இல்லை பெரிய மனிதர்களோடு சிரித்துப் பேசிப் பழகிப் பழக்கமா? ஒன்றும் இல்லை. இயற்கையாய் உண்டான நாணத்தை ஒதுக்கி வைத்துவிட்டு கணவனின் எதிர்பார்ப்பின்படி நடக்க அவள் ஆசைப்பட்டாலும் 'வீட்டோட இருக்க வேண்டிய பெண்ணுக்கு கிளப்பும் மண்ணாங்கட்டியும் எதற்கு?' என்ற ஜானகியின் முணுமுணுப்பை மீற தைரியம் இல்லாததால் வீட்டில் தங்கத் தொடங்கினாள்.

இப்போ உஷா இன்னர் வீல் கிளப் மெம்பர் ஆனதில் யாருக்கு மகிழ்ச்சியோ இல்லையோ, ஸ்ரீதரனுக்கு ரொம்ப சந்தோஷம்.

ரோட்டரி கிளப்பில் நாலு ஆண்கள் கூடினால் உஷாவின் பேச்சுத் திறன் பற்றியும், கூட்டங்களில் பங்கெடுத்து



...தை நிர்வகிக்கும் பாங்கு பற்றியும் நிறையப் பேசுகிறார்களாம். 'வாட் எ ஸ்மார்ட் வுமன்' என்கிறார்களாம். ஸ்ரீதரன் வாய் ஓயாமல் உஷாவைப் புகழ்ந்தான்.

அதுவும் போன மாசம், ஒரு சேரிடி உஷா நடத்தி, ...ற்கு சென்னையிலிருந்து அப்பாவின் உதவியுடன் ...ரபல சினிமா நட்சத்திரங்களை வரவழைத்து ஸ்டார் ...ட் நடத்தி இருபதாயிரம் ரூபாய் வசூல் செய்த பிறகு ...ஷாவின் பெருமை எங்கும் கொடி கட்டிப் பறக்கிறதாம்!

வடக்கே இருந்தபோது தெரியாத, புரியாத உஷா...ன் திறமைகள் பிறந்தகத்தின் செல்வாக்குகள், இப்போது திருச்சிக்கு வந்து விட்டதில் பளிச்சென்று ...ஜொலிக்கின்றன என்றுதான் சொல்லவேண்டும்.

கல்யாணமான உடனே வடக்கே போய் விட்டார்கள். அப்புறம் இரண்டு வருஷத்தில் சந்தித்தது ...ன்று முறைகள் இருந்தால் அதிகம். நாலு நாட்கள் ...ந்து தங்கிவிட்டு அவதி அவதியென்று ஓடும் சமயத்தில் ...த்தனை புத்திசாலித்தனத்தை வெளிகாட்ட முடியும்? ...தற்குள் பிள்ளை வேறு. ஆக, தூரத்தில் இருந்தபோது ...ணக்கார, படித்த அழகான மாட்டுப் பெண் என்று ...ட்டும் எல்லாரையும் நினைக்க வைத்த உஷா கிட்டத்...தில் வந்த பிறகு தன் பிரகாசத்தினால் ஒருவர் விடாமல் ...பிரமிக்க வைத்தது வாஸ்தவம்தான்.

ஒளி மட்டும்தான் இருக்குமா இருட்டு இருக்காதா?

ஏன் இல்லை? வேண்டிய அளவுக்கு இருந்தது. சர்...ரென்று எழும் முன் கோபம், சள்ளென்று வந்து விழும் வார்த்தைகள். மனசு இருந்தால் பேசுவது, இல்லாவிட்டால் 'ஐம் நாட் இன் எ மூட்' என்று பேசி படுக்கை அறைக்குச் சென்று படுப்பது, பிறருக்குத் தன் செய்கையால் அசௌகரியம் உண்டாகிறதா என்று நின்று யோசிக்காதது என்று நிறைய இருக்கவே செய்தன.

ஆனால் திலவிப்பில் மயங்கி இருந்த கண்களும், மனங்களும் இவைகளைக் குறைகளாக உணர மறந்ததால் எல்லாருக்கும் உஷா ரொம்ப உயர்வாகத்தான் இருந்து வந்தாள்.

மேல்நாட்டுப் பாணியில் சின்ன வயசு முதல் கொண்டே வளர்க்கப்பட்ட பெண் என்பதை அறிந்திருந்ததால் மாடியில் கவுன் கோட்டுடன் உஷா வளைய வருவதையும் சென்னைக்குச் செல்லும்போது ஸ்லீவ் லெஸ் ப்ளவுஸ் போட்டுக் கொள்வதையும் யாரும் வம்பளக்க முற்படவில்லை.

திருச்சியில் வெளியில் போகும்போது நன்றாக உடுத்திக் கொண்டு போகிறாள்! சென்னையிலும் மற்ற இடங்களிலும் அவள் எப்படி இருந்தால் என்ன? அவள் பாடு, அவள் புருஷன் பாடு. பெரிய இடத்துப் பெண்ணை குத்தம் சொல்வது தப்பு என்று ஜானகி தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டு விட்டாள்.

நீச்சல் குளத்தில் குளித்தும், டென்னிஸ் கோர்ட்டில் மாலையில் டென்னிஸ் விளையாடியும் பழக்கப்பட்டிருந்த உஷாவுக்கு தினம் காலையில் வாக்கிங் போவது பெரிய பயிற்சியாகப் படாததால் ஒருநாள் இரவு சாப்பாட்டு நேரத்தில் தன் எண்ணத்தை வெளியிட்டாள்.

ஸ்ரீகரன் கடையிலிருந்தும், ராஜா, உஷா வெளியிலிருந்தும் வந்த பிறகு ஒன்றாக அவர்களை டேபிளில் அமர்த்தி அகிலாதான் பரிமாறுவது வழக்கம்.

முதல் நாள் இப்படிச் செய்த போது "நீங்களும் உக்காருங்கோ, மன்னி அம்மணி பரிமாறட்டும்" என்று ராஜா சொல்லவே செய்தான்.

"இல்லே அவ அப்புறமா என்னோடு சாப்பிடுவா. நீங்க சாப்பிடுங்கோ" என்று ஜானகி மறுத்துவிட்டாள்.



ஜானகி மூத்த மாட்டுப் பெண்ணை ஒரு தினுசாயும், இளையவளை ஒரு தினுசாயும் நடத்துவது எல்லாருக்கும் நன்றாய் புரிந்த விஷயம்தான். ஆனால், ஏனோ ஸ்ரீகரன் உட்பட இது குறித்து வாயைத் திறந்து யாரும் எதும் பேசியதில்லை.

'உஷா வளர்ந்த விதம் வேறு. அகிலா வளர்ந்த விதம் வேறு. ஆரம்பத்திலிருந்தே அம்மாவுக்கு அடங்கின மருமகளா அகிலா இருந்துட்டா. உஷா அப்படி இல்லை. அகிலாவுக்கு உலக அனுபவம் போதாது. உஷா பத்துப் பேருக்குச் சொல்லிக் கொடுக்கக்கூடிய கெட்டிக்காரி. எப்படி ஒரே தினுசில் நடத்த முடியும்' என்ற விகல்பம் இல்லாத கோணத்தில் ஸ்ரீகரனும்.

'மன்னியை அடக்கி வைச்சிருக்கிறது அம்மாவுக்கு பிடிச்சிருக்கு. இப்படி அடங்கி இருக்கிறது மன்னிக்கு சரியா படறது. ஸோ, வொய் ஷுட் வீ பாதர் ஆர் இன்டர்ஃபியர்?' என்ற விட்டேத்தியான மனப்பான்மையில் உஷாவும் ராஜாவும் இருந்து விட்டதால் எல்லோருக்கும் எல்லாமே சரியாகப் பட்டது.

அன்று இரவு சாப்பிடும் போது "டென்னிஸ் ஆடாம ரொம்ப கஷ்டமாய் இருக்குன்னா, க்ளப்லே ஆடலாம்னா, அட்மாஸ்ஃபியர் இஸ் நாட் டீஸன்ட் இனஃப். ஸோ வொய் காண்ட் வீ ஹாவ் அவர் ஓன் கோர்ட் ஹியர் அட்ஹோம்?" என்றாள் தடக்கென்று உஷா.

டென்னிஸ் ஆடவேண்டும் என்பது ஸ்ரீகரனுக்குள் எப்போதோ உண்டான சின்ன வயசு ஆசை. தன் இயலாமையால் வெளியில் சென்று ஆட வெட்கப்பட்டு அவன் அதை வளர்த்துக் கொண்டதில்லை.

வீட்டில் டென்னிஸ் கோர்ட் அமைத்தால் நான் கூட ஆடலாமே! இது ஏன் எனக்குத்தோணலே இல்லை!

யாருக்கும் உதிக்காத யோசனையை உஷா அதிபுத்திசாலியாய் சொல்லி விட்டாள் என்று நினைப்பு தோன்ற கண்களை விரித்து அவளைப் பார்த்தான் ஸ்ரீதரன். "வொய் நாட்? ஷ்யூர்."

மறுநாளே தோட்டத்தில் இடம் தேர்ந்தெடுத்தார்கள். மரங்களை வெட்டி, தரையை சமப்படுத்தி கோர்ட் போடப்படும் வேலை துவங்கியது.

வீட்டில் டென்னிஸ் கோர்ட் வரப்போவது குறித்து உஷாவுக்கு ரொம்ப சந்தோஷம். பிரெண்டுகளிடம் சொன்ன போது, 'வாட் எ லவ்லி ஐடியா. ரெடியானதும் சொல். விளையாட வந்து விடுகிறோம்' என்று சொல்லி இருக்கிறார்களாம்!

உஷா வந்த இந்த ஆறு மாதத்தில் புதுசாய் உண்டாகி, அதிகரித்து விட்ட பல பழக்கங்களில் நைட் ஷோவுக்கு போவதும் ஒன்று.

உஷா ராஜா இருவருக்குமே தமிழ்ப்படங்கள் என்றால் அத்தனை விருப்பம் இல்லை. ஒரு இங்கிலீஷ் விட மாட்டார்கள். ஹிந்தியை கொஞ்சம் சேர்த்துக் கொள்ளலாம்.

"நான் வரலை உஷா, இன்னிக்குக் கடையில் வேலை ஜாஸ்தி. நாளைக்கு ஆடிட்டர் கிட்ட போகணும். அதற்குள் கணக்கை சரிபார்க்கணும்," என்று ஸ்ரீதரன் சொன்னால் விடமாட்டாள்.

"நோ...நோ. யூ மஸ்ட் கம்... இது ரொம்ப நல்ல பிக்சர் அண்ணா. நாளைக்கு கார்த்தாலே நான் உங்ககூட உட்கார்ந்து கணக்கை டோட்டல் போட, ட்ரயல் பாலன்ஸ் பார்க்க உதவறேன்," என்று ஏதாவது சமாதானங்கள் சொல்லி அவனை கிளப்பி விடுவாள்.

முதல் இரண்டு, மூன்று முறைகள் அகிலாவும் அவர்களோடு உடன் சென்று வந்தாள். அப்புறம் பாஷை



புரியாததால் அவள் அவர்களோடு செல்லத் தயங்கினாள். "ஏன் மன்னி?" என்றாள் உஷா. அவள் வரவில்லை என்று சொன்ன முதல் முறை, 'லீவ் ஹர் உஷா, ஐ நோ தட் ஷி ஈஸ் ஃபைண்டிங் இட் டிபிகல்ட் டு அண்டர்ஸ்டாண்ட்' என்று ஸ்ரீதரன் சொன்ன பிறகு யாரும் அவளை வற்புறுத்தவில்லை.

வாஸ்தவம் தானே. சதா சர்வ காலம் ஆங்கிலத்தில் பேசுவதும், பேசுவதைப் புரிந்து கொள்வதும் அகிலாவுக்கு எப்படி சாத்தியமாகும்? இதன் காரணமாக ஸ்ரீதரன், உஷா, ராஜூவிடமிருந்து விலக விலக தன் தனிமையை ரொம்ப உணரத் தொடங்கினாள்; நின்று போய்விட்ட பாட்டை நினைத்து ஏங்கினாள்.

'சாவு நடந்த வீட்டில் பாட்டு வாத்தியாரும், பாட்டும் எதுக்கு?' என்று போன வருஷம் 'திரும்ப வாத்தியாரை வரச் சொல்லலாமா' என்று அகிலா மெல்ல வினவின போது ஜானகி சிடுசிடுத்தாள். அதோடு பேச்சு முடிந்தது.

மாடிக்குச் சென்று மதியத்தில் வாய்விட்டு தன் திருப்திக்காக அகிலா பாடுவதும், உஷா மாடியை ஆக்கிரமித்துக் கொண்ட பிறகு மறைந்து போனது.

தோட்டத்தில் ஜிம்மியோடு இருக்கும் போது பெரிசாய் எப்படிப் பாட முடியும்?

ஆலாபனை செய்து, ராகம் பாடுவது ஆட்கள் வேலையாய் இருக்கும் தோட்டத்தில் முடியுமா, என்ன? ஊஹூம் முடியாது.

'உட்கார்ந்து இரண்டு கீர்த்தனங்களைப் பாடும்மா, கேட்போம்' என்று யாராவது சொன்னால் தேவலை.

யார் அப்படி கேட்க இருக்கிறார்கள்? உஷா ராஜா இருவரும் கர்நாடக சங்கீதம் என்றால் முழமா, கிலோவா

என்பவர்கள். ஸ்ரீதருக்கு நேரம் கிடையாது. ஜாலிக்கு பசை கிடையாது. அப்புறம் வேறு யார்?

கைக்காரியமாய் இருக்கும் நாழிகையில் தன்னை அறியாமல் அகிலா முணுமுணுப்பது தான் இப்போதெல் லாம் அவள் பாடும் பாட்டு.

லவங்கலதிகாக்களை பொரித்து எடுத்து, சர்க்கரைப் பாகில் அமுக்கி எடுத்தபோது அகிலா தோடியில் அமிழ்ந்திருந்தாள். கற்பனையில் அடுக்கடுக்காய் ஸ்வரங்கள் வாய்விட்டு தலையை சற்றே அசைத்து, மனதில் பிரவாக மெடுக்கும் ராகத்தை வெளியில் கொட் டினால் எப்படி இருக்கும்?

தம்பூராவை மீட்டிக் கொண்டு, ஸ்வானுபாவத் தோடு பாடி எத்தனை மாசங்கள் ஆகிவிட்டன? இயலாமையால் எழுந்த ஆயாசத்தை சட்டென்று சுதாரித்துக் கொண்டு விரட்டினாள் அகிலா.

அடுப்படியில் நீண்ட நேரமாய் நின்றதில் உடம்பு ஜுரம் வந்த மாதிரி காய்ந்தது.

கடைசி லவங்க லதிகாவை எடுத்து வைத்து விட்டு பார்டிக்கு மற்ற அயிட்டங்கள் தயாரா என்று கடைசி பார்வை பார்த்தாள்.

லவங்க லதிகா, நேற்று கிளறின மைசூர்பாகு ரெடி. வெஜிடபிள் போண்டா, தயிர்வடை ரெடி. காபி கலக்க டிகாஷன், பால் ரெடி. ஐஸ் பெட்டியில் ஐஸ் க்ரீம் வாங்கி வந்து வைத்திருப்பது ரெடி. டைனிங் டேபிள் டைனிங் ஹாலை எட்டிப் பார்த்தாள். நேர்விசாய் வெள்ளை விரிப்பு போட்டு முப்பது பீங்கான் தட்டுகள், டம்ளர்கள், வகையறாக்களையும் மலர் கொத்து கிண்ணங்கள், நாப்கின்களையும் அழகாய் உஷா அலங்கரித்திருந்தாள்.



மணி என்ன? ஐந்தே கால். ஐந்தரைக்கு விருந்தினர் த் தொடங்கி விடுவர். போய்க் குளித்து, தயாரானால் யாக இருக்கும். ஹாலைக் கடந்து தங்கள் அறைக்குள் ழைந்த அகிலாவின் கண்களில் வாசல் வராந்தாவில் ஜமென்று தயாராய் இருந்த உஷா தெரிந்தாள். ர்டிகோவில் வந்து நின்ற காரிலிருந்து ஸ்ரீதரனும் னாவும் இறங்கிக் கொண்டிருந்தனர்.

சாதாரணமாய் மூன்று மணிக்கு கடைக்குப் னால் இரவு பத்து மணிக்கு வீடு திரும்பும் கணவன் று மாலையில் தம்பியுடன் வீட்டுக்கு வந்தது கிலாவுக்கு அதிசயமாய் பட்டது. உஷா வரச் சொல்லி ருக்கானா?

இரண்டு நிமிடங்களில் சிரித்துக் கொண்டே ஸ்ரீதரன் ள்ளே நுழைந்தான். வாசலில் நிறுத்தி உஷா செய்த லியினால் விரிந்த உதடுகள் நிமிர்ந்து அகிலாவைப் ர்த்த உடன் திடும்மென்று எரிச்சல் எழ கோபத்தில் ணிக்கொண்டன.

"உஷா மாதிரி எப்போதும் ஸ்மார்ட்டாய் இருக்க ண்டாம். கெட்டிக்காரியாய் பேச வேண்டாம். டென்னிஸ் விளையாட வேண்டாம். கொஞ்சம் பளிச்சுனு ரஸ் பண்ணிக்கக் கூடவா தெரியாது? எப்பப்பாரு ண்ணை வழிஞ்ச மூஞ்சியும், கசங்கின புடவையும் சே, கஸ்டிங்."

திருமணமான இத்தனை வருஷங்களில் மனசு புண் ம்படி ஸ்ரீதரன் பேசுவது இதுவே முதல் முறை தலால், என்னையா, என்னையா, சொல்கிறார்? று கேள்விகள் எழ ஒரு நிமிஷம் அப்படியே றைந்துப் போனாள் அகிலா.

## இருபத்து ஐந்து

நாலு நாட்களாகவே அகிலாவுக்கு உடம்பு சரி இல்லை தான். அக்னிக்குள் உட்கார வைத்த மாதிரி வயிற்றிலும், முதுகிலும் ஒரே எரிச்சல். தாங்க முடியாத வலி வேறு.

முதலில் இந்த எரிச்சல் தோன்றிய அன்று நாள் முழுவதும் அடுப்படியில் உட்கார்ந்து வலங்க வதிகா பண்ணினதில் உடம்பு சூடுகண்டு போயிருக்கும் என்றே தன்னை அகிலா சமாதானம் செய்து கொண்டாள்.

ஆனால் இரண்டாம் நாள் போய், மூன்றாம் நாளிலிருந்து எரிச்சலோடு. பொறுக்க முடியாத தினுசில் வலியும் சேர்ந்து கொள்ளவே 'என்ன இது' என்று யோசிக்கவே செய்தாள்.

அடுப்பு சூடு உஷ்ணம் என்றால் எரிச்சல் சரி; இந்த வலி எதனால்? ஒருவேளை சுளுக்கால் இருக்குமோ? ராத்திரி படுக்கும் போது இசகு பிசகாய புரண்டு விட்டேனோ? என்னையும் அறியாமல் கனமான சாமானை தூக்கியதில் மூச்சுப்பிடித்துக் கொண்டதா? அப்படி என்ன கனத்தை தூக்கினேன்? ம்ஹூம் ஒன்றும் இல்லையே!

பல்லைக் கடித்துக் கொண்டு அன்றைய பொழுதையும் தள்ளிய அகிலா மறு நாள் குளிக்கும்போது இடுப்பைச் சுற்றி, பட்டை போட்ட மாதிரி வலப்புறமாய் தோல் சிவந்திருப்பதைக் கண்டாள்.

பூச்சி கடியா? அதுதான் இப்படிச் சிவந்து, எரிச்சல், வலியைத் தருகிறதா? எதுவானாலும் மாலையில் கணவ



னிடம் இது பற்றி பேசலாம் என்று அவள் நினைத்திருந்தது நிறைவேறாதபடி பெரிய அமர்க்களம் ஒன்று நடந்து விட்டது.

அரவிந்தை தோட்டத்துக்கு எடுத்துக் கொண்டு போய் பராக்கு காட்டி சாப்பாடு ஊட்ட அகிலா முயன்ற போது விடாமல் குழந்தை 'ஜிம்மி... ஜிம்மி' என்று கெனல் பக்கம் கையை நீட்டி அழுததால் நாயிடம் போனாள் அகிலா.

தன்னிடம் கொஞ்சாமல் அரவிந்தை இவள் தூக்கி வைத்து சீராட்டுகிறாளே என்ற கோபமோ என்னமோ ஜிம்மி பொறாமைக் குரலில் குரைத்துத் தீர்த்தது.

ஜிம்மியின் குதியையும் கத்தலையும் வேடிக்கை பார்த்துக் கொண்டே அரவிந்த் சாப்பிட்டு முடிக்கவும், ஒரு நிமிஷம் அவனைத் தரையில் இறக்கி விட்டு விட்டு தழைந்திருந்த புடவை கொசுவத்தை அகிலா சரிசெய்து கொள்வதற்குள் நாலே எட்டில், நாயிடம் அரவிந்த் போய் விட்டான். போனவன் சும்மா இருக்கக் கூடாதோ? சற்றும் எதிர் பார்க்காத கணத்தில் கம்பி வழியாக கையை விட்டு புஸு" புஸு" என்று வளர்ந்திருந்த ஜிம்மியின் முடியை கொத்தாய் பிடித்து இழுத்து விட்டான்.

ஜிம்மியா விடும்? ஏற்கனவே கோபம்; இப்போது வலி வேறு. ஆக்ரோஷமாய் கத்திக் கொண்டு அரவிந்த் கையை கௌவுமுன் அகிலா ஜிம்மியென்று பாய்ந்து விட்டாள் என்றாலும் குழந்தையின் ரோஜாப்பூ உள்ளங்கையில் நாயின் பல் சின்னதாய் பட்டு, ரத்தமும் கசியத் தொடங்கியதும் பிடித்தது அனர்த்தம்.

'ஹோ !' என்று பெரிய தொண்டையில் அரவிந்த் அழவும், 'அரவிந்த், வாட் ஹேபண்ட்?' என்று மாடி பால்கனியிலிருந்து உஷா எட்டிப் பார்த்தாள். அப்புறம் 'விடிய விடிய அன்றைக்கு களேபரம்தான்.

'ஜிம்மிக்கு ஆன்டி ரேபிஸ் ஊசி குத்தி இருக்கிறது. பயப்பட ஒன்றுமே இல்லை' என்று அகிலா முனகலை யார் காதில் வாங்கினார்கள்?

கையே போய்விட்ட மாதிரி உஷாவும், க்ஷணமே பைத்தியம் பிடித்துவிட்ட மாதிரி ஜானகியும் புலம்ப, ராஜா ஃபாக்டரி சைட்டிலிருந்து வந்தவன் குழந்தையோடு டாக்டரிடம் ஓடினான்.

இன்ஜெக்ஷன், கையில் கட்டு என்று போட்டுக் கொண்டு பேரன் திரும்பியதைக் கண்டு ஜானகி மாய்ந்து தான் போனாள்.

"பீடை தரித்திரம்... இந்த சனியனுக்கு ஏனோ குழந்தையைக் கண்டா ஆகலை. வெளியே இருந்தவனை இது எம்பி கடிச்சிருக்கே. இதுக்கு பைத்தியம் இல்லாம வேறு என்ன? முதல்லே இதை ஒழிச்சுக்கட்டினாத்தான் நிம்மதி... மூதேவி... ஆங்காரம் பிடிச்ச தரித்திரம்..."

ஜிம்மி மேல் உண்டான கோபம் நொடியில் அகிலா பால் திரும்பியது என்பதை சொல்ல வேண்டுமா. என்ன? மாலையில் குழந்தை நன்றாய் விளையாடத் தொடங்கி உஷா லேடீஸ் க்ளப், ராஜா வெளியில் போன பிறகும் கூட மொணமொணவென்று ஜானகி வாய் ஓயாது திட்டிக் கொண்டே இருந்தாள். கொஞ்சம் ஓய்ந்தவுடன் கடையிலிருந்து ஸ்ரீதரன் வந்து சாப்பிட உட்கார்ந்த பிறகு மீண்டும் ஆரம்பித்து விட்டாள்.

இரவு படுக்க வந்த போது அம்மாவின் புகார்கள் தூண்டி விட்ட கோபத்தின் காரணமாய் "என்ன அகிலா இது. இந்த சனியன் ஏன் இப்படி குழந்தையைக் கடிச்சிடுத்து? நீ கிட்டத்தானே இருந்தே. கொஞ்சம் கவனமாய் இருக்கக் கூடாது? இந்த நாயாலே நாளைக்கு உஷா அப்பா அம்மாகிட்டே நமக்கு பொல்லாப்பு வந்தா நான் ரொம்ப பொல்லாதவனா ஆயிடுவேன் சொல்



...டேன்' என்று கறாராய் ஸ்ரீதரன் பேசியபோது ...கிலா வாயே திறக்கவில்லை.

இந்த கலாட்டாவில் தன் உடம்பு வலி பற்றியோ, ...ச்சல் பற்றியோ பேச அவள் மறந்துதான் போனாள்.

மேற்கொண்டு இரண்டு நாட்களில் இடுப்பில் பட்டையாய் தோன்றிய வேர்க்குருக்கள் சற்றே பெரிதான ...திரி அகிலாவுக்குத் தோன்றியது.

வேர்க்குருவா? அதுவும் இவ்வளவு பெரிதாவா? ...ந்தக் காலத்திலா? அப்படி என்ன கத்தரி வெயில் ...காளுத்துகிறதா என்ன? மழைக் காலத்தில் வேர்க்குரு ...ருமோ? பட்டை பட்டையாய் என்ன இது?

எரிச்சலும், வலியும் அதிகமாகி, குனிய முடியாமல், ...மிர முடியாமல் போய், கண்கள் வேதனையில் கலங்கத் தொடங்கின தான் அன்று இரவு கணவனிடம் ...மெல்லத் தன் பிரச்னையை சொன்னாள் அகிலா.

புடவையை விலக்கி, சட்டை பட்டனை சற்றே ...ழட்டி, விலா பக்கமாய் அகிலா காட்டின இடத்தைப் ...பார்த்த ஸ்ரீதரனுக்கு அருவருப்பு எழுந்தது.

"ஐயே இது என்ன அசிங்கம்? ஏதாவது ஸ்கின் ...ஸீஸோ என்னமோ! எத்தனை நாளா இருக்கு? வந்த ...டனே டாக்டர்கிட்ட போகாம, வாட் இஸ் திஸ் ...அகிலா?" அதட்டினவன் அம்மாவைக் கூப்பிட்டு ...காண்பித்தான். முதுகில், இடுப்பில் பரவலாய், கொடி ...போல சின்னச் சின்ன கொப்புளங்கள்.

"அடராமா! நீர் குளுவான மாதிரின்னா இருக்கு? ...நிறைய முத்து போட்டிருக்கே. ஆரம்பத்திலேயே ...சொல்லக் கூடாதோ? சின்னக் குழந்தை வளைய வர

வீட்டுலே ஜாக்கிரதையா இருக்க வேண்டாமோ?" ஐந்து நிமிஷத்தில் ஜானகி மூலம் ராஜா, உஷாவுக்கு விஷயம் போனது.

"அம்மைதான் நீர் குளுவான் மாதிரி இருக்கு" என்று ஜானகி அடித்துப் பேசவும் இனி என்ன செய்வது என்று யோசனை பண்ணினார்கள்.

"டாக்டரை கூப்பிடலாம்" என்றான் ராஜா.

"இதுக்கு எதுக்கு டாக்டர்? பத்து நாள் ஆனா தானா சரியாயிடும். அம்மன் வந்திருக்கிறப்போ டாக்டரைக் கூப்பிடறது தப்பு" தீர்மானமாய் பேசி விட்டாள் ஜானகி.

ஸ்ரீதரனோடு ஒரே அறையில் இருப்பது தெய்வ குத்தம் என்ற ஜானகி பின் கட்டில் ஸ்வாமி உள்ளின் அடுத்து இருந்த அறையில் உடம்பு சரியாகும் வரை அகிலா இருக்கட்டும் என்று முடிவெடுத்தாள்.

சாப்பாடு ஹாலிலிருந்து உள்ளே செல்லும் வழியில் பூஜை அறையைத் தாண்டி கொஞ்சம் ஒதுக்குப்புறமாய் ஒரு அறை உண்டு. வெளியூரிலிருந்து ஜானகியின் உறவு மனிதர்கள், ஆசாரமானவர்கள், வந்தால் மற்ற வீட்டு மனுஷர்களுடன் கலக்காமல் தனியாக இருக்கவேண்டி அந்த அறையில் தங்குவார்கள்.

சுமாரான பெரிய அறை. தோட்டத்தைப் பார்த்து ஜன்னல்கள். காற்று நன்றாய் வரும். கட்டில், மெத்தை, ஃபேன், பக்கத்தில் பாத்ரூம் என்று ஏற்பாடாய் இருந்த அந்த அறையில் உடனடியாய் அகிலா படுக்க வைக்கப் பட்டாள். வாசற்படியில் வேப்பிலை கொத்து செருகப் பட்டது.

அடுத்து வந்த இரண்டு நாட்களில் கொப்பளங்கள் இன்னும் பெரியதாய் மொச்சைக் கொட்டை சைஸில்



மாதிரி. வலி தாள முடியாமல் போகவே தயிர் சாதம் கொண்டு வந்த அம்மணியிடம் 'ரொம்ப வலிக்கிறது அம்மணி எரிச்சல் தாங்கலை' என்று ஓயாது அகிலா புலம்ப முற்பட்டாள்.

வேலைக்காரி பொன்னம்மா அறையில் தங்கி மெள்ள இதமாய் வேப்பிலையால் உடம்பை வருடிக் கொடுத்தது அவளுக்குப் போதவில்லை.

ஆனால் இத்தனை வலி, வேதனையிலும் கூட அம்மை கண்ட மனைவியைப் பார்க்கக் கூடாது என்று அம்மா தடை விதித்து விட்டதால் கணவன் வந்து தன்னைப் பார்க்காததை அகிலா தவறாக எண்ணவில்லை. எங்கே குழந்தைக்கு ஒட்டிக்கொள்ளுமோ என்ற பயத்தில் உஷாவும், ராஜாவும் கூட இவள் அறைக்குள் எட்டிப் பார்த்து 'எப்படி இருக்கு மன்னி?' என்று கேட்காததையும் அகிலா மனசில் தப்பாக நினைக்கவில்லை.

அவரவர்களுக்கு ஆயிரம் வேலை. என்னை வந்து பார்ப்பதற்கும், பேசுவதற்கும் ஏது நேரம்? பாவம் என்றே நினைத்துக் கொண்டவளால் மறுநாள் காரணமில்லாமல் ஜுரம் கண்டு வேதனை கூடியதைத்தான் தாங்க முடியாமல் போயிற்று

அகிலாவின் ஜிவுஜிவுத்த முகத்தையும், முத்து முத்தாய் பளபளத்த கொப்புளங்களையும் பார்த்து பயந்து போன ஜானகி தங்கள் குடும்ப டாக்டரை வரச் சொல்லி போன் செய்தாள்.

"நீர் குளுவான் போட்டு இருக்குனு இருந்தேன் டாக்டர். தனியா படுக்க வைச்சு, பத்தியமா சாப்பாடு போடறேன். இவ கணக்குப்படி பார்த்தா எட்டு நாள் ஆறது. ஆனாலும் கொப்புளங்கள் காய காணோமே. உடம்பு பூரா அம்மை போடாமே, இடுப்பிலே மட்டும் இருக்கே, இது அதிசயமாக இருக்கு!" டாக்டர்

அகிலாவை பரிசோதித்த நேரத்தில் அறைக்கு வெளியில் நின்று ஜானகி பேசினாள்.

விவரங்களைக் கேட்டு அகிலாவின் விலா தோள் பட்டையை பார்த்த டாக்டர் "இது நீர்க்கொளுவான் இல்லேம்மா, ஹெர்பிஸ்...இதுவும் அம்மை மாதிரிதான். வைரஸ் டிஸீஸ். முதுகுத் தண்டின் நரம்பை கிருமி தாக்குவதால், அந்த நரம்பு எங்கெல்லாம் ஓடறதோ அங்கே எல்லாம் இந்தக் கொப்பளங்கள் தோணும்...வலி; எரிச்சல் ஜாஸ்தியாய் இருக்கும்... எரிச்சல் கண்ட அன்னிக்கே வைத்தியம் பார்த்திருந்தா இத்தனை நாள் குணமாயிருக்கும். இப்போ வியாதியை வளரவிட்டாச்சு, அதனாலே இன்னும் பத்து நாள் ஆகும் குணமாக. ஆனால் பயப்பட ஒண்ணும் இல்லை...வலியைப் பொறுத்துக்கணும், அதுதான் பெரிய விஷயம்'' என்று நீளமாய் விளக்கி மருந்துகளை எழுதிக் கொடுத்தார்.

ஆம்பிஸலின் மாத்திரைகள் ஒரு நாளைக்கு மூன்று, வலி குறைய அனால்ஜின், பி. 12, இன்ஜெக்ஷன் இவைகளைத் தவிர இரவு உபாதையில்லாமல் ஓரளவுக்காவது தூங்க காம்போஸ் மாத்திரை.

அகிலாவுக்கு வந்திருப்பதை ஹெர்பிஸ் என்று கேள்விப்பட்டதும் உஷா அதிர்ந்து போனாள். தான் நடுங்கியது போதாது என்று 'ஐயோ ஹெர்பிஸ்ஸா? ரொம்ப பயங்கரமானதாச்சே! ஆக்ராலே ஒரு மனுஷனுக்கு வந்து வலியை தாங்க முடியாம தற்கொலை பண்ணிண்டான். பார்க்க ரொம்ப அருவருப்பாய் இருக்கும்' என்று முகத்தை சுளிக்கிக் கொண்டு பேசி மற்றவர்களையும் அதிரச் செய்தாள்.

ஹெர்பிஸ் என்பதற்கு தமிழில் அக்கி என்று கணேசன் மொழி பெயர்த்துச் சொன்னார். தஞ்சாவூர் மாரியம்மனுக்கும் ஜானகி பிரார்த்தித்துக் கொண்டாலும் அகிலாவுக்கு பயங்கர தொத்து நோய் வந்திருக்



கிறது என்று உஷா கொடுத்த பீதியில் கூடுமானவரை யாரையும் அந்த அறைப்பக்கமே போக விடாமல் தடுத்து விட்டாள்.

ஆகாரத்தை அம்மணி கொணர்ந்து வாசலில் வைப்பாள். பொன்னம்மா அகிலாவுடன் அறையில் தங்கி ஆவன செய்தாள்.

எப்போதாவது அத்தி பூத்தாற்போல வெளியே நின்று 'எப்படி இருக்கே? எங்கேயிருந்து இதைப் பிடிச்சிண்டாயோ! என் தலை எழுத்து?' என்று புலம்பி விட்டு ஜானகி போவதோடு சரி.

அகிலாவுக்கு ஹெர்பிஸ் என்று டாக்டர் கண்டு பிடித்து மருந்து கொடுக்கத் தொடங்கி நாட்கள் ஐந்து ஆகியும் ஜுரம் குறையாமல் இருந்ததோடு அல்லாமல், நாளுக்கு நாள் 102 103 என்று ஏறிக்கொண்டே போனது அவளின் போதாத காலமாய்த்தான் இருக்க வேண்டும்

புதுசாய் மண்டையை பிளக்கும் தலைவலி கிளம்பியது. உடம்புவலி, எரிச்சல், ஜுரம், தலைவலி என்று எல்லாம் சேர்ந்து கொண்டதில் அகிலா தவித்துப் போனாள்.

தயிர்சாதம், மோர்சாதம், காபி என்று உட்கொண்டு வந்த உணவு கூட பிடிக்காமல் போனதும் இது சாதாரண ஜுரம் இல்லை, ரத்த பரிசோதனை செய்யவேண்டும் என்று டாக்டர் தீர்மானித்தார். சரியாய் நாலாம் நாள் வைடாலின் டெஸ்ட் முடிவுகள் வந்தபோது அகிலாவுக்கு டைபாய்ட் ஜுரம் கண்டிருப்பது தெளிவானது.

ஹெர்பிஸுக்கு செய்த வைத்தியத்தை மாற்றி க்ளோரோ மைஸடின், பெட்னிஸால் மாத்திரைகளை கொடுத்தார் டாக்டர்.

சுத்தமாய் அடுத்த சில நாட்களுக்கு வெறும் நீர் ஆகாரம் தான் கொடுக்க வேண்டும் என்று டாக்டர் சொன்னதின் பேரில் பழரசம், ஹார்லிக்ஸ், ப்ரோடினெக்ஸ், பால் என்று திரவமாய் மட்டும் அருந்தியதில் அகிலாவின் உடம்பு பாதியாய் தேய்ந்து போனது.

ஒருவாரத்தில், ஜுரம் குறைந்த பிறகு இட்லி, ரொட்டி, தயிர்சாதம் இவைகளை கொஞ்சமாய் சாப்பிட அனுமதித்தார் டாக்டர்.

ஹெர்பிஸ், தொடர்ந்து டைபாய்ட் என்று இரண்டும் பெரிய கொத்து வியாதிகளாய் வந்து விட்டதால் மூன்றிலிருந்து நான்கு வாரங்கள் கண்டிப்பாய் படுக்கையை விட்டு எழுந்திருக்கக் கூடாது என்று டாக்டர் உத்தரவிட்டு விட்டார்.

முதல் மூன்று வாரங்களுக்கு வியாதியின் உபாதை மிகவும் அதிகமாக இருந்ததன் காரணமாய் தன்னை சுற்றி நடப்பது எதையும் கவனிக்க முடியாத அகிலாவுக்கு வலி, எரிச்சல் குறைந்து ஹெர்பிஸ் கொப்பளங்கள் பொறுக்கு தட்டத் தொடங்கி, ஜுரமும் நன்றாய் கட்டுப்பட்ட பிறகு சின்ன சின்ன விஷயங்களெல்லாம் பூதாகாரமாய் மனசில் உறுத்தத் தொடங்கின. உடம்பில் பலமில்லை. மனசிலும் தெம்பில்லை.

போதாத குறைக்கு சாதம் கொண்டு வரும் அம்மணியும், இவளோட சதா இருக்கும் பொன்னம்மாவும் அவ்வப்போது பேசிய வார்த்தைகள் அகிலாவுக்கு புது அர்த்தங்களைக் கொடுக்கத் தொடங்கின.

'ஆயிரம் தான் இருக்கட்டும் ; அதுக்காக இரண்டு வேளை எட்டி பார்க்கக் கூடவா ஒருத்திக்கு முடியாது? அப்படியா வியாதி ஒட்டிண்டுடும்? இப்போ... நாங்க இல்லையோ? மாமியார் மாட்டுப் பொண்ணுனு பந்த பாசம் இல்லேடிம்மா,' என்று முதலில் லேசாய் அம்மணி



பொன்னம்மாவிடம் முணுமுணுத்தபோது அகிலா பதில் ஏதும் சொல்லா விட்டாலும் தொடர்ந்து அந்தப் பேச்சுக்களை கேட்டபோது ஒருநாள் தாளமாட்டாமல் "விடு அம்மணி. வந்து பார்த்தாத்தானா? மனசிலே அம்மா கவலைப் படறது, எனக்கு நன்னா தெரியும்... அம்மாக்கு ஆயிரம் வேலை... பாவம்.. நான் வேற இப்படி நாள் கணக்காய் படுத்துட்டேன்" என்று ஜமான வருத்தத்துடன் பேசி அவர்களை அடக்கவே செய்தாள்!

ஆனால் உடம்பில், மனசில் தெம்பு குறைய, குறைய பொன்னம்மாவின் பேச்சும், அம்மணியின் புகாரும் நெஞ்சில் தங்கி விட்டு மனுஷா யாரும் இரண்டு நிமிஷம் வந்து பார்க்க மாட்டேன் என்கிறார்களே என்ற ஏக்கம் தோன்றத் தொடங்கியது நிஜம்தான்.

அகிலா குழைய குழைய அம்மணியின் பேச்சு அதிகமானது "வித்யா வந்திருக்கா. தெரியுமா அகிலா? ன்னே மன்னி. மன்னினு உன்னை பூனைக்குட்டி மாட்டமா சுத்துவா. இப்போ வந்து எப்படி இருக்கேன்னு கேட்க தோணலியே அவளுக்கு!" என்றாள் ஒரு நாள்.

'உஷா பெரிய பணக்கார ஆத்து பொண்ணா இருக்கட்டும், ஆனா வியாதி வெக்கைங்கறது எல்லாருக்கும் பொன்னு தானே! என்னமோ உனக்கு வந்திருக்கிறது கா பயங்கர வியாதின்னு எதுக்காக அப்படி சதா ல காலமும் முகத்தை சுளுக்கிக்கணும்!" என்றாள் அடுத்த நாள்.

"தங்க ஆம்படையான்தான் ஆகட்டும் அகிலா, கிட்ட நின்னு எப்படி இருக்கேம்மானு கேட்டா என்ன தப்பு? இப்பத்தான் ஜுரம் இறங்கிச் சாய ஆரம்பிச்சுத்தே, தள்ளி நின்னு இரண்டு வார்த்தை பேசினா என்ன தப்பு? நீ அவனை நடக்க வைக்க கொஞ்சமாவா

பண்ணி இருக்கே? அதெல்லாம் நினைச்சுப் பார்க்கணும் அகிலா," என்றான் இன்னொரு நாள்.

அடிக்கிற அடியில் அம்மிக் கல்லே நகரும் என்பார்கள். அகிலா கேவலம் சாதாரண பெண் ஜென்மம்தானே! இயல்பான ஆசாபாசங்கள் கொண்ட சாதாரணப் பெண் தானே?

அம்மணி சொல்வதாலும், பிற்பாடு பொன்னம்மா அதையே திரும்பத் திரும்ப பத்து தரம் டேப்பிலை அடித்ததாலும் அவள் மனசுக்குள் ஆயிரம் எண்ணங்கள் வந்து புகுந்து கொள்ளத்தான் செய்தன.

மனசு திடகாத்திரமாய் இருந்த நாட்களில் கெட்ட சிந்தனை எது, நல்ல எண்ணங்கள் எது என்று பிரித்து வேண்டியதை எடுத்துக் கொண்டு, வேண்டாததை அகிலாவால் ஒதுக்க முடிந்தது.

ஆனால் இப்போது? ஒரு மாச தீவிரத்தாயில் உடம்பு வத்தி, பலஹீனமாய்; தொய்ந்து போன நாழிகையில் இதயமும், நெஞ்சமும் துணியாய் நைந்து தான் போயின. மொணுக்கென்றால் கண்களில் நீர் கட்டிக் கொண்டது. ஐயோ நம்மை இப்படி அனாதையாய் வேலைக்காரிகள் கவனிக்கும்படி விட்டு விட்டார்களே என்ற பச்சாதாபம் நெஞ்சில் மூடி கொண்டது. இத்தனை வருஷங்களாய் நான் இந்த குடும்பத்துக்கு உழைத்ததுக்கு அர்த்தம் இல்லையா என்று எண்ணத் தோன்றியது.

இந்த மாதிரி நினைப்பதெல்லாம் தப்பு, நிம்மதியை கெடுக்கும் தவறான எண்ணங்கள் என்று சில சமயங்களில் புரிந்தாலும், இவற்றைத் தடுத்து நிறுத்தி பழையபடி திடமான சிந்தனைகளை வளர்க்க முயன்று முடியாமல் போனதும் அகிலா பரிதவிக்கத் தொடங்கினாள். எரிகிற தீக்கு எண்ணெயாய் அன்றைய தபாலில் வந்த ராமுவின் கடிதம் அமைந்தது.



பழைய மாம்பலத்தில் எண்பது ரூபாய் வீட்டில் ஒண்டிக் கொண்டிருக்கும் அம்மாவுக்கு மழையின் காரணமாய் ஆஸ்துமா அதிகமாய் இருக்கிறதாம். பவானியின் ஆபீஸில் அட்வான்ஸ் பணம் தர மறுக்கிறார்களாம். "முடிந்தால் முன்னூறு ரூபாய் பணம் அனுப்புக்கா, நான் எழுதினது அம்மாவுக்கும் பவானிக்கும் தெரிய வேண்டாம்' என்று அகிலா ஒரு மாசமாய் படுத்துக் கொண்டிருக்கும் விபரம் தெரியாமல், தன் வேதனையைக் கொட்டி எழுதி இருந்தான் ராமு.

பணமா? அனுப்புவதா? எப்படி? முடியுமா? இவர் வந்து பார்த்தால், விவரத்தைச் சொல்லி ஒத்தாசை பண்ணச் சொல்லலாம். ஆனால் இவர்தான் நீ இருக்கியா, செத்தியான்னு எட்டிப் பார்க்காமல் இருக்காரே! அம்மா கிட்டே கேட்க முடியாது... என் தம்பி லெட்டர் போட்டிருக்கான், அவனுக்கு பணம் அனுப்ப முடியுமான்னு எப்படி வாயைத் திறந்து கேட்க முடியும்? அசிங்கமில்லையோ! அப்புறம் கேலி பண்ண மாட்டாளோ? பின்னே பணம் எப்படி அனுப்பறது? ஐயோ நான் என்ன பண்ணுவேன்! எங்கம்மா, பவானி, ராமு எல்லாரும் இப்படித் தவிக்கறாளே. அவாளுக்கு சின்ன உதவிகூட செய்ய முடியாதவளாய், கையால் ஆகாதவளாய் நான் ஆயிட்டேனே. என்ன முயன்றும் அடக்கமுடியாத வேதனை நெஞ்சை பீறிட்டுக் கொண்டு சங்கிலித் தொடர் போல எழ 'பொன்னம்மா, என் அவலத்தைப் பாத்தியா? என்னாலே யாருக்கும் பிரயோஜனம் இல்லே. நான் உசிரோட இருக்கிறதே அனாவசியம்' என்று வேலைக்காரியை கட்டிக் கொண்டு அசட்டுத்தனமான பேச்சுக்களுடன் முதல் முறையாய் அகிலா மெல்ல விசும்பினது அன்றைக்குத்தான்.

## இருபத்தாறு

இரண்டு மாசங்கள்? 'உனக்கு வந்திருப்பது ஹெர்பிஸ்' என்று டாக்டர் சொல்லி நான் நோயாளியாக மாறி இரண்டு மாசங்களா ஆகிவிட்டன? கையில் காலண்டரை வைத்துக் கொண்டு ஒவ்வொரு தேதியாய் எண்ணினாள் அகிலா. முந்தா நாளோடு இரண்டு மாசங்கள் பூர்த்தி ஆகிவிட்டனவே!

பத்து நாட்களாய்— தலைக்கு நாலுஜலம் விட்டுக் கொண்ட இந்த பத்து நாட்களாய்— வீட்டுக்குள் பொதுவாய் வளைய வரும்போது, அவளைச் சுற்றி இந்த இரண்டரை மாச காலத்தில் நிகழ்ந்துவிட்ட மாற்றங்களை அகிலாவால் நன்றாய்ப் புரிந்து கொள்ள முடிந்தது.

அவளை யாரும், எந்த ஒரு விஷயத்துக்கும் எதிர்பார்க்கவில்லை என்பது முதலில் தெளிவானது. சென்னையில் உள்ள ஒரு ஹோமில் சொல்லி உஷா ஏற்பாடு செய்து வரவழைத்திருந்த ரங்கன், ஒரு சின்ன வயதுப் பையன், புதிசாய் இருந்தான். உஷா, ராஜா, ஸ்ரீதரன் ஏவும் வேலைகளை அவன் பாந்தமாய் கவனிக்க இதற்குள் பழகி இருந்தான். ட்ரேயில் காபி டிபன் வைத்து மாடிக்கும், வாசல் அறைக்கும் கொண்டு போய் கொடுத்து வந்தான்; அரவிந்தை காலை மாலையிலும் ப்ராமில் வைத்து காலாற தள்ளி வந்தான்; யார் கூப்பிட்டாலும் ஓடிப்போய் கவனித்தான்; என் என்றால் எண்ணையாய் நின்றான். மொத்தத்தில் இது நாட்கள் அகிலா செய்து வந்த வேலைகளை வெகு எளிதாக ஆர்ப்பாட்டமே இல்லாமல் செய்ய உஷா அவனைப் பழக்கி விட்டிருந்தாள்.



கிட்டத்தட்ட இரண்டு மாசமாய் படுக்கையில் கிடந்துவிட்டு 'இனி நிச்சயமாய் இந்த வியாதி ஒட்டிக் கொள்ளாது. தாராளமாய் வீட்டில் புழங்கலாம்' என்று டாக்டர் அனுமதி கொடுத்த பிறகும் தன்னிடம் நெருங்க ஏனோ அனைவரும் தயங்குவதாகவே அகிலாவுக்குத் தோன்றியது.

படுக்கை அறையில் நுழைந்து கணவனுக்குத் தேவையானதை அலமாரியைத் திறந்து எடுக்க அவள் முனைந்தபோது 'வீணாய் சிரமப்படாதே அகிலா, நாங்கள் பார்த்துக் கொள்வோம்' என்று தடுத்து விட்டான் ஸ்ரீதரன்.

சமையற்கட்டில் அம்மணிக்கு உதவியாய் இருப்போம் என்று நினைத்ததும் நடக்காதபடி 'உடம்பு சரியில்லாத பெண்ணை வேலை வாங்கின பொல்லாப்பு எனக்கெதுக்கு? போய் வாசல்லே உட்கார்ந்துக்கோ' என்றாள் அம்மணி.

குழந்தை அரவிந்தைத் தூக்கி வைத்துக் கொள்ளலாம் என்றால் பாய்ந்து வந்து தடுத்துவிட்டாள் உஷா. "வேண்டாம் மன்னி குழந்தையை தூக்காதீங்கோ, அவனுக்கே கொஞ்சம் பூஞ்சை உடம்பு... உங்களுக்கு சரியாயிடுத்துன்னு டாக்டர் சொல்லிட்டாலும் ஜாக்கிரதையாய் இருக்கிறது நல்லது தானே..."

அகிலா புரிந்து கொண்டாள் தன்னால் இந்த வீட்டில் இருக்கும் எவருக்கும் தற்சமயம் பிரயோஜனம் இல்லை என்று புரிந்து கொண்டாள். விரலை அசைத்தால் ஆட்கள் க்யூ வரிசையில் நிற்கும் போது முக்கிக் கொண்டும் முனகிக் கொண்டும் இவளை வேலை வாங்குவதற்கு அவசியமே இல்லை என்று மற்றவர்கள் நினைப்பதை நன்றாகவே புரிந்து கொண்டதால் தானாக ஒதுங்கி இருக்க ஆரம்பித்தாள்.

இப்படி ஒதுங்கி, ஒதுங்கிப் போனதில், செய்வதற்கு வேலை என்று எதுவுமே இல்லாமல் போனதில், நீளமாய்

வளரும் பொழுதை கழிக்கத் தெரியாமல் அகிலா முழித்தது நிஜம். தூங்கி எழுந்தால், ஏன் விடிகிறதோ என்று தோன்றத் தொடங்கியதும் நிஜம்.

எவ்வளவு நேரத்துக்கு புஸ்தகம், பத்திரிக்கைகள் படிப்பது? கை வேலையாக, ஸ்வெட்டர் போடுவது, எம்ப்ராய்டரி செய்வது என்று ஏதாவது செய்யலாம் என்றால் ஏனோ தெரியவில்லை, கண்கள் சோர்ந்து போயின. பத்து நிமிஷங்களுக்குச் சேர்ந்தாற் போல ஒரு காரியத்தைச் செய்வதற்குள் கண்கள் நீர் கோத்துக் கொண்டு, கைகள் வெலவெலத்துப் போயின.

என்ன இது? அம்மா, மத்தவர்கள் சொல்வது மாதிரி எனக்கு இன்னும் பலவீனம் ரொம்ப இருக்கிறதா? அது தான் இப்படி ஓய்ந்து போகிறதா?

தலைக்கு ஜலம் விட்ட அன்று கண்ணாடி முன் நின்று தன்னைப் பார்த்தவள் முதலில் திடுக்கிட்டுப் போனது உண்மைதான்.

ஏற்கனவே முகமும், உடம்பும் ரொம்ப இல்லம், இப்போதோ கேட்கவேண்டாம். தேய்ந்து ஒட்டிய தாவா கட்டை, குழி விழுந்த கன்னங்கள், நடுவில் பற்களின் முன் தூக்கல் இன்னும் எடுப்பாய்த் தெரிந்தது. முன் நெற்றி மயிர் கொட்டிப் போய் பின்னால் எலி வாலாகத் தொங்கியது. முகத்திலும், உடம்பிலும் ஒரு அசட்டுக் கருப்பு.

இந்த மூஞ்சியைப் பார்க்கப் பிடிக்காமல்தான் அவர் 'ரங்கன் இருக்கான், நீ சிரமப்படாதே'ன்னு என்னைத் தட்டிக் கழிக்கிறாரோ?

உடம்புக்கு வருவதற்கு முன்னால் பார்ட்டி நடந்த அன்று முதல் முறையாக ஸ்ரீதரன் 'உஷா மாதிரி நீ ஸ்மார்ட்டாய் இருக்க வேண்டாம். கலகலனு பேச வேண்டாம்; கொஞ்சம் முகத்தைப் பளிச்சனு அலம்பியாவது வைச்சுக்கக் கூடாது' என்று கோபத்துடன் கத்தியது



காரணமில்லாமல் சதா சர்வகாலம் மனசில் ரீங்காரமிட்டபோது என்ன செய்வது என்று புரியாமல் அகிலா பரிதவித்துப் போனாள்.

ஸ்ரீதரன் வரவர அவளுடன் இரண்டு வார்த்தைகள் பேசுவது கூட நின்றுபோனது அவளுக்கு பயங்கரமாய் உறுத்தியது.

இத்தனைக்கும் இப்போதெல்லாம் ஸ்ரீதரன் கடையிலிருந்து டாண் என்று மாலை ஐந்து மணிக்கு வீட்டுக்கு வந்து விடுகிறான். ஐந்திலிருந்து ஆறுவரை டென்னிஸ் பயிற்சி கொடுப்பது உஷா. முடிந்தால் ராஜாவும் சேர்ந்து கொள்வான். இல்லாவிட்டாலும், தினம் தவறாமல் ஸ்ரீதரனுக்கு டென்னிஸ் கற்றுத் தருவதில் உஷா குறியாக இருந்தாள்.

"அந்தப் பிள்ளைக்கு வாழ்க்கையிலே என்ன இருக்கு சொல்லு? ஸ்ரீதரனுக்கு லைஃப் இப்படி பாழடைஞ்சு போச்சேன்னு, அந்தப் பெண் உஷா என்கிட்டே தினமும் அழறா... மன்மதன் மாதிரி இருக்கிற பிள்ளைக்கு வெளியே, வாசல்லே கூட்டிண்டு போய் பெருமை படற தினுசிலேயா பெண்டாட்டி வாச்சிருக்கா? ம்... ஏதோ இந்த மட்டுக்கும் அந்தப் பெண் உஷா ஸ்ரீதரனை வலுக்கட்டாயமா இழுத்து டென்னிஸ் கத்துக் கொடுத்து, சினிமா கிளப்புனு கூட்டிண்டு போறதோ, அவனும் கொஞ்சம் சிரிச்ச முகத்தோட இருக்கானோ?... பாவம்... எல்லாம் நான் பண்ணின பாவம்... இதுக்கு யாரை நொந்துக்கறது சொல்லு?"

ஊரிலிருந்து வந்திருந்த தம்பி கணேசனிடமும், மருமகள் காயத்ரியிடமும் ஒருநாள் ஜானகி சொல்லி கண்ணைத் துடைத்துக் கொண்டதை எதேச்சையாய் அந்த அறைக்குள் நுழையப் போன அகிலா கேட்டபோது உடைந்து போனாள். வந்த சுவடு தெரியாமல் தோட்டத்துக்குச் சென்று ஜிம்மியின் கழுத்தைக் கட்டிக்

கொண்டு ஒரு பாட்டம் அழுதும் கூட அவள் வேதனை குறையவில்லை.

போன வருஷம்; அதுக்கும் முந்தின வருஷம் என்று முன்பெல்லாம் அம்மா சொல்லிக் காட்டாத வார்த்தைகளா எசல்களா? இப்போது அப்படி என்ன புதிசாய் சொல்லி விட்டார்? எதுக்காக நான் இப்படி அழணும்?

புத்திக்கு எட்டிய வரைக்கும் தன் அழுகைக்குக் காரணத்தை யோசித்துப் பார்த்த அகிலாவுக்கு ஏதும் தெளிவாகப் புரியவில்லை.

அழுகையினூடே இது வருஷங்களாய் தான் எண்ணத் துணியாத விதங்களில் சிந்தனையை அவள் ஓட விட்டாள். சக்கர நாற்காலியில் கிடந்தவரை இன்று சாதாரண மனுஷனாய் உலாவ விட்டது நான். அவர் கூடவே இரவும், பகலும் மன்றாடி, அவர் கோபதாபங்களுக்கு ஈடு கொடுத்து அவர் மனசை சரியாக்கினது நான்.

ஆனால் இப்போது இவர்கள் சொல்லுவது என்ன? பிள்ளைக்கு மனசு நொந்திருக்கிறதாம். அதற்கு தம்பி பெண்டாட்டிதான் இதம் தருகிறாளாம். மச்சினருக்கு இப்படி வாழ்க்கை அமைந்து போனதே என்று வருத்தப் படுகிறாளாம். என்ன சாதுர்யமான பேச்சு?

இவர்களுக்காக நான் உழைத்த உழைப்பென்ன, பட்ட பாடென்ன? அதையெல்லாம் துடைத்து போட்டுட்டு இப்படி கூசாமல் உஷாவின் தலையில் கிரீடம் சூட்டினால் அது சரியாகி விடுமா? எண்ணங்கள் கசந்து கண்களில் நீர் பிரவாகமெடுக்கையிலேயே அகிலாவின் மனசு மாறிப் போனது.

ஐயோ, நான் வரவர ரொம்ப கேவலமா நினைக்க ஆரம்பிச்சுட்டேனே! அசிங்கமாய் எப்படி என்னால் கற்பனை பண்ண முடிகிறது? எனக்கு என்னாச்சு? இதெல்லாம் தப்பு... ரொம்ப தப்பு...கோணலா நினைக்க



நான் எப்படி பழகினேன்? ஐயோ கடவுளே! என் புத்தி ஏன் இப்படி விபரீதமாகப் போறது?

நாளாக ஆக எந்நேரமும் நிம்மதி இன்றி, சரியான தூக்கமும் இன்றி அகிலா இப்படிப்பட்ட இரண்டுங்கெட்ட சிந்தனைகளால் தவிப்பது அதிகரிக்க, அதிகரிக்க, அவள் ரொம்ப குழம்பிப் போனாள். நிமிடத்தில் கண்களால் மாலை மாலையாக நீரை வடிக்கும் ஒரு கோழையானாள். நின்றால் அழுகை, உட்கார்ந்தால் அழுகை, 'என்ன அகிலா?' என்றால் அழுகை...

தன்னை எல்லோரும் ஒதுக்குகிறார்கள் என்ற வேதனை; தான் யாருக்கும் வேண்டப்படாதவள் ஆகி விட்டோமே என்ற கசப்பு; தான் அழகில்லாத, படிப்பில்லாத, ஏழை வீட்டுப் பெண்ணாகப் பிறந்து விட்டோமே என்ற தாழ்வு மனப்பான்மை.

எப்படியோ இருந்த அகிலா, விவேகத்தோடு எந்த ஒரு பிரச்னையையும் தீர்க்கமாய் அலசி தெளிவான புத்தியுடன் செயல்பட்ட அகிலா, சட்டென்று எவரிடமும் குற்றம் கண்டு பிடிக்கத் தெரியாத அகிலா, யார் செய்த எந்த தவறையும் பெருந்தன்மையோடு மன்னித்து உடனே மறந்து விடும் அகிலா, இன்று எப்படியோ மாறித்தான் போனாள்.

விவேகம் சற்றும் இல்லாதவளாய் தொட்டால் சிணுங்கியாய், எனக்கு என்ன தெரியும், என்னிடம் என்ன இருக்கிறது என்று சதா பச்சாதாபத்தில் உருகி, மாய்ந்து போனவளாய் இப்போதைய அகிலா ரொம்ப வித்தியாசமாகத்தான் இருந்தாள்.

இரண்டு மாசம் படுக்கையில் கிடந்ததால் இப்படி மாறி விட்டாளா? உடம்பிலும், மனசிலும் தெம்பு போய் விட்டதால் இப்படி மாறி விட்டாளா? தான் இந்த குடும்பத்துக்காக உழைத்த உழைப்பையெல்லாம்

ஒவ்வொருவரும் ஆயுசு பர்யந்தம் நினைத்திருப்பார்கள் என்று நம்பியதெல்லாம் பொய்த்து விட்டதால் இப்படி மாறி விட்டாளா! எதைச் சொல்ல, எதை விட?

எல்லாம் தான். உடம்பின் முடியாமை, மனோ பலஹீனம், சொந்தக்காரர்களின் சுயநலம், உதாசீனம் என்றுஒட்டு மொத்தமாக எல்லாமாகச் சேர்ந்து கொண்டு தான் அகிலாவை அடியோடு தாக்கிவிட்டன.

சதா தனிமையில் அமர்ந்து வேண்டாத சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளக் கற்றுக் கொண்டு விட்டாள் அகிலா. தோட்டத்தில் டென்னிஸ் விளையாடும்போது கணவனும், ராஜாவும், உஷாவும் சிரிப்பதைக் கேட்டவண்ணம் தன் அறையில் தனியாக அமர்ந்து தனக்குத் தானே வேண்டாத எண்ணங்களில் மூழ்கிப் போகத் தொடங்கினாள்.

உஷா கடை கண்ணிகளுக்குப் போய் கை கொள்ளாமல் புடவை, சாமான்களை வாங்கி ஹால் பூராவும் பிரித்துப் போட்டு சந்தோஷமாய் பேசி மகிழ்கையில் தனியாய் உட்கார்ந்து, சூன்யத்தை வெறிக்க முற்பட்டாள் அகிலா.

மனசில் எட்டு வருஷ வாழ்க்கையும், அதற்கு முன்னால் வாத்தியார் அப்பாவின் பெண்ணாக வாழ்ந்ததும் சினிமாப் படங்கள் மாதிரி காட்சி, காட்சியாய் விரியும். மறைந்து போன மாமனாரை இப்போதெல்லாம் அதிகம் நினைத்தாள் அகிலா.

அப்பா நீங்க இருந்திருந்தால் என் நிலைமை இப்படி ஆகி இருக்குமா? இந்த வீட்டில் என்னை தூசியாய் ஒதுக்கி விட்டானேப்பா... நான் ஒருத்தி உயிரோட இருக்கிறது கூட இவனுக்கு ஞாபகம் இல்லேப்பா...நடு நடுவில் சென்னையில் அம்மா பவானி, ராமுவுடன் படும் அவஸ்தையும் மனசில் குத்தும்.



எனக்கு உதவி பண்ண யாருமே இல்லையே. எங்கம்மா தவிக்கிறாளே... ஸ்ரீனி, லலிதா மாதிரி என்னாலும் அவளுக்கு கால்காசு உபயோகமில்லாமல் போய் விட்டதே...

ஒவ்வொன்றாய் தோன்றி மறைந்த பின்பு இவர்களுக்காக நான் எத்தனை பாடுபட்டிருக்கேன். எல்லாம் வீண் தானா? என்ற அங்கலாய்ப்புத் தோன்ற விசித்து விசித்து அழுவாள். 'ஏம்மா அழறே?' என்று ஒரு ஜீவன் கேட்கவில்லை. 'உனக்கு மனசில் என்ன குறை அகிலா?' என்று அன்போடு ஒரு ஆத்மா கையை நீட்டி அவள் கண்ணீரைத் துடைக்கவில்லை

இப்போதெல்லாம் அடிக்கடி ஹரியை நினைத்தாள் அகிலா. அப்பா மாதிரி குணம் கொண்டவர் ஹரி ஒருத்தர் தான். ஆனால் அவரும் எங்கேயோ போய் விட்டாரே. வீட்டில் இருந்தால் 'மன்னி உங்களுக்கு என்ன வேதனை? என்னிடம் சொல்லுங்கள்' என்று கண்டிப்பாய் உதவி பண்ணுவார் இல்லையா?

இங்கிலாந்துக்குப் போன பிறகு அகிலாவுக்கு அவனிடமிருந்து மாசம் ஒரு லெட்டர் நிச்சயம் வரவே செய்தது. அன்போடு, கனிவோடு இதமாக எழுதியிருப்பான். முடிந்த போதெல்லாம் அகிலாவும் பதில் போடுவது வழக்கம்தான். ஆனால் கிருஷ்ணன் இறந்த பிறகு தனியாய் அவளுக்கு ஹரி கடிதம் எழுதி இவள் பதில் போட்ட ஒரு நாளில் 'பெத்த தாயாருக்கு ஆறுதல் கொடுக்கிறதைவிட இவனுக்கு வரிஞ்சு வரிஞ்சு எழுதத் தானே அவளுக்குப் பிடிக்கிறது' என்று ஜானகி வருத்தப்பட்டு அழவும், அந்தப் பழக்கத்தையும் குறைத்துக் கொண்டாள் அகிலா

ஹரி நாலு கடிதாக போட்டால் இவள் பதிலுக்கு இரண்டு வரி மட்டும் எழுதத் தொடங்கியதால்

நாளடைவில் ஹரி இவளுக்கு என எழுதுவது நின்று போனது. படிப்பை முடித்த ஹரி அங்கேயே ஒரு பெரிய கம்பெனியில் வேலைக்கு சேர்ந்து விட்டான்.

இனி ஹரியாவது என்னை நினைக்கிறதாவது? இங்கே தினம் கூட இருக்கிறவரே என்னை மனதிலிருந்து தூக்கிப் போட்டுவிட்டார். பல ஆயிரம் மைல்கள் தள்ளி இருக்கும் ஹரியாவது, வந்து இதத்தைக் கொடுப்பதாவது; ப்ஹும் ஒன்றும் இல்லை. சிலந்தி கூட்டை பின்னுவது மாதிரி தனக்குத் தானே வேண்டாத யோசனைகளை அகிலா வளர்த்துக் கொண்டு அதனுள் ஆழமாய் சிக்கிக்கொண்ட ஒருநாளில் அவளுக்குப் புதுசாய் காரணமில்லாமல் பயம் எழுந்தது.

தனியாய் உட்கார்ந்திருந்தால் கூடவே யாரோ நின்று தன்னை கவனிக்கிற பயம் யாரது? திரும்பி பார்த்தால் ஒருத்தரும் இல்லையே! என்ன இது? இரண்டு மூன்று நாட்கள் ஆனதும் இந்த பயம் அதிகமாக, ஒரு நாள் இது குறித்து கணவனிடம் பேசினாள் அகிலா.

"கொஞ்ச நாளா எனக்கு புதுசா என்னமோ பயமா இருக்கு... தள்ளி நின்னுண்டு யாரோ என்னைக் கவனிக்கிற மாதிரி இருக்கு கூடவே நடந்து வரமாதிரி இருக்கு. டாக்டர்கிட்டே என்னைக் கொண்டுபோய் காட்டறேளா? அப்புறம் வரவர எதுக்கெடுத்தாலும் ரொம்ப அழுகைவறது. இது தப்பில்லையா? இதையும் டாக்டர் கிட்டே சொன்னால் தேவலை" சின்னக் குரலில் தயங்கித் தயங்கி பேசும் மனைவியை ஒருவித சலிப்போடு பார்த்தான் ஸ்ரீதரன்.

கொஞ்ச நாட்களாகவே அகிலாவின் அழுத முகமும் சூம்பிப் போன உடம்பும் அவனுள் தாங்க முடியாத எரிச்சலை உண்டு பண்ணத் தொடங்கி இருந்தன. ரோதே என்று ஒரே படுக்கை அறையில் அவனுடன் படுக்



தானே தகிரவும் அவளை மனைவி என்று நினைத்து பேசவோ, சல்லாபிக்கவோ மனதுக்கு ஏனோ பிடிக்கவே ல்லை.

சதா உஷாவோடு அவளை ஒப்பிடுவது தவறு என்று ரிந்தாலும் அந்த நினைப்பை அவனால் தடுக்க டியவில்லை.

"பாவம் ஸ்ரீதரா! உன் தலையெழுத்து என்னவெ மோ அனுபவிக்கணும்னு இருக்கு" என்று சமயம் கிடைத்தபோது அம்மாவும், ஐ ஃபீல் ரியலி ஸாரி ஃபார் ன்னா, என்று ஒருவித இரக்க பாவத்துடன் உஷாவும் சால்லிக் கேட்டுக் கேட்டு தன் மேலேயே அவனுக்கு ரக்கம் தோன்றி விட்டது என்று கூடச் சொல்லலாம்.

இதனால் அழுத கண்களோடு பரிதாபமாய் அகிலா ன்று பேசின பேச்சுக்கள் அவனுக்கு உறைக்கவே ல்லை. "உடம்பு பலஹீனமாய் இருந்தா அப்படி தோணறது சகஜம்தான். வீணாய் ஃபஸ் பண்ணாதே கிலா! வரவர உன்னாலே என் நிம்மதியே போயிடும் பால இருக்கு. எப்பப்பாரு வியாதி பேச்சுதானா? ம் ஃபெட் அப்" ஆயாசத்துடன் பேசிய ஸ்ரீதரன் ழுந்து வெளியில் போய் விட்டான்.

கணவனிடமிருந்து ஆறுதலாய் இரண்டு வார்த்தை களை எதிர்பார்த்த அகிலா, 'ஓ உனக்கு உடம்பு ரியில்லையா, சரி இனப்பு டாக்டர்கிட்டே போகலாம்' ன்று சொல்லுவான் என்று எதிர் பார்த்த அகிலா, னக்கு கொஞ்ச நாட்களாய் மிகவும் பழகிவிட்ட ழுகையைத்தான் அன்றைக்கும் நாடினாள்.

ரொம்ப நேரத்துக்கு அழுதபின் தன் மேலேயே கோபம் உண்டாக பாத்ரூமுக்குள் போய் முகம் கழுவிக் கொண்டாள். பின் பூஜை அறைக்குச் சென்று 'எனக்கு ஜிலே தெம்பைக் கொடு; நிம்மதியைக் கொடு

தெய்வமே' என்று மனப்பூர்வமாய் பிரார்த்தித்தாள். என்ன செய்து என்ன? இருந்த கொஞ்ச நஞ்ச அமைதியும் போகிற மாதிரி அன்றைக்கு ஒரு சம்பவம் நடந்து விட்டது

காலையிலிருந்து ரொம்ப படபடப்பாக இருந்ததால் காம்போஸ் மாத்திரை ஒன்றை போட்டுக் கொண்டு அகிலா தங்கள் அறையில் தூங்கிக் கொண்டிருந்த போது ஊரிலிருந்து ஒரு வாரம் முன்பு வளைகாப்புக்காக வந்திருந்த வித்யா, மாப்பிள்ளையோடு அனைவரும் ஹாலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

நல்ல மழை. கேட் கதவு காற்றில் திறந்துகொள்ள ஜிம்மி வீட்டுக்குள் எப்படியோ வந்து விட்டது. ஹாலில் அமர்ந்திருந்த வித்யாவை இத்தனை நாட்களாய் காணாமல் கண்டதில் குஷி பிறந்திருக்கிறது. அவள் மேலே ஏறி முரட்டுத்தனமாய் கொஞ்ச முற்பட்டதில் வித்யாவின் இரண்டு கைகளிலும், ஜிம்மியின் நகங்கள் ஆழமாய் கீறி விட்டன.

வித்யா கத்தின கத்தலில், பக்கத்தில் விஷமம் பண்ணிக் கொண்டிருந்த அரவிந்த் மருண்டு அழத் தொடங்கியதும், அழும் பிள்ளையை சமாதானம் செய்ய உஷா வேகமாய் எழுந்து வந்திருக்கிறாள்.

தன்னைத்தான் அவள் ஏதோ செய்ய வருகிறாள் என்று ஜிம்மி அவளைத் துரத்த, அவள் பயந்து கொண்டு அலற, ஜானகி கத்த, ஸ்ரீதரன் பாய்ந்து ஜிம்மியை பிடிக்கப் போக, அது அவனை பார்த்தே உறுமி கடிக்க பயமுறுத்திய கணத்தில் அகிலா வந்து விட்டாள்.

ஜிம்மியை சங்கிலியால் பிணைத்து கேட்டில் கட்டி விட்டு அகிலா உள்ளே நுழைந்தபோது அம்மா, உஷா, பிள்ளைகளின் கோபம் கட்டுக்கடங்காமல் இருந்தது.



"இந்தச் சனியனை தொலைச்சு கட்டப் போறயா, இல்லையா ஸ்ரீதரா? சொல்லிடு... வாயும் வயிறுமா இருக்கிற வித்யாவும், உஷாவும் இன்னிக்கு பிழைச்சா, அந்த பிள்ளை... கன்னையே கடிக்கப் பார்த்துதே...? அதை விரட்டி விடப் போறியா, இல்லை உஷாவை மெட்றாஸுக்கு அனுப்பிட்டு நான் வித்யாவோடு ஜீயபுரத்துக்குப் போகட்டுமா? சொல்லு" ஜானகியின் ஆக்ரோஷமான கத்தல் ஸ்ரீதரனை உசுப்பி விட்டது.

விசும்பும் பிள்ளையை அணைத்துக் கொண்டு உஷாவும் 'அதானே, அதானே' என்று மாமியார் சொன்னதை ஆமோதித்தாள்.

"நீ ஏம்மா போகணும்... அதை உடனே விரட்டிடறேன்... பாரு..." என்றவன் போனிடம் சென்று தன் போலீஸ் நண்பனை அழைத்தான்.

"எங்க வீட்டு நாய் வெறி வந்த மாதிரி எல்லாரையும் விரட்டறது, கடிக்க வரது, யாருக்காவது வேணும்னா கொடுத்திடலாம்; இல்லைனா பவுண்டுக்கு சொல்லி நாய் வேனை அனுப்பச் சொல்லு... ஐ வாண்ட் டு டிஸ்போஸ் தி டாக்."

ஸ்ரீதரன் போனை வைத்துவிட்டு திரும்பினபோது, அறை வாசலில் சரம் சொட்டச் சொட்ட அகிலா நின்று கொண்டிருந்தாள். 'ஜிம்மியை என்ன பண்ணப் போறேள்?" ஸ்ரீதரன் பதில் சொல்லவில்லை. இரண்டே எட்டில் பாய்ந்து கணவனின் முன் நின்றாள் அகிலா. "சொல்லுங்கோ... ஜிம்மியை பவுண்டுக்கா அனுப்பப் போறேள்? மாட்டேன்... நான் சம்மதிக்க மாட்டேன்" அழுகையும், ஆத்திரமும் கலந்த குரலில் அகிலா எல்லார் நடுவிலும் இப்படி உரக்கப் பேசி யாரும் பார்த்ததில்லையாதலால் ஒரு நிமிஷம் ஸ்ரீதரன் திகைத்துப் போனான்.

பிறகு "உன்னை யார் கேட்டா?" என்றான் கோபத்துடன்!

''என்னைக் கேட்காம யாரைக் கேட்கணும்? என் நாய்... அவனுக்கு பைத்தியமில்லே... ஜிம்மி பவுண்டுக்கு அனுப்ப நான் சம்மதிக்க மாட்டேன்..." ஆவேசக் குரலில் பேசின அகிலா சட்டென்று உஷா பக்கம் திரும்பினாள்.

''உனக்கு அரவிந்த் மாதிரி எனக்கு ஜிம்மி... அவன் என் குழந்தை. உன் குழந்தையை பவுண்டுக்கு நீ கொடுப்பியா சொல்லு? நான் மட்டும் ஏன் என் ஜிம்மியைக் கொடுக்கணும்?" என்றாள் அழுகை பீறிட.

பாய்ந்தான் ஸ்ரீதரன் அவள் கையைப் பற்றி தன் பக்கம் திருப்பி பளாரென்று அறைந்தான். ''அம்மா சொல்றது சரிதான். உனக்கு உஷா மேலே பொறாமை உண்டாயிடுத்து... அவளுக்கு குழந்தை இருக்கேங்கற பொறாமை. என்ன தைரியம் இருந்தா நாயை நம்ப அரவிந்தோடு கம்பேர் பண்ணுவே'' என்று உறுமினவன் அவளை இழுத்துக் கொண்டு போய் படுக்கை அறையில் தள்ளி கதவை சாத்தி 'உன் நாயை பவுண்டுக்கு அனுப்பத்தான் போறேன். அனுமதிக்க மாட்டேன்னியே, எங்கே தடுத்துப்பாரு பார்க்கலாம்' என்றான் அடிகுரலில்.

## இருபத்தி ஏழு

ஜிம்மியை ஸ்ரீதரனின் நண்பன் வந்து அழைத்து போய் வாரம் ஒன்றாகி விட்டது. 'நான் போக மாட்டேன். இங்கே தான் இருப்பேன்' என்று எத்தனை பெரிசாய் கத்தியது ஜிம்மி.



அன்னிய மனிதர்கள் நடுவில் அமர்க்களம் செய்தால் அது குடும்பத்துக்கு அவமானம் என்று உணர்ந்த அகிலா தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு உள் அறைக்குள் ஓடிவிட்டாள்.

ஒண்டியாய் அவளால் என்ன செய்ய இயலும்? அவள் தனி. மற்ற அனைவரும் ஒரு கட்சி. மாமியாருக்கும் கணவருக்கும் எதிரில், உஷாவிடம் அவள் 'ஜிம்மி என் குழந்தை மாதிரி, உனக்கு அரவிந்த் எப்படியோ, அப்படி ஜிம்மி எனக்கு' என்று சொன்னதே ரொம்ப அதிகம். இத்தனை வருஷங்களாய் இல்லாத தைரியம் அப்போது மட்டும் எங்கேயிருந்து வந்தது?

எனக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்று பேசினேன்? ஜிம்மியை அனுப்பி விட்டு உள்ளே நுழைந்த ஸ்ரீதரன் ஒரு மூலையாய் நின்று குலுங்கிக் குலுங்கி அழும் அகிலாவைப் பார்த்தான். மனசில் கொஞ்சம் இரக்கம் தோன்றியதோ என்னவோ, கிட்டத்தில் வந்து "அசடு போல அழாதே அகிலா; ஜிம்மியை நான் பவுண்டுக்கு அனுப்பலே. நாய் மேல ரொம்ப ப்ரியமா இருக்கிற ஒரு குடும்பத்துக்கிட்டேதான் அனுப்பியிருக்கேன்" என்றதும் அந்த நிமிஷம் அகிலாவின் வயிற்றில் பாலை வார்த்தது.

போகட்டும், ஜிம்மி எங்காவது உயிரோடு இருந்தால் அதுவே போதும் என்று தன்னை அவள் தேற்றிக் கொண்டு விட்டாலும் அன்று இரவு முதல் முறையாக அவள் ஒரு வித்தியாசமான காரியத்தைச் செய்தாள்.

நடு இரவு, உறங்கிக் கொண்டிருந்தவள் திடும்மென எழுந்தாள்; அருகில் தூங்கும் கணவனை உலுக்கினாள். கண்கள் மலங்க விழித்து ''ஜிம்மி உள்ளே வரணும்னு கதவை பிராண்டறான்; கொஞ்சம் போய் கதவைத் திறந்து விடுங்களேன்'' என்றாள்.

''சும்மா இரு அகிலா தூக்கத்திலே உளறாதே'' ஸ்ரீதரன் அதட்டி கூட அவள் விடாமல் 'இல்லே போய்

பாருங்கோ, பாருங்கோ' என்று படபடப்பாகப் பேசியதும் 'வாட் நியூஸென்ஸ் இஸ் தீஸ்! மனுஷனை நிம்மதியாய் தூங்க விடாமல்' என்று கத்திவிட்டு ஸ்ரீதரன் கெஸ்ட் பெட் ரூமில் போய் அன்று படுத்துக் கொண்டான்.

தூங்கி எழுந்த பிறகுதான் இரவு தான் செய்த அசட்டுக் காரியத்தின் ஆழம் அகிலாவுக்குப் புரிந்தது. ஏன் அப்படி நடந்து கொண்டோம்? பேசினோம்? காலையில் கணவன் முகத்தைப் பார்க்கவே அவளுக்கு அச்சமாய் இருந்தது. மாமியாரிடம் கணவன் ஏதாவது சொல்லி விட்டால் என்ன பண்ணுவது என்று உதைப்பாக இருந்தது. நல்லவேளையாக ஸ்ரீதரன் இதை அப்படியே விட்டுவிட்டான்.

ஆனால் அடுத்து வந்த இந்த ஒரு வாரத்தில் தன்னிடம் விவரிக்கத் தெரியாத பாதிப்புகள் இருப்பதை அகிலாவால் நன்றாக உணர முடிந்தது. கைகள் இரண்டையும் கன்னத்தில் வைத்துப் பார்த்தால் அவை ஜில்லிட்டிருப்பது புரிந்தது. கண்முன் விரல்களை நீட்டினால் அவைகள் நடுங்குவது புரிந்தது. காதுக்குள் இதயம் அடிக்கிற ஓசை

எனக்கு என்ன? ராத்திரி தூக்கம் வரதில்லை. பயங்கரமாய் கனவுகள்; மொளுக்கென்றால் அழுகை, என்ன இதெல்லாம் கூடவே யாரோ இருக்கிற மாதிரி இருக்கே, யாரு? காதுகிட்டே யாரோ கிசுகிசுக்கிற மாதிரி இருக்கே யாரு?

நிச்சயமாய் என் மனசும், எண்ணங்களும் பழைய மாதிரி இல்லை. அனாவசிய கோபதாபங்கள், சந்தேகம், பொறாமை, கத்தல் இதெல்லாம் என் குணத்திலே எப்படிக் கலந்தது?



பிறத்தியாருக்கு எப்போதும் உபகாரமாக இருக்க ஆசைப்பட்ட என் மனசுக்கு இப்போதெல்லாம் உதவி பண்ணப் பிடிக்க மாட்டேன் என்கிறதே! பிறர் கஷ்டப் பட்டா ரசிக்கத் தோணறதே! மழையிலே காவேரி வெள்ளம் பெருகி தில்லை நகருக்குள்ளே பிரவாகமெடுக்கறது, ஜனங்கள் வீடு வாசல் எல்லாம் இழந்து தவிக்கறா என்கிற செய்தியைக் கேட்கிற போது நன்றாய்க் கஷ்டப்படட்டும், நன்றாய்த் தவிக்கட்டும் ஜனங்கள் அத்தனை பேரும் உதவியில்லாமல் கஷ்டத்தாலும் அவஸ்தை படணும்னு, பணக் எண்ணம் தோணுகிறதே! எனக்குள்ளே

ஐயோ இதெல்லாம் சொல்லத் தப்பு! எனக்கு என்ன ஆச்சு? எனக்கு யாராவது உதவி பண்ணுங்களேன்; டாக்டர்கிட்டே அழைச்சிண்டு போய் என் நிலைமையை விளக்குங்களேன்.

ஆமா, எனக்கு யார் இருக்கா? இவருக்கு என்னைப் பார்க்க, பேசக்கூடப் பிடிக்கிறதில்லை. மாமியார், உஷாவைப் பத்தி சொல்ல வேண்டாம். இந்த வித்யா, காயத்ரியிடம் பேசப் போனாக்கூட 'எங்களுக்கு வேலை இருக்கு'ன்னு எழுந்து போயிடறாளே!

கணவன்கிட்டே சண்டை போட்டுண்ட காயத்ரிக்கு நான் ஒரு காலத்துலே எத்தனை இதமா இருந்திருக்கேன்? எத்தனை நல்ல வார்த்தை சொல்லிக் கொடுத்திருக்கேன்? இன்னிக்கு இவள் சந்தோஷமா வாழறதுக்குக் காரணம் நான்தானே? எப்படி அத்தனையும் மறந்துட்டு என்னைப் பத்தி ஆயிரம் வேண்டாத புகார்களை மாமியார் கிட்டயும், வித்யாகிட்டேயும் சொல்ல இவளுக்கு மனசு வரது?

மெட்ராஸுக்குப் போனால் என்ன? சரி, போயிடலாம். அப்புறம் என்ன பண்ணுவது? அங்கே என்னை டாக்டர் கிட்டே கொண்டு போகவும், பணம்

செலவு பண்ணவும் அம்மாவால் முடியுமா? ஏற்கனவே அம்மா வியாதிக்காரி.

பலானி சம்பளத்தோடு, வட்டிப் பணத்தையும் கொண்டு எப்படியோ காலத்தை ஒப்பேத்தறா. நடுவிலே நான் வேற பாரமா போய் இருக்கலாமா? இதை உட்கார்ந்து யோசனை பண்ணும்போது தான் உடம்பு முடியாமல் படுத்திருந்த போது அம்மா எழுதின லெட்டரின் ஞாபகம் வந்தது.

அகிலா படுத்த படுக்கையாய் இருந்ததை சென்னைக்கு விவரமாய் ஸ்ரீதரன் எழுதா விட்டாலும் நாலு வரிகள் எழுதி இருந்ததற்கு அம்மா பதில் இப்படித் தான் எழுதி இருந்தாள்.

'உடம்பை சரியாய் பார்த்துக் கொள்ளம்மா, என்னால் குழந்தைகளை விட்டுவிட்டு வரமுடியாது. உன்னை இங்கே அழைத்துக் கொண்டு வந்து நான் பார்த்துக்கலாம் என்றால் உன் புக்ககத்து சௌகரியங்களை என்னால் கொடுக்க முடியாது என்பது எனக்கே நன்றாகப் புரிகிறது. மாப்பிள்ளை, உன் மாமியார் இருக்கும்போது எனக்கு என்ன கவலை? கடவுளிடம் உனக்கு சீக்கிரம் குணமாக வேண்டும்னு நான் தினமும் ப்ரார்த்திக்கிறேன்; என்னால் முடிந்தது அவ்வளவுதான்.'

அம்மா இப்படி லெட்டர் எழுதின பிறகு இப்போது எந்த முகத்தோடு மாமியாரிடமோ இல்லை கணவனிடமோ 'நான் மெட்ராஸுக்குப் போறேன்' என்று சொன்னால் சிரிக்கமாட்டார்கள்,

புக்ககத்தில் தாங்கி வைத்துக் கொள்கிறார்கள் என்று இந்த மட்டுக்கு அம்மா என்னை சந்தோஷப்படுவதில் ஏன் மண்ணை வாரிப் போட வேண்டும்?

ராஜூவின் கல்யாணத்தின் போது இந்த வீட்டில் என் பெருமை கொடி கட்டிப் பறந்ததைப் பார்த்த



திருப்தியிலேயே அம்மா இன்னும் வாழ்கிறாள். அதை ஏன் கெடுக்க வேண்டும்? என்னால் அம்மாவுக்கு பணத்தாலோ மற்ற எந்த விதத்திலோ உபயோகம் இல்லை என்று ஆன பிறகு வேதனையைத் தராமல் இருக்கவாவது இருக்கலாம் அல்லவா?

'சரி, அம்மா இல்லை, இவர் இல்லை, உஷா, வித்யா இல்லை. அப்புறம் வேறு யாரிடம் நான் போய் 'எனக்கு உபகாரம் பண்ணுங்கள்; என் குணம் கெட்டுக் கொண்டு வருது; சகிக்கலை காப்பாத்துங்கள்'னு கேட்க முடியும்?

எப்படி என்னா நிலைமையில், நான் உரிமையோடு கூடியவர் வேறு யார்? நீந்தத் தெரியாதவன் குளத்தில் விழுந்துவிட்டு சாகப் பிடிக்காமல் கையும், காலையும், இப்படியும் அப்படியும் உதைத்து, திண்டாடுவது போல அகிலா தவித்துப் போனாள்.

தனக்குத்தானே யோசித்து ஒரு முடிவுக்கு வந்த அகிலா அன்று மதியம் கணவன் கடைக்குப் போன பிறகு அலமாரியைத் திறந்து இன்லாண்ட் கவரை எடுத்து, படுக்கை அறை கட்டிலை சார்த்திக் கொண்டு உட்கார்ந்து தன் மனதில் தோன்றியவைகள் அனைத்தையும் ஊருக்குக் கடிதமாய் எழுதினாள். பின்பு பொன்னம்மாவை அழைத்து யாரும் அறியாமல் அந்த லெட்டரைக் கொடுத்து 'கண்டிப்பாய் போஸ்டுலே போட்டுரு பொன்னம்மா' என்று பத்து தடவைகள் சொன்னாள்.

மறுநாள் பொன்னம்மா வேலைக்கு வரவில்லை. அடை மழை பெய்து ஊர் திண்டாடியதில் அவள் நாலு நாட்கள் லீவு போட்டுவிட்டு, ஐந்தாம் நாள் காலை வந்து சேர்ந்தாள்.

வீட்டு வேலைகளை கவனித்த பின்பு அகிலாவை தனிமையில் சந்தித்து 'லெட்டரை அன்னிக்கு பத்திரமாய்

போஸ்ட் பண்ணிட்டேம்மா' என்றாள். அகிலா விழித்தாள்.

"எந்த லெட்டர்?"

"அதான், அன்னிக்குக் கொடுத்தீங்களேம்மா."

"நானா? லெட்டர் கொடுத்தேனா?" அகிலாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

நிச்சயமாய் எனக்கு ஏதோ வந்து விட்டது. மறதியா இல்லை வேறு ஏதாவது கோளாறா? இப்பத்தான் தெக்கிக்கு சாப்பிட உட்கார்ந்தால் 'இப்பத்தானே சாப்பிட்டே, அதுக்குள்ளே பசியா'னு அம்மணி கேட்டாளே! சாப்பிட்டது நினைவே இல்லையே. என்ன இதெல்லாம்? ஐயோ, எனக்கு என்ன ஆறது? யாராவது காப்பாத்துங்களேன்.

தனக்கு விபரீதமாய் ஏதோ கோளாறு வந்து விட்டது என்று அகிலா நினைத்ததில் தவறு ஏதுமில்லை. ஆனால் அவளைப் புரிந்து கொண்டு அனுதாபத்தோடு ஒரு கரத்தை நீட்ட அந்த ஜிம்மியும் அந்த வீட்டில் இருந்த மற்றவர்கள் மறுத்ததால் அகிலாவினுள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் மாற்றங்கள் உண்டாகவே செய்தன.

ஒரு நாள் நாலுபேர்கள் நடுவில் தனக்குத்தானே பேசிச் சிரித்தாள்; அப்புறம் "யார் என் கூட பேசறது. யார் அது?" என்று சூன்யத்தைப் பார்த்து அதட்டினாள். மறுநாள் பரிமாற வந்து விட்டு உஷாவுக்கு நெய் ஊற்றுவதற்குப் பதிலாய் டம்ளர் ஜலத்தை அவன் இலையில் கொட்டிவிட்டு பெரிசாய் கடகடவென்று நிறுத்தாமல் சிரித்தாள்.

ஜிம்மியின் கெனலுக்குள் சென்று படுத்து மணிக்கணக்கில் தூங்கினாள்.



வித்தியாசமாய் அகிலா நடக்கத் தொடங்கிய சில நாட்களிலேயே சுற்றிலும் உள்ளவர்களுக்கு 'என்ன இது' என்ற கிலி தோன்றினாலும் அன்று, ஜிம்மியின் சங்கிலியை எடுத்து வந்து குழந்தை அரவிந்த கத்தக் கத்த அவன் கழுத்தில் அதை மாட்டி 'வாடா ஜிம்மி வாக் போகலாம்' என்று அகிலா இழுத்தபோது உண்மை நிதர்சனமாய் எல்லார் மண்டையிலும் ஓங்கி அடித்தது.

அகிலாவுக்குப் பைத்தியமா?

## இருபத்திரெட்டு

படிப்பு முடிந்த உடனேயே இந்தியாவுக்குத் திரும்ப ஹரி திட்டமிட்டிருந்ததை உலகம் முழுவதும் தங்கள் கிளைகளை வைத்து நடத்தும் கன்ஸல்டன்ஸி கம்பெனி அவனுக்கு வேலை அளிக்க முன் வந்தபோது எதிர்பாராத விதமாய் மாறிப் போனது.

கை நிறையச் சம்பளம், நல்ல அனுபவம்; வேறு என்ன வேண்டும்?

இப்போது இந்தியாவுக்கு அடித்துப் பிடித்துக் கொண்டு போக வேண்டிய அவசரம் என்ன? போயிருந்தால் அப்பாவின் சாவுக்குச் சென்றிருக்க வேண்டும். அதற்கே போகவில்லை. இப்போது என்ன நிர்பந்தம்? 'வந்து நல்ல பெண்ணாய் கல்யாணம் பண்ணிக் கொண்டு போ' என்று எழுதும் அம்மாவின் ஆசையை இன்னும் இரண்டு வருஷங்கள் கழித்து நிறைவேற்றுவதில் தவறு ஒன்றும் இல்லையே! நாலையும் யோசனை பண்ணி லண்டன் வேலையை ஹரி சந்தோஷத்தோடு ஏற்றுக் கொண்டு விட்டான்.

வழக்கமாய் ஊரிலிருந்து மாசத்திற்கு இரண்டு மூன்று கடிதங்கள் வரும். ராஜா அண்ணாவும், உஷா மன்னியும் திருச்சியோடு வந்துவிடப் போகிறார்கள் என்று கேள்விப்பட்ட அன்று ரொம்ப நேரத்துக்கு யோசனை பண்ணினான் ஹரி.

அம்மாவின் குணத்தை மனசில் நினைத்தபோது உஷா மன்னியோடு அகிலா மன்னியை ஒப்பிடாமல் அம்மா இருக்க மாட்டாளே. இதனால் சங்கடங்கள் விளையுமே என்ற பயம் அவனுக்கு எழுவே செய்தது.

ஆனால் திருச்சியிலிருந்து ஸ்ரீதரனும், மற்றவர்களும் எழுதிய கடிதங்களெல்லாம் சந்தோஷத்தைப் பிரதிபலிப்பவைகளாய் இருந்தால் கவலைப்படுவதைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டான் ஹரி.

அகிலா மன்னி தனக்கு இப்போது அடிக்கடி கடிதங்கள் எழுதுவதில்லை என்ற குறை நெஞ்சில் எழுந்த போது கூட 'முன்பெல்லாம் மன்னிக்கு எங்கள் பலம் தேவைப்பட்டது. இப்போது வருஷங்கள் ஆனதில் அவளுக்கு தன்மேலேயே நம்பிக்கை வந்து விட்டது. மனசில் குறைகள் ஏதும் இல்லை, சந்தோஷமாய் வாழ்கிறாள். அதனால்தான் எழுதவில்லை' என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டான்.

நான்கு மாசங்களுக்கு முன் ஹரியின் ஆபீஸ் வாழ்க்கையில் ஒரு திருப்பம். கானடாவில் இருந்த அவன் ஆபீஸின் பிராஞ்சுக்கு மூன்று மாச பயிற்சிக்காக சற்றும் முன் எச்சரிக்கை இன்றி அவன் அனுப்பப் பட்டான்.

கானடாவுக்குப் போகும் முன் தன் புது விலாசத்தை திருச்சிக்கு தெரிவித்து 'இனி அடுத்த சில மாசங்களுக்கு எனக்கு இந்த விலாசத்துக்கு எழுதுங்கள்' என்று எழுதி



ட்டதால் கடிதங்கள் அத்தனையும் நேரே கானடா க்கே வந்து விட்டன.

ஹரி ட்ரெயினிங்குக்குப் போன சமயத்தில் அகிலா டுத்தபடுக்கையாய் இருந்து, அவனுக்கு இந்த விபரம் தெரியாததால் தன் மனக் குமுறல்களைக் கொட்டி அவன் ளிக்கு எழுதின கடிதங்களைப் [illegible] முடிந்து தன் ப்பார்ட்மெண்டுக்கு திரும்பின பிறகே ரி பார்த்தான்.

வீட்டுக்குள் நுழைந்து மெயில் பாக்ஸிலிருந்த ங்களை எடுத்தவனுக்கு ஒரே வியப்பு. அகிலா ன்னியிடமிருந்தா? பயண உடைகளைக் கூட களையா ல் ஹரி படுக்கையில் அமர்ந்து கடிதத்தைப் பிரித்தான். தலில் கண்களில் தெரிந்தது மேலே அகிலா குறிப்பிட் ருந்த தேதிதான். [illegible] இரண்டு மாசம் முன்னால் ழுதியது என்ன?

உறையின் மேல் இருந்த தபால் முத்திரையைப் ார்த்தபோது, கடிதம் இரண்டு மாசங்களாய் லண்டன் ப்பார்ட்மெண்டில் காத்திருப்பது புரிந்தது

கடிதத்தைப் படித்தான். அன்பான ஹரி! என்று தொடங்கியிருந்தாள் அகிலா.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு உங்களுக்கு நான் ழுதறேன். என்ன எழுதறதுனு புரியாம, என் மனசிலே ருக்கிறதை எப்படி எழுதறது என்கிறது தெரியாம பத்தோட நான் இதை எழுதறேன்; நான் படுத்துண்டு ழுந்த விபரம் பற்றி உங்கண்ணா உங்களுக்கு எழுதி ருப்பார். இரண்டு மாசம் வியாதிலே படுத்துண்டு ழுந்தா உடம்போட, மனசோட தெம்பெல்லாம் ப்படி அடியோட போயிடுமா, ஹரி?

என்னமோ தெரியலை, மனசுக்குள் ஒரு மரங்கொத்தி ாதிரி ஏதோ ஒண்ணு உட்கார்ந்து என்னை சதா

கொத்திப் பிடுங்கற மாதிரி இருக்கு. கூடவே யாரோ எந்நேரமும் இருக்கிற மாதிரியும், இருபத்தி நாலு மணி நேரமும் காதுக்குள்ளே ரகசியமா யார் யாரோ பேசற மாதிரியும் இருக்கு.

இவர்கிட்டே சொன்னா ஃபஸ் பண்ணாதே என்கிறார்.

நான் சத்தியமா வேணும்னு சொல்லலை ஹரி... எனக்கு வரவர தொட்டதுக்கெல்லாம் அழுகை வரது; நன்றி கெட்ட உலகத்தை நினைச்சுண்டா ரொம்ப அழுகை வரது ஹரி.

அப்புறம், இவர் ஜிம்மியை யாருக்கோ கொடுத்ததைத்தான் என்னாலே தாங்கிக்கவே முடியலை...உஷாக்கு அரவிந்த் மாதிரி எனக்கு ஜிம்மியோ. இவர் உனக்கு உஷா மேலே பொறாமைனு சொல்றார். அது நிஜமா ஹரி? என் வேதனையை இங்கே யாரும் புரிஞ்சுக்கற மாதிரி தோணலை, அதனாலதான் உங்களுக்கு நாலு வரியாவது எழுதிப் போட்டா மனசுக்கு ஆறுதலா இருக்கும்னு நம்பி இதை எழுதறேன்.

வரவர நான் உயிரோட இருக்கிறதுலே அர்த்தம் இல்லை என்கிற பயம் ரொம்ப உண்டாகறது. எப்பப் பார்த்தாலும் எனக்கு ஏனோ ரொம்பப் பயமா இருக்கு; எனக்கு என்னமோ வந்துடுத்து! அது என்னன்னு எனக்குச் சொல்லத் தெரியலை

ஒரு பெரிய புதைகுழியிலே நான் மாட்டிண்டு இருக்கிற மாதிரியும், நாளுக்கு நாள் அதுலே நான் அமுங்கற மாதிரியும் ஒரு எண்ணம்; கை கால் ஜில்லிட்டுப் போறது. நெஞ்சு படபடனு அடிச்சுக்கறது, நான் இதெல்லாம் கற்பனை பண்ணிக்கலை ஹரி...சத்தியமா ஃபஸ் பண்ணலை...என்னை நீங்களாவது நம்பறேளா! என் நிலையை புரிஞ்சிக்கிறேளா, எனக்கு ரொம்ப பயமா இருக்கு.



வேறு ஒண்ணும் எழுதத் தோணலை. மண்டையிலே ஒண்ணு குடைஞ்சிண்டே இருந்தா எப்படி யோசனை பண்ண முடியும், இல்லை தைரியமா இருக்க முடியும்? அவ்வளவுதான், வேறு ஒண்ணும் இல்லை. ஆசிர்வாதம்.

உங்கள் அன்புள்ள,
அகிலா மன்னி.

வயிற்றில் பட்டாம்பூச்சிகள் பறக்க, உணர்வோடு ஹரி மீண்டும் மீண்டும் அகிலாவின் கடிதத்தைப் படித்தான்.

வாட் ஈஸ் திஸ்?

சம்பந்தா சம்பந்தம் இல்லாமல், எதையோ சொல்லி விடத் துடிக்கும் வேதனையில், என்ன எழுதியிருக்கிறாள், இந்த மன்னி?

நிதானமாய் மறுபடி துவக்கத்திலிருந்து படித்தான்.

'நான் படுத்து எழுந்தது உங்களுக்குத் தெரிந்திருக்கும்...'

அகிலா மன்னி வியாதியில் படுத்திருந்தாளா? என்ன உடம்பு? ஏன் யாருமே எனக்கு அது குறித்து எழுதவில்லை?

'கூடவே யாரோ இருக்கிற உணர்வு, சதா காதுக்குள் பேசுகிற உணர்வு, என்ன இதெல்லாம்?' 'நன்றி கெட்ட உலகத்தை நினைச்சால் அழுகை வருகிறது.'

மன்னியா இப்படி ஆத்திரத்துடன் எழுதியிருக்கிறாள்? இம்பாஸிபிள். சிரிக்கத் தெரிந்த அகிலா மன்னியால், இதமாய் பேசத் தெரிந்த மன்னியால், யாரையும் நொந்து கொள்ளத் தெரியாத மன்னியால் எப்படி இப்படி எழுதுவது சாத்தியமாயிற்று?

ஜிம்மியை ஏன் யாருக்கோ கொடுக்கணும்? அதன் மேல் மன்னி உசிரை வெச்சிருந்தாளே! 'எனக்குப் பயமா இருக்கு' என்று மன்னி எழுதியிருப்பதற்கு என்ன அர்த்தம்? ஏன் பயம்? எதுக்காகப் பயம்?

சோ. ஸம்திங் ஈஸ் டெஃபனட்லி ராங் ஸம் வேர்... என்ன அது? ஹரி டெலிபோனை எடுத்து திருச்சிக்கு கால் புக் செய்தான். நல்லவேளை, தொடர்பு அரைமணியில் கிடைத்து விட்டது.

கானடாவிலிருந்து தான் இங்கிலாந்துக்கு திரும்பி விட்ட சேதியைச் சொல்லத்தான் ஹரி கூப்பிடுகிறான் என்று நினைத்ததால் ஸ்ரீதரன், ராஜா, உஷா, ஜானகி, வித்யா என்று அனைவரும் ஆளுக்கொரு நிமிஷம் பேசினார்கள்.

அகிலா மன்னியும் பேசுவாள் என்று எதிர்பார்த்த ஹரி ஒன்பது நிமிஷங்கள் முடியப் போகும் சமயத்தில் ஸ்ரீதரனை மீண்டும் போனுக்கு அழைத்து "அகிலா மன்னியை கூப்பிடு அண்ணா, ஐ வாண்ட் டு டாக் ஹர்" என்றான்.

''வித்யாவுக்கு இன்னும் நாலு நாளில் கோயமுத்தூரில் சீமந்தம். எல்லாரும் போகப் போறோம். வீ ஆல் மிஸ் யூ" என்றான் ஸ்ரீதரன் ஹரி கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல்.

''அண்ணா, நான் கேட்டதுக்கு முதல்லே பதில் சொல்லு. அகிலா மன்னி எங்கே? என்னோட பேசக் கூப்பிடு."

சில கணங்கள் மௌனமாய் இருந்து விட்டு ''அவளா, இப்போ உன் கூட பேச முடியாது ஹரி."

''வொய்?''

''அகிலா வெளியே போயிருக்கா..."



அண்ணாவின் குரல் கடுமையானதாக ஹரிக்குத் தோன்றியது— "அப்போ நான் திரும்ப ராத்திரி போன் பண்ணறேன். எனக்கு மன்னியோட கண்டிப்பாய் பேசணும்."

''எதுக்கு இப்படி பிடிவாதம் பண்ணறே ஹரி, லண்டன் ஓவர்ஸீஸ் கால்னா விளையாட்டா?''

"விளையாட்டு இல்லை தான். ஆனாலும் எனக்கு அகிலா மன்னிகிட்டே பேசணும்." ஹரியின் பிடிவாதம் ஸ்ரீதரனுக்கு எரிச்சலைத் தந்தது.

"அவளுக்கு உடம்பு சரியில்லை ஹரி. ஷீ கான்ட் டாக் டு ஹர்."

"ஏன், என்ன உடம்பு?"

''......''

"சொல்லுண்ணா... மன்னிக்கு என்ன?''

மிகுந்த சிரமத்துடன் ஸ்ரீதரன் பேசினான், "ஷி இஸ் மெண்டலி டிப்ரஸ்ட்..."

''வாட்? நீ என்னாண்ணா சொல்றே?''

''.........''

''எத்தனை நாளாய்?''

''கிட்டத்தட்ட ஒன்னரை மாசமாய். சரி இப்போ அதைப்பத்தி என்ன பேச்சு? வேற சந்தோஷமான சமாசாரத்தைப் பற்றி பேசலாம். உன் ட்ரிப் எப்படி இருந்தது? வாட் நியூஸ் தென்?''

மேற்கொண்டு ஒரு நிமிஷம் பேசிவிட்டு போனை வைத்த ஹரிக்கு பெரிசாய் அழவேண்டும் போலத் தோன்றியது. எத்தனை பெரிய அதிர்ச்சி? அகிலா

மன்னிக்கு சித்த ப்ரமையா ? காட் ! மை காட் ! எப்படி, எப்படி இது நடந்திருக்க முடியும் ?

இரண்டு மாசம் முன் எனக்கு லெட்டர் எழுதி இருக்கிறாள். அப்புறம் பதினைந்து நாட்களுக்குள் இப்படி ஒரு விபரீதமா ?

கண்களை மூடிக் கொண்டு நாற்காலியில் சாய்ந்த ஹரியின் கண்களில் கோடு கிழித்த மாதிரி நீர் வழிந்தது.

பழசெல்லாம் மனசில் காட்சி காட்சியாய்த் விரிந்தன.

மாம்பலம் வீட்டில் முதன் முதலாய் மன்னியைச் சந்தித்தது; ''அகிலா உருவத்தாலே அழகி இல்லேப்பா, ஆனா மனசாலே ரொம்ப அழகானவள், குணத்தாலே ரொம்ப ரொம்ப உயர்ந்தவள், என்று அப்பா தன்னிடம் பெருமையாய் சொன்னது. அண்ணாவின் கோபதாபங்களை புன்சிரிப்புடன் தாங்கிக் கொண்டு அவனுக்கு ஊன்றுகோலாய் நின்றது, புதுவாழ்க்கை அமைக்கப் பாடுபட்டது, அம்மாவின் கேலிப் பேச்சுக்களை குற்றமாய் எடுக்காமல் பொறுமையுடன் அடங்கிப் போனது—ஓ! அந்த அகிலா மன்னிக்கா சித்தப்பிரமை ? நோ. நோ. இது பற்றி ஏன் ஒருத்தர் கூட எனக்கு எழுதவில்லை? முதலில் உடம்புக்கு வந்ததைப் பற்றிக்கூட எழுதவில்லை— அது என்ன வியாதி ? யோசிக்க, யோசிக்க நாலு மாசங்கள் முன்பு மன்னிக்கு பெரிசாய் வியாதி வந்திருக்க வேண்டும். இவர்களின் கவனிப்பு இன்மையாலோ அல்லது வேறு ஏதாலோ மன்னி உடைந்து போயிருக்க வேண்டும். அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாய் மூளையில் பாதிப்பு உண்டாகி இருக்கவேண்டும். அப்படி கோளாறு ஏற்படத் துவங்கின காலத்தில்தான் மன்னி பயந்து போய் தனக்கு கடிதத்தை எழுதி இருக்கவேண்டும் என்பதை எல்லாம் ஹரியால் ஊகிக்க முடிந்தது.



உடனடியாய் மன்னியை மெட்ராஸுக்கு அழைத்துப் போய் வைத்தியம் பண்ணாமல் ஸ்ரீதரண்ணா திருச்சியில் என்ன செய்கிறான் ? வித்யாவின் சீமந்தம் குறித்து எத்தனை சந்தோஷம் ? மன்னியின் உடம்பு குறித்து என்ன தான் எழுதின எத்தனையோ கடிதங்களில் இரண்டு வரி எழுத எப்படி அண்ணா மறந்து போனான் ? மனசுக்குள் எண்ணங்கள் புரள புரள, கோபமும் ஆத்திரமும் ஊற்றுக் கொப்பளித்துக் கொண்டு எழுந்தன.

அறையில் குறுக்கும், நெடுக்குமாய் நடந்தான். அகிலாவின் கடிதத்தை மீண்டும் படித்தான். இப்போ நான் என்ன செய்யணும் ? உடனடியாய் என்ன பண்ணணும் ? சோபாவில் உட்கார்ந்து கொண்டு இரண்டு கைகளாலும் தலையைத் தாங்கி பிடித்த ஹரிக்கு ஒன்றுமே புரியவில்லை.

## இருபத்தொன்பது

சரியாய் அடுத்த மூன்றாம் நாள் காலை ஹரி திருச்சிக்கு வந்து சேர்ந்த போது வித்யாவின் சீமந்தத்துக்காக கோயமுத்தூருக்குப் புறப்படும் அமர்க்களத்தில் எல்லோரும் இருந்தார்கள். ஏர்போர்டிலிருந்து டாக்ஸி அமர்த்திக் கொண்டு வீட்டு வாசலில் வந்து இறங்கிய ஹரியை முதலில் பார்த்தது வித்யாதான்.

'அண்ணா, ஹரிஅண்ணா' என்று கூவியவளுக்குத் திகைப்பால் கண்கள் விரிந்து போயின.

இரண்டு நிமிஷத்தில் ஜானகி முதல், வீட்டு ஆட்கள் வரை கூடத்தில் கூடி விட்டார்கள்.

''என்னப்பா இது ! திடீர்னு வந்து நிக்கறே ?''

"எப்போ வந்தே ஹரி? ஒரு தந்தி அடிக்கக் கூடாதா?"

"வித்யாவோட சீமந்தத்துக்கு வரணும்னு தோணி இருக்கும், அதான் ஸர்ப்ரைஸாக வந்துட்டான்."

"எங்கே வந்து கஸ்டம்ஸ் கிளியரன்ஸ் செய்தே ஹரி? அட் பாம்பே ஆர் அட் மெட்ராஸ்"

"ஹரிண்ணா, லண்டன் உங்களுக்கு நன்னா ஒத்துண்டாப்பால இருக்கு. சிவந்து, பெருத்துண்டு, ஆள் யாப்பிள்ளை மாதிரி ஜோரா இருக்கேள்."

பத்து நிமிஷ காலத்துக்கு அனைவரும் தலைகால் புரியாத சந்தோஷத்தில் ஒருசேரப் பேசினார்கள்.

எதற்கும் பதில் சொல்லவில்லை ஹரி. கண்கள் அந்தக் கூட்டத்தில் அகிலா மன்னியைத் தேடின.

ம்ஹூம் மன்னியைக் காணோம்.

"என்ன ஹரி, நாங்க இத்தனை கேள்வி கேட்கறோம். நீ பதில் சொல்லாம நின்னா எப்படி? வா... வா... உட்காரு... ரங்கா ஐயா சாமான்களை மேலே எடுத்துண்டு போ... அம்மணி, ஹரிக்கு காபி கொண்டா" உற்சாகமாய்ப் பேசிய ஸ்ரீதரனை ஹரி நிமிர்ந்து பார்த்தான்.

"அகிலா மன்னி எங்கேண்ணா?" அழுத்தமான குரலில், தன்னைச் சுற்றிக் கொப்பளிக்கும் பூரிப்பினால் பாதிக்கப்படாதவனாய் ஹரி நிதானமாய்க் கேட்டதும் கடீரென்று அந்தக் கூட்டம் அமைதியாகிப் போனது.

மூன்று நாட்கள் முன்பு போனில் பேசிய போது அகிலாவின் உடல் நிலையைத் தெரிந்து கொண்டதால் இப்படிப் போட்டது போட்டபடி வந்து நிற்கிறானா? அதுக்காகவா? அகிலாவின் மேல் உள்ள அக்கறையிலா?



ம்ஹூம். சுற்றி நின்றவர்களுக்கு இதை நம்புவது கஷ்டமாக இருந்தது.

"அகிலா மன்னி எங்கே?" ஹரி இரண்டாவது முறையாகக் கேட்ட பிறகு "உள்ளே இருக்கா" என்றான் ஸ்ரீதரன்.

"அப்பா போனப்புறம் இப்பத்தான் ஆத்துக்கு வந்திருக்கே... இப்படி வாப்பா ஹரி... என்கிட்டே வந்து உட்காரு..." கண்களில் நீரோடு பேசின அம்மாவை ஹரி கவனிக்கவில்லை.

"எனக்கு மன்னியை முதல்லே பார்க்கணும்" தம்பியின் பார்வையைத் தாங்க முடியாமல் தலையைக் குனிந்து கொண்ட ஸ்ரீதரன் மெதுவாய் பின் அறைக்குச் சென்றான்.

ஹாலைக் கடந்து பூஜை அறையைக் கடந்து, ஒதுக்குப் புறமாய் இருந்த அந்த அறையை அடைந்து, தாழ்ப்பாளை விலக்கினான், தன்னைத் தொடர்ந்து வந்த ஹரியிடம் 'கேர்புல் ஹரி...ஷி ஈஸ் வயோலண்ட்' என்றான்

திறந்த கதவு வழியாக உள்ளே தெரிந்த காட்சி ஹரியின் நெஞ்சை அழுத்தியது. கதவு திறந்ததோ, தன்னைப் பார்க்க யாரோ வந்திருப்பதோ புரியாமல் ஜன்னல் கம்பிகளில் தலையை முட்டுக் கொடுத்துக் கொண்டு அகிலா நின்றிருந்தாள். மெலிந்து, குச்சியான உடல், பெரிய கண்களில் குளமாய் ஜலம், முகத்தில் சொல்லத் தெரியாத பரிதாபம்

மன்னியா? என் அகிலா மன்னியா? கரிய கண்களில் வண்டி கருணையைத் தேக்கி, உலகத்தில் உள்ள அன்பையெல்லாம் தன் புன்னகையில் கொட்டும் அகிலா மன்னி இதுவா? துக்கம் நாக்கை இழுக்க, "மன்னி!" என்றான் ஹரி மெதுவாய்.

சடாரென்று திரும்பினாள் அகிலா. ஒரு வினாடி சுருங்கி, மறுவினாடி விரிந்த கண்களில் வியப்பு, சந்தேகம்.

"ஹரி" என்று பலத்த அழைத்தாள். இரண்டே தாவலில் அவனிடம் வந்தாள். "ஜிம்மியை எங்கே வச்சிருக்கே? மரியாதையா குடுத்துடு" என்று அதட்டலாய்ப் பேசினாள். பின் "கொடுக்க மாட்டே? கொடுக்க மாட்டே?" என்று கையைப் பிடித்து பயங்கரமாய் உலுக்கினாள். மறு நிமிஷம் "நான் இல்லாட்டா அவன் சாப்பிட மாட்டான்" என்று பரிதாபமாய் விசும்பினாள்.

அகிலாவின் கைகளைப் பற்றி படுக்கையில் உட்கார வைத்தான் ஹரி. அவள் கண்களைத் துடைத்தான். "ஜிம்மியை திருப்ப நான் கூட்டிண்டு வரேன் மன்னி... உங்க ஜிம்மியை திருப்ப உங்க கிட்டே நான் கொண்டு வந்து தரேன்... இதுக்காக இப்படி அழலாமா மன்னி" ஹரியின் குரல் இதமாக ஒலித்தது.

அகிலாவின் அழுகை நிற்கவில்லை. ஹரி சொல்வதை அவள் புரிந்து கொண்டதாகவே தெரியவில்லை. துக்கம் பீறிட்டுக் கொண்டு எழுகிற மாதிரி விசித்து விசித்து அழுதாள். பிறகு 'எனக்குப் பயமாக இருக்கு... ரொம்ப பயமா இருக்கு...' என்று புலம்பத் தொடங்கினாள்.

மௌனமாய் வாசல் கதவிடம் நின்று இத்தனையும் பார்த்தான் ஸ்ரீதரன். "இப்படித்தான் எப்பப்பாரு அழறா... காரணமில்லாமல் பயம்னு அழறா... நம்ப டாக்டர் கிட்டே காண்பிச்சோம். மருந்து கொடுத்திருக்கிறார். ஆனால் ஒழுங்கா சாப்பிட்டாத் தானே? யார் கிட்ட வந்தாலும் அடிக்க வறா. நோபடி வாண்ட்ஸ் டு கோ நியர் ஹர்... இவளாலே ரொம்ப வேதனை, தொந்தரவு ஹரி... நீ சரியாக புரிஞ்சிக்கணும்..."



அண்ணா சமாதானம் சொல்கிற மாதிரி பேசினதற்கு ஹரி பதில் எதும் சொல்லவில்லை.

தன் கையை கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டிருந்த அகிலாவை எழுப்பினான். வெளியில் கூட்டி வந்தான். "எங்கே அழைச்சுண்டு போற ஹரி? உஷாவைக் கண்டா இவளுக்கு ஆகாது... வெறி வந்துடும். அரவிந்தை சங்கிலியால கட்ட வருவா. ரூம்லேயே இருக்கட்டும்... நான் சொல்றதைக் கேளு ஹரி..."

ஸ்ரீதரன் பேச்சைக் காதில் வாங்காமல் அகிலாவோடு ஹரி வெளியில் வந்தான். அகிலாவுக்கு மட்டும் கேட்கக் கூடிய சின்னக் குரலில் "ஜிம்மி உங்களுக்குத் திரும்ப வேணும்னா நீங்க நான் சொல்றதை சமர்த்தா கேட்கணும் மன்னி.. முதலில் அழுகையை நிறுத்துங்கோ ப்ளீஸ்... மன்னி... ப்ளீஸ்" என்று பேசிக் கொண்டே ஹாலுக்கு வந்தான். ஹால் சோபாவில் அகிலாவை உட்கார வைத்துவிட்டு சுற்றிலும் பேய் அறைந்த மாதிரி ஒடுங்கி இருந்தவர்களை ஒரு பார்வை பார்த்தான்.

சீ. நீங்களெல்லாம் மனுஷர்கள் தானா என்று கேட்கும் பார்வை... அகிலாவின் விசும்பலைத் தவிர வேறு சப்தம் இல்லாமல் அறை மௌனமாய் இருந்தது.

சற்றும் எதிர்பார்க்காத தினுசில் ஹரி லண்டனிலிருந்து திரும்பியதும், என்ன ஏது என்று யாரிடமும் கேட்காமல் அகிலாவைப் பார்க்கப் போனதும், அவளை நடு ஹாலில் அழைத்து வந்து உட்கார வைத்ததும், இப்போது ஏதோ ஒரு வித முடிவுக்கு வந்தவனாய் மிகுந்த கோபத்துடன் தங்களைப் பார்ப்பதும் ஜானகி, ஸ்ரீதரனுக்கு பயத்தை உண்டாக்கியது.

"என்னப்பா ஹரி? வெளிநாட்டுலேந்து வந்த பிள்ளை உட்கார்ந்து இரண்டு வார்த்தை என்னம்மா, எப்படி இருக்கேனு கேட்காமல், இதெல்லாம்

என்னப்பா ?" என்றாள் ஜானகி சின்னக் குரலில். கண்களில் நீர் ரெடியாய் பூத்து நின்றது. புடவைத் தலைப்பை கை நாடியது.

அம்மா இருந்த திக்கில் ஹரி திரும்பவில்லை. நேர் பார்வையின் தீட்சண்யம் தாங்காமல் ஸ்ரீதரன் தலை குனிந்தான்.

"அகிலா மன்னியை அழைச்சிண்டு நாளை உடனடியா மெட்ராஸுக்குப் போறேன். நான் லண்டன்லேந்து மெட்ராஸுக்கு நேத்து வந்தேன். மெட்ராஸ் டாக்டர் கிட்டே மன்னியைப் பத்தி பேசிட்டேன்; எத்தனை சீக்கிரம் வைத்தியம் ஆரம்பிக்கிறோமோ அத்தனை நல்லதுனு டாக்டர் அபிப்பிராயப்படறார். அதனாலே நான் இப்பவே மன்னியோட கிளம்பறேன்" கொஞ்சம் நிறுத்தின ஹரி வித்யாவின் பக்கம் திரும்பி போய் ஒரு பெட்டியிலே மன்னியோட துணிமணிகளை பாக் பண்ணி, அஞ்சு நிமிஷத்துலே கொண்டுவா, இந்த உபகாரத்தையாவது உன்னாலே செய்ய முடியுமானு நினைக்கிறேன்" என்றான்.

ஹரிக்கு என்னாயிற்று ? "ஹரி வாட் இஸ் ஆல் திஸ்" என்று தொடங்கின ராஜாவை ஹரி ஒரு பார்வையால் அடக்கினான்.

ஜானகியால் இனியும் சும்மா இருக்க முடியவில்லை, "என்னாச்சு ஹரி உனக்கு ? மூணு வருஷமா பிரிஞ்சிருக்கிற பிள்ளை திரும்பி வந்துட்டான்னு சந்தோஷப்பட விடாதபடி ஏன் இப்படி நடந்துக்கறே ?" ஜானகி அழ ஆரம்பித்து விட்டாள்.

பத்து நிமிஷத்தில் ஒரு சின்ன பெட்டியுடன் வித்யா வந்து நின்றாள்.

இத்தனை நாழி மௌனமாய் இருந்த ஸ்ரீதரன் ஹரியின் கிட்டத்தில் வந்தான். கையைப் பாசத்துடன் பிடித்துக் கொண்டான்.



"நடந்தது என்னானு முழுசும் தெரிஞ்சிக்காம நீ ஏனோ ஆத்திரப்படறே ஹரி... உனக்கு யாரோ தவறா விஷயத்தை சொல்லி இருக்கா. காரணமில்லாமல் எங்க மேலே உனக்கு ஏன் இத்தனை கோபம் ? லிஸன் ஹரி, ப்ளீஸ்..."

ஸ்ரீதரனின் கையைத் தட்டி விட்டான் ஹரி. "என்னண்ணா தெரிச்சக்கணுமா ? இன்னும் புதுசா நான் என்ன தெரிஞ்சுக்கணும் ? மன்னிக்கு ஹெர்பீஸ் வந்து, அப்புறம் டைபாய்ட் வந்த விவரத்தை எனக்கு எழுதாமல் இருந்தேளே அதையா ? ஜிம்மியை உன் சிநேகிதனுக்கு கொடுத்ததையா ? என்னை டாக்டர் கிட்டே காட்டுனு மன்னி அழுத போது 'ஃபஸ் பண்ணாதே'னு நீ அவளை திட்டினாயே அதையா ? இல்லை அம்மா சொல்றமாதிரி உனக்கு உஷா மேல பொறாமைனு மன்னிகிட்டே சொன்னாயே அதையா ? எனக்கு நீ புதுசா எதுவும் சொல்ல வேண்டாம் அண்ணா. உன்னோடு பேசின பிறகு நான் நம்ப குடும்ப டாக்டர் கிட்டே போன்லே விவரமாய் பேசினேன். மன்னியோட வியாதி ஒட்டிக்கும்னு பயந்து அவளை நீங்க ஒதுக்கி வைச்சதும், அவ மனசு நொந்து போனதையும் எனக்கு அவர் சொல்லிவிட்டார். 'நான் என்ன பண்ணுவேன் ஹரி, உங்க மன்னிக்கு இப்போ நல்ல கவனிப்புத் தேவைனு நான் சொல்லிட்டேன். அவா அதை காதில் போட்டுக் காட்டா நான் என்ன பண்ணுவேன்'னு அவர் என் கிட்டே வருத்தப்பட்டுண்ட பிறகுதான் நானே வந்து இனி எங்க மன்னியை பார்த்துக்கறது சரினு முடிவு எடுத்து புறப்பட்டு வந்திருக்கேன். மன்னி உயிர் உள்ள ஒரு ஜீவன் அண்ணா. அவளுக்கு அழகு இல்லாம இருக்கலாம், படிப்பு இல்லாம இருக்கலாம். ஆனா நல்ல மனசு இருக்குண்ணா. அந்த நல்ல மனசுதான் இன்னிக்கு இப்படி கம்பீரமா நீ எழுந்து நடமாட உதவி பண்ணித்து, இதை ஞாபகம் வைச்சிக்கோ. அப்பா

இருந்திருந்தா இந்த நிலைக்கு ஆளாக விட்டிருப்பாரா? அதைக் கொஞ்சம் நினைச்சுப் பாரு. அப்பேர்ப்பட்ட ஆத்மாவுக்கு பிள்ளையா பிறந்துட்டு, அதுக்கேத்த உசந்த மனுஷருக்கு மனைவியா வாழ்க்கைப்பட்டு நிறைய வருஷம் வாழ்ந்துட்டு, அந்தப் பெரிய மனசின் பெருந்தன்மை கடுகத்தனை கூட உனக்கோ, அப்பாவுக்கே வரலியேன்னு தான் எனக்கு வருத்தமாய் இருக்கு. உங்ககிட்டே பேசிண்டு தர்க்கம் பண்ண எனக்கு இஷ்டம் இல்லை. நேரமும் இல்லை. நீங்க எல்லாம் சுயநலமே உருவானவா. அம்மாவுக்கு பணம் மட்டும் இருந்தால் போதும், வேறு எதுவும் வேண்டாம். நீயாவது வித்தியாசமா, நம்ப அப்பாவுக்கு பிடிச்ச பிள்ளையா இருப்பே, நமக்கு பிதாக்கியார் செய்த நன்மைகளை நினைச்சுண்டு நன்றி உணர்வோட இருப்பேனு நினைச்சேன். ஆனா, அண்ணா ஐ ம் ஸாரி டு ஸே திஸ் நம்ப அப்பா இப்போ உயிரோட இருந்தா, உன்னை தன் பிள்ளைனு சொல்லிக்க கண்டிப்பா வெட்கப்பட்டிருப்பார். ஐ ம் ஸாரி."

தழுதழுத்த குரலில் பேசி முடித்த ஹரி குனிந்து பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு ஒரு கையால் அகிலாவை எழுப்பி அழைத்துக் கொண்டான்.

"நான் அம்பாஸிடரை எடுத்துண்டு மெட்ராஸ் போறேன். நேரே டாக்டர் பாலாஜி நர்ஸிங்ஹோமுக்குதான் போறேன். உடனடி செலவுக்கு என்கிட்டே பணம் இருக்கு. மேற்கொண்டு தேவைப்பட்டா உன்கிட்டேதான் வருவேன். உன் பணத்தைக் கேட்கிறேன்னு அவசரப்பட்டு நினைச்சுடாதே. நானும் இந்தாத்து பிள்ளைதான். அப்பா சொத்திலே என் பங்குலேந்து நீ கணக்கு பண்ணி கொடுத்தா போதும். நெஞ்சுலே கருணையே இல்லாத உன்கிட்டேயிருந்தோ, மத்தவா கிட்டேயிருந்தோ நான் பணம் வாங்கி செலவழிச்சா



அது மன்னிக்கு நல்லதை நிச்சயம் பண்ணாது. கடைசியா ஒண்ணு சொல்றேன். இவன் எதுக்காக என் [illegible] நீ [illegible] காரணம் [illegible] நினைக்கலாம். [illegible] பிள்ளையா பிறந்துட்டு [illegible] மன்னிக்கணும் [illegible] ஆத்மா [illegible] நடந்துண்டிருக்கா அகிலா [illegible] அதனால அவளை [illegible] செத்துப்போறது [illegible] என் கடமை. நல்லவிதமா [illegible] ஹரி [illegible] விட்டான்.

அகிலாவின் கைகளைப் பிடித்து மெல்ல படிகளில் இறங்கி வாசல் போர்டிகோவில் நின்ற காரில் ஏற்றினான்.

இது நாள்வரை வீட்டில் நடந்த அமர்க்களங்களை மூலையில் நின்று கவனித்துக் கொண்டிருந்த அம்மணி சட்டென்று காரிடம் வந்தாள். "இரண்டு நிமிஷம் நில்லுங்கோ, நானும் வர்றேன். இந்தாத்து உப்பைத் தின்னு வளர்ந்தவ நான், இந்த சமயத்துலே அகிலாவை பார்த்துக்கக் கூடமாட நான் உதவலைன்னா எப்படி? இருங்கோ, உங்களுக்குத் துணையா நானும் வர்றேன்" என்று சொல்லி உள்ளே பாய்ந்து ஒரு பையுடன் திரும்பி வந்து வண்டியில் ஏறிக் கொண்டாள்.

திட்டப்படி சென்னையை அடைந்து பாலாஜி நர்ஸிங்ஹோமில் அகிலாவைச் சேர்த்தான் ஹரி. முதல் நாளே அவன் வந்து தங்க ஏற்பாடுகளைச் செய்திருந்ததால் நாலு டாக்டர்கள் தயாராய் நின்று அகிலாவை மணிக் கணக்கில் சோதித்தார்கள். ஒவ்வொரு விபரமாய் கேட்டார்கள். தனக்குத் தெரிந்தவற்றை ஹரி சொன்னான். பாக்கி அனைத்தையும் அம்மணி ஒளிவு மறைவு இல்லாமல் கூறினாள். இரவு மன்னியுடன் நர்ஸிங்ஹோமிலேயே ஹரி தங்கினான். தூக்கத்திற்கு காம்போஸ் ஐ.வி. கொடுத்து விட்டதால் அகிலா நிம்மதியாய் தூங்கினாள்.

காலையில் மீண்டும் பரிசோதனைகள் முதல் நாள் செய்த டெஸ்டுகள் சிலவற்றின் ரிப்போர்ட் மதியம் வந்து விட்டன. டாக்டர் ஹரியை தனியாய் அழைத்துச் சென்று பேசினார். மூளையில் பாதிப்புகள்

லேசாக உண்டாகி முறைசாய் இரண்டு மாதங்கள் ஆவதற்குள் வைத்தியத்தை ஆரம்பித்து விட்டதால கண்டிப்பாய் குணமாகி விட அறிகுறிகள் உள்ளன என்றார் ; மூளை பாதிப்புக்கு அடிப்படை காரணம் உடம்பு பலஹீனப்பட்டு தெம்பிழந்த அதே சமயத்தில் மனசிலும் ஏக்கம் வளர்ந்தது தான் என்று சொன்ன டாக்டர் அன்பான, பாசமிகுந்த சூழ்நிலையில் அகிலாவைப் பொறுமையுடன் கவனித்தால் பிரமிக்கத் தக்க விதத்தில் அவளிடம் குணம் காண முடியும் என்றார். கொஞ்சம் கூட மனம் கலங்க வேண்டாம். நிச்சயமாய் அகிலாவை பழைய அகிலாவாக மாற்றி விடலாம் என்று அடித்துச் சொன்னார்

ஹரிக்கு டாக்டரின் பேச்சு சந்தோஷத்தைத் தந்தது. நம்பிக்கையைத் தந்தது. நிம்மதியைத் தந்தது. நர்ஸ் மதிய உணவை அகிலாவுக்குக் கொடுத்து, படபடப்பு இல்லாமல் இருக்க மருந்துகளையும் கொடுத்திருந்ததால் காலையில் வெகு நேரத்துக்கு பயம், பயம் என்று அழுது கொண்டிருந்த அகிலா அப்போதுதான் தூங்கத் தொடங்கி இருந்தாள்.

அறையை விட்டு வெளியே வந்து நின்றான் ஹரி. அந்த நர்ஸிங் ஹோமைச் சுற்றி இருந்த அடர்ந்த, உயர்ந்த பச்சை மரங்களின் குளுமை மனசுக்கு இதமாய் இருந்தது. விளையாட்டாய் மன்னியின் கடிதத்தை எடுத்துக் கொள்ளாமல் இந்த மட்டுக்கு உடனடியாய் இந்தியாவுக்கு வந்து காரியத்தில் இறங்கியதை நினைக்கும் போது திருப்தியாய் இருந்தது. தன் காரியம் அப்பாவுக்குக் கண்டிப்பாய் சந்தோஷத்தைத் தரும் என்று தோன்றியது

இரண்டு கைகளையும் தலைக்கு மேலே தூக்கி சின்னதாய் சோம்பல் முறித்து நர்ஸிங் ஹோமின் வாசலை எதேச்சையாய் பார்த்த போது நீல நிற பியட் ஒன்று உள்ளே நுழைந்து, போர்ட்டிகோவில் நின்றது. அதிலிருந்து ஸ்ரீதரன் இறங்குவதும், என்குவைரியில் ஏதோ விசாரித்து விட்டு, பின்னர் இந்தப் பக்கமாய் வருவதும் ஹரிக்குத் தெரிந்தது.

மெதுவாய் நடந்து கிட்டத்தில் வந்து நின்ற அண்ணாவை நிமிர்ந்து பார்த்தான். ஸ்ரீதரனின் முகம் ஜிவு ஜிவுத்து, கண்கள் சிவந்திருந்தன. மனசு வேதனையிலும் குற்ற உணர்ச்சியிலும் குறுகுறுப்பது புரிந்தது.



ஒன்றுமே பேசாமல் ஒரு நிமிஷம் இருவரும் அப்படியே நின்றார்கள். முதலில் மௌனத்தைக் கலைத்தது ஸ்ரீதரன் தான்.

''என் ஃபிரண்ட் கிட்டே பேசினேன் ; ஜிம்மியை எந்த நிமிஷமும் திருப்பித்தர ரெடிங்கறான்...''

அண்ணா அழுகையை கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்வது ஹரிக்குப் புரிந்தது.

ஒரே ராத்திரியில் அண்ணா தன் தவறை உணர்ந்து விட்டது ஹரியை நெகிழ வைப்பதாக இருந்தது. ஏதாவது இதமாய்ப் பேசி மனசு நொந்து வந்திருக்கும் அண்ணாவை சமாதானம் செய்ய வேண்டும் போல இருந்தது

''மன்னிக்குப் பயப்படும்படி ஒண்ணும் இல்லையாம் அண்ணா... உடம்பு பலஹீனமும், மனசு ஏக்கமும் ஒரே சமயத்துலே வந்துட்டதாலே மூளை பாதிக்கப்பட்டிருக்காம். ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்து, அன்போட பார்த்துண்டா கண்டிப்பா சரியாயிடுமுனு டாக்டர் சொல்றார். ஆனா இட் வில் டேக் டைம். நாமப் பொறுமையா இருக்கணும்.''

தனக்குத் தம்பியாய் பிறந்தும், தனக்கு புத்தி சொல்லி தன் நிலையை உணரவைத்துவிட்டு இப்போது விவேகத்தோடு பேசும் ஹரியை பார்க்கையில், கண் எதிரில் அப்பாவே நின்று கொண்டு பேசுகிற மாதிரி தோன்ற ஸ்ரீதரனின் கண்களில் சரம் சரமாய் நீர் வழியத் தொடங்கியது.

ஒரே தாவலில் அண்ணாவை இறுகக் கட்டிக் கொண்டான் ஹரி. "அண்ணா, வாட் இஸ் திஸ்? தைரியமா இரு."

"ஹரி, ஹரி," சின்னக் குழந்தை போல தன் தவறுகளை எண்ணி ஸ்ரீதரன் அழுவதைத் தடுக்க இயலாத ஹரி அவனை இறுக அணைத்துக் கொண்டபோது அவன் கன்னத்திலும் கண்ணீர் கோலம் போட்டது.

கண்களை மூடிக்கொண்டான் ஹரி. மன்னி குணமாக வேண்டும். அண்ணா மனசு மாற வேண்டும். அப்புறம் மற்றவர்கள் தங்கள் அறியாமையை உணர வேண்டும் ; இத்தனையும் ஒருவனாய் என்னால் சாதிக்க முடியுமா என்ற பயத்தோடு இருந்தேன். தாங்க் காட்.

டாக்டர் நம்பிக்கை தரும் விதமாக பேசிவிட்டார். சற்றும் எதிர்பாராதபடி அன்னா சுருக்க மன்னியைத் தேடி வந்து விட்டாள். இனி மற்றவர்களை மாற்றுவது அப்படியொன்றும் கஷ்டமான காரியம் இல்லை.

முதலில் அகிலா மன்னியை பழைய மன்னியாக மாற்ற வேண்டும். அப்புறம் மற்றவர்களை ஒவ்வொருவராய் மாற்றிக் கொள்ளலாம்.

சிடுக்குகளைப் போடுவது சுலபம், பிரிப்பது தான் கஷ்டம். சிக்கல்களை உண்டாக்குவது சுலபம், அவிழ்ப்பது தான் கஷ்டம். எதையும் கலைப்பது, அழிப்பது ரொம்ப எளிது... புதிதாய் நிர்மாணிப்பது, உருவாக்குவது தான் ரொம்ப ரொம்ப சிரமம்.

தெரிந்தோ தெரியாமலோ எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு அகிலா மன்னியை படுகுழியில் தள்ளப் பார்த்தார்கள். மன்னியின் நல்லகாலம் கடைசி படியில் இருந்தவளின் கையைப் பிடித்துக் கொள்ள தெய்வமாய் இருக்கும் அப்பா வழி வகுத்து விட்டார் இனி ஒவ்வொரு படியாய் அவளை மேலே ஏற்றி கரைக்குக் கொண்டு வந்து விடலாம்.

ஷாக் ட்ரீட்மெண்ட் முடிந்த பிறகு சென்னையில் ஒரு அழகான வீட்டை வாடகைக்கு எடுத்து மன்னியின் அம்மா, தம்பி, தங்கை, ஜிம்மியோடு அன்னாவையும், மன்னியையும் இருக்கச் செய்து...மன்னிக்கு அன்பையும், பரிவையும் அள்ளிக் கொடுத்து, நல்ல வைத்தியமும் அளித்தால் கண்டிப்பாய் அவளை பழைய மன்னியாக மாற்றிவிடலாம்... இதற்கு பொறுமை தேவை நேரம் தேவை. அவசரப்படாமல் மன்னியை மெள்ள மெள்ள குணமாக்க வேண்டும்...மெள்ள...மெள்ள...

சற்றே தலையை நிமிர்த்தி கண்ணில் வழியும் நீரைத் துடைத்துக் கொண்டு அன்னாவைப் பார்த்து ஹரி புன்னகைத்தபோது அவன் மனசில் திடமான நம்பிக்கை பூரணமாய் வியாபித்திருந்தது.